தொகுதி - 6
எண் - 10
ISSN 3093-5210

இதழ்
51

எழுநா

ஒக்ரோபர்
2026



எழுநா

ISSN 3093-5210

தொகுதி - 6
எண் - 10

இதழ் 51

அட்டைப்படம்: செம்மணி வலி
ஓவியம்: பிருந்தாஜினி பிரபாகரன்

இயக்குநர் சபை

கணேசானந்தன் சசீவன்
நிர்வாக இயக்குநர்

தில்லைநாதன் கோபிநாத்
வெளியீடு

கனகலிங்கம் சுகுமார்
வளத்திரட்டல்

வெளியீட்டுக்குழு

கணேசானந்தன் சசீவன்
பதிப்பாளர்/ பிரதம ஆசிரியர்

ஸ்ரனிஸ்லஸ் கபில்தேவ்
உதவி ஆசிரியர் / நகல் திருத்தம் / நூல் தயாரிப்பு / தர நிர்ணயம்

தர்ஷனா பிறேம்குமார்
கற்கை வட்டம் / நிகழ்வுகள் / ஊடக ஒருங்கிணைப்பு/ அச்சு ஒருங்கிணைப்பு / விநியோகம்/ ஆய்வு ஒருங்கிணைப்பு

பியூலா பரமேஸ்வரன்
வலைத்தளம் / பரவலாக்கம் / காட்சி வழிக் கதை உருவாக்கம்

தயாரிப்புக் குழு

ஜீவமணி பாலன்
நூல் வடிவமைப்பு /அட்டை வடிவமைப்பு

ரவீந்திரன் கருப்பையா
நூல் வடிவமைப்பு/அட்டை வடிவமைப்பு

வேணி ஆனந்தா
சஞ்சிகை வடிவமைப்பு

கலாமணி பரணீதரன்
அச்சு ஒருங்கிணைப்பு

கிறிஸ்ரியன் லக்ஷ்மன் சிசில்
மெய்ப்புப்பார்ப்பு

பானு சுதாஹரன்
மெய்ப்புப்பார்ப்பு

பாலசுப்ரமணியம் துவாரகன்
மெய்ப்புப்பார்ப்பு

நிரோஷா தியாகராசா
மெய்ப்புப்பார்ப்பு

வளவாளர்கள்

தில்லைநாதன் கோபிநாத்
நூல் தயாரிப்பு / நூல் அச்சாக்கம்

தங்கராஜா பிரபாகரன்
ஊடக வீச்சு / மனிதவளத் தொடர்பு

சிறிதரன் சோமிதரன்
ஆவணப்படம்

இ. பத்மநாப ஐயர்
உசாத்துணை சேவை

சுஜீவன் தர்மரட்ணம்
நிகழ்வுகள் / கற்கை வட்டம்

ஜனனி பாலசுந்தரம்
வலைத்தளம் / பரவலாக்கம்

ஆதரவளிப்போர்

மானுடம் நிறுவனம்
நூல் தயாரிப்பு / சஞ்சிகை விநியோகம் / உசாத்துணை சேவை

ஆதிரை வெளியீடு
ஆவணப்படம்

நிகரி
ஆவணப்படம்

நாளை வெளியீடு
ஆவணப்படம்

கற்கை வட்ட ஒருங்கிணைப்பாளர்கள்

சிவராஜா ரூபன் – நோர்வே

எஸ். கே. விக்னேஸ்வரன் – கனடா

அசோக் யோகன் கண்ணமுத்து– பிரான்ஸ்

விநியோக ஒருங்கிணைப்பாளர்கள்

இ. பத்மநாப ஐயர் – ஐக்கிய இராச்சியம்

எஸ். கே. விக்னேஸ்வரன் – கனடா

சிவராஜா ரூபன் – நோர்வே

அசோக் யோகன் கண்ணமுத்து –பிரான்ஸ்

நந்தன் தர்மபாலன் –அவுஸ்திரெலியா

கூட்டுறவு புத்தக மன்ற ஒருங்கிணைப்பாளர்கள்

கனகலிங்கம் சுகுமார் – ஐக்கிய இராச்சியம்

கணேசானந்தன் சசீவன் – ஐக்கிய இராச்சியம்

இ. பத்மநாப ஐயர் – ஐக்கிய இராச்சியம்

சதீசன் தனபாலசுந்தரம் –ஐக்கிய இராச்சியம்

மாதவி சிவலீலன் – ஐக்கிய இராச்சியம்

நாகலிங்கம் சிறீசபேசன் – ஐக்கிய இராச்சியம்

திபாகரன் தியாகராஜா – ஐக்கிய இராச்சியம்

எஸ்.கே.விக்னேஸ்வரன் – கனடா

இளங்கோ – கனடா

இலங்கதாஸ் பத்மநாதன் – கனடா

வாகீசன் செல்வராஜா – கனடா

சிவராஜா ரூபன் – நோர்வே

சஞ்சயன் செல்வமாணிக்கம் – நோர்வே

தில்லைநாதன் கோபிநாத் –அவுஸ்திரேலியா

அசோக் யோகன் கண்ணமுத்து – பிரான்ஸ்

சுபாஸ் கார்வண்ணா – பிரான்ஸ்

கந்தையா ரமணிதரன் –ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ராஜ்குமார் ரஜீவ்காந்த் – இலங்கை

சாள்ஸ் அன்ரனிதாஸ் – இலங்கை

வை. ஜெயமுருகன் – இலங்கை

அன்ரன் பொன்ராஜ் – சுவிட்சர்லாந்த்

நிகழ்வு ஒருங்கிணைப்புப் பங்காளர்கள்

சிறகுகள் அமையம் – யாழ்ப்பாணம்

சத்தியமனை நூலகம்
யாழ்ப்பாணம்

தமிழ்த் தேசிய கலை இலக்கிய பேரவை
கிளிநொச்சி

கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் – வவுனியா

திரைப்படக் கழகம் – மட்டக்களப்பு

தளம் கட்டமைப்பு – திருகோணமலை

நிகர் சமூக கலை இலக்கிய அரங்கம்
கண்டி

கலை இலக்கிய வட்டம் – பதுளை

தியேட்டர் மேட்ஸ் பண்பாட்டு கழகம்
நுவரெலியா

கொழும்புத் தமிழ்ச் சங்கம் – கொழும்பு

கல்வி மேம்பாட்டுக்கும் சீர்திருத்தத்துக்குமான புத்தளம் கல்வியியலாளர்களின் மன்றம் (PILLARS) –புத்தளம்

அச்சுப்பதித்து விநியோகிப்போர்

நாளை வெளியீடு – கனடா

விநியோகப் பங்காளர்கள்

பனுவல் புத்தகசாலை – யாழ்ப்பாணம்

குயின்சி புத்தகசாலை – யாழ்ப்பாணம்

வெண்பா புத்தகசாலை – யாழ்ப்பாணம்

எங்கட புத்தகங்கள் – யாழ்ப்பாணம்

மொழி புத்தகம் பதிப்பகம் – வெள்ளவத்தை

வெண்பா புத்தகசாலை – வெள்ளவத்தை

பூபாலசிங்கம் புத்தக சாலை – கொழும்பு11

கலை வட்டம்
துறைசார் மதியுரைஞர் குழு

நிலாந்தன் மகாதேவா
இலக்கியம் – கவிதை

பாக்கியநாதன் அகிலன்
காண்பியக்கலை – கட்டடக்கலை

ஜோசப் ஜோன்சன் ராஜ்குமார்
ஆற்றுகைக்கலை – அரங்கக்கலை

இலங்கரெட்ணம் சஜித்
ஆற்றுகைக்கலை – நடனம்

சபேஸ் சுகுணசபேசன்
காண்பியக்கலை – புகைப்படக்கலை

ஆய்வு நிறுவனம்
துறை சார் மதியுரைஞர் குழு

ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்
மொழியும் இலக்கியமும்

சுப்ரமணியம் சிவகுமார்
நீரியலும் நீர்ப்பாசனமும்

குமாரவடிவேல் குருபரன்
சட்டமும் சட்ட முறைமையும்

நடராஜா சிறீஸ்கந்தராஜா
சூழலும் உயிர்ப் பல்வகைமையும்

சச்சிதானந்தன் சுகிர்தராஜா
சமயமும் இறையியலும்

பால சிவகடாட்சம்
சுதேசியமும் பாரம்பரிய மருத்துவமும்

நாகமுத்து பிரதீபராஜா
புவியியலும் திட்டமிடலும்

பரமு புஸ்பரட்ணம்
வரலாறும் தொல்லியலும்

சனாதனன் தமோதரம்பிள்ளை
கட்புல அரங்கேற்றக் கலைகள்

சேரன் உருத்திரமூர்த்தி
சமூகவியலும் மானிடவியலும்

முத்துக்கிருஸ்ணன் சர்வானந்தன்
பொருளியலும் நிதியியலும்

சபா ஜெயராசா
கல்வியியலும் கற்றலும்

மரியோ அருள்தாஸ்
அரசியலும் மெய்யியலும்

இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்
கட்டடக்கலையும் வடிவமைப்பும்

கந்தையா பகீரதன்
விவசாயமும் மீன்பிடியும்

உள்ளே...

நாடு பிளவுபட்ட நாற்பதுகள் — பகுதி 1
-கார்த்திகேசு இந்திரபாலா
03

தென் ஆசியாவில் தொல்மானிட இனங்கள் — பகுதி 1,2,3
- சிவ தியாகராஜா
09

இலங்கையில் அதிகாரப் பகிர்வு: 1926 – 2008 காலத்தில் வெளியிடப்பட்ட அரசியல் யாப்பு ஆவணங்களின் தொகுப்பு – பகுதி 2
- ஆங்கில மூலம்: றொகான் எதிரிசிங்க, மரியோ கோமஸ், வி.ரி. தமிழ்மாறன், அசங்க வெலிக்கல
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்
41

மலையகத்தில் நிகழ்த்தப்படும் இராமர் பஜனை
- மெய்யநாதன் கேதீஸ்வரன்
46

2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட யாழ்ப்பாணத்து மக்களின் உணவுப் பழக்கவழக்கங்கள்: ஆனைக்கோட்டை அகழ்வாய்வில் வெளிச்சத்திற்கு வந்திருக்கும் உண்மைகள்
- பரமு புஷ்பரட்ணம்
54

வல்லிபுரம் புத்தர்சிலை 'மீளக்கண்டுபிடிக்கப்பட்டது'
- ஆங்கில மூலம்: பீற்றர் ஷால்க்
தமிழில்: வின்சென்ற் போல் சந்தியாப்பிள்ளை
61

புத்தமும் தமிழும்
- ஆங்கில மூலம்: பீற்றர் ஷால்க்
தமிழில்: வின்சென்ற் போல்
77

பண்டாரநாயக்கவின் 'சமஷ்டி' எண்ணக்கருவுக்கு 100 வயது: மறுத்த தமிழர்களே சமஷ்டிக்காகப் போராடிய வரலாறு
- என்.சரவணன்
84

மேன்மக்கள் சரித்திரம்: கொழும்பு நகரின் தமிழ் உயர்குழாம் பற்றி சு. இரத்தினசாமி ஐயர் 1930ஆம் ஆண்டு எழுதிய நூல் பற்றிய அறிமுகம்
- கந்தையா சண்முகலிங்கம்
98

திட்டமிடாத துயரம்: வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சமூகங்களின் மீது வறட்சியின் தாக்கம் — பாலின நோக்கிலான ஓர் ஆய்வு
- அஸாம் ஷா
105

மலையகத் தமிழரின் வழிபாட்டு மரபில் பெரிய எழுத்துப் பொஸ்தகங்கள்
-எம். எம். ஜெயசீலன்
111

இலங்கையில் சிங்கள மக்களிடையே காணப்படுகின்ற பத்தினி வழிபாட்டுடன் தொடர்புடைய அங்கெலிய விளையாட்டு
- கிருபாகரன் கவிதாஞ்சன்
117

போருக்குப் பின் பேசுதல்: மொழியும் மௌனமும் அன்றாடப் பேச்சும் — பகுதி 3,4
- மீநிலங்கோ தெய்வேந்திரன்
124

1991 – 2009: ஈழப்போரின் சர்வதேசப் பரிமாணமும் ஆயுதப் போராட்டத்தின் முடிவும் — பகுதி 3
- சி. அ. யோதிலிங்கம்
149

1973 – 1976 காலப்பகுதியில் பெருந்தோட்டங்களை ஊடுருவிய பஞ்சமும் பட்டினியும்: சமூக விளைவுகளும் மீள் எழுச்சியும்
- ஏ. எஸ். சந்திரபோஸ்
157

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்து செய்யவும் அரசியல் கைதிகளை விடுவிக்கவும் கோரும் 'மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான மத்திய நிலையத்தின்' (CHRD) மகஜர் (2002)
- தமிழில்: எஸ்.கே. விக்னேஸ்வரன்
165

மலையக வாய்மொழிப் பாடல்கள் வெளிப்படுத்தும் பெருந்தோட்டத் தொழிலாளருக்கு எதிரான ஒடுக்குமுறை வடிவங்கள்
- வேலாயுதம் இராமர்
168

வடக்குக் கிழக்குப் பிராந்தியங்களின் ஆற்றுப்படுகைகளின் அடையாளமும் புவியியல் சுயவிவரமும் — பகுதி 5
- சுப்ரமணியம் சிவகுமார்
175

‘வேந்தர் இல்லா வையகம்: இருபதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணம்‘ எனும் இத்தொடர் ‘ஒருவர் வாழ்க்கை ஊடாகத் தென்படும் காட்சிகள்‘ பற்றியதாகும். இத்தொடர் கட்டுரைகள் என் வாழ்க்கையில் கண்ட, கேட்ட, கேள்விப்பட்ட, வாசித்தறிந்த நிகழ்ச்சிகள் ஏற்படுத்திய மனப்பதிவுகள் பற்றியும் அவற்றால் என் மனதில் உருவாகிய கருத்துகள் பற்றியும் கூறுபவை. இவை வரலாற்று ஆய்வுக் கட்டுரைகள் அல்ல. இவை யாழ்ப்பாணத்தைப் பற்றியவை; 20 ஆம் நூற்றாண்டை மையமாகக் கொண்டவை. வரலாற்றை எழுதுவோர்க்குச் சான்றுகளைக் கொடுத்துதவும் சுவடிகள் போன்று இத்தகைய நினைவுப் பதிவுகளும் பயன்படும் என்ற நோக்கத்துடன் இவை எழுதப்படுகின்றன.

நாடு பிளவுபட்ட நாற்பதுகள்

பகுதி -I

கார்த்திகேசு இந்திரபாலா

பேராசிரியர் கார்த்திகேசு இந்திரபாலா இலங்கையின் கல்வெட்டியலாளர், வரலாற்றாய்வாளர், மொழியியலாளர் ஆவார். இவர் இலங்கைத் தமிழரின் வரலாறு தொடர்பான நூல்களை தொல்லியல் சான்றுகளுடன் நிறுவியவரும் ஆவார். யாழ்ப்பாணக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்ற இவர் தமிழ் மட்டுமன்றி ஆங்கிலம், யேர்மன், சிங்களம், பாளி, சமசுகிருதம், யப்பானியம் என பன்மொழி கற்றறிந்தவராவார். ஆதி இலங்கையில் இந்துமதம், இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை, யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், The Evolution of an Ethnic Identity, இலங்கையில் தமிழர் ஆகியன இவரின் குறிப்பிடத்தக்க நூல்களாகும்.

1920களில் இலங்கையின் அரசியல் நிலப்பரப்பில் ஒரு வெடிப்பு ஏற்பட்டது. அரசியல் தலைவர்கள் இந்த வெடிப்பை மேலும் விரிவடையவிட்டனர். அது 1930களில் அகன்று சென்றது; அடுத்த தசாப்தத்தில், 1940களில், நிரப்ப முடியாத நிலப்பிளவாக விரிந்தது. ஆட்சியாளருடைய செயல்பாடுகளும் அகலச்சென்ற பிளவை ஒடுக்க உதவவில்லை. உண்மையில் ஆட்சியாளர் இதனை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தினர்.

பின்புலம்

இருபதாம் நூற்றாண்டின் முதற்காலில் இந்தியத் தேசியவாதிகளுடைய கலைச்சொல் அகராதியில் 'வகுப்புவாதம்' (Communalism) என்ற பொருள் பொதிந்த சொல்லொன்று சேர்க்கப்பட்டது. அது பின்னர் தேசிய இயக்கத்துக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் மதம் சார்ந்த அல்லது இனக்குழு (Ethnic) சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபட்டோர் மீது பாய்ச்சுவதற்குப் பயன்படும் கூரிய அம்புகளில் ஒன்றாக மாறியது. இத்தகைய செயல்பாடுகள் வகுப்புவாதம் எனப்பட்டது. இதில் ஈடுபடுவோர் ஒற்றுமைப்பட்ட இந்தியாவை, எல்லோரும் இந்தியர் என்ற தேசிய உணர்வை, வளர்ப்பதற்குப் பாதகம் விளைவிப்பவர்கள் என மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு ஆகிய முன்னணித் தலைவர்கள் வர்ணித்தனர். இந்தியத் தேசியவாதிகள் 'எல்லோரும் இந்தியர்' என்ற இலட்சியத்துக்கு எதிராகச் செயல்பட்டோரை 'வகுப்புவாதிகள்' என்று பெயரிட்டு வெட்கமடையச் (Shaming) செய்தனர்.

வகுப்புவாதம் என்ற பொருளை அணுகிய முறையில் நேருவுக்கும் காந்திக்கும் இடையில் வேறுபாடு உண்டு. காந்தியின் அணுகுமுறை ஒழுக்கநெறி (Morality) மற்றும் மதம் (Religion) சார்ந்த நிலைப்பாட்டில் இருந்து வெளிப்பட்டது. காந்தியின் நோக்கில் உண்மையான ஆன்மீகம் (Spirituality) எல்லா மக்களையும் ஒன்றுபடுத்தும் சக்தியே, பிரிக்கும் சக்தியல்ல; மத அடிப்படையில் வகுப்புவாதிகளாக நடப்போர் தங்கள் மத நம்பிக்கைக்குத் துரோகம் இழைக்கிறார்கள் (Betrayal of Faith).

இந்து, முஸ்லிம் எனப் பிரிவினை வளர்க்கும் வகுப்புவாதிகள் தத்தம் மதத்தையே அழிக்கின்றனர் எனக் காந்தி இவர்களைத் தாக்கினார். 'Young India' என்ற சஞ்சிகையில் 1927இல் அவர் எழுதியது இதனை விளக்கும்: *"The Hindu thinks that in quarreling with the Mussalman he is benefitting Hinduism, and the Mussalman thinks that in fighting the Hindu he is benefitting Islam. But each is ruining his faith."* இந்தியா என்பது பாரத மாதாவின் குடும்பம் - வகுப்புவாதம் இக்குடும்பத்தைக் குலைக்கும் என்பது காந்தியின் கருதுகோள். நேருவின் அணுகுமுறை வேறு. அவர் சோசலிசக் கருத்துகளைக் கடைப்பிடித்தவர். அத்துடன் அவருடைய நோக்கு பகுத்தறிவை அடித்தளமாகக் கொண்டது (Rationalist). அவர் நோக்கில் வகுப்புவாதம் பேரரசுவாதிகளின் ஆயுதம் ("Communalism is an old weapon of the imperialists"). ஆகவே, வகுப்புவாதிகள் இந்தியரைப் பிளவுபடுத்தும் பேரரசுவாதிகளுக்கு உதவுபவர்கள்.

இலங்கையில் வகுப்புவாதம்

இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சியின் தொடக்கத்தில் இருந்தே வகுப்புவாதம் ஆட்சியாளரால் வளர்க்கப்பட்டது எனலாம். முதல் தடவையாக நாட்டுக்கு ஒரு சட்டவாக்க சபையை அமைத்தபோது சிங்களவருக்கு ஒரு பிரதிநிதி, தமிழருக்கு ஒரு பிரதிநிதி என்ற கோட்பாடு வெளிப்படும் வகையில் ஒரு சிங்கள உறுப்பினரும் ஒரு தமிழ் உறுப்பினரும் நியமிக்கப்பட்டனர். அவ்வாறே, ஒரு பறங்கியரும் மூன்று ஐரோப்பியரும் அவரவர் இனக்குழுக்களின் சார்பில் உறுப்பினராக நியமனம் பெற்றனர்.

இப்படி இனக்குழு அடிப்படையில் மக்களைப் பிரித்து நாட்டை ஆளுவதே சரியான முறை என்பதை இலங்கையர் ஏற்றுக்கொள்வதற்கும் தொடர்ந்து எதிர்பார்ப்பதற்கும் அடித்தளம் அமைக்கப்பட்டது. இதனால், 19ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் கண்டியரும் முஸ்லிம்களும் அரசியல் விழிப்புணர்வைப் பெற்றபோது அவர்களுக்கும் ஆட்சியாளர் ஒவ்வொரு பிரதிநிதியை நியமித்தனர்.

இனக்குழு அடிப்படையிலான பிரதிநிதித்துவமே முறையான பிரதிநிதித்துவம் என்ற கோட்பாடு மேலும் இறுகியது. சனத்தொகையில் பெரும்பான்மையினராக இருந்த சிங்களவருக்குக் கொடுக்கப்பட்ட அரசியல் வலு சமமான முறையில் சிறுபான்மையினராகிய தமிழருக்கும் வழங்கப்படும் என்ற நம்பிக்கை வலுப்பெற்றது. தமிழ் மத்திய வகுப்பினர் இந்த நிலை எப்பொழுதும் இருக்கும் என்று எண்ணினர். இந்த எண்ணம் பிரித்தானியர் ஆட்சி நிலையானது என்ற கருத்துடன் தொடர்புடையதாகையால், அந்த ஆட்சிக்கும் அசையாத ஆதரவை வெளிப்படுத்தினர்.

ஆனால், 1920களில் இந்த நிலை மாறியபோது தமிழ் மத்தியவகுப்புத் தலைவர்கள் ஏக்கம் அடைந்தனர். முன்னர் கூறியதுபோல, இவர்கள் இனக்குழு அடிப்படையிலான பிரதிநிதித்துவத்துக்காகப் பல வகைகளில் போராடினர். சிங்கள மத்தியவகுப்புத் தலைவர்கள் இவர்கள் கருத்துகளை எதிர்த்தனர்.

'வகுப்புவாதி' என்ற அம்பு இரு பக்கங்களிலும் இருந்து பாய்ந்தது. இப்புதிய சூழலில் இலங்கையர் தேசியவாதத்துக்குப் பெரிதும் உழைத்த அருணாசலம் கூட மேற்கூறிய அம்புவீச்சுக்குத் தப்பவில்லை. தெற்கில் இருந்து F.R. சேனாநாயக்க (D.S. சேனாநாயக்கவின் தமையன்) அவரை வகுப்புவாதி என்றார்; வடக்கில் இருந்து 'Hindu Organ' ஆசிரியரும் அதே சொல்லை அவர்மீது வீசினார். இக்கட்டத்தில் 'வகுப்புவாதி' என்பது ஒருவரை இழிவுபடுத்தும் சொல்லாக மாறிவிட்டது.

சிங்களத் தலைவர்கள் பக்கத்தில் A.E. குணஸிங்ஹ, பண்டாரநாயக்க, D.S. சேனாநாயக்க போன்றோரும் வகுப்புவாதிகள் என்ற குற்றச்சாட்டுக்கு இலக்காகினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பழமை பேணுவோர் குழு

யாழ்ப்பாணத்தில் 1940களில் அரசியல் களத்தில் இளைஞர் காங்கிரஸ் குழுவினர், இடதுசாரிக் குழுவினர் ஆகியோரைக் காட்டிலும் கூடுதலான செல்வாக்குப் பெற்றவர்கள் பழமை பேணுவோர் (Conservatives) குழுவினர் என்றே கூறவேண்டும். இவர்களே யாழ்ப்பாணத்தவர் பிரதிநிதிகளாக அரச சபையில் இருந்தவர்கள். யார் இந்த அரச சபை உறுப்பினர்? யாழ்ப்பாணத் தொகுதி உறுப்பினர் அருணாசலம் மகாதேவா, பருத்தித்துறை உறுப்பினர் ஜி.ஜி. பொன்னம்பலம், காங்கேசன்துறை உறுப்பினர் சு. நடேசன், ஊர்காவற்றுறை உறுப்பினர் வை. துரைசுவாமி. யாழ்ப்பாணத்துக்கு வெளியே எஞ்சிய வட மாகாணத்தின் தொகுதியாக மன்னார்முல்லைதீவு இருந்தது. அதன் உறுப்பினர் ஜெகநாதன் தியாகராஜா.

இவர்களுடன் பழமை பேணும் குழுவினராக 'Jaffna Association' என்ற கழகத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகளையும் சேர்த்துக்கொள்ளலாம்.

இரண்டாம் உலகப் போர் முடிவடையும் கட்டத்தை அணுகிய போது, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் சுதந்திரம் விரைவில் கிடைக்கும் என்ற எண்ணம் அரசியல்வாதிகள் மனதில் எழுந்தது. முன்னர் கூறியது போல், முக்கிய அரசியல் தலைவர் ஒவ்வொருவரும் தத்தமக்குச் சாதகமான அரசியல் யாப்பினைப் பெறுவதற்குத் தீவிர முயற்சிகளில் ஈடுபடுவதைக் காணலாம். இவர்களுள் மிகவும் தீவிரமாகச் செயல்பட்ட ஒருவர் D.S. சேனாநாயக்க ஆவார். அண்ணன் F.R. சேனாநாயக்க அகால மரணம் அடைந்தபின் அரசியலில் படிப்படியாக முன்னேறிய இவர், 1931இல் புதிய அரச சபையின் உறுப்பினராகி, விவசாயத் துறை அமைச்சர் பதவியைப் பெற்று முன்னணித் தலைவர்களுள் ஒருவரானார்.

அப்பொழுது தொட்டு இவர் தனக்கென ஒரு பாதையை வகுத்து நாட்டின் முதல்வராக வருவதற்குப் பெருவிருப்பு உடையவராய் செயல்பட்டார் என்பதில் ஐயமில்லை.

சேனாநாயக்கவின் ஆளுமைப் பண்புகள் மற்றும் அரசியல் சிந்தனை பற்றிப் பல ஆய்வாளர்கள் எழுதியுள்ளனர். எனினும், இவருடைய ஆளுமையையும் கருத்துகளையும், இவற்றுக்கு மேலாக இவர் நாட்டுக்குத் தேவை என வகுத்திருந்த திட்டத்தையும், இலகுவில் புரிந்துகொள்ள முடியாது என்று நான் நினைக்கின்றேன்.

இவர் காலத்தில், முன்னர் கூறியது போல, மூன்று முக்கிய அரசியல் தலைவர்கள் நாட்டில் முதன்மை நிலையைப் பெற்றுத் தங்கள் சமூகத்தை உயர்த்துவதற்குப் பெருவிருப்புக் கொண்டிருந்தனர். ஒருவர் சேனாநாயக்க, மற்றவர்கள் பண்டாரநாயக்கவும் ஜயவர்த்தனவும் ஆவர். மூவரும் வெவ்வேறு சிந்தனைகளை மனதில் கொண்டு வேறுவேறு திட்டங்களை வகுத்தனர் எனலாம்.

சேனாநாயக்க படிப்படியாக, மெதுவாக, தயக்கமில்லாது தன் திட்டத்தை வகுத்தார். இவர் கல்வி நிறுவனங்களில் அதிகம் படிக்காதவர் (எட்டாம் வகுப்புடன் பாடசாலையை விட்டவர்). ஒரு மிதவாதி. மேலைத்தேச நிலைக்கும் முதலாளித்துவ முறைக்கும் சார்பானவர்.

பண்டாரநாயக்க செல்வந்தர் குடும்பம் ஒன்றில் தனியொரு மகனாகப் பிறந்து, சிறுவயதில் பாடசாலைக்கு அனுப்பப்படாது வீட்டிலேயே நியமிக்கப்பட்ட ஆங்கிலேய ஆசிரியர் ஒருவரால் கல்வி ஊட்டப்பட்டுப் பின்னர் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பட்டம்பெற இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டவர். பட்டம்பெற்று நாடு திரும்பிய போது தொழில்புரிய வேண்டிய தேவை இருக்கவில்லை. உடனடியாக அரசியலில் இறங்கி, முற்போக்குச் சிந்தனையை வளர்க்கும் கட்சி ஒன்றைத் தொடங்கினார். தன் சோசலிசக் கருத்துகளை வெளிப்படுத்தினார். அடுத்து, இலங்கைக்கு சமஷ்டி முறையே சிறந்தது என அறைகூவினார். அதன் பின் சிங்கள மகாசபையை நிறுவி அதன் தலைவரானார். தயக்கம் நிறைந்தவர். ஒரு கொள்கையைத் திடமாகப் பற்றி ஓர் இடத்தில் நிற்கும் தன்மை இல்லாதவர். பொறுமை என்பது அவருடைய பண்புகளில் ஒன்று என்று கூறுவதற்கில்லை.

ஜயவர்த்தன தூரநோக்குடன் திட்டம் வகுப்பவர். இக்கட்டத்தில் இவர் மேலே குறிப்பிடப்பட்ட இருவருடனும் போட்டியிடும் நிலையில்

இருக்கவில்லை. எனினும், இவர்களுக்கு இருந்த பெருவிருப்பு அவருக்கும் இருந்தது. தனக்குத் தருணம் வரும்வரை காத்திருக்க அவரிடம் பொறுமை இருந்தது. அதுவரை தன் மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய தலைவராகுவதற்குத் தேவையான செயல்களில் இடைவிடாது ஈடுபட்டார். இவரைப் பற்றிப் பின்னர் பார்க்கலாம்.

இலங்கை சுதந்திரம் பெறும் தறுவாயில் இருந்தபோது, இந்நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் அதிகாரத்தைப் பெற்று வழிநடத்தப் பெருவிருப்புக் கொண்டோராய்க் காணப்பட்ட சேனாநாயக்கவும் பண்டாரநாயக்கவும் (ஜயவர்த்தனவும்கூட) தங்கள் இனக்குழுப் பற்றில் இருந்து வெளியேறி, முழு இலங்கையரையும் ஒன்றுகூட்டி வழிகாட்டும் தலைவர்களாக எழுச்சிபெறத் தவறினர். இந்த வகையில் இவர்களை இந்தியத் தேசியத் தலைவர்களுடன் ஒப்பிட முடியாது. பின்னர் நாம் காணும் சிங்கப்பூர் தலைவராகிய லீகுவான் யூ (*Lee Kuan Yew*) வெளிப்படுத்திய தலைமைத்துவப் பண்புகள் இவர்களிடம் எள்ளளவும் இருக்கவில்லை.

சேனாநாயக்கவின் எழுச்சி

D.S. சேனாநாயக்க
Image Source - dailymirror.lk

இலங்கைக்குச் சுதந்திரம் கிட்டிவிட்டது என்பதைக் கூடுதலாக உணர்ந்து செயல்பட்டவர் சேனாநாயக்க என்றே சொல்ல வேண்டும். மிகச்சாதுரியமாக, வியக்கத்தக்க புத்திசாலித்தனத்துடன், தனது நிலையை ஆட்சியாளர்களுக்குக் கிட்ட நகர்த்திப் பிறர் எவரும் சவால்கொடுக்க முடியாத வகையில் முன்னிலையை அடைந்தார். தேசிய காங்கிரஸில் இருந்த பிற சிங்களத் தலைவர்கள் பிளவுபட்டுக் காணப்பட்டனர். சில இளம் உறுப்பினர் தீவிரப் போக்கைக் கடைப்பிடித்து இலங்கைக்கு முழுச் சுதந்திரம் உடனடியாக வேண்டும் என்று அடம்பிடித்தனர். சிலர் மிதவாதிகளாக இருந்தபோதிலும் சேனாநாயக்கவைச் சந்தேகக் கண்கொண்டு பார்த்தனர். காங்கிரஸின் முழு ஒத்துழைப்பு சேனாநாயக்கவுக்குத் தேவைப்பட்டது. ஆனாலும் அவர்களுடன் இணைந்து ஆட்சியாளரைப் பகைத்துக்கொள்ள சேனாநாயக்க விரும்பவில்லை. தான் அவர்களுள் ஒருவர் அல்லர் என்பதை ஆட்சியாளருக்குக் காட்டி, பிரித்தானிய அரசாங்கத்தின் நம்பிக்கையைப் பெற வேண்டிய அவசியம் இருந்தது.

பிரித்தானிய அரசாங்கம் அரசியல் சீர்திருத்தங்கள் தொடர்பாகப் பரிந்துரை செய்ய ஓர் ஆணைக்குழுவை அனுப்பத் தீர்மானித்துள்ளதாக 1943 மே மாதத்தில் அறிவித்தது. உடனே இலங்கையில் அரசியல் செயல்பாடுகள் துரிதமடைந்தன. சேனாநாயக்க காத்திருந்த சமயம் வந்தது. அவர் தேசிய காங்கிரஸ் உறுப்பினர் பதவியில் இருந்து விலகினார். காங்கிரஸின் தீர்மானங்களால் கட்டுப்படாது சுதந்திரமாக இயங்க இச்செயல் உதவியது.

தமிழர் தரப்பில்

வரவிருக்கும் ஆணைக்குழுவுக்குத் தமிழர் சார்பில் கோரிக்கைகளை முன்வைப்பதற்கு அரசியல்வாதிகளும் பிறரும் செயல்பாடுகளைத் தொடங்கினர். இக்காலகட்டத்தில் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் வலு இழந்த இயக்கமாகிவிட்டது. '*Jaffna Association*' என்ற அரசியல் கழகமும் முன்போல இயங்கவில்லை. அனுபவம் மிக்க அரசியல்வாதிகளாகச் செல்வாக்குடன் காணப்பட்டோருள் க. பாலசிங்கம், வை. துரைசுவாமி, சு. நடேசன், அ. மகாதேவா, ஜெ, தியாகராஜா ஆகியோர் இருந்தனர். இளம் தலைமுறையைச் சேர்ந்த, எழுச்சி பெறும் ஒரு தலைவராக ஜி.ஜி. பொன்னம்பலம் இருந்தார். ஆனால் இவர்களிடையே கருத்து ஒற்றுமை இருக்கவில்லை. ஒற்றுமையின்மை வெளிப்படையாகப் பலரும் அறியக்கூடிய வகையில் இருந்தது என எண்ணுவதற்கு இடமளிக்கும் வகையில் யாழ்ப்பாணத்துச் செய்தித்தாள்கள், குறிப்பாக '*Hindu Organ*' மற்றும் '*Morning Star*', ஒற்றுமை தேவை என வலியுறுத்தின.

தமிழ்க் காங்கிரஸின் உதயம்

இப்பின்புலத்தில், பொன்னம்பலத்துடன் கூடி நடேசன் மற்றும் தியாகராஜா ஆகியோர் தமிழ்ப் பிரமுகர்களை ஒரு கூட்டத்துக்கு அழைத்தனர். இது ஓகஸ்து 1944இல் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து, செப்தெம்பர் 03இல் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் என்ற கட்சியை அமைப்பதற்காக யாழ்ப்பாணத்தில் மாபெரும் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இதில் சு.

நடேசன், க. பாலசிங்கம், E.M.V. நாகநாதன் போன்ற பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

ஒலிவர் குணதிலக
Image Source - colombotelegraph.com



ஐவர் ஜெனிங்ஸ்
Image Source - npg.org.uk

இக்கூட்டத்தில் பொன்னம்பலம் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருடைய வசீகரமான ஆளுமையும் ஆங்கிலத்தில் அவருக்கு இருந்த நாவன்மையும் ஆங்கிலக் கல்விகற்ற யாழ்ப்பாணத்து மத்திய வகுப்பினரை அவர்பால் ஈர்த்தன. இருபது ஆண்டுகளுக்கு முன் 'ஸ்வராஜ்' எனக் குரல் எழுப்பிய மாணவர் காங்கிரஸைச் சேர்ந்த பிரமுகர்கள் கூட பொன்னம்பலத்துக்கு ஆதரவு அளிக்க முன்வந்தனர். அவர்களுள் மாணவர் காங்கிரஸின் முதலாவது தலைவராக இருந்த J.V. செல்லையா, செயலாளராக இருந்த I.P. துரைரத்தினம், (1950களில்) S.R. கனகநாயகம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். பொன்னம்பலத்தையும் பெரும்பாலான தமிழ் அரசியல் தலைவர்களையும் வருத்திய பிரச்சினை சீர்திருத்தப்பட்ட சட்டவாக்க சபையின் பிரதிநிதித்துவ முறை ஆகும். 1920கள் வரை இருந்த இன அடிப்படையிலான பிரதிநிதித்துவ முறை 1931இல் கைவிடப்பட்டது. அத்துடன், வயதுவந்தோர் அனைவர்க்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. இந்த இரு மாற்றங்களும் இலங்கை வரலாற்றில் மிக முக்கியமான திருப்பத்தை ஏற்படுத்தின.

உலகப் பின்புலம்

இலங்கையில் நாட்டின் எதிர்காலம் பற்றி அரசியல்வாதிகள் கருத்து முரண்பாடுகளுடன் விவாதித்துக் கொண்டிருந்த அதே காலத்தில் இரண்டாம் உலகப் போர் முற்றுப்பெற்று உலகமே மாறிவிட்டது. வரலாறு காணாத வல்லரசாக எல்லாக் கண்டங்களில் கால் ஊன்றி நின்ற பிரித்தானியப் பேரரசு திடீரென நிலைகுலைந்தது.

நிலைகுலையும் பேரரசின் பாகங்களில் இருந்து புதிய அரசுகள் தோன்றின. இவை முன்னர் தனி அரசுகளாக அல்லது தனிநாடுகளாக இருக்கவில்லை. பிரித்தானியப் பேரரசு இவை உருவாகுவதற்கு உதவியது. தென் ஆசியாவை எடுத்துக்கொண்டால், தனக்கென எல்லைகள் வரையறுக்கப்பட்ட இந்தியா என்ற தனியொரு நாடு முன்னர் இருக்கவில்லை. இன்று நாம் காணும் இந்தியா ஒரு புதிய நாடு. விடுதலைக்குப் போராடிய இந்தியத் தலைவர்கள் இப்புதிய நாட்டைக் கட்டியெழுப்பத் திட்டமிட்டுச் செயலாற்றினர். பிரித்தானியரைத் துரத்திவிட்டு முன் இருந்த நிலைக்குச் செல்ல அவர்கள் போராடவில்லை. இதனைப் பின்னர் விரிவாகப் பார்க்கலாம். இலங்கையின் நிலையும் அத்தகையதே. ஐரோப்பிய ஏகாதிபத்தியவாதிகளே வரையறுக்கப்பட்ட எல்லைகளை வகுத்தனர். பிரித்தானியரிடம் இருந்து நாட்டைப் பெறுவதற்குத் தயாராய் நின்ற அரசியல் தலைவர்கள் முன் நோக்கி ஒரு புதிய அரசை உருவாக்குவதற்குச் செயல்படவில்லை. ஐரோப்பியர் வருகைக்கு முன்பிருந்த நிலை என அவர்கள் எண்ணிய நிலையை மீளமைப்பது அவர்கள் திட்டங்களில் முக்கிய இடத்தைப் பெற்றது.

தென் ஆசியாவில் உருவாகிய புதிய அரசுகளுள் பல வகைப்பட்ட இனக்குழுக்களும் பண்பாட்டுக் குழுக்களும் அகப்பட்டன. இவை புறப்பட்டு வெளியே செல்லமுடியாத வகையில் புதிய அரசுகள் வடிவம் பெற்றன. இதுதான் அப்பொழுது காணப்பட்ட மெய்நிலை (*Reality*). இனக்குழுத் தலைவர்களும் பண்பாட்டுக்குழுத் தலைவர்களும் புதிய அமைப்பிற்குள் எவ்வாறு தத்தமக்குப் பொருத்தமான இடத்தைக் கண்டுகொள்வது (*Finding Accommodation within the New Framework*) என்பதை வகுக்க வேண்டிய தேவை இருந்தது.

சேனாநாயக்க வகுத்த தேசியம்

சுதந்திர இலங்கையில் முதல் இடத்தைப் பெறுவதற்கான ஓட்டப் பந்தயத்தில் மிகத் திறமையுடனும் புத்திசாலித்தனத்துடனும் சிறிதும் வேகம் குறையாது சீராக ஓடியவர் சேனாநாயக்க

என்பதில் ஐயமில்லை. பண்டாரநாயக்க வகுத்த திட்டம் தூரநோக்குடையது; ஆனால் அவருக்குப் பலம் கொடுத்த சிங்கள பௌத்த இயக்கம் வெளியே வந்து அவரை வெல்ல வைப்பதற்குத் தயாராக இருக்கவில்லை; அதற்கான சாத்தியம் ஆங்கிலேயர் ஆட்சி இருக்கும்வரை தோன்ற வாய்ப்பே இருக்கவில்லை. அன்னியர் ஆட்சி முற்றுப் பெற்றபின் ஒருசில ஆண்டுகளுள் அந்த இயக்கம் வெற்றி பெறுவதற்கான நிலை உருவாகிக்கொண்டிருந்தது.

சேனாநாயக்கவின் விலகாத குறிக்கோள், பிரித்தானியப் பேரரசுக்குள் (கனடா, அவுஸ்திரேலியா போன்று) டொமினியன் நிலையை (Dominion Status) இலங்கைக்குப் பெறுவது. ஆட்சியாளர் அதற்கு உடன்படவில்லை. ஆனால் சேனாநாயக்க அதைக் கைவிடவில்லை. இக்குறிக்கோளை அடைவதற்கு அவர் சிங்கள பௌத்த இயக்கத்தின் உதவியை நாடவும் இல்லை. ஆட்சியாளர் மனதை இளக வைப்பதற்கு மென்மையான அழுத்தத்தை தளராது கொடுக்க வேண்டியிருந்தது. இலங்கையின் எல்லாப் பிரிவினரும் தன் பின்னே ஒற்றுமையாகத் தான் கேட்பதையே கேட்டு நிற்கின்றார்கள் என அதே ஆட்சியாளருக்குக் காட்ட வேண்டிய அவசியமும் இருந்தது.

முதலாவதாக, பிரித்தானியர் கடும் போரில் ஈடுபட்டிருந்த போது, பிற தலைவர்களைப் போல் “முழுமையான சுதந்திரத்தைத் தா” எனக் கூச்சல் இடாது, வேண்டிய ஒத்துழைப்பை சேனாநாயக்க கொடுக்க முன்வந்தார். விவசாய அமைச்சர் நிலையில் இருந்து கொண்டு பிரித்தானியரின் போர் முயற்சிகளுக்கு (War Effort) தேவைப்பட்ட இறப்பர் (Rubber) இலங்கையில் இருந்து கொடுக்கப்படுவதற்கும் உணவுத் தட்டுப்பாட்டினால் பிரச்சினைகள் எழா வண்ணம் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் (Food Security) கடுமையாக உழைத்து ஆட்சியாளருக்கு விசுவாசத்தை சேனாநாயக்க காட்டினார். இது பிரித்தானிய அரசாங்கத்துடன் அன்னியோன்னிய உறவை வளர்ப்பதற்குப் பெரிதும் உதவியது. அத்துடன், இலங்கை சுயாட்சிக்கு தயாராயுள்ள ஒரு பொறுப்பு வாய்ந்த நாடு என்பதையும் ஆட்சியாளருக்குக் காட்ட முடிந்தது.

இரண்டாவதாக, அவர் தலைசிறந்த ஓர் உபாயத்தை வகுத்து ‘வல்லவர் மூவர்’ (Triumvirate) எனப் பெயர்பெற்ற ‘உறவுக்குழு’ (Alliance) ஒன்றை உருவாக்கி, பிற தலைவர்கள் தலையிடாத வகையில் திட்டங்களை வகுத்து ஆட்சியாளருடன் தொடர்புகொண்டார். இக்குழுவில், சேனாநாயக்கவுடன், பொதுமக்கள் பாதுகாப்புக்கான போர்க்கால ஆணையாளராகப் பதவி (Civil Defence Commissioner) வகித்த ஒலிவர் குணத்திலக (பின்னர் இலங்கையின் தேசாதிபதிப் பதவியைப் பெற்றவர்) மற்றும் அய்வர் ஜெனிங்ஸ் (Ivor Jennings) ஆகியோர் இருந்தனர்.

ஜெனிங்ஸ் வழியாகப் பிரித்தானிய அரசாங்கத்திடம் தனக்குச் சார்பான நல்லெண்ணத்தை வளர்ப்பதற்கு சேனாநாயக்க வாய்ப்பைப் பெற்றார்.

மூன்றாவதாக, நாட்டின் அரசியல் தலைவர்கள் ஒற்றுமையாகத் தான் முன்வைக்கும் சீர்திருத்தத் திட்டத்துக்கு ஆதரவளிக்கின்றனர் எனப் பிரித்தானிய அரசாங்கத்துக்கு சேனாநாயக்க காட்ட வேண்டிய அவசியம் இருந்தது. இதனையும் மிகவும் சாதுரியமாக அவர் சாதித்தார்.

ஐந்து ஆண்டுகளுக்குள் சேனாநாயக்க பிற போட்டியாளர்களைத் தள்ளிவிட்டுத் தான் நினைத்தவற்றைச் சாதித்தார். பிரித்தானிய அரசாங்கம் 1943 மே மாதத்தில் அரசியல் திருத்த ஆணைக்குழுவை அனுப்புவதாக அறிவித்தது. அதைத் தொடர்ந்து சேனாநாயக்க தேசிய காங்கிரஸில் இருந்து விலகித் தனியாக இயங்கத் தொடங்கினார். சோல்பரி ஆணைக்குழு 1945இல் இலங்கைக்கு வந்தபோது பிறர் அக்குழுவைப் புறக்கணித்தாலும், மறைவாக இக்குழுவுடன் உறவாடினார். அதே ஆண்டு லண்டனுக்குச் சென்று தனியாகப் பிரித்தானிய அமைச்சர்களைச் சந்தித்தார்.

ஏமாற்றத்துடன் நாடு திரும்பிய போதிலும் தன் முயற்சியைக் கைவிடாது சேனாநாயக்க பிரித்தானிய அரசாங்கத்தின் திட்டம் அடங்கிய ‘White Paper’ பத்திரத்தை இலங்கையின் அரச சபை ஏற்றுக்கொள்வதற்கு வழிவகுத்தார். அவர் வழிகாட்டலில் ஜெனிங்ஸ் புதிய யாப்பை எழுதி உதவ, நாடு சுதந்திரத்தை நோக்கித் தடையின்றி நகர்ந்தது. புதிய யாப்புக்கு அமைய 1947இல் முதலாவது பாராளுமன்றத்துக்கான தேர்தல் நடைபெற்று சேனாநாயக்க முதலாவது பிரதம அமைச்சரானார். அதே ஆண்டு நவம்பர் 11இல் பிரித்தானிய அரசாங்கத்துடன் மூன்று உடன்படிக்கைகளைச் செய்தார். பத்து நாட்களின் பின் பிரித்தானிய அரசாங்கம் இலங்கைக்குச் சுதந்திரம் கொடுக்கும் சட்டத்தை நிறைவேற்றியது. இலங்கை 1948 பெப்பிரவரி 4இல் டொமினியன் நிலையைப் பெற்றது.

தென் ஆசியாவில் திராவிட மொழிகளைப் பேசும் மக்களின் மூதாதையர்கள் இற்றைக்கு 68,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்த மண்ணில் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இவர்கள் ஆபிரிக்காவிலிருந்து கொண்டுவந்த ஆரம்பகாலப் பேச்சுவழக்குகள் தமிழ் மொழியினதும், மற்றைய திராவிட மொழிகளினதும் உருவாக்கத்திற்கு முக்கிய பங்கினை அளித்திருக்கின்றன. இப்பின்னணியில், தமிழ்மொழி பேசும் மக்களின் மரபணு மூலங்கள், தமிழர் வரலாறு, மொழி, பண்பாடு ஆகியவற்றை அறிவியல் அடிப்படையில் ஒருங்கிணைத்து மீள்பார்வை செய்யும் ஆழமான ஆய்வாக இது அமைகின்றது. தொல்திராவிட மொழி தோற்றம் பெற்ற இடம் சிந்துவெளிதான். அதன் தென் ஆசியப் பரவலுக்கும் பிராந்தியத் திராவிட மொழிகளின் உருவாக்கத்திற்கும் உந்துதலாக இருந்தது வேளாண்மை விவசாயத்தின் பரவலாகும். இந்தக் கோட்பாட்டை நிலவியல், மானிடவியல், மரபணுவியல், தொல்லியல், மொழியியல் ஆகிய கற்கைநெறிகளின் துணைகொண்டு 'திராவிட மக்களின் மரபணு மூலங்களும் தமிழ் மொழியின் படிமுறைத் தோற்றமும்' எனும் இந்தத் தொடர் நிறுவவுள்ளது. தமிழ் மக்களினதும் தமிழ் மொழியினதும் உருவாக்கம் பற்றிய முக்கியமான அறிவியல் ஆய்வாக இது அமையும்.

தென் ஆசியாவில் தொல்மானிட இனங்கள்

பகுதி -I

சிவ தியாகராஜா

கலாநிதி சிவ தியாகராஜா மருத்துவம், மரபணுவியல், தொல்லியல், வரலாறு ஆகிய கற்கைத் துறைகளில் பட்டங்கள் பெற்று பல ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்திலிருந்து B. Sc பட்டத்தையும், இலங்கைப் பல்கலைக்கழக மருத்துவப் பீடத்திலிருந்து M.B.B.S பட்டத்தையும், இலண்டன் பல்கலைக்கழகத்திலிருந்து Ph. D. பட்டத்தையும் பெற்றவராவார். இது தவிர கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் புகழ் பெற்ற பேராசிரியர் கொலின் ரென்புரூ (Prof. Colin Renfrew) நடத்திய தொல்லியல் பயிற்சிப்பட்டறைகளிலும் பங்கு பெற்றுள்ளார். கலாநிதி சிவ தியாகராஜா கடந்த ஐம்பது ஆண்டுகளில் இருபத்து ஆறு நூல்களைப் படைத்திருக்கிறார். இவரது சில ஆய்வு நூல்கள் இலங்கைப் பல்கலைக் கழகங்களிலும், தென்னிந்தியப் பல்கலைக் கழகங்களிலும் உசாத்துணை நூல்களாகப் (reference books) பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவர் எழுதிய ஆய்வு நூல்களில் Peoples and Cultures of Early Sri Lanka, Genetic Origins of the Tamils, Genetic Origins of the Sinhalese People, Kantarodai Civilization of Ancient Jaffna, Archaeological Excavations at the Jaffna Fort, Early Siva Temples of Ancient Lanka, The Tamils of Lanka A Timeless Heritage ஆகிய ஆங்கில நூல்களும், மருத்துவக் களஞ்சியம், ஈழத் தமிழரின் ஆதிச் சுவடுகள், உலகில் பெரிய இந்துக் கோயில் அங்கோர் வாட், கில்கமேஷ் காவியம், தமிழ் மக்களும் தழுவிய மதங்களும், பௌத்தத்தை வளர்த்த பண்டைய தமிழர்கள் ஆகிய தமிழ் நூல்களும் பிரபலமானவை.



1.நிமிர்ந்த மனிதன் - ஹோமோ இரக்டஸ் (Homo Erectus) 2. நியண்டதால் மனிதன் - ஹோமோ நியண்டதாலென்ஸிஸ் (Neanderthal Man) 3. நவீன மனிதன் - ஹோமோ சேப்பியன்ஸ் (Homo Sapiens)

மனித இனங்களின் படிநிலை வளர்ச்சி (The Evolution of Human Species)

உலகில் தோன்றிய உயிரினங்களின் 380 கோடி (3.8 Billion) ஆண்டுகாலப் பரிணாம வளர்ச்சியில் பல இனங்கள் முற்றாக அழிந்து போக, மற்றும் பல இனங்கள் தாம் வாழ்ந்த சூழலுக்கேற்ப தம்மை மாற்றியமைத்து இனவிருத்தியடைந்திருக்கின்றன. இவைகளில் தம்மைச் சிறப்பாக மாற்றியமைத்துக் கொண்ட உயிரினங்கள் வம்சாவளியாகப் பெருகிப் பரவி, நீண்டகாலம் வாழ்ந்து, வாழ்நிலத்தில் மேலாண்மை செலுத்தியிருக்கின்றன. அத்தகைய உயிரினங்கள் அனைத்திலும் இதுவரை கிடைத்த ஆதாரங்களின் அடிப்படையில் தாம் வாழ்ந்த சூழலைக் கட்டுப்படுத்தி வெற்றி கண்டது மனித இனமே.

தொல்லியல், மானிடவியல், மரபணுவியல் ஆதாரங்கள் அனைத்தும், இந்தப் பூவுலக மண்ணில் கால்பதித்து நடந்த மனித இனங்களின் மூதாதையர்கள் அனைவரும் தோற்றம் பெற்றது ஆபிரிக்காக் கண்டத்தில்தான் என்பதை நிரூபித்து இருக்கின்றன. மிகப் பரந்த, தனிமைப்படுத்தப்பட்ட, தடைப்படுத்தப்படாத, வனாந்தரங்களையும், பச்சைக்காடுகளையும், காய்ந்த கானகங்களையும், பசும்புற் தரைகளையும், புதர் நிலங்களையும் கொண்ட இந்த இயற்கையான மூலநிலம் பல வகையான தாவரங்களினதும், விலங்குகளினதும், மனித இனங்களினதும் பரிணாமத் தோற்றத்திற்கும் விருத்திக்கும் உகந்த இடமாக அமைந்திருக்கிறது.

இற்றைக்கு 7 மில்லியன் (70 லட்சம்) ஆண்டுகளுக்கு முன் ஆபிரிக்காக் கண்டத்தில் தோற்றம் பெற்ற 'ஹோமினிட்' (Hominid - மனிதர்களைப் போன்ற) இனங்களால் மற்றைய விலங்குகளைப் போலல்லாது, இரு கால்களில் எழுந்து நின்று தன்னைச் சுற்றிவர உள்ள உலகைப் பார்க்க முடிந்தது. மனிதர்களும், சிம்பன்ஸி, கொரில்லா போன்ற மனிதக் குரங்கு இனங்களும் இந்த ஹோமினிட் குடும்பத்தைச் சேர்ந்த பிராணிகள் என்பதே விஞ்ஞானிகளின் முடிபு. ஒரு மனிதனிடமிருக்கும் மரபணுக்களின் (DNA) 98.6% சத விழுக்காடான மரபணுக்கள் ஒரு மனிதக் குரங்கிடம் காணப்படுகின்றன.

இந்த ஹோமினிட் இனங்களிலிருந்து 5 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் 'ஆஸ்திரோலோபிதிகஸ்' (Australopithecus) என்ற மந்திமனிதனும், இந்த மந்தி மனிதனின் பரிணாம வளர்ச்சியில் 2.3 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் 'ஹோமோ ஹபிலிஸ்' (Homo Habilis) என்ற ஆதி மனிதனும், 2 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால் 'ஹோமோ இரக்டஸ்' (Homo Erectus) எனப்படும் நிமிர்ந்த மானிடனும் தோற்றம் பெற்றார்கள். இந்த ஹோமோ இரக்டஸ் மனிதர்கள் மாமிசப் பட்சணிகளாக இருந்தார்கள். கற்களைச் செதுக்கி ஆயுதங்கள் செய்யும் கலையை உருவாக்கினார்கள். நெருப்பை உண்டாக்கி உணவை வேகவைத்து உண்ணக் கற்றுக்கொண்டார்கள். ஆனால், இவர்களால் ஒருவரோடு ஒருவர் பேசும் அளவுக்கு மூளை விருத்தியடையவில்லை. சைகைகள் மூலமும் உறுமல்கள் மூலமும் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொண்டார்கள். இவர்கள் விரைவில் ஆபிரிக்கக் கண்டத்தை விட்டு கால்நடையாக வெளியேறி, தலைமுறை தலைமுறையாக இடம்பெயர்ந்து, ஐரோப்பாவுக்கும், ஆசிய நாடுகளுக்கும் நிலமார்க்கமாகப் பரவினார்கள்.



ஆபிரிக்காவில் மனித இனங்களின் படிநிலை வளர்ச்சியைக் காட்டும் படம்.

மனிதன்குரங்கு உள்ளிட்ட உயிரினத் தொகுதிப் (Primates) பிராணிகளிலிருந்து 5 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் மனிதமுன்னோடி (Hominids) இனங்கள் உருவாகின. 2 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் ஹோமோ இரக்டஸ் (Homo Erectus) என்ற மனிதனும், 300,000 ஆண்டுகளுக்கு முன்னர் ஹோமோ சேப்பியன்ஸ் (Homo Sapiens) என அழைக்கப்படும் நவீன மனிதனும் உருவானார்கள்.

மனித இனப் படிநிலைத் தோற்றம் பற்றிய ஆய்வுகள்

நவீன மனிதர்களுக்கு 'ஹோமோ சேப்பியன்ஸ் சேப்பியன்ஸ்' (Homo Sapiens Sapiens) என்ற பெயர் 1758ஆம் ஆண்டில் கார்ல் லின்னியஸ் (Carl Linnaeus 1707-1778) என்ற சுவீடன் நாட்டு உயிரியலாளரால் கொடுக்கப்பட்டது. இலத்தீன் மொழியில் 'ஹோமோ' என்பது மனித இனத்தைச் சேர்ந்தவர் என்றும், 'சேப்பியன்ஸ்' என்றால் 'சிந்திக்கத் தெரிந்த மனிதன்' என்றும் பொருள் தரும். நவீன மனிதன் முந்தைய மனித இனங்களைக் காட்டிலும் பகுத்தறிவு கொண்டவன் ஆதலால் 'சேப்பியன்ஸ் சேப்பியன்ஸ்' என்ற பெயர் வழங்கப்பட்டது. இந்த 'உயிரியல்' பெயரை ஏற்றுக்கொண்ட உயிரியல் ஆய்வாளர்கள், இதற்கு முற்பட்ட மனித இனங்களைக் கண்டுபிடித்த போது 'ஹோமோ சேப்பியன்ஸ் நியண்டதாலென்ஸிஸ்' (Homo Sapiens Neanderthalensis) என்ற பெயரை 1864ஆம் ஆண்டிலும், 'ஹோமோ இரக்டஸ்' (Homo Erectus) என்ற பெயரை 1892ஆம் ஆண்டிலும் வழங்கினார்கள்.

மனித இனங்களின் பரிணாமம் - படிநிலை வளர்ச்சி - பற்றிய முக்கியமான கோட்பாடு 1871இல் சார்ள்ஸ் டார்வின் (Charles Darwin 1809-1882) எழுதிய 'மனிதனின் வருகை' (The Descent of Man) என்ற நூலில் கூறப்பட்டது. அவர் ஏற்கனவே 'உயிரினங்களின் தோற்றம்' (Origin of Species) என்ற ஆய்வை 1859இல் வெளியிட்டிருந்தார். இந்த ஆய்வுகளில் முக்கியமாக இரு உயிரியல் பரிணாமக் கொள்கைகள் கூறப்படுகின்றன: 1. இயற்கைத் தேர்வு (Theory of Natural Selection) - தாம் வாழும் சூழ்நிலைக்கு ஏற்ற முறையில் தங்களை மாற்றியமைத்துக் கொள்ளும் உயிரினங்கள் பிழைத்து, இனப்பெருக்கம் செய்து பெருகிப் பரவுகின்றன. 2. தகுதிவாய்ந்தவை தப்பிப் பிழைக்கின்றன (Survival of the Fittest) - அவ்வாறு சூழலை வெற்றிகண்ட தகைமையாளர்கள் பெருகி, தங்கள் சந்ததியினரைப் பெருக்கி, அவர்களை நெடுங்காலம் வாழச்செய்வார்கள்.

டார்வினின் பரிணாமக் கோட்பாடு பத்தொன்பதாம் நூற்றாண்டின் மேற்கு நாடுகளின் சமயவாதிகளுக்கிடையிலும், அறிவியல் வாதிகளுக்கிடையிலும் நீண்ட விவாதங்களை ஏற்படுத்தியது. அதே சமயம் உயிரியல் ஆய்வுகளுக்கும், தொல்லியல் ஆய்வுகளுக்கும் புதிய உத்வேகம் அளித்தது. அன்றைய அறிவியல் உத்திகளைப் பயன்படுத்திய ஆய்வாளர்கள் தொல்பழங்கால உயிரினங்கள், மனித இனங்களின் தோற்றம், பரிணாம வளர்ச்சி, வாழ்வியல், உபயோகித்த கருவிகள், பண்டைய நாகரிகங்கள் பற்றிய ஆய்வுகள் ஆகியவற்றை மேற்கொண்டார்கள்.

உலகில் மனித இனங்களின் தோற்றத்தைக் காட்டும் மிகப் பழமையான புதைபடிவங்கள் (Fossils) ஆபிரிக்கக் கண்டத்திலேயே காணப்படுகின்றன. கிழக்கு ஆபிரிக்காவிலுள்ள துருக்கானா ஏரி, இடை அவா, ஓல்டுவாய் பள்ளத்தாக்கு, லேடோலி ஆகிய இடங்களில் நூற்றுக்கணக்கான புராதன புதைபடிவங்கள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. இற்றைக்கு 4 முதல் 3 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் தோற்றம் பெற்ற ஆஸ்திரோலோபிதிகஸ் இன மக்களின் எலும்புக்கூட்டுச் சான்றுகள் இங்கே கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

புராதன மனிதப் புதைபடிவங்கள் காணப்படும் துருக்கானா ஏரிக்கரை, தேசிய பூங்கா, கென்யா.

புராதன மனிதப் புதைபடிவங்கள் காணப்படும் இடை ஆவா பள்ளத்தாக்கு, எதியோப்பியா.

மனித இனங்களின் தொட்டில் எனப்படும் ஒல்டுவாய் மலைத்தொடர் பிளவு, தன்சானியா. வயது, பொ.யு.மு. 1,500,000.

ஹோமோ ஹபிலிஸ் இன மனிதர்கள்

உலகின் பல இடங்களில் புராதன மக்கள் வாழ்ந்து சென்றதற்கான அடையாளங்களில், இன்று பெருமளவில் காணப்படுவது அவர்கள் விட்டுச்சென்ற கல்லாயுதங்களாகும். பெரும் பிளவு (The Great Rift) என்பது சிரியாவின் வடபகுதியிலிருந்து கிழக்கு ஆபிரிக்காவில் மத்திய மொசாம்பிக் வரை 6,400 கி.மீ. தூரம் பரந்திருக்கும் பள்ளத்தாக்கு ஆகும் (Gregory, J.W. 1968; Willock, C. 1977). இங்கே பலதரப்பட்ட கல்லாயுதங்கள் காணப்படுகின்றன. கிழக்கு ஆபிரிக்காவில் சுமார் 2.6 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ஹோமோ ஹபிலிஸ் என்ற இனம்தான் முதன் முதலில் கல்லினால் கருவிகளை உருவாக்கக்கூடிய ஆற்றல் பெற்ற மனித இனமாகும் (Clark, J.G.D. 1969).

இந்த ஹோமோ ஹபிலிஸ் இன மக்கள் உபயோகித்த கற்கருவிகளே மிகப் பழமையான கற்கருவிகளாக காலக்கணிப்புச் செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வகையான கல்லாயுதங்களை லூயிஸ் லீக்கி (Louis Leakey) என்ற தொல்லியலாளர் 1930ஆம் ஆண்டுகளில் தன்சானியாவின் ஒல்டுவாய் மலைத்தொடர் பிளவில் (Olduvai Gorge In Tanzania) முதன்முதலாகக் கண்டுபிடித்தபடியால், இவ்வகையான கற்கருவிகள் 'ஒல்டோவன்' கருவிகள் என அழைக்கப்படலாயின. இக்கருவிகள் கீழைப் பழங்கற்காலத்தில் 2.6 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பிருந்து, 1.7 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்புவரை உபயோகப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. இவர்களைத் தொடர்ந்து 1.7 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ஹோமோ இரக்டஸ் இனத்தவர் இவற்றைக் காட்டிலும் தொழில்நுணுக்கம் மிக்க அச்சூலியன் வகைக் கற்கருவிகளை உருவாக்கினார்கள் (Clark, J.G.D. 1969). ஆபிரிக்காவின் எதியோப்பியாவில் 1.5 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பிருந்து தொடர்ச்சியாக ஒல்டோவன், அச்சூலியன் வகைக் கற்கருவிகள் ஹோமோ இரக்டஸ் எலும்புகளுடன் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. இதைக் கொண்டு முந்தைய ஒல்டோவன் கற்கருவிகளின் தொழில்நுட்ப முன்னேற்றமே அச்சூலியன் வகைக் கற்கருவிகளின் உருவாக்கத்திற்குக் காரணமாக அமைந்ததாகக் கருதப்படுகிறது (Semow, S. et al. 2020).



ஹோமோ ஹபிலிஸ் மனிதன்

தன்சானியாவில் கண்டெடுக்கப்பட்ட 2.5 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஹோமோ ஹபிலிஸ் மனித மண்டை ஓட்டின் மீளுருவாக்கம்.



தன்சானியாவில் 2.6 மில்லியன் ஆண்டுகளுக்க முன்பிருந்து - 1.7 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்புவரை ஹோமோ ஹபிலிஸ் இன மக்கள் உபயோகித்த ஒல்டோவன் வகைக் கற்கருவிகள்.

ஹோமோ இரக்டஸ் மனிதர்கள்

ஹோமோ இரக்டஸ் என்றால் முதுகெலும்பு நேராக நிமிர்ந்த மனிதன் எனப் பொருள்படும். இற்றைக்கு இரு மில்லியன் ஆண்டுகளுக்கு முன் தோற்றம் பெற்ற இன்றைய மனிதர்களின் மூதாதையர்களான (ஹோமினின் இனம்) இம்மனிதர்களின் எலும்புப் படிவங்களும், அவர்கள் உபயோகித்த கல்லாயுதங்களும் ஆபிரிக்கா, இந்தியா, இந்தோனேசியா, சீனா ஆகிய நாடுகளில் அதிகமாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன (Haviland, W.A. et al. 2007: 162).

ஆபிரிக்காவிற்கு வெளியே கண்ட ஒன்றரை மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்ட இம்மனிதனின் எலும்புப் புதைபடிவங்கள் (Fossils) முதன்முதலாக இந்தோனேசியாவின் ஜாவா தீவில் 1891ஆம் ஆண்டில் இயுஜீன் டுபோய் (Eugene Dubois) என்ற ஆய்வாளரால் கண்டுபிடிக்கப்பட்டு அதற்கு 'ஜாவா மனிதன்' என்ற பெயர் வழங்கப்பட்டது. தொடர்ந்து சீனா, ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் இம்மனிதனின் எலும்புகள் கண்டெடுக்கப்பட்டன (Roberts, Alice 2011: 122-127). ஜாவாவில் மேற்கொண்ட புதைபடிவுகளின் திகதிக்கணிப்பு ஆய்வுகளின்படி அங்கே இற்றைக்கு முன் 108,000க்கும் 117,000ற்கும் இடைப்பட்ட ஆண்டுக் காலப்பகுதியில் இந்த மனித இனம் முற்றாக அழிந்து போனதாக அறிவிக்கப்பட்டது (Choi, C.Q. 2019).

ஹோமோ இரக்டஸ் மனிதனும் அவனது மண்டையோடும்.

இம்மனிதனது மண்டை ஓட்டின் முக்கிய கூறுகள் இவை: 1. தட்டையான மேலோடு (சிறிய மூளையைக் கொண்டது). 2. நெற்றி கிடையாது - புருவத்தையடுத்துப் பரவும் தலைமுடி
3. துருத்திக்கொண்டிருக்கும் புருவ எலும்புகள்
4. தட்டையான நாசி 5. கோணமற்ற முக எலும்பு
6. தட்டையான முகவாய்க்கட்டை
7. துருத்திக்கொண்டிருக்கும் பிடரி எலும்பு.
இம்மனிதர்களின் பரவலைக் குறித்த ஆய்வுகள் அவர்கள் உபயோகித்த கற்கருவிகள் கிடைக்கும் இடங்களைக் கொண்டே கணிக்கப்படுகின்றன. அவர்கள் கருவிகள் செய்ய கற்பாளங்களை உடைத்தும், பெரிய உருண்டைக் கற்களைத் தெரிவு செய்தும், அவற்றை உறுதியான மற்றொரு கல்லினால் சீவி, செதுக்கி - கோடரிகள், பிளக்கும் கருவிகள், சீவும் கருவிகள், துண்டாக்கும் கருவிகள் என்பவற்றை உருவாக்கினார்கள். ஆழ்ந்த சிந்தனையோடும் பொறுமையோடும் உருவாக்கப்பட்ட இக்கருவிகளின் சிறப்பான வடிவமைப்பு, மனிதர்களின் அறிவாற்றலையும் திறமையையும் தெளிவாக வெளிப்படுத்துகிறது.

இம்மனிதர்கள் ஆபிரிக்காவில் வாழ்ந்த காலத்தில் உபயோகித்த கல்லிலான ஒருவகை கைக்கோடரி 'அச்சூலியன் கைக்கோடரி' (Acheulean Hand Axe) என அழைக்கப்படுகிறது. பிளக்கக்கூடிய பெரிய கற்பாறைகளைச் சீராகத் தகர்த்து, ஓரங்களைக் கூர்மையாக்கியும், அடியில் அகன்றும் நுனியில் கூர்மையாகவும் செதுக்கப்பட்ட இக்கற்கள், எதியோப்பியா மற்றும் தன்சானியாவின் ஓல்டுவாய் பள்ளத்தாக்கு ஆகிய இடங்களில் அதிகளவில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவ்வகையான கற்களை ஆய்வாளர்கள் முதல் தடவையாக வடக்குப் பிரான்ஸில் உள்ள 'செயின்ற் அச்சூல்' (SaintAcheul) என்ற இடத்தில் கண்டெடுத்தபடியால், இதற்கு 'அச்சூலியன் வகை' கைக்கோடரி எனப் பெயரிட்டார்கள்.

காய்ந்த குச்சிகளைக் கடைந்து நெருப்பை உண்டாக்கும் 'ஹோமோ இரக்டஸ்' மனிதர்கள்.

அச்சூலியன் கைக்கோடரி

ஹோமோ இரக்டஸ் மனிதர்கள் பரவி வாழ்ந்த இடங்களில் எல்லாம், சுமார் 1.76 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு முதல் நீண்ட காலமாகப் பயன்படுத்தப்பட்ட பம்பர வடிவக் கல்லாயுதம்

‘அச்சூலியன் கைக்கோடரி’ என்று அழைக்கப்படுகிறது. அச்சூலியன் கல்லாயுதங்கள் ஆபிரிக்கா, மேற்கு ஆசியா, தென் ஆசியா, கிழக்கு ஆசியா நாடுகளில் கீழைப் பழங்கற்காலத்தில் ஹோமோ இரக்டஸ் எலும்பு எச்சங்களுடன் காணப்படுகின்றன. இக்கல்லாயுதங்கள் முன்னர் ஹோமோ ஹபிலிஸ் இனத்தவர் உபயோகித்த புராதன முதிர்ச்சியற்ற ஒல்டோவன் தொழில்நுட்ப (Oldowan Technology) முறையின் முதிர்ச்சியடைந்த தொழில்நுட்பமாகக் கருதப்படுகிறது. இவ்வகைக் கல்லாயுதங்கள் இற்றைக்கு முன் 160 இலட்சம் (1.6 மில்லியன்) ஆண்டுகள் முதலாக 130,000 ஆண்டுக் காலம்வரை உபயோகப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன.

இக்கோடரிகளோடு கண்டெடுக்கப்பட்ட பன்முகக் கோளவடிவம் கொண்ட கருவிகள், வெட்டுக் கத்திகள், செதுக்கும் கருவிகள் அனைத்தும் அச்சூலியன் மரபுக் கருவிகள் என அழைக்கப்பட்டன. இக்கருவிகளின் செய்முறை, செய்திறன், உருவாக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் இவை ஆரம்பகால அச்சூலியன், இடைக்கால அச்சூலியன், பிற்கால அச்சூலியன் என மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

வெகுசீராகச் செதுக்கப்பட்ட அச்சூலியன் கைக்கோடரி

ஹோமோ இரக்டஸ் மனிதர்களின் ஆசிய வருகை

இற்றைக்கு இரு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் ஆபிரிக்காவில் தோற்றம் பெற்ற ஹோமோ இரக்டஸ் வகை மனிதர்கள் காலத்துக்குக் காலம் ஆபிரிக்காவை விட்டு வெளியேறி மேற்கே மத்திய தரைக்கடல் நாடுகள் வழியாகவும், கிழக்கே அரேபியா வழியாகவும் மேற்கு ஆசிய நாடுகளை (சுமேரியா, இலம் - இன்றைய ஈராக், ஈரான் நாடுகள்) அடைந்தார்கள். அங்கிருந்து கைபர் கணவாய், போலன் கணவாய் (Khyber Pass, Bolan Pass) வழியாக இந்தியாஇலங்கையை அடைந்து, பின்னர் அங்கிருந்து கிழக்காசிய நாடுகள் வழியாக சீனா வரை சென்றிருக்கிறார்கள். ஆபிரிக்காவை விட்டு வெளியேறி, தலைமுறை தலைமுறையாக இடம்பெயர்ந்து சீனா சென்றடைய 10,000 முதல் 12,000 ஆண்டுகள் வரை ஆகியிருக்கும் எனக் கணிப்பிடப்படுகிறது.



இப்படம், ஆபிரிக்காவிலிருந்து ஆசியா வரை இடம்பெயர்ந்த ‘ஹோமோ இரக்டஸ்’ (பச்சை), ஐரோப்பாவில் பரவிய ‘நியண்டதால்’ (மஞ்சள்), மற்றும் உலகெங்கும் விரிவடைந்த நவீன மனிதர்களான ‘ஹோமோ சேப்பியன்ஸ்’ (சிவப்பு) ஆகிய ஆதி மனித இனங்களின் இடப்பெயர்வைச் சித்தரிக்கிறது. ஹோமோ இரக்டஸ், நியண்டதால் ஆகிய ஆதி மனிதர்கள் இடம்பெயர்ந்த காலம் அவர்கள் உபயோகித்த கல்லாயுதங்களின் காலக்கணிப்பைக் கொண்டும், நவீன மனிதன் இடம்பெயர்ந்த காலப் பகுதி அவர்களின் மரபணுவியல் ஆய்வுகளைக் கொண்டும் கணிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு காலத்தில் கிழக்கு, தென்கிழக்கு ஆசியாவில் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புப் படிவங்களுக்கு உரியவர்களும், ஆபிரிக்காவில் தோற்றம் பெற்ற இரக்டஸ் மனிதர்களும் வேறானவர்கள் எனக் கருதப்பட்டது. இக்கருத்திற்கான மற்றுமொரு காரணம் கிழக்கு, தென்கிழக்கு ஆசியாவில் அச்சூலியன் வகைக் கைக்கோடரிகள் காணப்படாமையே ஆகும். ஆனால் 1980களில் ஆபிரிக்காவில் கண்டெடுக்கப்பட்ட ஏராளமான ஹோமோ இரக்டஸ் எலும்புகளும், கிழக்கு ஆசிய எலும்புகளுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பீட்டாய்வுகளும், இம்மனிதர்கள் ஆபிரிக்காவிலிருந்து வெளிவந்த ஒரே இனமக்கள் என்பதை உறுதிப்படுத்தியுள்ளன (Anton, S.C. 2003).

அச்சூலியன் கைக்கோடரி இ.மு. 1.6 மில்லியன் ஆண்டளவில்தான் ஆபிரிக்க ஹோமோ இரக்டஸ் இனத்தவரால் முதலில் உருவாக்கப்பட்டது. கிழக்குதென்கிழக்கு ஆசியாவில் காணப்படும் ஹோமோ இரக்டஸ் இனத்தவர் அதற்கு முன்னர் - இ.மு. 2 மில்லியன் ஆண்டளவிலேயே - ஆபிரிக்காவை விட்டு வெளியேறிவிட்டமையால் அச்சூலியன் வகைக் கோடரிகளைப் பற்றி அவர்கள் அறிந்திருக்கவில்லை என்பதே இதற்கான காரணமாகக் கூறப்படுகிறது.

இந்தியாவில் அச்சூலியன் மரபுக்குரிய கைக்கோடரி முதன்முறையாக தமிழ்நாட்டிலேயே

கண்டெடுக்கப்பட்டது. சென்னைக்குச் சமீபத்திலுள்ள பல்லாவரத்தில் நிலவியல் கூறுகளின் ஆய்வை மேற்கொண்டிருந்த புரூஸ் புட் (Robert Bruce Foote) 1863ஆம் ஆண்டு மே மாதம் 30ஆம் திகதியன்று கூழாங்கற்களோடு சேர்ந்து மண்ணில் புதைந்து கிடந்த, கூராகச் செதுக்கப்பட்ட, குவாட்ஸ் கல்லினாலான அச்சூலியன் கைக்கோடரியைக் கண்டெடுத்தார் (Foote, R. B. 1868, 1886).

இந்திய உபகண்டத்தில் ஹோமோ இரக்டஸ் மனிதர்கள் உபயோகித்த கல்லாயுதங்கள் பல இடங்களில் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் சென்னைக்கு அருகிலுள்ள பல்லாவரம் மற்றும் அத்திரம்பாக்கம், குடியம், கர்நாடகாவின் ஹன்ஸ்கி சமவெளியிலுள்ள இசம்பூர், மத்தியப் பிரதேசத்திலுள்ள பிம்பேத்கா மற்றும் சபர்மதி பள்ளத்தாக்கு, சிக்கிரி, நெவாஸா, யேதுரவாடி சதாப், பாகிஸ்தானிலுள்ள பஞ்சாப் ஆகிய இடங்களில் அச்சூலியன் வகைக் கருவிகள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.

ஹோமோ ஹைடெல்பயென்ஸிஸ் (Homo Heidelbergensis)

மனிதப் பரிமாண படிநிலை வளர்ச்சியின் போது ஹோமோ இரக்டஸ்ஸிற்கும், ஹோமோ சேப்பியன்ஸ்ஸிற்கும் இடைப்பட்ட நிலையில் உருவாகி பிற்காலத்தில் அழிந்து போய்விட்ட ஓர் இனம் ஹோமோ ஹைடெல்பயென்ஸிஸ் (ஹைடெல்பேர்க் பல்கலைக்கழக ஆய்வாளர்களால் கொடுக்கப்பட்ட பெயர்). இந்த ஹோமோ ஹைடெல்பயென்ஸிஸ் இனத்திலிருந்தே ஐரோப்பாவின் ஹோமோ நியண்டதாலென்ஸிஸ் மனிதர்களும், நவீன ஹோமோ சேப்பியன்ஸ் மனிதர்களும் உதயமானார்கள் எனக் கருதப்படுகிறது. இற்றைக்கு முன் 600,000 ஆண்டுகளுக்கும் 400,000 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த இம்மனிதர்கள் அச்சூலியன் வகைக் கல்லாயுதத் தொழில்நுட்பத்தை அறிந்திருந்தார்கள். இவர்கள் ஆபிரிக்கா, ஐரோப்பா, ஆசிய நாடுகளில் வாழ்ந்தார்கள் என அறியப்படுகிறது.

தமிழகத்தில் இற்றைக்கு ஹோமோ இரக்டஸ் இன மனிதர்கள் வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதற்கான கற்கருவிகள் காணப்படுகின்றனவே தவிர இவர்களின் எலும்புகள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. இவர்களிடம் பேச்சு வன்மை இருக்கவில்லை. சைகைகளாலும், உறுமல்களாலும் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொண்டார்கள். கல்லினால் செய்யப்பட்ட கைக்கோடரி, வெட்டுக்கத்தி, ஈட்டி ஆகியவை கொண்டு விலங்குகளையும், பறவைகளையும் வேட்டையாடியும், தாவரங்களிலிருந்து உணவு சேகரித்தும் வாழ்க்கை நடத்தினார்கள். உணவு சேகரிப்பதிலேயே அவர்களது வாழ்நாளின் பெரும்பகுதி செலவழிந்திருக்கும். நெருப்பை உண்டாக்கும் அறிவைப் பெற்றிருந்தமையால் வேகவைத்த மாமிச உணவை உட்கொண்டிருப்பார்கள்.

ஐரோப்பாவின் வடபகுதிகளில் வாழ்ந்த ஹோமோ இரக்டஸ் மனிதர்கள் கூட்டாக இணைந்து பனியுகத்தின் பெருயானைகளை (Mammoth) உணவிற்காக வேட்டையாடினார்கள் என அறிய முடிகிறது. ஹோமோ இரக்டஸ் இன மக்கள் இற்றைக்கு 140,000 ஆண்டளவில் ஐரோப்பாவில் அழிந்து போனார்கள். 2009ஆம் ஆண்டில் யாவா நாட்டில் நான்டொங் (Ngandong) என்ற இடத்தில் மேற்கொண்ட ஓர் ஆய்வில் 117108,000 ஆண்டுக் காலத்திற்குரிய ஹோமோ இரக்டஸ் உபயோகித்த கற்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இதுவே, ஹோமோ இரக்டஸ் மக்களின் இறுதி வதிவிடமாகக் கருதப்படுகிறது (Rizal, Y. et al. 2020).

வட துருவத்திற்குச் சமீபமாக உள்ள ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்த ஹோமோ இரக்டஸ் மனிதர்கள் பனியுகப் பெருயானை ஒன்றை வேட்டையாடும் காட்சி (கற்பனை ஓவியம்).

ஐரோப்பாவில் நியண்டதால் மனிதர்கள்

இற்றைக்கு 400,000 ஆண்டுகளுக்கு முன்னர் நியண்டதால் மனிதர்கள் (Homo Sapiens Neanderthalensis) ஐரோப்பாவில் தோற்றம் பெற்றார்கள். இவர்கள் ஆபிரிக்காவிலிருந்து இடம்பெயர்ந்து வந்த ஹோமோ ஹைடெல்பெயென்ஸிஸ் (Homo Heidelbergensis) எனப்படும் ஆதி மனிதர்களின் பரிணாம வளர்ச்சியால் ஐரோப்பாவில் தோற்றம் பெற்றார்கள் எனக் கருதப்படுகிறது (Pinhasi et al. 2011).

இந்த வகை மனிதர்களின் கபால எலும்பு முதல் தடவையாக ஜேர்மனியில் நியாண்டர் பள்ளத்தாக்கில் கண்டுபிடிக்கப்பட்ட படியால் இம்மனிதனுக்கு

நியண்டதால் மனிதன் என்ற பெயர் வழங்கப்படலாயிற்று. இந்த எலும்பின் கண்டுபிடிப்பைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான நியண்டதால் மனிதர்களின் எலும்புகள் ஐரோப்பாவில் எழுபதிற்கும் மேற்பட்ட இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன (Roberts, A. 2009: 220).

நியண்டதால் மனிதர்கள் நெருப்பில் வேகவைத்த உணவை உட்கொள்ளும் காட்சி (கற்பனை ஓவியம்).

இவர்கள் ஹோமோ இரக்டஸ் மனிதர்களைவிட முன்னேறியவர்களாகக் காணப்பட்டார்கள். இவர்கள் கூட்டுக்குடும்பங்களாகக் குகைகளில் வாழ்ந்து, நெருப்பின் பயனை அறிந்து, குகைகளுக்குள் அடுப்பு மூட்டி, வேக வைத்த உணவை உட்கொண்டு, தோலினாலான தைத்த உடைகளை அணிந்து, காட்டுமரப் பட்டைகளிலிருந்து ஒட்டக்கூடிய பசைகொண்டு செய்த மரக்கலன்களில் மத்தியதரைக் கடலில் பயணம் செய்தார்கள் (Roberts, A. 2011). இவர்களிடம் இருந்த மத நம்பிக்கையால் இறந்தவர்களைப் புதைத்து, ஈமச்சடங்குகள் செய்துவந்தார்கள் (Wunn, I. 2000). ஸ்பெயின் நாட்டில் காணப்படும் 65,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட குகை ஓவியங்கள் நியண்டதால் மனிதர்களால் வரையப்பட்டதாகக் கருதப்படுகிறது. இவர்களுக்கு அடிப்படையான ஒரு பேசும் சக்தி இருந்திருக்கலாம் (Levinson, S.C. 2018).

ஹோமோ சேப்பியன்ஸ் (Homo Sapiens Sapiens) எனப்படும் நவீன மனிதர்களோடு ஒப்பிடும் போது நியண்டதால் மனிதர்கள் உறுதியான உடற்கட்டும், நீளம் குறைவான அங்கங்களும் கொண்டிருந்தார்கள். இது அவர்கள் வாழ்ந்த குளிர்ப் பிரதேசத்தில், உடல் சூட்டைப் பேணுவதற்கான இயற்கைத் தெரிவால் (Natural Selection) அமைந்த உடலமைப்பாக ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். இதைத் தவிர உடல் சூட்டைப் பேணும் கொழுப்புச் சதை மிக்க உடலமைப்பும், உள்வாங்கும் சுவாசக்காற்றைச் சூடாக்குவதற்காக அமைந்த பெரிய நாசியும் குளிர்ப் பிரதேச வாழ்க்கைக்கான உடல் தகவமைப்புகளாகும். அவர்களில் ஆண்கள் ஆகக்கூடியது ஐந்து அடி ஐந்து அங்குல உயரமும் (165 செ.மீ.), பெண்கள் ஐந்து அடி உயரமும் (153 செ.மீ.) கொண்டிருந்தார்கள் (Stringer, C. 1984). அவர்களில் ஆண், பெண் இருவரது கபாலமும் சராசரி 1600 கனசதுர செ.மீ. அளவைக் கொண்டிருந்தது (Holloway, R.L. 1985).

இற்றைக்கு 50,000 ஆண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பாவை ஹோமோ சேப்பியன்ஸ் எனப்படும் நவீன மனிதர்கள் வந்தடைந்ததாகக் கணிப்பிடப்பட்டிருக்கிறது. 2010ஆம் ஆண்டில் வெளிவந்த நியண்டதால் மனிதர்களின் மரபணு (DNA) ஆய்வில் நியண்டதால் மனிதர்களுக்கும், நவீன மனிதர்களுக்கும் கலப்பிருந்ததாக அறிய முடிகிறது (Sankararaman, S. et al. 2012).

இற்றைக்கு 40,000 ஆண்டுகளுக்கு முன்னர் நியண்டதால் மனிதர்களின் இனம் அழிந்து போயிற்று. 2014ஆம் ஆண்டில் ‘நேச்சர்’ (Nature) என்ற ஆங்கில அறிவியல் சஞ்சிகையில் வெளியிடப்பட்ட ஓர் ஆய்வின் அறிக்கையில் - ரஷ்யாவிலிருந்து ஸ்பெயின் வரை 40 இடங்களில் மேற்கொள்ளப்பட்ட கதிரியக்கக்கரிமத் திகதிக் கணிப்பின்படி (Radiocarbon Dating) - 40,000 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நியண்டதால் மனித இனம் ஐரோப்பா எங்கிலும் அழிந்து போய்விட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது (Higham, Tom; et al. 2014). இந்த இனம் அழிந்து போனமைக்குப் பின்வரும் காரணங்கள் கூறப்படுகின்றன:

1. நவீன மனிதர்களோடு உணவுக்கும் இருப்பிடத்திற்கும் போட்டியிட்டமை.

2. நவீன மனிதர்களோடு உறவுகொண்டு அவர்கள் இனத்துடன் ஒன்றிப்போனமை.

3. சில தொற்றுநோய்களை இவர்களால் தாக்குப்பிடிக்க இயலாமல் இருந்தமை.

4. குறுகிய குடும்பத்திற்குள் தன் இனச்சேர்க்கையால் ஏற்பட்ட இயலாமை நோய்கள்.

5. அடிக்கடி மாறும் தட்பவெப்ப நிலையைத் தாக்குப்பிடிக்க இயலாமல் அழிந்தமை.

டெனிஸோவன் மனிதர்கள் (Denisovans)

ஆசியாவில் கீழைப் பழங்கற்காலத்திலும் மத்திய பழங்கற்காலத்திலும் வாழ்ந்து முற்றிலும்

அழிந்துபோன இந்த ஆதி மனித இனத்தவர் பற்றிய முதல் ஆதாரம் 2010இல் கண்டறியப்பட்டது. தெற்கு சைபீரியாவின் அல்தாய் மலைக் குகையில் கிடைத்த ஓர் இளம் பெண்ணின் விரல் எலும்பில் செய்யப்பட்ட 'மைட்டோகொண்றிய' மரபணு ஆய்வின் மூலமே இக்கண்டுபிடிப்புச் சாத்தியமானது. இதன் காலம் இ.மு. 50,000க்கும் 30,000க்கும் இடைப்பட்டதாகக் கணிக்கப்பட்டது (Krause, J. et al. 2010: 894-897).

இந்த டெனிஸோவன் பெண்ணின் 'மைட்டோகொண்றிய' மரபணுவில் காணப்படும் மரபணுக் குறியீட்டுப் பிறழ்வுப் பேதங்களைக் கணக்கிடும் போது, இந்த இனத்தில் காணப்படும் மரபணுக்களில் 4 விழுக்காடு ஆதி மனித இனங்களிலிருந்து இற்றைக்கு 800,000 ஆண்டுக்கும் ஒரு மில்லியன் ஆண்டுகளுக்குமிடையே பிரிந்து போனதாகக் கருதவேண்டியுள்ளது (Reich, David 2019: 54). இந்த இனங்கள் 'ஹோமோ ஹைடெல்பயென்ஸிஸ்' எனப்படும் ஆதி மனித இனங்களிலிருந்து பிரிந்து, நியண்டதால்களைத் தொடர்ந்து இ.மு. 470,000-380,000 ஆண்டுகளில் தோற்றம் பெற்றார்கள் (Reich, D. 2019: 67).

டெனிஸோவா குகை. இந்தக் குகையிலிருந்து மேலும் டெனிஸோவன் மனிதர்களின் எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டமையால் இக்குகை 'டெனிஸோவா குகை' என அழைக்கப்படுகிறது.

இந்த மனிதர்கள் மரபணு (DNA) ஆய்வுகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டவர்களே தவிர, இவர்களின் முழு எலும்புக்கூடுகள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இவர்களுக்கு உயிரியல் ரீதியான பெயரும் (ஹோமோ என ஆரம்பிக்கும் பெயர்) இதுவரை வழங்கப்படவில்லை. இவர்களுக்கு ஹோமோ டெனிஸோவா (Homo Denisova) என்ற பெயர் வழங்கப்படலாம் என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள் (Douglas, M.M & Douglas, J.M. 2016; Reich, D. 2019: 54). இம்மனிதர்களின் கருமைய மரபணு (Nuclear DNA) ஆய்வுகள், இவர்கள் நியண்டதால் மனிதர்களுக்கு நெருக்கமானவர்கள் எனக் காட்டுகிறது. இந்தக் குகையில் காலத்திற்குக் காலம் நியண்டதால் மனிதர்களும் வாழ்ந்திருக்கிறார்கள்; ஆனால் ஒரே சமயத்தில் கூடி வாழ்ந்தார்களோ எனத் தெரியவில்லை. 2019ஆம் ஆண்டில் கிரேக்க தொல்லியல் ஆய்வாளரான கதரினா டூக்கா டெனிஸோவா குகையிலிருந்து பெற்று, கரிமக்கதிர் ஆய்வுக்கு உட்படுத்திய எலும்பு (டெனிஸோவா 2) இ.மு. 195,000-122,700 ஆண்டுகளைக் காட்டியது (Sawyer, S. et al. 2015; Douka, K. 2019). குகையின் கிழக்கிலிருந்து பெறப்பட்ட படிவுகள் இ.மு. 217,000ஆம் ஆண்டைக் காட்டின. குகையிலிருந்து பெறப்பட்ட மற்றைய கருவூலங்கள் டெனிஸோவன் மக்களின் குடியிருப்புகளின் காலத்தை இ.மு. 287,000 +41ஆம் ஆண்டு எனக் காட்டின (Jacobs, Z. et al. 2019).

டெனிஸோவன் மக்களின் குடியிருப்புகள் இதுவரை திபெத்திலுள்ள பைசியா கார்ஸ்ட் குகை (Baishiya Karst Cave), மற்றும் லாவோஸிலுள்ள அன்னமைட் மலைப்பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. மரபணு ஆய்வுகள் மூலம் அவர்கள் கருமையான தோல், தலை மயிர், கண்கள் கொண்டவர்கள் என்றும், உடலமைப்பில் நியண்டதால் மனிதர்களை ஒத்தவர்கள் என்றும் அறிய முடிகிறது (Sion, V. et al. 2017).

இவர்கள் நியண்டதால் மனிதர்களுடனும், நவீன மனிதர்களுடனும் இனக்கலப்பில் ஈடுபட்டார்கள் எனவும் அறிய முடிகிறது. இன்றைய மெலனேசியர்களில் ஏறக்குறைய 5 விழுக்காடு விகிதத்தினர் இந்த இனக்கலப்பு கொண்டவராவர். மத்திய ஆசியாவிலும், தென்கிழக்காசியத் தீவுகளிலும் குறைந்த விகிதத்தில் இந்த இனக்கலப்புக் காணப்படுகிறது (Reich, D. 2019: 64-63).



மரபணு ஆய்வுகளிலிருந்து உருவாக்கப்பட்ட டெனிஸோவன் மனிதன்

ஹோமோ சேப்பியன்ஸ் எனப்படும் நவீன மனிதன்

உலகில் தோன்றிய மனித இனங்களில் அகில உலகமெல்லாம் பரவியிருக்கும் மனித இனம் ஹோமோ சேப்பியன்ஸ் (*Homo Sapiens Sapiens*) என அழைக்கப்படும் நவீன மனித இனமாகும். இலத்தீன் மொழியில் 'ஹோமோ சேப்பியன்ஸ்' என்றால் 'அறிவுக் கூர்மையுடைய மனிதன்' எனப் பொருள்படும். இந்தப் பெயரை சுவீடன் நாட்டைச் சேர்ந்த உயிரினக்கற்கை அறிஞரான கார்ல் லின்னியஸ் (*Biologist Carl Linnaeus*) 1735ஆம் ஆண்டில், தனது 28வது வயதில் எழுதி வெளியிட்ட 'இயற்கை ஒழுங்குமுறை' (*Systema Naturae*) என்ற நூலில் குறிப்பிட்டிருந்தார். மனித இனங்களுக்கு 'ஹோமோ' என்ற பெயரையும், தாவர இனங்களுக்கு அவற்றின் குடும்ப இனப் பெயரையும் குழுப் பெயரையும் சேர்த்து இலத்தீன் மொழியில் பெயர் கொடுத்தவர் இவர். இவர் மிருக இனக் குடும்பங்களுக்கும், தாவர இனக் குடும்பங்களுக்கும் கொடுத்த பெயர்களே இன்றுவரை விலங்கின, தாவர இனக் கற்கைகளில் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.



நவீன மனிதர்கள்

மானிடவியல் கற்கை நெறிகளின் படி (*Human Anthropology*) இற்றைக்கு 300,000 ஆண்டுகளுக்கு முன்னர் ஆபிரிக்காவில் வாழ்ந்த ஹோமோ ஹைடெல்பயென்ஸிஸ் (*Homo Heidelbergensis*) என்ற ஒருவகை ஆதி மனித இனத்திலிருந்து இற்றைக்கு 200,000 ஆண்டுகளுக்கு முன்னர் நவீன மனிதன் உருவானான் எனக் கருதப்பட்டது. ஆனால், 2017ஆம் ஆண்டில் மொறக்கோ நாட்டில், 'ஜெபெல் ஈர்ஹூட்' என்ற இடத்திலுள்ள ஒரு குகையில் கண்டெடுத்த கபாலம், இற்றைக்கு 300,000ஆம் ஆண்டுக்குரிய ஹோமோ சேப்பியன்ஸ் சேப்பியன்ஸ் மனிதனுக்கு உரியதாகக் கணிக்கப்பட்டது. ஆனால், பெரும்பாலான ஆபிரிக்க ஹோமோ சேப்பியன்ஸ் சேப்பியன்ஸ் கபாலங்கள் இற்றைக்கு 200,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தைக் காட்டாமையால், இந்த ஒரு கணிப்பீட்டை மட்டும் கொண்டு அதைப் பொதுவாகக் கொள்வது கடினம் என்பது சில ஆய்வாளர்களின் கருத்தாகும். இன்று பெரும்பாலான ஆய்வாளர்கள் இ.மு. 300,000 ஆண்டை ஹோமோ சேப்பியன்ஸ் சேப்பியன்ஸ் மனிதத் தோற்ற ஆண்டாகக் கொள்கிறார்கள்.

ஆபிரிக்காவிலிருந்து இந்த நவீன மனிதன் உலகம் முழுவதும் பரவி, முன்னர் உலகெங்கும் வாழ்ந்த ஆதி மனித இனங்களை அகற்றி, பதிலாக தான் அங்கே இடம் கொண்டான். இம்மனிதன் இற்றைக்கு 68-70,000 ஆண்டுகளுக்கு முன்பு இந்திய உபகண்டத்தை வந்தடைந்தான் என இன்றைய மரபணுவியல் ஆய்வுகள் அறியத்தருகின்றன. நவீன மனிதனுக்கு உயர்வான, சிக்கலான மூளை இருந்தமையால் அவனிடம் 'கருத்துநிலைச் சிந்தனை' (*Power of Abstract Thinking*) செய்யக்கூடிய ஆற்றல் இருந்தது. இதன் காரணமாக தரமான கருவிகளையும், பண்பாட்டையும், பேசும் மொழியையும் அவனால் உருவாக்க முடிந்தது. இம்மனிதனிடம் உயர்ந்த சமூகச் சமாளிப்புத் திறமை இருந்தபடியால் கூடிவாழும் மனப்பான்மையும், போட்டியிடும் மனப்பான்மையும் கொண்ட பலவகை மக்கள் கூடிவாழும் சிக்கலான சமுதாயத்தில் தனது வாழ்க்கையைச் சுலபமாகக் கொண்டு நடத்த முடிந்தது. தான் வாழ்ந்த சூழலை உணர்ந்து அதை மாற்றியமைக்கும் ஆற்றலும், வல்லமையும் கொண்டிருந்தபடியினால் மனித இனத்தின் வளர்ச்சியைப் பெருக்கி, மொழியியல், இலக்கியம், விஞ்ஞானம், பகுத்தறிவு, தத்துவம், சமயம், புராணம் ஆகிய கற்கை நெறிகளை அவனால் விருத்திசெய்ய முடிந்தது.

இதைத் தொடர்ந்து வரும் பகுதியில் இந்த நவீன மானிடனின் இந்தியஇலங்கை வருகை பற்றி விரிவாகக் கூறப்படுகிறது.



CAROLI LINNÆI, SVECI,
DOCTORIS MEDICINÆ,
SYSTEMA NATURÆ,
SIVE
REGNA TRIA NATURÆ
SYSTEMATICE PROPOSITA
PER
CLASSES, ORDINES,
GENERA, & SPECIES.

O JEHOVA! Quam ampla sunt opera Tua!
Quam ea omnia sapienter fecisti!
Quam plena est terra possessione tua!
Psalm. CIV. 24.

LUGDUNI BATAVORUM,
Apud THEODORUM HAAK, MDCCXXXV.

Ex Typographia
JOANNIS WILHELMI DE GROOT.

1735இல் கார்ல் லின்னியஸ் வெளியிட்ட 'இயற்கை ஒழுங்கு முறை' நூல்.

பகுதி -2

மனித வரலாற்றுக் கற்கைப் பிரிவுகள்

டென்மார்க்கில் தேசிய அருங்காட்சியகத்தின் காப்பாளராக இருந்த கிறிஸ்டியன் ஜே. தொம்ஸன் (Christian Jurgensen Thomsen) 1830களில் புராதன மனித இன வரலாற்றைப் புரிந்துகொள்வதற்கு ஏதுவாக, அம்மனிதர்கள் விட்டுச்சென்ற செய்பொருட்களை ஆதாரமாகக்கொண்டு அவர்கள் வாழ்ந்த காலகட்டத்தை கற்காலம் (Stone Age), வெண்கலக் காலம் (Bronze Age), இரும்புக் காலம் (Iron Age) என மூன்றாகப் பிரித்தார். இது 'மூன்று காலகட்ட முறை' (The Three Age System) என வழங்கப்படுகிறது.

1865இல் பிரித்தானிய தொல்லியலாளரான ஜோன் லுப்பொக் (John Lubbock) கற்காலத்தை மேலும் மூன்று பிரிவுகளாக்கி பழையகற்காலம் (Palaeolithic), இடைக்கற்காலம் (Mesolithic), புதியகற்காலம் (Neolithic) என அழைத்தார். பழையகற்காலம் மேலும் மூன்று பிரிவுகளாக - கீழைப் பழங்கற்காலம், மத்திய பழங்கற்காலம், மேலைப் பழங்கற்காலம் (Lower, Middle and Upper Palaeolithic) என அழைக்கப்பட்டு வருகிறது. இந்த வகுப்பொழுங்கு ஆய்வாளர்களால் இன்றுவரை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

பழைய கற்காலம்

பண்டைய நாகரிகச் சிறப்புப் பெற்ற பிராந்தியங்களில் தென்னாசியாவும் ஒன்றாகும். இங்கே கற்காலம் தொட்டு மனிதன் மேற்கொண்ட நடவடிக்கைகளை எடுத்துக்கூறும் விதத்தில் அவன் விட்டுச் சென்ற பண்பாட்டு எச்சங்கள் விளங்குகின்றன. இதனால் பழைய கற்காலம், இடைக்கற்காலம், புதிய கற்காலம் போன்ற கற்காலப் பண்பாட்டு அம்சங்களுக்கான தடயங்கள் இங்கே சிறப்பாகக் காணப்படுகின்றன. கற்காலத்தைப் பொறுத்தமட்டில் இக்காலக் கற்கருவிகள் இந்தியா முழுவதிலும், இலங்கையிலும் காணப்படுகின்றன.

அண்மைக் காலங்களில் மேற்கு நாடுகளில் மேற்கொள்ளப்படும் ஆய்வு முறைகளைப் பின்பற்றி இந்தியத் தொல்லியலாளர்கள் கற்கால ஆய்வில் பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளனர். இதற்கு முன்பெல்லாம் பழங்கற்கால ஆராய்ச்சி பெருமளவுக்குக் கல்லாயுதங்களையும், அவற்றை ஆக்குவதில் கடைப்பிடிக்கப்பட்ட தொழில்நுட்பத் திறமையையும், குறிப்பிட்ட பிரதேசங்களிலே கண்டெடுக்கப்பட்ட கல்லாயுதங்களுக்கும் ஏனைய பிரதேசங்களிலே கண்டெடுக்கப்பட்ட கல்லாயுதங்களுக்கிடையே காணப்படும் தோற்றம், செய்திறன், பயன்பாடு ஆகியவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளையும் கண்டறிவதிலே மட்டும்தான் நடைபெற்றது. இதன் காரணமாக இவ்வித ஆய்வுகளில் ஈடுபட்டோர் பெருமளவுக்குப் பழைய கற்காலக் கருவிகள் காணப்படும் ஆற்றுப்படுகைகளை ஆராய்வதில் மட்டுமே கூடிய கவனம் செலுத்தினார்கள். இதற்கப்பால் அக்காலத்தில் மனித நடமாட்டமிருந்த பிராந்தியங்களையோ, அந்த வாழ்க்கை முறையை மேற்கொண்டிருந்த பழங்குடி மக்களையோ பற்றிய அவதானிப்புகள் மேற்கொள்ளப்படவில்லை (சிற்றம்பலம், சி.க. 1999: 33).

அண்மைக் காலங்களில் நவீன அறிவியல் ஆய்வு முறைகளின் துணையோடு கற்கால மனிதன் வாழ்ந்த சூழல் பற்றி அறிவதில் அதிக அக்கறை காட்டப்படுகிறது. இவ்வாறு சூழலை மையமாக வைத்து ஆராயும் போது மனிதன் உபயோகித்த ஆயுதங்கள் அதில் ஓர் அம்சமாக மட்டுமே காணப்படுகின்றன. இத்தகைய சூழல் பற்றிய ஆய்வில் பண்டைய நில அமைப்பு, ஆற்றோட்டம், வடிகாலமைப்பு, மனிதன் ஆயுதங்களை உருவாக்கிய இடங்கள், அவன் தனக்கு வேண்டிய மூலப் பொருட்களைப் பெற்றுக்கொண்ட இடங்கள், அக்காலச் சூழலில் வளர்ந்த தாவரங்கள், மிருகங்கள் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. மொத்தத்தில் பண்டைய மனிதனின் வாழ்வு, வளம் பற்றிய முழுமையான ஒரு வரலாற்றைக் கட்டி எழுப்புவதே இன்றைய ஆய்வின் முக்கிய நோக்கமாக விளங்குகிறது (சிற்றம்பலம், சி.க. 1999: 34).

ஐரோப்பா, மேற்காசியா, ஆபிரிக்காவைப் போன்று பிளிஸ்ரொசீன் காலத்து பழைய கற்காலத் தொழில்கள் அவற்றின் உருவம், அளவு, தயாரிக்கும் முறைகளைப் பொறுத்து மூன்று பெரும் பிரிவுகளாக அமையும். கீழைப் பழங்கற்கால ஆயுதங்கள் விலங்குகளை வேட்டையாடத்தக்க கல்லினால் செய்யப்பட்ட கைக்கோடரிகள், பிளப்பிகள், வெட்டும் கருவிகள், மற்றும் இவற்றோடு தொடர்புடைய கருவிகளாகும். மத்திய பழங்கற்காலக் கருவிகள் சிறிய, எடை குறைவான செதில் வகையான, கவனமாக உருவாக்கப்பட்டவை ஆகும். மேலைப் பழங்கற்காலக் கருவிகள் நீள்சதுரமான கற்றகடுகள், உளிகள் என்பனவாகும். இவ்வகையான ஆயுதங்களை மேற்கத்திய நாடுகளில் காணப்படும் கருவிகளோடு ஒப்பிட முடிந்த போதிலும், தென்னாசியக் கற்கருவிகள் அந்தந்த திணைநிலப் பகுதிக்கேற்ப தனித்தன்மையான தொழில்நுட்பங்களுடன் காணப்படுகின்றன (Allchins B&R, 1982: 33).

தென்னாசியாவில் மனித இனங்கள் வாழ்ந்து வந்திருப்பதற்கான ஆதாரம் அச்சூலியன் கருவிகளிலிருந்தே ஆரம்பமாகிறது. ஆனாலும், பெரிய செப்பனிடப்படாத கைக் கோடரிகள், பிளப்பிகள்,

வெட்டும் கருவிகள் போன்றவை பரந்துபட்டுக் காணக்கிடைப்பது, இதற்கு முற்பட்ட காலங்களிலும் வேறுவகையான கற்காலப் பண்பாடு இருந்திருக்க வாய்ப்பு இருப்பதைக் காட்டுகிறது. இக்கல்லாயுதங்கள் அதன் வகைப்பாட்டிலும் தொழில்நுட்பத்திலும் (Typology and Technology) அச்சூலியன் வகை ஆயுதங்களாகவே அமைகின்றன (Allchins B&R, 1982: 35-36).

கீழைப் பழங்கற்காலம்

தென் ஆசியாவில் கீழைப் பழங்கற்கால மக்களின் வதிவிடங்கள் மலைக் குகைகளிலும், கடற்கரைகளிலும், ஆற்றங்கரைகளிலும், திறந்த வெளிகளிலும் காணப்படுகின்றன. மக்கள் நிரந்தரமாகவோ அல்லது நீண்ட காலமோ வாழ்ந்த இடங்கள் அவர்களின் பண்பாட்டு, வாழ்க்கைச் சூழல் நடவடிக்கைகளைக் காட்டக்கூடிய ஆதாரங்களைக் கொண்ட முக்கிய இடங்களாகும். ஒரு வட்டாரத்தில் காணப்படும் வதிவிட மையங்களின் அனைத்து வகையான ஆதாரங்களையும் கொண்டே ஒரு முழுமையான காட்சியை உருவாக்க முடியும். இந்த ஆதாரங்களைக் கொண்டு இவை காணப்படும் மையங்களுக்கிடையிலும், சூழலுக்கிடையிலுமான தொடர்புகளையும் விளக்க முடியும் (Allchin B & R. 1982:38).

இந்தியாவில் முதல் தடவையாக பல்லாவரத்திலும், அத்திரம்பாக்கத்திலும் அச்சூலியன் வகைக் கோடரிகளைக் கண்டெடுத்த நிலவியல் ஆய்வாளரான ரொபேட் புரூஸ் புட் (Robert Bruce Foote).

இந்திய நிலவியல் மேலாய்வுத் துறையைச் (Geological Survey of India) சேர்ந்த நிலவியலாளரான ரொபெர்ட் புரூஸ் புட் சென்னைக்குத் தெற்கேயுள்ள செங்கல்பட்டு மாவட்டத்திலிருந்த பல்லாவரத்தில், அணிவகுப்பு மைதானத்திற்கு அருகாமையிலிருந்த செவ்வண்ண இரும்பகக் களிமண் கிடங்குகளில் (Laterite Pits) 1863ஆம் ஆண்டு மே மாதம் 30ஆம் திகதி இந்தியாவின் முதல் பழங்கற்காலக் கற்கருவிகளைக் கண்டெடுத்தார் (Ramachandran, K.S. 1980: 17). இதைத் தொடர்ந்து சென்னைக்கு 60 கி.மீ. தொலைவில் அத்திரம்பாக்கம் என்னுமிடத்தில் கொற்றலையாற்றுப் படுகையில் பழங்கற்காலத்திற்குரிய குவாட்ஸைட் வகைக் கல்லினால் செய்யப்பட்ட அச்சூலியன் வகைக் கைக்கோடரிகளையும் மற்றும் பல கற்கருவிகளையும் கண்டெடுத்தார். மேலும் அங்கே பெருந்தொகையான பழங்கற்காலக் கல்லாயுதங்கள் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன. தென்னிந்தியாவில் பழைய கற்கால ஆயுதங்கள் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட இடங்களில் இதுவும் ஒன்று (Foote, B. 1901, 1914, 1916). இக்கருவிகளுக்கு ‘மதராசியன் கருவிகள்’ (Madrasian Tools) எனப் பெயரிடப்பட்டது. இந்தக் கைக்கோடரித் தொழில்துறை ‘மதராசியன் தொழில்துறை’ (Madrasian Industry) என அழைக்கப்பட்டது (Subbarao, B. 1958).

இக்காலக் கருவிகள் ‘குவாட்ஸைட்’ என்னும் கல்வகையால் ஆக்கப்பட்டன. இக்கற்கள் இயல்பாக ஆற்றோரங்களிலும், பெரிய பாறைகளாகவும் காணப்பட்டன. இப்பாறைகளில் முதலில் நெருப்பை ஏற்றிச் சூடாக்கியதன் பின்னர் அவற்றின் மேல் நீரை ஊற்றியதன் மூலம் இவற்றைப் பிளக்க வைத்து, பின்னர் அவற்றை உடைத்து தமக்கு வேண்டிய ஆயுதங்களை இக்கால மனிதர் செய்திருப்பார்கள் என மானிடவியலாளர் கருதுகின்றனர்.

கைக்கோடரிகள் முழுக் கற்களைச் செப்பனிட்டே உருவாக்கப்பட்டன. இவற்றைச் செப்பனிடுவதில் முக்கியமாக இரு வகையான முறைகள் அல்லது பாணிகள் கடைப்பிடிக்கப்பட்டன. இப்பாணிகளை ‘ஆச்சூலியன்’ (Acheulian) என்றும், ‘அபிவிலியன்’ (Abbevillian) என்றும் தொல்லியலாளர்கள் அழைப்பர். அச்சூலியன் வகைக் கோடரிகள் முதலில் பிரான்ஸ் தேசத்தில் செயின்ட் அச்சூல் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டபடியினால் அப்பெயரைப் பெற்றது. அபிவிலியன் ஐரோப்பாவின் ஆரம்பகாலக் கைக்கோடரி. இதன் தோற்ற காலம் இ.மு. 600,000க்கும் இ.மு. 400,000க்கும் இடைப்பட்ட ஆண்டுக் காலமாகும்.

அத்திரம்பாக்கத்தில் இக்கருவிகள் கொற்றலை ஆற்றின் படுகையிலே காணப்படுகின்றன. இவ்வாற்றில் 100, 60, 20, 8 அடி உயரங்களில் அமைந்த நான்கு மட்டப் படுகைகள் காணப்படுகின்றன. அச்சூலியன் வகைக் கைக்கோடரிகள், வெட்டும் கருவிகள், துண்டாடும் கருவிகள் (Choppers), பிளத்தற் கருவிகள் (Cleavers) என்பன களிமண், வண்டல் மண், உருண்டைக் கற்திரள்களோடு கலந்து காணப்படுகின்றன (இராசவேலு, சு., திருமூர்த்தி, கோ. 1955).

இதைத் தொடர்ந்து இந்தியாவில் நடைபெற்ற ஆய்வுகளில் பஞ்சாப், ராஜ்புதனம், குஜராத், மத்திய பிரதேசம், கர்நாடகம், பீகார், அஸாம், வங்காளம்

ஆகிய பகுதிகளிலும் இவ்வகையான கல்லாயுதங்களைப் பயன்படுத்திய மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என அறியப்பட்டது.



கீழைப் பழங்கற்காலக் கருவிகள்: 14 பஞ்சாப்: 1, 2. வெட்டும் கருவிகள், 3. கைக் கோடரி, 4. பிளப்பி. 5 - 8 சென்னை: 5. வட்ட வெட்டி, 6. வெட்டும் கருவி, 7. அச்சூலியன் வகை கைக் கோடரி, 8. பிளப்பி. நன்றி: Bridget and Raymond Allchin, 1982.



‘மதராஸ் பாணி’ கைக்கோடரிப் பண்பாடு: குஜராத் பகுதியிலுள்ள மாகி பள்ளத்தாக்கிலிருந்தும், கர்நாடகத்தில் மலபிரபா பள்ளத்தாக்கிலிருந்தும் பெறப்பட்டவை. நன்றி: *B. Subbarao, 1958.*

சோனியன் பண்பாட்டுக் கருவிகள்

1936இல் இன்றைய பாகிஸ்தானிலுள்ள சோன் ஆற்றின் (Soan River) வடிநீர்ப்பகுதியில் வாழ்ந்த மக்கள் உபயோகித்த துண்டாக்கும், வெட்டும் கருவிகளைக் கண்டெடுத்த டி தெரா, பற்றசன் (Hellmut De Terra and Patterson) ஆகிய ஆய்வாளர்கள் இவை ஆச்சூலிய மரபின் சமகாலத்தைய கருவிகள் என மதிப்பிட்டு, இவற்றிற்கு ‘சோனியன் பண்பாட்டுக் கருவிகள்’ எனப் பெயரிட்டார்கள் (De Terra, H. 1969). இந்திய உபகண்டத்தின் சிவாலிக் பகுதிகளிலுள்ள இந்தியா, நேபாளம், பாகிஸ்தான் ஆகிய இடங்களில் காணப்படும் இக்கற்கருவிகள் சோன் பண்பாட்டுக் கருவிகள் என அழைக்கப்படுகின்றன. பிற்காலங்களில் இப்பகுதிகளில் இவற்றோடு அச்சூலியன் மரபு சார்ந்த கருவிகளும் கண்டெடுக்கப்பட்டபடியினால், பிற்கால ஆய்வாளர்கள் சோனியப் பண்பாடு என்பது அச்சூலியப் பண்பாட்டின் மாற்றுப் பெயரா? என வினா எழுப்பினார்கள் (Rendell, H. R. et al. 1989).

சோனியன் பண்பாட்டுக் கற்கருவிகள்



சோன் ஆற்றுப்படுகையின் குறுக்குவெட்டுப் படமும், ஆற்றுப்படுகையில் கண்டெடுத்த கற்கருவிகளும். 1. முற்பட்ட சோன் காலத்து சீவல் கருவி, 2 - 9. ஆரம்பகால சோன் கருவிகள், 10 - 18. பிற்காலச் சோன் கருவிகள். நன்றி: B. Subbarao, 1958.

இவ்வாயுதங்கள் சோன் ஆற்றுப்படுகைத் தளவரிசைகளில் கண்டெடுக்கப்பட்டமையால், இவற்றின் தயாரிப்பு ‘சோன் தொழில்துறை’ (Soan Industry) என அழைக்கப்படுகிறது. இத்தொழில்துறை இரு கூறுகளைக் கொண்டது. ஒன்று கைக்கோடரி மரபு, மற்றது வெட்டுக்கருவி - சீவல்கருவி மரபு.

சமீபகாலத் திகதிக் கணிப்புகளில், டி தெராவினால் கீழைப் பழங்கற்காலக் கருவிகள் என முன்வைக்கப்பட்ட சோன் கல்லாயுதங்கள் மத்திய பழங்கற்காலத்திற்கு உரிய கல்லாயுதங்கள் எனக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, கீழைப் பழங்கற்காலத்தைப் பற்றிப் பேசும்போது சோன் கருவிகளைத் தவிர்த்துக்கொள்வது நல்லது என ஆல்சின் கருதுகிறார் (Allchins B&R, 1982: 36).

நர்மதா ஆற்றங்கரை நில ஆய்வுகள்

மத்திய இந்தியாவில் நர்மதா ஆற்றங்கரையில் பிம்பேத்கா மலைச்சாரலில் காணப்படும் குகைகளின் ஆய்வுகளில், கற்கால மக்களின் அச்சூலியன் வதிவிட மையங்கள் வாக்கங்கார், மிஸ்ரா (Wakankar, V.S.; Misra) ஆகிய தொல்லியலாளர்களால் 1957இல் கண்டுபிடிக்கப்பட்டன. இதுவரை பிம்பேத்காவில் 243 வதிவிடக் குகைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த வதிவிடங்கள் பழங்கற்காலத்திலிருந்து இடைக்கற்காலம் ஈறாகப் புதிய கற்காலம் வரை நீடித்திருக்கின்றன (Agrawal et al. 1978).

பிம்பேத்கா குகைகளில் வெவ்வேறு காலங்களுக்குரிய ஏராளமான ஓவியங்கள் காணப்படுகின்றன. இவற்றை ஆராய்ந்த வாக்கங்கார், இதை ஏழு காலகட்டங்களுக்கு உரியவையாகக் கணிப்பிட்டிருக்கிறார் (Yasodhar, M. 1984; Javid & Javeed 2008; Chakravarthy 1984; Tiwari, S.K. 2000). இந்த ஓவியங்களில் உபயோகப்படுத்தப்பட்டிருப்பவை தாவர வர்ணங்கள் ஆகும். உட்சுவர்களிலும், மாடக்குழிகளிலும் இருப்பதனால் இவை நெடுங்காலம் நீடித்திருக்கின்றன.

காலப்பகுதி 1 (மேலைப் பழங்கற்காலம்): பச்சை நிறத்தில், நடனமாடும், வேட்டையாடும் மனிதர்களின் கோட்டுப் படங்கள். இப்படங்கள் 40,000 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாகக் கருதப்படுகின்றன.

காலப்பகுதி 2 (இடைக்கற்காலம்): இக்குழுவில் காணப்படும் மனிதர்களின் உடலில் வரைகோடுகள் தீட்டப்பட்டிருக்கின்றன. மிருகங்களை வேட்டையாடும் காட்சிகளில் முட்களைக் கொண்ட ஈட்டிகள், கூராக்கப்பட்ட கம்புகள், அம்புவில்லுகள் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. குழு நடனங்களில் பறவைகள், இசைக்கருவிகளோடு தாய்மார்கள், பிள்ளைகள், கர்ப்பிணிப் பெண்கள், வேட்டையாடிய மிருகங்களைச் சுமந்த மனிதர்கள், குடிப்பவர்கள் காணப்படுகிறார்கள்.

காலப்பகுதி 3 (வெண்கலக் காலம்): இக்கால ஓவியங்கள் இடைக்கற்காலம் போன்றவை. இவர்கள் மல்வா சமவெளி விவசாயிகளுடன் பண்டமாற்று நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

காலப்பகுதி 4 - 5 (ஆதி வரலாற்றுக் காலம்): இந்த உருவங்கள் அலங்காரமாகச் சிவப்பு, வெள்ளை, மஞ்சள் நிறங்களில் அமைந்தவை. இவை மிருகங்களில் சவாரி செய்வோர், மதச் சின்னங்கள், யக்ஷ உருவங்கள், மரத் தெய்வங்கள், விண்வெளித் தேர்கள் என்பனவாகும்.

காலப்பகுதி 6 - 7 (மத்திய காலம்): வடிவியல் முறையில் அமைக்கப்பட்ட ஓவியங்கள். வர்ணங்கள் மாங்கனீஸ் ஒக்ஸைட், சிவப்பு சாயம், நிலக்கரி என்பன கொண்டு உருவாக்கப்பட்டிருக்கின்றன.

மிருகக்காட்சிப் பாறை (Zoo Rock) என அழைக்கப்படும் ஒரு பாறையில் யானைகள், சதுப்புநில மான்கள், காட்டெருது ஆகியன காணப்படுகின்றன. மற்றொரு பாறையில் மயில், பாம்பு, மான் என்பன கதிரவனுடன் வரையப்பட்டுள்ளன. கையில் திரிசூலத்துடன் நடனமாடும் மனித உருவத்தை ‘நடராஜர்’ என தொல்லியலாளர் வாக்கங்கார் இனம் காண்கிறார் (Tiwari, S.K. 2000).

பிம்பேத்கா குகை ஓவியங்கள்

பிம்பேத்கா குகைப்பகுதிகள் 1990ஆம் ஆண்டு முதல் சட்ட ரீதியாக இந்திய தொல்லியல் மேலாய்வுத் திணைக்களத்தினரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. 2003ஆம் ஆண்டு முதலாக ஐக்கிய நாடுகள் கல்வி அறிவியல்பண்பாட்டு நிறுவனத்தினரால் (UNESCO) இது ஓர் உலக மரபுரிமை மையமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது.

'நர்மதா மனிதன்' கண்டுபிடிப்பு

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21ஆம் திகதி இந்திய அரசு மத்திய இந்தியாவின் நர்மதா பள்ளத்தாக்கிலுள்ள ஹத்னோரா கிராமத்தில் தொல்கால மனித மண்டை ஓட்டின் புதைப்படிவம் (skull Fossil) ஒன்றும் சில புதைப்படிவ மனித எலும்புகளும் கண்டுபிடிக்கப்பட்டதாக ஊடகங்களுக்குத் தெரிவித்தது. இதை அடுத்து உலகப் பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும் 'நர்மதா மனிதனின் கண்டுபிடிப்பு' என செய்திகள் வெளிவரலாயின. இது இந்திய ஹோமோ இரக்டஸ் மனிதனின் 500,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கபால ஓடு என முதலில் அறிவிக்கப்பட்டது.

உண்மையில் இந்தக் கண்டுபிடிப்பு 1982ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் திகதி மத்தியப் பிரதேசத்தில் ஹத்னோரா கிராமத்தில் நர்மதா ஆற்றங்கரை வண்டல் மண் அடுக்குகளை (Alluvial Terrace) ஆய்வு செய்த அருண் சோனக்கியா என்ற ஆய்வாளரால் கண்டுபிடிக்கப்பட்டது. ஆய்வை ஆரம்பித்து இரு மாதங்களின் பின்னர் ஆற்றின் வடகரையில் வண்டல் மண்ணில் இக்கபால ஓட்டை அவர் கண்டெடுத்தார் (Sonakia, A. & Kennedy K.A.R. 1985).

1988ஆம் ஆண்டில் அமெரிக்கத் தொல்மானிடவியலாளர்களான கென்னெத் கென்னடி, வில்லியம் ரோத்ஜென் இருவரும் இக்கபாலத்தைப் பரிசோதனை செய்து, இது முப்பது வயதளவில் இறந்த ஒரு பெண்ணின் மண்டை ஓடு எனத் தெரிவித்தார்கள். முதலில் பரிசோதனை செய்தவர்களால் இது ஓர் ஆணின் மண்டை ஓடாகக் கருதப்பட்டது. பிளிஸ்ரொசீன் கால மனித இனங்களிலிருந்து (பிளிஸ்ரொசீன் காலம்: 2.588 மில்லியன் முதல் 11,700 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம் வரை) பின்வரும் உடற்கூரமைப்பு வடிவங்களால் நர்மதா கபாலம் மாறுபட்டிருப்பதாக கென்னடி குழுவினர் அறிவித்தார்கள்.

1. பக்கவாட்டுக் கபாலத்தின் கோண வடிவம் (Form of Torus Angularis).
2. கபாலத்தின் மத்தியில் ஓடும் குழிவிழுந்த எலும்பு பொருந்து வாய் (Furrowing of the Sagittal Ridge).
3. பெரிய வெளிப்புறக் காதுத் துவாரம்.
4. மிக நீண்ட கன்னப் பொட்டெலும்பு (Unusually Long Temporal Bone).
5. மிக உயர்ந்த கபாலம்.
6. உயர்ந்த பிடரி எலும்பின் மொழி (Elevated Opist hocranion).
7. அகன்ற, உயர்ந்த நெற்றி.
8. கபாலத்தின் கொள்ளளவு 1,421 கன சென்டிமீட்டர்.

மேற்குறிப்பிட்ட வடிவ அமைப்புகளைக் கொண்டு நர்மதா கபாலம் ஹோமோ இரக்டஸ், ஹோமோ சேப்பியன்ஸ் இரண்டு வகை மனிதர்களினதும் சிலசில கூறுகளைக் கொண்டிருப்பதாகக் கென்னடி தெரிவித்தார் ('According to Kenneth Kennedy, given the above features, the Narmada crania exhibited some anatomical features of both the erectus and sapiens elements' Kennedy, K.A.R. 2000: 179). நர்மதா கபாலம் இற்றைக்கு 700,000க்கும் 130,000க்கும் முற்பட்ட மத்திய பிளிஸ்ரொஸீன் காலத்திற்குரிய ஆரம்பகால ஹோமோ சேப்பியன் இனத்திற்குரியதாக இருக்கலாம் எனக் கருதப்பட்டது. இக்கபாலத்தில் காணப்படும் வடிவ அமைப்புகளைக் கொண்டு இக்கபாலம் இந்தியாவிலேயே பரிணாம வளர்ச்சி பெற்றதாகக் கூறப்பட்டது (Kennedy and Chiment 1991; Kennedy, K.A.R. 2000: 180).

இதன்படி நர்மதா கபாலம் ஹோமோ இரக்டஸ்ஸிலிருந்து ஹோமோ சேப்பியன்ஸ் தோற்றம் பெற்ற இடைமாறுதல் பருவத்தைக் (Transitional Stage) காட்டுகிறது. இக்கணிப்பீடு ஹோமோ சேப்பியன்ஸ் மனிதர்களின் தோற்றம் ஆபிரிக்காவிற்கு வெளியிடங்களிலும் இடம்பெற்றிருக்கலாம் என்ற புனைவுகோளுக்கு (Multiregional Hypothesis) ஆதரவளிப்பதாகச் சிலர் கூறுவர்.

நர்மதா மனிதனின் கபாலத்தின் சுத்திகரிக்கப்பட்ட புதைப்படிவம்

மனித பரிணாமப் படிநிலை வளர்ச்சியின் போது ஹோமோ இரக்டஸ்ஸிற்கும், ஹோமோ சேப்பியன்ஸ்ஸிற்கும் இடைப்பட்ட நிலையில் உருவாகி, பிற்காலத்தில் அழிந்துபோய்விட்ட இனம் ஹோமோ ஹைடெல்பயென்ஸிஸ். இந்த ஹோமோ ஹைடெல்பயென்ஸிஸ் இனத்திலிருந்தே ஐரோப்பாவின் ஹோமோ நியண்டதால் மனிதர்களும், நவீன ஹோமோ சேப்பியன்ஸ் மனிதர்களும் உதயமானார்கள் எனக் கருதப்படுகிறது. இற்றைக்கு 600,000 ஆண்டுகளுக்கும் 400,000 ஆண்டுகளுக்கும் முன்பு வாழ்ந்த இம்மனிதர்கள் அச்சூலியன் வகைக் கல்லாயுதத் தொழில்நுட்பத்தை அறிந்திருந்தார்கள்.

2005-2006ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவின் டெக்ஸாஸ் பல்கலைக்கழக மானிடவியல் துறையைச் சேர்ந்த சீலா அத்திரேயா (Sheela Athreya) நர்மதா கபாலத்தை ஹோமோ ஹைடெல்பயென்ஸிஸ் கபாலத்துடன் ஒப்பீட்டு ஆய்வு - அதற்கிடையேயுள்ள வடிவ அமைப்பியல் உறவை அறிந்துகொள்ளும் ஆய்வு - மேற்கொண்டிருந்தார். நர்மதா மனிதன் ஹோமோ இரக்டஸ்ஸிற்கும், ஹோமோ ஹைடெல்பயென்ஸிஸிற்கும் இடைப்பட்ட இனமாகக் கருதப்பட்டால், இந்த ஆய்வின் முடிவில் ஹோமோ இரக்டஸ் அம்சங்களே இந்தக் கபாலத்தில் அதிகம் காணப்படுவதாகக் கூறப்பட்டது (Athreya, S. 2007).

தமிழக ஆய்வுகள்

இந்தியத் தொல்லியல் மேலாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த கே.டி. பனர்ஜீயின் தலைமையில் 1960களில் தென் இந்தியாவில் தமிழகத்தில் பல இடங்களில் மேலாய்வுகளும் அகழாய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

இந்த ஆய்வுகளில் காஞ்சிபுரம் தாலுகாவிலுள்ள பரண்டையூர், வாடியூர் ஆகியவற்றிலும், அத்திரம்பாக்கம், கிருஷ்ணாபுரம், ரங்கபுரம், அம்மம்பாக்கம், கொல்லபாளையம், சுனிபாளையம், கம்மவரிபாளம், குஞ்சரம், நாராயணபுரம், நெய்வேலி, பூண்டி, ராஜபாளையம், சித்தஞ்சேரி, திம்மபூபாளபுரம் ஆகிய இடங்களிலும் பழங்கற்காலக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன (Ramachandran, K.S. 1980: 21).

குடியம், அத்திரம்பாக்கம், வடமதுரை, பூண்டி, நெய்வேலி ஆகிய இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. குடியத்தில் பழங்கற்கால மனிதர் வாழ்ந்த குகைப்பாறைகள் (Rockshelters) அகழ்வு செய்யப்பட்டன. குடியம் குகையில் தரை மட்டத்திலிருந்தே கற்கருவிகள் காணப்பட்டன. அடியிலுள்ள சரளைக்கல் மட்டத்தில் காணப்பட்ட பின்அச்சூலியன் (PostAcheulian) கருவிகள் மேல் மட்டங்களில் நுட்பமாகப் பண்பு மாறுபாடடைந்து நுண்கல் கருவிகளாக (Microlithic) மாற்றமடைவதைக் காண முடிகிறது (Ramachandran, K.S. 1980: 22).

அத்திரம்பாக்கம்

1863ஆம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனியின் நிலவியல் ஆய்வாளரான ரொபெர்ட் புரூஸ் புட் முதல் தடவையாக அச்சூலியன் வகைக் கல்லாயுதங்களை அத்திரம்பாக்கத்தில் கண்டெடுத்ததை ஏற்கனவே பார்த்தோம். தொடர்ந்து இவ்விடத்தில் இந்தியப் பாரம்பரியக் கல்வி நிறுவனமான சர்மா நடுவத்தின் (Sharma Centre for Heritage Education in India) தொல்லியலாளர்கள் இருபது ஆண்டுக்கால அகழாய்வுகளில் பெருந்தொகையான கற்கருவிகளைக் கண்டெடுத்தார்கள். அச்சூலியன் கைக்கோடரிகளைக் கொண்டு இவை ஹோமோ இரக்டஸ் மனிதர்களால் உபயோகிக்கப்பட்ட கருவிகள் எனக் கருதப்பட்டதே தவிர, இம்மனிதர்களின் மனித எலும்புக்கூடுகளோ, எலும்புகளோ இவ்விடங்களில் கண்டுபிடிக்கப்படவில்லை.

அத்திரம்பாக்கத்தில் 1965இல் டாக்டர் பனர்ஜீயினால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளில் நிலமட்டங்களில் காணப்படும் செவ்வண்ண இரும்பகக் களிமண்ணுக்கும் (Laterite), அம்மட்டத்தில் இடம்பெறும் கற்கருவிகளுக்கும் இடையிலான உறவைக் கண்டறிவது முக்கியப்படுத்தப்பட்டது. அகழ்வுகளில் நான்கு நில அடுக்குகள் காணப்பட்டன. அகழ்வின் அடிப்பகுதி எளிதில் தகடுகளாகப் பிளவுறும் கற்பலகை போன்ற களிப்பாறை (Shale) ஆகும். இந்த மட்டத்தில் கைக்கோடரிகளும், பிளப்பிகளும் காணப்பட்டன. இதற்கு மேலுள்ள இரும்பகக் களிமண் சரளைக்கல் (Lateritic Gravel) மட்டத்தில் பின்அச்சூலியன் கருவிகளான கூர்கற்கள், பிராண்டிகள், நீண்ட சீவல்துணுக்குவாள் (Points, Scrapers, Long Flakeblades) என்பன காணப்பட்டன. இதற்கு மேலுள்ள மண்ணிற வண்டல் மட்டத்தில் கற்கருவிகள் ஏதும் காணப்படவில்லை. இதற்கும் மேலுள்ள மண்ணிற நில மட்டத்தில் குறுணிக்கல் (நுண்கல்) கருவிகள் காணப்பட்டன (Ramachandran, K.S. 1980: 23).

அத்திரம்பாக்கத்தில் கண்டெடுத்த அச்சூலியன் கைக்கோடரி. நன்றி: சென்னை அருங்காட்சியகம்.

இற்றைக்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் அத்திரம்பாக்கத்தில் அகழாய்வுகளை மேற்கொண்ட சாந்தி பப்பு, அகிலேஷ் குமார், ஹரேஷ் ராஜபாரா ஆகிய ஆய்வாளர்கள் 7,200க்கும் மேற்பட்ட பழங்கற்காலக் கல்லாயுதங்களைக் கண்டெடுத்திருக்கிறார்கள். இவற்றின் வெப்பேற்று ஒளிவீச்சு (Thermoluminescence) காலக்கணிப்புகள் இக்கல்லாயுதங்களின் காலத்தை இற்றைக்கு 385,000±64,000 ஆண்டுகளுக்கு முன்னர் எடுத்துச் செல்கின்றன (Kumar, Akilesh et al. 2003). இக்கல்லாயுதங்கள் கீழைப் பழங்கற்காலத்து அச்சூலியன் வகை ஆயுதங்களுக்கு அடுத்த கட்டமான மத்திய பழங்கற்கால ஆயுதங்களாகும் (கீழே பார்க்கவும்).

வடமதுரை

அத்திரம்பாக்கம் போன்று வடமதுரையிலும் கீழைப் பழங்கற்காலக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றை விரிவாக ஆராய்ந்த கிருஷ்ணசுவாமி, இவற்றின் தோற்றம், செய்திறன், பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் இவற்றை மூன்று பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார் (Krishnaswami, V.D. 1947: 1157).

1.முதலாம் பிரிவு: இப்பிரிவைச் சார்ந்த கருவிகள் உருண்டைக் கற்களுடன் காணப்படுகின்றன. இவற்றின் பக்கங்கள் நீண்ட தூரம் இவை இழுத்துச் செல்லப்பட்டதனால் போலும் மழுங்கிக் காணப்படுகின்றன. இவற்றில் ஒருவகைப் பழுப்பு நிறம் படிந்து காணப்படுகிறது.

2.இரண்டாவது பிரிவு: இப்பிரிவைச் சார்ந்த கருவிகள் உருண்டைக் கற்களமைந்த பகுதி மேல் காணப்படுகின்றன. இக்கருவிகள் செம்பூரன் சேர்க்கையுடன் (Laterite) கலந்து காணப்படுவதனால் செம்மண் நிறம் பெற்றிருக்கின்றன. காலத்தால் இவை முதலாம் பிரிவைவிடப் பிந்தியவை.

3.மூன்றாம் பிரிவு: இக்கருவிகள் செம்மண் நிறமோ பழுப்பு நிறமோ இன்றிக் காணப்படுகின்றன. காலத்தால் இவை மிகப் பிந்தியவை.

இக்கற்கருவிகளை நுணுக்கமாக ஆராய்ந்து, அவற்றின் அமைப்பு, செய்திறன், பயன்பாடு ஆகியவற்றின் சிறப்பியல்புகளுக்கு ஏற்ப முதலாம், இரண்டாம் பிரிவுகளில் மேலும் இரு உட்பிரிவுகளையும் அடக்கியிருக்கிறார்.

முதலாம் பிரிவின் முதலாவது உட்பிரிவில் ‘அபிவிலியன்’ வகைக் கைக்கோடரிகள் இடம்பெறுகின்றன. இக்கோடரிகளின் நுனி முனையைத் தவிர, மிகுதிப் பாகங்கள் செப்பனிடப்படவில்லை. இரண்டாவது உட்பிரிவில் உள்ளடக்கப்பட்ட ஆயுதங்கள் நேர்த்தியாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை ஆரம்பகால ‘அச்சூலியன்’ பாணி ஆயுதங்கள் என வகைப்படுத்தியிருக்கிறார்.

இரண்டாவது பிரிவைச் சேர்ந்த கைக்கோடரிகளில் தழும்புகள் இல்லாது அழகாக ஆக்கப்பட்டமையால், இவை மரம் அல்லது எலும்புச் சம்மட்டிகளால் அடித்து ஆக்கப்பட்டவையாகத் தெரிகிறது. இவை வளர்ச்சியடைந்த ‘அச்சூலியன்’ வகை ஆயுதங்களாகக் கொள்ளப்படுகின்றன.

வடமதுரையில் 1966-67ஆம் ஆண்டுகளில் கே.டி. பனர்ஜி மேற்கொண்ட அகழ்வுகளில் நில அடுக்கமைவின் வரிசைப்படி (Stratigraphic Sequence), நிலத்தின் மேற்பகுதி இரும்பகக் களிமண்ணால் ஆனது. அடுத்த அடுக்கு களிமண்ணும் குவாட்ஸ் கற்பாளங்களும் கொண்டது. இந்த அடுக்கில் வெவ்வேறு தயாரிப்பு நிலைகளிலுள்ள அச்சூலியன் வகைக் கற்கருவிகள் - புத்தம் புதிய நிலைகளில் - கண்டெடுக்கப்பட்டன. இரண்டாவது அடுக்கின் கீழே கற்பாளங்களும் சரளைக் கற்களும் களிமண்ணுடனும்

மணலுடனும் கலந்த நிலையில் காணப்பட்டன. இந்த அடுக்கில் சில ஆரம்பகால அச்சூலியன் வகைக் கற்கருவிகள் கண்டெடுக்கப்பட்டன (Ramachandran, K.S. 1980: 23-24).

மற்றைய தமிழக மையங்கள்

கற்கால மனிதன் வாழ்ந்த குகைகள் பல தமிழகத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள குடியம் குகை குறிப்பிடத்தக்கது. இங்கே கே.டி. பனர்ஜி தலைமையில் 1962-63, 1963-64ஆம் ஆண்டுகளில் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட போது மூன்று அகழ்வாய்வுக் குழிகள் அமைக்கப்பட்டன. முதலாவது அகழ்வுக் குழியில் பல அளவிலான கைக்கோடரிகள், வெட்டுக் கருவிகள், பிந்திய அச்சூலியன் பாணிக் கருவிகள் ஆகியன கிடைத்தன. இரண்டாவது அகழ்வாய்வுக் குழியில் கூழாங்கற்களிலமைந்த கருவிகள், இருபக்க முனைகளைக் கொண்ட கற்றகடுகள், செதுக்கல் கருவிகள் ஆகியன வெளிவந்தன. மூன்றாவது அகழ்வாய்வுக் குழி கிருஷ்ணபுரம் என்ற ஊருக்கருகில் அமைக்கப்பட்டது. இதில் அச்சூலியன் பாணியிலமைந்த கருவிகளோடு கூர்க்கருவிகள், செதுக்கல் கருவிகள், செதில் கருவிகள், தட்டு வடிவக் கருவிகள் (Discoids), வெட்டுதல் கருவிகள் ஆகியன கிடைத்துள்ளன. இவை பளிங்குக் கற்களினால் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது (சிற்றம்பலம், சி.க. 1999: 41; இராசவேலு - திருமூர்த்தி 1995; Ramachandran, K.S. 1980: 22).

குடியம் குகையில் கீழைப் பழங்கற்கால, மத்திய பழங்கற்கால, மேலைப் பழங்கற்கால ஆயுதங்கள் தொடர்ச்சியாகக் காணப்பட்டாலும், மனிதன் தொடர்ச்சியாக இக்குகையில் வாழ்ந்ததற்கான எச்சங்கள் காணப்படவில்லை (Allchin, B. & F.R. 1982). இது தமிழகத்தில் மட்டும் காணப்படும் அம்சமன்று. பொதுவாக முழு இந்தியாவிலும் இக்காலக் கருவிகள் குகைகளில் காணப்பட்ட போதிலும், தொடர்ச்சியாக இவற்றில் மனிதன் வாழ்ந்ததற்கான தடயங்கள் காணப்படவில்லை. பெரும்பாலும் இடைக்கற்காலத்திற்குப் பின்னர்தான் மனிதன் நிரந்தரமாகக் குகைகளில் வாழப் பழகிக் கொண்டான் என்பதை தற்போதைய ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன (சிற்றம்பலம், சி.க. 1999: 41).

நெய்வேலியிலும் கே.டி. பனர்ஜி 1962-63, 1963-64ஆம் ஆண்டுகளில் அகழாய்வை மேற்கொண்டிருந்தார். அச்சமயம் அச்சூலியன்' பாணியிலமைந்த கைக்கோடரிகள், வெட்டுக் கருவிகள், கூர்க்கருவிகள் ஆகியனவற்றோடு மத்திய பழங்கற்காலக் கருவிகளும் கிடைத்தன.

இவ்வாறே பூண்டியிலும் கே.டி. பனர்ஜி 1965ஆம் ஆண்டில் அகழ்வை மேற்கொண்ட போது அச்சூலியன் பாணியிலமைந்த பிற்கால கீழைப் பழங்கற்காலக் கருவிகளோடு மத்திய பழங்கற்காலக் கருவிகளும் வெளிவந்தன (இராசவேலு, சு., திருமூர்த்தி, கோ. 1995: 11). அவரது கள ஆய்வின் போது இம்மாவட்டத்திலுள்ள பரந்தியூர், வடியூர், அரம்பாக்கம், கிருஷ்ணபுரம், ரங்கபுரம், அம்மம்பாக்கம், கொல்லாப்பாளையம், கம்ம வாரிப்பாளையம், குஞ்சரம், நாராயணபுரம், ராஜபாளையம், ஊத்துக்கோட்டை ஆகிய இடங்களிலும் பழையகற்காலக் கருவிகள் கிடைத்தன (சிற்றம்பலம், சி.க. 1999: 42).

வட ஆர்க்காடு மாவட்டத்தின் பழைய கற்கால மையங்களாக அம்பரிசபுரம், அரும்பாக்கம், சென்னாசமுத்திரம், களத்தூர், கனியனூர், கீழ்வெண்பாக்கம், முசிறி, நாகவேடு, பகவெலி, தக்கோலம், திருமால்பூர், வன்னியன் சத்திரம் என்பன இனங்காணப்பட்டுள்ளன (Rajan, K. 1997: 262-273).

1887இல் புறுஸ்புற், தர்மபுரி மாவட்டத்திலுள்ள பர்கூருக்கு அண்மித்துள்ள ஒரு பகுதியில் பழங்கற்காலக் கருவிகளைக் கண்டுபிடித்தார். 1960களில் இப்பகுதியில் கள ஆய்வை மேற்கொண்ட பி. நரசிம்மையா பழையகற்காலக் கருவிகளை இனங்கண்டார். இங்குள்ள வரதனாப் பள்ளியிலும் பழையகற்காலக் கருவிகள் கிடைத்துள்ளன (Rajan, K. 1997: 111).

தஞ்சாவூர் மாவட்டத்திலமைந்த தஞ்சாவூர், அத்திரம்பட்டினம், மதுரை மாவட்டத்திலமைந்த அவியூர், புதுப்பட்டி ஆகிய இடங்களிலும் பழையகற்காலக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதுவரை கிடைத்த கல்லாயுதங்களின் அடர்த்தியையும் எண்ணிக்கையையும் பார்க்கும் போது, இவை வட தமிழகத்திலேயே செறிந்து காணப்படுகின்றன. தஞ்சாவூர், திருச்சி, மதுரை, இராமேஸ்வரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இவை மிகமிக அரிதாகவே காணப்படுகின்றன. இக்காலத்தில் பெருமளவுக்கு தென், கிழக்குத் தமிழகப் பகுதிகளில் மனித நடமாட்டம் மிக மிகக் குறைவாகவே காணப்பட்டது (Raman, K.V. 1969, 1970).

தமிழக அகழ்வுகளில் கண்டெடுத்த கீழைப் பழங்கற்காலக் கற்கருவிகள். நன்றி: National Geographic.

உய்த்துணர்வு (Inference)

கீழைப் பழங்காலத்தில் இந்திய உபகண்டத்தில் வாழ்ந்த மக்கள் ஹோமோ இரக்டஸ் இன மக்களாவர். இவர்கள் ஆபிரிக்காக் கண்டத்திலிருந்து மேற்கு ஆசியா வழியாக மேற்கு மலைத் தொடரில் உள்ள போலன் கணவாய், கைபர் கணவாய் போன்ற கணவாய்கள் வழியாக இந்திய உபகண்டத்திற்குள் நுழைந்து - இந்தியாவின் வடமேற்கிலிருந்து தென்கிழக்கு வரை - உணவு கிடைக்கும் இடங்களைத் தேடி இடம்பெயர்ந்தவர்கள். கீழைப் பழங்காலக் கருவிகளின் அடர்த்தியும், பரவலும் அவர்களின் பெயர்ச்சிப் பாதையைக் காட்டுவதாகக் கருதப்படுகிறது.

தமிழகத்தின் சில பகுதிகளில் இக்காலக் கருவிகள் அருகிக் காணப்படுவதற்கு இத்துறையில் போதிய அளவு ஆய்வுகள் இடம்பெறாதது ஒரு காரணமாக இருந்தபோதிலும், இப்பகுதியில் இக்கருவிகள் செய்வதற்கான ‘குவாட்ஸைட்’ கல்லின வகை காணப்படாமையும் ஒரு காரணமாக இருக்கலாம். அக்காலத்தில் மூலப்பொருளை மையமாக வைத்தே மனித நடமாட்டம் நடைபெற்றது.

கைக்கோடரிகளைப் பயன்படுத்திய ஹோமோ இரக்டஸ் இன மனிதர்கள் அனைவரும் இக்கருவிகளோடு இந்தியாவை வந்தடைந்தார்களா, அல்லது இவர்களில் பின்னர் வந்த கூட்டத்தினர் கொண்டு வந்த கருவிகளை மாதிரியாகக் கொண்டு இங்கே ஏற்கனவே வாழ்ந்த மனிதர்கள் இந்த மரபைக் கற்றுக் கொண்டார்களா என்பது சிந்திக்க வேண்டிய விடயம். உலகெங்கும் காணப்படும் அச்சூலியன் வகைக் கோடரிகளிடையே காணப்படும் ஒற்றுமையை ஆதாரமாக வைத்து, ஆபிரிக்காவிலிருந்தே பழையகற்கால மனிதன் இக்கருவிகளுடன் உலகெங்கும் பரவினான் என்ற கருத்து முந்தைய ஆய்வாளர்களிடையே நிலவியது. சமீபகால ஆய்வுகள், ஆங்காங்கே வாழ்ந்த மனிதக் கூட்டத்தினர் இத்தகைய மரபைக் கற்று, தாங்களே அந்தப் பாணியில் கற்கருவிகளைத் தயாரித்தார்கள் என்பதை விளக்குகின்றன.

கிழக்காசியாவில் காணப்படும் பழங்கற்காலக் கற்கருவிகளினிடையே அச்சூலியன் வகைக் கருவிகள் காணப்படாமைக்கு பின்வரும் விளக்கம் தரப்படுகிறது: ஆபிரிக்காவிலிருந்து ஹோமோ இரக்டஸ் மனிதர்களது இடப்பெயர்ச்சி இரு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே ஆரம்பமாகி, ஏறக்குறைய ஒரு மில்லியன் ஆண்டுகளாகக் காலத்திற்குக் காலம் நடைபெற்றிருக்கிறது. அச்சூலியன் மரபுக் கருவிகள் 1.5 மில்லியன் காலப்பகுதியில்தான் ஆபிரிக்கக் கற்கால மக்களிடையே பரவியிருக்கிறது. அதற்கு முன்னர் இடம்பெயர்ந்து சென்ற மக்கள் இக்கருவிகள் பற்றி அறிந்திருக்கவில்லை.

அக்காலகட்டத்தில் ஆபிரிக்காவிலிருந்து மக்கள் கால்நடையாக, தலைமுறை தலைமுறையாக, நீண்ட தொலைதூரங்களுக்கு இடம்பெயர்ந்திருப்பார்களா? என்ற கேள்வியும் எழுகிறது. 1891ஆம் ஆண்டில் இந்தோனேசியாவின் ஜாவா தீவில் கண்டுபிடிக்கப்பட்ட மண்டை ஓடு (ஜாவா மனிதன்), இற்றைக்கு 1,490,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆபிரிக்க ஹோமோ இரக்டஸ் (Homo Erectus) மனிதனின் மண்டையோடு என உடற்கூறு ஆய்வுகள் திட்டமாகத் தெரிவிக்கின்றன (Encyclopaedia Britannica: Java Man).

காலக்கணிப்பு

கடந்த காலங்களில் இந்தியாவின் கீழைப் பழங்கற்கால ஆரம்பகாலம் அச்சூலியன் வகை ஆயுதங்களின் வயதைக் கொண்டே கணிக்கப்பட்டது. அறிவியல் ரீதியிலான கதிரியக்கக் காலக்கணிப்புகள் (Radiometric Datings) மேற்கொள்ளப்படாத காலத்தில், இந்திய உபகண்டத்தில் புரூஸ் புட் கண்டெடுத்த அச்சூலியன் வகைக் கருவிகள் அதே வகையான ஆபிரிக்கக் கருவிகளுடன் ஒப்பீடு செய்யப்பட்டு (CrossMatching Technique), 1.5 மில்லியன் (15 லட்சம்) ஆண்டுகளுக்கு முற்பட்டவை என ஒப்பீட்டு ரீதியாகக் கணிக்கப்பட்டது.



அத்திரம்பாக்கத்தில் 1863இல் புரூஸ் புட் கண்டெடுத்த ஹோமோ இரக்டஸ் மனிதர்கள் உபயோகித்த கல்லாயுதங்கள். இவற்றில் கண்ட அச்சூலியன் வகைக் கோடரிகளைக் கொண்டு இக்கற்கருவிகளின் வயது 1.5 மில்லியன் எனக் கணிக்கப்பட்டது.

சமீபகால ஆய்வுகள் இந்தியக் கீழைப் பழங்கற்காலம் இற்றைக்கு இரண்டு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பமானதாகத் தெரிவிக்கின்றன. கதிரியக்கக் காலக் கணிப்புகளின்படி, இந்தியக் கீழைப் பழங்கற்காலம் இ.மு. 380,000 ஆண்டுக்காலம் வரை நீடித்ததாக சாந்தி பப்பு குழுவினரும் (Kumar, Akilesh et al. 2003; Tariach, G. 2018), இ.மு. 125,000 ஆண்டுக்காலம் வரை நீடித்திருந்ததாக மிஷ்ராவும் (Mishra, S. et al. 1995a; 1995b) கூறியுள்ளனர். இந்தியாவில் மகாராஷ்டிரத்தில் போறி (Bori) என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட அச்சூலியன் வகைக் கோடரி, பொட்டாசியம்ஆர்கன் கதிரியக்கத் திகதிக்கணிப்புப்படி (K/Ar Dating), இ.மு. 670,000 ஆண்டிற்கு உரியதாகக் கணிக்கப்பட்டிருக்கிறது.

கீழைப்பழங்கால மக்களின் வாழ்வியல்

கீழைப் பழங்காலத்தில் இந்திய உபகண்டத்தில் வாழ்ந்த மக்கள் ஹோமோ இரக்டஸ் மனித இனங்களைச் சேர்ந்தவராவர். இவர்களிடம் பேச்சு வன்மை இருக்கவில்லை. உறுமல்களாலும், சைகைகளாலும் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்வதற்கும், கூட்டாகச் சேர்ந்து வேட்டையாடுவதற்கும், ஓர் ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்க்கை நடத்துவதற்கும், மூலக் கற்பாளங்களைத் தெரிவு செய்து அதிலிருந்து தேவையான கல்லாயுதங்களையும் கருவிகளையும் செய்வதற்கும் வேண்டிய அறிவுத் திறனும் ஆற்றலும் அவர்களிடையே இருந்தது.

உணவு

கீழைப்பழங்கால மக்கள் தங்கள் உணவிற்காகக் கல்லாயுதங்களைக் கொண்டு மிருகங்களை வேட்டையாடியும், கிழங்குகள், பழங்கள், விதைகள் ஆகியவற்றைச் சேகரித்தும் உட்கொண்டார்கள். மற்றைய மிருகங்கள் கொன்றுபோட்ட விலங்குகளின் இறைச்சிகளையும் எலும்புகளையும் கூட உட்கொண்டிருக்கலாம். கடற்கரைகளிலும் ஆற்றங்கரைகளிலும் வாழ்ந்தவர்கள் மீன்களையும் உணவாகக் கொண்டார்கள்.

நெருப்பு

ஹோமோ இரக்டஸ் மக்கள் ஆபிரிக்காவிலிருந்து இடம்பெயர்ந்த நாட்களிலேயே நெருப்பின் உபயோகத்தைப் பற்றி அறிந்திருந்தார்கள். காய்ந்த குச்சிகளை ஒன்றோடு ஒன்று உரசி நெருப்பை உண்டாக்கும் கலையை அறிந்திருந்தார்கள். வேட்டையாடிய விலங்கினங்களைக் கற்கத்திகளால் வெட்டி, கற்தட்டுகளில் போட்டும், மரக் குச்சிகளில் இணைத்தும் நெருப்பில் வாட்டி உட்கொண்டார்கள். இதன் காரணமாகப் பச்சை ஊனிலிருந்து உண்டாகக்கூடிய நோய்களிலிருந்தும் தங்களைக் காத்துக்கொண்டார்கள். திறந்த வெளிகளில் வாழ்ந்தவர்கள் இரவு நேரங்களில் நெருப்பை எரித்து, அதைச் சுற்றிவர உறங்கியதன் மூலம் கொடிய மிருகங்களிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொண்டார்கள்.

வதிவிடங்கள்

இம்மக்கள் திறந்த வெளிகளிலும், ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலும், கடற்கரைகளிலும், மலைக்குகைகளிலும், பாறை ஒதுக்குகளிலும் வாழ்ந்து வந்திருப்பதை அவ்விடங்களில் காணப்படும் அவர்கள் உபயோகித்த கல்லாயுதங்களைக் கொண்டு அறிய முடிகிறது. மத்தியப் பிரதேசத்திலுள்ள பிம்பேத்கா குகைகளிலும், சென்னைக்கு சமீபமாக உள்ள குடியம் குகைகளிலும் பல நூற்றாண்டுகளாக மக்கள் குடிகொண்டிருந்ததற்கான சான்றுகள் காணப்படுகின்றன.

தெப்பம் - கட்டுமரம்

இற்றைக்கு 800,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மரங்களைச் சேர்த்து, கயிற்றால் கட்டி, அதைக் கட்டுமரமாக மிதக்கவிட்டு ஆற்றைக் கடக்கவும், கரைக் கடல்களில் சென்று கூராக்கப்பட்ட கம்புகளைக் கொண்டு மீன் பிடிக்கவும் கீழைப்பழங்கால மக்கள் அறிந்திருந்தார்கள்.

மத்திய பழங்கற்காலம்

பகுதி -3

தொல்லியலாளர்கள் பொதுவாக மத்திய பழங்கற்காலம் கீழைப் பழங்கற்காலத்தின் வளர்ச்சியே எனக் கொண்டாலும், இக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட கருவிகள், அவற்றை ஆக்குவதில் கடைப்பிடிக்கப்பட்ட நெறிமுறைகள், பயன்பாடு ஆகியவற்றை நோக்குமிடத்து, கீழைப் பழங்கற்காலத்திலிருந்து மாறுபட்ட ஒரு சூழலிலே இக்கால மனிதன் வாழ்ந்திருந்தது புலனாகிறது. கீழைப் பழங்கற்காலக் கருவிகளை ஆக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட பிரதான கல்லின வகையான குவாட்சயிட்டை விட மென்மையான கல்லின வகைகளான ஜஸ்பர் (Jasper), சேட் (Chert), அகேற் (Agate), சல்செடனி (Chalcedony) ஆகிய மூலக் கற்களே இவர்களால் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனாலும், கைக்கோடரி போன்ற பெரிய கனதியான கல்லாயுதங்கள் செய்வதற்கு கடினமான கல்லான குவாட்சயிட் (Quartzite) தேவையாக இருந்தது. மேலும், அதன் வெட்டும் பக்கங்களை மட்டும் செப்பனிட்டால் போதுமானது. செதுக்கல், உரித்தல் போன்ற வேலைகளுக்கு மென்மையான கற்களை வெட்டியெடுத்த மெல்லிய கற்கள் தேவைப்பட்டன.

கடினமான குவாட்சயிட் கல்

இவ்வாறு மென்மைத் தன்மை வாய்ந்த கற்களைத் தேர்ந்தெடுத்தமை, மனிதன் தன்னைச் சுற்றியிருந்த சூழல் பற்றிய அறிவில் முந்தைய காலத்தைவிட கூடிய அக்கறை கொண்டிருந்தமையை எடுத்துக்காட்டுகிறது. இதனால், இக்காலத்தில் முந்தைய காலத்தைவிடச் சூழலில் மனிதனது தாக்கம் கூடிக் காணப்பட்டது. செதுக்கல், உரித்தல் போன்ற கருவிகளைத் தயாரிக்க மென்மையான கல்லினங்கள் வேண்டியிருந்தாலும், இத்தோடு கனதியான கைக்கோடரி போன்ற கற்கருவிகள் தயாரிக்க குவாட்சயிட் கல்லின வகைகளும் பயன்படுத்தப்பட்டன. இவ்வாறு பயன்படுத்தப்பட்ட பிரதேசங்களில் தமிழகமும் ஒன்றாகும்.

மத்திய பழங்கற்காலக் கருவிகளாக விளங்குபவை பல்வகை வடிவங்களில் அமைந்த செதுக்கல் அல்லது சுரண்டு கருவிகள் (Scrapers), துளைக் கருவிகள் (Borers), கூர்க்கருவிகள் (Points) என்பனவாகும். இச்செதுக்கற் கருவிகள் மரப் பட்டைகளை உரிப்பதற்கும், மிருகங்களின் தோலைச் செப்பனிடுவதற்கும், சிறுசிறு மரத்துண்டுகளை அழுத்தம் செய்வதற்கும் பயன்பட்டன. இதனால், இக்கால மனிதன் மரவுரி, மிருகத்தோல் ஆகியவற்றை தனது உடையாகப் பயன்படுத்தியிருக்கலாம். செதுக்கற் கருவிகள் பல்வேறு வடிவங்களில் அமைக்கப்பட்டிருந்தன. இவை முறையே நுனி, பக்கம், முழுவடிவம், கோண வடிவம் போன்ற பகுதிகளில் செப்பனிட்டுப் பயன்படுத்தப்பட்டவை ஆகும். கூர்க்கருவிகளின் முனைகள் மட்டும் கூர்மையாக இல்லாது, அவற்றின் பக்கங்களான கோண வடிவம், இலை வடிவம் ஆகிய பகுதிகளும் கூர்மையாக அமைக்கப்பட்டுள்ளன. சில கூர்க்கருவிகளில் சிறு கைப்பிடிகளும் காணப்படுகின்றன (சிற்றம்பலம், சி.க. 1999: 46).

இற்றைக்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் அத்திரம்பாக்கத்தில் அகழாய்வுகளை மேற்கொண்ட சாந்தி பப்பு, அகிலேஷ் குமார், ஹரேஷ் ராஜபாரா ஆகிய ஆய்வாளர்கள் 7,200க்கும் மேற்பட்ட பழங்கற்காலக் கல்லாயுதங்களைக் கண்டெடுத்திருக்கிறார்கள். இவற்றின் வெப்பேற்று ஒளிவீச்சு (Thermoluminescence) காலக்கணிப்புகள், இக்கல்லாயுதங்களின் காலத்தை இற்றைக்கு 385,000±64,000 ஆண்டுகளுக்கு முன்னர் எடுத்துச் செல்கின்றன (Kumar, Akilesh et al. 2003). இவை மத்திய பழங்கற்காலத்திற்குரிய கற்கருவிகளாகும்.



அத்திரம்பாக்க அகழ்வுகளில் கண்ட 'லெவலோயி' வகை கருவிகள்: 12: லெவலோயி செதிள்கள் (Levallois Flakes); 34: லெவலோயி முனைகள் (Leval lois Points). நன்றி: அகிலேஷ் குமார்

கீழைப் பழங்காலத்தின் இறுதிக் கட்டத்திலே, தான் விரும்பிய கருவியைப் படைக்க முனைந்த மனிதன் கற்களைச் செப்பனிடும் போது அதிலிருந்து சிதறும் செதிள்களையும் கருவிகளாக உபயோகிக்க முற்பட்டான். ஒரு கல்லைச் செம்மையாகச் சீர் செய்வதன் மூலம் பல ஆயுதங்களை ஆக்கும் கலையைக் கற்றுக்கொண்டான். இத்தகைய பாணி 'லெவலோசியன்' (*Levalloisian*) பாணி முறை என்றும், அக்கருவிகள் 'லெவலோயி' வகைக் கருவிகள் என்றும் அழைக்கப்படுகிறது.

சாந்திபப்பு குழுவினர் அத்திரம்பாக்கத்தில் கண்டெடுத்த இக்கல்லாயுதங்களில் உபயோகிக்கப்பட்ட 'லெவலோயி தொழில்நுட்பம்' - கற்களைச் செதுக்கி எடுக்கும் ஒரு முறை (*Levallois Technology: A Method of Stone Knapping*) - 380,000 ஆண்டுகளுக்கு முன்னர் அச்சூலியன் பண்பாடு முடிவுக்கு வந்து, மத்திய பழங்கற்காலம் ஆரம்பமான காலப்பகுதிக்குரியதாகும் (Tariach, G. 2018). அக்காலத்தில் இந்த மாதிரியான கல்லாயுதங்கள் ஐரோப்பாவில் நியண்டதால் மனிதர்களாலும், நடுநிலக்கரை (*Levant*) வாசிகளாலும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. அத்திரம்பாக்கத்தில் 200,000 ஆண்டுகளுக்கு மேலாக இக்கற்கருவிகள் தயாரிக்கப்படும் தொழில்துறை இயங்கி வந்ததாகக் கணிக்கப்படுகிறது (Tariach, G. 2018).

மத்திய பழங்கற்காலக் கருவிகளை நோக்குமிடத்து, இவை கீழைப் பழங்கற்காலக் கருவிகளிலிருந்து தோற்றம், பயன்பாடு ஆகியனவற்றில் மட்டுமின்றி, அவற்றை ஆக்க உதவிய கல் வகைகளிலும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. தோற்றத்தில் சிறியனவான இக்கருவிகள் அழகாக, கலையம்சம் மிகுந்து காணப்படுகின்றன. இவற்றோடு தனிக் கற்களில் தயாரிக்கப்பட்ட கைக்கோடரிகள், வெட்டுக்கருவிகள், பிளத்தல் கருவிகளும் குறைந்த எண்ணிக்கையில் காணப்படுகின்றன. கீழைப் பழங்காலப் பண்பாட்டை முழுக்கற்களிலே வடிக்கப்பட்ட கருவிகளைக் கொண்ட பண்பாடு என்றும், மத்திய பழங்காலப் பண்பாட்டை செதிள் கற்களினாலே ஆக்கப்பட்ட கருவிகளைக் கொண்ட பண்பாடு என்றும் அழைக்கலாம் (Sankalia, H.D. 1974).

கீழைப் பழங்கற்கால அச்சூலியன் பாணிக் கருவிகள் அத்திரம்பாக்கத்தில் கோர்த்தலை ஆற்றின் முதல் படுகையில் கண்டுபிடிக்கப்பட்டதை ஏற்கனவே பார்த்தோம். அதன் இரண்டாவது ஆற்றுப் படுகையில், புத்தமனுவங்கா என்ற இடத்தில், மத்திய பழங்கற்காலக் கருவிகளான செதிள் கருவிகள், கூர்க்கருவிகள், துளைக் கருவிகள் ஆகியன காணப்படுகின்றன. இவற்றோடு சமாந்தரமாக நீளமுள்ள அகலம் குறைந்த கல்தகடுகளிலமைந்த சிறு கருவிகளும் காணப்படுகின்றன (Sankalia, H.D. 1974).

குடியம் குகைப்பகுதியில் கே.டி. பனர்ஜி தலைமையில் 1962-63, 1963-64ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் இரண்டாவது அகழ்வாய்வுக் குழியில் கூழாங்கற்களிலமைந்த கருவிகள், இருபக்க முனைகளைக் கொண்ட கற்றகடுகள், செதுக்கல் கருவிகள் ஆகியன வெளிவந்தன. மூன்றாவது அகழ்வாய்வுக் குழி கிருஷ்ணபுரம் என்ற ஊருக்கருகில் அமைக்கப்பட்டது. இதில் அச்சூலியன் பாணியிலமைந்த கருவிகளோடு கூர்க்கருவிகள், செதுக்கல் கருவிகள், செதிள் கருவிகள், தட்டு வடிவக் கருவிகள் (*Discoids*), வெட்டுதல் கருவிகள் ஆகியன கிடைத்துள்ளன. இவை பளிங்குக் கற்களினால் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது (Ramachandran, K.S. 1980: 22; இராசவேலு-திருமூர்த்தி 1995).

மத்திய பழங்கற்காலக் கருவிகள் தென் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் கிடைத்துள்ளன. மதுரைக்குத் தெற்கே பதினைந்து மைல் தொலைவிலுள்ள மறத்தாற்றுக் கரையிலுள்ள பட்டுப்பட்டி, சிவராமப் பேட்டை ஆகிய இடங்களில் இக்கருவிகள் சிறப்பாகத் தயாரிக்கப்பட்டனவாகக் காணப்படுகின்றன (Raman, K.V. 1969-70).

மத்திய பழங்கற்காலம் இந்தியாவில் கி.மு. 50,000 ஆண்டளவில் தோன்றி கி.மு. 20,000 ஆண்டளவில் முடிவுற்றது என முன்பு கருதப்பட்டது (Sankalia, H.D. 1974). ஆனால், சமீபகாலக் கதிரியக்கக் காலக்கணிப்புகள் இந்திய மத்திய பழங்கற்காலம் இற்றைக்கு 3,85,000 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பமாகி இற்றைக்கு 40,000 ஆண்டுகளுக்கு முன்னர் வரை நீடித்திருப்பதாக அறியத்தருகின்றன (Kumar, A. et al. 2003; Mishra, S. 1995). ஆபிரிக்க மத்திய பழங்கற்காலம் ஹோமோ சேப்பியன்ஸ் மனிதர்களுடன் இணைக்கப்படுகிறது.

இந்தியாவில் இக்காலகட்டத்தில் முதலில் ஹோமோ இரக்டஸ் மனிதர்களும், இற்றைக்கு 68,00065,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்து நவீன ஹோமோ சேப்பியன்ஸ் மனிதர்களும் வாழ்ந்திருந்தார்கள் என அறிய முடிகிறது. அவர்களது எலும்புப் படிவுகள் கிடைக்காதபடியினால் இந்தியாவில் ஹோமோ இரக்டஸ் இனம் எந்தக் காலம்வரை வாழ்ந்தார்கள் என அறிய முடியவில்லை. இவ்விரு வகையான மனித

இனங்களும் ஒரே சமயத்தில் தென்னாசியாவில் வாழ்ந்திருந்ததால் பேச இயலாத ஹோமோ இரக்டஸ் இனத்தின் அழிவு பேச்சு வன்மை கொண்ட நவீன மனிதர்களால் ஏற்பட்டிருக்கலாம் (*If both species overlapped in time, that would raise the possibility that our species might have driven our ancient cousins extinct*). மேற்கொண்ட புதைப்படிவுகளின் திகதிக்கணிப்பு ஆய்வுகளின்படி, அங்கே இறுதியாக வாழ்ந்த ஹோமோ இரக்டஸ் மனித இனம் இற்றைக்கு 117,000-108,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கணிக்கப்பட்டிருக்கிறது (Choi, C.Q. 2019; Rizal, Y. et al. 2020).

மேலைப் பழங்கற்காலம்

கற்கால வரலாற்றில் அதன் தனிச் சிறப்பியல்புகள் சிறந்து காணப்படும் காலம் மேலைப் பழங்கற்காலமாகும். இக்காலம்தான் சிந்திக்கும் திறன் படைத்த 'ஹோமோ சேப்பியன்ஸ்' மனித வர்க்கம் ஐரோப்பாவிற்கும், தென் ஆசியாவுக்கும் பரவிய காலமுமாகும். இந்த மனித வர்க்கத்தின் சிறப்பியல்புகளை ஐரோப்பாக் கண்டத்திலே தான் முழுமையாகக் காண முடிகிறது.

கீழைப் பழங்கற்காலத்தில் முழுக் கற்களிலுமே கருவிகளைச் செய்த மனிதன், மத்திய பழங்கற்காலத்தில் செதிள்களைப் பயன்படுத்தி கருவிகளை ஆக்கிய மனிதன், மேலைப் பழங்கற்காலத்தில் பல சமாந்தரமான பக்கங்களையுடைய சிறிய நீளமான கற்றகடுகள் (*Blades*) வரும் வண்ணம் கல்லைத் தயார் செய்து ஒரே முறையில் பல தகடுகளை வடித்தெடுக்கக் கற்றுக்கொண்டான்.

அழகான இத்தகட்டுக் கருவிகள் இக்கால மனிதன் இவற்றை ஆக்குவதில் பெற்றிருந்த கைவண்ணத்தினை எடுத்துக் காட்டுவதோடு, குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் வண்ணம் வடிக்கப்பட்ட கருவிகளாகவும் காணப்படுகின்றன. இதனால், இக்கருவிகள் தனிச்சிறப்புப் பொருந்திய கருவிகள் (*Specialised Tools*) என அழைக்கப்படுகின்றன (சிற்றம்பலம், சி.க. 1990). இவை தவிர, ஸ்பெயின், பிரான்ஸ் போன்ற நாடுகளிலுள்ள கற்குகைகளில் காணப்படும் குகை ஓவியங்கள் இக்கால ஐரோப்பிய மேலைப் பழங்கற்காலத்திற்குச் சிறப்புத் தருவன எனலாம். இவற்றுடன், இக்கால மனிதர்களின் கைவண்ணத்தில் உருவான பொம்மைகளும், எலும்புகளால் செய்யப்பட்ட உருவங்களும் இதற்குச் சான்றாக அமைகின்றன.



பிரான்ஸ் தேசத்திலுள்ள லஸ்கோக்ஸ் குகையில் காணப்படும் உயிர்த்துவமான மிருக ஓவியங்கள்.

1970ஆம் ஆண்டுகள் வரை இந்தியாவில் மேலைப் பழங்கற்காலக் கற்கருவிகள் கண்டெடுக்கப்படவில்லை. இதனால், மேலைப் பழங்கற்காலத்திற்கான தடயங்கள் இந்தியாவில் காணப்படவில்லை என்றும், கீழைப் பழங்கற்காலம், மத்திய பழங்கற்காலம் ஆகியவற்றைத் தொடர்ந்து இடைக்கற்காலம் தோன்றிவிட்டது என்றும் கூறப்பட்டது. ஆனால், 1970ஆம் ஆண்டு முதலாக நடைபெற்ற ஆய்வுகள் மேலைப் பழங்கற்காலத்திற்கான தடயங்கள் இந்தியாவிலும் உள்ளன என்பதை எடுத்துக்காட்டியுள்ளன. இதைக் கொண்டு, இக்காலம் 'கி.மு. 20,000 ஆண்டளவில் தோன்றி, கி.மு. 10,000 ஆண்டுகள் வரை நீடித்திருக்கலாம்' என சங்கேலியா கருதினார் (Sankalia, H.D. 1970).

சமீபகாலத்திய கதிரியக்கக் காலக்கணிப்புகள் இந்திய மேலைப் பழங்கற்காலம் இற்றைக்கு 40,000 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பமாகிவிட்டதாக அறியத்தருகின்றன (Mishra, S. 1995). தர்மபுரி, தாரங்கோன், சந்திரசால், மெஹதக்கேரி, நக்தா ஆகிய வடஇந்திய இடங்களில் கண்ட மேலைப் பழங்கற்காலக் கற்கருவிகளில் மேற்கொள்ளப்பட்ட கதிரியக்க ஆய்வுகள் (*Radiometric Datings*) இவற்றின் காலத்தை இற்றைக்கு 40,000 ஆண்டுகளுக்கு முன்பு எடுத்துச் செல்கின்றன.

தென்னிந்தியாவில், குறிப்பாக ஆந்திர மாநிலத்தில், மேலைப் பழங்கற்கால மனிதன் வாழ்ந்ததற்கான தடயங்கள் வடதமிழ்நாட்டுக்குச் சமீபமாக உள்ள ரேனிகுண்டாவுக்கு அண்மையில் உள்ள குகைகளில் கிடைத்துள்ளன. இக்குகைகளில் இக்காலக் கருவிகளும், எலும்பாயுதங்களும், மனிதனால் பயன்படுத்தப்பட்ட பலவகை மிருக எலும்புகளும் கிடைத்திருக்கின்றன (Murty, M.L.K. 1970).

இலங்கையில் கற்கால மனிதர்கள்
பழைய கற்காலம்

இந்தியாவில் இ.மு. 1,800,000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மனித இனங்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன (Mishra, S. 1995b: 1116). நெடுங்காலமாக இலங்கையும் இந்தியாவும் நிலத்தொடர்பு கொண்டிருந்தமையால், இலங்கையிலும் இக்காலகட்டத்திற்குரிய மனித எச்சங்கள் வருங்காலத்தில் கண்டுபிடிக்கப்படலாம். இன்றைய தொல்லியல் ஆய்வுகளின்படி, இ.மு. 125,000 ஆண்டுகளுக்கு முன்னரிருந்து இலங்கையில் மக்கள் வாழ்ந்திருந்தமைக்கான வலுவான ஆதாரங்கள் காணப்படுகின்றன (Deraniyagala, S.U. 1996: 277-285). இற்றைக்கு 125,000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மக்கள் பழைய கற்காலத்தைச் சேர்ந்த மக்களாவர்.

ஹோமோ சேப்பியன்ஸ் எனப்படும் நவீன மனிதன் இலங்கையை வந்தடைந்த காலப்பகுதி கி.மு. 68,000 65,000 ஆகையால், இலங்கையில் வாழ்ந்த பழைய கற்கால மனிதர்களில் ஒரு பகுதியினர் ஹோமோ இரக்டஸ் இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்திருப்பர். கி.மு. 50,000 ஆண்டுகாலப் பகுதியில் ஹோமோ இரக்டஸ் இனம் முற்றாக அழிந்துபோயிற்று.

வடஇலங்கையில் முல்லைத்தீவின் வடபகுதியிலிருந்து வடக்குவடமேற்காகப் பரந்தன், பூநகரி, மாந்தை, புத்தளம், குதிரைமலை வரை கடற்கரையோரமாகப் பரந்திருக்கும் தேரிமேடு, இரணைமடு அமைப்பு (Iranamadu Formation) என அழைக்கப்படுகிறது. இந்த மேடுகள் - பரந்து கிடக்கும் சரளைக்கற்களுக்கு (Gravel) மேலுள்ள களிமண் கலந்த மணல் மேடுகள் - பல்லாயிரம் ஆண்டுகால சீதோஷ்ண தட்பவெப்பத்தில் சிவப்பு நிறமாக மாற்றம் பெற்றிருக்கின்றன. இந்த இரணைமடு மணல் மேடுகளில் இற்றைக்கு 125,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம் முதல் இடைக்கற்காலம் வரை பழைய கற்கால மக்கள் வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் - முக்கியமாக, அவர்கள் உபயோகித்த கற்கருவிகள் - காணப்படுகின்றன (Deraniyagala, S.U. 1992: 686-688).

இக்கால மக்கள் தமது ஆகாரத்திற்காக நாடோடிகளாக இடம்விட்டு இடம்சென்று வேட்டையாடியும், கடற்கரைகளிலும் ஆற்றங்கரைகளிலும் மீன்பிடித்தும் வாழ்ந்தமையால், இவர்கள் விட்டுச்சென்ற எச்சங்கள் ஆற்றங்கரைகளிலும் கடற்கரைகளிலும் காணப்படுகின்றன. இவர்கள் உபயோகித்த மற்றைய பாவனைப் பொருட்களும், உடுத்திய உடுப்புகளும், ஏன் - அவர்களின் எலும்புக்கூடுகளும் - அழிவுற்றுப் போனபின், முக்கியமாக எஞ்சியிருப்பவை அவர்கள் விட்டுச்சென்ற கற்கருவிகளே ஆகும்.

ஆதியில் வன்னிப்பகுதியில் வாழ்ந்த மக்கள் விட்டுச்சென்ற கல்லாயுதங்களும், கல்லுபகரணங்களும் கடற்கரையோரமாகக் காணப்படும் இரணைமடு தேரிமணற் குன்றுகளிடையே காணப்படுகின்றன. ஆரம்பகாலத்தில் இயற்கையாகக் கிடைத்த கற்களை உபயோகித்த மனிதன் பின்னர் இந்நிலையிலிருந்து ஒருபடி முன்னேறித் தனது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பலவாறு அவற்றைச் செப்பனிடத் தொடங்கினான். இவ்வாறு செய்யும் போது முழுக்கல்லையும் செப்பனிடுவதற்குப் பதிலாக, தனது தேவைக்காகப் பயன்படுத்தும் முனையை மட்டுமே செப்பனிட்டான்.



இலங்கையில் வடக்கு-வடமேற்காக முல்லைத்தீவிலிருந்து குதிரைமலை வரை தொடர்ந்து செல்லும் இரணைமடு தேரிமணற் தொடர். இலங்கையில் ஆதிமனிதர்கள் வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் இந்தச் செம்மணற் குன்றுகளினிடையே காணப்படுகின்றன. வரைபடம்: நன்றி - Dr S.U. Deraniya gala.

இயற்கையாக ஆற்றோரங்களிலும் மற்ற இடங்களிலும் பாறையாகக் காணப்பட்ட 'குவார்ட்ஸ்' (Quartz) கற்களைக் கொண்டே இக்கருவிகள் பெரும்பாலும் உருவாக்கப்பட்டன. இப்பாறைகளை நெருப்பைக் கொண்டு சூடாக்கி, பின்னர் அவற்றின் மேல் நீரை ஊற்றியோ அல்லது மற்றொரு பெருங்கல்லால் அடித்தோ பிளக்க வைத்து, பின்னர் அவற்றை உடைத்து வேண்டிய ஆயுதங்களை இவர்கள் செய்திருக்கிறார்கள் (Allchin, B & Allchin, R. 1968: 96-99). இவ்வாறு பாறையை உடைக்கும்போது வெடித்துச் சிதறும் செதிள்கள் (Flake Tools) மிகவும் கூர்மையாக இருப்பதனால், சவரம் செய்வதற்கும் நுணுக்கமாக வெட்டுவதற்கும் இவை

உபயோகப்படுத்தப்பட்டன. முழுக்கற்களையும் சிறப்பாகச் செப்பனிட்டு கைக்கோடரிகள் (Hand Axe) தயாரிக்கப்பட்டன. தட்டைக் கற்களைக் கொண்டு பிளப்பிகள் உருவாக்கப்பட்டன. கைக்கோடரிகளும் பிளத்தற் கருவிகளும் மரங்களை வெட்டுவதற்கும், மிருகங்களைக் கொன்று இறைச்சியை வெட்டி எடுப்பதற்கும், நிலத்தில் விளையும் கிழங்கு வகைகளை அகழ்ந்து எடுப்பதற்கும் உபயோகிக்கப்பட்டன.



இரணைமடு தேரி மணற்குன்றுகளினிடையே கண்டெடுக்கப்பட்ட பழைய கற்கால கருவிகள், உபகரணங்கள் நன்றி - Dr S.U. Deraniyagala.

பழைய கற்கால மக்கள் 20 முதல் 40 பேரைக் கொண்ட குழுக்குடும்பமாக, 50 சதுர மீட்டர் அளவான ஓரிடத்தில் தங்கி, வேட்டையாடியும் உணவு சேகரித்தும் வாழ்ந்தார்கள் எனக் கணிக்கப்படுகிறது. இவர்களது பிரதான தொழிலாக வேட்டையாடுதல் அமைந்திருந்தாலும், தமது உணவிற்காக மிருகங்களின் இறைச்சியோடு மீன், கிழங்கு வகைகள், பழவகைகள் ஆகியவற்றையும் உட்கொண்டனர். ஓரிடத்தில் உணவு குறைந்ததும் கூட்டமாக வேறிடம் சென்று இவர்கள் தங்கினார்கள். வட இலங்கையின் உலர்ந்த வலயத்தில் (வன்னிப்பகுதி) ஒரு சதுர கிலோமீட்டருக்கு 0.8 மனிதர்கள் வரை வாழ்ந்தார்கள் எனக் கணக்கிடப்படுகிறது. கடலிலிருந்து கிடைக்கும் கடலுணவுகளின் தாராளத்தால் இலங்கையின் வடக்குகிழக்குக் கடற்கரையோரங்களில் சதுர கிலோமீட்டருக்கு 1.5 பேர்கள் வரை வாழ்ந்தார்கள் (Deraniyagala, S.U. 1996: 277-285).

உணவு

பழைய கற்கால மக்கள் தங்கள் உணவிற்காகக் கல்லாயுதங்களைக் கொண்டு மிருகங்களை வேட்டையாடியும், கிழங்குகள், பழங்கள், விதைகள் ஆகியவற்றைச் சேகரித்தும் உட்கொண்டார்கள். மற்றைய மிருகங்கள் கொன்றுபோட்ட விலங்குகளின் இறைச்சிகளையும் எலும்புகளையும் கூட உட்கொண்டிருக்கலாம். கடற்கரைகளிலும் ஆற்றங்கரைகளிலும் வாழ்ந்தவர்கள் மீன்களையும் உணவாகக் கொண்டார்கள்.

நெருப்பு

ஹோமோ இரக்டஸ் மக்கள் ஆபிரிக்காவிலிருந்து இடம்பெயர்ந்த நாட்களிலேயே நெருப்பின் உபயோகத்தைப் பற்றி அறிந்திருந்தார்கள். காய்ந்த குச்சிகளை ஒன்றோடு ஒன்று உரசி நெருப்பை உண்டாக்கும் கலையை அறிந்திருந்தார்கள். வேட்டையாடிய விலங்கினங்களைக் கல்கத்திகளால் வெட்டி, கல்தட்டுகளில் போட்டும், மரக்குச்சிகளில் இணைத்தும் நெருப்பில் வாட்டி உட்கொண்டார்கள். இதன் காரணமாக, பச்சை ஊனிலிருந்து உண்டாகக்கூடிய நோய்களிலிருந்தும் தங்களைப் பாதுகாத்துக் கொண்டார்கள். திறந்த வெளிகளில் வாழ்ந்தவர்கள் இரவு நேரங்களில் நெருப்பை எரித்து, அதைச் சுற்றிலும் உறங்கியதன் மூலம் கொடிய மிருகங்களிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொண்டார்கள்.

வதிவிடங்கள்

இரணைமடு கடற்கரை தேரி மேடுகளைத் தவிர, இம்மக்கள் திறந்த வெளிகளிலும், ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலும், கடற்கரைகளிலும், மலைக்குகைகளிலும், பாறை ஒதுக்குகளிலும் வாழ்ந்து வந்திருப்பதை அவ்விடங்களில் காணப்படும் அவர்கள் உபயோகித்த கல்லாயுதங்களைக் கொண்டு அறிய முடிகிறது. தென்னிலங்கையில் உள்ள பாதாதொம்ப லென, பெலி லென குகைகளிலும் பல நூற்றாண்டுகளாக மக்கள் குடிகொண்டிருந்ததற்கான சான்றுகள் காணப்படுகின்றன.

தெப்பம் - கட்டுமரம்

இற்றைக்கு 800,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மரங்களைச் சேர்த்துக் கயிற்றால் கட்டி, அதைக் கட்டுமரமாக மிதக்கவிட்டு ஆற்றைக் கடக்கவும், கரைக்கடல்களில் சென்று கூராக்கப்பட்ட கம்புகளைக் கொண்டு மீன்பிடிக்கவும் இந்திய உபகண்டத்தின் பழங்கற்கால மக்கள் அறிந்திருந்தார்கள். அந்த அறிவு இலங்கையில் வாழ்ந்த பழங்கற்கால மனிதர்களுக்கும் இருந்திருக்கும்.

இடைக்கற்காலம்

பழைய கற்கால மக்களைப் போன்று இடைக்கற்கால மக்களினதும் பிரதான தொழில்களாக வேட்டையாடுதல், மீன்பிடித்தல், உணவு சேகரித்தல் போன்ற தொழில்களே அமைந்தன. ஆனால், பழைய

கற்கால மனிதனைவிட இவனது வாழ்க்கை சற்று முன்னேற்றமடைந்து காணப்படுகிறது. ஆதியில் நாடோடியாகத் திரிந்த இம்மனிதன் ஓரளவு தொடர்ந்து ஓரிடத்தில் இருந்தது பற்றியும், தான் வாழ்ந்த சூழலை முன்னரைவிடக் கூர்மையாக அவதானித்து அதை மாற்ற முற்பட்டதையும் அண்மைக்கால ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன (Deraniyagala, S.U. 1992: 686-688).

இக்கால மனிதனால் காடுகள் அழிக்கப்பட்டதை, தாவரங்கள் விட்டுச் சென்ற மகரந்தப்பொடியின் (Pollen) படிவங்கள், எச்சங்கள் ஆகியவை எடுத்துக்காட்டியுள்ளன. இக்காலத்தில் காட்டு மரங்கள் விட்டுச் சென்ற மகரந்தப்பொடியின் எச்சங்கள் எண்ணிக்கையில் குறைய, சிறு பற்றைகள், புல், பூண்டு ஆகியவை விட்டுச் சென்ற மகரந்தப்பொடியின் எச்சங்கள் மேலோங்கிக் காணப்படுவதை ஆதாரமாகக் கொண்டு, இக்கால மனிதன் காட்டை அழித்துச் சூழலை வளப்படுத்த முற்பட்டான் என்ற முடிவுக்கு ஆய்வாளர்கள் வந்திருக்கிறார்கள் (Allchin B. & Allchin R. 1968: 96-99).

பழைய கற்காலத்தில் வாழ்ந்த பெரிய மிருகங்களின் இனங்கள் பெருமளவுக்கு அழிந்துபோக, காடுகளில் காணப்பட்ட மான், மரை, முயல் ஆகிய சிறிய மிருகங்களை வேட்டையாட இக்கால மனிதன் கற்றுக்கொண்டான். கூர்மையாக்கப்பட்ட சிறிய (குறுணி) நுண்கற்களை அம்புகளிலும் ஈட்டிகளிலும் முனையாகப் பொருத்தி, அவற்றைக் கொண்டு வேட்டையாடியதை அறிய முடிகிறது. இப்பண்பாட்டு மக்கள் காட்டுப் புற்களாகத் தோன்றிய பயிர்களிலிருந்து தானியங்களை அறுக்கவும், உணவுப் பண்டங்களைச் சிறு துண்டுகளாக வெட்டவும் தட்டையான 'பிளேட்' போன்ற கல் அலகுகளைப் பயன்படுத்தினார்கள்.

இச்சிறிய கற்கள் நுண்கற்கள் அல்லது குறுணிக் கற்கள் (Microliths) எனத் தொல்லியலாளர்களால் அழைக்கப்படுகின்றன. வட இலங்கையில் பல இடங்களில் காணப்படும் வரலாற்றுக்கு முற்பட்டகாலத் தொல்லியற் சான்றுகள் குறுணிக்கல் பண்பாட்டிற்குரியனவாகும். இதன் காரணமாக இலங்கையின் இடைக்கற்காலத்தை குறுணிக்கற் பண்பாட்டுக் காலம் எனவும் அழைப்பார்கள். இக்குறுணிக் கற்கள் வன்னியில் இரணைமடு தேரிமணற் குவியல்களிலிருந்தும், மாந்தை (மாதோட்டம்), குருந்தன்குளம், பனங்காமம், உருத்திரபுரம், பூநகரி (கல்முனை, மண்ணித்தலை, வெட்டுக்காடு) ஆகிய இடங்களிலிருந்தும் பெறப்பட்டிருக்கின்றன (புஷ்பரட்ணம், ப. 1993: 14).

ஆயுத முனைகளாக உபயோகப்படுத்தப்பட்ட இவ்வகை நுண்கற்கள் 12 செ.மீ. நீளமும், 0.5 செ.மீ. அகலமும் கொண்டு சேட், சக்கிமுக்கிக் கற்களில் (Chert, Quartz) பல வகையான வடிவங்களில் செய்யப்பட்டிருக்கின்றன. நுண்கல் பிராண்டிகள் (Scrapers) 5 செ.மீ. நீளம் கொண்டவை. இந்த நுண்கற்கள் அம்பு நுனிகள், ஈட்டி முனைகள், கைவேலைக் கருவி முனைகள், பிராண்டிகள் மற்றும் பலவகையான கருவிகளின் முனைகளாக உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நுண்கற்கள் வெப்பேற்றுக் கதிரொளிவீச்சுக் காலக்கணிப்புகளின்படி இ.மு. 34,000 ஆண்டுகளுக்கு உரியனவாகக் கணிக்கப்பட்டிருக்கின்றன (Deraniyagala, S.U. 1992).

பூநகரிப் பிராந்தியத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலக் குடியேற்றங்கள் நுண்கற்காலப் பண்பாட்டுடன் தோற்றம் பெற்றதற்கான சில ஆதாரங்கள் கல்முனை, மண்ணித்தலை, வெட்டுக்காடு போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வின் போது கிடைத்துள்ளன. இவ்விடங்களில் இப்பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய சிறிய குவார்ட்ஸ் (Quartz) கல்லாயுதங்களும், குவார்ட்ஸ் கற்களைக் கொண்டு கல்லாயுதங்கள் ஆக்கும் போது ஏற்படும் செதிள்கள் (Flakes) பலவும் கிடைத்துள்ளன. வெட்டுக்காட்டில் இப்பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய மற்றொரு வகையான சேட் (Chert) கற்கள் சில கிடைத்திருக்கின்றன. இவ்விடத்திலிருந்து குவார்ட்ஸ் கல்லாயுதங்களோடு உலோகத்தாலான மீன்பிடிப்பதற்குரிய ஊசியும் (Metal Fishhook) (பிற்காலத்திற்குரியது), 'பிளேட்' போன்ற தட்டையான ஆயுதமும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன (புஷ்பரட்ணம், ப. 1993: 14).

இடைக்கற்கால இலங்கை மக்களின் வாழ்வியல்

இலங்கையின் இடைக்கற்கால மக்கள் வேட்டையாடி, உணவு சேகரித்து வாழ்க்கை நடத்திய மக்கள். நுண்கற் பண்பாட்டைப் பேணிய இம்மக்களின் நாளாந்த வாழ்க்கையில் கற்கருவிகளே முக்கிய பங்கு வகித்தன. அவர்களது வாழ்வியலை அவர்கள் விட்டுச் சென்ற கற்கருவிகள் மூலமாகவும், மற்றைய தொல்லியல் சான்றுகள் மூலமாகவும் அனுமானிக்க முடிகிறது. கற்கருவிகளின் வடிவமைப்பையும், வகைகளையும், நுணுக்கப்பாட்டையும் கொண்டு அவற்றைத் தயாரித்த மக்களின் எண்ணங்களையும், அக்கருவிகளை உபயோகப்படுத்தும் நோக்கங்களையும் அறிய முடிகிறது.

இக்கற்கருவிகள் பெரும்பாலும் குவார்ட்ஸ் (Quartz), சேட் (Chert) ஆகிய கற்களிலிருந்தும், மிக அரிதாக யஸ்பர் (Jasper) கற்களிலிருந்தும் வடிவமைக்கப்பட்டிருந்தன (Deraniyagala, S.U. 1992:

266-70; 688-94; 2004: 8). இடைக்கற்கால மக்களின் முக்கியமான தொழில்நுட்ப முன்னேற்றம், அவர்கள் வேட்டையாடுவதற்காகக் கண்டுபிடித்த அம்பும் வில்லுமாகும். அம்பு நுனிகளில் உபயோகித்த குறுக்குத்தலை அம்புநுனிகள் (Transverse Arrowheads) தனித்துவமானதொரு சீர்திருத்தக் கண்டுபிடிப்பாகக் கருதப்படுகிறது. இதைக் கொண்டு முன்னர் வேட்டையாட முடியாத பறவைகளையும் மிருகங்களையும் வேட்டையாட முடிந்தது. நுண்கற்கள் பொருத்தப்பட்ட பலவகையான பல்சினைக் கருவிகள் (Composite Tools) உபயோகப்படுத்தப்பட்டன. பிறைவடிவான நுனி பொருத்தப்பட்ட ஈட்டிகள், முக்கோண நுண்கற்கள் வரிசையாகப் பொருத்தப்பட்ட வாட்கள், கத்திவடிவில் ஆக்கப்பட்ட வளைந்த கற்கள் என்பன இவற்றில் அடங்கும்.



இரணைமடு தேரியில் கண்டெடுக்கப்பட்ட இடைக்கற்கால நுண்கல் ஆயுதங்கள். இவை இ.மு. 28,000 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாகக் கணிக்கப்பட் டு இருக்கின்றன. நன்றி: Dr S.U. Deraniyagala.



இலங்கையில் பாததொம்பலென குகை. இதற்குள் இற்றைக்கு 34,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மனித எலும்புகள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. நன்றி: Lankalibrary.com.

கோல்கள் நட்டு மிருகத் தோல்களால் மூடப்பட்ட தற்காலிகக் கூடாரம்.

நுண்கற்களை இயற்கையான மரப்பிசின் கொண்டு பிளந்த மரச் சட்டங்களினிடையில் பொருத்தி பலசினைக் கருவிகள், வாட்கள் என்பன உருவாக்கப்பட்டன. கற்கள் தவிர எலும்புகளும், கற்களைக் கொண்டு கூராகச் செதுக்கப்பட்ட மரத்தண்டுகளும் ஆயுதங்களாக உபயோகப்படுத்தப்பட்டன. இம்மரத்தண்டுகளைக் கொண்டு ஆற்றிலும், கடற்கரைகளிலும் மீன்களைக் குத்திப் பிடிக்க முடிந்தது.

இடைக்கற்கால மனிதர்கள் பெரும்பாலும் நாடோடிகளாகவும், சிலர் நிரந்தரமாகக் குகைகளிலும் வாழ்ந்தார்கள். திறந்த வெளிகளிலும், ஆற்றோரங்களிலும், கடற்கரைகளிலும், குகைகளிலும் இவர்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் காணப்படுகின்றன. இவர்களது ஆயுதங்கள் குகைகளில் கிடைத்த போதிலும், குகைகளில் இவர்கள் நிரந்தரமாக வாழ்ந்ததற்கான பிற ஆதாரங்கள் காணப்படாதது குறிப்பிடத்தக்கது. ஐரோப்பா, ஆபிரிக்கா போன்ற நாடுகளில் குகைகளில் இவர்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் காணப்படுவதோடு, இவர்களால் அமைக்கப்பட்ட கூடாரங்கள் பற்றிய சான்றுகளும் கிடைத்துள்ளன. இத்தகைய கூடாரங்கள் பெரிய மிருகங்களின் எலும்புகளையோ அல்லது மரத்தண்டுகளையோ கால்களாக நட்டு, அவைகளின் தோலைக் கூரையாக மூடி அமைக்கப்பட்டவையாகும்.

இம்மக்கள் பருவகால மாற்றங்களுக்கு ஏற்ப நாடோடிகளாக இடத்திற்கு இடம் சென்று பலவகைப்பட்ட உணவுகளைச் சேகரித்துள்ளனர். தென்னிலங்கையில் பெலன்பண்டிபலஸ (BellanbandiPa lassa) என்ற இடைக்கற்காலத் திறந்தவெளி மையத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் இம்மக்கள் பலவகைப்பட்ட தானியங்கள், கிழங்கு வகைகள்,

பழங்கள், காட்டு விலங்குகள், மீன் போன்ற கடல் உணவுகள் ஆகியவற்றை உட்கொண்டமை தெரியவந்துள்ளது. இம்மக்கள் இந்த உணவுகளைக் காய வைத்து சேமித்து வைக்கும் பழக்கத்தையும், நெருப்பின் பயன்பாட்டையும் அறிந்திருந்தனர் என்பதையும் அறிய முடிகிறது. அடுத்து, பெலிலெனா குகையில் (*Beli Lena*) இற்றைக்கு 30,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட உப்புப் படிமங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இதிலிருந்து அக்காலத்தில் மலைநாட்டிற்கும், கடற்கரைகளுக்கும் இடையே வலைப்பின்னலான பண்டமாற்றுத் தொடர்புகள் இருந்ததை அறிய முடிகிறது (*Deraniyagala, S. U.* 1992: 326).

இடைக்கற்கால மக்களின் சந்ததியினரான பழங்குடி மக்கள் இன்றும் குகைகளில் வாழுவதை நாம் அவதானிக்க முடிகிறது. பாதுகாப்பிற்காக இக்குகைகளின் வாசல்களைத் தோல் கொண்டு மறைத்துவிடும் வழக்கமும் இவர்களிடையே காணப்படுகிறது. இதனால் இடைக்கற்கால மனிதன் முந்தைய பழங்கற்கால மனிதரைப் போலல்லாது குகைகளில் நிரந்தரமாக வாழ்ந்தான் என ஊகிக்க இடமுண்டு. இக்காலத்தில் வேடர்கள் மத்தியில் தாம் ஆயுதங்களை உருவாக்கும் இடத்திலேயே (*Factory Sites*) தற்காலிகமாகக் குடில்களை அமைக்கும் வழக்கம் காணப்படுவது போன்றே, அக்காலத்திலும் இவ்வழக்கம் இருந்திருக்கலாம் (சிற்றம்பலம், சி.க. 1999: 77).

இடைக்கற்கால மக்கள் வாழ்ந்த இடங்களே சிலசமயம் அவர்கள் ஆயுதங்களை உருவாக்கிய இடங்களாகவும், இன்னும் சில சமயங்களில் ஆயுதங்களை உருவாக்கிய இடங்களிலேயே அவர்கள் வாழ்ந்தார்கள் என்றும் அறிய முடிகிறது. இம்மக்கள் நீர்நிலைகள், ஆயுதங்களை உருவாக்குவதற்கான கல் வகைகள் கிடைக்குமிடங்கள், வேட்டைக்குத் தேவையான மிருகங்கள் செறிந்து வாழும் இடங்கள் என்பவற்றை மையமாக வைத்தே தமது இருப்பிடங்களை அமைத்தார்கள் (*Allchin, B. & Allchin, R.* 1982; சிற்றம்பலம், சி.க. 1999: 77).

அமெரிக்காவின் கோணெல் பல்கலைக்கழக மானிடவியல் பேராசிரியரான கென்னெத் கென்னெடி நீண்ட ஆண்டுகளாக தென்னிந்திய, இலங்கையின் புராதன மக்களின் மானிடவியல் கற்கைநெறி ஆய்வுகளை மேற்கொண்டவர். அவர் இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் வாழ்ந்த இடைக்கற்கால நுண்கற் பண்பாட்டைக் கடைப்பிடித்த மக்கள் ஒரே இனவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் எனக் குறிப்பிடுகிறார். தொல்லியலாளர்கள் இலங்கையில் நுண்கற்கால மக்கள் பயன்படுத்திய கற்கருவிகளுக்கும், தென்னிந்தியாவில் சமகாலத்து மக்களால் பயன்படுத்தப்பட்ட கருவிகளுக்கும் நெருங்கிய ஒற்றுமை இருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்கள். இலங்கையில் பயன்படுத்தப்பட்ட இருபக்க அலகுடைய நுண்கற் கல்லாயுதங்கள் தமிழகத்தில் பாம்பன் கடற்கரைக்கு அண்மையிலுள்ள தேரிக் கலாசாரத்துடன் ஒரே பிராந்தியம் எனக் கருதும் அளவிற்கு ஒற்றுமையைக் கொண்டுள்ளன (*Kennedy, K. A. R.* 1990: 34).

இடைக்கற்கால மனிதன் நாயை தனது நண்பனாகப் பழக்கக் கற்றுக்கொண்டான். தவிர, மந்தை வளர்ப்பிலும் இக்கால மனிதன் ஈடுபட்டிருந்ததை இக்காலக் குடியிருப்புகளில் காணப்படும் எலும்புக்கூடுகள் எடுத்துக்காட்டுகின்றன. இம்மிருகங்களில் ஆடு, எருது, பசு, செம்மறி ஆடு என்பன குறிப்பிடத்தக்கவை. இவ்வாறு மந்தை மேய்ப்பில் இக்கால மனிதன் அக்கறை காட்டியது அவனது நாகரிக வளர்ச்சியில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

மற்றைய நாடுகளில் இடைக்கற்காலத்தைத் தொடர்ந்து வந்த காலம் புதிய கற்காலம் எனப்படும். நாடோடிகளாக இடத்திற்கு இடம் பெயர்ந்து வேட்டையாடி, உணவு சேகரித்து வந்த மனிதன் நிரந்தரமாக ஓரிடத்தில் தங்கி விவசாயத்திலும், பயிர்ச்செய்கையிலும் ஈடுபட்ட காலம் இது. மனிதர்கள் கூட்டாக ஓரிடத்தில் நிரந்தரமாகத் தங்க, அங்கே முதல் கிராமங்கள் உருவாயின. இக்காலத்தில் செம்பு, ஈயம், வெண்கலம் (*Bronze*) போன்ற உலோகங்கள் அறிமுகமாயின. இதைத் தொடர்ந்து இரும்பு அறிமுகமான காலம் இரும்புக்காலம் எனப்பட்டது.

இலங்கையிலோ ‘புதிய கற்காலம்’ என ஒரு காலப்பகுதி இடம்பெற்றதாகத் தெரியவில்லை. இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் இங்கே இரும்பு அறிமுகப்படுத்தப்பட்ட பின்னரே விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக அறியத்தருகின்றன. இலங்கையின் இடைக்கற்காலம் இ.மு. 34,000 முதல் ஆதி இரும்புக்காலம் வரை - அதாவது இ.மு. 3380 வரை நீடித்திருக்கிறது (*Deraniyagala, S. U.* 1992: 695-70; 2013: 511).

– – – – –

இனிக் கூறப்படுபவை ஒரு சுருக்கக் குறிப்புகள்தாம். இவை பற்றி விவரமாக அடுத்து வரும் இயல்களில் காணலாம்.

இடைக்கற்காலம் (Mesolithic Age)

இடைக்கற்கால மக்கள் அகேற், ஜாஸ்பர், சால்கிடெனி போன்ற கல் வகைகளைக் கொண்டு நேர்த்தியான

வடிவமைப்பில் மென்மையான கல்லாயுதங்களைச் செய்து பயன்படுத்தினார்கள்.

இடைக்கற்கால மக்களில் மிகச் சிறிய குறுணிக்கல் ஆயுதங்களை உபயோகப்படுத்திய மக்கள், நுண்கற்கால (*Microlithic Age*) மக்கள் என அழைக்கப்படுகிறார்கள். இரண்டு சென்டிமீட்டர் நீள அளவினாலான அம்பு முனைகள், சுரண்டிகள், வெட்டும் தகடுகள் என்பவற்றைச் செய்து பயன்படுத்தினர். தமிழ்நாட்டில் நெல்லை மாவட்டம், சாயர்புரம், காயாமொழி, ஏரல், தஞ்சாவூர் மாவட்டத்தில் பூதலூர், மதுரைப் பகுதியில் துவரிமான் ஆகிய இடங்களில் நுண்கற்காலக் கல்லாயுதங்கள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.

புதிய கற்காலம் (Neolithic Age)

புதிய கற்காலம் என்பது மக்கள் நாடோடிகளாகக் காடுகளில் வேட்டையாடி, உணவு சேகரித்து வாழ்ந்த வாழ்க்கை முறைகளை விட்டு, நாட்டுக்குள் வந்து ஆற்றங்கரைகளிலும், குளக்கரைகளிலும் வேளாண் தொழிலில் ஈடுபட்டு, நிலையாக ஓரிடத்தில் வாழ ஆரம்பித்த காலமாகும். இந்த நிலையான குடியிருப்பு வாழ்க்கையில், மனிதர்கள் சக்கரம் மூலம் மண்பாண்டங்கள் செய்து சூளையில் சுட்டுப் பயன்படுத்தவும், கூர்மையான வழுவழுப்பான கற்கருவிகளைச் செதுக்கவும், விலங்குகளைப் பழக்கி வளர்க்கவும் கற்றுக்கொண்டனர்.

களி மண்ணைக் குழைத்து மண்வீடுகள் கட்டி ஓலைகளால் வேய்வதற்கும், நூல் நூற்பதற்கும், நெசவுத் துணி செய்வதற்கும், துணிகளைக் கொண்டு ஆடைகள் செய்வதற்கும் கற்றுக்கொண்டனர். மணிகள், வளையங்கள், மோதிரங்கள் போன்ற அணிகலன்களைச் செய்து பெண்கள் அணிந்துகொண்டனர். கோதுமை, பார்லி, அரிசி, சோளம் மற்றும் காய்கறிகளைப் பயிரிட்டு விளைவித்தனர். இவற்றை நெருப்பில் சமைத்து உண்ணப் பழகிக்கொண்டனர். தமிழ்நாட்டில் சேர்வராயன் மலைப்பகுதிகளிலும், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் கொல்லப்பள்ளி, தொகரப்பள்ளி, கப்பல்வாடி, பருகூர், பன்னிமருவு, தைலமலை, முள்ளிக்காடு, பையம்பள்ளி, சந்திராபுரம், கோவலன் பொட்டல் (மதுரை), மாங்குடி (நெல்லை), நல்லவன்னியன் குடிகாடு (தஞ்சாவூர்) ஆகிய ஊர்களிலும் புதிய கற்கால மக்கள் வாழ்ந்த எச்சங்கள் கிடைத்துள்ளன.

செம்புக்காலம் (Bronze Age)

செப்பு உலோகத்தைப் பயன்படுத்தி கோடரிகள், வாள்கள், ஈட்டி முனைகள், அம்புமுனைகள், கத்திகள், உளிகள் போன்ற கருவிகளைச் செய்து அவற்றை உபயோகப்படுத்திய காலம் ‘செம்புக்காலம்’ எனப்படும். சிந்துவெளியில் உருவான வேளாண்மை நாகரிகம் செப்பு உலோகக் கருவிகளைக் கொண்டே நடைமுறைப்படுத்தப்பட்டது. வட இந்தியாவில், குறிப்பாக உத்தரப்பிரதேசத்தில் வேட்டையாடவும், மீன் பிடிக்கவும், போர் செய்யவும், வேளாண்மைக்கும் இக்கருவிகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

வடஇந்தியாவோடு ஒப்பிடும்போது செம்புக்காலம் சற்று தாமதமாகத்தான் தென்னிந்தியாவிற்கு அறிமுகமாயிற்று. ஆனால், வடஇந்தியாவுக்கு முன்னரே இங்கே இரும்பின் பாவனை ஆரம்பித்துவிட்டதால், செப்பில் மக்கள் அதிக கவனம் செலுத்தவில்லை எனக் கூறப்படுகிறது. 1884-85ஆம் ஆண்டுகளில் ஆதிச்சநல்லூரில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட முதுமக்கள் தாழிகளை அகழாய்வு செய்த பிரித்தானியத் தொல்லியலாளர் அலெக்ஸாந்தர் ரீ (*Alexander Rea*) மிகச் சிறப்பான வேலைப்பாடுடன் கூடிய 123 வெண்கலப் பொருட்களையும், 90 வகையான இரும்புப் பொருட்களையும் கண்டெடுத்துப் பட்டியலிட்டிருக்கிறார்.

இரும்புக்காலம் (Iron Age)

மனித நாகரிகம் அதன் உச்சிக்கட்டத்தை அடைவதற்கு இரும்பின் வருகை முக்கியமானதொரு அம்சமாகும். தமிழகத்தில் சிவகளை, தெலுங்கனூர் போன்ற இடங்களில் இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன்னரே இரும்பு பற்றி அறியப்பட்டிருந்தாலும், பெருங்கற்கால ஆண்டுக் காலங்களில்தான், இதன் பாவனை நாடெங்கும் பரவலாக நடைமுறைக்கு வந்தது (இயல் 13இல் காணலாம்).

இரும்புக்காலத்தில் வாழ்ந்த மக்கள் இரும்பை உருக்கி கலப்பைகள், கத்திகள், கோடரிகள், மண்வெட்டிகள் என்பவற்றை உருவாக்கி, நெல், தினை, வரகு போன்ற தானிய உற்பத்தியைப் பெருக்கி, விவசாயப் புரட்சியைக் (*Agricultural Revolution*) கொண்டுவந்தார்கள்.

உசாத்துணை நூல்கள், சஞ்சிகைகள்

ABEYARATNE, M. (1996): Multidating Studies of Archaeological Sites, Unpublished Ph.D. Dissertation, Australian National University, Canberra.

AGRAWAL, D.P.; KRISHNAMURTHY, R.V.; PANT, R.K. (1978): “Chronology of Indian Prehistory from Mesolithic Period to the Iron Age”, Journal of Human Evolution 7: 37-44.

ALLCHIN, BRIDGET & ALLCHIN, RAYMOND (1968): The Birth of Indian Civilization, Harmondsworth, London.

ALLCHIN, B. & ALLCHIN, R. (1982): The Rise of Civilization in India and Pakistan, Cambridge University Press, Cambridge.

ANTON, S. C. (2003): "Natural History of 'Homo erectus'", Am. J. Physical Anthropology 122.

ATHREYA, SHEELA (2007): "Was Homo heidelbergensis in South Asia? A Test Using the Narmada Fossil from Central India", in MICHAEL D. PETRAGLIA and BRIDGET ALLCHIN (Eds.): The Evolution and History of Human Populations in South Asia, Springer, The Netherlands.

BECKER, RACHEL (2018): "Discovery of Ancient Stone Tools Rewrite the History of Technology in India", The Verge, 31 January 2018.

CHAKRABARTI, DILIP K. (1979): "Robert Bruce Foote and Indian Prehistory", East and West No. 29: 11-26.

CHAKRAVARTY, KALYAN KUMAR (Ed.) (1984): RockArt of India: Paintings and Engravings, ArnoldHeinmann, New Delhi.

CHOI, CHARLES Q. (2019): "The Final Days of Homo Erectus", Inside Science, 18 December 2019.

CLARK, J.G.D. (1969): World Prehistory: A New Outline, Cambridge University Press, Cambridge.

CLARK, PETER U. & MIX, ALAN C. (2002): "Ice Sheets and Sea Levels of the Last Glacial Maximum", Quaternary Science Reviews 21 (1-3): 1-7.

DEDIU, D. & LEVINSON, S.C. (2018): "Neanderthal Language Revisited", Current Opinion in Behavioural Sciences 21: 49-55.

DENNELL, R.W., RENDELL, H.M. and HAILWOOD, E. (1988): Early ToolMaking in Asia: TwoMillionYearOld Artefacts in Pakistan, Antiquity 62: 98-106.

DERANIYAGALA, S.U. (1992): The Prehistory of Sri Lanka: An Ecological Perspective, Dept. of Archaeological Survey, Government of Sri Lanka, Colombo.

DERANIYAGALA, S.U. (1992): The Prehistory of Sri Lanka (as above): pp. 686-688. The gravel at Iranamadu Forma tion had given varying dates of 125,000 BCE (M. Abeyaratne 1996: as above), and 80,000 BCE (Oxford Archaeological Laboratory) from different sites.

DERANIYAGALA, S.U. (1992b): "'The Prehistoric Chronology of Sri Lanka'" in Memoirs of the Archaeological Department, Govt. of Sri Lanka, No. 8, Addendum I.

DERANIYAGALA, S.U. (1996): "Pre and Protohistoric Settlements in Sri Lanka", in The Prehistory of Asia and Oceania, Vol. 5, Section 16, pp. 277-285.

DERANIYAGALA, S.U. (2004): Prehistoric Basis for the Rise of Civilization in Sri Lanka and Southern India, Second Vesak Commemoration Lecture, Madras.

DERANIYAGALA, S.U. (2013): "'General Conclusions'" in Mantai, City by the Sea by John Carswell, Siran Deraniyagala and Alan Graham, Linden Soft Verlag, Aiochwald, Germany.

DE TERRA, H. and PATERSON, T.T. (1939): Studies on the Ice Age in India and Associated Human Cultures, Washington: Carnegie Institute, Publication No. 493.

DE TERRA, HELMUTT (1969): Early Man: As Depicted at the International Symposium, Academy of Natural Sciences, Philadelphia.

DUBEYPATHAK, MEENAKSHI (2014): "Rock Art of the Bimbetka Period in India" (PDF), Adoranten 2014. Tanums Hällristningsmuseum Underslös.

DOUGLAS, M.M.; DOUGLAS, J.M. (2016): Exploring Human Biology in the Laboratory, Morton Publishing Company, USA.

DOUKA, K. (2019): "Age Estimates for the Hominin Fossils and the Onset of the Upper Palaeolithic at Denisova Cave", Nature 565 (7741): 640-644.

FOOTE, R. B. (1868): "On the Distribution of Stone Imple ments in Southern India", Quarterly Journal of the Geological Society of London 24: 484-495.

FOOTE, R.B. (1883): "On the Geology of Madura and Tinnevelly Districts", Memoirs of the Geological Survey of India 20 (2): 1-103.

FOOTE, R. B. (1886): "Notes on the Prehistoric Finds in India", Journal of the Anthropology Institute of Great Britain and Ireland 16: 70-75.

FOOTE, R.B. (1916): The Foote Collection of Indian Prehistoric Antiquities: Notes on Their Ages and Distribution, Madras: Government Museum.

GOONATILAKE, SUSANTHA (1981): The Formation of Sri Lankan Culture, Ancient Ceylon, No. 4.

GREGORY, J.W. (1968): The Great Rift Valley, Frank Cass & Co. Ltd., London.

HAVILAND, WILLIAM A.; WALRATH, DANA; PRINS, HARALD E.L.; McBRIDE, BUNNY (2007): Evolution and

Prehistory: The Human Challenge (8th Ed.), Belmont, CA.

HIGHAM, TOM; et al. (2004): "The Timing and Spatiotempo ral Patterning of Neanderthal Disappearance", Nature, 21 August 2014, 512 (7514): pp. 306-309.

HOLLOWAY, R. L. (1985): "The Poor Brain of Homo sapiens neanderthalensis", in Delson, E. (Ed.): Ancestors: The Hard Evidence, Alan R. Liss, Manhattan.

IQBAL, SARAH (2018): "Ancient Stone Tools Found in Tamil Nadu Push Back 'Out of Africa' Exodus Date", The Wire, 2 February 2018. (Tools Found in India Suggest Humans Left Africa Earlier Than We Thought).

JACOBS, ZENOBIA; LI, BO; SHUNKOV, MICHAEL; et al. (Jan. 2019): "Timing of Archaic Hominin Occupation of Denisova Cave in Southern Siberia", Nature 565 (7741): 594-599.

JAVID, ALI and JAVEED, TABASSUM (2008): World Heritage Monuments and Related Edifices in India, Algora Publishing, New York.

JOSHI, R.V. (1972): "Environment and Evolution of Stone Age Cultures in India, with Reference to Middle Stone Age Cultures", in (F. Bordes Ed.): The Origin of Homo Sapiens, pp. 91-93, UNESCO, Paris.

KENNEDY, K.A.R. (1975): The Physical Anthropology of the Megalithic Builders of South India and Sri Lanka, Canberra.

KENNEDY, K.A.R. (1990): "Palaeodemography of Sri Lanka and Peninsular India: A Crossregional Survey", Perspectives in Archaeology: Leelananda Prematillake Festschrift 1990; Ed. Sudharsan Seneviratne et al. Peradeniya: 29-37.

KENNEDY, K.A.R. and CHIMENT, J. (1991): "The Fossil Hominid from Narmada Valley, India; Homo erectus or Homo sapiens?", IndoPacific Prehistory Association Bulletin 10 (1): 42-58.

KENNEDY, K.A.R. (2000): God Apes and Fossil Men; Palaeoanthropology in Asia, Michigan University Press.

KLEIN, R. (1999): The Human Career: Human Biological and Cultural Origins, University of Chicago Press, Chicago.

KRAUSE, J.; FU, Q.; GOOD, J.M.; VIOLA, B. (2010): "The Complete Mitochondrial DNA Genome of an Unknown Hominin from Southern Siberia", Nature 464 (7290): 894-897.

KRISHNASWAMI, V.D. (1947): "Stone Age in India", Ancient India, No. 3, pp. 11-57.

KUMAR, AKILESH; PAPPU, SHANTI; RAJAPARA, HARESH M.; GUNNELL, YANNI; SHAKULA, ANIL D.; ASHOK, K. (2018): "Early Middle Palaeolithic Culture in India around 385-172 ka Reframes Out of Africa Models", Nature 554 (7690): 97-101, 31 January 2018.

MATHPAL, YASHODAR (1984): Prehistoric Painting of Bhimbetka, Abhinav Publications, New Delhi.

MACDOUGAL, DOUG (2004): Frozen Earth: The Once and Future Story of the Ice Ages, University of California Press.

MISHRA, S. (1994): "The South Asian Lower Palaeolithic", Man and Environment 19: 57-52.

MISHRA, S., VENKATESAN, S.N., RAJAGURU, S.N. (1995a): "A 0.67 MillionYear Acheulian Industry from Peninsular India", Current Anthropology 36: 847-851.

MISHRA, S. (1995b): "Chronology of the Indian Stone Age", Man and Environment 20 (2): 11-16.

MISHRA, SHEILA (2006-2007): "The Indian Lower Palaeolithic", Bulletin of the Deccan College PostGraduate and Research Institute, Pune, Vol. 66/67.

OAKLEY, KENNETH (2007): Framework for Dating Fossil Man, Transaction Publishers, New Jersey.

PAPPU, SHANTI; GUNNELL, YANNI; TAJEB, MAURICE; BRUGAL, ANUPAMA K.; SANKALIA, H.D. (1964): "Middle Stone Age Culture in India and Pakistan", Science 146: 365-375.

PETRAGLIA, M. D. (2003): "The Lower Palaeolithic of the Arabian Peninsula: Occupations, Adaptations and Dispersals", Journal of World Prehistory 17: 141-179.

PINHASI, R., HIGHAM, T.F.G., GOLOVANOVA, L.V., DORONICHEV, V.B. (2011): "Revised Age of the Neanderthal Occupation and the End of the Middle Palaeolithic in the Northern Caucasus", Proceedings of the National Academy of Sciences 108 (21): 8611-8616.

QUINTANAMURCI, LUIS (1999): "The mtDNA Evidence for a Coastal Exodus from Africa", Nature Genetics 23: 437-441.

RAMACHANDRAN, K.S. (1980): Archaeology of South India: Tamil Nadu, Sundeep Prakashan, Delhi.

REICH, DAVID (2019): Who We Are and How We Got Here, Oxford University Press.

RENDELL, H. R., DENNELL, R. W., HALIM, M. (1989): Pleistocene and Palaeolithic Investigations in the Soan Valley,

Northern Pakistan, British Archaeological Reports International Series, Cambridge University Press, p. 364 ff.

RIZAL, Y., WESTWAY, K. E., VAN DEN BERGH, G.D. et al. (January 2020): "Last Appearance of Homo Erectus at Ngan dong, Java, 117,000-108,000 Years Ago", Nature 577 (7790): pp. 381-385.

ROBERTS, ALICE (2009): The Incredible Human Journey, Bloomsbury, London.

ROBERTS, ALICE (2011): Evolution - The Human Story, DK Publishing, New York, New York.

ROHLING, E.J. et al. (1998): "Magnitudes of SeaLevel Low Stands of the Past 500,000 Years", Nature 394: 162-165.

SANKALIA, H.D. (1964): "Middle Stone Age Culture in India and Pakistan", Science 146: 365-375.

SANKALIA, H.D. (1974): Prehistory and Protohistory of India and Pakistan, 2nd Edn., Poona: Deccan College.

SANKARARAMAN, S., PATTERSON, N., REICH, D., AKEY, J. M. (2012): "The Date of Interbreeding between Neanderthals and Modern Humans", in PLOS Genetics 8 (10).

SAWYER, S.; RENAUD, G.; VIOLA, B.; et al. (2015): "Nuclear and Mitochondrial DNA Sequences from Two Denisovan Individuals", Proceedings of the National Academy of Sciences 112 (51): 15696-15700.

SEMSAW, Sileshi; ROGERS, Michael; SIMPSON, Scott W.; LEVIN, Naomi E.; JAY, Dunbar (4 March 2020): "Cooccur rence of Acheulian and Oldowan Artefacts with Homo erectus Cranial Fossils from Gona, Afar, Ethiopia", Science Advances 6 (10).

SION, V.; VIOLA, B.; RENAUD, G. et al. (2017): "A Fourth Denisovan Individual", Science Advances 3 (7).

SONAKIA, ARUN & KENNEDY, KENNETH A.R. (1985): "Skull Cap of an Early Man from the Narmada Valley Alluvium (Pleistocene) of Central India", American Anthropologist, New Series, Vol. 87, No. 3 (Sept. 1985), pp. 612-616.

STRINGER, C. (1984): "Human Evolution and Biological Adaptation in the Pleistocene", in Delson, E. (Ed.): Ancestors: The Hard Evidence, Alan R. Liss, Manhattan.

SUBBARAO, B. (1958): The Personality of India, Faculty of Arts, University of Baroda, Baroda.

SUKUMAR, RAMAN & AKILESH, KUMAR (2003): "Excava tions at the Palaeolithic Site of Attirampakkam, South India", Antiquity 77 (297).

SUWA, G. et al. (2007): "Early Pleistocene Homo erectus Fossils from Konso, Southern Ethiopia", Anthropological Science 115 (2): 133-151.

TARIACH, GEMMA (2018): "Stone Tools from India: Another Blow to Human Evolution Model?", Discover Magazine, 31 January 2018.

THIAGARAJAH, SIVA (2011): Peoples and Cultures of Early Sri Lanka, Tamil Information Centre, London.

TIWARI, SHIV KUMAR (2000): Riddles of the Indian Rockshel ter Paintings, Sarup & Sons, New Delhi.

WELLS, SPENCER (repr. 2003): The Journey of Man, Random House Paperback Edition, New York.

WELLS, SPENCER (2007): Deep Ancestry, National Geographic, Washington, DC.

WILLOCK, Colin (1977): Africa's Rift Valley, TimeLife Books, New York.

WUNN, I. (2000): "Beginning of Religion", Numen 47 (4): 417-452.

ZUBOVA, A.; CHIKISHEVA, T.; SHUNKOV, M.V. (2017): "The Morphology of Permanent Molars from the Paleolithic Layers of Denisova Cave", Archaeology, Ethnology & Anthropology of Eurasia 45: 121-134.

இராசவேலு, சு., திருமூர்த்தி, கோ. (1995): தமிழ்நாட்டுத் தொல்லியல் அகழ்வுகள், சென்னை.

இராமன், கே.வி. (1979): தொல்லியல் ஆய்வுகள், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

குருமூர்த்தி, சா. (1974): தொல்பொருளாய்வும் தமிழர் பண்பாடும், சென்னை.

சிற்றம்பலம், சி.க. (1999): பண்டைய தமிழகம், குமரன் பப்ளிசர்ஸ், சென்னை.

சீதாராமன், ஆறுமுகம் (194): தமிழகத் தொல்லியல் சான்றுகள், தொகுதி I, சென்னை.

புஷ்பரட்ணம், ப. (1993): பூநகரி தொல்பொருளாய்வு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.

ராஜன், கா. (1994): கொடுமணல் அகழாய்வு - ஓர் அறிமுகம், தஞ்சாவூர்.

‘இலங்கையின் அரசியல் 1900 – 1981: பன்முகநோக்கு‘ என்னும் இத்தொடர் 1900 முதல் 1981 வரையான காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் பற்றிய பன்முக நோக்கிலான கோட்பாட்டு ஆய்வுகளை தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்டதாக அமையும். ஆங்கிலத்தில் பருவ இதழ்களிலும் (Journals) அச்சு ஊடகங்களிலும் வெளியான ஆய்வுக் கட்டுரைகளை தழுவியும் சுருக்கியும் தமிழில் எழுதப்பட்டவையாக இக் கட்டுரைகள் அமையவுள்ளன. இலங்கையின் அரசியல் குறித்த பன்முக நோக்கில் (Multi Disciplinary Approach) அமையும் அரசியல் விமர்சனமும் ஆய்வும் என்ற வகையில் அரசியல் கோட்பாடு, சட்டக் கோட்பாடு என்னும் இரண்டையும் இணைப்பனவான உயராய்வுகள் பல ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. மானிடவியல், சமூகவியல், சமூக உளவியல், வரலாறு, அரசியல் ஆளுமைகளின் வாழ்க்கை வரலாறு (Biography of Political personalities) என்னும் துறைகள் சார்ந்த உயராய்வுகளும் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. இவ் ஆய்வுகளை தமிழுக்கு இரவல் பெற்றுக் கொண்டு வருதலும் உள்ளீர்த்துத் தன்வயமாக்கிக் கொள்ளுதலும் இன்றைய அவசியத் தேவையாகும். சி. அரசரத்தினம், ஏ.ஜே. வில்சன், குமாரி ஜெயவர்த்தன, ஜயதேவ உயன்கொட, றெஜி சிறீவர்த்தன, நிறா விக்கிரமசிங்க, ஜயம்பதி விக்கிரமரட்ண, லக்ஷ்மன் மாரசிங்க, சுமணசிறி லியனகே ஆகிய புலமையாளர்களின் கட்டுரைகள் இத்தொடரில் அறிமுகம் செய்யப்படவுள்ளன. இப் பட்டியல் பூரணமானதன்று. இன்னும் பலரைச் சேர்க்க வேண்டியுள்ளது. அவ்வப்போது வேறு பலரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். 30 மாதங்கள் வரை நீட்சி பெறவுள்ள இத் தொடரில் 30 கட்டுரைகள் வரை இடம்பெறும் என எதிர்பார்க்கின்றோம்.

ஆங்கில மூலம்: றொகான் எதிரிசிங்க, மரியோ கோமஸ், வி.ரி. தமிழ்மாறன், அசங்க வெலிக்கல

இலங்கையில் அதிகாரப் பகிர்வு: 1926 – 2008 காலத்தில் வெளியிடப்பட்ட அரசியல் யாப்பு ஆவணங்களின் தொகுப்பு

பகுதி -2

கந்தையா சண்முகலிங்கம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த ‘இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்’ என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது. ‘நவீன அரசியல் சிந்தனை’, ‘கருத்தியல் எனும் பனிமூட்டம்’, ‘இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்’ ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

அரசுக்கட்டமைப்புகள்

அதிகாரப் பகிர்வுக்கு உதவக்கூடிய அரசுக்கட்டமைப்புகளை உருவாக்குதல் 1990க்குப் பிற்பட்ட காலத்து விவாதங்களில் முக்கிய பேசுபொருளாக அமைந்தன. முக்கியமாக இரு நிறுவனங்கள் தொடர்பாக நடைபெற்ற விவாதங்கள் எமது கவனிப்புக்குரியவை:

1. இரண்டாம் சபை (Second Chamber) ஒன்றின் தேவை. பிராந்தியங்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்கக்கூடிய செனற் போன்ற சபையை உருவாக்குதல் பற்றிய விவாதம்.

2. அதிகாரமுடைய நீதித்துறையை உருவாக்குதல்.

இவ்விரு நிறுவனங்களில் செனற் நிறுவனத்தின் பயன் குறித்த விவாதத்தை முதலில் நோக்குவோம்.

செனற் சபை

சோல்பரி அரசியல் யாப்பு இருசபைகளைக் கொண்ட பாராளுமன்றத்தைக் கொண்டிருந்தது. மேற்சபையான செனற் சபை அந்த யாப்பின்படி என்ன நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை. இதனால் அது தோல்வியுற்ற நிறுவனமாகியது. இதன் பின்னர் இலங்கையில் உருவாக்கப்பட்ட 'Home Grown Constitutions' எனப்பட்ட யாப்புகள் இரண்டும் ஒரு சபையை மட்டும் உடைய பாராளுமன்றங்களைக் (Unicameral Legislature) கொண்டமைந்தன. மேலே குறிப்பிட்டது போன்று சோல்பரி யாப்பின் செனற் சபை தோல்வியுற்ற நிறுவனமாகிய போதும், இலங்கையின் அதிகாரப் பகிர்வு பற்றியும், சமஷ்டி முறை பற்றியும் விவாதிக்கப்பட்ட போது, இரண்டாம் சபையின் பயன் குறித்துக் கவனம் செலுத்தப்பட்டது. குறிப்பாக பிராந்தியங்களின் பிரதிநிதித்துவத்தை (Regional Representa tion) வழங்குவதற்கு செனற் என்னும் இரண்டாம் சபை உதவும் எனப் பலரும் கருதினர். மத்திய பாராளுமன்றத்தின் ஓர் உறுப்பாக அமையும் செனற் சபை அதிகாரப் பகிர்வைப் பாதுகாத்தல் (Protection of Devolution of Power), அதிகாரத்தைப் பகிர்தல், தேசிய ஒற்றுமையைப் பேணுதல் என்பனவற்றுக்கு உதவுதல் ஆகிய தேவைகளை நிறைவு செய்யும் எனக் கருதப்பட்டது. இவ்வாறான இரண்டாம் சபையை (Second Chamber) உருவாக்குதல் தொடர்பான விவாதம் நடைபெற்றது. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிமுறையை விட, பாராளுமன்ற மந்திரிசபை முறை (Parliamentary Cabinet System) மேலானது எனவும், பாராளுமன்ற மந்திரிசபை முறைக்கு மீண்டும் மாறும்போது செனற் சபையையும் உள்ளடக்கிய இருசபைகள் கொண்ட சட்டசபையை மீண்டும் உருவாக்கலாம் என்றும் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

நீதித்துறை

இலங்கையில் அரசியல் யாப்பின் மேன்மை (Constitution al Supremacy) என்னும் அரசியல் யாப்புத் தத்துவம் ஏற்கப்படவில்லை. அரசியல் யாப்புவாதம் (Constitutional ism) என்னும் இத்தத்துவம் ஏற்கப்பட்டால், அரசியல் அதிகாரத்தைப் பிரயோகிக்கும் அரசியல் நிறுவனங்களும், அரசியல் அதிகாரத்தைப் பிரயோகிப்பவர்களான நபர்களும் (Actors Exercising State Power) அரசியல் யாப்புக்குக் கட்டுப்பட்டவர்கள் என்ற நிலை உருவாகும். அரசியல் யாப்பு மீறல்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரமுடையதாக நீதித்துறை விளங்கும். ஆனால் இலங்கையின் அரசியல்வாதிகள் அரசியல் யாப்பின் மேன்மை (Supremacy of the Constitu tion) என்னும் தத்துவத்தை ஏற்றுக்கொண்டு, சட்ட ஆக்கத்துறையினையும், நிர்வாகத்துறையினையும் நீதி மீளாய்வு (Judicial Review) மூலம் கட்டுப்படுத்தும் முறையிலான அரசியல் யாப்பினை நடைமுறைப்படுத்துவதற்கு விருப்பமற்றவர்களாக உள்ளனர்.

நிர்வாகத்துறையின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வலுவற்றதான இலங்கையின் நீதித்துறை விளங்கியது. இதனால் சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிரான சட்டவாக்க, நிர்வாக நடவடிக்கைகளை அது கட்டுப்படுத்தத் தவறியுள்ளது. அரசியல் யாப்புத் தொடர்பான நீதித் தீர்ப்புகளின் போது (Constitutional Adjudication) நீதிமன்றங்கள் சிறுபான்மையினரைப் பாதுகாக்கும் வகையில் செயற்படத் தவறியுள்ளன. கட்டுரையாசிரியர்கள் இது பற்றிக் கூறியிருப்பது கவனிப்புக்குரியது.

"The role of the judiciary will be a contentious issue in any attempt to reconstitute the Sri Lankan state. Many Tamils have been critical of the court's insensitivity to Tamil aspirations. Yet any power sharing arrangement will require an arbiter of centre – region disputes. A secure power sharing arrangement will also give to the constitution and a stringent amendment process, especially where any alteration of provincial power is contem plated. This will require the courts (or some other credible institution) to play an important role in the new power – sharing arrangement (p. 22)

மேலே ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ள பந்தியின் சுருக்கம் (எளிமைப்படுத்தப்பட்ட தமிழாக்கம்.)

1. அரசுக்கட்டமைப்பை மாற்றும்போது நீதித்துறையின் வகிபாகம் சர்ச்சைக்குரியதாகவே

இருந்துவருகிறது. தமிழ் மக்களின் அபிலாசைகளை பரிவுணர்வோடும், நடுநிலையோடும் நீதித்துறை பரிசீலிப்பதில்லை எனப் பல தமிழர்கள் அதிருப்தியை வெளியிட்டு வந்துள்ளனர்.

2. அதிகாரப் பகிர்வை நடைமுறைப்படுத்தும் போது மத்திய அரசாங்கத்திற்கும் பிராந்தியங்களுக்கும் இடையில் பிணக்குகள் (Centre - Region Disputes) தோன்றும். அப்பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் நடுவர் என்ற நிலையை வகிக்கும் நீதித்துறை அதிகாரம் உடையதாயும், நிர்வாகத்துறையின் தலையீடு இல்லாது நடுநிலையாகச் செயற்படக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

3. அரசியல் யாப்பின் மேலாண்மை (Supremacy of the Constitution) என்னும் தத்துவம் ஏற்கப்பட்டால்தான், அதிகாரப்பகிர்வின் ஒழுங்கமைப்பைப் பலமான அடித்தளத்தில் உருவாக்கலாம். அரசியல் யாப்பைத் திருத்துவதை இலகுவாகச் செய்ய முடியாதபடி இறுக்கமான திருத்த விதிகள் அரசியல் யாப்பில் சேர்க்கப்பட வேண்டும். குறிப்பாக மாகாணங்களின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்துதல் அல்லது குறைத்தல் தொடர்பான திருத்தங்களை இலகுவில் செய்ய முடியாதபடி பாதுகாப்பு விதிகள் அரசியல் யாப்பில் சேர்க்கப்பட வேண்டும். அரசியல் யாப்பின் அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகளை விளக்கிக் கூறும் (Interpretation) அதிகாரம் உடையதாய் நீதித்துறை (அல்லது வேறு ஒரு நிறுவனம்) இருத்தல் வேண்டும்.

மனித உரிமைகளும் சமத்துவமும்

இலங்கையில் தமிழ்மக்களின் போராட்டம் அடிப்படை மனித உரிமைகளுக்கும் சமத்துவத்துக்குமான (Human Rights and Equality) போராட்டம், மனித கௌரவம் சார்ந்த போராட்டம் என்பதை இனத்துவப் பிரச்சினையின் வரலாறு உணர்த்துகிறது. சிங்களம், தமிழ் ஆகிய இருமொழிகளுக்கும் சமத்துவ உரிமைகள் வழங்கப்படாமையே இன்று வரை தொடரும் பிரதான பிரச்சினையாகும். இலங்கை அரசு மதச்சார்பற்ற அரசாக (Secular State) இல்லை. அது பௌத்தத்திற்கு அரசியல் யாப்பில் முதன்மையிடம் (Foremost Place) அளித்துள்ளது என்பது இன்னொரு பிரச்சினை. வெளிப்படையாகப் பேசப்படாத இப்பிரச்சினை சமத்துவம் (Equality) என்ற தத்துவத்துடன் முரண்பாடு உடையது. ஏனென்றால் பௌத்தத்திற்கு முதன்மையிடம் அளிக்கப்படுவதால் அனைத்துச் சமூகங்களுக்கும் சமத்துவமான நடத்துகை இல்லை என்பதே பொருளாகும். வெளிப்பட்டுத் தெரியாமல் மறைந்து நிற்கும் இன்னொரு பிரச்சினையும் உள்ளது. குறியீடுகள் (Symbols), தேசியக்கொடி, தேசிய கீதம் என்பனவற்றில் சமத்துவம் இல்லை என்பதைச் சில சமூகங்கள் முக்கியமான பிரச்சினையாகக் கருதுகின்றன. இந்நிலையில் பிராந்தியங்கள் (Regions) தமது அடையாளங்களை முதன்மைப்படுத்தும் குறியீடுகளை வைத்துக் கொள்வதை ஊக்கப்படுத்தி அனுமதிக்க வேண்டாமா என்ற கேள்வி எழுகிறது.

தனிநபர் உரிமைகளுக்கும் குழு உரிமைகளுக்கும் இடையிலான சமநிலை (The Balance Between Individual and Group Rights) என்பது இன்னொரு முக்கியமான விடயம். சோல்பரி அரசியல் யாப்பின் பிரிவு 29 குழு உரிமைகளை அங்கீகரித்தது. ஆனால், அந்த யாப்புக்குப் பிந்திய யாப்புகள் இரண்டும் தனிநபர் உரிமைகளுக்கே முக்கியத்துவம் கொடுத்தன. வடக்கு - கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைத்தல் தொடர்பான விவாதங்கள் இடம்பெற்ற போது, அந்த மாகாணங்களில் உள்ள முஸ்லிம், சிங்களச் சிறுபான்மையினரின் உரிமைகள் மறுக்கப்படும் என்ற அம்சம் சுட்டிக்காட்டப்பட்டது. விடுதலைப்புலிகள் தனிநபர் உரிமைகளை மதிப்பதில்லை என்பதும், எதிர்க்கருத்தை வெளிப்படுத்தும் உரிமையை மறுத்தலும், தமிழ் அரசியல் சமூகத்தில் அரசியல் பன்மைத்துவத்திற்கு (Political Pluralism) இடம் இல்லை என்பதும் கண்டனங்களாக முன்வைக்கப்பட்டன.

சர்வதேச அளவில் இன்று மனித உரிமைகளின் முக்கியத்துவம் பற்றி வலியுறுத்தப்பட்டு வருவதையும், தனிநபர் உரிமைகளும், குழு உரிமைகளும் (Group Rights) பாதுகாக்கப்பட வேண்டும், அதற்கான அரசியல் யாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்படுவதையும் காணலாம். இப்பின்னணியில் குடியுரிமைகளும் அரசியல் உரிமைகளும் (Civil and Political Rights), பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகள், பெண்கள் - சிறுவர் உரிமைகள், சூழலியல் உரிமைகள் என்பன யாவற்றையும் உள்ளடக்கிய முழுமையான அடிப்படை மனித உரிமைகள் அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட வேண்டும் என்ற கருத்து வலுப்பெற்றுள்ளது. இலங்கையில் அரசியல் யாப்பின் ஊடான தீர்வு (Constitutional Settlement) அடிப்படை மனித உரிமைகளுக்கு முதன்மை அளிப்பதாக அமைதல் அவசியமானது.

பாலினச் சமத்துவம்

பாலினச் சமத்துவம் (Gender Equality) என்ற விடயத்தில் இலங்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இலங்கையின் அயல் நாடுகளை விட இலங்கையில் இவ்விடயத்தில் ஒப்பீட்டளவில் ஏற்பட்ட முன்னேற்றம் பாராட்டுக்குரியது.

கல்வித்துறையில் பெண்களின் பங்கேற்பு அல்லது சேர்வு வீதம் இலங்கையில் அதிகரித்துள்ளது. அதேபோன்று சுகாதார மருத்துவ வசதிகள் பெண்களுக்கு கூடிய அளவில் கிடைக்கின்றன. ஆயினும் இம்முன்னேற்றங்களுக்குப் பின்னால் மறைக்கப்பட்டுள்ள, கண்ணுக்குப் புலப்படாத பக்கம் ஒன்றும் உள்ளது. பெண்கள் அரசியல் மட்டத்தில் முடிவெடுக்கும் தலைமைப் பதவிகளிலும் கொள்கை வகுத்தலில் பங்கேற்கும் பதவிகளிலும் இல்லை.

1995 - 2000 ஆண்டுக் காலத்தில் அரசியல் யாப்பை வரையும் செயல்முறை இடம்பெற்றது. அப்போது 1997ஆம் ஆண்டு முன்மொழிவுகள் முன்னெடுக்கப்பட்டன. அம்முன்மொழிவுகளில் உள்ளூராட்சி சபைகளில் தெரிவாகும் உறுப்பினர்களில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் பெண்களாக இருக்க வேண்டும் என்ற சிபார்சு முன்மொழியப்பட்டிருந்தது. ஆனால், 2000ஆம் ஆண்டு அரசியல் யாப்பு வரைவு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது இந்த ஏற்பாடு நீக்கப்பட்டிருந்தது. அதற்குப் பின்னர் பெண்ணியக் குழுக்கள் அரசாங்கத்தின் எல்லா மட்டங்களிலும் பெண்களின் பங்கேற்பு அதிகரிக்கப்படுதல் வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளன. இலங்கையில் 1931ஆம் ஆண்டில் சர்வசன வாக்குரிமை அறிமுகமானது. ஆயினும், உள்ளூராட்சி, மாகாணசபைகள், தேசியமட்ட பாராளுமன்றம் என்ற அனைத்து மட்டங்களிலும் 5% வீதத்துக்கும் குறைந்த அளவு பிரதிநிதித்துவமே பெண்களுக்கு இருந்துள்ளது. இலங்கை முதலாவது பெண் பிரதமரையும், முதலாவது பெண் ஜனாதிபதியையும் தெரிவு செய்து சாதனை படைத்தது என்று பெருமைப்பட்டாலும், அரசாங்க அதிகார நிறுவனங்களில் பெண்களின் பங்கேற்பு மிகக்குறைந்த மட்டத்திலேயே உள்ளது. ஏனைய பல விடயங்களில் பாலினச் சமத்துவம் பாராட்டத்தக்க உயர் நிலையில் இருந்தபோதும், அரசியல் அதிகாரம் என்ற விடயத்தில் ஆண் - பெண் சமத்துவம் (Gender Equity) இல்லை என்பது கவனிப்புக்குரியது.

அதிகாரப்பகிர்வு - ஓர் கருத்தாக்க வரைவுசட்டம்: ஆழமான பிறழ்வுகளையுடைய சமூகங்களில் பன்மைத்துவத்தைப் பேணல் (Power Sharing - A Framework: Accommodating Diversity in Deeply Divided Societies)

மேற்குறித்த தலைப்புடைய பகுதியில் கட்டுரையாளர்கள் இலங்கையின் இன்றைய இனத்துவப் பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதற்கு உதவக்கூடிய 'ஆழமான பிளவுகளை உடைய சமூகம்' என்னும் கருத்தாக்கத்தை அறிமுகம் செய்துள்ளனர். இக்கருத்தாக்கத்தை அவர்கள் ஒரு பகுப்பாய்வு வகைமை (Analytical Category) என்றும், அது அரசியல், கோட்பாடு, அரசியல் யாப்புக் கோட்பாடு என்பனவற்றில் பிரயோகிக்கப்படும் ஒரு முக்கிய கருத்தாக்கம் என்றும் கூறுகின்றனர். உலகில் ஆழமான பிளவுகளையுடைய சமூகங்கள் பல உள்ளன என்றும், இலங்கை அந்த வகையான ஆழமான பிளவுகளையுடைய சமூகங்களில் ஒன்றாக மாறியுள்ளது என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். பிரித்தானிய காலனிய ஆட்சியில் மாதிரிக் காலனியாக (Model Colony) விளங்கிய இலங்கை ஆழமான பிளவுகளையுடைய சமூகமாகத் தரம் தாழ்ந்தது ஏன்?

கடந்த காலத்தில் இலங்கையில் அடையாள அடிப்படையிலான சமூகக் குழுக்களின் கோரிக்கைகள் (Identity Based Group Claims) முன்வைக்கப்பட்டன. அத்தகைய கோரிக்கைகள் இனத்துவம் (Ethnicity) என்பதில் வேர் கொண்டிருந்தன. அவற்றை அரசாங்கங்களும், அரசியல் தலைவர்களும் முறையாக நெறிப்படுத்தி ஒழுங்கமைப்பதற்கான ஒரு கொள்கை வழிச் சட்டத்தின்படி முகாமை செய்யவில்லை. இதனால், இலங்கையில் இனத்துவ மோதல் அதிகரித்தது.

இலங்கைச் சமூகம் பல்வேறு இன, மொழி, மத வேறுபாடுகளைக் கொண்ட பன்மைத்துவம் உடைய சமூகம். இச்சமூகத்தின் பன்மைத்துவத்தை செயற்கையான முறையில் அழித்துச் சிதைத்து விட்டு, அச்சிதைவுகளின் மீது தேசிய ஐக்கியத்தை கட்டி வளர்க்க முடியாது. பன்மைத்துவ அடையாளங்கள் ஏற்று அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். சிறுபான்மை இனங்களின் இனத்துவ அடையாளத்தின் (Ethnic Identity) அடிப்படையிலான அரசியல் கோரிக்கைகள் அதிகாரப் பகிர்வு மூலம் தீர்வு காணப்பட்டிருத்தல் வேண்டும். 1948இற்குப் பிற்பட்டக் காலத்தில் அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் தமிழ் மக்களின் அபிலாசைகளைக் கருத்திற் கொண்டு செயற்படாமல் அம்மக்களின் அரசியல் முனைவுகளை சர்வாதிகார வழிகளில் நசுக்க முயன்றன. இதன் விளைவாக இலங்கை ஆழமான பிளவுகளை உடைய சமூகமாக மாறியது என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

அரசியல் யாப்பை வரைதலும் பன்மைத்துவமும்

Constitutional Design and Diversity (அரசியல் யாப்பை வரைதலும் பன்மைத்துவமும்) என்னும் பகுதியில் கட்டுரையாசிரியர்கள் அரசியல் யாப்பு மறுசீரமைப்பு அல்லது சீர்திருத்தம் (Constitutional Reform) ஓர் ஒற்றுமையான கூட்டு முயற்சி எனவும், சில அடிப்படையான நியமங்களை (Norms) ஏற்றுக்கொண்டு அரசியல் வகிபாகம் ஏற்போர் (Political Actors) செயற்பட வேண்டும் எனவும் கூறுகின்றனர். இலங்கையின் அரசியல் சமூக பன்மைத்துவம் என்ற யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு ஏற்றுக்

கொள்ளும் போதுதான் அதிகாரப்பகிர்வு (*Power Sharing*) தேவையானது என்பதை உணர்ந்து செயற்பட முடியும் என்பது இப்பகுதியில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

புதிய அரசியல் யாப்பை வரைதல் என்பது கூட்டான முடிவெடுத்தல் (*Collaborative Decision Making*) ஆகும் என்பதும் இப்பகுதியில் வலியுறுத்தப்பட்டுள்ளது (பக். 23). அதிகாரப் பகிர்வை எப்படிச் செய்தல் வேண்டும் என்பதற்கு உதாரண முன்மாதிரிகள் பல உள்ளன. அவற்றுள் பொருத்தமானவற்றைத் தேர்வு செய்து கொள்ளும் விரிந்த தெரிவுகள் (*Broad Options*) உள்ளன என்றும் இப்பகுதியில் கூறப்பட்டுள்ளது.

இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ள ஆவணங்கள்

இத்தொகுப்பு நூலில் 80 ஆண்டுகாலத்தில் (1926 - 2006) வெளியான 51 ஆவணங்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இந்த 51 ஆவணங்களும் அரசியல் யாப்பு ஆவணங்களாகவும், அரசியல் ஆவணங்களாகவும் (*Constitutional and Political Documents*) அமைந்துள்ளன. இந்த ஆவணங்கள் யாவும் 37 அத்தியாயங்களின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அத்தியாயத்தின் கீழும் சேர்க்கப்பட்டுள்ள ஆவணங்கள் குறித்துப் பதிப்பாசிரியர்களின் குறிப்புகள் (*Commentaries*) தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு அத்தியாயத் தலைப்பும், உள்ளடக்கப்பட்டுள்ள ஆவணங்களின் விடயப்பொருளைச் சுட்டுவதாக அமைந்துள்ளது.

இத்தொகுப்பு நூலிற்கு வழிகாட்டியாக அமையக் கூடிய வகையில் 37 அத்தியாயங்களினதும் தலைப்புகளின் அட்டவணை இக்கட்டுரையின் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளது.

பின்னிணைப்பு - 1

தொகுப்பு நூலின் அத்தியாயத் தலைப்புகள்

- சமஷ்டிக் கருத்துப் பற்றிய ஆரம்பக்காலக் கருத்துரைகள் 1926-1935
- டொனமூர் அரசியல் யாப்பு (1931)
- லியனார்ட் வூல்வ் அவர்களின் பிரேரணை (1938)
- இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்மொழிவுகள் - இலங்கைத் தேசிய காங்கிரசிற்குச் சமர்ப்பித்த அறிக்கை.
- கெனமன் - வைத்தியலிங்கம் இணைந்து சமஷ்டி அரசியல் யாப்புத் தொடர்பாக முன்வைத்த பிரேரணை.
- மந்திரிசபையின் வரைவு (1944)
- சோல்பரி ஆணைக்குழு அறிக்கை (1945), சோல்பரி அரசியல் யாப்பு (1946-47)
- சோல்பரி அரசியல் யாப்பின் 29ஆம் பிரிவு: சிறுபான்மையினருக்கான பாதுகாப்பு.
- சமஷ்டிக் கருத்தும் சமஷ்டிக் கட்சியும்
- பண்டாரநாயக்க - செல்வநாயகம் உடன்படிக்கை (1957)
- டட்லி சேனநாயக்க - செல்வநாயகம் உடன்படிக்கை (1965)
- சமஷ்டி அரசுக்கான மாதிரி வரைவு (1970)
- வட்டுக்கோட்டைத் தீர்மானம் (1976)
- அமிர்தலிங்கம் 'ட்ரயல் அட் பார்' (*Trial at Bar*) வழக்கு
- மாவட்ட அபிவிருத்தி சபைகள் சட்டம் (1980)
- திம்புக் கோட்பாடுகள் - முன்னரும் பின்னரும் (1983-1987)
- இந்தியாவின் தலையீடு (1987-1988)
- அரசியல் யாப்புக்கான 13ஆவது திருத்தம் (1987)
- மங்கள முனசிங்க முன்மொழிவுகள்
- அரசியல் யாப்புத் திருத்த இயக்கத்தின் சிபார்சுகள் (1994)
- இலங்கை ஒன்றியத்திற்கான அரசியல் யாப்பு வரைவுச் சட்டகம் (1995)
- அரசியல் யாப்பைத் திருத்தும் முயற்சிகள் (1995-2000)
- அரசியல் யாப்பைத் திருத்துதல் தொடர்பாக அரசாங்கத்தின் முன்மொழிவுகள் (1995)
- அரசியல் யாப்பைத் திருத்துதல் தொடர்பாக அரசாங்கத்தின் முன்மொழிவுகள் (1996)
- அரசியல் யாப்பைத் திருத்துதல் தொடர்பாக அரசாங்கத்தின் முன்மொழிவுகள் (1997)
- அரசியல் யாப்பைத் திருத்துதல் தொடர்பாக அரசாங்கத்தின் முன்மொழிவுகள் (2000)
- சிங்கள ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை
- ஒஸ்லோ பிரகடனம் (2002)
- தற்காலிக நிர்வாக சபை (2003)
- தற்காலிக நிர்வாக சபை (ISGA) தொடர்பாக விடுதலைப் புலிகள் அமைப்பு அரசாங்கத்திற்கு அனுப்பிவைத்த முன்மொழிவு (2003)
- விடுதலைப்புலிகள் அமைப்பும் இலங்கை அரசும் இணைந்து வெளியிட்ட பிரகடனம் (2002)
- ஒலுவில் பிரகடனம் (2003)
- சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் யாப்புத் திருத்தச் செயல்முறை தொடர்பாக வெளியிட்ட கொள்கை அறிக்கை.
- சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் 'GESERA' சிபார்சு (2008) (*GESERA - Greater South East Autonomous Area Proposal*)
- உடன்பாடு அடைதலை அண்மித்தல் (2005-2006)
- வடக்கு - கிழக்கு இணைப்பு: உயர் நீதிமன்றின் நீதித் தீர்ப்பு (2006)
- நிச்சயமற்ற எதிர்காலம் (2006-2008)
- அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுச் செயல்முறை (2006)

கோப்பி, தேயிலைத் தோட்ட உழைப்பிற்காக இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட இலங்கை மலையகத் தமிழர்கள், 200 ஆண்டுகள் கழித்தும் தங்கள் வழிபாட்டு மரபுகளையும், சடங்கு முறைகளையும் தக்கவைத்துக் கொண்டுள்ளனர். அவர்களின் சமூக வாழ்வியலில் வழிபாடு அல்லது சடங்கு என்பது வெறும் மத நிகழ்வன்று; அது சமூகத்தின் தொடர்ச்சியை வெளிப்படுத்தும் உயிர்த்துடிப்புள்ள பண்பாட்டுச் செயல்முறையாகவும் உள்ளது. எனினும், சமகால மாற்றங்களால் இச்சடங்குகள் அருகி வருவதால், அவற்றை ஆவணப்படுத்தும் தேவை உண்டாகின்றது. சடங்குகளை வெறும் வாய்மொழித் தகவல்களாக அல்லாமல், நேரடிச் செயல், இசை, உணர்வியல் ஆகியவற்றின் நிகழ்த்துகை (Performance) வடிவமாகப் புரிந்துகொள்ள, நிகழ்த்துகை ஆய்வு அணுகுமுறை அவசியமாகின்றது. அந்தவகையில் இத்தொடர் 'நிகழ்த்துகை நோக்கில் மலையகத்தின் வழிபாடுகளும், சடங்குகளும்' எனும் தலைப்பில் எழுதப்படுகின்றது. இது வாழ்க்கைச் சடங்குகள், வழிபாட்டுச் சடங்குகள், கலைகளோடு இணைந்த சடங்குகள் எனப் பல அடுக்குகளில் ஆராயப்படும். நிகழ்த்துகை முறைமைகளை ஆவணப்படுத்துவதன் மூலம், மலையகத் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு அடையாளம், வரலாறு ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கான முயற்சியாகவும் இது அமையும்.

மலையகத்தில் நிகழ்த்தப்படும் இராமர் பஜனை

மெய்யநாதன் கேதீஸ்வரன்

மெய்யநாதன் கேதீஸ்வரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நாடகமும் அரங்கியலும் துறை விரிவுரையாளராக பணியாற்றுகின்றார். இவர் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நாடகம் மற்றும் அரங்கியல் துறையில் இளங்கலைமாணிப் பட்டமும், பாண்டிச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் அரங்கக் கலைகள் துறையில் முதுகலைமாணிப் பட்டமும் பெற்றுள்ளதோடு, தனது கலாநிதிப்பட்ட ஆய்வை 'பரோடா மகாராஜா சயாஜிராவ் பல்கலைக்கழகத்தில்' மேற்கொண்டுவருகிறார். நாடக எழுத்தாக்கம், நடிப்பு, நெறியாள்கை என்ற அடிப்படையில் நாடகச் செயற்பாட்டாளராக பல்வேறு அரச விருதுகளையும் பெற்றுள்ளார். இவர் நவீன நாடகம், கூத்து மற்றும் தமிழ் பண்பாட்டு மரபுகள் குறிப்பாக மலையக பாரம்பரிய வாழ்வியல், கலை மற்றும் பண்பாடுகள் பற்றி பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச ஆய்வு மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை முன்வைத்துள்ளார். சகதிப்புழுக்கள் இவரது நாடகப்பனுவல்களின் தொகுப்பு ஆகும்.

சடங்கு என்பது மனித நாகரிகத் தொடக்கத்திலிருந்தே தனிமனிதனையும் சமூகத்தையும் ஒழுங்குபடுத்தவும், இயற்கையின் விபரீதங்களிலிருந்து தம்மைத் தற்காத்துக் கொள்ளவும் உருவாக்கப்பட்ட ஒரு குறியீட்டு நடத்தை அமைப்பாகும். இயற்கையோடு இயைந்து வாழ்ந்த ஆதி மனிதன் இடி, மின்னல், பெருமழை, கொடிய நோய்கள், கொடிய விலங்குகள் போன்ற தன் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சக்திகளைக் கண்டு அஞ்சிய வேளையில், அவற்றை ஆற்றுப்படுத்தவும் கட்டுப்படுத்தவும் பாவனைகள் (Mimicry), சைகைகள், தாள அசைவுகள் மூலம் மேற்கொண்ட வழிபாட்டு முறைகளே சடங்குகளாக நிலைபெற்றன. இத்தகைய கூட்டுச் சடங்குகளின் உடலசைவுகளும், குரல் எழுப்புதல்களும், வேடமிடுதலுமே பிற்காலத்தில் நிகழ்வுக் கலைகளாகவும் (Performing Arts) நாடக வடிவங்களாகவும் வளர்ச்சி கண்டன.

இலங்கையின் மலையகத்தில் வாழும் மலையகத் தமிழ் மக்கள், 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரித்தானிய காலனித்துவ அரசால் கோப்பி, தேயிலை, ரப்பர் போன்ற பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்காகத் தமிழ்நாட்டின் மதுரை, திருச்சி, தஞ்சாவூர், இராமநாதபுரம் முதலான பல்வேறு மாவட்டங்களிலிருந்து தொழிலாளர்களாக அழைத்து வரப்பட்டவர்கள் ஆவர். இம்மக்கள், கடல்கடந்து வந்தபோதும் தங்களின் மரபார்ந்த வழிபாடுகள், சடங்குகள், கலை வடிவங்கள், பேச்சுமொழி வழக்குகளைத் தங்களின் இருத்தலுக்கான பண்பாட்டு அடையாளங்களாகப் பேணிப் பாதுகாத்து வந்துள்ளனர்.

இம்மலையக மக்களின் பாரம்பரிய சடங்கியல் ஆற்றுகைகளில் தனித்துவமானதாகத் திகழ்வது 'மார்கழி மாதத்து இராமர் பஜனை' ஆகும். இலங்கையின் பிற பகுதிகளில் மார்கழி மாத வழிபாடானது பிரதானமாகச் சைவ மரபிலான 'திருவெம்பாவை' சார்ந்ததாக அமைந்திருக்க, மலையகத்தில் மட்டும் வைணவச் சார்புடைய 'இராமர் பஜனை' ஒரு கூட்டு ஊர்வலச் சடங்காகவும், அரங்க ஆற்றுகையாகவும் நிலைபெற்றுள்ளமை தனித்துவமான அம்சமாகும்.

இக்கட்டுரையானது, என்னுடைய பங்குகொள் அனுபவத்தினையும் அத்தோடு ஆய்வு நோக்கில் பெறப்பட்ட தரவுகளையும் கொண்டு அமையப்பெற்றுள்ளது. 2004ஆம் ஆண்டு, சுமார் 22 வருடங்களுக்கு முன், நான் சிறுவனாக இருக்கும்போது இராமர் பஜனையில் இராமன் வேடமேற்கும் வாய்ப்புக் கிடைத்து, கம்பத்தைத் தூக்குகிறேன். அதன் பிறகு நான் பல்கலைக்கழகம் செல்லும் வரையில் ஒவ்வொரு வருடமும் பஜனைக் குழுவில் ஒருவராகப் பயணித்திருக்கிறேன். இந்த அனுபவம் இக்கட்டுரையில் பிரதிபலிக்கும். அத்தோடு இக்கட்டுரை இராமர் பஜனையின் தோற்றம், அது தஞ்சை, மராட்டிய மரபிலிருந்து தமிழகத்திற்குப் பரவி நாட்டுப்புற வடிவமாக மாறிய இயக்கவியல், மலையகத்திற்கு இடம்பெயர்ந்து பெருந்தோட்டச் சூழலுக்கேற்பத் தகவமைக்கப்பட்ட முறைமை, தற்கால மலையகத்தில் நிகழ்த்தப்படும் விரிவான சடங்கியல், அரங்கியல் படிநிலைகள் மற்றும் சமஸ்கிருத மேற்தட்டு வர்க்க வழிபாட்டு முறைமை எவ்வாறு விளிம்புநிலை மக்களின் சமூக விடுதலைக்கான கூட்டு வழிபாடாக உருமாற்றம் பெற்றது போன்றவற்றை அதன் ஆற்றுகைப் பண்புகளினூடாக விரிவாக ஆராய்கிறது.

பஜனை என்பது சமஸ்கிருதத்தின் 'பஜ்' (வழிபடுதல், பகிர்தல் அல்லது ஈடுபடுதல்) என்ற வேர்ச்சொல்லிலிருந்து பிறந்ததாகும். இறைவனின் நாமங்களை இசையோடும் தாளத்தோடும் கூட்டுணர்வாகப் பாடிப் பரப்பும் ஒரு பக்தி வடிவமாக இது அமைகின்றது. பக்தி இயக்கம் என்பது வரலாற்றின்படி கி.பி. 7ஆம் நூற்றாண்டளவில் தமிழ்நாட்டில் ஆழ்வார்களாலும் நாயன்மார்களாலும் தோற்றுவிக்கப்பட்டு, பின்னர் இந்தியா முழுவதும் பரவிய ஒன்றாயினும், பிற்காலத்தில் இசை, நடனம், கூட்டு வழிபாட்டு நெறிமுறைகள், ஒழுங்கமைக்கப்பட்ட 'பஜனை முறைமை' என்பன மீண்டும் வடஇந்தியாவிலிருந்து மறுவடிவம் பெற்று தென்னகத்திற்குள் மீள்நுழைவு பெற்றன. குறிப்பாகக் கிருஷ்ணர் மற்றும் இராம வழிபாடுகள்.

வடஇந்தியப் பண்பாட்டு வெளியில் வால்மீகி இராமாயணத்தைத் தொடர்ந்து, 16ஆம் நூற்றாண்டில் துளசிதாசர் இயற்றிய 'ராமசரிதமானஸ்' பெருவாரியான பொது மக்களிடையே இராம பக்தியை வேரூன்றச் செய்தது. அங்கு இராமனின் வாழ்வியல் நிகழ்வுகள் 'ராம்லீலா' என்ற திறந்தவெளி ஊர்வல நாடகங்களாகவும், பக்திப் பாடல்களாகவும் ஆண்டுதோறும் நிகழ்த்தப்பட்டன. மேலும், மகாராஷ்டிர மாநிலத்தில் கி.பி. 13 முதல் 17ஆம் நூற்றாண்டுகளில் தழைத்தோங்கிய 'வர்காரி மரபு' (Warkari Sampradaya) நாமதேவர், ஞானேஸ்வர், ஏக்நாத், துக்காராம், சமர்த்த ராமதாசர் போன்ற துறவியரின் தலைமையில் நாமசங்கீர்த்தனத்தை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றியது. இராமதாசரின் 'ராமதாசி கீர்த்தனை' முறையும், விட்டலனைப் போற்றிப் பாடும் அபங்க பஜனைகளும், சாக்கிரி பஜனை (வட்ட நடனம்), சோங்கி பஜனை (வேடமிட்டு ஆடும் பஜனை) போன்ற மக்கள்சார் கலைகளும் அடித்தட்டு

மக்கள் மத்தியில் பரவலாயின. இவ்வாறான மரபு எவ்வாறு தமிழகத்திற்கு பரவலடைந்தது என ஆராயும் போது மேலும் சில தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

கி.பி. 1676இல் தஞ்சாவூரில் சத்ரபதி சிவாஜியின் சகோதரரான வெங்கோஜி (ஏகோஜி) தலைமையில் மராட்டியர் ஆட்சி நிறுவப்பட்டது. இந்த அரசியல் மாற்றமானது வடநாட்டுப் பக்தி வடிவங்களும் மராத்தியக் கீர்த்தனை மரபுகளும் தமிழகத்திற்குள் பரவ வழிகோலியது. தஞ்சைக்கு வருகை தந்த சாதுக்களும் கீர்த்தனைப் பாடகர்களும் மராத்திய ‘அபங்கங்களையும்’, நாமசங்கீர்த்தன முறைகளையும் அறிமுகப்படுத்தினர்.

இக்காலகட்டத்தில் வாழ்ந்த பஜனை சம்ப்ரதாய மூவர்களான, போதேந்திர சரஸ்வதி சுவாமிகள் (நாம சித்தாந்தத்தை நிறுவியவர்), ஸ்ரீதர வெங்கடேசர், மருதாநல்லூர் சத்குரு சுவாமிகள் ஆகியோர் இணைந்து, மராத்திய பஜனை முறையையும் தென்னாட்டுச் செவ்வியல் கர்நாடக இசையையும் ஒருங்கிணைத்து ‘தட்சிண பாரத பஜனை சம்ப்ரதாயம்’ என்ற முறையான வழிபாட்டு நெறியை உருவாக்கினர். இச்சம்ப்ரதாயத்தில், தஞ்சை திருவையாறில் வாழ்ந்த ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் இராமபிரான் மீது தெலுங்கு மற்றும் சமஸ்கிருத மொழிகளில் இயற்றிய பல்லாயிரக்கணக்கான ‘திவ்ய நாமக் கீர்த்தனைகள்’ மற்றும் ‘உற்சவ சம்ப்ரதாயக் கீர்த்தனைகள்’ மையப் புள்ளியாக அமைந்தன.

இவ்வாறு காணப்பட்ட மரபுக்கு மாறாக, இவ்வழிபாடு தமிழக நாட்டார் தளத்தில் நாட்டுப்புறப் பஜனையாக எவ்வாறு உருமாற்றம் பெற்றது என்பது மிக முக்கியமான வினாவாகும். அக்ரஹாரங்களிலும் திருமடங்களிலும் சமஸ்கிருத மற்றும் தெலுங்கு மொழிகளில் செவ்வியல் இராகங்களுடன் பாடப்பட்ட இந்த பஜனை வடிவம், காவிரிக் கரையோரத்துக் கிராமப்புற உழைக்கும் மக்களின் கைகளுக்கு வந்தபோது முற்றிலுமாக மக்கள் மயப்பட்டது. அதில் முக்கியமானது மொழிமாற்றம். பொது மக்களுக்குப் புரியாத சமஸ்கிருத வரிகளுக்குப் பதிலாக, சீர்காழி அருணாசலக் கவிராயர் தமிழில் இயற்றிய ‘இராம நாடகக் கீர்த்தனைகள்’ மற்றும் நாட்டார் கதைப்பாடல்கள் பஜனைக்குள் புகுந்தன. அத்தோடு கம்பப் பஜனையின் போது, கிராமத்து மந்தைகளிலோ தெருக்களிலோ மரக்கம்பத்தை நட்டு அல்லது பந்தத்தை ஏற்றி, அதைச் சுற்றி ஆண்கள் வட்டமாக இருந்தும் நின்றும் பாடினர்.

தமிழகக் கிராமங்களில் காடுகளையும் புதர்களையும் திருத்தி உழைத்த மக்களுக்குப் பாம்பு, தேள் முதலான

இராமர் பஜனையில் கம்பம்

விஷப்பூச்சிகளின் அச்சுறுத்தல் அன்றாடம் இருந்தது. எனவே, விஷத்தை முறிக்கும் சக்தியாகக் கருதப்பட்ட கருடாழ்வாரைப் போற்றும் ‘கருடப்பத்து’ எனும் பத்துப் பாடல்களைக் கொண்ட நாட்டுப்புறத் துதி, பஜனையோடு இணைக்கப்பட்டது. விஷக்கடியைக் குணப்படுத்தவும் மாந்திரிகப் பயத்தைப் போக்கவும் பாடப்பட்ட கருடப்பத்து, நாளடைவில் அதிவேகத் தாளத்துடன் கூடிய பஜனையாக மாறி, பக்தர்கள் சாமி ஆடும் சடங்காகவே உருவெடுத்தது.

தஞ்சை மெலட்டூர் ‘பாகவத மேளா’ நாடகங்கள் மற்றும் கிராமப்புற ‘பாரிவேட்டை’ சடங்குகளில் மக்கள் இராமன், லட்சுமணன், நரசிம்மன் வேடங்களை அணிந்து ஆடினர். இத்தமிழக நாட்டுப்புறப் பஜனை மரபே, பின்னாளில் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் ஆன்மிக நாடகப் பண்பாடாக இலங்கைக்குப் பயணித்தது.

மலையகத்தின் கடுமையான குளிர், பனி, அட்டைக்கடி, தேயிலைக் காடுகளுக்குள் பதுங்கியிருந்த கொடிய பாம்புகள் தொழிலாளர்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக விளங்கின. இத்தகைய கொடிய சூழலில், தங்களை விஷப்பூச்சிகளிலிருந்தும் நோய்களிலிருந்தும் காக்கும் வழிபாட்டு அரணாகத் தமிழகத்திலிருந்து கொண்டுவந்த இராமர் பஜனையையும் கருடப்பத்து பாடல்களையும் அம்மக்கள் பற்றிக்கொண்டனர்.

மலையகத்தின் ஆரம்ப காலகட்டத்தில் இராமர் பஜனை மிக எளிய சடங்காகவே தொடங்கியது. மார்கழி மாதத்தின் அதிகாலை வேளையில், ஊர்ப்

பெரியவர்கள் அல்லது முதியவர்கள் ஒருவர் இருவர் எழுந்து, கைகளில் தீப்பந்தம் ஏந்தியும், சங்கு, சேகண்டிகளை ஒலித்துக்கொண்டும் லயன் காம்பிராக்களின் தெருக்களில் இராம நாமத்தை உச்சரித்தபடி வலம் வருவர். லயன் வீதிகளின் முனைகளிலும் கோயில்களிலும் சென்று வணங்கித் திரும்புவதே வழக்கமாக இருந்தது. இதில் இசைக்கருவிகளாகச் சங்கும் சேகண்டியும் மட்டுமே பிரதானமாக விளங்கின. சங்கு மற்றும் சேகண்டியின் உலோக அதிர்வு தீய சக்திகளையும், கொடிய விலங்குகளையும் விரட்டும் ஆற்றல் கொண்டது என்பது மக்களின் நம்பிக்கையாக அமைந்தது.

காலப்போக்கில் தலைமுறைகள் மாறும்போது, இந்த எளிய வடிவம் விரிவடைந்து தோட்டப் பொதுக் கோயில்களோடும், இளைஞர் குழுக்களோடும் ஒருங்கிணைக்கப்பட்டது. மலையகத்தில் இராமருக்கு எனத் தனி ஆலயங்கள் மிக அரிது. பெரும்பாலான தோட்டங்களில் உள்ள முத்துமாரியம்மன், காளியம்மன் அல்லது முருகன் ஆலயங்களின் ஒரு பகுதியிலேயே இராமர் கம்பத்திற்கும் படங்களுக்கும் இடமளிக்கப்பட்டது. இதில் இளைஞர்களின் பங்களிப்பு முக்கியமானது. மார்கழி மாதக் கடும் குளிரைத் தாங்க முடியாத முதியவர்களுக்குப் பதிலாக, தோட்ட இளைஞர்களும் சிறுவர்களும் பஜனைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர். வெறுமனே தீப்பந்தமாக இருந்த கம்பத்தின் வடிவம் மாறி, பித்தளை அல்லது செம்பினால் ஆன சங்கு, சக்கரங்கள், இராம நாமங்கள் பொறிக்கப்பட்ட ‘பஜனைக் கம்பம்’ (விளக்குக் கம்பம்) முதன்மை வழிபாட்டுச் சின்னமாக உருப்பெற்றது.

சமகால மலையக இராமர் பஜனையானது மார்கழி 1ஆம் திகதி தொடங்கி தைப்பொங்கல் (தை 1) மற்றும் அதற்கு அடுத்த நாள் வரை, சுமார் 31 நாட்கள் மிகக் கடுமையான விரத நெறிகளுடனும் பல அரங்கியல் சடங்குகளுடனும் நிகழ்த்தப்படுகின்றது. இதன் நிகழ்த்துகைப் படிநிலைகள் பின்வருமாறு அமைகின்றன:

மார்கழி மாதம் பிறப்பதற்கு 5 அல்லது 10 நாட்களுக்கு முன்பாகவே தோட்டத்து ஊர்ப் பெரியவர்கள், ஆலய நிர்வாகத்தினர் மற்றும் இளைஞர்கள் கூடி பஜனைக் குழுவை அமைப்பர். சில ஊர்களில் ஒரே குழுவே மூன்று முதல் ஐந்து வருடங்கள் வரை நிர்வாகத்தை நடத்தும்.

பின்னர் கம்பம் தூக்கும் நபரைத் தேர்ந்தெடுக்கும் சடங்கு மிகவும் முக்கியமானது. இராமர் கம்பத்தைச் சுமந்து செல்லும் நபர் மிகத் தூய்மையானவராகவும், உடல் - உள வலிமை மிக்கவராகவும் இருத்தல் வேண்டும். இதற்கான தெரிவு முறைகள் இரு வழிகளில் நிகழ்கின்றன. ஒன்று, சீட்டுக் குலுக்குதல் முறை. விருப்பமுள்ள திருமணமாகாத இளைஞர்களின் பெயர்களைத் துண்டுச் சீட்டுகளில் எழுதிப்போட்டு, ஆலயத்திற்கு வரும் சிறு குழந்தையைக் கொண்டு ஒரு சீட்டை எடுக்கச் செய்வர். அதில் வரும் நபரே கம்பம் தூக்குபவராகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.

இரண்டாவது, சாமி ஆடுதல் மற்றும் அருள்வாக்கு முறை. ஆற்றங்கரை அல்லது கோயிலில் குழுவினர் திரண்டு பஜனைப் பாடல்களைப் பாடி உருவேற்றுவர். பாடல்களின் அதிர்வில் அருள் வந்து ஆடி, பலிபீடத்தில் வைக்கப்பட்டிருக்கும் பூவை எடுப்பவரே (பெரியவர்கள் ஒரு பொருளை அல்லது பூ வகையைக் குறிப்பாக வைப்பர்; அதனைச் சரியாக எடுக்கும் முறையை குறிப்பெடுத்தல் அல்லது பூவெடுத்தல் என்பார்கள்) கம்பம் தூக்கும் நபராகத் தேர்வு செய்யப்படுவார். இச்செயன்முறை ஊருக்கு ஊர் வேறுபடும். சில ஊர்களில் ஒரு வருடத்தில் தெரிவு செய்யப்பட்ட நபர் ஐந்து வருடங்கள் அல்லது மூன்று வருடங்கள் கம்பம் தூக்குவார். இச்செயன்முறை, சமவாய்ப்பைத் தருவதாகவும், சாதி அடிப்படையிலோ பணத்தின் அடிப்படையிலோ பாகுபாடுகளைத் தவிர்த்து அனைவரும் சமமானவர்கள் என்பதை வலியுறுத்தும் வகையிலும் மலையகத்தில் பேணப்படுகின்றது.

இதன் தொடர்ச்சியாக கம்பம் பாலித்தல் மற்றும் காப்புக்கட்டுதல் சடங்குகள் இடம்பெறும். மார்கழி முதல் நாள் மாலையில் இச்சடங்கு தொடங்கும். கம்பம் சுமக்கத் தேர்வான இளைஞரை ஆற்றங்கரைக்கு அழைத்துச் சென்று, ஓடும் குளிர்ந்த நீரில் நீராடச் செய்வர். கம்பத்திற்குப் பால், இளநீர், சந்தனம் கொண்டு அபிஷேகம் செய்யப்படும். அதன் உச்சியில் ஒரு மாதமும் எரியக்கூடிய பந்தத் திரியானது எண்ணெயில் ஊறவைத்துக் கட்டப்படும். பெரியவர்கள் அல்லது பூசாரி ‘கருடப்பத்து’ பாடல்களைப் பாட, ஏனையோர் “கோவிந்தா... கோவிந்தா...” முழக்கமிடுவர்.

முதல் வருடம் கம்பம் சுமந்த நபர் மற்றும் வேடமிட்டோருக்குச் சாமி ஏறி அருள் ஆட்டம் வரும் (உருவேறி ஆடுவார்கள்). சில நேரங்களில் உருவேறும் அனைவரும் ஆவேசமாக ஆடுவார்கள். அச்சமயம் முந்தைய வருடம் கம்பம் சுமந்த நபரைத் தவிர மற்றவர்களைப் பூசாரி திருநீறு பூசி சாந்தப்படுத்துவார். முந்தைய வருடம் இராமராக வேடமணிந்த கம்பம் சுமந்தவர், புதிய இளைஞரின் தலையோடு அவரது தலையை மூன்று முறை மோதி, நெற்றியில் திருநீறிட்டு ‘குருவாக்கு’ வழங்கி கம்பப் பொறுப்பை ஒப்படைப்பார். அச்சமயம் புதிய கம்பம் சுமக்கும்

இளைஞரின் கையில் காப்புக் கட்டப்படும். கம்பத்தில் முதல் தீபம் ஏற்றப்பட்டு, பஜனைப் பாடல்களுடன் ஊர்வலமாக வந்து கோயிலில் வைக்கப்படும்.

மேலும் கம்பம் தூக்கும் இளைஞர் மற்றும் முக்கிய பஜனை இளைஞர்கள் 30 நாட்களும் தமது இல்லங்களுக்குச் செல்லாது ஆலய வளாகத்திலேயே தங்குவர். காலணிகள் அணிய மாட்டார்கள்; பாடசாலை செல்லும் மாணவராயின் செருப்பின்றியே சென்று வருவர். சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு நாள்தோறும் அதிகாலை 4.00 மணிக்கே துயிலெழுந்து, கம்பத் தீபத்தை ஏற்றி, சங்கு, சேகண்டி, டோலக்கு முழங்க லயன் காம்பிராக்களின் வீதிகளில் பஜனை பாடிச் செல்வர். பெண்கள் அதிகாலையிலேயே எழுந்து லயன் முற்றத்தைச் சாணமிட்டு மெழுகி, வண்ணக் கோலங்கள் இட்டு, பூக்களை வைத்து ஆயத்தமாக இருப்பர். கம்பம் வீட்டின் முன் வரும்போது, மஞ்சள் பூ கலந்த நீரால் கம்பத்தின் பாதங்களைக் கழுவி, விளக்குக்கு நல்லெண்ணெய் ஊற்றி, கற்பூர ஆரத்தி எடுப்பர். கால்களிலுள்ள பாவங்கள் நீங்கி, இராமரின் ஒளியால் தங்களின் லயன் இருள் நீங்கி வாழ்வு வளம் பெறும் என்பது அவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

இதில் மற்றுமொரு சிறப்பு அம்சம் என்னவெனில், கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றும் தொழிலாளர்கள் வாழும் சில பெருந்தோட்டச் சூழலில், நத்தார் பண்டிகையையொட்டி டிசம்பர் 25, 26, 27 ஆகிய திகதிகளில் அசைவ உணவு சமைக்கப்பட்டு விழாக்கள் கொண்டாடப்படும் என்பதால், அந்த மூன்று நாட்களும் கம்ப ஊர்வலம் இடைநிறுத்தப்படும். இது மலையகத்தின் தனித்துவமான மத நல்லிணக்கப் பண்பாகும். எங்கள் ஊரில் இது வழமையாகப் பின்பற்றப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் ஆங்கிலப் புத்தாண்டு அன்று அதிகாலையில் கம்பம் சுமப்பவர் குளிர்ந்த நீரில் குளித்துவிட்டு விசேட பொங்கல் வைப்பதற்கான ஏற்பாடுகளை பஜனை இளைஞர்களைக் கொண்டு செய்து முடிப்பார். பின்னர் பஜனைக் குழுத் தலைவர் அல்லது பூசாரி பொங்கல் பொங்குவார். பின்னர் அதிகாலை சூரிய உதயத்திற்கு முன்னர் கம்பம் ஊர்வலத்தைத் தொடங்கி அன்றைய நாள் மதியவேளையில் கோயிலை வந்தடையும். அச்சமயம் ஊர் மொத்தமும் பஜனையோடும் பக்தியோடும் வந்து வணங்கும். இச்செயல்முறை ஆங்கிலப் புத்தாண்டையும் மலையக மக்கள் கொண்டாடப் பழக்கப்படுத்திக் கொண்டுள்ளமையை எடுத்துக் காட்டுகின்றது.

மேலும் மார்கழி மாத வைகுண்ட ஏகாதசி அன்று காலை 7.00 மணிக்கே கம்ப விளக்கேற்றப்பட்டு, பஜனையாளர்கள் நாள் முழுவதும் விரதம் (உபவாசம்) இருப்பர். அன்று முழுவதும் பஜனைப் பாடல்கள் பாடி மகிழ்ந்திருப்பர். அதேவேளை சில இளைஞர்கள் சமையல் வேலைகளிலும் ஈடுபடுவர். மதியம் 2.00 மணியளவில் கருடப்பத்துப் பாடல்களைப் பாடி விரதத்தை நிறைவு செய்து, ஊர் மக்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்குவர்.

அதனைத் தொடர்ந்து தைப்பொங்கலுக்கு முந்தைய சடங்குகள் (மார்கழி இறுதி நாள்) இடம்பெறும். புதுவருடத்தன்று கம்ப ஊர்வலத்தின் போது பஜனைச் சிறுவர்கள் லயன்களின் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று ஒரு பிடி அரிசியைக் காணிக்கையாகப் பெறுவர். அத்தோடு சிலர் பணமாகவும் வழங்குவர். ஊரின் ஒட்டுமொத்தப் பாவங்களும் பீடைகளும் நீங்கவும், அடுத்த நாள் பொங்கலில் அனைவரும் சமமாகப் பங்கேற்கவும் இந்தப் பிடி அரிசி விரத உணவிற்காகப் பயன்படுத்தப்படும். அன்றைய தினம் தைப்பொங்கல் அன்று வேடமிடத் தேர்வான 3, 5 அல்லது 7 இளைஞர்கள் (இராமன், லட்சுமணன், அனுமன், சீதை, பரதன் வேடங்கள்), தங்களின் கிரீடங்கள், வில் அம்பு, தண்டாயுதம் முதலான வேடப் பொருட்களைப் பூசை அறையில் வைத்து, பொங்கல் சமைத்துப் படைத்து, விடியும் வரை 'வேசங்கட்டு விரதம்' மேற்கொள்வர். இவ்வலங்கார வேலைகள் தொடங்கும் முன்னர் கம்பம் திரி ஏற்றப்பட்டு பஜனைப் பாடல்கள் பாடப்படும். வழமையாக கிரீடம் மற்றும் ஏனைய பொருட்களைத் தயாரிக்கும் பெரியவர் தீபம் ஏற்றி மஞ்சள் தடவி இதனை ஆரம்பிப்பார்.

பொதுவாக இந்தப் பொருட்கள் 'கார்ட்போர்ட்' மட்டைகள் மற்றும் 'பிளாஸ்டிக்' பந்துகளைக் கொண்டும், நேரான தடிகளைக் கொண்டும் செய்யப்படுகின்றன. மரத்தடிகளை மறைப்பதற்காகப் பல்வேறு நிறங்களிலான துணிகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை ஆரம்ப காலத்தில் இயற்கைப் பொருட்களைக் கொண்டு செய்யப்பட்டன. உதாரணமாக, மரப்பட்டை மற்றும் இலைகள் போன்றவை. இவற்றை நிரந்தரமாகத் தயாரித்து வைக்கமாட்டார்கள்; காரணம், இறுதி நாள் இவை அனைத்தையும் குடிவிடுதல் மரபு. ஆகவே, நிரந்தரப் பொருட்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கின்றனர்.

இராமர் பஜனையின் தைப்பொங்கல் திருநாளை இச்சடங்கு நிகழ்வின் உச்சக்கட்ட அரங்கியல் ஆற்றுகையாகவும் நோக்கலாம். அதிகாலை 2.00 மணிக்கு வேடதாரிகளுக்கு ஒப்பனைகள் தொடங்கும். சூரிய உதய வேளையில் முற்றத்தில் பொங்கல் பொங்கும்போது, வேடதாரிகள் முகத்தைத் துணியால் மூடி மறைத்துச் செல்வர். தெய்வச் சிலைகள் சப்பரத்தில் ஏற்றப்படும் வரை அவர்களின் முகத்தைப்

பெண்களோ பொதுமக்களோ நேரடியாகப் பார்க்கக் கூடாது என்பது தீவிர சடங்கு விதியாகும். வசந்த மண்டபத்தில் உள்ள விக்கிரகங்கள் அலங்கரிக்கப்பட்டுச் சப்பரத்தில் ஏற்றப்படும். சப்பரத்தை இளைஞர்கள் தோள்களில் சுமக்க, அதற்கு முன்னால் கம்பத்தோடு வேடதாரிகள் ஊர்வலமாகச் செல்வர். இராமனாக வேடமிட்டவர் கம்பத்தைக் கையில் தாங்கி, அமைதியாகவும் கம்பீரமாகவும் நடந்து மக்களுக்குத் திருநீறு பூசி ஆசி வழங்குவார். லட்சுமணன், சீதை, பரதன் போன்ற வேடமணிந்தவர் இராமனின் பக்கபலமாகச் செல்வர். அவர்களுக்கு உருவேறும் போது தனித்தனியாக ஆடுவர். ஒவ்வொருவரின் ஆட்டமுறைகளும் வேறுபட்டதாக அமையும். அவை அவர்கள் ஏற்கும் பாத்திரங்களின் பண்பை வெளிக்கொணர்வதாக அமையும்.

ராமர் பஜனையில் அனுமானின் வேட உடை ஒப்பனைகள்

இச்சடங்கில் ஆட்டமுறை என்று நோக்கும் போது சிறப்பம்சம் வாய்ந்தது அனுமன் ஆட்டமாகும். அனுமன் வேடமிட்டவர் மிகுந்த துள்ளலோடும், சேட்டைகளோடும், ஆவேசத்துடனும் அங்கும் இங்கும் ஓடி ஆடுவார். சில நேரங்களில் லயன் கூரைகள் மீதும், மரக்கிளைகள் மீதும் தாவி ஏறி வித்தைகளைக் காட்டுவார். பக்தர்களின் பூசைத் தட்டில் காணப்படும் தேங்காய் மற்றும் வெற்றிலை, பழங்கள் என்பவற்றையும் எடுத்துக் கடித்து விளையாடி சிறுவர்களுக்கும் வழங்குவார். மக்கள் ஆரவாரத்தோடு இதனை ரசித்து அருள் பெறுவர்.

இறுதியாக மாலையில் ஊர்வலம் முடிந்ததும், மாதம் முழுவதும் பயன்படுத்தப்பட்ட பூமாலைகள், மஞ்சள் துணிகள், கம்பத்தின் திரிகள் அனைத்தும் பைகளில் கட்டப்பட்டு ஆற்றங்கரைக்கு எடுத்துச் செல்லப்படும். எல்லாக் காவல் தெய்வங்களுக்கும் நன்றி கூறி, அவை ஆற்று நீரில் விடப்படும். இதனைக் கம்பம் குடிவிடுதல் எனக் குறிப்பிடுவார்கள். இது ஊரின் ஒட்டுமொத்தத் துன்பங்களையும் கரைக்கும் ‘கழிப்புக் கிரியை’ ஆகும். குடிவிடுதல் சடங்கு முடிந்ததும் அனைவரும் குளித்ததும், அதே நனைந்த உடலோடு பெரியவர்கள் அல்லது பூசாரியால் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்படுவர். வீட்டின் வாசலில் வேடதாரிகள் அனைவருக்கும் ஆரத்தி மற்றும் கற்பூர ஆராதனைகள் வேடதாரிகளின் உறவினர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். அத்தோடு கண்ணேறு கழிப்பும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். வேடதாரி வீட்டின் வாசலுக்கு வந்ததும் இவை அனைத்தும் செய்யப்படும். வேடதாரி வீட்டிற்குள் அழைத்துச் செல்லப்பட்டு, சாமிப்படம் வைக்கப்பட்டிருக்கும் இடத்தில் அமர்த்தப்படுவார். அங்கு பூசாரி சத்தமிட்டு, வேடதாரியின் மீது திருநீறு பூசி, அவருள் ஏறியிருக்கும் உருவை முழுமையாக இறங்கச் செய்வார். பின்னர் வேடதாரி குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்படுவார்.

இவ்வீடுகளுக்கு அழைத்துச் செல்லும் சடங்கு சில ஊர்களில் பொங்கலுக்கு மறுநாள் இடுமண் பூசையோடு நிகழ்த்தப்படும். பொங்கலுக்கு மறுநாள் காலை, வேடமிட்டவர்களின் முகத்தை மூடி, அவர்களது இல்லங்களுக்கு அழைத்துச் சென்று, குடத்து நீரால் குளிக்கச் செய்து, விளக்கேற்றி, முதியவர்களிடம் ஆசி பெறச் செய்வர். இதன் தொடர்ச்சியாக மாலையில் நிகழும் மிக உன்னதமான சடங்கு ‘இடிமண்’ விருந்தாகும். முப்பது நாட்களாகச் சாதி, குல பேதமின்றி ஒன்றாக விரதமிருந்த பஜனைக் குழுவினர் அனைவரும் ஓர் இல்லத்தில் ஒன்று கூடி, கருவாட்டுக் குழம்பும் சோறும் சமைத்து ஒரே பந்தியில் அமர்ந்து உண்பர். சைவ ஆசாரத்தோடு தொடங்கிய ஒரு வைணவ வழிபாடு, இறுதியாக விளிம்புநிலை உழைக்கும் மக்களின் அடையாள உணவான ‘கருவாட்டுச் சாப்பாட்டுடன்’ கூட்டுச் சமூக விருந்தாக நிறைவுபெறுகின்றது. இது, மேற்தட்டு ஆதிக்கத்தை மக்கள் பண்பாடு எவ்வாறு தன்வயப்படுத்தியது என்பதன் உச்சக்கட்டச் சான்றாகும்.

மலையக இராமர் பஜனையை நிகழ்த்துகை நோக்கில் ஆராயும் போது ஆற்றுகைக் கூறுகள் முக்கியம் பெறுகின்றன. இதனை வெறும் வழிபாட்டுச் சடங்காக மட்டும் குறுக்கிவிட முடியாது; அது நாடகத்தின் ஆதி வடிவங்கள் அனைத்தையும் தன்னுள் கொண்ட ஒரு நகரும் அரங்கமாகும் (*Processional Mobile Theatre*).

நிகழ்ச்சி நடக்கும் களம் நிலையான மேடையாக இல்லாமல், கோவில், லயன் காம்பிராக்கள், தேயிலைத் தோட்ட மலைப் பாதைகள் மற்றும் ஆற்றங்கரை என அனைத்துத் திறந்தவெளிகளுமே நாடக அரங்கமாக மாறுகின்றன. பார்வையாளர் வேறு, நடிகர் வேறு என்ற எல்லை தகர்க்கப்படுகிறது. லயன் வாசலில் கோலமிட்டு

நிற்கும் பெண்களும் பஜனை பாடும் இளைஞர்களும் ஆற்றுகையின் நேரடிப் பங்காளர்களாகின்றனர்.

இராமன், லட்சுமணன், சீதை, ஆஞ்சநேயர் ஆகியோருக்கான கிரீடங்கள், வில், அம்பு, வால், முகவர்ணங்கள் மற்றும் ஆடை அலங்காரங்கள் பாத்திரப் படைப்பிலும் ஒப்பனையிலும் இடம்பெறுகின்றன.

சாந்தமான இராமனின் கம்பீரம், அனுமனின் தாளத்திற்கேற்ப துள்ளிக் குதிக்கும் ஆவேசக் குரங்கு நடனம், மரங்களிலும் கூரைகளிலும் தாவும் இயங்குநிலை ஆகியவை அபிநயத்திலும் உடல்மொழியிலும் (*Body Language*) வெளிப்படுகின்றன.

அத்தோடு, சங்கு, சேகண்டியின் உலோக அதிரொலி, டோலக்கு, சலங்கை, சில வேளைகளில் தப்பு, உடுக்கு ஆகியவற்றுடன் சினிமா மற்றும் நாட்டுப்புற மெட்டுகளிலான விரைவு தாளக்கதியும் ஒலி மற்றும் இசையமைப்பில் இடம்பெறுகின்றன. பல ஊர்களில் காமன் கூத்து பாடல்களினதும் பொன்னர் சங்கர் பாடல்களினதும் மெட்டுகளும் வரிகளும் மாற்றப்பட்டுப் பாடப்படுகின்றன.

மேலும், தீபக் கம்பம் (ஒளியின் குறியீடு), முக்கோணக் கொடிகள், திருநீறு, மஞ்சள் நீர், பிடி அரிசி ஆகியவை குறியீட்டுப் பொருள்களாக (*Props*) பயன்படுத்தப்படுகின்றன.

பஜனைப் பாடல்களின் தாளம் உச்சக்கட்டத்தை எட்டும்போது, பாடகர்களும் வேடதாரிகளும் உருவேறி ஆடுதல் (*Transcendental Trance*) என்பது, பாத்திர நிலையிலிருந்து அதிமானுடத் தன்மையை நோக்கிச் செல்லும் ஒரு முறைமையை உணர்த்துகின்றது.

மேலும், ஒரு மேட்டுக்குடி வர்க்கத்தின் சம்பிரதாய மற்றும் சமஸ்கிருத வழிபாட்டு வடிவம், மலையகத்தின் விளிம்புநிலை உழைக்கும் மக்களின் வழிபாட்டு வடிவமாக எவ்வாறு உருமாறியது என்பதை ஆராய்வது, சமூகவியல் மற்றும் நாட்டார் வழக்காற்றியல் நோக்கில் மிகவும் இன்றியமையாததாகும்.

வரலாற்று ரீதியாகச் சாதியக் கொடுமைகளால் பெருங்கோவில்களுக்குள் நுழையும் உரிமை மறுக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்கள், இறைவனின் திருநாமத்தை உச்சரிப்பதற்குக் குலமோ, தகுதியோ, பணமோ தடையாக இல்லை என்ற தத்துவத்தைத் தங்களின் கருவியாகக் கொண்டனர். ஆகமக் கோயில்களுக்கு வெளியே, தங்களின் லயன் காம்பிராக்களின் முற்றங்களிலேயே கம்பத்தை நட்டு, விளக்கேற்றி, இராமனைத் தங்களின் வீடுகளுக்கு வரவழைத்தனர். கருவறைக்குள் அடைக்கப்பட்டிருந்த கடவுளை வீதிக்குக் கொண்டுவந்து மக்களுடன் இணைத்த செயல்முறையாக இது அமைந்தது.

அத்தோடு, மடங்களிலும் சபாக்களிலும் தியான நிலையில் அமைதியாகப் பாடப்பட்ட கீர்த்தனைகள், பகல் முழுவதும் தேயிலைக் காடுகளில் அட்டைக் கடிக்கும் குளிருக்கு நடுவே உடலை வருத்தி உழைத்த மக்களின் கைகளுக்கு வந்தபோது உருமாற்றம் பெற்றன. அவர்களின் தசைநார் வலியையும் மனச்சோர்வையும் போக்கும் வகையில், பஜனையின் தாளக்கதி (*Tempo*) அதிவேகமாக மாற்றப்பட்டது. எளிய நாட்டார் மெட்டுகளும் சினிமாப் பாடல்களின் சந்தங்களும் உள்வாங்கப்பட்டு, கைதட்டி, கால்களைத் தரையில் உதைத்து ஆடும் கூட்டு ஆசுவாசக் கொண்டாட்டமாக அது மலர்ந்தது. புரிந்துகொள்ள முடியாத சமஸ்கிருத சுலோகங்களுக்குப் பதிலாக, தொழிலாளர்களின் அன்றாடப் பேச்சுவழக்குத் தமிழிலேயே பாடல்கள் இயற்றப்பட்டன.

உதாரணமாக, “ஆண்ட கணபதியே ராமர் தொண்டர்க்கு அருள் புரிவார்... அயோத்தி ஆண்டவரே ராமர், ராவணனை வென்றவரே...”

“பத்தினி கும்பங்கள் கம்பம் வைத்து புகழ் பாடிடுவோம் அருள் தேடிடுவோம்

பாரளந்த அந்த மாயவன் நமத்தை பாடிடுவோம் ஒன்றாய்க் கூடிடுவோம்”

“இராமன் துதி பாடவே சேர்ந்து வாருங்கள் இராமர் அவதாரனை மகிழ்ந்து கூறுங்கள்”

“வாசலில் கோலமிட்டு ராமர் வரும் வரை காத்திருப்போம்...”

போன்ற எளிய வரிகள் இராமனை எங்கோ இருக்கும் வேதக் கடவுளாக அன்றி, தங்களின் லயன் வாசலுக்கு வரும் சொந்தக் குடும்பத்துப் பிள்ளையாக மாற்றின. சமஸ்கிருத வழிபாட்டு முறைகளில் ஆசாரமும், ‘தீட்டுப் புனிதம்’ சார்ந்த கடுமையான விதிகளும் முதன்மைப்படுத்தப்படும். ஆனால், மலையகப் பஜனைப் பாடல்களில் இத்தகைய ஆசாரங்கள் பகடி செய்யப்பட்டுத் தகர்க்கப்படுகின்றன:

உதாரணமாக,

“எச்சில் கலந்தாலும் இங்கே இறக்கப் பாயுமே மனம்

இயற்கையாகத் தீட்டுப் பட்டால் எட்டப் போகுமே மனம்...”

என்பதன் மூலம், மனித உழைப்பும் அன்பும்தான் முதன்மையானதே தவிர, செயற்கையான தீட்டுக் கோட்பாடுகள் இறைவழிபாட்டிற்குத் தடையல்ல என்ற விளிம்புநிலை மக்களின் குரல் பதிவு செய்யப்படுகிறது. மேலும், சடங்கின் இறுதியில் நடைபெறும் 'கருவாட்டுச் சோறு' உண்ணும் 'இடிமண் விருந்து', பிராமணியச் சைவ உணவுக் கோட்பாட்டைத் தகர்த்து, உழைக்கும் மக்களின் பண்பாட்டை வழிபாட்டின் உச்சக்கட்ட அங்கமாக நிறுவுகிறது.

அத்தோடு, மலையகத் தோட்டங்களில் சாதிக் கட்டமைப்புகளின் எச்சங்கள் இருந்தபோதிலும், இராமர் பஜனை நிகழும் ஒரு மாத காலத்தில் அனைவரும் சாதி வேறுபாடின்றி ஒன்றிணைகின்றனர். ஒரே பஜனைக் குழுவில் பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த இளைஞர்களும் இணைந்து, விரதமிருந்து கம்பத்தைச் சுமக்கின்றனர். அத்தோடு, 'பிடி அரிசி' சேகரிப்பதன் மூலம் ஏழை, பணக்காரன் என்ற பேதமின்றி ஒட்டுமொத்தத் தோட்டச் சமூகமும் ஒரு பொதுத் தளத்தில் சங்கமிக்கின்றது.

தொகுத்து நோக்கும்போது, இலங்கையின் மலையகத்தில் நிகழ்த்தப்படும் இராமர் பஜனை என்பது வெறும் பக்தி மார்க்கம் சார்ந்த மதச் சடங்கு மட்டுமல்ல; அது இருநூறு ஆண்டுகால வரலாற்றுத் துயரங்களைச் சுமந்த ஒரு புலம்பெயர் சமூகத்தின் பண்பாட்டுத் தற்காப்பு அரணாகும். வடஇந்தியாவிலும் தஞ்சாவூர் திருமடங்களிலும் மேட்டுக்குடி வர்க்கத்திற்குரியதாகவும், சமஸ்கிருத செவ்வியல் வடிவமாகவும் விளங்கிய இராமர் வழிபாடு, மலையக உழைக்கும் மக்களின் கைகளில் தவழ்ந்தபோது, அதன் மேட்டிமைத் தடைகளை உடைத்துக்கொண்டு நாட்டார் கலை வடிவமாகப் புத்துயிர் பெற்றது. கொடும் குளிரையும் லயன் வாழ்வின் இருளையும் விரட்டும் கம்பத்தின் சுடரொளியாகவும், விஷப்பூச்சிகளிடமிருந்தும் பீடைகளிலிருந்தும் காக்கும் கருடப்பத்து மந்திரமாகவும், தங்களின் அடிமை வாழ்வின் வலிகளை மறக்கடிக்கும் அனுமரின் ஆவேசக் கூத்தாகவும், சாதிய ஆதிக்கங்களைத் தகர்த்து ஒன்றுபடுத்தும் இடிமண் கூட்டு விருந்தாகவும் இராமர் பஜனை மலையகத்தில் தன்னைத் தகவமைத்துக்கொண்டுள்ளது. சடங்கையும் நாடகத்தையும் தங்களின் கூட்டு வாழ்வியலோடு பிணைத்து, மரபைப் பாதுகாக்கும் அதேவேளையில் தற்கால மாற்றங்களையும் உள்வாங்கி வாழும் மலையகத் தமிழர்களின் இந்த இராமர் பஜனை ஆற்றுகை, உலக நாட்டார் வழக்காற்றியல் மற்றும் அரங்கியல் வரலாற்றில் தனித்துவமானதொரு மக்கள் பண்பாடாகத் திகழ்கின்றது.

உசாத்துணை நூல்கள்

இன்பமோகன், வ., 2012. கிழக்கிலங்கைச் சடங்குகள். குமரன் புத்தக இல்லம், சென்னை-கொழும்பு.

சாம்பமூர்த்தி, பி., 1982. பஜனை சம்பிரதாயம் மற்றும் தென்னிந்திய பக்தி இசை. தி இந்தியன் மியூசிக் பப்ளிஷிங் ஹவுஸ், சென்னை.

சிவத்தம்பி, க., 1993. இலங்கை மலையகத் தமிழர் பண்பாடும் கருத்து நிலையும். உதயம் நிறுவனம்.

சிவரத்தினம், சு., 2008. சடங்குகளினூடாக மட்டக்களப்பு. விபுலம் பதிப்பகம்.

சோமசுந்தரம், அ., (ஆண்டு குறிப்பிடப்படவில்லை). இந்து வாழ்வியல் சடங்குகள்.

தருமராஜன், டி., 2006. சனங்களின் சாமிகள். நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், தமிழ்நாடு, இந்தியா.

பக்தவத்சல பாரதி, 2012. மானிடவியல் கோட்பாடுகள். அடையாளம் வெளியீடு, சென்னை.

மௌனகுரு, சி., 1988. சடங்கிலிருந்து நாடகம் வரை. நாகலிங்கம் நூலாலயம்.

வேல்முருகு, ந., 1993. மலையக மக்களின் சமய நம்பிக்கைகளும் சடங்கு முறைகளும். வாசகர் பதிப்பகம்.

வேங்கடராமன், சீ., 1999. தமிழ் இசை மரபில் பஜனை சம்பிரதாயம். தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

லிப்கோ ஆசிரியர் குழு, 2010. பஜன ரத்னாகரம் (திவ்யநாம, உற்சவ சம்பிரதாயக் கீர்த்தனைகள்). தி லிட்டில் பிளவர் கம்பெனி, சென்னை.

சஞ்சிகைகள்

குன்றின் குரல், ஆண்டு 12, இதழ் 03, ஜூலை-செப்டம்பர் 1993, பக். 19-20.

குன்றின் குரல், ஆண்டு 13, இதழ் 01, ஜனவரி-மார்ச் 1994, பக். 19-20.

நட்புறவு பாலம், இதழ் 12, செப்டம்பர் 1987, பக். 14-16.

நாவலப்பிட்டி பிரதேச சாகித்திய விழா மலர், ஆகஸ்ட் 1993, பக். 25-27.

பண்பாடு, இதழ் 02, செப்டம்பர் 1992, பக். 30-56.

இலங்கையைப் பொறுத்தமட்டில், தமிழர்களின் தொன்மையான வரலாறு இன்னும் மகாவம்ச இருளால் மூடப்பட்டிருக்கும் சூழலில், இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற தொல்லியல் ஆய்வுகள் இலங்கையில் பூர்வீகமாக வாழ்ந்த தமிழ் மக்களின் இருப்பியல் தகவல்களை வெளிக்கொணர்ந்துள்ளன. அந்தவகையில் ‘இலங்கையின் அண்மைக்கால தொல்லியல் ஆய்வுகள்’ என்ற இத்தொடர் சமகாலத்தில் இலங்கையில் குறிப்பாக வடக்கு – கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்றுவரும் தொடர் அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட தொல்லியல் ஆதாரங்களின் அடிப்படையில், பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலத்தில் இலங்கைத் தமிழ் மக்களிடம் நிலவிய நாகரிகம், அவர்களின் கலாச்சார பண்பாட்டு அம்சங்கள், பொருளாதார சமூக நிலவரங்கள், வெளிநாட்டு உறவுகள், உறவுநிலைகள், சமய நடவடிக்கைகள் போன்ற அம்சங்களை ஆதாரபூர்வமாக வெளிக்கொணர்வதாக அமைகின்றது.

2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட யாழ்ப்பாணத்து மக்களின் உணவுப் பழக்கவழக்கங்கள்: ஆனைக்கோட்டை அகழ்வாய்வில் வெளிச்சத்திற்கு வந்திருக்கும் உண்மைகள்

பரமு புஷ்பரட்ணம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியரான பரமு புஷ்பரட்ணம் அவர்கள், தனது இளமாணி மற்றும் முதுமாணிப் பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், கலாநிதிப் பட்டத்தைத் தஞ்சாவூர் பல்கலைக்கழகத்திலும் பெற்றுக்கொண்டார். இவர் எழுதிய பதினைந்து நூல்களில் நான்கு நூல்கள் இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசையும், மூன்று நூல்கள் மாகாண சாகித்திய மண்டலப் பரிசையும் பெற்றன. இவர் 82இற்கும் மேற்பட்ட தேசிய, சர்வதேச ரீதியிலான ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளதுடன், இதுவரை 55 சர்வதேச மற்றும் தேசிய கருத்தரங்குகளில் பங்குபற்றியுள்ளார். வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 18 இடங்களில் இவரால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் மூன்று அகழ்வாய்வுகள் தொடர்பான விடயங்கள் நூல்வடிவில் வெளிவந்துள்ளன.

1980 ஆம் ஆண்டின் பின்னர் தென்னாசியத் தொல்லியல், வரலாற்று ஆய்வாளர்களையும் வரலாற்று ஆர்வலர்கள் பலரையும் திரும்பிப் பார்க்க வைத்த முக்கிய வரலாற்று நிகழ்வாக ஆனைக்கோட்டை கரையாம்பிட்டி தொல்லியல் அகழ்வாய்வு காணப்படுகின்றது. இதற்கு யாழ்ப்பாணத்தின் பூர்வீக மக்களின் இரு மனித எலும்புக்கூடுகளும், அவற்றில் ஓர் எலும்புக்கூட்டின் தலைமாட்டுப் பகுதியில் 2300 ஆண்டுகளுக்கு முற்பட்ட எழுத்துப் பொறிப்புடன் கூடிய முத்திரை மோதிரமும் இங்கு முதன் முறையாகக் கண்டுபிடிக்கப்பட்டமை முக்கிய காரணமாகும். இவ்விடம் யாழ்ப்பாண நகருக்கு வடமேற்கே ஆறு மைல் தொலைவில் நாவாந்துறைக் கடற்பகுதிக்கு அண்மையில் உள்ள இந்து, கிறிஸ்தவ மயானங்களுக்கு அருகில் காணப்படுகின்றது.

தற்போது இதன் அமைவிடச் சுற்றுச் சூழலையும், பௌதிக வளங்களையும் நோக்கும் போது முற்பொருகாலத்தில் இவ்விடம் மக்கள் வாழாத ஒதுக்குப்புறமாகவே இருந்ததென எண்ணத் தூண்டுகின்றது. ஆனால் இவ்விடத்தைச் சுற்றிவர உள்ள பல இடங்களிலும் இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்னரே நாகரிகம் அடைந்த சமூகம் வாழ்ந்துள்ளது என்பதை 1980, 2024ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

அவற்றுள் 2024ஆம் ஆண்டு இங்கு மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞானபூர்வமான அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட கடல்சார் உயிரினச் சுவடுகள், தரைசார் விலங்கினங்களின் எச்சங்கள் என்பவற்றைச் சான்றாகக் கொண்டு இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்பிருந்து இங்கு வாழ்ந்த மக்களின் பலதரப்பட்ட உணவு வகைகளை அறிந்துகொள்ள முடிகின்றது. அவற்றின் வரலாற்றுச் சிறப்பம்சங்களை எடுத்துரைப்பதற்கு முன்னர் இங்கு வாழ்ந்த பூர்வீக மக்கள் யார்? அவர்கள் அறிமுகப்படுத்திய பண்பாடு என்ன? அவர்கள் எங்கிருந்து வந்தார்கள்? எப்போது வந்தார்கள்? முதலான கேள்விகளுக்கான சுருக்கமான பதில்களை இவ்விடத்தில் நோக்கலாம்.

வரலாற்று ரீதியாக இலங்கையில் தனித்துவம் வாய்ந்ததாகக் கணிக்கக்கூடிய பிராந்தியங்களில் ஒன்றாக வட இலங்கை காணப்படுகின்றது. இது பாளி மொழியில் நாகதீபம் எனவும், தமிழில் நாகதீவு, நாகநாடு எனவும் அழைக்கப்படுகின்றது. ஆயினும் இலங்கை வரலாறு கூறும் பாளி இலக்கியங்களில் வட இலங்கையின் பூர்வீக மக்கள், அவர்களின் மொழி, மத நம்பிக்கைகள், சமூகம், பொருளாதாரம் பற்றிய வரலாறு பெருமளவுக்குப் புகைபடர்ந்ததாகவே காணப்படுகின்றது. வரலாற்று இலக்கியங்களுடன் தொல்பொருட் சான்றாதாரங்களையும் பயன்படுத்தி வரலாறு எழுதும் மரபு ஐரோப்பாவில் தோன்றி அம்மரபு படிப்படியாக இலங்கை போன்ற தென்னாசிய, தென்கிழக்காசிய நாடுகளுக்கும் அறிமுகமாகியது. இதன் காரணமாக பல நாடுகளது பூர்வீக மக்கள், பண்பாடு பற்றிய பாரம்பரிய வரலாற்று நம்பிக்கைகளில் பல மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. இதற்குத் தென்கிழக்காசிய நாடுகள் சிலவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் சிறந்த சான்றுகளாகும். இலங்கையைப் பொறுத்தவரை தென்னாசியாவில் தொன்மையான, தொடர்ச்சியான வரலாற்று இலக்கிய மரபு கொண்ட நாடு என்ற சிறப்பு அதற்கு உண்டு. இதற்குக் கி.மு. 3ஆம் நூற்றாண்டில் பௌத்த மதம் அறிமுகமான போது கூடவே வரலாற்றுச் சம்பவங்களையும் செவிவழியாகப் பேணும் மரபும் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டமை முக்கிய காரணமாகும். இவற்றை அடிப்படையாகக்கொண்டே தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம் முதலான பாளி மொழி வரலாற்று இலக்கியங்கள் தோன்றின. இவ்விலக்கியங்கள் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வட இந்தியாவில் இருந்து விஜயன் தலைமையில் ஏற்பட்ட மக்கள் புலப்பெயர்வுடன்தான் இலங்கையின் மனித வரலாறும், நாகரிக வரலாறும் தோன்றியதாகக் கூறுகின்றன. இவர்களின் வருகையின் போது இங்கு இயக்கர், நாகர் என்ற மக்கள் வாழ்ந்ததாக இவ்விலக்கியங்கள் கூறினாலும் அவர்கள் மனிதப் பிறவிகள் அற்ற அமானுசர்களாகவே வரலாற்று ஆய்வுகளில் பார்க்கப்பட்டனர்.

இந்நிலையில் பாளி இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு பிரித்தானியர் ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட சில தொல்லியல் ஆய்வுகளால் புதிய வரலாற்று உண்மைகள் வெளிப்படுத்தப்பட்ட போதிலும் அவை இலங்கையின் பாரம்பரிய வரலாற்று நம்பிக்கையில் பெரிய மாற்றங்களைக் கொண்டுவரவில்லை. ஆனால் 1970இற்குப் பின்னர் உள்நாட்டு, வெளிநாட்டுத் தொல்லியல் அறிஞர்களால் விஞ்ஞானபூர்வமான தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வுகளால் வட இந்தியாவில் இருந்து மக்கள் குடியேற்றம் நடந்ததாகக் கூறப்படும் காலத்திற்கு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வட இலங்கையிலும், தென்னிலங்கையிலும் மத்திய பழங்கற்கால, நுண்கற்கால மற்றும் பெருங்கற்கால மக்களும், பண்பாடும் பரவியிருந்தமைக்கு நம்பகரமான தொல்லியற்

சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றுள் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களது குடியேற்றம், பண்பாடு தொடர்பான தொல்லியற் கண்டுபிடிப்புகள் இலங்கையின் அதிமுக்கிய வரலாற்று நிகழ்வுகளாகப் பார்க்கப்படுகின்றன. இது பௌத்த மதமும், பௌத்த பண்பாடும் பரவுவதற்கு முன்னர் இலங்கையில் தோன்றிய புரட்சிகரமான புதிய பண்பாடாகப் பார்க்கப்படுகின்றது. இது புதிய நாகரிகத்தின் அறிமுகமாக மட்டுமன்றி புதிய மக்களின் புலப்பெயர்வாகவும் அமைந்துள்ளது. இதனால் இலங்கையின் பல இடங்களில் புதிய குடியேற்றங்கள் தோன்றி மக்கள் பெருக்கம் ஏற்பட்டன.

பெருங்கற்காலப் பண்பாட்டுப் பரவலோடு கற்காலப் பண்பாட்டில் நாடோடிகளாக உணவுக்கு அலைந்து திரிந்த மக்கள் நிரந்தரமாக ஓர் இடத்தில் தங்கி உணவு உற்பத்தியில் ஈடுபடும் நிலை உருவாகியது. கற்கருவிகளைப் பயன்படுத்தி வந்த மக்கள் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் இரும்பு, செம்பு முதலான உலோகங்களைப் பயன்படுத்தி புதிய தொழில்நுட்பங்களை உருவாக்கினர்.

அவற்றுள் மட்பாண்டங்களை வனைவதற்குரிய சில்லின் அறிமுகம், நிலத்தைப் பண்படுத்துவதற்கான ஏரின் பயன்பாடு, நெற்செய்கையின் தோற்றம், கால்வாயுடன் கூடிய நீர்ப்பாசன முறை, சிறு தொழில்நுட்பத்தின் ஆரம்பம், சுற்றாடலைக் கட்டுப்படுத்திப் பயன்பெறும் நிலை, கிராமக் குடியிருப்புகளின் தோற்றம், வலைப்பின்னல் கொண்ட பண்டமாற்று மையங்களின் தோற்றம், மக்கள் பெருக்கம் அதிகரிப்பதற்கான சூழ்நிலையின் உருவாக்கம், குறுநில அரசுகளின் தோற்றம், குதிரைகளின் அறிமுகம், புதிய ஈமச் சின்னங்களின் தோற்றம், புதிய மட்பாண்ட உருவாக்கம் (கறுப்பு சிவப்பு நிறம்) முதலான புதிய பண்பாட்டு அம்சங்கள் அறிமுகமாகியதைக் குறிப்பிடலாம்.

யாழ்ப்பாணத்தில் பெருங்கற்காலக் குடியிருப்புகள்

அநுராதபுரத்தை அடுத்து இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பெரிய பெருங்கற்காலக் குடியிருப்பு மையமாக யாழ்ப்பாணத்தில் உள்ள கந்தரோடை காணப்படுகின்றது. இங்கு 1970ஆம் ஆண்டு முதன்முதலாக அமெரிக்கப் பல்கலைக்கழக அரும்பொருள் ஆய்வாளர் விமலா பேக்லி தலைமையில் விரிவான தொல்லியல் அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. விஞ்ஞானபூர்வமான இந்த அகழ்வாய்வின் மூலம் இங்கு பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களது குடியிருப்புகள் இருந்ததற்கான பலதரப்பட்ட சான்றாதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவற்றைத் தமிழகப் பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்களுடன் ஒப்பிட்டு ஆராய்ந்த விமலா பேக்லி கந்தரோடை மக்கள் தமிழகத்தில் இருந்து வந்து குடியேறி இருக்கலாம் அல்லது கந்தரோடையில் வாழ்ந்த மக்கள் தமிழகப் பெருங்கற்கால மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாக இருந்திருக்கலாம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் 1980ஆம் ஆண்டு பேராசிரியர் பொ. இரகுபதி அவர்கள் வரலாற்றுத்துறை மாணவர்களுடன் இணைந்து ஆனைக்கோட்டையில் தொல்லியல் மேலாய்வில் ஈடுபட்டபோது அங்கு பெருங்கற்கால மக்களது ஈமச்சின்ன அழிபாடுகள் இருப்பதை முதன்முதலாக உறுதிப்படுத்தியிருந்தார். பின்னர் அவ்விடத்தில் பேராசிரியர் கா. இந்திரபாலா அவர்களின் தலைமையில் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், பேராசிரியர் பொ. இரகுபதி ஆகியோர் இணைந்து இரு கட்டங்களாக ஏழு நாட்கள் மேற்கொண்ட அகழ்வாய்வில் இத்தொல்லியல் மையம் பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரியதென்பதை உறுதிப்படுத்தினர். இவ்வகழ்வாய்வின் போது பெருங்கற்கால ஈமச்சின்ன வகைகளில் ஒன்றான நீளக்கிடத்தி அடக்கம் செய்யப்பட்ட ஈமச்சின்னத்தில் இரு மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவைதான் யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது பெருங்கற்கால மனித எலும்புக்கூடுகள் என்பது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. அத்துடன் இந்த மனித எலும்புக்கூடு ஒன்றின் தலைமாட்டுப் பகுதியில் வைக்கப்பட்டிருந்த மண்சட்டியில் இருந்து ஈரெழுத்துப் பொறித்த முத்திரை மோதிரம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது இலங்கை - தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டு மனித எலும்புடன் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது முத்திரை மோதிரமாகும். இம்முத்திரை மோதிரத்தின் எழுத்தமைதியைக் கொண்டு இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு முன்னரே ஆனைக்கோட்டையின் பூர்வீக குடிகளாகப் பெருங்கற்கால மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை நிச்சயப்படுத்திக் கூறலாம். இந்த உண்மையை 2024ஆம் ஆண்டு ஆனைக்கோட்டையில் பெருங்கற்காலக் குடியிருப்பு மையத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வு மேலும் உறுதிப்படுத்துகின்றது.

2024ஆம் ஆண்டு அகழ்வாய்வு

இந்த அகழ்வாய்வு யாழ்ப்பாண மரபுரிமை மையத்தால் நன்கு திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்பட்டது. இதற்கு வேண்டிய நிதியைப் பிரித்தானிய சமூக முன்னேற்ற நடுவகம் வழங்கியிருந்தது. இலங்கைத் தொல்லியல் திணைக்கள அனுமதியுடன்

மேற்கொள்ளப்பட்ட இவ்வகழ்வாய்வானது யாழ்ப்பாணத்தில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளை விட சில அம்சங்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றது.

இவ்வகழ்வாய்வில் தொல்லியல் ஆய்வில் உயர்ந்த கல்விப் புலமையும், பயிற்சியும் வெளிநாட்டு அகழ்வாய்வில் பங்கெடுத்த அனுபவமும் உடைய சிரேஷ்ட ஆய்வாளர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டனர். அத்துடன் ஜேர்மன் நாட்டு தொல்லியல் அறிஞர் கலாநிதி அரியாணி இந்த அகழ்வாய்வில் பங்கெடுத்ததுடன், நவீன காலக்கணிப்பிற்காகத் தெரிவு செய்திருந்த ஏழு கரிம மாதிரிகளின் காலத்தைத் தமது நாட்டு ஆய்வுகூடத்தில் கணித்து தந்திருப்பது இந்த அகழ்வாய்வின் இன்னொரு முக்கிய அம்சமாகும். கந்தரோடை யாழ்ப்பாணத்தின் முக்கிய பெருங்கற்காலக் குடியிருப்பு மையமாகப் பார்க்கப்பட்டாலும் அப்பண்பாட்டிற்குரிய ஈமச்சின்னம் ஒன்றுதானும் இதுவரை அங்கு கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் 1980இல் ஆனைக்கோட்டையில் பெருங்கற்கால ஈமச்சின்ன மையமும், 2024ஆம் ஆண்டு அதற்குத் தெற்கே 100 கி. மீற்றர் தொலைவில் பெருங்கற்காலக் குடியிருப்பு மையமும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது இவ்வாய்வின் இன்னொரு சிறப்பாகும். கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் முக்கிய அகழ்வாய்வுகள் சில மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் அவற்றின் பெறுபேறுகள் அறிக்கைகளாக வெளியிடப்படாமை முக்கிய குறைபாடாகும். ஆனால் 2024ஆம் ஆண்டு அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட வரலாற்றுப் பெறுமதியுடைய சான்றாதாரங்கள் அனைத்தும் உரிய முறையில் பதிவு செய்யப்பட்டு அதன் ஆரம்ப அறிக்கை தொல்லியல் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதுடன் விரிவான அறிக்கையும் விரைவில் வெளிவர இருப்பது இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

சமகால நவீன தொழில்நுட்ப சாதனங்கள் பலவற்றின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட இந்த அகழ்வாய்வு எமது பல்கலைக்கழக தொல்லியல், கலாசார சுற்றுலாப் பிரிவு ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் சிறந்த பயிற்சிக்களமாக இருந்ததுடன், அவர்களே இதன் முக்கிய பங்குதாரர்களாகவும் செயற்பட்டு வருவதும் இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

இந்த அகழ்வாய்வு தொல்லியற் திணைக்கள அனுமதிக்கு ஏற்ப 30 நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்றது. இதற்கான அகழ்வாய்வுக் குழி 3 x 4 மீற்றர் நீள அகலத்தில் அமைக்கப்பட்டு அதன் இயற்கை மண்ணை அடையாளப்படுத்தும் வரை அகழ்வு செய்யப்பட்டது. இந்த அகழ்வாராய்ச்சியில் கடைப்பிடிக்கப்பட்ட வழிமுறைகள் மிகவும் நுணுக்கமானவை மற்றும் அறிவியல்பூர்வமானவை. அகழ்வாய்வுத் தலமானது முறையான வரைபடங்கள் மற்றும் சதுரக் கட்டங்களாக (Grids) பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்ணடுக்கும் (Stratigraphic Units) அதன் காலவரிசைப்படி கவனமாக ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வின் போது பத்துக்கு மேற்பட்ட கலாசார மண்படைகள் அடையாளம் காணப்பட்டன.

அவற்றிலிருந்து காலக்கணிப்பிற்காகத் தெரிவு செய்யப்பட்ட காலக்கணிப்புகளில் இருந்து இற்றைக்கு 2900ஆம் ஆண்டிலிருந்து (கி.மு. 865) ஐரோப்பியர் காலம் வரை ஒரு மனிதக் குடியேற்றம் ஆனைக்கோட்டையில் இடையீறற்று இருந்ததை உறுதிப்படுத்த முடிகின்றது. அவற்றுள் கி.மு. 5ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி. 5ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட 1000 ஆண்டுகால கலாசார மண் அடுக்குகளிலிருந்து வரலாற்றுப் பெறுமதிமிக்க சான்றுப் பொருட்கள் அதிக எண்ணிக்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இச்சான்றாதாரங்கள் பெரும்பாலும் இலங்கையிலும் தமிழகத்தில் ஆதிச்சநல்லூர், அழகன்குளம், கொடுமணல், பொருந்தல், அண்மையில் கீழடி முதலான இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களது வாழ்வியல் அம்சங்களோடு நெருங்கிய ஒற்றுமை கொண்டுள்ளதை வெளிப்படுத்துவனவாக உள்ளன. அவற்றுள், ஆனைக்கோட்டையின் பண்டைய கடல்சார் மற்றும் தரைசார் உணவு முறைகளை, நவீன கோணத்தில் ஆர்வத்தோடும் வியப்போடும் ஆராய்வதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.

ஆனைக்கோட்டை அகழ்வாய்வில் தொல்லுயிர் விலங்கியலின் பங்களிப்பு

சமகாலத்தில் தொல்லியல் அகழ்வாய்வின் நோக்கங்களும், அவற்றின் பார்வைகளும் பலவாறு மாற்றமடைந்தும், விரிவடைந்தும் செல்வதைக் காண முடிகின்றது. இதற்கு நவீன விஞ்ஞானத் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டுவரும் தீவிர வளர்ச்சியின் செல்வாக்கு தொல்லியல் ஆய்வுத்துறையிலும் ஏற்பட்டு வருவது முக்கிய காரணமாகும். இன்று எந்தவொரு துறைசார்ந்த ஆய்வும் குறிப்பிட்ட துறைக்குள் நின்று மட்டும் வளரமுடியாது என்ற கருத்துக் காணப்படுகின்றது. அதற்குப் பதிலாக குறிப்பிட்ட துறை சார்ந்த ஆய்வானது அதற்கு உதவக்கூடிய பிறதுறைகளுடன் இணைந்து ஆய்வு செய்யப்படுவதே நடுநிலையான ஆய்வாகப் பார்க்கப்படுகின்றது. அவ்வாறு செய்யப்படும் ஆய்வுகளின் முடிவுகளே விஞ்ஞானபூர்வமான முடிவாகவும்

ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்கள் நீண்டகாலமாகத் தாம் முன்னெடுக்கின்ற தொல்லியல் அகழ்வாய்வுகளில் பல்கலைக்கழகத்திற்கு உள்ளேயும், வெளியேயும் பல துறை சார்ந்த புலமையாளர்களின் பங்களிப்பைப் பெற்று வருகின்றன.

இந்நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல், கலாசார சுற்றுலாத்துறை மாணவர்களின் கல்விப் போதனையிலும், அகழ்வாய்வு முறையிலும் பிற துறை சார்ந்த புலமையாளர்களின் பங்களிப்பு 2018இல் இருந்தே ஓரளவு பெறப்பட்டு வருகின்றது.

அந்த நடைமுறை விஞ்ஞான பீடாதிபதியாக இருந்த பேராசிரியர் ரவிராஜன் அவர்களால் தொடக்கப்பட்டு விலங்கியல் துறையின் சிரேஷ்ட பேராசிரியர் நோபல் சுரேந்திரன், புவியியல் துறைப் பேராசிரியர் - கலைப்பீடாதிபதி நாகமுத்து பிரதீபராஜா, பௌதிகத்துறை பேராசிரியர் முருகதாஸ் தணிகைச்செல்வன், அத்துறை சார்ந்த பேராசிரியை செல்வி சுதர்சினி உபேந்திரன் முதலியோரால் தொடரப்படுகின்றன.

இந்நிலையில் ஆனைக்கோட்டை அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட கடல்சார், தரைசார் எச்சங்களை அடையாளப்படுத்துவதிலும் வகைப்படுத்துவதிலும் புலமையுடைய தொல்லியல் ஆய்வாளர் யூட் பெரேரா மற்றும் விலங்கியல்துறைப் பேராசிரியர் நோபல் சுரேந்திரன் ஆகியோரின் பங்களிப்புச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

உயிரினச் சுவடுகளை அடையாளம் காணல், வகைப்படுத்தல், அவற்றின் சிறப்புகள்

ஆனைக்கோட்டை அகழ்வாய்வின் போது அப்பிரதேச மக்களால் உண்ணப்பட்ட பலதரப்பட்ட உணவு வகைகளின் எச்சங்கள், உயிரினச் சுவடுகள் கிடைத்துள்ளன. அவற்றை வகைப்படுத்தி ஆராய்வதிலும், அடையாளப்படுத்துவதிலும் அத்துறை சார்ந்த புலமையாளர்களின் பங்களிப்பு அவசியமாகக் காணப்பட்டது. அவற்றுள் மீன் வகைகளையும், மிருக எலும்பு வகைகளையும் அடையாளம் காண்பது முக்கிய பணியாகும். அதில் களப்பணி முறை மூலம் பாலூட்டிகள், ஊர்வன, பறவைகள், மீன்கள், மிருக எலும்புகள் மற்றும் சங்கு, சிப்பி, மட்டி என்பன பொருத்தமான மாதிரிகளைப் பின்பற்றி எடுக்கப்பட்டன. இவை கண்டெடுக்கப்பட்ட மண்ணடுக்குகளுடன் ஒப்பிடப்பட்டு பதிவு செய்யப்பட்டன. துண்டுபடல் ஆய்வு முறை (Fragmentation Analysis) மூலம் இந்த எலும்புகள் மற்றும் கடல் மீன்களின் ஓடுகள் மனிதர்களால் உணவிற்காக உடைக்கப்பட்டனவா அல்லது இயற்கையாகச் சிதைந்தனவா என்பது கண்டறியப்பட்டது. இத்தகைய துல்லியமான அணுகுமுறை அந்தக் காலத்து மக்களின் தொழில்நுட்ப அறிவையும் இயற்கை வளங்களையும் அவர்கள் கையாண்ட வழிமுறைகளையும் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

குறிப்பாக விலங்கியல் தொல்பொருளியல் (ZooArchaeology) எனும் நவீன அறிவியல் முறைப்படி மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வு மண்ணில் புதைந்து கிடக்கும் சிறிய எலும்புத் துண்டுகளைப் பகுப்பாய்வு செய்து அக்கால மக்களின் வாழ்வியலை ஆதாரங்களுடன் வெளிப்படுத்தி வருவதைக் குறிப்பிடலாம்.

ஆனைக்கோட்டை அகழ்வாய்வின் ஒரு முக்கியமான கண்டுபிடிப்பாகக் கடல்பசு (Sea Cow) எனும் பாலூட்டியின் எச்சங்கள் அதிக அளவில் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவை மன்னார் வளைகுடா மற்றும் யாழ்ப்பாணக் கடல் நீரேரிப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் வேட்டையாடும் நுட்பங்களில் சிறந்து விளங்கியதை உறுதிப்படுத்துகின்றன.

கடல்பசுக்கள் பெரும்பாலும் கடற்புற்கள் நிறைந்த பகுதிகளில் வாழ்வதால் பண்டைய காலத்தில் ஆனைக்கோட்டையைச் சுற்றியுள்ள கடல்பகுதி பொருத்தமான வளங்களுடன் இருந்ததை இது உறுதிப்படுத்துகின்றது. இவற்றுடன் சுறா, முரல், பாரை மற்றும் கிளிமீன் போன்ற ஆழ்கடல் மீன்களின் எலும்புகள் ஆனைக்கோட்டையில் கிடைத்துள்ளமை அம்மக்கள் சிறந்த மாலுமிகளாகவும் கடலைத் தங்களின் முதன்மையான வாழ்வாதாரமாகக் கொண்டவர்களாகவும் இருந்ததை உறுதிப்படுத்துகின்றது. மேலும், அகழ்வாய்வில் எலும்புகள் சிறிய துண்டுகளாகக் கண்டறியப்பட்டது. அவை அக்கால மக்களால் துண்டுகளாக உடைக்கப்பட்டு உணவிற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனக் கருதலாம். சில எலும்புகள் ஊசி வடிவில் செயற்கையாக மாற்றியமைக்கப்பட்டதாகக் காணப்பட்டன. இவற்றை அக்கால மக்கள் ஊசி போன்ற கருவிகளாகப் பயன்படுத்தியிருக்கலாம். ஆழமான மண் அடுக்குகளில் சங்கு, சிப்பிகள் அதிக எண்ணிக்கையில் கிடைத்துள்ளன. நண்டு போன்ற ஓடுடைய கணுக்காலிகள் ஆழமான அடுக்குகளில் மட்டுமே அரிதாகக் காணப்பட்டன.

மீன்களின் வகைகளும், அவற்றின் சிறப்பியல்புகளும்

ஆனைக்கோட்டை அகழ்வாய்வின் போது கிடைத்த மீன்களின் எலும்புகள், தாடைப் பகுதி, பற்கள், முதுகெலும்பு மற்றும் உடலமைப்பு என்பன மீன்களின்

இனவகைகளையும் கடலில் அவற்றின் வாழ்விடங்களையும் தெளிவாக அடையாளம் காண உதவுகின்றன. உதாரணமாக விளைமீன் போன்ற மீன்களின் வலுவான பற்கள் அவை கடலடிப்பகுதியில் உணவு தேடும் இனங்களாக இருந்ததைக் காட்டுகின்றன.

வலுவான முன்வாய்ப் பற்களை உடைய கிளிமீன் வகைகள் கடற்பாறைகளில் படிந்திருக்கும் பாசி வகைகளை உரித்து அவற்றை உண்ணும் திறன் கொண்டதாகக் காணப்படுகின்றன. இதனால் இவ்வகை மீன்கள் முருகைக்கற்பாறைச் சூழலுடன் தொடர்புடையவை என்பது தெளிவாகத் தெரிகின்றது. கோழிமீனின் (*Acanthurus sp.*) வால்பகுதியில் காணப்படும் கூர்மையான முள்போன்ற அமைப்பானது அதன் பாதுகாப்பையும் முருகைக்கற்பாறைச் சூழலுடன் கொண்டிருந்த தொடர்பையும் எடுத்துக்காட்டுகிறது. கலவாமீன் போன்ற மீன்கள் பருமனான தாடையும், வலுவான உடல் அமைப்பும் கொண்டவை. இவை பதுங்கிப் பாய்ந்து வேட்டையாடும் மீன் வகைகளாகும். கெளிறு, கெளுத்தி முதலான மீன்கள் நீரின் அடிப்பகுதி மணல் மற்றும் உவர் நீர்ச் சூழல்களுடன் தொடர்புடையவையாகக் காணப்படுகின்றன. இத்தகைய அடையாளங்கள், ஆழமற்ற கடற்கரை, பாறைப்பகுதிகள் மற்றும் உவர்நீர் நிலப்பரப்புகளில் மேற்கொண்ட மீன்பிடி முறைகளை உணர்த்துகின்றன.

இத்தகைய சூழல்களில் விளைமீன், கிளிமீன், கோழிமீன், கலவாமீன், கெளிறு, கெளுத்தி போன்ற மீன்கள் அதிக அளவில் கிடைத்திருக்கலாம் என நம்பப்படுகின்றது. இம்மீன்களைப் பிடிக்க எளிய ஆனால் திறமையான தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

கரையோர அணைகள், மீன் கூடுகள், கைவலைகள், வீச்சு வலைகள் போன்றன அக்காலத்தின் முக்கிய மீன்பிடிச் சாதனங்களாக இருந்திருக்கலாம். இக்கருவிகளைப் பயன்படுத்துவதற்குத் தனிநபர் திறனை விட, குழுவாக இணைந்து செயல்படுவதே அவசியமாக இருந்திருக்கலாம் என்பதை இது காட்டுகிறது. இதனால் பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் உட்பட சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் கடல் உணவுச் சேகரிப்பில் ஒரு கூட்டு மற்றும் சமத்துவ சமூக அமைப்பாக இருந்தனர் எனக் கூறலாம்.

அகழ்வாய்வில் கிடைத்த மேற்கூறப்பட்ட மீன் எலும்புகளில் இருந்து சற்று வேறுபட்ட கடல்சார் சூழலை வெளிப்படுத்தும் மீன் எலும்புகளும் ஆனைக்கோட்டை அகழ்வாய்வில் கிடைத்துள்ளன. அவற்றுள் கூர்மையான பற்கள் கொண்ட குண்டன் சுறா, எலிச்சுறா போன்ற மீனினங்களின் எலும்புகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. அவை ஆழ்கடலில் வேட்டையாடப்பட்ட உயர்மட்ட மீன் வகைகளாகும்.

அதேபோல் நீளமான உடல், கூர்மையான பற்கள் கொண்ட சீலா மற்றும் பாரை மீன்கள் மற்றும் வலுவான உடல், பிளவுபட்ட வாலை உடைய பாரை மீன், திறந்த கடலில் வாழும் கொப்பரை, குல்லா, கட்டா, கட்டாப்பாரை முதலான மீன் வகைகளின் எலும்புகளும் இங்கு கிடைத்துள்ளன.

இவ்வகை மீன்கள் கடலில் வேகமாகவும் கூட்டமாகவும் செல்லும் தன்மை கொண்டன. இத்தகைய ஆழ்கடல் மீன்களின் இருப்பு பண்டைய காலத்தின் மேம்பட்ட கடல்சார் தொழில்நுட்பத்தை வெளிப்படுத்துகின்றது. இம்மீன்களைப் பிடிக்க ஆனைக்கோட்டையின் பூர்வீக மக்களிடையே வலுவான கடற்பயணப் படகுகள் அவசியமாக இருந்திருக்க வேண்டும். மேலும் திசை நிர்ணய அறிவு, காற்றின் திசை, அலைகள், நட்சத்திரங்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட வழிசெலுத்தும் திறனும் அம்மக்களிடம் இருந்துள்ளமை தெளிவாகத் தெரிகின்றது. இத்தகைய மீன்பிடி முறைகள் அதிக ஆபத்தானவை என்றாலும் அவை அதிகளவான மீன் உணவை வழங்குவதால் இது அவர்களின் வாழ்வியலில் ஒரு முக்கிய செயற்பாடாக இருந்திருக்க வேண்டும் எனக் கூறப்படுகின்றது. இதனால் நீர்நிலைகளில் மீன்களைப் பிடிப்பதற்கான படகுகளைத் தயாரிக்கும் தொழில்நுட்பத் திறனும் இக்காலத்தில் சிறப்புத் தொழிலாக வளர்ந்திருந்ததெனக் கூறலாம்.

மீன்களின் வகைகள், அளவுகள் என்பவற்றின் அடிப்படையிலும் இக்கால சமூக வாழ்க்கையைப் புரிந்துகொள்ள முடிகிறது. கிளிமீன், கோழிமீன் போன்ற சிறிய மீன்கள் தினசரி உணவாக இருந்திருக்கலாம். விளைமீன், கலவாமீன், கெளுத்திமீன் போன்றவை நடுத்தர அளவிலான உணவாகப் பயன்படுத்தப்பட்டன எனலாம். குண்டன் சுறா, எலிச்சுறா, சீலா, கொப்பரை, குல்லா போன்ற பெரிய மீன்கள் அதிகளவு உணவை வழங்குவனவாகவும், அவற்றைச் சேமித்து மற்றவர்களுக்குப் பகிர்ந்து வழங்கும் கடல் உணவுகளாகவும் இருந்திருக்க வேண்டும் எனக் கூறப்படுகின்றது.

மீன்களுடன் சேர்த்துக் கிடைத்த சிப்பி உயிரினங்களும் இம்மக்களின் சமூக வாழ்க்கையைப் புரிந்துகொள்ள முக்கிய பங்காற்றுகின்றன. இங்கு கிடைத்த சிப்பி, மட்டி போன்றவை மணற்பரப்புகளில் வாழும் உயிரினங்களாகும். முத்துச்சிப்பி, வெண்சங்கு, வலம்புரிச்சங்கு, கடல்நத்தை போன்றவை கடற்கரை மற்றும் அலைப்பகுதிகளுடன் தொடர்புடையவை.

இவை எளிதாகச் சேகரிக்கக்கூடியவை என்பதால் குறைந்த உழைப்பில் கிடைக்கும் உணவாக இருந்திருக்கலாம். கையால் சேகரித்தல், சிறிய தோண்டல் கருவிகள், கூண்டு முறைகள் போன்ற எளிய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

தரைவாழ் விலங்கினங்கள்

மந்தை வளர்ப்பு மற்றும் வேட்டையாடல் ஆகிய இரு தொழில்துறைகளும் ஆனைக்கோட்டை மக்களின் நிலப்பகுதி சார்ந்த வாழ்வியல் முறையில் முக்கிய அம்சங்களாக இருந்ததை அகழ்வாய்வில் கிடைத்த சான்றாதாரங்கள் உறுதிசெய்கின்றன. அகழ்வாய்வின் போது அங்கு கண்டெடுக்கப்பட்ட மாடு, ஆடு மற்றும் பன்றி போன்ற வளர்ப்பு விலங்குகளின் மிகுதியான எலும்புகள் அம்மக்கள் ஒரு நிலையான விவசாய சமூகமாகவும், கால்நடை வளர்ப்பை பொருளாதாரத் தொழிலாகக் கொண்டிருந்ததையும் எடுத்துக்காட்டுகின்றன. அதேசமயம் காடுகளிலிருந்து வேட்டையாடப்பட்ட புள்ளிமான் மற்றும் முயல்களின் எலும்புகள் அவர்கள் இயற்கை வளங்களைப் பயன்படுத்தியதை உணர்த்துகின்றன. குறிப்பாக மனிதர்களுடன் இணைந்து வாழ்ந்த நாய் மற்றும் பூனைகள் என்பவற்றின் எலும்புகள் கண்டெடுக்கப்பட்டிருப்பது அவர்கள் விலங்குகளைத் தங்களின் வாழ்வியல் தோழர்களாகவும் பாதுகாப்பாளர்களாகவும் மாற்றியிருந்ததை வெளிப்படுத்துகிறது. மேற்புற மண் அடுக்குகளில் மீன், பறவைகள் மற்றும் ஆமைகளின் எண்ணிக்கை உயர்வடைந்து காணப்பட்டதோடு, கால்நடை போன்ற வீட்டு விலங்குகளின் எலும்புகளும் முதன்மை பெற்றன. இது அவர்கள் ஒரு முதிர்ச்சியடைந்த விவசாய மற்றும் கால்நடைச் சமூகமாக மாறியிருக்கலாம் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

அணிகலன்களும் அலங்காரப் பொருட்களும்

ஆனைக்கோட்டை அகழ்வாய்வில் கிடைத்த சிலவகை கலைவடிவங்கள், அழகுசாதனப் பொருட்கள் என்பவற்றை நோக்கும் போது கடலில் இருந்து பெறப்பட்ட மீன்கள், சங்கு, சிப்பி முதலான உயிரினங்கள் உணவுக்காக மட்டுமன்றி அவற்றில் இருந்து கிடைத்த எலும்புகள், பிற எச்சங்களில் இருந்து அணிகலன்கள், அழகுசாதனப் பொருட்கள் என்பவற்றை செய்வதற்கும் அக்காலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளமை தெரிய வருகின்றது. உதாரணமாக சுறா போன்ற மீன் இனங்களின் கூர்மையான பற்களைப் பயன்படுத்தி கழுத்து மாலைகள் மற்றும் கழுத்து மணிகள் செய்யப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகின்றது. பாரை, கொப்பரை மற்றும் குல்லா போன்ற மீன்களின் விலா எலும்புகள் மணிகளாகக் கோர்க்கப்பட்டு சங்கிலியாக அணியப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

சீலா போன்ற மீன்களின் எலும்புகள் பெண்களின் சிகை (சீப்பு) அலங்காரப் பொருட்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. விளைமீன், கலவா போன்ற மீன்களின் செவிக்கற்கள் (Otoliths) மெருகான அமைப்பைக் கொண்டிருப்பதால் அவை மணிகள், சிறிய அணிகலன்களாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகின்றது. சங்கு, சிப்பிகளில் துளையிடப்பட்டு அவை மணிகள், காதணிகள் மற்றும் அலங்காரப் பொருட்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

முத்துச் சிப்பி, சங்கு என்பன உயர்ந்த சமூக நிலை, வர்த்தக முக்கியத்துவம் என்பவற்றுடன் தொடர்புடையன. இத்தகைய அணிகலன்கள் அழகுக்காக மட்டும் அணியப்படவில்லை; அவை சமூக அடையாளம், கடல்சார் தொடர்புகள் மற்றும் பண்பாட்டு மரபுகளையும் வெளிப்படுத்துகின்றன. சில மண்ணடுக்குகளில் வெண் சங்குகள் குவியலாகக் கிடைத்துள்ளன. இக்காலத்தில் மந்தை வளர்ப்பும் ஆனைக்கோட்டை மக்களின் முக்கிய தொழிலாக இருந்ததால் இங்கு கிடைத்த சங்குகள் மாடுகளின் கழுத்தில் அணியப்பட்ட புனிதப்பொருட்களாகவும் இருக்கலாம்.

ஆனைக்கோட்டை அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட கடல்சார் மற்றும் தரைவாழ் உயிரினங்களின் சுவடுகள், எச்சங்கள், எலும்புகள் முதலானவற்றை ஆதாரங்களாகக் கொண்டு பண்டையகால மக்களின் பலதரப்பட்ட உணவுப் பழக்கங்களையும், அவற்றின் பயன்பாடுகளையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

அதேவேளை இவ்வாதாரங்கள் அக்கால மக்களின் கடல்சார் தொடர்புகள், கடல்சார் வர்த்தகம், கடற்பயணங்கள், கடற்கலன்களின் வகைகள், அவற்றின் தொழில்நுட்பத் திறன்கள், அவற்றில் ஏற்பட்ட படிமுறையான வளர்ச்சி பற்றியும் கடல்சார் சமூகங்களின் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், சமய நம்பிக்கைகள், சமூக நடத்தை, குடும்ப உறவுகள் மற்றும் கடந்தகால சுற்றுச்சூழல், பௌதிக நிலை முதலானவற்றை அறிந்து கொள்ளவும் பெரிதும் உதவுகின்றன. இவை பற்றிய ஆய்வுகள் அத்துறையில் புலமையுடையோரின் பங்களிப்புடன் எதிர்காலத்தில் வெளிவரும் என எதிர்பார்க்கலாம்.

நன்றி: வலம்புரி.

‘இலங்கையில் தமிழ் பௌத்தம்’ என்னும் இத்தொடரில் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகள் பிரசுரிக்கப்படுகின்றன. இக்கட்டுரைகளில் சிலவற்றைத் தவிர பெரும்பாலானவை ஆங்கிலத்தில் எழுதப்பட்டு ஆய்விதழ்களில் பிரசுரிக்கப்பட்டவை. ஆங்கிலக் கட்டுரைகள் மொழிபெயர்ப்பு, தழுவலாக்கம், சுருக்க அறிமுகமும் விமர்சனமும் என்ற மூவகையில் அமைவனவாக இருக்கும். சி. பத்மநாதன், ஆ. வேலுப்பிள்ளை, பீட்டர் ஷால்க், சிவ. தியாகராஜா, பரமு. புஷ்பரட்ணம், கா. இந்திரபாலா, ஜெகநாதன் அரங்கராஜ் ஆகியவர்களின் கட்டுரைகள் இலங்கையில் தமிழ் பௌத்தம் பற்றிய தமிழர் நோக்கு நிலையை விளக்குவனவாக அமைவன. சுனில் ஆரியரட்ண அவர்களின் கட்டுரை சிங்கள பௌத்த நோக்கு நிலை தமிழர் நோக்கு நிலை என்ற இரண்டையும் விமர்சன நோக்கில் புரிந்துகொள்ள உதவக்கூடியது. பௌத்தம் என்பது சிங்கள பௌத்த இனத்திற்கு மட்டுமே உரிய உடைமை என்ற மேலாதிக்கக் கருத்தியலை மறுத்து, இலங்கையின் தமிழ் பௌத்தம் குறித்து தமிழர்கள் கொண்டிருக்கும் வேறுபட்ட வரலாற்றுப் பார்வையை எடுத்துரைப்பது இத்தொடரின் முக்கிய நோக்கமாகும்.

ஆங்கில மூலம்: பீற்றர் ஷால்க்

வல்லிபுரம் புத்தர் சிலை ‘மீளக்கண்டுபிடிக்கப்பட்டது’

வின்சென்ற் போல் சந்தியாப்பிள்ளை

வின்சென்ற் போல் சந்தியாப்பிள்ளை (B.Sc., M.A, M.Phil) அவர்கள், 1966 இல், யாழ்ப்பாணம், காங்கேசன்துறையில் உள்ள ஊறணி எனும் இடத்தில் பிறந்தார். ஆரம்பக்கல்வியை இளவாலை என்றியரசர் கல்லூரியில் பயின்றார். உயர்கல்வியை பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரி, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆகிய இடங்களில் கற்றார். கனடாவில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் நடத்திய தமிழியல் பட்டப்படிப்பில், 5 6 ஆண்டுகள் தமிழர் மெய்யியல், நாட்டார் வழக்காற்றியல், இலக்கியத் திறனாய்வு போன்ற பாடங்களைக் கற்பித்திருக்கிறார். கல்லூரிக் காலத்தில் நாத்திகம், மார்க்ஸிசம் போன்ற கருத்தியல்களில் ஈடுபாடு காட்டிவந்தார். பின்னர் கற்கைப் புலத்தினூடாக மெய்யியல், தத்துவம் என்பவற்றில் ஆர்வம் செலுத்தினார். தற்போது சோதிடம், ஹோமியோபதி, தமிழ்மொழி போன்றன தொடர்பாகக் கவனம் செலுத்தி வருகிறார்.

(இந்தக் கட்டுரை மீதான பல கருத்துகளுக்காக, பேராசிரியர் சி. பத்மநாதன் மற்றும் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை ஆகியோருக்குத் தற்போதைய ஆசிரியர் நன்றி தெரிவிக்கிறார்.)

பத்தொன்பதாவது நூற்றாண்டின் இறுதியில், (இலங்கையின்) ஈழத்தின் வடக்கில், வடமராட்சியின் வல்லிபுரத்தில் உள்ள விஷ்ணு கோவில் (மீண்டும்) கட்டப்பட்ட போது, இந்தக் கோவிலுக்கு அருகாக வடகிழக்கே ஐம்பது யார்கள் தொலைவில் ஒரு புத்தர் சிலை கண்டெடுக்கப்பட்டது (சிலோன் ஆன்டிக்குவரி 1916-17: 96) (*Ceylon Antiquary* 1916-17: 96). அது 1902 ஆம் ஆண்டு வரை வல்லிபுரக் கோவிலின் கிடங்கு அறையில் இருந்தது. பின்னர் அது யாழ்ப்பாணத்தில் உள்ள பழைய பூங்காவில் ஒரு அரச மரத்தின் கீழ் நிறுவப்பட்டது (சிலோன் ஆன்டிக்குவரி 1916-17: 96-97) (*Ceylon Antiquary* 1916-17: 96-97). 1906 ஆம் ஆண்டில், வல்லிபுரத்தின் புத்தர் சிலை அப்போதைய இலங்கை ஆளுநர் ஹென்றி பிளேக் அவர்களால் சியாமின் (தாய்லாந்து) மன்னருக்குப் பரிசாக வழங்கப்பட்டது. அது தொன்மையான வகையைச் சேர்ந்தது என்று கருதப்பட்டதால், அதனைப் பெற தாய்லாந்தின் மன்னர் மிகவும் ஆவலாக இருந்திருந்தார் (சிலோன் ஆன்டிக்குவரி 1916-17: 97) (*Ceylon Antiquary* 1916-17: 97). இந்த நிகழ்வும் சிலையும் கிட்டத்தட்ட 90 ஆண்டுகளுக்கு மறக்கப்பட்டே இருந்தன. 1906க்குப் பின் பிறந்த அனைத்துத் தமிழர்களும் சிங்களவர்களும் இந்தச் சிலையைக் கண்ணால் கண்டதில்லை. தாய்லாந்திற்குச் சென்று அந்தச் சிலையை அங்கே கண்டுபிடித்திருக்காவிட்டால், வல்லிபுரம் புத்தர் சிலையை ஒருபோதும் பார்த்திருக்க முடியாது.

அதன் வரலாற்றுப் பின்னணியில், அந்தச் சிலையின் சமய முக்கியத்துவத்தைப் பற்றிய ஆய்வு முக்கியமானது. வல்லிபுரம் புத்தர் சிலை, ‘அமராவதி’ கலைமரபின் ஒரு குறிப்பிடத்தக்க படைப்பாகும். அதன் பரவல், புத்தம் ஈழத்திற்குப் பரவியதையும் ஆவணப்படுத்துகிறது. அது அனுராதபுரம் பள்ளியின் பௌத்தக் கலை வளர்ச்சியின் தொடக்கக் காலகட்டத்தில் ஒரு தீர்க்கமான செல்வாக்கைச் செலுத்தியது. இதன் மூலம் அமராவதி, அனுராதபுரம் மற்றும் வல்லிபுரம் ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு பண்பாட்டுச் சந்திப்பின் புவியியல் முக்கோணத்தை நாம் பெறுகிறோம். பௌத்தம் இன்னும் சிங்கள பௌத்தமாக அடையாளம் காணப்படாமல், புத்தம் என்று மட்டுமே அடையாளம் காணப்பட்ட ஒரு காலகட்டத்தில் இது நிகழ்ந்தது. எனவே, வல்லிபுரம் சிலையைப் பற்றிய ஆய்வு என்பது இன அடையாளம் என்பதற்கு மாறாக, பிளவுபடுத்தும் இன அடையாளங்களைக் கடந்து செல்வதற்கான அல்லது குறைந்தபட்சம் சிறிது காலத்திற்கு நிறுத்தி வைப்பதற்கான ஒரு வழியாகும்.

★★★★★★★★★

புத்தர் சிலையின் பின்னணியைப் புரிந்துகொள்வதற்காக ஒரு கல்வெட்டைப் (உண்மையில் இது ஒரு கல்வெட்டு அல்ல. பொன்தகட்டில் பொறிக்கப்பெற் எழுத்துக்களாகும். மொர்) பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். அதில் ‘நகடிவ’ (பாலி - நாகதீபம்) எனக் குறிப்பிடப்பட்ட பகுதியில் ஒரு விகாரம் கட்டப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. புத்தர் சிலை அநேகமாக இந்த விகாரத்தின் எச்சங்களில் ஒன்றாக இருக்கலாம். இன்று அதற்கான எந்த அடையாளமும் வெளிப்படையாக இல்லை. புத்தர் சிலைகள் பொதுவாக விகாரங்களில்தான் வைக்கப்படுகின்றன. எங்கு புத்தர் சிலை உள்ளதோ, அங்கு ஒரு விகாரமும் இருக்கும். அப்படியானால், நாம் எதிர்பார்த்ததை இந்தக் கல்வெட்டு உறுதிப்படுத்துகிறது. புத்தர் சிலை வல்லிபுரத்தில் நிறுவப்பட்ட ஒரு பௌத்த நிறுவனத்திற்குச் சொந்தமானது. வெளிப்படையாக எந்தத் தடயங்களும் இல்லாத இந்த நிறுவனத்தின் காலம், கல்வெட்டின் ஆண்டைப் பொறுத்தது.

இந்தப் பொறிப்பு, 1936இல் தற்போதைய விஷ்ணு கோவில் (வல்லிபுரக்கோவில்) அமைந்துள்ள நிலத்திலிருந்த ஒரு பழங்காலக் கட்டடத்தின் அடித்தளத்திற்குக் கீழே கண்டெடுக்கப்பட்ட தங்கத் தகடு ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ளது (பரணவிதான 1936: 229) (*Paranavitana* 1936: 229). இதே பகுதியில்தான் வல்லிபுரம் புத்தர் சிலையும் கண்டெடுக்கப்பட்டது. ஒரு புத்த விகாரம் எப்போது விஷ்ணு கோவிலாக மாறியது என்பது இன்றும் ஆய்வுக்குட்பட்ட ஒரு பொருளாகவே உள்ளது. பொதுவாக, இத்தகைய தங்க அல்லது செப்புத் தகடுகள் வட இந்தியாவில் தூபிகள் அல்லது தாதுகோபுரங்களுக்குள் காணப்படுகின்றன. அவை அக்காலத்தில் பொதுமக்களால் படிக்கப்படுவதற்காக உருவாக்கப்பட்டவை அல்ல. ஒரு புனிதமான கட்டடத்தைக் கட்டிய அல்லது பராமரித்த கொடையாளியின் புண்ணியத்தைப் பற்றி, அவை வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ கூறுகின்றன. மேலும், கொடையாளிகள் தனது தாராள குணத்திற்காக வரும் பிறவிகளில் வெகுமதியைப் பெறுவர் என்றும் நம்பியுள்ளனர் என்பது தெளிவாகிறது. அவரது புண்ணியங்களின் ஆவணம், எதிர்காலத்தில் பல பிறவிகளுக்கு நிலைத்திருக்கும் வகையில் தங்கம் அல்லது செம்பில்

பொறிக்கப்பட்டது. கி.பி. முதலாவது நூற்றாண்டுகளிலிருந்தே வல்லிபுரம் யாழ்ப்பாணத்தில் இருந்த ஒரு தனித்துவமான புத்தத் தலமல்ல. புத்த மதத்துடன் தொடர்புடைய ஒன்பது இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன (வேலுப்பிள்ளை 1990: 15-16) (Veluppillai). வல்லிபுரமும் கந்தரோடையும் மிகவும் பிரபலமானவை. அல்லது தற்போதைய விவாதத்தில், மிகவும் கண்ணைக் கவர்வன.

வல்லிபுரம் கல்வெட்டு, வரலாற்றுச் சிறப்புமிக்க நாகதீவு (நாகதீப) என்பது யாழ்ப்பாணம் (யாழ்ப்பாண மாவட்டம்) என்பதை இறுதியாக உறுதிப்படுத்துகிறது. புத்தரும் தேவ சமித்திசுமனரும் நாகதீபத்தில் வசித்ததாக ஒரு புராணக் குறிப்பு உள்ளது (மகாவம்சம் 1958: 1: 52) (Mahavamsa 1958: 1: 52). இந்தக் குறிப்புகள், ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மகாவம்சத்தைத் தொகுத்தவரும் 'நாகதீபம்' பற்றி அறிந்திருந்தார் என்பதை நமக்குத் தெரிவிக்கின்றன.

தேவானம்பியதிஸ்ஸ மன்னர் (250-210), 'நாகதீப'வில் உள்ள ஜம்புகோள விகாரம் என்ற ஒன்றிற்குப் பரிசுகளை வழங்கியதாக ஒரு குறிப்பு உள்ளது (மகாவம்சம் 1958: 20, 25) (Mahavamsa). அந்தக் குறிப்பு நம்மை கி.மு. மூன்றாவது நூற்றாண்டுக்கு அழைத்துச் செல்கிறது. இருப்பினும் இந்தக் குறிப்புப் பற்றி நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். தேவானம்பியதிஸ்ஸ, அவருக்குப் பின் வந்த தலைமுறையினரால் அசோகனுடைய பாத்திரத்தை ஏற்றவராகச் சித்தரிக்கப்படுகிறார். பௌத்தப் புனிதக் கட்டடக்கலையைக் கட்டுதல், புனரமைத்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதே அந்தப் பாத்திரம். மேலும் அந்தப் பாத்திரம் மகாவம்சத் தொகுப்பாளரினால் இவ்வாறு வெளிப்படுத்தப்பட்டது. கி.பி. ஐந்தாவது நூற்றாண்டில் 'நாகதீப' என்பது வரலாற்றில் நிச்சயமாக அறியப்பட்டிருந்தது. அசோகப் பிம்பத்தை வரலாற்று உண்மையிலிருந்து வேறுபடுத்துவது இப்போது கடினமாக உள்ளது[1]. எனவே, இந்தக் குறிப்பை நாம் விட்டுவிடுவோம்.

மன்னர் மஹல்லநாக (136-143) (Mahallanga) 'நாகதீப'வில் சாலிபடம் என்ற விகாரத்தைக் கட்டியதாக முதல் வரலாற்றுக் குறிப்பு ஒன்று உள்ளது (மகாவம்சம் 1958: 35: 124). மன்னர் கனிட்டதிஸ்ஸகா (Kanitthatissa ka) (167-186) நாகதீப 'கராவை' புனரமைத்ததற்கான இரண்டாவது வரலாற்றுக் குறிப்பும் உள்ளது (மகாவம்சம் 1958: 36: 9). 'வீடு' என்று பொருள்படும் 'கரா' (Ghara) என்ற சொல் எந்தக் குறிப்பிட்ட கட்டடத்தைக் குறிக்கிறது என்பது தெளிவாக இல்லை (கரா என்பது வட்டமான கட்டடம் என்ற பொருளிலும் வரலாம். மொர்)

மூன்றாவது வரலாற்றுச் சான்று, வோஹாரிகா திஸ்ஸ (Vohrika Tissa) (209-231) மன்னரைப் பற்றியது. இவர், 'நாகதீபகவா'வில் (Ngadipaka) உள்ள திஸ்ஸ என்ற விகாரத்தில் 'சுவர்' எனும் 'பகார'த்தைக் (Pakra) கட்டியதாகக் கூறப்படுகிறது (மகாவம்சம் 1958: 36: 36) (Mahvasa 1958: 36: 36) (இதில் ஒரு எழுத்து குறில் நெடிலாகி 'பாகார' (Pkra) என்று வந்தால் அது பாளி மொழியில் சுற்றிவளைத்துப் பாதுகாப்புக்கும் கட்டப்படும் கட்டடம் என்ற பொருள்படுகிறது - சுற்றுமதில் - மொ.ர்). இந்த மூன்று சான்றுகளும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதி மற்றும் மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கக் காலகட்டத்தில் தொகுக்கப்பட்டுள்ளன. ஒரு சிங்கள மன்னருடன் தொடர்புடைய 'நாகதீப'ம் பற்றிய அடுத்த சான்று, 604 முதல் 618 வரை ஆட்சி செய்த இரண்டாம் அக்கபோதியின் ஆட்சியின் இறுதியில் வருகிறது. அவர் உண்ணலோமகார (Unnualomaghara) என்ற கட்டடத்தை 'ராஜாயதனதாட்டு' விகாரத்துக்கு வழங்கியதாக உள்ளது. அத்துடன் ஆமலசெட்டிய என்ற விகாரத்துக்கு (malacetiya) ஓர் ஆலவட்டக் குடையையும் வழங்கியதாகவும் கூறப்படுகிறது. மேலும் அவர் அங்குள்ள விகாரைக்கு அரிசிக் கஞ்சி வழங்குவதற்காக ஒரு கிராமத்தையும் வழங்கியுள்ளார் (சூளவம்சம் 1980: 42: 62-63) (Cavasa 1980: 42: 62-63). அதன்பிறகு, நாகதீபம் வரலாற்றுப் பதிவுகளில் மீண்டும் குறிப்பிடப்படவில்லை. பின்னர் வோஹாரிகா திஸ்ஸவிற்கும் (Vohrika Tissa) இரண்டாம் அக்கபோதிக்கும் இடையில் கிட்டத்தட்ட 400 ஆண்டுகள் மௌனம் நிலவுகிறது. மேலும் இந்த மௌனக் காலமும், இரண்டாம் அக்கபோதிக்குப் பிறகான இடைக்காலம் முழுவதுமான மத்திய காலகட்டமும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கலாம். வரலாற்றுப் பதிவுகள் அரசர்களின் 'புகழ் ஏடுகளை' அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன. ஓர் அரசர் உண்மையிலேயே 'நாகதீப'த்தில் ஒரு புனரமைப்பைச் செய்திருந்தாலோ அல்லது ஒரு விகாரையைக் கட்டியிருந்தாலோ அது அவருடைய புகழ் ஏட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும். பின்னர் வரலாற்றுப் பதிவுகளைத் தொகுத்தவர்களாலும், அவரைப் பற்றிய கல்வெட்டுகளில் அவரது பரிவாரத்தினராலும் அல்லது உறவினர்களாலும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும். இந்த மௌனத்தை, சிங்கள அரசர்களுக்கும் வடக்கிற்கும் இடையே எந்தத் தொடர்பும் இல்லாத ஒரு நிலையாகப் புரிந்துகொள்ளலாம். 'நாகதீபத்'தின் அரசியல் முடிவெடுப்பவர்கள், ஒருவேளை தமிழர்களாக இருந்திருக்கலாம். பாதுகாப்பு மற்றும் பண்பாட்டுப் பரிமாற்றத்திற்காக, பதிலாக திராவிடத் தென்னிந்தியாவை நாடியிருக்கலாம்.

அகித்தி ஜாதகத்திற்கான (Akitti Jtaka) (எண். 480)[2] உரை, நாகதீபம் தென்னிந்தியாவுடன் தொடர்புடையது என்ற இந்தக் கருத்தை ஆதரிக்கிறது. அந்தக் குறிப்பு சிறப்பாகச் சுவையானது. ஏனெனில் அது கி.பி. நான்காவது நூற்றாண்டு வாக்கில் தமிழகத்தில் (பாலி - தமிழரத்தம்) இருந்த தென்னிந்திய நகரமான காவிரிப்பூம்பட்டினத்திற்கும் (பாலி - காவேரிப்பட்டண) நாகதீபத்திற்கும் இடையே சமயத் தொடர்பு இருந்ததைச் சுட்டிக்காட்டுகிறது. பிற முந்தைய குறிப்புகள் 'நாகதீப'த்தின் நிலையைத் தெளிவற்றதாகக் குறிப்பிட்டன. ஆனால் இந்த உரை 'நாகதீப'த்தை 'காரதீபத்'திற்கு அருகில் வைப்பதில் மிகவும் தெளிவாக உள்ளது.

கி.பி. ஆறாவது நூற்றாண்டில் சாத்தனாரால் எழுதப்பட்ட தமிழ்க் காவியமான மணிமேகலையிலும் நாகநாடு என்ற சொல்லைத் தமிழில் நாம் காண்கிறோம். இந்தத் தமிழ் புத்தக் காவிய மரபின்படி, அதன் நாயகி மணிமேகலையே நாகநாட்டில் உள்ள மணிபல்லவம் என்றழைக்கப்படும் ஒரு கோயிலுக்குச் செல்கிறார் (சாத்தனார் 1981: 160-162) (Cttanr 1981: 160-162). கி.பி. ஐந்து, ஆறாவது நூற்றாண்டுகளில், மகாவம்சமும் மணிமேகலையும் எழுதப்பட்ட போது, தமிழ்த் தரப்பிலும் சிங்களத் தரப்பிலும் நாக தீவு குறித்து வலுவான புராணகால பௌத்த மரபுகள் இருந்தன என்பது தெளிவாகிறது[3].

வரலாற்றுப் பதிவுகளில் 'வடக்குப் பகுதி' என்று பொருள்படும் 'உத்தரதேசம்' என்ற சொல்லின் குறிப்பைப் பார்ப்பதன் மூலம், அனுராதபுரத்தின் அரசமரபினருக்கு வடக்குப் பகுதியுடன் இருந்த பிரச்சினைகள் தெளிவாகின்றன. 'உத்தரதேசம்' அனுராதபுரத்திற்கு வடக்கே உள்ள பகுதியைக் குறிக்கிறது. ஆனால் எவ்வளவு தூரம் வடக்கு என்பது தெரியவில்லை. இது தீவின் முழு வடக்குப் பகுதியையும் குறிக்கும் ஒரு தெளிவற்ற குறிப்பாக இருக்கலாம். இரண்டாம் அக்கபோதிக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த மூன்றாம் மொகலானன் (Moggalana III) (614-619) (சூளவம்சம் 1980: 44: 711) (Cavasa 1980: 44: 711), உத்தரதேசத்தைக் கைப்பற்றியிருந்த தமிழருக்கு எதிராகப் போரிட்டான். மேலும் அதற்குப் பின் வந்த பல மன்னர்களும் அவ்வாறே செய்தனர் (சூளவம்சம் 1980: 48, 834, 95,112; 50,14; 70,92) (Cavasa 1980: 48, 834, 95,112; 50,14; 70,92). இவ்வாறான போர்கள் மூன்று, நான்காவது நூற்றாண்டுகளில் ஏற்பட்ட உறவுகளைத் துண்டித்த 'உத்தரதேசம்' ஆறு, ஏழாவது நூற்றாண்டுகளில் ஒரு தமிழ்ப் பகுதியாக உருவானது.

வல்லிபுரம் கல்வெட்டின் பெரும் மதிப்பு என்பது இந்த 'நாகதிவ' (Nakadiva) அதில் குறிப்பிடப்பட்டிருப்பதுதான். எனவே, அது கல்வெட்டுக் கண்டெடுக்கப்பட்ட இடத்தையே குறிப்பிடும் ஒரு முக்கியமான பதிவாகும். பாலி மொழியில் இருக்கும் மகாவம்சத்தில் அது 'நாகதிப(க)' (Ngadpa(ka)) என்றும், பிராகிருதத்தில் 'நாகதிவ' (Nkadva - Nagadiva) என்றும், தமிழில் 'நாகதீவு' என்றும் காணப்படுகிறது. 'நாகதீவு' என்பது தமிழ் என்று நாம் கூறும்போது, அது பிராகிருதத்திலிருந்து கடன் வாங்கப்பட்டு தமிழாக்கப்பட்ட ஒரு சொல் என்பதை நாம் அறிவோம். ஆனால், இப்படித் தமிழாக்கப்பட்டதால் அது ஒரு தமிழ்ச் சொல்லாக மாறிவிட்டது.

★★★★★★★★★

வல்லிபுரம் புத்தர் சிலை 'மீளக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது'. அது பாங்காக்கில் மத்தியில் உள்ள வாட் பென்ஜா (Wat Benja) என்ற பௌத்த விகாரையில் அமைந்துள்ளது. இந்த விகாரை மேற்கத்திய சுற்றுலாப் பயணிகளால் 'பளிங்குக் கோயில்' என்று அழைக்கப்படுகிறது. இந்த நூலாசிரியர் ஜனவரி (1994) மற்றும் ஜூன், ஜூலை (1996) ஆகிய மாதங்களில் அந்த இடத்திற்குச் சென்றுள்ளார். பாங்காக்கில் சுற்றுலாப் பயணிகளால் அதிகம் பார்வையிடப்படும் இடங்களில் இந்த 'வாட்' ஒன்றாகும். பணம் மாற்றுவதற்கான ஒரு வணிக வங்கி கூட அதன் நுழைவாயிலுக்கு வெளியே அமைந்துள்ளது. ஆனால் புத்தர் சிலைக்கு மையமான இடம் வழங்கப்படவில்லை. ஆதலால், அதை எளிதில் காண முடிவதில்லை. வல்லிபுரம் புத்தர் சிலை என்ற பெயரில் ஒரு சிலை அங்கு இருப்பது காவலர்களுக்கும் தொழில்முறைச் சுற்றுலா வழிகாட்டிகளுக்கும் கூடத் தெரியாது. அங்கேயிருக்கும் மடாலயத்தில் வாழ்நாள் முழுவதும் இருந்த துறவிகளுக்குக் கூட, இந்தச் சிலையைப் பற்றி, இந்தப் பெயரிலோ அல்லது வேறு எந்தப் பெயரிலோ தெரியாது.

இது 'வாட்' (Wat Benja) இனுடைய பின்புறத்தில் ஒரு மூலையில், மழை, திருட்டு மற்றும் நாச வேலைகளிலிருந்து ஓர் இரும்புத் திரையால் நன்கு பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. ஒரு சிறிய மரப் பலகையில், 'தாய்' மொழி மற்றும் ஆங்கிலத்தில், 'இந்தச் சிலை சிலோன் (Ceylon) தீவிலிருந்து புத்தர் தீமையை விரட்டுவதைக் குறிக்கிறது' என்று எழுதப்பட்டுள்ளது. வல்லிபுரம் பற்றிய எந்தக் குறிப்பும் இல்லை. சிலையைச் சுற்றி ஒரு மஞ்சள் நிற ஒளிபுகும் சால்வை சுற்றப்பட்டுள்ளது. மேலும் அதன் காலடியில் தூபத்துடன் கூடிய பானைகள் வைக்கப்பட்டுள்ளன. அந்த மூலை ஒரு வழிபாட்டுத் தலமாக மாற்றப்பட்டுள்ளது. ஆனால் சுற்றுலாப் பயணிகள் மற்றும் வழிபாட்டாளர்களின் முதன்மை நடைபாதையில் வியூகமாக வைக்கப்பட்டுள்ள 'வாட்' (Wat Benja) இலுள்ள மற்றைய சிலைகளுடன் இதனால் போட்டியிட முடியாது.

சிங்கள அதிகாரிகளின் வேண்டுகோளின் பேரில் இதன் ஒரு பிரதி உருவாக்கப்பட்டு ஜனவரி 1994இல் கொழும்புக்கு அனுப்பப்படத் தயாராக இருந்தது[4].

இது சுண்ணாம்புக்கல்லாலான ஒரு முழு உருவச் சிலை (பரணவிதான 1983: 79) (*Paranavidana* 1983: 79) அரை டன் எடை கொண்டது என்று கூறப்பட்டது (சிலோன் ஆன்டிக்குவரி 1916-17: தட்டு 10, 2) (*Ceylon Antiquary*). புத்தர் நின்ற கோலத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளார் (படங்கள் 1 மற்றும் 2 பார்க்கவும்). சிற்பத்தின் வலது கை, ஒரு புதிய கையாக மாற்றப்பட்டதாகவும் அதன் இடது கை விரல்கள் சரி செய்யப்பட்டதாகவும் தெரிகிறது. யாழ்ப்பாணத்தின் பழைய பூங்காவில் உள்ள போதி மரத்தின் கீழ், ஒரு தாழ்வான கல் மேடையில் வல்லிபுரம் சிலை நின்றுகொண்டிருந்த போது எடுக்கப்பட்ட ஒரு புகைப்படம் உள்ளது. அந்த நிலையில், வலது கை முழுவதும் தோள்பட்டை வரை உடைந்து போயிருந்ததையும் அங்கியைப் பிடித்திருந்த இடது கை முழுவதும் காணாமல் போயிருந்ததையும் அந்தப் புகைப்படம் காட்டுகிறது (சிலோன் ஆன்டிக்குவரி 1916-17: தட்டு 10, 2) (*Ceylon Antiquary*). இவை அனைத்தும் இன்று கலைஞர்களால் சுண்ணாம்பால் மாற்றப்பட்டுள்ளன. மேலும் அந்த மாற்றீடுகளை வண்ணப் புகைப்படங்களில் அடையாளம் காண முடியும். எனவே, வலது கையின் முத்திரை[5] குறித்த தற்போதைய ஆசிரியரின் விளக்கம் ஓர் ஊகமே. ஆனால் அது ஏற்கத்தக்க ஒன்றாகும் (கீழே காண்க). புத்தரைச் சுற்றி அவருடைய சீடர்கள் எவரும் இல்லை. இப்போது இந்தச் சிலையைப் பற்றிய ஒரு தோற்ற விளக்கத்தை அளிப்போம்.

உச்சிமுடி சிறியதாகவும், மேல்பகுதி தாழ்வாகவும் உள்ளது[6]. முடி, புடைத்துச் சிறு புள்ளிகளாகத் தெரியும் சிறிய சுருள்களாகச் சுருண்டுள்ளது. அந்தச் சுருள்கள் எந்தத் திசையில் செல்கின்றன என்பதைக் கண்டறிவது கடினம். முகம், உடல் முழுவதையும் போலவே வட்டமாகவும் சதைப்பற்றாகவும் உள்ளது. கண்கள் பாதாம் வடிவில் சற்றே கோணலாக அமைந்துள்ளன. நெற்றி உயர்ந்த புருவங்களைக் கொண்டுள்ளது. புருவங்கள் மேல்நோக்கி நீண்டுள்ளன. இப்போது விழிகளின் மேல் நெற்றியில் இருக்கும் தியானப்புள்ளி (ஞானக்கண்) தெரியவில்லை. அது ஒருபோதும் இருந்ததில்லை என்றே தோன்றுகிறது[7]. கருவிழி தெரியவில்லை, எனவே இது ஒரு பார்வையற்ற மனிதனின் தோற்றத்தை அளிக்கிறது. மூக்குப் பெரியதாகவும் அகலமாகவும், உதடுகள் தடிமனாகவும் உள்ளன. புன்னகைக்கான அறிகுறி தெரிகிறது. காதுகள் மிகவும் நீளமாக உள்ளன. அவை கழுத்தின் மேல் பகுதி வரையிலும், கிட்டத்தட்ட தோள்பட்டை வரையிலும் நீண்டுள்ளன. அவை முடிச்சுப் போட்ட மடல்களில் முடிகின்றன. கழுத்து, மூன்று நாடிகள் கொண்ட ஒரு குண்டான மனிதனின் கழுத்தைப் போல் உள்ளது.

கனமான, தளர்வான மடிப்புகளாக விழும் மேலாடையின் கீழ் உள்ளாடை எதுவும் தென்படவில்லை[8],[9]. மூலத்தில் உள்ள வலது கை முத்திரை அபய முத்திரையா என்பதை இனிமேலும் தீர்மானிக்க இயலாது[10]. கை மாற்றப்படுகிறது. புதிய கை மோசமாகச் செய்யப்பட்டுள்ளது. மேலும் 'சீர்திருத்துநர்கள்' ஒரு சிங்களத் தோற்றத்தைத் தருவதற்காக ஆசிச (*sa*) முத்திரையை வலிந்து பின்பற்ற முயன்றனர்[11]. அது அபய முத்திரையின் ஒரு மாற்று வடிவமாகும். ஆனால் ஐந்து முதல் ஏழாவது நூற்றாண்டு வரையிலான 'அவுகண' சிலையிலிருந்து (கெக்கிராவைப் பகுதியில் உள்ள ஓர் புத்தர் சிலையில் இருந்து தோன்றிய மரபுப் பாணி) நாம் அறிந்த சிங்கள பௌத்த சிற்பவியலின் ஒரு பொதுவான வடிவமாக அறியப்படுகிறது. இன்றைய சீர்திருத்துநர்கள், இது அனுராதபுரம் கலைப் பள்ளியின் (பிற்கால வளர்ச்சியின்) ஒரு பகுதி என்பதை அறிந்துள்ளனர். அதனால் கையை ஆசிச முத்திரையாக மாற்றுவதன் மூலம் சிலைக்கு ஒரு சிங்களத் தோற்றத்தைக் கொடுக்க முயன்றனர் என்பது தெளிவாகிறது. இதுவே சிலையின் இன - அரசியல், சிங்கள - பௌத்த விளக்கம் மற்றும் கையாளுதலுக்கான முதல் அறிகுறியாகும். மூலத்திற்கு வருவதற்கு, நாம் இந்தச் சமீபத்திய 'மீட்டமைப்பைப்' புறக்கணித்துவிட்டு, அமராவதியில் உள்ள இந்த நின்ற கோலத்திலிருக்கும் புத்தர்களுக்குப் பொதுவான 'அபய' முத்திரை உள்ளது என்ற கோட்பாட்டையே பின்பற்ற வேண்டும். அவற்றில் எதற்கும் 'ஆசிச' முத்திரை இல்லை. இந்தச் சிங்கள 'மீட்டமைப்பு' அந்தச் சிலையின் அரசியல், சுரண்டலுக்கான ஓர் அறிகுறியாக இருப்பதை நிச்சயமாக நாம் புறக்கணிக்கக் கூடாது. இது, சிங்கள நலன்களுக்கு ஏற்றவாறு கல்வெட்டில் உள்ள சொல்லை 'மீட்டமைத்த' செயலுடன் ஒப்பிடப்படுகிறது.

கல்வெட்டில் இசிகிரய (*Isigiraya*) என்ற சொல்லைக் காண்கிறோம். பிராமி எழுத்துகளை இசிகிரய (*Isigiraya*) என்று வாசிப்பதில் எந்த சர்ச்சையும் இல்லை. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சிங்களப் பேராசிரியரும், பரணவிதானப் பள்ளியின் (கீழே காண்க) ஒரு நீட்சியாகவும் விளங்கும் கே.என்.ஓ. தர்மதாச ஒரு மாற்றும் வேலையைச் செய்கிறார். தனது ஆசிரியர் எஸ். பரணவிதானவை உண்மையுடன் பின்பற்றி, இசிகிரிஇய (*Isigiriya*) என்ற தனது வாசிப்பை, ஒரு சிங்கள விளக்கத்திற்குப் பொருந்தும் வகையில் மீண்டும் உயிர்ப்பிக்கிறார்.[12] அந்தச் சிறிய, ஆனால் முக்கியமான மற்றும் தன்னிச்சையானதாகத் தோன்றும் 'அ' என்ற உயிரெழுத்தின் 'இ' என்ற மாற்றத்தால், தர்மதாசவால் அந்தச் சொல்லை சிங்கள வழியில் 'இசிகிரி' (*Isigiri*), அதாவது 'துறவியின் பாறை' (*i*) என்று

விளக்க முடிகிறது! (தர்மதாச 1994: 88-90) (Dharmadasa). இதைத்தான் நாம் 'சிங்கள விளக்கம்' என்று அழைக்கலாம். இது ஒரு தமிழ்க் குறிப்பைக் கொடுக்கும் சாத்தியக்கூறை நிராகரிக்கிறது. நாம் இந்த வாசிப்பை அப்படியே எடுத்துக் கொண்டால், இதில் எந்தச் சர்ச்சையும் இல்லை. நாம் இசிக்கி (Isiki) என்ற ஒரு தமிழ்ப் பெயரைக் காண்கிறோம். மேலும் ராயன் (Rayan) என்பதும் உள்ளது. பிராகிருதமயமாக்கப்பட்ட வடிவத்தில் அவை இசிகிரிய எனத் தோன்றலாம். ★இசிகிரி என்பது இன அடிப்படையிலான விருப்பச் சிந்தனையின் விளைவாகும். இது புத்தரின் கையை ஆசிச முத்திரையாக மீட்டமைத்ததைப்' போன்றது (★மேலே காண்க).

வெளிப்படையாகத் தெரியும் கால்விரல்களைத் தவிர, பாதங்களையும் கூட மூடியிருக்கும் மேலாடையின் சரிவைப் புத்தரின் இடது கை தாங்கிப் பிடிக்கிறது. முன்பக்கமாக மேலாடை சரிந்திருப்பது ஆண்குறி இல்லாததைக் குறிக்கிறது. அவருக்குக் குறுகிய இடுப்பும், ஆனால் தடகள வீரரைப் போன்ற தோற்றத்தைத் தரும் அகன்ற தோள்களும், ஒரு பெண்ணினுடைய உடலமைப்பில் தொடர்புடைய பெரிய இடுப்புப் பகுதியும் உள்ளன.

அவருடைய தோற்றம் நமக்குச் சற்றே 'கிராமியத்தனமாக'த் தோன்றலாம். ஆனால் ஆந்திராவின் சாதவாகன வம்சத்தினுடைய அரச சிலைகளும் அதனைத் தொடர்ந்த இக்ஷ்வாகு வம்சத்தினுடைய சிலைகளும் இந்தச் சிலைக்கு இணையானவையாகும். முந்தையவர்கள் கி.மு. 230 முதல் கி.பி. மூன்றாவது நூற்றாண்டு வரை ஆட்சி செய்தனர். அதனைத் தொடர்ந்து ஆந்திரதேசத்தில் இக்ஷ்வாகுகள் ஆட்சிக்கு வந்தனர். கி.பி. மூன்றாவது நூற்றாண்டின் பிற்பகுதியில் அவர்களின் ஆட்சியின் போதுதான், சிங்களத் துறவிகளுக்காக அல்லாமல், 'சிங்கள' என்ற தீவைச் சேர்ந்த துறவிகளுக்காக ஒரு 'சிங்கள' விகாரம் இருந்ததாகக் கல்வெட்டுகளில் நாம் கேள்விப்படுகிறோம் (வோகல் 1929-30: 22) (Vogel 1929-30: 22). இந்தத் தகவல், ஆந்திரக் கலையால் ஈர்க்கப்பட்டு வல்லிபுரத்தில் ஒரு புத்தர் சிலை நிறுவப்பட்ட காலத்திற்கும் இடத்திற்கும் கச்சிதமாகப் பொருந்துகிறது. நிச்சயமாக, இன்றைய வல்லிபுரத்தை, வடமராச்சியின் வெப்பமான மணல் குன்றுகளில் தனித்து அமைந்துள்ள தமிழ் வைஷ்ணவத்தின் மையமாக நாம் கருதக்கூடாது (ரகுபதி 1987: 83-85) (Ragupathy 1987: 83-85). வல்லிபுரத்தில், முற்காலக் குடியேற்றத்தைச் சுட்டிக்காட்டும் மிகவும் செழுமையான தொல்பொருள் எச்சங்கள் உள்ளன. இது கி.பி. முதல் நூற்றாண்டுகளில் ஒரு கடல்வணிக மையமாக இருந்திருக்கலாம். ஈழத்தின் கிழக்குக் கடற்கரையோரமாகச் சென்ற வணிகர்கள் மற்றும் புனிதப் பயணிகளுக்கான பாதையின் ஒரு பகுதியாகவும் அமைகிறது. நாகப்பட்டினம் கடற்கரைக்கு அருகிலும் வல்லிபுரம் உள்ளது. மேலும் ஆந்திரக் கடற்கரையிலிருந்து எளிதில் அணுகக்கூடியதாகவும் இருக்கிறது.

வல்லிபுரம் உருவத்தின் அழகியலின் தோற்றுவாய் மிகவும் தெளிவானது: அமராவதியின் திராவிடப் பகுதிகளாகிய பட்டிப்ரோலு, ஜக்கையபேட்டா, கானாடாசாலா, நாகர்ஜுனகொண்டா மற்றும் கோலி ஆகியவற்றின் படைப்பாற்றல் மையச் சாயல் உடையது. கி.மு. இரண்டாவது நூற்றாண்டு முதல் கி.பி. மூன்றாவது நூற்றாண்டுவரை சாதவாகனர்கள் மற்றும் இக்ஷ்வாகுகளின் காலத்தில் ஆந்திராவில் இந்தப் பகுதிகளில் பௌத்த அமராவதிக் கலை வடிவம் முகிழ்த்தது (குமாரசாமி 1980; போயிஸ்லியர் மற்றும் பலர். 1978; ஹார்டெல் 1971). (Coomarswamy 1980; Boisselier et al. 1978; Härtel 1971)

அங்கு புத்தர் உருவம் கி.பி. இரண்டாவது நூற்றாண்டின் இறுதியில் இருந்துதான் தோன்றுகிறது. இது மூன்றாவது நூற்றாண்டு முழுவதும் நீடிக்கிறது. ஏற்கனவே காலக்கணிப்புச் செய்யப்பட்ட கற்களுடன் இந்த வல்லிபுரம் சிலையை நாம் ஒப்பிடுவதன் மூலம், இது கி. பி. மூன்று முதல் நான்காவது நூற்றாண்டுக் காலத்தைச் சேர்ந்தது என்று முடிவு செய்யலாம். அந்தக் காலகட்டத்தில்தான், வழக்கமான அமராவதி - பௌத்தச் சிற்பக்கலை வளர்ச்சி பெற்றது. அது காந்தாரம் மற்றும் மதுராவின் சிற்பக்கலையால் ஈர்க்கப்பட்டு, தென்னிந்தியா, ஈழம் மற்றும் தென்கிழக்கு ஆசியாவிற்குப் பரவியது. ஆனால் கி.பி. நான்காவது நூற்றாண்டுக்கு முன்பு அல்ல.

கல்லில் செதுக்கப்பட்ட இந்த நின்றகோலப் புத்தரில் காணப்படும் பண்புகள்: அவர் உண்மை உருவத்தை விடப் பெரியவர். அவர் மேலங்கியின் முனையை இடது கையில் பிடித்திருக்கிறார். வலது கை அபய முத்திரையில் உயர்த்தப்பட்டுள்ளது. தலைமுடியின் சுருள்கள் தட்டையாக உள்ளன. முகம் வட்டமானது. உச்சிமுடி தாழ்வாகவும் சிறியதாகவும் உள்ளது. மற்றும் மேலாடை மடிப்புகளாகத் தொங்குகிறது. இதுவே நின்றகோல அமராவதி புத்தர் சிலைக்கான மாதிரி (படம் 1 மற்றும் 3 ஆகியவற்றைப் பார்க்கவும்).

'அனுராதபுரப் பாணி' என்ற சொற்றொடர், புத்தர் சிலைகளின் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்த, சிங்களப் பாணி ஒன்று அனுராதபுரத்தில் இருந்தது என்பதைக் குறிப்பதாகத் தெரிகிறது. எனவே, வல்லிபுரம் புத்தர் சிலை அனுராதபுரப் பாணியால் தாக்கம் பெற்றது என்று ஒருவர் எதிர்பார்க்கலாம்.

இருப்பினும், 'அனுராதபுரம் கலைப்பாணி' என்பது என்ன? அது இரண்டு கட்டங்களாகப் பிரிக்கப்படுகிறது. முதலாவது கி.பி. 459இல் தாதுசேனன் காலம் வரையிலும் இரண்டாவது கி.பி. பத்தாவது நூற்றாண்டில் அனுராதபுரம் கைவிடப்பட்ட காலம் வரையிலும் ஆகும். முதல் காலகட்டத்திலிருந்த புத்தர் சிலைகள் சம்பந்தமாக மிகக் குறைவானவைகளே எஞ்சியுள்ளன. மேலும் எஞ்சியிருப்பவை அமராவதியின் பாணியைப் பின்பற்றுகின்றன. இந்தக் காலகட்டத்தைச் சேர்ந்த, சிங்களப் பகுதியில் அறியப்பட்ட மிகப் பழமையான புத்தர் சிலை, அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள மகா இலுப்பள்ளமவில் இருந்து கிடைத்தது. அது ஆறு அடி உயரமுடையது. வெள்ளைப் பளிங்குக் கல்லால் ஆனது. அநேகமாக ஆந்திராவின் வேங்கி பகுதியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கலாம். இது அமராவதிக் கலைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

மற்றொரு பழமையான புத்தர் சிலை மதவாச்சியில் உள்ள 46 செ.மீ. உயரமுள்ள ஒரு வெண்கலச் சிலையாகும். அது கி.பி. நான்காவது நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது. அதன் தோரணையிலும், ஆடை சரி செய்யப்பட்ட விதத்திலும் இது அமராவதிப் பள்ளியை நினைவூட்டுகிறது (போயிஸ்லியர் மற்றும் பலர் 1978: 141) (Boisselier et al. 1978: 141). இந்தக் கட்டத்தில் ஆசிச முத்திரையை நாம் காணவில்லை. இது அவுக்கண சிலையால் ஆதாரப்படுத்தப்பட்டுள்ள படி, அனுராதபுரம் பள்ளியின் இரண்டாம் கட்டத்தைச் சேர்ந்தது.

இரண்டாம் கட்டத்தில்தான் அனுராதபுரம் சமயப்பள்ளி வருகிறது. நாம் அனுராதபுரம் அல்லது சிங்கள பௌத்தம் என்று அழைக்கக்கூடிய குறிப்பிட்ட அம்சங்களை அது வளர்த்துக் கொள்கிறது. முதல் கட்டத்தில் இந்தப் பள்ளி, வட ஈழத்தில் உள்ள தமிழ்நாட்டின் மற்றும் நாகதீவின் தாக்கங்களைப் பெற்றுக்கொண்டிருந்தது.[13] இந்த முதல் கட்டத்தில், இது தென்னிந்தியா, நாகதீவு மற்றும் தென்கிழக்கு ஆசியாவைப் போலவே அமராவதி சமயப் பள்ளியின் வாரிசாகவும் வழித்தோன்றலாகவும் இருந்தது (போயிஸ்லியர் மற்றும் பலர்: 140-167) (Boisselier et al. 1978: 141). இந்தச் சிலைகளில் ஒன்றான வல்லிபுரம் சிலையையும், பாணியின் அடிப்படையில் கி.பி. மூன்று முதல் நான்காவது நூற்றாண்டைச் சேர்ந்தது என்று நாம் கருதுகிறோம். கி.பி. நான்காவது நூற்றாண்டுக்கு முன்பு இவற்றை நிறுவுவது சாத்தியமற்றதாக இருந்தது. அமராவதியில் தொடங்கப்பட்ட பௌத்த சிற்பக்கலையின் ஓர் அலையின் விளைவாகவே நாம் வல்லிபுரம் சிலையைப் பார்க்க வேண்டும். இந்தச் சிலை சார்ந்த பௌத்தப் பண்பாடு திராவிட மற்றும் தென்னிந்தியப் பண்பாடேயாகும். இன்னும் குறிப்பாக ஆந்திரப் பண்பாடு ஆகும். அப்படியானால், மேலே குறிப்பிட்டபடி, அமராவதி, அதன் முதல் கட்டத்தில் அனுராதபுரம் மற்றும் வல்லிபுரம் ஆகியவற்றுக்கு இடையே ஒரு பண்பாட்டுச் சந்திப்பின் புவியியல் முக்கோணத்தை நாம் காண்கிறோம். இது அனுராதபுரத்தில் பௌத்தக் கலையின் வளர்ச்சியின் இரண்டாம் கட்டத்தில் மட்டுமே வருகிறது. தென்னிந்தியா மற்றும் ஈழத்தைச் சேர்ந்த புத்தர்களின் இந்த ஒன்றிணைப்புக் கைவிடப்பட்டு, அனுராதபுரத்தில் சிங்கள பௌத்தக் கலையாக அது மாற்றப்பட்டது.

★★★★★★★

புத்தர் சிலை ஏன் இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது? அந்தச் சிலை இரண்டு காரணங்களுக்காக முக்கியத்துவம் பெறுகிறது. ஒன்று, அமராவதி—அனுராதபுரம்—வல்லிபுரம் முக்கோணப் பகுதியில் இன மோதல்களுக்கு அப்பாற்பட்ட ஒரு சுதந்திரமான கலாசாரப் பரிமாற்றத்தைக் குறிக்கும் அதன் வரலாற்று முக்கியத்துவம். மற்றொன்று, தீவில் நடந்துகொண்டிருக்கும் இன மோதலில் சுரண்டப்படும் ஒரு பொருளாக, அதன் தற்போதைய அரசியல் முக்கியத்துவம்.

படம் 1. பாங்கொக்கில் உள்ள வாட் பெஞ்சா கோயிலில் காணப்படும் வல்லிபுரம் புத்தர் சிலை. புகைப்படம்: பீட்டர் ஷால்க், ஜனவரி 1994 (AI மூலம் செழுமையாக்கப்பட்டது).

படம் 2. அதே படத்தின் நெருக்கமான காட்சி. புகைப்படம்: பீட்டர் ஷால்க் (AI மூலம் செழுமையாக்கப்பட்டது).

படம் 3. புத்தர் இடது கையில் மேலாடையின் முனையைப் பற்றியுள்ளார்; வலது கை அபயமுத்திரையில் உயர்த்தப்பட்டுள்ளது (இங்கு கை காணப்படவில்லை); தலைமுடியின் சுருள்கள் தட்டையாக உள்ளன; முகம் வட்ட வடிவில் உள்ளது; உஷ்நிஷம் தாழ்வாகவும் சிறியதாகவும் உள்ளது; மேலாடை மடிப்புகளாகத் தொங்குகிறது. இதுவே நின்ற நிலையில் அமைந்த அமராவதி புத்தர் சிலைக்கான மாதிரியாகும். மெட்ராஸ் அருங்காட்சியகத்தின் பணிப்பாளர் அவர்களின் அனுமதியுடன். புகைப்படம்: பீட்டர் ஷால்க், ஜனவரி 1994 (AI மூலம் செழுமையாக்கப்பட்டது).

முதல் காரணத்தை நாம் ஏற்கனவே மேலே விரிவாகக் கூறியுள்ளோம். சிங்கள ஆர்வலர்களால் மூலங்களுக்குச் செய்யப்பட்ட சிற்ப மற்றும் சொல்லாட்சி ‘மீட்டமைப்புகள்’ மூலம் மேலே சுட்டிக்காட்டப்பட்ட இரண்டாவது காரணத்தை இப்போது இங்கு விரிவாகக் காண்போம். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள பகுதி இப்போது 100% தமிழ் மயமாகியுள்ளது. தமிழர்கள் இன்று சைவம், கிறிஸ்தவம் அல்லது இஸ்லாம் ஆகியவற்றுடன் தொடர்புடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால் பௌத்தத்துடன் அல்ல. இருப்பினும், கடந்த காலத்தில், காலனித்துவத்திற்கு முந்தைய இலங்கையில் தமிழ்ப் புத்தர்கள் இருந்தனர். ஆனால் இது சிங்கள மற்றும் தமிழர்களின் வரலாற்று எழுத்துகளில் வலியுறுத்தப்படவில்லை.[14] எனவே, இன்று தமிழ்ப் பகுதிகளில் பௌத்த இடங்கள் காணப்படுவது சிங்கள மற்றும் தமிழர்கள் இருவரின் மனங்களிலும் ஒரு பதற்றத்தை உருவாக்குகிறது. ஏனெனில் இலங்கை (சிங்கள) பௌத்த சங்கத்தில் மகாயானத்தைப் போலவே தமிழ்ப் புத்தத்திற்கும் இன்று அங்கீகாரம் இல்லை. பல தமிழர்களும் — நிச்சயமாகத் தமிழ் அறிஞர்கள் அல்ல — தமிழ் புத்தத்தைப் பற்றி அறியாதவர்களாக இருக்கிறார்கள். ஏனெனில் புத்தம் பற்றிய அவர்களின் கருத்துகள் சிங்களப் பௌத்தர்களால் அவர்களுக்கு வழங்கப்பட்டன. சில சிங்கள அறிஞர்கள், ஆரம்பகால வரலாற்றில் சிங்களப் பௌத்தக் குடியேற்றங்கள் இருந்ததாகவும் அவை இடைக்காலத்தில் (Medieval Period) தமிழ்க் குடியேறிகளால் முறியடிக்கப்பட்டதாகவும் குறிப்பிடுகின்றனர். ஒரு தமிழ் அறிஞர், ஒரு வரலாற்றுப் பேராசிரியர் கூட இந்த நிலைப்பாட்டை எடுத்துள்ளார். மேலும் இது நிச்சயமாக சிங்கள அறிவுஜீவிகளால் கவனிக்கப்பட்டு முழுமையாகப் பயன்படுத்தப்படுகிறது.[15]

1917 ஆவது ஆண்டு ‘ரோயல் ஏசியாடிக் சொசைட்டி’ (Journal of the Royal Asiatic Society) சஞ்சிகையில் சிங்கள வரலாற்றாசிரியர்கள், பி.இ. பீரிஸ் எழுதிய ஒரு கட்டுரையை அடிக்கடி மேற்கோள் காட்டினர். அந்தக் கட்டுரை, வடக்கில் பௌத்த மதத்தின் கண்டுபிடிப்புகளை ‘சிங்கள மேலாதிக்கம்’, ‘சிங்கள அதிகாரம்’ மற்றும் ‘சிங்கள ஆக்கிரமிப்பு’ ஆகியவற்றுடன் வெளிப்படையாக இணைத்தது (பீரிஸ் 1917: 12, 14) (Pieris 1917: 12, 14). இந்தக் கட்டுரை வடக்கில் தொல்பொருள் ஆய்வுப் பணிகள் தொடங்குவதற்கு ஒரு சிறப்புச் சமூகப் பார்வையை அளித்தது. விவாதிக்கப்பட்ட இடங்களில் ஒன்று வல்லிபுரம் (பீரிஸ் 1917: 17) (Pieris 1917: 17). அவராலும் அவருடைய ஆதரவாளர்களாலும், வடக்கில் தமிழர்களால் பரப்பப்பட்ட ஒரு புத்த மரபு இருந்தது என்பதைக் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை.

1983 ஆவது ஆண்டு, கொழும்பில் தமிழர் படுகொலைகள் நடந்த அதே ஆண்டில், கைத்தொழில்கள் மற்றும் விஞ்ஞான விவகாரங்கள் அமைச்சரும், அரச கூட்டுத்தாபனங்களின் பௌத்த சங்கங்களின் பேரவையின் தலைவரும், இலங்கையில்

பௌத்த திருத்தலங்களை மீட்டெடுத்துப் பாதுகாப்பதற்கான அறக்கட்டளையின் தலைவருமான சிரில் மத்யூ, உலகெங்கிலும் விநியோகிக்கப்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க நூலை வெளியிட்டார். அதனை அவர் பரிஸில் உள்ள யுனெஸ்கோவிற்கும் அனுப்பினார். அவர் அதை, அரச தொல்பொருள் திணைக்களத்தின் தொல்பொருள் உதவி ஆணையரான எம்.எச். சிறிசோமாவுடன் இணைந்து ஆங்கிலத்தில் எழுதியிருந்தார். அந்த நூலில், சிங்கள பௌத்த இடங்களைக் காட்டுவதாகக் கூறப்படும் ஒரு வரைபடம் இருந்தது. அவை இப்போது 'சட்டவிரோதமாக' ஆக்கிரமிக்கப்பட்டிருந்தன (மத்யூ 1983) (Mathew 1983).[16] அவற்றில் ஒன்று வல்லிபுரம்.

பீரிஸுக்கும் சிறிசோமாவுக்கும் இடையில் வரலாற்றாசிரியர், கல்வெட்டியலாளர் மற்றும் தொல்பொருள் ஆய்வாளரான எஸ். பரணவிதான (இறப்பு 1972) வந்தார். இவர் 1936இல் 'எபிகிராஃபியா ஸெய்லானிக்கா'வில் (Epigraphia Zeylanica) வெளியிடப்பட்ட ஒரு கட்டுரையில், பீரிஸால் தொடங்கப்பட்ட தொல்பொருளியலில் இருந்த அரசியல் போக்கை முன்னெடுத்தார். அவர் பீரிஸை மேற்கோள் காட்டினார். வடக்கிலுள்ள தமிழ்ப் பகுதிகள் மீதான சிங்களவர்களின் உரிமை கோரல்களை நியாயப்படுத்த, அவர் வல்லிபுரம் கல்வெட்டையும் புத்தர் சிலையையும் பயன்படுத்தினார். ஆகவே, பீரிஸ் தொடங்கி பரணவிதான வழியாக சிறிசோமா வரையிலும், இன்னும் பின்னோக்கிச் செல்ல விரும்பினால், பௌத்த சிங்கள தேசியவாதத்தை ஒரு முக்கிய கருப்பொருளாகக் கொண்ட வரலாற்றுப் பதிவுகள் வரையிலும், கல்வியாளர்களிடையே அரசியல்மயமாக்கப்பட்ட பௌத்த வரலாற்றெழுத்தியலின் ஒரு தொடர்ச்சியான மரபு இருந்து வருகிறது. இன்று இந்த மரபு பல சிங்கள வரலாற்றாசிரியர்களால் மறுக்கப்பட்டு எதிர்க்கப்பட்டாலும், அது இன்னும் ஒரு நீண்டகாலத் தன்மையுடைய சக்தியாகவே உள்ளது. வரலாறு, தொல்லியல் மற்றும் சிங்களத் துறைகளில், இந்த இன அடிப்படையிலான வரலாற்று எழுத்தியலின் தெளிவான கருத்தியல் எச்சங்கள் மிஞ்சியிருக்கின்றன.

இலங்கை அரசாங்கத்தின் செய்தித் தொடர்பாளர் ஒருவரின் கூற்றுப்படி (ஜயவீர 1991) (Jayaweera), சிங்கள நவீன தேசிய அரசியலின் தனிச்சிறப்பாக விளங்கும் இந்த சிங்கள 'மேலாதிக்க' சிந்தனை முறையே வல்லிபுரம் பிம்பத்திற்கு இத்தகைய முக்கியத்துவத்தை அளிக்கிறது. அக்டோபர் 1994 வரை ஸ்டாக்ஹோமில் தூதராகப் பணியாற்றியவரும், 1960களில் யாழ்ப்பாணத்தில் அரசாங்க முகவராக இருந்த தனது அனுபவங்களிலிருந்து பேசுபவருமே இந்தச் செய்தித் தொடர்பாளர். 1991இல், "அதன் சமீபத்திய வரலாற்றின் பெரும்பகுதி முழுவதும், இலங்கை ஒரு மேலாதிக்க சமூகமாகவே இருந்துள்ளது" என்று எழுதினார் (ஜயவீர 1991: 33) (Jayaweera). இந்தச் சிந்தனையை நாம் வேறு இடங்களில் 'தர்மக்ராட்டிக்' (Dharmacratic) என்று அழைத்துள்ளோம் (ஷால்க் 1990b: 354-359) (Schalk). தாய்லாந்திலிருந்து வல்லிபுரம் பிம்பத்தின் குறைந்தபட்சம் ஒரு பிரதியையாவது திரும்பப் பெறும் சாத்தியக்கூற்றை இப்போது காணும் போது, இந்தச் சிந்தனை அணிதிரட்டப்பட்டுச் செயல்படுத்தப்படுகிறது. 'ஆதிக்கவாத' அல்லது 'தர்மவாத' (தர்மக்ராட்டிக்) உணர்வுகளைத் திரட்டிச் செலுத்துவதற்கு, அது ஒரு வெளிப்படையான பேசு பொருளைப் பெறுகிறது.

1993 மே மாதம் முதல் நாள் அன்று கொல்லப்பட்ட மறைந்த ஜனாதிபதி பிரேமதாச, பௌத்த அரசின் அமைச்சராகத் தன்னை நியமித்துக்கொண்ட ஒரு தீவிர சிங்கள பௌத்தர் ஆவார். அவர், விஷயங்கள் உண்மையில் எப்படி இருந்தன என்பதைக் கண்டறிய முயற்சிக்கும் ஒரு வரலாற்றார்வலனாகப் பேசவில்லை. மாறாக சுயநலன்களைக் கொண்ட ஓர் அரசியல்வாதியாகவே பேசினார். தீவின் ஒற்றுமை மற்றும் சிங்கள அரசாங்கங்களின் இறையாண்மை என்ற கருத்தை நியாயப்படுத்த, வல்லிபுரம் புத்தர் சிலையை அரசியல் ரீதியாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதை அவர் அறிந்திருந்தார் (ஷால்க் 1988a; ஷால்க் 1988b: 55-87; தம்பையா 1992) (Schalk 1988a; Schalk 1988b: 55-87; Tambiah 1992).[17] பொது இடங்களில் உள்ள புத்தர் சிலைகள், ஒரு பௌத்த தேசம் என்ற கருத்தின் அடையாளங்கள் என்று 1970 இல் ஜி. ஒபயேசேகர கூறிய பழைய கருத்தை நாம் இங்கு நினைவுகூர வேண்டும் (ஒபயேசேகர 1970: 50-51) (Obeyesekere 1970: 50-51). பிரேமதாச இந்த உண்மையைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டார்.

1991 ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில், தாய்லாந்தில் வல்லிபுரம் புத்தர் சிலை மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டு லங்காவிற்கு கொண்டு செல்லப்படலாம் என்ற செய்தியை ஈழத்தில் உள்ள அரசாங்க செய்தித்தாள்கள் திடீரென வெளியிட்டன (தி சண்டே ஒப்சேவர் (கொழும்பு), ஜனவரி 20, 1991) (The Sunday Observer (Colombo)). ஊடகங்களில் வெளியான மற்றொரு கட்டுரை, வல்லிபுரம் புத்தர் சிலை கண்டுபிடிக்கப்பட்டுவிட்டதாகவும், அச்சிலையை லங்காவிற்குத் திருப்பிக் கொடுக்குமாறு தாய்லாந்து மன்னர் பூமிபோலிடம் (King Bhumibol) ஜனாதிபதி (ஆர். பிரேமதாச) வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் பொதுமக்களுக்குத் தெரிவிக்கிறது.

வல்லிபுரம் சிலை இலங்கை பௌத்தர்களுக்குப் பெரும் வரலாற்று மற்றும் மத முக்கியத்துவம் வாய்ந்தது என்று ஜனாதிபதி கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது (டெய்லி நியூஸ் 1991: பிப்ரவரி 2) (*Daily news*).

புத்தர் சிலையைப் பற்றிய ஆய்வில் மற்றொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், அந்தச் சிலையுடன் ஒரு தங்கத் தகட்டில் பொறிக்கப்பட்ட தனிப் பொறிப்பும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது அந்தப் பண்பாட்டின் மொழியியல் அடையாளம். அதாவது அந்தச் சிலை சார்ந்திருந்த வரலாற்றுச் சூழல் பற்றி சிலவற்றைக் கூற உதவுகிறது. நவீன சொற்களில் சொல்வதானால், கி.பி. முதல் நூற்றாண்டுகளில் கேள்விக்குட்பட்ட பகுதியின் இன அடையாளத்தைக் குறிக்க இந்தத் தகடு உதவுகிறது. அந்தக் காலத்தைச் சேர்ந்த — கி.பி. முதல் நூற்றாண்டுகளைச் சேர்ந்த — வேறு எந்த புத்தக் கல்வெட்டுகளும் யாழ்ப்பாணத்தில் இருந்து கிடைத்திருக்கவில்லை.[18] எனவே இந்தப் பொறிப்பு (கல்வெட்டு) மிகவும் முக்கியமானது. இந்தப் பொறிப்புத்தான் பின்னர் அரசியல்வாதிகளுக்கு அரசியல் ஆதாயத்திற்காக மிகவும் சுவையானதாக மாறுகிறது.[19]

கல்வெட்டின் மொழியைப் பொறுத்தவரை, கோட்பாட்டளவில் நம்மிடம் நான்கு மாற்று வழிகள் உள்ளன: சிங்களப் பிராகிருதம்[20], தமிழ் அடிமூலத்தைக் கொண்ட பிராகிருதம் (வேலுப்பிள்ளை 1990: 10-42)[21] (*Veluppillai*), பிராகிருதமயமாக்கப்பட்ட தமிழ்[22] மற்றும் பைசாச பிராகிருதம்[23]. பிரச்சினை என்னவென்றால், ஒரு பெரிய உரைத்தொகுப்பு மற்றும் சூழலிலிருந்து தனித்து இருப்பதால், இந்தக் கல்வெட்டு மிகவும் சிறியதாக உள்ளது. அதனால், இந்த நான்கு மாற்று வழிகளுக்கும் வாதிட முடியும். ஆதாரங்களின் வரம்பு பலவற்றைச் சாத்தியமாக்குகிறது, ஆனால் நம்பகத்தன்மையையும் குறைக்கிறது.

நான்கிற்கும் பொதுவான காரணி 'பிராகிருதம்' [24] என்ற சொல். இது பல மத்திய இந்திய மொழிகளின் குடும்பப் பெயர். எனவே எந்தப் பிராகிருத மொழி குறிப்பிடப்படுகிறது என்ற சிக்கலை இது எழுப்புகிறது. முதல் மற்றும் நான்காவது மாற்றுகளான சிங்களப் பிராகிருதம் மற்றும் பைசாச பிராகிருதம் ஆகியவை மிகவும் துல்லியமானவை. ஆனால் துல்லியமாக இருப்பதால், உரையின் சுருக்கத்தின் காரணமாக அவை மிகையாக வரையறுக்கப்பட்டு விடுகின்றன. அத்தகைய துல்லியமான மாற்றுகளைச் சோதிக்க அது போதுமானதாக இல்லை.

மொழிப் பண்பாட்டின் ஒவ்வொரு மாற்று வடிவத்தின் வரலாற்றுப் பொருளும் தெளிவாக உள்ளது. மொழி சிங்களப் பிராகிருதமாக இருந்தால், கல்வெட்டில் உள்ள குறிப்புகள் அனுராதபுரத்தை மையமாகக் கொண்ட சிங்கள பௌத்த மரபைக் குறிப்பிடுகின்றன. மொழி தமிழ் அடிமூலத்தைக் கொண்ட பிராகிருதமாகவோ, பிராகிருதமயமாக்கப்பட்ட தமிழாகவோ அல்லது பைசாசியமாகவோ இருந்தால், இந்த மூன்று மாற்று வடிவங்களையும் நாம் காணும் திராவிடப் பகுதியுடன் அதைத் தொடர்புபடுத்தலாம். நவீன சிங்கள இன உணர்வில், சிங்களப் பிராகிருதத்திலோ அல்லது 'பழைய சிங்களத்திலோ' தமிழ் அடிமூலம் இருந்தது என்ற கோட்பாடோ, அல்லது சிங்களச் சொற்களுக்குத் தமிழ் ஒத்த சொற்கள் இருந்தன என்ற கோட்பாடோ நிராகரிக்கப்படுகிறது என்பதே இங்கு முக்கியமானது. இடையின வடிவங்களிலிருந்து வல்லின உச்சரிப்புகளுக்கான மாற்றம், எடுத்துக்காட்டாக 'நாக' (*Nga*) என்பதிலிருந்து 'நாக' (*Nka*) என மாறியது, தமிழின் தாக்கத்தால் ஏற்பட்டது என அங்கீகரிக்கப்படவில்லை. மாறாக ஒரு தொழில்முறை மொழியியலாளரால் கூட இது சிங்கள மொழிக்குள்ளேயே நிகழ்ந்த ஒரு வளர்ச்சியாகவே பார்க்கப்படுகிறது.

சிங்கள மொழித் தூய்மைவாதம் என்பது இனவாதச் சிந்தனையின் ஒரு பகுதியாகும். எனவே, ஒரு 'பொறிப்பு' 'பழைய சிங்களத்தில்' எழுதப்பட்டுள்ளது என்று கூறும்போது, அது தமிழ் மொழியுடனான, அதாவது தமிழருடனான, எந்தவொரு தொடர்பையும் விலக்கிவிடுகிறது.

உரையின் வாசிப்பில் பெரிய சர்ச்சை இல்லை என்றாலும், மொழிபெயர்ப்பிலேயே பயன்படுத்தப்படும் விளக்கம் பெரிதும் வேறுபடுகிறது. இந்த வெவ்வேறு மொழிபெயர்ப்புகளிலிருந்து, வல்லிபுரம் பகுதியின் இன அடையாளம் தொடர்பாக வெவ்வேறு வரலாற்று முடிவுகள் எடுக்கப்படுகின்றன. எனவே, மொழியை அடையாளம் காண்பது தற்போதைய கண்ணோட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்தது. அது, திருவுருவம் மற்றும் கல்வெட்டின் இன அடையாளத்தைத் தீர்மானிப்பதற்கு அடிப்படையாகக் கருதப்படுகிறது. தற்போதைய மோதல் என்பது அந்தக் காலத்திலேயே ஓர் அன்றாட நிகழ்வாக இருந்தது என்பது போல, வரலாற்றில் பின்னோக்கித் தள்ளப்பட்டு திணிக்கப்படுகிறது. இந்த மாதிரியான முடிவணுகுமுறை, புத்தர் திருவுருவம் மற்றும் தங்கத்தகட்டின் அரசியல்மயப்படுத்தலுக்கு வழிவகுக்கிறது. குறிப்பாகத் தற்போதைய கொடிய இன மோதலில், ஒரு வலுவான இனத்தின் நலனால் வரலாற்றுப் பார்வை தீர்மானிக்கப்படும் போது, கட்டமைக்கப்பட்ட மற்றும் கற்பனை செய்யப்பட்ட

இலட்சியமான கடந்த காலம் என்பது எதிர்காலத்திற்கான ஒரு நெறிமுறையாக மாற்றப்படுகிறது. கடந்த காலம் சிங்களமாக இருந்திருந்தால் என்பதாக, அது தற்போதைய தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியிருப்புகள் இருந்ததாக நியாயப்படுத்துகிறது. கடந்த காலம் தமிழாக இருந்திருந்தால், அது தமிழில் புத்த மதத்தின் பரவல் என்பதன் மூலம், தன்னாட்சி பெற்ற தமிழ் நிர்வாகத்தை நியாயப்படுத்துகிறது. வல்லிபுரம் உருவமும் வல்லிபுரம் பொறிப்பும் இவ்வகையான 'ஆர்வமுள்ள' வரலாற்று எழுத்துகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்விரண்டும் தென்னிந்திய வரலாற்றின் 'மிகவும் உணர்ச்சிபூர்வமான' கலைப்பொருட்களில் அடங்கும். அவற்றை 'தொடுவது' ஆபத்தானது. ஒரு 'தவறான' சொல்லேகூட 'தீவிரமான உணர்ச்சிகளைத்' தூண்டுகிறது.[25]

நிச்சயமாக, ஆதிக்கம் செலுத்தும் இனக்குழுவான சிங்களவர்களாலேயே இந்த மேலோங்கிய விளக்கம் வழங்கப்பட்டுள்ளது. அவர்களின் அறிவுஜீவிகள், மொழி சிங்களப் பிராகிருதம் அல்லது 'பழைய சிங்கள' என்ற முதல் மாற்று விளக்கத்தின் பிரதிநிதிகளாக உள்ளனர்.[26] நாம் நிச்சயமாக இந்த நான்கு மாற்று விளக்கங்களையும் ஒரே விமர்சன வழியில் சோதிக்க வேண்டும். ஒரே சொல்லுக்கு வெவ்வேறு வகைப்பாட்டு விளக்கங்கள் சாத்தியம் என்பதையும், ஒரு மொழியியல் சந்திப்புப் பகுதியின் (தமிழ், வெவ்வேறு பிராகிருதங்கள்) அங்கமாக இருப்பதால், அந்தக் கல்வெட்டு வெவ்வேறு மொழி அடுக்குகளைக் கொண்டுள்ளது என்பதையும் நாம் அறிந்திருக்க வேண்டும். மொழிகளுக்கிடையே இறுக்கமான எல்லைகளைக் கொண்ட தற்போதைய சிங்கள உணர்வின் மொழித் தூய்மைவாதம் வரலாற்றுக்கு முரணானது.

சிங்கள உணர்வைப் பற்றிக் கூறப்படுவது, அதற்கு எதிரான ஒரு எதிர்வினையாகக் கட்டமைக்கப்பட்டு முன்னிறுத்தப்பட்ட தமிழ் உணர்விற்கு நேர்மாறாகப் பொருந்தும். தமிழ் உணர்விற்குள்ளும் தற்போது, 'ஆரிய' தாக்கத்தை நினைவூட்டும் அனைத்தையும் 'சுத்தப்படுத்தும்' ஒரு மொழித் தூய்மைவாதப் போக்கு உள்ளது. இங்கு 'ஆரிய' என்பது ஆரிய மொழிகளை மட்டுமல்ல, பௌத்தத்தையும் குறிக்கிறது. பரணவிதான போன்ற முன்னணிச் சிங்கள அறிஞர்கள், இலங்கையில் உள்ள புத்தம், சிங்கள பௌத்தம் என்று தமிழர்களுக்குப் போதித்தனர். தமிழர்களும் அவரை நம்பினர். சிங்களக் கல்வி மரபுகளில் தலைசிறந்த அறிஞர்களில் ஒருவரின் அதிகாரத்துடன், புத்தத்தைச் சிங்களப் பண்பாட்டுடன் இணைத்தவர்களில் அவரும் ஒருவர். அந்த நிலையில் இருந்து பார்க்கும் போது, அந்தத் தீவில் 'தமிழ்ப் புத்தம்' இருப்பதாகக் கூறப்படும் கூற்றுகள் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றுகின்றன.

சிங்களத்தின் எல்லை வரையறைக்கு தமிழ் அறிஞர்களிடையேயும் ஓர் எதிர்வினை உள்ளது. இந்த எதிர்வினை, தமிழ் அடிப்படை நிலக் கோட்பாட்டையும் (வேலுப்பிள்ளை) (*Veluppillai*) மற்றும் சிங்களச் சொற்களுக்கு மாதிரிகளாக விளங்கும் தமிழ் மூலச்சொற்களின் (பொ. ரகுபதி) (*P. Ragupathy*) இருப்பையும் வலியுறுத்துவதன் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. இந்தக் கோட்பாடுகள், அவற்றின் உண்மை மதிப்பைச் சாராமல், தற்போதைய பிரிவினைவாதச் சூழலில் இலங்கைச் சமூகத்திற்குள் ஓர் அங்கீகாரத்திற்கான கோரிக்கையாகக் காணப்படலாம். வரலாற்றுக் காலத்திலிருந்தே சிங்களத்திற்கும் தமிழுக்கும் இடையே ஓர் உறவு இருந்து வந்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்டி, தனித்துவமான சிங்கள உணர்வை அவர்கள் மாற்றியமைக்க விரும்புகிறார்கள்.

கடுமையான தமிழ்மொழித் தூய்மைவாதத்தை அடிப்படையாகக் கொண்ட பிரிவினைவாதச் சித்தாந்தங்களில், தமிழ் உணர்வு உறுதியாகத் தனித்துவமானதாகவும் மாறக்கூடும். இந்தச் சித்தாந்தங்கள் 'ஈழத்தமிழ் தேசத்தில்' (*attamittcam*) புத்தத்தை அந்நியமானதாகச் சித்தரிக்கின்றன. அல்லது அவர்கள் சிங்கள மற்றும் தமிழ் பௌத்தத்திற்கு இடையே இன அடிப்படையில் ஒரு வேறுபாட்டை உருவாக்கத் தூண்டுகிறார்கள்.

அப்படியானால், விளக்கமளிப்பதில் சிங்கள மற்றும் தமிழ் அணுகுமுறைகள் உள்ளன என்பதை நாம் கவனிக்க வேண்டும். இந்த அணுகுமுறைகள் கல்வெட்டுகளை விளக்கமளிப்பதில் ஒரு முன்னறிவைக் கொண்டிருக்கின்றன என்பது உறுதியாகிறது. பொதுவாக, இன அடையாளங்கள் குறித்த முன்முடிவுகளை உறுதிப்படுத்த கல்வெட்டுப் பயன்படுத்தப்படுகிறது. அது ஒரு பகுதியாக சாட்சிய நிலையைக் கொண்டுள்ளது. ஒரு சிங்கள அல்லது தமிழ் நிலைப்பாட்டை எடுக்கும்போது, நாம் ஒரு விளக்க வட்டத்திற்குள் செல்கிறோம். இந்தக் குறிப்பிட்ட பொருளில் நம்மால் அதைப் பற்றி அதிகம் செய்ய முடியாது. நம்மிடம் நான்கு சிறிய வரிகள், 48 வாசிக்கக்கூடிய அட்சரங்கள், மற்றும் குறைந்தளவான ஒப்பீட்டுப் பாடங்கள் மற்றும் வரலாற்றுச் சான்றுகளே உள்ளன. இது, முன் தீர்மானிக்கப்பட்ட விளக்கமளிப்பு மாதிரிகளிலிருந்து விடுபடுவதை மிகவும் கடினமாக்குகிறது. ஆனால் சாத்தியமற்றது அல்ல. சிலையும் கல்வெட்டும் ஏன் இவ்வளவு

முக்கியமானவை என்பதை இப்போது நாம் புரிந்துகொள்கிறோம். தற்போதைய விவாதம், பிரபல சிங்களத் தொல்பொருள் ஆய்வாளரும் வரலாற்றாசிரியருமான எஸ். பரணவிதான (பரணவிதான 1983: 80) (Paranavitana 1983: 80) அவர்களால் தொடங்கப்பட்டு, அவரைப் பின்பற்றி வந்த மற்றவர்களால் (ஹெட்டியாரட்சி 1988: 139-14-02)[27] (Hettiaratchi) தொடரப்பட்டு, 1984 ஆவது ஆண்டில் சிரில் மத்யூ மற்றும் சிறிசோமாவாலும், 1991இல் மறைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாசவாலும் (சண்டே ஒப்சேவர் 1991: ஜனவரி 20. டெய்லி நியூஸ் 1991: பிப்ரவரி 2)[28] (Sunday Observer 1991: Jan 20. Daily News 1991: Feb 2) மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டது. இதில் அவற்றின் மத முக்கியத்துவம் மட்டுமே முக்கியமானதல்ல. மாறாக, அவை அரசியல் நோக்கங்களை நியாயப்படுத்தும் திறன் கொண்டவையாக இருப்பதே முக்கியமானது. எங்களைப் பொறுத்தவரை, அந்தச் சிலை மற்றும் கல்வெட்டின் மத முக்கியத்துவத்தை, அதன் வரலாற்றுப் பின்னணியில் ஆய்வு செய்வதே போதுமான அளவு முதன்மையானது.

அடிக்குறிப்புகள்

1 Cf தர்மதாச 1994: 89, இங்கிருந்தே இந்த மகாவம்சப் பகுதி வரலாற்றுச் சான்றாக எடுக்கப்பட்டது.

2 Fausboll 1963: 238: ...anupubbena Dmiaraha patv Kvirapattanasampe uyyne viharanto jhnbhiññ tatrpi 'ssa mahlbhasakkro uppajji. mahlbhasakkro uppajji. So ta jigucchan to carittetvå ksena gantv Ngadpasampe Kradpe otari.

ஃபவுஸ்புள் 1963: 238: காலப்போக்கில், தமிழ்நாட்டின் ஒரு முக்கிய பண்டைய துறைமுக நகரமான காவிரிப்பட்டணத்திற்கு (பூகார்) அருகிலுள்ள ஒரு பூங்காவில் தங்கி, தியானத்தில் ஆழ்ந்து ஞான சக்தியின் மூலம் வெளிப்பட்டு, தமிழ்நாட்டை (தென்னிந்தியா) வந்தடைந்தார். அங்கும் அவருக்குப் பெரும் பொருள் ஆதாயமும் கௌரவமும் உண்டாயின. அந்த ஆதாயத்திலும் கௌரவத்திலும் வெறுப்படைந்து, பிச்சை எடுக்கச் சென்று, (ஆன்ம சக்தியால்) காற்றில் அலைந்து திரிந்த அவர், (வடக்கு இலங்கையில் உள்ள) நாகதீபத்திற்கு அருகிலுள்ள காரதீபத்தில் (காரைதீவு) இறங்கினார்.

3 தவறான புரிதலைத் தவிர்க்க: இந்த மூலங்கள் கி.பி. 5ஆம் நூற்றாண்டின் கருத்தாக்கங்களுக்கான மூலங்கள் ஆகும். அவை வரலாற்றுப் புத்தருக்கோ அல்லது கவித்துவப் படைப்பான மணிமேகலைக்கோ மூலங்கள் அல்ல.

4 பாங்காக் நுண்கலைத் துறையிலிருந்து பெறப்பட்ட வாய்மொழித் தகவல். ஜனவரி 21, 1994.

5 (கையால்) சைகை செய்தல்.

6 இங்கு 'தலைப்பாகை' என்பது ஞானத்தை ஊட்டும் கருவி என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

7 இங்கு 'பூட்டு' என்பது, கண்களுக்கு மேல் நடுவில் உள்ள ஒரு புள்ளியைக் குறிக்கும் சொல்லாகும்.

8, 9, 10, 11 'கீழ் ஆடை', 'மேல் ஆடை', 'அபய முத்திரை', 'ஆசி வழங்கும் செய்கை'

12 பரணவிதான ஓர் அடிக்குறிப்பில் இசிகிரய (Isigi raya) என்பது சமஸ்கிருத ரிஷிகராஜ (Rsikarja) எனக் குறிக்கிறார். மற்றொரு அடிக்குறிப்பில் அது சமஸ்கிருத ரிஷிகிரிகா அல்லது இசிகிரிகாவைக் (Rsigirika or Isigirika) குறிக்கிறது என்றும் கூறியுள்ளார். பரணவிதான 1936: 237, அடிக்குறிப்பு 6; பரணவிதான 1983: 81, அடிக்குறிப்பு 8 ஆகியவற்றைப் பார்க்கவும். உயிரெழுத்தின் மாற்றத்திற்கான விளக்கம் எதுவும் கொடுக்கப்படவில்லை.

13 வேங்கடம் முதல் கன்னியாகுமரி வரையிலான பகுதி.

14 சிங்களப் பக்கத்தில் ஒரு விதிவிலக்கு (குணவர்தன 1979: 47-48, 202-203) (Gunawardana) ஆகும். தமிழ்ப் பக்கத்தில் வேலுப்பிள்ளையின் தொடர்ச்சியைக் காண்க.

15 ஹெட்டியாரட்சி 1988: 140: "தற்போது மேற்கூறிய மாகாணத்தில் குடியேறிய மக்களில் பெரும்பான்மையானவர்கள் தமிழர்களாக இருந்தாலும், சுமார் பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை சிங்களவர்களே அங்கு பிரதான மக்களாக இருந்தனர் என்று கா. இந்திரபாலா சரியாகச் சுட்டிக்காட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது."

16 மத்யூ 1983 இல் உள்ள முன்னுரை, தமிழர்களுக்கு எதிரான படுகொலைகள் தொடங்கிய நாளான 20 ஜூலை 1983 அன்று கையொப்பமிடப்பட்டது. பக்கம் 167 இற்குப் பிறகு வரும் 'நன்றியுரை' பகுதியில், இந்த நூலுக்கான தகவல்களைத் தொகுத்து, அதன் வெளியீட்டில் மிகுந்த தனிப்பட்ட அக்கறை காட்டிய சிறிசோமாவின் பங்களிப்பை அவர் ஏற்றுக்கொள்கிறார். வெளிநாட்டுத் தூதர்களை அதிருப்திக்குள்ளாக்கிய தனது தமிழ் எதிர்ப்புப் பிரசாரங்களுக்காக, மத்யூ 1985 ஆவது ஆண்டில் அரசாங்கத்திலிருந்து நீக்கப்பட்டார்.

17 தம்பையா 1992 பற்றிய மதிப்பாய்வுக்கு, ஷால்க் 1993ஐப் பார்க்கவும்.

18 கி.மு. 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் ஓர் உலோகத் துண்டில்

ஆனைக்கோட்டை முத்திரை உள்ளது. அதன் மூன்று அசைகளின் உச்சரிப்புகள், 'கோவேட்டன்' மற்றும் 'கோவட்டனுடைய' என்பன. இவை தமிழ்ச் சொற்கள் எனக் கூறப்படுகிறது. இந்த உச்சரிப்பு சரியானது என்றால், கி.மு. 3 மற்றும் 2 ஆவது நூற்றாண்டுகளிலேயே வடக்கில் தமிழ் இருந்ததை நம்மால் பதிவு செய்ய முடியும். இருப்பினும், இந்த உச்சரிப்பும் கால நிர்ணயமும் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை (ரகுபதி 1987: 200-204 (Ragupathy); வேலுப்பிள்ளை 1990: 13 (Veluppillai) ஆகியவற்றைப் பார்க்கவும்.)

19 வல்லிபுரம் கல்வெட்டுடன் ஜனாதிபதி பிரேமதாசா செய்த முறைகேடுகளைப் பற்றி அறிய, ஆனோன் பதிவுகளைப் பார்க்கவும் (Anon, 1994, His Spirit Sways Present Politics. Island International May 4, 1994: 14). அவரை ஒரு மாபெரும் மனிதர் என்று புகழ்ந்துரைக்கிறது: "அந்த மனிதரின் பெருந்தன்மை அவரது பலவீனங்களை மிஞ்சுகிறது". தேசிய நலனுக்காகச் செய்யப்படும் முறைகேடு அசிங்கமானதல்ல என்பதே இக்கட்டுரையின் மையக்கருத்து. அவரது 'பெருந்தன்மை'யில், தொல்லியல் ஆய்வுகளை முறைகேடாகக் கையாளும் அவரது திறனும் அடங்கும். அந்தக் கட்டுரை கூறுகிறது: "பிரேமதாசா ஒரு சிறந்த மேடை நிர்வாகியாக இருந்தார். தன்னை வெற்றியாளராகக் காட்டிக்கொள்ளவும், நிகரற்றவராகவும் சிறந்தவராகவும் வெளிப்படவும், அவரால் சூழ்நிலைகளை உருவாக்கவும், ஒருங்கிணைக்கவும், தேவைப்பட்டால் கையாளவும்கூட முடிந்தது. அறிஞர் பிக்கு வண. வல்பொல ராகுலரிடமிருந்து பெரும் வற்புறுத்தலுக்குப் பிறகு, திருடப்பட்டது என்று பலர் கருதிய வல்லிபுரம் தங்கத் தகட்டின் ஒரு பிரதியை பிரேமதாசா பெற்றபோது, அதை அவர் பகிரங்கப்படுத்தத் தாமதித்தார். பருத்தித்துறைக்கு அருகில் உள்ள ஓர் இந்துக் கோவிலுக்கு அருகில் கண்டெடுக்கப்பட்ட வல்லிபுரம் தங்கத் தகடு, கிறிஸ்தவத்திற்கு முந்தைய காலத்தில் சிங்களவர்கள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து ஆட்சி செய்தார்கள் என்பதையும், அனுராதபுரத்தில் இருந்த ஆட்சியாளருக்குக் கட்டுப்பட்டிருந்தார்கள் என்பதையும் நிலைநாட்டும் ஒரு மறுக்கமுடியாத சான்றாகும். அதைப் பகிரங்கப்படுத்தாமல், அந்தத் தங்கத் தகடு, அதன் உள்ளடக்கங்கள் மற்றும் இன்றைய காலகட்டத்திற்கான அதன் முக்கியத்துவம் பற்றி எழுதுவதற்காக பல அறிஞர்களையும் கூட்டாளிகளையும் அவர் அழைத்தார். மக்கள் அதன் மதிப்பை உணர்ந்து, தனி ராஜ்ஜியத்திற்கான கோரிக்கையுடன் அதன் பொருத்தத்தைப் பற்றி விவாதிக்கத் தொடங்கிய போதுதான், அவர் அதை பகிரங்கப்படுத்தத் தாமதித்தார்." தாயகம் என்பதை அவர் பகிரங்கப்படுத்தினார். தமிழர்கள் வாழ்ந்து வந்த வடக்குக் கிழக்குப் பகுதி குறித்து நியாயமற்ற முறையில் பேசி, அதன் காரணமாகத் தனித் தமிழ்நாடு கோரியவர்களை எதிர்க்குமாறு அவர் பொதுமக்களைத் திரட்டினார். விதைகளை விதைத்த பிறகு, பிரேமதாசா அந்த விவாதத்தைப் பார்த்தபடி சும்மா அமர்ந்திருந்தார். அதுதான் பிரேமதாசாவின் செயல்பாட்டுப் பாணி.

20 எஸ். பரணவிதான, இம்மொழியானது, அக்காலகட்டத்துப் பிற பதிவுகளில் பின்பற்றப்பட்ட இலக்கணத் தரங்களுக்குப் பொதுவாக இணங்கும் ஒரு பழைய சிங்களம் என்று குறிப்பிடுகிறார். எஸ். பரணவிதான 1936: 230.

21 வேலுப்பிள்ளை ஒரு புதிய கண்ணோட்டத்தை முன்வைக்கிறார். தெற்காசியாவில் பிராகிருதம் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது என்பதையும், வல்லிபுரம் கல்வெட்டில் பிரதிபலிப்பது போல, அக்காலத்தில் தமிழர்களாலும் பிராகிருதம் பயன்படுத்தப்பட்டது என்பதையும் அவர் தனது கருத்தாக முன்வைக்கிறார். எஸ். கொன்னோவைப் (S. Konnow) பின்பற்றி, அவர் சில தமிழ் தாக்கங்களைக் காண்கிறார். இந்தத் தமிழ் தாக்கத்தின் இருப்பானது, இந்தக் கல்வெட்டுகளின் எழுத்து மற்றும் மொழியில் ஒரு பரந்த தமிழ் அல்லது திராவிட அடித்தளம் இருந்தது என்ற நமது அறிவுடன் ஒத்துப்போகிறது. வேலுப்பிள்ளையின் கூற்றுப்படி, பிராகிருதத்தின் பயன்பாடு என்பது சிங்கள பௌத்தர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு புதிய கூறின் அறிகுறி அல்ல.

22 பிராகிருதமும் தமிழும் கலந்த விதத்தில் கல்வெட்டு காணப்படுகிறது என்று இரா. நாகசாமி தெளிவாகக் கூறுகிறார். இந்தோஆரிய மற்றும் தமிழ்க் கலப்புடன் அவர் இதை ஒப்பிடுகிறார். மதராஸ் வீதிகளில் யாராவது 'இஸ்துன்னு பூட்டான்' என்பதற்குப் பதிலாக 'இழுத்துக்கொண்டு போய்விட்டான்' என்று சொல்லும் போது காணப்படும் கலப்பு போல என்கிறார். இரா. நாகசாமி 1994: 220-222 பார்க்கவும். (Nagacami 1994: 220-222.)

23 இந்த மாற்றுவழி, தற்போதைய ஆசிரியரால் ஆராயப்பட வேண்டிய ஒரு மாற்றுவழியாக முன்மொழியப்படுகிறது. எந்த வகையிலும் இது இறுதிப்படுத்தப்பட வேண்டிய ஒன்றல்ல. குறைந்தது இரண்டு பிராகிருத மொழிகளாவது தமிழ் தாக்கத்தின் ஒலியியல் குறிப்புகளைக் கொண்டுள்ளன. சில சமயங்களில் இடைநிலை வடிவங்களிலிருந்து இறுதிநிலை வடிவங்களுக்கு மாறுவதை நாம் இந்தச்

சிறு உரையில் காணலாம். இந்த இரண்டு மொழிகளும் பைசாச்சி (*Paic*) மற்றும் சூளிகாபைசாச்சி (*Clikpaic*) ஆகும். இவை எப்போதும் வேறுபடுத்தி அறியப்படுவதில்லை. நாகதீவு என்பதில் இல் வரும் 'நாக' (*Naga*) என்பதற்குப் பதிலாக நாக (*Naka*) என்றும், 'பியகுகதிஸ்ஸ' என்னும் சொல்லில் 'குக' என்பதற்குப் பதிலாக 'குஹ' என்றும் எழுதுவது தமிழின் தாக்கமாக இருக்க வேண்டிய அவசியமில்லை. மாறாக அது (சூளிகா) பைசாச்சி எழுத்து முறையாகவும் இருக்கலாம். 19 ஆவது நூற்றாண்டில் மேற்கத்திய மொழியியலாளர்களால் பைசாச்சி கண்டறியப்பட்ட போது, திராவிடர்கள் ஆரிய மொழியைப் பேச முயற்சிக்கும் போது அவர்களின் வாயில் உருவாகும் ஒரு வகையான ஆரியப் பேச்சு என அது வரையறுக்கப்பட்டது. இது கோட்பாட்டுடன் ஒத்துப்போகிறது. இப்போது, அதில் திராவிடத் தாக்கம் இல்லை என்பது நமக்குத் தெரியும். ஆனால் அது சந்தேகத்திற்கு இடமின்றி ஒரு வழக்கமான திராவிட ஒலியியல் வளர்ச்சியாகத் தெரிகிறது. வல்லிபுரத்தில் அமராவதி சிலை கண்டெடுக்கப்பட்டதும், வல்லிபுரம் தங்கத் தகட்டில் அமராவதி தொடர்பான எழுத்துகள் இருந்ததும், வல்லிபுரம் கல்வெட்டின் மொழி, சில அறிஞர்களால் பைசாச்சி என வரையறுக்கப்படக் காரணமாகின. இந்நிலைப்பாடு இவற்றை அமராவதியின் பிராகிருதக் கல்வெட்டுகளுடன் ஒன்றாக இணைக்க மிகவும் தூண்டுகிறது. இதன் மூலம், ஒரு மொழியியல் பகுப்பாய்வை சாத்தியமாக்கும் ஒரு பெரிய தொகுப்பை நாம் பெறுகிறோம். இது, வல்லிபுரம் கல்வெட்டுக்கும் 'பழைய சிங்களத்திற்கும்' எந்தத் தொடர்பும் இல்லை என்ற கருத்தை ஆதரிக்கக்கூடும். இந்த மொழியியல் பகுப்பாய்வு, 5 ஆவது நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு பிற்காலப் பௌத்த மரபில் உறுதி செய்யப்படுகிறது. ஹினிபர் 1986: 70ஐப் பார்க்கவும்.

24 மொழியின் வகைப்பாட்டிலேயே வேறுபாடுகள் தொடங்குகின்றன. பரணவிதான சிங்கள பிராகிருதத்துடன் சேர்த்துப் பயன்படுத்தும் 'பழைய சிங்களம்' என்ற வகைப்பாடு ஒரு தொழில்நுட்ப மொழியியல் சொல் அல்ல. மாறாக, அந்தத் தீவின் மூல மொழி சிங்களம் என்றும், வல்லிபுரம் கல்வெட்டு இந்த மொழியின் ஒரு பகுதி என்றும் நிலவும் ஒரு பொதுவான புரிதலை அது குறிப்பிடுகிறது. சிங்களத்தின் தோற்றத்தைப் பற்றி இன்னும் தொழில்நுட்ப ரீதியாகக் கூறினால், அது சிங்களப் பிராகிருதம் என்பதாக இருக்கும். சமஸ்கிருதம் பரவலாகப் பயன்படுத்தப்படுவதற்கு முன்பு, வட்டார மொழிகளாகவும் எழுத்து வடிவிலும் பயன்படுத்தப்பட்ட பல பிராகிருத மொழிகள் உள்ளன. அனைத்துப் பிராகிருத மொழிகளும் இந்தோ ஆரிய மொழிகளே. இந்த மொழிகளின் வரலாற்று வகைப்பாட்டில், அவை பாலியுடன் சேர்ந்து, வேத சமஸ்கிருதம் மற்றும் செவ்வியல் சமஸ்கிருதத்திற்குப் பிறகு தோன்றிய மத்திய இந்திய மொழிகளாகவும், இந்தி, வங்காளம், நவீன சிங்களம் போன்ற நவீன வட்டார மொழிகளுக்குப் பிறகு தோன்றிய மொழிகளாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. 'பழைய சிங்களம்' என்று அழைக்கப்படும் பிராகிருதத்தின் வகை, அதாவது நவீன சிங்களம் தோன்ற வேண்டிய பிராகிருதம், வட இந்தியாவில் தோன்றியது. சிங்கள பிராகிருதம், தமிழைப் போலவே தீவில் குடியேறிய ஒரு மொழியாகும். இந்தக் குடியேற்றம் மற்றும் குடியமர்வுச் செயல்பாட்டில், சிங்களப் பிராகிருதம் மற்றொரு மத்திய இந்திய மொழியான பாலி மற்றும் சமஸ்கிருதத்தின் தாக்கங்களுக்கு உள்ளானது. பாலி வட இந்தியப் பிராகிருதத்திலிருந்து உருவாக்கப்பட்ட ஒரு செயற்கை மொழியாகும். ஆனால் பௌத்த மரபுகளைப் பரப்புவதில் அதன் பயன்பாடு குறைவாகவே இருந்தது. கற்றறிந்த கலாசாரத்தைப் பரப்புவதற்கு சமஸ்கிருதம் பயன்படுத்தப்பட்டது. சிங்களப் பிராகிருத மொழியும் தமிழின் தாக்கத்திற்கு உள்ளானது. அந்த அளவிற்கு 20 ஆவது நூற்றாண்டில் மட்டுமே மொழியியலாளர்களால் சிங்களம் ஒரு திராவிட மொழி அல்ல, மாறாக அது ஓர் இந்தோ ஆரிய மொழி என்பதை உறுதியாகக் காட்ட முடிந்தது. அடித்தளக் கோட்பாடு நல்ல வாதங்களைக் கொண்டுள்ளது. பார்க்க: வேலுப்பிள்ளை 1979-80: 619; வேலுப்பிள்ளை 1980; கருணாரத்ன 1984: 43; எலிசரென்கோவா 1972: 126-137. (*Veluppillai* 1979-80: 619; *Veluppillai* 1980; *Karunaratne* 1984: 43; *Elizarenko va* 1972: 126-137).

25 பின்வரும் சர்ச்சையைக் காண்க: ஷால்க் 1994*a*; சில்வா 1994; ஷால்க் 1994*b*; ஷால்க் 1994*c*; தர்மதாசா 1994; ஷால்க் 1994*d*. (*Schalk* 1994*a*; *Silva* 1994; *Schalk* 1994*b*; *Schalk* 1994*c*; *Dharmadasa* 1994; *Schalk* 1994*d*.)

26 வல்லிபுரம் அமைந்துள்ள வடமராச்சி, தற்போது சைவத் தமிழர்களால் அடர்த்தியாகக் குடியேற்றப்பட்டுள்ளது என்று 1936இல் பரணவிதானவே கூறினார். இலங்கையின் இந்த வடகோடி மாவட்டத்தில், தீவின் மற்ற பகுதிகளைப் போலவே வரலாற்றின் முற்காலங்களில் செழித்து வளர்ந்த சிங்கள பௌத்த நாகரிகத்தின் எச்சங்கள் கண்டறியப்பட்டுள்ளன. வல்லிபுரம் தங்கத் தகடு குறித்த அவரது பகுப்பாய்வின் முடிவுகள் மேற்கோள் காட்டத் தகுந்தவை. ஏனெனில் அவை பல தசாப்தங்களாக அறிவுசார் விவாதத்தில் செல்வாக்கு

செலுத்தியுள்ளன. பரணவிதான எழுதினார்: "[வல்லிபுரம் தங்கத் தகட்டில் உள்ள] இந்தப் பொறிப்பு, இரண்டாம் நூற்றாண்டில் நாகதீபம் அனுராதபுர மன்னரின் ஓர் அமைச்சரால் ஆளப்பட்டது என்பதையும், சிங்களமே அங்குப் பரவலாகப் பேசப்பட்ட மொழியாக இருந்தது என்பதையும், அங்கு பௌத்த ஆலயங்கள் கட்டப்பட்டு வந்தன என்பதையும் நிரூபிக்கிறது. வரலாற்றுப் பதிவுகளிலும், இலங்கையின் பிற பாலி எழுத்துகளிலும் நாகதீபத்தைப் பற்றிக் குறிப்புகள் காணப்படுகின்றன. தொடக்க காலத்தில் இன்று இருப்பதைப் போல, தீவின் பிற பகுதிகளிலிருந்து அதன் குடிமக்களின் தேசியம், மொழி மற்றும் மதம் ஆகியவற்றில் வேறுபட்டிருந்தது என்பதற்கு எந்த அறிகுறியும் இல்லை. உண்மையில், தீவின் வடகோடிப் பகுதி பண்டைய சிங்கள மக்களின் அரசியல், மத மற்றும் பண்பாட்டு வரலாற்றில் மிக முக்கிய பங்காற்றியது என்பதற்கான அறிகுறிகள் உள்ளன. பொலன்னறுவைக் காலத்தின் இறுதி வரை இது அவ்வாறே தொடர்ந்தது. இருப்பினும் தீவின் பிற பகுதிகளை விட இங்கு மக்கள் தொகையில் தமிழ்க் கூறுகளின் விகிதம் அதிகமாக இருந்திருக்கலாம். மேலும் அது படிப்படியாகத் தொடர்ந்தது அதிகரித்து வருகிறது." (பரணவிதான 1983: 80) (Paranavitana 1983: 80). வல்லிபுரம் தகடு பற்றிய அதே கட்டுரையில் அவர் இவ்வாறு சுருக்கமாகக் கூறுகிறார்: "இந்தப் பொறிப்பின் காலத்திலும் பதின்மூன்றாம் நூற்றாண்டு வரையிலும், தீவின் மற்ற பகுதிகளைப் போலவே 'நாகதீப'வும் சிங்களப் பிரதேசமாகவே இருந்தது என்று சொல்லத் தேவையில்லை." (பரணவிதான 1983: 80) (Paranavitana 1983: 80). இந்த வரலாற்று ஆராய்ச்சியின் அரசியல் அம்சங்களை நாம் இங்கு புறக்கணித்துவிட்டு, விளக்கமான வரலாற்றுக் கூற்றுகளில் மட்டுமே கவனம் செலுத்துவோம். கல்வெட்டில் 'சிங்களம்' உள்ளது என்ற உண்மைக் கூற்று சரியானதா என்பதே நமக்கு உண்மையில் அக்கறைக்குரியது.

27 இந்தச் சிங்கள அறிஞரான எஸ்.பி. ஹெட்டியாரட்சி, வடக்கு மற்றும் வடகிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளில் அனுராதபுரக் காலத்தின் முற்பகுதியில் மக்கள் வசித்ததாகத் தெரிகிறது (மேலும் முதல் தமிழ்க் குடியேற்றங்கள் 10ஆம் நூற்றாண்டில் இருந்தன) என்று கூறுகிறார். இதை ஆதரிக்க, அவர் மற்ற ஆதாரங்களுடன், 'படகராவை'ப் (Badakara) பற்றிக் கூறும் வல்லிபுரம் கல்வெட்டையும் குறிப்பிடுகிறார். இந்த அறிஞரின் கூற்றுப்படி, இது பருத்தித்துறைக்கு அருகிலுள்ள நவீன வல்லிபுரத்துடன் அநேகமாக ஒன்றுபட்டது. இ.ரி. கன்னங்கராவும் ஓர் அரசியல் விளக்கத்திற்கு வழி வகுத்துள்ளார். வல்லிபுரத்தில் ஒரு பௌத்த விகாரத்தின் இடிபாடுகள், கட்டடங்களின் அடித்தளங்கள், பழைய செங்கற்கள் மற்றும் சேதமடைந்த புத்தர் சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டதாக அவர் கூறுகிறார். இந்தக் கண்டுபிடிப்புகள், இந்தக் கிராமம் கடந்த காலத்தில் ஒரு சிங்களக் குடியேற்றமாக இருந்தது என்பதைத் தெளிவாக நிரூபிக்கின்றன என்கிறார். கன்னங்கரா 1984ஐப் பார்க்கவும்.

28 பௌத்தம் குறித்த அவரது அரசியல் கருத்துக்கு, ஷால்க் 1990a ஐப் பார்க்கவும்.

உசாத்துணை மூலங்கள்

Anon

1994 His Spirit Sways Present Politics. Island International May 4, 1994: 14.

Boisselier Jean et al.

1978 The Image of the Buddha. General ed. David L. Snellgrove. London: Serindia Publications.

Cttanr

1981 Maimkalai. Ceai: Tatar U. V. Cmintaiyar nlnilaiyam. [1898]

Ceylon Antiquary

1916–17 The Ceylon Antiquary; vol. 2, pt 2.

Coomarswamy, Ananada K.

1980 The Origin of the Buddha Image. New Delhi: Munshiram Manoharlal. [1972]

Cavasa

1980 Cavasa, Being the More Recent Part of the Mahvasa. 2 vols. London: Pali Text Society. [1925]

Daily News

1991 The Daily News. Colombo.

Dharmadasa, K. N. O.

1994 A Note on the Linguistic Aspect of Peter Schalk's Paper. Serendipity 3: 88–90.

Elizarenkova, T. IA.

1972 Influence of Dravidian Phonological System on Sinhalese. International Journal of Dravidian Linguistics 1: 126–137.

Fausbll, V. [Ed.]

1963 Jtaka together with its Commentary Being the Tales of the Anterior Births of Gotama Buddha. London: Pali Text Society.

Gunawardana, R. A. L. H.

1979 Robe and Plough. Monasticism and Economic Interest in Early Medieval Sri Lanka. Tucson: University of Arizona Press.

Hrtel, J. A.

1971 Propylen Kunstgeschichte. Indien und Sdostasien. Berlin: Propylen Verlag Berlin.

Hettiaratchi, S. B.

1988 Social and Cultural History of Ancient Sri Lanka. Delhi: Sri Satguru Publications.

Hinber, Oskar v.

1986 Das ltere Mittelindisch im berblick. Wien: Verlag der sterreichischen

Akademie der Wissenschaften. (sterreichische Akademie der

Wissenschaften. Phil.Hist. Klasse. Sitzungsberichte, 467)

Jayaweera, Neville

1991 Sri Lanka Towards a MultiEthnic Democracy? Oslo: PRIO.

Kannangara, E. T.

1984 Jaffna and the Sinhala Heritage. Homagama: E. T. Kannangara.

Karunaratne, S.

1984 Epigraphia Zeylanica 7. Colombo: Archaeological Survey of Ceylon.

Mahvasa

1958 The Mahvasa. London: Pali Text Society. [1908]

Mathew, Caluwadewage Cyril

1983 Sri Lanka. An Appeal to UNESCO to Safeguard and Preserve the Cultural

Property in Sri Lanka Endangered by Racial Prejudice, Unlawful

Occupation or Wilful Destruction. Colombo: C. C Mathew. [micro form]

Ngacmi, Ir

1994 Nkaittu eum iam. Ceai; pp. 220–222. [Tamil]

Obeyesekere, Gananath

1970 Religious Symbolism and Political Change in Ceylon. Modern Ceylon

Studies 1: 50–51.

Paranavitana, Senarat

1936 Vallipuram Gold Plate Inscription of the Reign of Vasabha. Epigraphia

Zeylanica 4: 228–237.

1983 Vallipuram Gold Sheet Inscription. In: Inscriptions of Ceylon; vol. 2,

pt 1: Late Brahmi Inscriptions; pp. 79–81. Colombo: Archaeological

Survey of Ceylon.

Pieris, P. E.

1917 Nagadipa and Buddhist Remains in Jaffna. Journal of the Royal Asiatic

Society, Ceylon Branch 70, 26: 11–44.

Ragupathy, Ponnampalam

1987 Early Settlements in Jaffna. An Archaeological Survey. Madras:

Thillimalar Ragupathy.

Schalk, Peter

1988a Cikala Pautta laveri Tiviravtam. Ceai: Poi.

1988b 'Unity' and 'Sovereignty'. Key Concepts of Militant Buddhist

Organization in the Present Conflict in Sri Lanka. Temenos 24: 55–87.

1990a The Concept of Concord in President Ransie Premadasa's BuddhistPolitical

Discourse. Lanka 4: 22–92.

1990b The Lankan Mahasangha's Concept of a Dharmacracy and Society. In:

Radical Conservatism. Buddhism in the Contemporary World. Articles

in Honour of Bhikkhu Buddhadasa's 84th Birthday Anniversary; pp.

354–359. Bangkok: Thai Interreligious Commission for Development.

International Network of Engaged Buddhists.

1993 Review of Stanley Jeyaraja Tambiah, Buddhism Betrayed? Religion,

Politics, and Violence in Sri Lanka. Chicago, 1992. Temenos 29:

183–189.

1994a The Vallipuram Image – Again. Serendipity, 2, 1 (1994), pp. 41–49.

1994b Reply to Chandra R. de Silva. Serendipity 3/1: 85.

1994c Reply to K. O. N. Dharmadasa. Serendipity 3/1: 90.

1994d Second Reply to K. N. O. Dharmadasa. Serendipity 4/1: 90–91.

Silva, C. R. de

1994 Vallipuram Buddha Image – Again. Serendipity 3/1: 84–85.

Sunday Observer

1991 Sunday Observer. Colombo.

Tambiah, Stanley Jeyaraja

1992 Buddhism Betrayed? Religion, Politics, and Violence in Sri Lanka.

Chicago: University of Chicago Press.

Veluppillai, A.

1979–80 Tamil Influence in Ancient Sri Lanka with Special Reference to

Early Brahmi Inscriptions. Journal of Tamil Studies 16–17: 6–19.

1980 Epigraphical Evidences for Tamil Studies. Ceai: Ulakat Tamilaraycci

Niruvaam. (International Institute of Tamil Studies, 24)

1981 Tamil in Ancient Jaffna and Vallipuram Gold Plate. Journal of Tamil

Studies 19: 1–14.

1990 Religions in Yppam up to the Thirteenth Century. Lanka 5: 10–42.

Forthc. History of Tamil Buddhism in Ilankai. In: Peter Schalk (ed.),

Buddhism among Tamilar. Uppsala: Uppsala University.

Vogel, J.

1929–30 Prakrit Inscriptions from a Buddhist Site at Nagarjunakon da.

Epigraphia Indica 20: 22.

இந்த மொழிபெயர்ப்பில் பின்வரும் கருவி உதவிகள் பெறப்பெற்றன:

Google (2026) Google Translate [Online tool]. Available at: google.com [Accessed various dates in JulyAug 2026].

DeepSeek. (2026). DeepSeek (version) [Large language model]. https://www.deepseek.com [Accessed various dates in JulyAug 2026]

University of Madras. (1924–1936). Tamil Lexicon. Madras: University of Madras.

புத்தமும் தமிழும்

வின்சென்ற் போல் சந்தியாப்பிள்ளை

ஆங்கில மூலம்: பீற்றர் ஷால்க்

ஈழத்தைச் சேர்ந்த தமிழர்கள் அனுராதபுரக் காலத்தின் தொடக்கத்திலேயே பௌத்தத்தைத் தழுவியிருந்தனர் என்பதைத்தான் பிராகிருதத்தில் உள்ள நான்கு பிராமி கல்வெட்டுகளிலிருந்து இன்று நாம் அறியமுடிகிறது. அக்காலத்தில் பௌத்தம், சிங்கள(வ)ர்களின் பண்பாட்டு மற்றும் 'இன' குணாதிசயங்களுடன் அதுவரை அடையாளம் காணப்படாமலேயே இருந்தது. அக்காலத்தில் இத்தீவின் மதச் சூழல், காலனித்துவத்திற்கு முந்தைய காலத்தில் தமிழ்நாட்டின் சூழலிருந்தும் இன்றைய ஈழத்தின் சூழலிலிருந்தும் முற்றிலும் வேறாக இருந்தது. இனம் என்ற கருத்தின் அடிப்படையில் இனத்தேசியவாதம் எதுவும் அங்கு இருந்திருக்கவில்லை. இத்தீவில் ஆதிக்கம் செலுத்திய மதம் சைவம் அல்ல. அது பௌத்தம். தீவில் ஆதிக்கம் செலுத்திய மொழி தமிழ் அல்ல. கி.பி. எட்டு, ஒன்பதாவது நூற்றாண்டுகளில் பிராகிருதம், சிங்களத்தின் ஆரம்ப வடிவமான 'எலு' என மாறி, பின்னர் சிங்களமாக வளர்ந்திருந்தது.[1]

தமிழ் ஒரு சிறு மொழியாகவே இருந்தது. தமிழர்கள் ஒருங்கிணைக்கப்படுவதற்கு, பிராகிருதம் - எலு - சிங்களம் ஆகியவற்றைப் பயன்படுத்துவது தேவையாக இருந்தது. உண்மையில், அவர்கள் ஆரம்பகால அனுராதபுரக் காலத்தில் பிராகிருதத்தைப் பயன்படுத்தினர். தமிழ் பேசும் மக்கள், தமிழைத் தாய்மொழியாகப் பேசும் தகுதியின் அடிப்படையில், பௌத்தர்களாக ஆகுவதற்குத் தகுதியற்றவர்கள் என்ற கருத்து அப்போது இருக்கவில்லை. அவர்கள் பௌத்தர்களாக ஆனதாலும், பிராகிருதத்தைப் பயன்படுத்தியதாலும், பிராகிருதம் பேசும் குழுவினரால் ஆதிக்கம் செலுத்தப்பட்ட நிலப்பரப்பை அங்கீகரித்ததாலும் அவர்களின் ஒருங்கிணைப்புக் கைகூடியது. காலனித்துவத்திற்கு முந்தைய காலத்தில், இனம் என்ற கருத்தைப் பொருத்துவது கால முரண்பாடாக இருக்கும். காலனித்துவத்திற்குப் பின்பான காலத்தில்தான், தமிழர்கள் இயல்பாகவே தகுதியற்றவர்கள் என்ற எண்ணம் உருவானது. காலனித்துவ காலத்திற்குப் பின்னர்தான் சிங்களவர்களுக்கான ஒரு பொருளாதார, மொழி மற்றும் இனக்குழு அடையாளக் குறியீடாகப் பௌத்தம் பார்க்கப்பட்டது.

ஆதிக்கப் பிராகிருத மொழி பேசும் குழுவின் முகவர்களால், காலனித்துவத்திற்கு முந்தைய காலத்தில் தமிழர்கள் மதிப்பீடு செய்யப்பட்டதை, மகாவம்சத்தில் உள்ள 25:101-111 என்ற புகழ்பெற்ற பகுதி மூலம் எடுத்துக்காட்டலாம். புத்தசாசனத்தின் விழுமியங்களை வெளிப்படுத்தும் ஒருவர்தான், ஓர் உண்மையான மனிதன் என மகாவம்சம் வரையறுத்தது. உலகளாவிய விழுமியங்களின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட மனிதநேயம் பற்றிய ஒரு கருத்தை மகாவம்சத்தில் தேடுவது உறுதியாக வரலாற்றுக்குப் புறம்பானது. அது குறிப்பிட்ட மற்றும் குறிப்பான மத விழுமியங்களின் அடிப்படையிலேயே வரையறுக்கப்பட்டது.

1988 ஆவது ஆண்டில் கணநாத் ஒபயசேகரவும்[2], 1986 ஆவது ஆண்டில் நானும்[3] மகாவம்சத்தில் உள்ள இந்தப் பகுதியைப் பற்றி எழுதியபோது, அதைச் சூழலுக்கு ஏற்ப புரிந்துகொண்டு, அதன் முக்கியத்துவத்தை உணர்த்த முயன்றோம். இன்றோ நான் இந்தப் பகுதியை வேறு கோணத்தில் பார்க்கிறேன். 'தர்மமே' உண்மையான மனிதநேயத்தை உருவாக்குகிறது என்ற கருத்தைச் சொல்லும் 'சமஸ்கிருத சாஸ்திர' இலக்கியங்களைப் போன்ற பிற சமய மானிடவியல்களுடன் நான் இதை ஒப்பிடுவதில்லை. மேலும், மகாவம்சத்தில் உள்ள இந்தப் பகுதியைப் புத்தரின் செய்தியுடனும், மனித உரிமைகளின் உலகளாவிய தன்மை குறித்த புதிய கருத்துகளுடனும் மீண்டும் ஒப்பிட்டுப் பார்க்கும் நோக்கம் எனக்கு இங்கு இல்லை. நவீன சிங்கள - பௌத்த இனத்தேசியவாதத்தினுடைய 'விலக்கும் மதக்கோட்பாடே' பொருத்தமான ஒப்பீட்டுப் புள்ளி என்று நான் நினைக்கிறேன். அதன்பின்னர், மகாவம்சத்தில் உள்ள இந்தப் பத்தி மற்றொரு கோணத்தில் வெளிப்படுகிறது.

கி.பி. ஐந்தாவது நூற்றாண்டைச் சேர்ந்த மகாவம்சம் (25:101-111 பத்தி) இரண்டு கருத்துகளைத் தெரிவித்தது. 1. புத்தசாசனத்தைச் சாராத தமிழர்கள் பின்வருமாறு குறிக்கப்படுகிறார்கள். 'தவறான நம்பிக்கையாளர்கள்' என்று பொருள்படும் 'மிச்சாதித்தி' என்றும் 'தீயவர்கள்' என்று பொருள்படும் 'துஸ்ஸிலா' என்றும் 'மிருகங்களைப் போன்றவர்கள்' என்று பொருள்படும் 'பசுமா' என்றும் கருதப்பட்டனர். இது இந்தப் பத்தியில் காணப்படுகின்ற விலக்கி வைக்கும் முகமாகும். ஆனால், மற்றொரு வரவேற்கும் முகமும் இதிலிருந்தது. 2. தமிழர்கள் முறையாகப் புத்தசாசனத்தை நோக்கித் திரும்பினால், படிப்படியாகக்கூட மனிதர்களாக மாற முடியும் என்று அந்தப் பத்தி உணர்த்துகிறது. அவர்கள் சரணடைதல் சூத்திரத்தை ஏற்றுக்கொண்டால், அரை மனிதர்களாகவும், ஒழுக்க விதிகளை ஏற்றுக்கொண்டால், முழு மனிதர்களாகவும் மாறவும் முடியும் என்கிறது.

தமிழர்கள் மனிதநேயப் பாதையில் நுழைவதற்கான அழைப்பின் நுழைவாயில், இந்தவகை நவீன இனத்தேசியவாதிகளால் மூடப்பட்டுள்ளது. நவீன இனத்தேசியவாதிகளின் 'மனக் குழிக்கோ' (கார்ல் ஜஸ்பர்ஸ்) (*Karl Jaspers*) அல்லது அவர்களின்

‘பூட்டப்பட்ட மனங்களுக்கோ’ (டி.என். மதன்) (*T.N. Madan*) நான்கு ரத்தினங்கள் உள்ள சாளரத்தைப் பூட்டிவைக்க முடியாது. அதாவது ‘நான்கு இரத்தினங்களான’ நாடு (ரதம்), இனம் (ஜாதியம்), மதம் (ஆகமம்), மொழி (பாசவம்) ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்ட சாளரத்தை பூட்டிவைக்க முடியாது.[4] இங்கு எந்த உரையாடலும் சாத்தியமில்லை.[5]
இனத்தேசியவாதத்தின் வெளிச்சத்தில் தமிழ்ப் புத்தம் என்ற கருத்து ஒரு முரண்பாடாகத் தோன்றுகிறது. நவீன இனத்தேசியவாதம் ‘வம்ச’ (மகாவம்சம் என்பதனை ஆசிரியர் இப்படிக் குறிப்பிடுகிறார். மொர்) மரபை முறித்துவிட்டது என்று நான் முடிவு செய்கிறேன். அதன்படி தமிழர்களும் புத்தசாசனத்தின் விழுமியங்களை ஏற்றுக்கொள்வதன் மூலம் மனிதர்களாக ஆகியிருக்க முடிந்திருக்கும். வரலாறு மற்றும் மொழியியலில் தொழில்முறைப் பயிற்சி இல்லாத மேற்கத்திய வர்ணனையாளர்களால் இன்று பொதுவாக ‘மகாவம்ச மனப்பான்மை’ என்று அழைக்கப்படுவது, மகாவம்ச மனப்பான்மையே அல்ல. அது, தன்னை உண்மையான மகாவம்ச மனப்பான்மை என்று கூறிக்கொண்டு, காலத்திற்குப் பொருந்தாத வகையில் தன்னை வரலாற்று ரீதியாக நிலைநிறுத்திக்கொள்ளும் ஒரு நவீன இனத்தேசியவாத மனப்பான்மையாகும். இந்த வர்ணனையாளர்கள், சிங்கள இனத்தேசியவாதமே ‘வம்ச’ மரபின் பிழிவு என்ற இனத்தேசியவாத வரலாற்றுப் பார்வையின் முன்வைப்பாளர்களாகத் தங்களை அறியாமலேயே ஆக்கிக்கொள்கிறார்கள்.

கி.பி. ஐந்தாவது நூற்றாண்டில், மகாவம்சம் தொகுக்கப்பட்டுவிட்ட இந்தக் காலத்தில் நாம் பயணிக்கிறோம். மட்டுமல்லாமல், இந்த மேற்குறிப்பிட்ட பத்தி (மகாவம்சம் 25:101-111 பத்தியையே ஆசிரியர் குறிப்பிடுகிறார். மொர்) தலைமுறை தலைமுறையாகப் பரப்பப்பட்டுவிட்ட காலமுமாகும். மேலும் அது பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த சிங்களத்தின் ‘சத்தர்மலங்காரய’ () போன்ற பிற மூலங்களிலிருந்தும் வெளிப்பட்டது.[6] அதில், புத்தசாசனத்தைச் சேராத தமிழர்கள் ‘கால்நடைகள், நாய்கள் மற்றும் எலிகளாகக்’[7] கருதப்பட்டனர் என்பதிலும், ஆனால் புத்தசாசனத்தில் நுழைந்தால், படிப்படியாகத் தமிழர்கள் மெல்ல மெல்ல மனிதர்களாக ஆக முடியும் என்பதிலும் எந்த ஐயமும் வைக்கப்படவில்லை. ஆதிக்கக் குழுவால் வரையறுக்கப்பட்ட மனிதநேய அணுகுமுறையைத் தங்களுக்கானதாகத் தேர்ந்தெடுத்த தமிழர்களின் பல எடுத்துக்காட்டுகளை நாம் காணமுடியும். மொழியைப் பற்றி ‘விநயத்தில்’ (பிடகம்) உள்ள நியதி நெறியையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். பிக்குகள் ‘தம்மத்தை’ எந்த மொழிகளில் கற்கவும் (கற்பிக்கவும்) வேண்டும் என்பது குறித்த விநயபிடகத்தில் (சூளவக்கம் *V*.33) உள்ளது. புத்தர் கூறியதாகக் கூறப்படும் புகழ்பெற்ற கூற்றின்படி, ஒவ்வொருவரும் ‘தம்மத்தைத்’ தத்தமது சொந்த மொழியில் கற்க வேண்டும்.

“anujjanmi bhikkhave sakya
niruttiy buddhavacanam pariypuitun ti”

“பிக்குகளே, புத்தரின் வார்த்தைகளை ஒவ்வொருவரும் அவரவர் மொழியில் கற்க நான் உங்களுக்கு அனுமதிக்கிறேன்.”

உண்மைதான்! ஐந்தாவது நூற்றாண்டைச் சேர்ந்த புத்தகோசர் ஒரு சிறப்பு விளக்கத்தைக் கொண்டிருந்தார். அதன்படி இந்த ‘புத்தவாசனா’ புத்தரின் மொழியைக் குறிப்பதாகப் பொருள் கொள்ளப்பட வேண்டும். அதை அவர் ‘மகதி’ என்று வகைப்படுத்தினார். நெறியில் நிலைபெற்ற நூல்களின் மொழி ‘பாலி’ மொழிதான் என்பதாகத் தவறாக மீண்டும் அவர் அடையாளம் கண்டார். இருப்பினும், இந்த விளக்கம், மேலே தரப்பட்ட புத்தர் வாக்கின் ஒரு மறுவிளக்கமாக இருக்கிறது. ஒவ்வொரு துறவியும் புத்தர் வாக்கைத் தனது சொந்த மொழியில் கற்க வேண்டும் என்பதை இந்தச் சூழமைவு தெளிவுபடுத்துகிறது. ஒவ்வொரு துறவியும் தனது சொந்த மொழியில் போதிக்க வேண்டும் என்பதை நான் குறிப்பாகச் சொல்கிறேன்.

புத்தகோசரின் விளக்கத்தை நாம் ஏற்றுக்கொண்டாலும் கூட, ‘மகதி’ என்பது சிங்களம் அல்ல. புத்தகோசர் பௌத்தத்தை ‘தேசியமயமாக்க’ அல்லது குறுகிய வட்டத்திற்குள் அடக்க விரும்பியதால் ‘மகதியைத்’ தேர்ந்தெடுக்கவில்லை. மாறாக, அவர் பௌத்தத்தை உலகளாவியதாக்க விரும்பியதாலேயே அப்படித் தேர்ந்தெடுத்தார். பாலி மொழிதான் உலகில் அறியப்பட்டிருந்தது என்று அவர் தவறாக நினைத்தார். உரைகளில் இருந்த குறுகிய வட்டத்திற்குள் அடங்கிய பிராகிருதத்திற்குப் பதிலாக, ஒரு ‘சர்வதேச’ மொழியான பாலியை அவர் கொண்டுவர விரும்பினார். அவரது செயலானது, ‘விநய பிடகத்தில்’ புத்தர் போதித்த போதனையின் விளைவை ஏற்பதாகக் கருதலாம் (மகாவக்கா *II*) (*Mahvagga, Chapter II*). அதன்படி, விடுதலை பெற்ற துறவிகள் பலரின் நலனையும், பலரின் மகிழ்ச்சியையும் மனதில் கொள்ள வேண்டும். அவர்கள் முழு உலகத்தின் மீதும் கருணை காட்ட வேண்டும். மனிதர்கள் மற்றும் தெய்வங்கள் இரு தரப்பினரின் மகிழ்ச்சியையும் மனதில் கொள்ள வேண்டும். எனவே, புத்தகோசரின் படைப்பில், ஒரு குறுகிய வட்டத்திற்குள் சுருங்கிய பௌத்தத்தைக் கட்டமைப்பதற்கு எந்த ஆதரவும் அங்கு இல்லை. சிங்கள பௌத்தம் என்ற கருத்தாக்கம், அவரது படைப்பின் சாரத்தையும் புத்தரின் படைப்பையுமே கேள்விக்குள்ளாக்குகிறது. தமிழ்நாட்டிலிருந்து மட்டுமல்லாமல், இந்தியாவின் பல

பகுதிகளிலிருந்தும் குடிபெயர்வோருக்கு ஒரு மாறாத இலக்காக இத்தீவு (இலங்கை - ஈழம்) இருந்தது என்பதை இந்தத் தீவின் வரலாறு காட்டுகிறது. இலங்கையின் முதல் அரசன் என்று கூறப்படும் விஜயனின் சித்தரிப்பில் சேர்ந்தே வரும் வட இந்தியப் படையினர், தென்னிந்தியாவின் பகுதிகளிலிருந்து வந்த தமிழ் வேளிர் தலைவர்களைப் போலவே, சிற்றினங்களிடையேயான உள்நாட்டுப் போராட்டங்களின் விளைவாக உருவானவர்கள். இவர்கள் 'பிராகிருதம் - எலு - சிங்களம்' பேசும் மக்களுடனோ அல்லது தமிழ் பேசும் மக்களுடனோ ஒன்றிணைக்கப்பட்டனர். பல்லவருக்கு முற்காலம் முந்தையதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகவும், சோழப் பேரரசுக் காலம் பிந்தையதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகவும் விளங்குகிறது.

புத்தகோசரின் மொழிகள் பற்றிய விளக்கத்திற்கும், மகாவம்சத்தைத் தொகுத்தவரின் உலகில், பௌத்தத்தின் நிலை குறித்த பார்வைகளுக்கும் இடையில் ஒரு வேறுபாட்டை என்னால் காண முடியவில்லை. உலகிற்கு 'தம்மம்' எனும் விளக்கை ஒளிரச் செய்வதற்காக அந்தத் தீவு தேர்ந்தெடுக்கப்பட்டது என்பது குறித்துப் பிந்தையவருக்கு ஒரு சிறப்புப் பார்வை இருந்தது என்பது உண்மைதான். ஆனால் பௌத்தம் என்பது சிங்களவர் என்ற ஒரே இனக்குழுவின் மதம் மட்டுமே என்ற பார்வை எதுவும் அங்கு இல்லை.

காலனித்துவத்திற்கு முந்தைய தனித்த தீவின் வரலாற்றிலேயே கூட, தமிழர்களுக்கு எதிரான பல பதிவு செய்யப்பட்ட உடல்ரீதியான துன்புறுத்தல்களும், வாய்மொழிச் சீற்றங்களும் உள்ளன என்பதும் மீண்டும் உண்மைதான். இருப்பினும், வம்ச மரபை ஆராய்ந்தால், இந்த எதிர்மறையான மனப்பான்மைகளும் செயல்களும் தமிழர்களில் ஒரு 'குறிப்பிட்ட பிரிவினருக்கு' எதிராகவே செலுத்தப்பட்டன என்பது தெரியவருகிறது. இவை இயல்பான காரணங்களின் அடிப்படையிலோ அல்லது பௌத்தத்திற்கு எதிரான வெளிப்படையான அல்லது அழிவுச் செயல்பாட்டுக்குரிய தப்பெண்ணத்தின் காரணமாகவோ இருந்தன எனலாம். அவர்கள் பௌத்த நிறுவனங்களை அழித்த 'மிச்சா தித்தி' (*micch dihi*), அதாவது 'தவறான நம்பிக்கையாளர்கள்' என்று அழைக்கப்பட்டனர் (*micchdihi* என்றே மூலத்தில் அச்சாகியுள்ளது. அச்சில் தவறாக இருக்கும் வாய்ப்புள்ளது. மொர்). 'துச்சிலா' (*dussila*), அதாவது 'தீயவர்கள்' என்றும் வகைப்படுத்தப்பட்டதை நாம் மேலே கண்டோம். அவர்கள் 'பசுமா' (*pasum*), அதாவது 'விலங்கைப் போன்றவர்கள்' என்று வகைப்படுத்தப்பட்டனர். ஆனால் இந்தக் குணாதிசயங்கள் அனைத்தும் பௌத்த எதிர்ப்பு நடவடிக்கைகளையே குறிக்கின்றன. இருப்பினும், ஒரு பௌத்தராக இருப்பது என்பது, ஒரு மத நம்பிக்கையைக் கொண்டிருப்பதைக் காட்டிலும் மிக அதிகம் என்பதை நாம் உணர வேண்டும். 'மதம் மட்டுமே' என்ற கருத்து அப்போது இருக்கவில்லை. புத்தசாசனமே அரசின் மதமாக இருந்தது. அது அரசாட்சியின் கொள்கையாக இருந்தது. பௌத்த எதிர்ப்பாளராக இருப்பது என்பது அரசின் எதிரியாக மாறுவதைக் குறிக்கிறது. நான் ஒரு ஸ்தூபியை அழித்து, பிட்சைப் பாத்திரத்தைக் கொள்ளையடித்து, புனிதப் பல்லை உடைத்தால், நானும் அரசின் எதிரியாகிவிடுவேன். 'வம்ச' மரபில், சமயவாதியையும் அரசியல்வாதியையும் பிரிக்க முடியவில்லை. இது பௌத்த எதிர்ப்புச் செயல்பாடுகள் குறித்த அவரது மதிப்பீட்டைப் பாதித்தது. நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், பௌத்த எதிர்ப்பாளராக வகைப்படுத்தப்படுவது எளிதாக இருந்தது. அரசுக்கு எதிரான ஒவ்வொரு செயலும் பௌத்த எதிர்ப்புச் செயலாகக் கருதப்பட்டது. இந்தக் கருத்து இன்றும் பாரம்பரிய மற்றும் மரபுசார்ந்த தீவிர, மற்றும் போர்க்குணமிக்க பௌத்தக் குழுக்களிடையே வாழ்ந்து வருகிறது.

தீவிலிருக்கும் காலனித்துவத்திற்கு முந்தைய பௌத்த அரசு அமைப்புகள் தமிழர்களுடன் தொடர்ந்து ஒத்துழைப்பில் இருந்தன. ஆனால் பௌத்த எதிர்ப்புத் தமிழர்களுடன் ஒத்துழைப்பில் இருக்கவில்லை. பாண்டியர்கள், போர்த்துகீசியர்கள், டச்சுக்காரர்கள் மற்றும் ஆங்கிலேயர்களுடன் இந்த ஒத்துழைப்பு இருந்தது. ஆனால் பௌத்த எதிர்ப்பாளராயிருந்த பாண்டியர்கள், போர்த்துகீசியர்கள், டச்சுக்காரர்கள் மற்றும் ஆங்கிலேயர்களுடன் இந்த ஒத்துழைப்பு இருக்கவில்லை. காலனித்துவ ஆற்றல்கள் பௌத்த எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கூறப்பட்டதால், அவர்களுடன் எண்ணற்ற மோதல்கள் ஏற்பட்டன. தமிழ் பேசும் பௌத்தர்கள் உட்பட பௌத்தர்கள், தீவில் தலைமுறை தலைமுறையாகத் 'தம்மத்தை' விளக்காகக் கடத்தும் ஒரு சிறப்புமிக்க விதியைத் தாங்கள் பெற்றிருப்பதாக உணர்ந்தனர். கிறிஸ்தவத்தின் ஊடுருவலைத் தங்கள் ஆணைக்கு ஓர் அச்சுறுத்தலாகக் கருதுவதற்கு அவர்களுக்கு நல்ல காரணங்கள் இருந்தன. மகாவம்சத்தில் விவரிக்கப்பட்ட புத்த அரசு பற்றிய கருத்தியல், மதம் என்ற வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றாகவும் மதங்களின் இடையேயும் உள்ளேயும் விலக்குகின்ற, சேர்க்கின்ற ஒன்றாகவும் மாறியது என்பதே இந்த நாணயத்தின் மறுபக்கம். இது காலனித்துவத்திற்கு முன்பான கட்டத்தில் நடந்தது. ஆனால் தமிழ் எதிர்ப்பு நிலையில் இது நிகழவில்லை. சிலபோது இது சைன எதிர்ப்பு, சைவ எதிர்ப்பு, கூடவே மகாயான எதிர்ப்பாக இருந்தது. உடல் வகைத் துன்புறுத்தல், அழித்தல் என்றளவுக்கும் இருந்தது. தீவில் பௌத்தத்திற்கு அச்சுறுத்தலாக மகாயானம் இருந்தபோது இப்படியிருந்தது என

எடுக்கலாம். இருப்பினும், இது எப்போதும் எல்லா இடங்களிலும் இப்படி நடந்திருக்கவில்லை. இந்த 'வம்சக்' குறுங்குழுவாதச் சித்தாந்தம் முழுவதுமாகப் பரவியிருக்கவில்லை. குறிப்பாக அரசுகளில் பரவியிருக்கவில்லை. அங்கே நாம் பௌத்த ஆட்சியாளர்களின் பயன்வழிசார் - பயன்கருதிய பொறுக்கும் தன்மையைப் பார்க்க இயலும்.

பெரிய குழுக்களாக வரும் தமிழ்ச் சைவத் துணைப்படையினர், குடியேறிகள், வணிகர்களில் அரசு சார்ந்திருந்தது. அரசுகள் சைவத்தின் புனிதத் தலங்களுக்கு அரச ஆதரவையும் கூட வழங்கினர். 'மறுகரையில்' சோழர்களும்கூட இந்தப் பொறுத்துக்கொள்ளும் தன்மையைக் கடைப்பிடித்தனர். கைக்கொள்ளப்பட்ட இந்தப் பயன்வழிசார் பொறுக்கும் தன்மையின் காரணமாகச் சைவராலும் பௌத்தராலும் இந்தக் காலங்களில் இணைந்து வாழ முடிந்தது. பிரிவினைவாதத்தைத் தவிர்த்த கருத்தியல் அர்ப்பணிப்பும், நடைமுறை சார்ந்த பொறுக்கும் தன்மையும் ஆகிய இரண்டு உச்சநிலைகளுக்கு இடையில்தான், இரு கரைகளிலும் உள்ள ஆட்சியாளர்கள் தங்களை நிலைநிறுத்திக் கொள்ள முயன்றனர். இந்த நடைமுறை சார்ந்த ஏற்கும் தன்மைக்கும், மனித உரிமைகளை அங்கீகரிப்பதற்குமோ அல்லது பொறுக்கும் தன்மைக்குமோ எந்தத் தொடர்பும் இல்லை என்பது சொல்லாமலேயே விளங்கும். அது எந்த நேரத்திலும் பிரிவினைவாதத்தால் மாற்றப்படக்கூடிய ஒரு நடைமுறைவாதமே தவிர வேறில்லை.

தமிழர்களுக்கும் தமிழர் அல்லாதவர்களுக்கும் இடையிலான துருவப்படுத்தும் (பிரித்து வைக்கும்) முனைப்பு, சூளவம்சம் என அறியப்படும் தொடர் வரலாற்றில் இன்னும் வண்ணமயமாக வெளிப்படுத்தப்பட்டது. சூளவம்சம் வரலாற்றின் 'இடைக்காலத்தைப்' பெரும்பாலும் உள்ளடக்கியது. தமிழர் பொதுவாகப் பௌத்தத்திற்கு எதிரானவர்கள் என்ற கருத்தும் சூளவம்சத்தின் முக்கியக் கருப்பொருள்களில் ஒன்றாகும். இந்தக் கருத்து, பொதுவாகத் தமிழர்கள் பௌத்தத்திற்குப் புறம்பானவர்கள் என்ற கருத்தின் முன்னோடியாகும். பெருநிலத்திலிருந்து (தமிழகத்திலிருந்து - மொர்) கடுமையான படையெடுப்புகளை நிகழ்த்திய தமிழர்களைப் பற்றிய மெய்மைகளை அறிந்த தற்போதைய வரலாற்று ஆய்வருமேகூட இந்த மேற்படிக் கருத்தை மீண்டும் நிகழ்த்திக் காட்ட முடியும்.

இந்தக் கருத்துத் தமிழர்களின் போர் மற்றும் மோதல்களின் உறுதியான மற்றும் தொடர்ச்சியான பட்டறிவின் அடிப்படையில் கட்டமைக்கப்படுகிறது. சூளவம்சத்தில் அந்தப் பட்டறிவிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, தமிழர்கள் பௌத்தத்திற்கு எதிரானவர்கள் என்ற பொதுவான பார்வையாக அது மாற்றப்பட்டது. இந்தக் கருத்தின் தலைகீழ் நிலை என்னவென்றால், தீவில் பௌத்தம் என்பது பிராகிருதம் - எலு - சிங்களம் பேசும் மக்களால் மட்டுமே கடத்தப்படுகிறது என்பதாகும். உண்மையில், ஆய்வு அறிஞர்கள் இந்தத் தலைகீழான நெறிமுறைச் செய்தியை இருபதாம் நூற்றாண்டில் ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு மேலும் உயர்த்தினர். அது அவர்களால் வரலாற்றுக் காலத்தின் தொடக்கத்திற்குக் காலப்பொருத்தமின்றி முன்வைக்கப்பட்டது. 1970 ஆவது ஆண்டில் வெளியான செனரத் பரணவிதானாவின் ஒரு படைப்பு, "இலங்கையில் உள்ள பௌத்தம், தொன்மையான காலங்களிலிருந்தே, இந்தத் தீவில் உள்ள மக்களின் வாழ்க்கை நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்ட ஒரு சிங்கள பௌத்தமாக மாறியிருந்தது" என்று கூறுகிறது.[8] செனரத் பரணவிதான தனது நீண்ட பணி வாழ்க்கை முழுவதும் இந்தக் கேள்வியில் நிலைத்த தன்மையுடன் இருந்தார். பிராமி, பிராகிருதக் கல்வெட்டுகளில் தமிழ் அடித்தளம் ஒன்றும் இல்லை என்பதை செனரத் பரணவிதான மறுத்ததன் மூலம், பௌத்தத்தின் மீதான அவரது சிங்களமயமாக்கல், குறுகிய மனப்பான்மையாக்கல் மற்றும் வகுப்புவாதமாக்கல் கூட வெளிப்படுத்தப்பட்டன.

இவை அனைத்துக்கும் மேலாக, இருபதாவது நூற்றாண்டில் சிங்களவர்கள் ஒரு மொழிக் குழுவாக மட்டுமல்லாமல், ஓர் இனமாகவும் கருதப்பட்டனர். பௌத்தம் ஓர் இனத்தின் மதமாக மாறியது. இதற்கு நேர்மாறாகவும் சமச்சீராகவும், சைவம் தமிழ் இனத்துடன் தொடர்புடையதாக இருந்தது. மதம் என்பது, மாற்ற முடியாத தோலின் நிறத்தைப் போல, ஓர் இனக்காரணியாக மாறியது.

இரண்டாயிரம் ஆண்டுகள் பழமையான தனித்த பிராகிருதக் கல்வெட்டுகள், பௌத்தர் மற்றும் மொழிக் குழுக்களைக் குறிப்பிடுகின்றன. ஆனால் இனங்களின் முகவர்களைக் குறிப்பிடவில்லை. மொழிக்கும் மதத்திற்கும் இடையில் எந்தச் சித்தாந்தத் தொடர்பும் இல்லை என்பதையும் அவை காட்டுகின்றன. பிராகிருதம் என்ற பொது மொழியை அடிப்படையாகக் கொண்ட இரு மொழிக் குழுக்களின் உறுப்பினர்களும் பௌத்தத்தைப் பகிர்ந்து கொண்டனர். எனவே, கல்வெட்டுகளின் கண்ணோட்டத்தில், சிங்கள பௌத்தத்தைப் பற்றிப் பேசுவதுபோல ஒரு சிறப்புத் தமிழ் பௌத்தத்தைப் பற்றிப் பேசுவதும் கால முரண்பாடாகவே இருக்கும். இந்தக் காலத்தில் பௌத்தம் இன்னும் வகுப்புவாதத்திற்கு உள்ளாக்கப்படவில்லை. இந்தத் தீவில், முதலாம் உதய மன்னனின் (792-797, 797-801)

ஆட்சிக் காலத்தில் தமிழ்ப் பௌத்தத் துறவிகள் ஒரு தனித்த சமூகமாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தனர் என்பதற்கும் ஒரு சான்று உள்ளது. சூளவம்சத்திலிருந்து (49:24), முதலாம் உதய மன்னருடைய பட்டத்தரசி, 'ஜெயசேனபப்பதா' விகாரத்தை ஒரு தமிழ்ப் பிக்கு சங்கத்திடம் ஒப்படைத்தார் என்பதை நாம் அறிகிறோம்.

"*Kretv Jayasena ca pabbatam Dmilassa ad bhikkhusaghassa*"[9]

".. மற்றும் காரணமாக ஜெயசேனபப்பதா (விஹாரா) கட்டப்பட, அவள் ஒப்படைத்தார் (அது) தமிழ் பிக்கு சங்கா..."

(ஜெயசேனவைக் [மடம்/ மலைவாசஸ்தலம்] கட்டிய பின்னர், அதை பிக்கு சங்கத்தைச் சேர்ந்த தமிழ் [துறவிக்கு] அர்ப்பணித்தார்.)

தமிழர்கள் பௌத்தர்களாக இருக்க முடியாது என்ற, இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தற்போதைய ஆதிக்க நெறிக்கு, இந்த உரை முரண்படுகிறது. குறைந்தளவேனும் சில தமிழ்ப் பௌத்த பிக்குகள், தாங்கள் தமிழ் பேசியதன் அடிப்படையில் தனியாக வாழ்ந்தனர் என்பதை இது உணர்த்துகிறது. ஒருவேளை, தமிழர்களிடையே சமயப் பிரசாரம் செய்யக்கூடிய ஒரு தமிழ்ப் பௌத்த சங்கத்தை உருவாக்குவதற்கான ஒரு சிறப்புத் தகுதி தேவைப்பட்டதாலோ என்னவோ இப்படி இருந்திருக்கலாம்.

பிந்தைய அனுராதபுரக் காலத்தில், அதாவது சோழர் மற்றும் பண்டியர் பேரரசு காலத்துடன் ஒத்துப்போகும் வரலாற்றுக்காலத்தில், 'இரண்டுவகைக் குழுக்களுக்கும்' பௌத்த அரசுகளிற்கும் இடையே ஒரு தொடர்பு நிறுவப்பட்டது. 'இவ்விரண்டு வகைக் குழுக்களும்' தமிழ் வணிகர்களும் துணைப்படையினருமே ஆவர் (முன்சென்ற இந்த இரண்டு வாக்கியங்கள் குறித்த மொழிபெயர்ப்புச் சார்ந்த தெளிவான விளக்கங்களைத் தவறாமல் இறுதிக் குறிப்புப் பகுதியில் படித்துப் பார்க்கவும். மொர்)[10] அவர்கள் அரசின் அமைப்புகளைக் கட்டுவதிலும் ஈடுபட்டிருந்தனர். அவற்றுள் பௌத்த அமைப்புகளும் அடங்கும். தமிழ்க் கல்வெட்டுகள் பல, அவர்களின் ஈடுபாட்டிற்குச் சான்றாக விளங்குகின்றன. மேலும், தமிழர்கள் பௌத்த அரசின் சித்தாந்தத்தில் ஒருங்கிணைக்கப்பட்டிருந்ததையும் அவை காட்டுகின்றன.

பத்தாவது நூற்றாண்டில் இருந்து காணப்படும் தமிழ்ப் பதிவுகள் சோழப் பேரரசுடன் நெருங்கிய தொடர்புடைய ஒரு வகைப் பௌத்தத்தைக் குறிப்பிடுகின்றன. இதை ஒரு சிறப்புத் தமிழ்ப் பௌத்தம் என்று சரியாக அழைக்க இயலும். இது பிராகிருதம் - எலு - சிங்களம் அல்லது பாலி மொழிகளில் அல்லாமல், தமிழில் பரப்பப்பட்டிருந்தது. சோழர்கள் இதைச் சித்தாந்த வகையாகவும் சடங்கு வகையாகவும் உருவாக்கினர். பௌத்தத்தை விளக்குவதற்குச் சைவச் சொற்களும் கருத்துகளும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இதை, 'ஈழத்திலிருந்து வந்த ஈழ சோழப் பௌத்தம்' என்று அழைப்போம். இது தமிழர்களிடையே பௌத்தத்திற்கு ஒரு புதிய தொடக்கமாக இருந்தது. தமிழர்களிடையே இருந்த முற்கால பிராகிருத பௌத்தத்திற்கும் இந்த 'ஈழ சோழப் பௌத்தத்திற்கும்' எந்தத் தொடர்பும் இல்லை. போர்களில் கைப்பற்றப்பட்ட தீவினுடைய சில பௌத்த நிறுவனங்கள், கிழக்கில் உள்ள ராஜராஜப் பெரும்பள்ளியைப் போல, இந்த 'ஈழ சோழப் பௌத்தத்தை' நிறுவுவதற்கான மையங்களாக மாற்றப்பட்டன. 1978 ஆவது ஆண்டில் ஆழ்வாப்பிள்ளை வேலுப்பிள்ளையால்[11] முதலில் முன்மொழியப்பட்ட, 'ஈழத்துப் பௌத்தம்' என்ற ஒரு சிறப்புத் தொடர் மரபில் இருந்ததா என்ற கேள்வி நியாயமானது, மற்றும் அதற்கு 'ஆம்' என்று பதிலளிக்கப்படலாம்.

'ஈழ சோழப் பௌத்தம்' தன்னிறைவு பெற்றிருந்தது. போரினால் கைப்பற்றப்பட்ட ஒரு முன்னாள் சிங்கள - பௌத்தப் பகுதியில் இருந்த தமிழர்கள், அதனைத் தமிழ் மொழியில் பரப்பினர் என்ற பொருளில், அக்குறிப்பிட்ட தன்மையைக் கொண்டிருந்தது. அதன் கலைச்சொற்கள், சைவத்தை ஒத்திருந்தது என்ற பொருளிலும் அது ஒரு குறிப்பிட்ட தன்மையைக் கொண்டிருந்தது. பதினான்காம், பதினைந்தாம் நூற்றாண்டுகளில் அழித்தாழிப்பு அல்லது உள்ளிணைப்புக் காரணமாக 'ஈழ சோழப் பௌத்தம்' மறைந்துவிட்டதால், காலனித்துவத்திற்கு முந்தைய காலத்தில் ஈழத்தில் இருந்த தமிழர்களிடையே பௌத்தம் பற்றி மேலதிகமாகச் சொல்வதற்கு ஒன்றுமில்லை.

இன்று, தமிழர்கள் (இலங்கையைத்தான் ஆசிரியர் குறிப்பிடுகிறார். மொர்) பௌத்தராக இருப்பது எளிதல்ல. 'ஈழ சோழப் பௌத்தத்திற்குப்' புத்துயிர் அளிப்பது பழைமைவாதமாகவே இருக்கும். அதைச் சிறப்பானதொரு ஈழப் பௌத்தமாக மாற்றுவது, சிங்களப் பௌத்தத்தின் தலைகீழ் மாற்றமாகவே இருக்கும். சிங்களப் பௌத்தத்திற்கான கதவு தமிழருக்கு மூடப்பட்டுள்ளது. ஏனெனில் தமிழர்கள் சிங்கள குலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்ற அவசியமான தகுதியைக் கொண்டிருக்கவில்லை. 'வம்ச' மரபில் உள்ள பாரம்பரிய பௌத்தத்திற்கான கதவைத் தமிழர்கள் கடந்து செல்ல விரும்புவதில்லை. மனிதநேயம் என்பது பௌத்தம் அல்ல. அது உலகளாவியது என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

எனவே, கடந்து செல்லக்கூடிய கடைசி வாய்ப்பான கதவு புத்தரின் போதனைகளுக்குத் திரும்புவதேயாகும். அவரின் அறவுரைகள் எல்லா மொழிகளிலும் விலங்குகளையும் மிருகங்களையும் நோக்கி அல்லாமல், பாலினம், வயது, இனம், வர்க்கம் அல்லது சாதி பேதமின்றி அனைத்து வகையான மனிதர்களையும் நோக்கியே இருந்தன.

Pauttamum Tamilum. Schalk, Peter. Sri Lankan Journal of South Asian Studies, No 7 2000/2001. University of Jaffna.

அடிக்குறிப்புகள்

1. பிராகிருதத்திலிருந்து சிங்களத்திற்கான வளர்ச்சியில் ஒரு மொழிப் படிநிலையாக 'எலு' என்ற சொல்லை நான் இங்கு பயன்படுத்துகிறேன். சமஸ்கிருதம் மற்றும் பிற அயல் கூறுகளிலிருந்து தூய்மைப்படுத்தப்பட்ட சிங்களம் என்ற தூயவாதப் பொருளில் நான் அதைப் பயன்படுத்துவதில்லை.

2. *G. Obeyesekerc, A Meditation on Conscience, Occasional Papers I (Colombo: Social Scientists' Association, 1988).*

3. *P. Schalk, "Landets söner. Om nutida buddhistisk historietolk ning och konflikten mellan singhaleser och tamiler i Sri Lanka", Häften för Kritiska Studier, 1, 19 (1986), pp.24-41. Also published in Chaos 4 (1985), 39-55.*

4. *This four fold refuge is mentioned by the Anagrika Dharmap la but was later taken up by Madih Paññа siha, by the Mahany ka of the Amarapura Nikya. Vide Vra Carita. Angarika Dharmapla tum, Vol.1 (Nugegoda:Kurungala Tarua Bauddha Samgamaya, 1985), p.22. For a comment on this vide P Schalk, "Lejonet och tigern. Kampen med symboler i Sri Lanka", Svensk Religionshistorisk Tidskrift 2 (1986), pp.45-76, especially p.50.*

5. *P. Schalk, "Kette ohne Anfang und Ende. Die Welt der Funda mentalisten in Sri Lanka ist hermetisch gegen Kritik versiegelt". Der Überblick. Zeitschrift für ökumenische Begegnung und internationale Zusammenarbeit. 33. Jahrgang. März 1997, pp.83-88 ld., "Twisted Cross: The Religious Nationalism of the German Christians". Studia Theologica, Scandinavian Journal of Theology 52, 1, (1998), pp.69-79.*

6. *Saddharmalamkraya, Makuluvé SrI Piyartnabhidhna (Kolambam Di Gunasna, 1971), p.550.*

7. *Saddharmalamkraya, p.550*

8. *S. Paranavitana, "Introduction", IC 1, pp.cii.11*

9. *For a critical comment on the source see CvT, p.129, note 4 and R A L H Gunawardana, Robe and Plough. 'Monasticism and Economic Interests in Early Medieval Sri Lanka' (Tucson: The University of Arizona Press, 1979), p.47. The best reading of the Pli is Geiger's given above.*

10. *Dr. Peter.S* இந்த இடத்தில் மூலத்தில் *"two 'm's"* என்று பயன்படுத்துகிறார். இரண்டு *'m'* களும் *mercenar ies, merchants* என்ற சொற்களில் வரும் முதல் எழுத்துகளாகும். அதனால் அந்தப் பகுதியில் 'இரண்டு குழுக்கள்' என்று மொழிபெயர்க்கப்பட்டது.

'Mercenaries' என்ற சொல்லுக்கு எந்தச் சொல் சரியாக அமையும் என்ற கேள்வி எழுந்தது. வரலாற்றுப் புவிச்சூழல் அமைவில், அந்த நேரத்தில் 'துணைப்படை' என்பதே சரியாக இருக்கிறது. தமிழின் ஆறுவகைப் படைகள் இருப்பதாகத் திருவள்ளுவர் படைமாட்சி அதிகாரத்தின் உரையில் பரிமேலழகர் குறிப்பிடுகிறார்.

(சுவடி: *https://www.tamilvu.org/library/suvadi/s210/html/s2100276.htm*). புறப்பொருள் வெண்பா மாலையில் தும்பைத்திணைப் பகுதியில், இது குறிப்பிடப்பட்டிருக்கிறது. தொல்காப்பியத்தின் புறத்திணையியல் சூத்திரங்களில் (சூத்திரம்: 53) உரையாக நச்சினார்க்கினியர், இளம்பூரணர் ஆகியோர் இந்தப் படை வகைகளைக் குறிப்பிட்டுள்ளனர்.

மூலப்படை: இது நாட்டின் மரபாக, தொடர்ந்தும் அரசனுக்கு விசுவாசமாக இருக்கும் முதன்மைப் படையாகும். கூலிப்படை: போர்க்காலங்களில் அந்த நேரத்தில் மட்டும் பணம் அல்லது கூலி கொடுத்துச் சேர்க்கப்படும் படையாகும். நாட்டுப்படை: நாட்டின் குடிமக்களிலிருந்து போர்ப் பயிற்சி கொடுத்துத் திரட்டப்படும் படையாகும். காட்டுப்படை: காடுகளில் வாழும் மறவர்கள் மற்றும் வேடர்களைக் கொண்டு அமைக்கப்படும் படையாகும். இவர்கள் காட்டில் நடக்கும் போர்களில் வல்லவர்கள். துணைப்படை: நட்பு நாட்டு அரசர்கள் போர்க்காலத்தில் உதவிக்காக அனுப்பி வைக்கும் படையாகும். பகைப்படை (மாற்றுப்படை): பகையிடமிருந்து பிரிந்து வந்து தஞ்சம் புகுந்தவர்கள் அல்லது போர்க்கைதிகளாகப் பிடிபட்டுப் பின்னர் அரசனுக்கு ஆதரவாகச் செயல்படும் படையாகும்.

11. *A Veluppillai, "Language variations in Sri Lanka Tamil Inscriptions", Journal of Tamil Studies (1978), p.80 [65-83].*

இந்த மொழிபெயர்ப்பில் பின்வரும் கருவி உதவிகள் பெறப்பெற்றன:

Google (2026) Google Translate [Online tool]. Available at: google.com [Accessed various dates in Aug 2026].

DeepSeek. (2026). DeepSeek (version) [Large language model]. https://www.deepseek.com [Accessed various dates in Aug 2026]

University of Madras. (1924-1936). Tamil Lexicon. Madras: University of Madras.

Winslow, M. (1862). Winslow's a comprehensive Tamil and English dictionary = தமிழ் ஆங்கில அகராதி. *Asian Educational Services.*

பண்டாரநாயக்கவின் எண்ணக்கருவுக்கு 100 வயது: மறுத்த தமிழர்களே சமஷ்டிக்காகப் போராடிய வரலாறு

என்.சரவணன்

35 ஆண்டுகளுக்கு மேலாக எழுத்துப் பணியில் ஈடுபட்டுவருபவர். எழுத்தாளராக, பத்திரிகையாளராக, அரசியல் வரலாற்று ஆய்வாளராக, சமூக அரசியல் செயற்பாட்டாளராக அறியப்படுபவர். தேசியவாதம், மாக்சியம், தலித்தியம், பெண்ணியம், வரலாறு, அரசியல் ஆகிய துறைகளில் தொடர்ச்சியாக எழுதிவருகிறார். மகாவம்சம் தொடர்பான ஆழ்ந்த புலமை உள்ளவர். மகாவம்சத் தொகுதிகளை சிங்களத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்து வருகிறார்.

I

1926 ஆம் ஆண்டு ஜூலை 17ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நிகழ்த்தப்பட்ட அந்த விரிவுரை, ஒரு தனிமைப்பட்ட உணர்ச்சிவசப் பிரகடனமல்ல. அதற்கு முந்தைய ஆறு வாரங்களில் "சிலோன் மோர்னிங் லீடர்" (*The Ceylon Morning Leader*) பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளியான ஆறு கட்டுரைகளின் தர்க்கபூர்வமான உச்சக்கட்டமே அந்த யாழ்ப்பாண விரிவுரை.

மே 19ஆம் திகதி தொடக்கம் ஜூன் 30ஆம் திகதி வரை, ஒவ்வொரு வாரமும் ஒரு கட்டுரை வீதம் எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க எழுதிய அந்த ஆறு கட்டுரைகளும், "சமஷ்டி முறையே இலங்கையின் வெளி உறவுகள் - உள் உறவுகள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு" என்கிற ஒரு மையக் கருத்தை படிப்படியாக நிறுவும் ஓர் அறிவார்ந்த பிரசாரமாக அமைந்திருந்தன.[1] இந்த ஆறு கட்டுரைகளையும் யாழ்ப்பாண உரையையும் இணைத்துப் பார்க்கும் போது, பண்டாரநாயக்க சமஷ்டியை ஏன் "ஒரேயொரு தீர்வு" என அறிவித்தார் என்பதற்கான முழுமையான தர்க்கம் நமக்குக் கிடைக்கின்றது.



S.W.R.D. பண்டாரநாயக்க

Image Source - lankaweb.com

அந்தச் சமஷ்டிப் பிரகடனம் இந்த ஆண்டுடன் 100 ஆண்டுகளை எட்டிவிட்டது.

1926 தொடக்கம் *2026* வரையான இந்த ஒரு நூற்றாண்டுக் காலத்தில் சமஷ்டி எனும் கருத்தாக்கம் இலங்கை அரசியலில் கடந்துவந்த பாதையைத் திரும்பிப் பார்க்கும் போது, அது ஒரு பரிந்துரையின் வரலாறு மாத்திரமல்ல, அதை முதன்முதலில் முன்மொழிந்தவரே பிற்காலத்தில் அதைக் கைவிட்டு எதிர்த்து நின்றதும், அக்கருத்துருவாக்கம் முற்றிலும் துருவமயப்பட்ட எதிர் நிலைக்கு தள்ளியதும், ஒரு துரோகத்தின் வரலாறாகவும் விரிகின்றது.

இலங்கையில் இன்று சமஷ்டி என்கிற சொல் பொதுவெளியில் பேசவே அச்சப்படுகின்ற சொல்லாக நிலைபெற்றிருக்கிறது.

முதலாவது கட்டுரை: ஒத்துழைப்புக்கும் தனித்துவத்துக்கும் இடையிலான போராட்டம்

1926 மே *19*ஆம் திகதி வெளியான முதலாவது கட்டுரையில் பண்டாரநாயக்க ஒரு தத்துவார்த்த அடிப்படையை முன்வைக்கிறார். மனித வரலாற்றில் இரு காரணிகள் தொடர்ந்து மோதிக்கொண்டே இருக்கின்றன என்கிறார். ஒன்று, ஒத்துழைப்பின் அவசியம். மற்றது, தனிமனிதனின் அல்லது தேசத்தின் தனித்துவத்தைக் காப்பதற்கான வேட்கை. ஈசாப்பின் கட்டுக்கதையில் வரும் குச்சிக் கட்டு உவமையை மேற்கோள் காட்டிய அவர், குடும்பமும் இனக்குழுவும் அரசும் உருவானது ஒத்துழைப்பின் தேவையால் தான் என்றும், ஆனால் அதே நேரம் ஒவ்வொரு தனிமனிதனும் தேசமும் தமது "தனித்துவத்தை", அதாவது "தேசியத்தை", காக்க விரும்புகின்றன என்கிறார்.[2] இந்த இரு காரணிகளையும் இணைத்துச் சமன்படுத்தும் ஒரே வழிமுறையே கூட்டாட்சி எனும் அமைப்பு முறை எனும் முடிவுக்கு அவர் வந்தார். "இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட ஒரேயொரு திருப்திகரமான தீர்வு சமஷ்டி முறையே" என்பது அந்த முதல் கட்டுரையின் இறுதி வாக்கியம். பொருளாதார, அரசியல் காரணங்களுக்கு அப்பால், சமஷ்டியை ஒரு தத்துவார்த்த தேவையாக அவர் இங்கு நிறுவியிருந்தார் என்பது கவனிக்கத்தக்கது.

சிறு நாடுகளின் தலைவிதியும் இலங்கையின் பாதுகாப்பின்மையும்

இரண்டாவது கட்டுரையில் (மே *27*) பண்டாரநாயக்க ஒரு கடுமையான யதார்த்தவாதத்தை முன்வைத்தார். சிறு நாடுகள் வரலாற்று ரீதியாக தமது சுதந்திரத்தை காத்துக்கொண்ட நான்கு வழிமுறைகளை அவர் பட்டியலிட்டார். புவியியல் நிலைமை (ஹொலாந்து அணைகள் கட்டி வெள்ளத்தால் பாதுகாத்துக் கொண்டது), சக்திகளின் சமநிலை (சுவிஸ், பெல்ஜியம்), வல்லரசுகளின் உதவி (தென் அமெரிக்க நாடுகள் ஐக்கிய அமெரிக்காவின் காரணமாக), அல்லது இனத் தொடர்பு. இலங்கையைப் பொறுத்தவரையில் இந்த நான்கு பாதுகாப்புக் காரணிகளில் ஒன்று கூட இல்லை என்பதை அவர் தெளிவாக நிறுவினார்.[3] ஐரோப்பாவுக்கும் ஒஸ்திரேலியாவுக்கும் இடையிலான கடல்வழியில் அமைந்த ஒரு முக்கிய துறைமுகமாக இலங்கை இருப்பதால் எந்தக் கடற்படை வல்லரசும் இதை ஒரு வசதியாகவே பார்க்கும் எனவும், பல

சமூகங்களாகப் பிரிந்திருக்கும் இலங்கை மக்கள்தொகை ஓர் அந்நிய ஆக்கிரமிப்பாளருக்கு எளிதான சந்தர்ப்பமாக அமையும் எனவும் அவர் எச்சரித்தார். சுயமாக தன்னைக் காத்துக்கொள்ளும் நான்கு காரணிகளில் ஒன்று கூட இலங்கைக்கு இல்லாத நிலையில், சுயாட்சி பெற்ற பின்னரும் இலங்கை ஏதோவொரு பெரிய கூட்டமைப்பின் ஒரு பகுதியாகவே இருக்க வேண்டும் என்பதே அவரது தர்க்கம். இதுவே அடுத்த மூன்று கட்டுரைகளுக்கான அடிப்படையை அமைத்தது.

மூன்றாவது கட்டுரையில் பண்டாரநாயக்க ஒரு வரலாற்று அவதானிப்பையும் முன்வைத்தார். வெற்றி பெற்ற பேரரசுகள் எல்லாமே இறுதியில் சிதைந்து, அவற்றின் துண்டுகள் மீண்டும் வேறு ஆக்கிரமிப்பாளர்களுக்கு இரையாகும் ஒரு சுழற்சியையே உலக வரலாறு காட்டுகின்றது என்றார். “இலங்கை இதற்கு ஒரு சிறந்த உதாரணம். விஜயனின் வெற்றியால் ஓர் அரசாக உருவான இது, பின்னர் தமிழரின் கைக்கு போயிற்று, மீண்டும் சிங்கள மன்னர்களால் மீட்கப்பட்டது, பின் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரிட்டிஷார் எனத் தொடர்ச்சியாக பேரரசுகளின் ஒரு பகுதியாக மாறியது” என அவர் எழுதினார்.[4] சுயமாக நீடித்த; சுதந்திரத்தை அடைந்த சிறு நாடுகள் அரிதே எனவும், அவையும் விசேட சூழ்நிலைகளின் காரணமாகவே அதை அடைந்தன எனவும் அவர் குறிப்பிட்டார். சுயாட்சி டொமினியன்களாக பிரிட்டிஷ் பேரரசிலிருந்து விடுபடும் கனடா, ஒஸ்திரேலியா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளையும் அவர் “மரத்திலிருந்து மெதுவாகப் பழுத்து, இறுதியில் தாய் மரத்திலிருந்து பிரிந்து விழும் பழங்களுக்கு” ஒப்பிட்டார். பேரரசுகள் நிரந்தரமாக நீடிக்காது என்பதும், அது நடந்தால் இலங்கை தனியாக நிற்க வேண்டிய நிலைமை வரும் என்பதும் அவரது எச்சரிக்கை.

பிரிட்டிஷ் பேரரசும் இனவாதத்தின் சுவரும்

மூன்றாவது (ஜூன் 2), நான்காவது (ஜூன் 9) கட்டுரைகளில் பிரிட்டிஷ் பொதுநலவாய நாடுகளுடன் கூட்டாட்சி அமைவதற்கான சாத்தியத்தை பண்டாரநாயக்க பரிசீலித்தார். ஆனால் அங்கும் ஒரு கடுமையான தடையை அவர் இனங்காட்டுகிறார். 1923ஆம் ஆண்டு ஏகாதிபத்திய மாநாட்டில் (Imperial Conference) கனடா, ஒஸ்திரேலியா, தென்னாபிரிக்கா ஆகிய டொமினியன்களின் தலைவர்கள் இந்தியர்களுக்கு சம குடியுரிமை வழங்க மறுத்த உரைகளை அவர் விரிவாக மேற்கோள் காட்டினார். தென்னாபிரிக்க பிரதமர் ஜெனரல் ஸ்மட்ஸின் வார்த்தைகளை அவர் நேரடியாக எடுத்தாண்டார்: “மேற்கத்திய நாகரிகத்தை வளர்க்கவே நாங்கள் இங்கு இருக்கின்றோம், கீழைத்தேய நாகரிகத்தை வளர்க்க அல்ல” என்று ஸ்மட்ஸ் கூறியிருந்தார்.[5] வெவ்வேறு நாகரிகங்களையும் தரங்களையும் கொண்ட மக்களிடையே எந்தவொரு சமஷ்டியும் சாத்தியமற்றது என்பதே இந்த அனுபவத்திலிருந்து அவர் எடுத்த முடிவு. நிறவெறியின் இந்தச் சுவர் இலங்கையை பிரிட்டிஷ் பொதுநலவாய கூட்டாட்சியிலிருந்து விலக்கி வைத்தது.

1921ஆம் ஆண்டு ஏகாதிபத்திய மாநாட்டில் “பேரரசின் ஒற்றுமைக்காக” இந்தியருக்கு சம குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது - தென்னாபிரிக்கா மாத்திரம் எதிர்த்து வாக்களித்தது. ஆனால் 1923 மாநாட்டில் அந்தத் தீர்மானமும் பலனளிக்கவில்லை என்பதை பண்டாரநாயக்க விரிவாக விளக்கினார். கனடா பிரதமர் மெக்கன்சி கிங், தமது ஒன்பது மாகாணங்களில் எட்டில் இந்தியருக்கு எவ்விதக் குறையும் இல்லை என உறுதியளித்த போதும், மிச்ச 1,200 இந்தியரும் பிரிட்டிஷ் கொலம்பியாவில் தான் வாழ்ந்தனர் என்றும், அங்கு தான் பாகுபாடு இருந்தது என்றும், அதைச் சரிசெய்ய அவரால் இயலவில்லை என்றும் தெரியவந்தது. ஒஸ்திரேலிய பிரதிநிதி பிரூஸ், “புதிய இந்தியர் எவரையும் எங்கள் பிரதேசத்திற்குள் அனுமதிப்பதற்கு எந்த வாய்ப்பும் இல்லை, அது எங்கள் அடிப்படைக் கொள்கைகளுக்கே முரணானது” என பகிரங்கமாக அறிவித்தார்.[6] இந்தியக் குடியேறிகளுக்கு நேர்ந்தது இந்திய வம்சாவளியினரல்லாத நம்மவருக்கும் நேரும் என்பதே பண்டாரநாயக்கவின் எச்சரிக்கை. “பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஒரு சுதந்திர தேசங்களின் கூட்டமைப்பு எனச் சொல்லப்படும் கருத்தாக்கமே ஒரு தவறான புரிதல்” என்று அவர் அதற்குப் பின் தெளிவாக அறிவித்தார். நிற வேறுபாட்டின் அடிப்படையில் டொமினியன்களால் நிராகரிக்கப்படும் ஒரு பேரரசுக்குள் இலங்கை சமஷ்டி அந்தஸ்தைப் பெறுவது சாத்தியமற்றது என்பதே அவரது இறுதி முடிவு. இதனாலேயே அடுத்த கட்டுரையில் அவர் இந்தியா பக்கம் திரும்பினார்.

ஐந்தாவது கட்டுரை: இந்தியாவுடன் சமஷ்டி

இந்த முழுத் தொடரிலும் மிக முக்கியமான, ஆனால் இன்று பெரும்பாலும் மறக்கப்பட்ட கட்டுரை, ஐந்தாவது கட்டுரையே (ஜூன் 23). இங்கு பண்டாரநாயக்க இந்தியாவுடன் இணைந்த ஒரு சமஷ்டிக்குள் இலங்கையை இணைப்பதை தீவிரமாக

முன்மொழிந்தார். புவியியல் ரீதியாக நாம் இந்தியாவுக்கு மிக நெருக்கமான அண்டை நாடு எனவும், இனரீதியாக சிங்களவர் நேரடியாக இந்திய விஜயனிடமிருந்தும் அவரது கூட்டாளிகளிடமிருந்தும் தோன்றினர் எனவும், சிங்கள மொழி பாலிசமஸ்கிருத மூலங்களிலிருந்து பிறந்தது எனவும், பௌத்தம் கூட தேவநம்பியதீசன் காலத்தில் அசோகனின் தூதுவர் மகிந்தர் மூலம் இந்தியாவிலிருந்து வந்தது எனவும் அவர் பட்டியலிட்டார். "தமிழ்ச் சமூகத்தை பொறுத்தவரையில், இந்தியாவுடனான அவர்களின் தொடர்பு வலியுறுத்த வேண்டிய அவசியமே இல்லாத அளவுக்கு வெளிப்படையானது" என அவர் நேரடியாகவே எழுதினார்.[7] சிங்களவருக்கும் தமிழருக்கும் ஒருங்கிணைந்த இந்தியத் தொடர்பே சிறந்தது என்பது அவரது வாதத்தின் மையம். சிங்களவரிடம் காணப்படுகிற இந்தியவிரோதப் போக்கு "பரிச்சயமின்மையால் பிறந்த அறியாமையே தவிர வேறில்லை" என்றும், அந்தப் பாரபட்சம் நாளுக்கு நாள் குறைந்து வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆயினும் உடனடியாக இந்தியச் சமஷ்டியில் இணைவதற்கான நடைமுறைச் சிக்கல்களையும் அவர் ஒப்புக்கொண்டார். இந்தியாவே தனது சொந்த உள்நாட்டுப் பிரச்சினைகளை இன்னும் தீர்க்கவில்லை எனவும், இந்தியா சமஷ்டி முறையை ஏற்குமா என்பது கூட உறுதியில்லை எனவும் அவர் எழுதினார். எனவே உடனடியாக இணைக்காமல், அதை நோக்கிய படிப்படியான நெருக்கத்தை அவர் பரிந்துரைத்தார். இந்தியப் பல்கலைக்கழகங்களில் இலங்கை மாணவர் கல்வி கற்பது, இந்திய இலக்கியமும் வரலாறும் பாடசாலைகளில் கற்பிக்கப்படுவது, இலங்கைத் தேசிய காங்கிரஸும் இந்தியத் தேசிய காங்கிரஸும் பிரதிநிதிகளைப் பரிமாறிக்கொள்வது போன்ற நடைமுறை நடவடிக்கைகளை அவர் முன்மொழிந்தார். ஆனாலும் ஒரு கடுமையான எச்சரிக்கையையும் அவர் இணைத்தார்: "இந்தியாவுடனான நெருக்கம் நமது செயல் சுதந்திரத்தை எவ்வகையிலும் கட்டுப்படுத்துமெனில் அல்லது இந்தியாவுக்கு நாம் எந்த வடிவிலான அடிமைத்தனத்திற்கும் உட்படுத்தப்படுவோமெனில், எந்தச் சூழ்நிலையிலும் அந்த அபாயத்தை நாம் எடுக்கக் கூடாது." சுதந்திரத்தை இழக்காத ஒரு பரஸ்பர பாதுகாப்பு உடன்படிக்கையாகவே அவர் இந்தியச் சமஷ்டியைக் கற்பனை செய்தார்.

இந்தியச் சமஷ்டிப் பரிந்துரையை பண்டாரநாயக்க முன்வைத்த விதத்திலும் ஒரு நுட்பமான உபாய யுத்தி இருந்தது. இலங்கை பிரிட்டிஷ் பொதுநலவாயதிற்குள் இருக்கும் வரை, நிறப் பாகுபாட்டின் சுவர் இலங்கையை எப்போதும் இரண்டாம் தர அங்கத்தவராகவே வைத்திருக்கும் என்பதை அவர் ஏற்கனவே நிறுவிவிட்டார். ஆனால் இந்தியாவுடன் இணைந்த ஒரு சமஷ்டியில், இனரீதியாகவும் பண்பாட்டு ரீதியாகவும் ஒப்பீட்டளவில் சமமான தரப்பினராகவே இலங்கை நிற்கும் என்பதே அவரது கணக்கீடு. "ஒரு தனிமனிதன் ஓர் அரசில் சட்டத்திற்கு உட்பட்டவனாக இருந்தாலும் சுதந்திரமானவனாகவே இருக்கின்றான். அது போலவே ஒரு தேசங்களின் கூட்டமைப்பில் நாமும் இணைந்தால், அது பரஸ்பரப் பாதுகாப்பிற்காகவே தவிர நமது சுதந்திரத்தை தியாகம் செய்வதற்காக அல்ல" என்று அவர் ஐந்தாவது கட்டுரையில் எழுதியிருந்தார். இந்த வாதத்தின் மையம், சமஷ்டி என்பது சுதந்திரத்தை இழப்பதல்ல, மாறாக பாதுகாப்பான சூழலில் அதை பயன்படுத்துவதற்கான வழிமுறை என்பதே.

ஆறாவது கட்டுரை: இடைக்கால ஆணைக்குழு முறை

ஆறாவது, இறுதிக் கட்டுரையில் (ஜூன் 30) பண்டாரநாயக்க ஒரு நடைமுறைச் சிக்கலை எதிர்கொண்டார். இறுதி இலக்காக எந்த வடிவிலான சமஷ்டியைத் தேர்வு செய்தாலும், அதை அடையும் வரையிலான இடைக்காலத்தில் என்ன செய்வது? புரட்சிகர வழிமுறையை (ஆயுதப் போராட்டத்தை) அவர் உடனடியாக நிராகரித்தார். பொது அபிப்பிராயம் மூலம் பிரிட்டிஷாரை வற்புறுத்தும் வழியையும் அவர் நம்பவில்லை. ஏனெனில் "கரையோரச் சிங்களவர், தமிழர், கண்டியர் ஆகிய மூன்று பெரும் சமூகங்களும் தமது அரசியல் கருத்துகளில் நம்பமுடியாத அளவுக்கு வேறுபட்டு நிற்கின்றனர்" என அவர் சுட்டிக்காட்டினார். இந்த உட்பிரிவுகள் இருக்கும் வரை "பொது அபிப்பிராயம்" எனும் சொல்லுக்கே அர்த்தமில்லை என்பது அவரது நிலைப்பாடு.[8] எனவே அவர் லீக் ஒப் நேஷன்ஸ் உடன்படிக்கையின் 22வது பிரிவின் கீழ் இலங்கையை ஒரு "A" வகை ஆணைக்குழு நாடாக மாற்றுமாறு பரிந்துரைத்தார். பிரிட்டிஷாரின் வணிக, தொடர்பு நலன்களை பாதுகாத்தபடியே, ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் இலங்கையைச் சுயாட்சிக்கு கொண்டு செல்லும் ஓர் அமைப்பு முறையாக அவர் இதை முன்வைத்தார். சர்வதேச மேற்பார்வையின் கீழ் படிப்படியான சுயாட்சி என்பதே அவரது இடைக்காலத் தீர்வு. மேலும், ஏகாதிபத்திய அறிவுறுத்தலுக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கும் இடையிலான இழுபறியையும் அவர் பகுப்பாய்வு செய்தார். ஆறாவது கட்டுரையில், சுயாட்சி பெறுவதற்கான வேறு வழிமுறைகளையும் அவர்

நிராகரித்தார். ஆயுதப் புரட்சி வழிமுறையை “எந்தக் காரணத்தாலும் ஒரு கணமும் பரிசீலிக்கக் கூடாத ஒரு விடயம்” என அவர் அறுதியிட்டார். ஐர்லாந்தில் டி வலேரா ஆயுதப் படையின் உதவியுடன் பெற்ற சலுகைகளையும், எகிப்தில் வாள் முனையிலேயே அரசியலமைப்பு பெறப்பட்டதையும் அவர் குறிப்பிட்டாலும், இலங்கைக்கு அது பொருந்தாது என்றார். காந்தியின் செயலற்ற எதிர்ப்பு முறை கூட இந்தியாவில் தோல்வியடைந்தது என்றும், தன்னலம் துறந்து தியாகம் செய்யும் மனநிலை சிலருக்கே இயல்பானது என்றும் அவர் யதார்த்தமாக விமர்சித்தார். பொது அபிப்பிராயம் மூலம் பிரிட்டிஷாரை வற்புறுத்தும் முறையும் மூன்று பெரும் சமூகங்களுக்கிடையிலான பிளவால் பலவீனமடைந்திருந்த நிலையில், லீக் ஒப் நேஷன்ஸ் (*League of Nations*) ஆணைக்குழு முறையே ஒரே நடைமுறைச் சாத்தியமான பாதை என அவர் முடிவு செய்தார்.

யாழ்ப்பாண விரிவுரை: ஆறு கட்டுரைகளின் இறுதி வடிவம்

இந்த ஆறு கட்டுரைகளிலும் விரிவாக்கப்பட்ட தர்க்கங்கள் அனைத்தும் ஒன்று திரண்டு கூர்மைப்பட்ட வடிவமே ஜூலை 17ஆம் திகதி யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் அரங்கில் நிகழ்த்தப்பட்ட விரிவுரை. “அரசியலமைப்பின் திருத்தம் 1928இல் நிகழவிருக்கின்றது, எனவே தற்போதைய தருணத்தின் முக்கியத்துவத்தை முதலில் உணர வேண்டும்” என்று தொடங்கிய அவர், இலங்கையின் பாரம்பரிய ஆட்சி முறைகளையே தனது முதல் வாதமாக முன்வைத்தார். நிந்தகம முறையும் தலையாரிகம் சபாவ (கிராமிய சபை) முறையும் ஏற்கனவே ஒரு தளர்வான சமஷ்டி மாதிரியிலான அமைப்பாகவே செயற்பட்டதாக அவர் விளக்கினார். ஒவ்வொரு கிராமமும் ஓர் அலகாக இருந்து, கம்சபாவ மூலம் தமது சொந்த விவகாரங்களை நிர்வகித்துக்கொண்டு, அரசனுக்கான பொதுக் கடமையை மாத்திரம் நிறைவேற்றிக்கொண்டிருந்தது எனும் இந்த வரலாற்று வாதம், சமஷ்டி என்பது அந்நிய இறக்குமதியல்ல, இலங்கையின் சொந்தப் பாரம்பரியமே என்கிற கருத்தை நிறுவும் முயற்சியாக அமைந்தது.[9] பிரிட்டிஷார் கொண்டுவந்த மையப்படுத்தப்பட்ட ஆட்சி முறையானது இலங்கைக்குப் பொருத்தமற்றது என அவர் விமர்சித்தார். அது “ஒரு சுதந்திர நிறுவனத்தின் தோற்றத்தை”க் கொண்டிருந்தாலும், உண்மையில் இன்று வரை “ஓர் அதிகாரத்துவ ஆட்சி முறையே தவிர வேறில்லை” என்று அவர் கூறினார். இன்னும் சொல்லப்போனால் ஆங்கிலேயர் அறிமுகப்படுத்திய ஒற்றையாட்சி வடிவத்தைத் தான் அவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

அடுத்து, சீர்திருத்தப் போராட்டத்தின் வரலாற்றை அவர் மறு ஆய்வுக்கு உட்படுத்தினார். 1915 கலவரங்கள் வரை பெரிய அளவிலான அரசியல் இயக்கம் தொடங்கவே இல்லை எனவும், சேர் பொன்னம்பலம் இராமநாதனும், அரசியல் மறுசீரமைப்பின் தந்தை என்று விவரிக்கப்பட்ட சேர் பொன்னம்பலம் அருணாசலமும் தேசிய காங்கிரஸ் அமைப்பதில் முன்னிலை வகித்தார்கள் எனவும் அவர் நினைவூட்டினார். தேசிய காங்கிரஸ் தோன்றியபோது அதன் உறுப்பினர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்ட ஓர் உறுதிமொழி இருந்தது: பேரரசுக்குள் சுயாட்சியே தமது இலக்கு என்பதே அது. ஆயினும் சட்டமன்றத்தில் இன்னும் சில ஆசனங்களை அதிகரிப்பதைத் தவிர வேறெதுவும் அந்தப் போராட்டத்தால் சாதிக்க முடியவில்லை என அவர் விமர்சித்தார். சட்டமன்றம் ஒரு பெயரளவு பிரதிநிதித்துவ அமைப்பாக இருந்தாலும், நடைமுறையில் அது முற்றிலும் பயனற்றதாக இருந்தது எனவும், அதன் விளைவே சிங்களதமிழ் பிளவும், கரையோரகண்டிய பிளவும் என அவர் சுட்டிக்காட்டினார்.

இங்கு அவர் ஒரு முக்கியமான வரலாற்று அவதானிப்பையும் முன்வைத்தார். அந்தச் சமூகப் பிளவுகள் “நூறு ஆண்டுகளுக்கு முன் இல்லை” என்றும், அவை “சில லட்சிய உள்நோக்கமுடையவர்களால் உருவாக்கப்பட்டவை” என்றும் அவர் எச்சரித்தார். உண்மையில் தமிழரும், கரையோரச் சிங்களவரும், கண்டியச் சிங்களவரும் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் வாழ்ந்தும், ஒருபோதும் ஒன்றிணைந்த போக்கைக் காட்டவில்லை என்றும், தத்தமது மொழி, பழக்கவழக்கம், மதம் ஆகியவற்றைக் காத்துக்கொண்டே வந்திருக்கின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். “இந்த வேறுபாடுகள் படிப்படியாக மறைந்துவிடும் என நம்புபவர் ஒரு பெரும் துணிச்சல்காரரே” என்பது அவரது நேரடி வார்த்தைகள். இந்த யதார்த்தவாதமே அவரது சமஷ்டித் தீர்வுக்கான அடித்தளமாக அமைந்தது.

மையப்படுத்தப்பட்ட ஆட்சியின் கணிதச் சிக்கல்

யாழ்ப்பாண விரிவுரையில் பண்டாரநாயக்க முன்வைத்த மிகக் கூர்மையான தர்க்க உளவியல் பகுப்பாய்வு, மையப்படுத்தப்பட்ட ஆட்சி முறையில் புதிதாக அறிமுகப்படுத்தப்படவிருந்த அமைச்சரவை முறையின் கணிதச் சிக்கலே. சீர்திருத்தப்பட்ட சட்டமன்றம் தனது பிரதமரையும் அமைச்சர்களையும் தேர்வு செய்யும் போது, சபையில் ஒவ்வொரு சமூகத்திற்கும் ஏற்கனவே ஒரு குறிப்பிட்ட விகிதாசார

பிரதிநிதித்துவம் காக்கப்பட்டிருந்தால், அதே விகிதாசாரத்தை அமைச்சரவையிலும் கோரும் நிலைமை தவிர்க்கமுடியாமல் உருவாகும் என அவர் விளக்கினார். “மையப்படுத்தப்பட்ட ஆட்சி முறை ஓர் ஒருங்கிணைந்த ஒரே இனக்குழுவை முன்கூட்டியே அனுமானித்துக் கொள்கின்றது. இலங்கையைப் போன்ற முரண்பட்ட சூழ்நிலைகளின் கீழ் ஓர் அரசாங்கம் நடத்தப்படுவது போல வேறெந்த இடத்தையும் தான் அறியேன்” என்று அவர் நேரடியாக அறிவித்தார்.[10] இதுவே அவரது முழு விவாதத்தின் மிக நடைமுறைசார்ந்த வாதம். ஓர் ஒற்றை மையத்திலிருந்து ஆளப்படும் அரசில், ஒவ்வொரு நியமனமும், ஒவ்வொரு பட்ஜெட் ஒதுக்கீடும், ஒவ்வொரு கொள்கை முடிவும் சமூக விகிதாசார பேரம் பேசலுக்குள் சிக்கிக்கொள்ளும் என்பதை அவர் முன்கூட்டியே கணித்திருந்தார். சமஷ்டி முறையில் அந்தப் பேரம் பேசல் தேவைப்படாது - ஒவ்வொரு சமூகமும் தனது சொந்த மாகாணத்தில் சுயமாக நிர்வகித்துக் கொள்ளும், மத்திய சபை வெளியுறவு, பாதுகாப்பு போன்ற சில பொதுவான விடயங்களை மாத்திரம் கையாளும்.

சுவிஸ் மாதிரியும் ஒன்பது மாகாணத் திட்டமும்

மையப்படுத்தப்பட்ட ஆட்சி முறையின் தோல்விகளை விரிவாக விளக்கிய பின், பண்டாரநாயக்க சமஷ்டி வடிவை முன்வைத்தார். “சமஷ்டி ஆட்சியில் ஒவ்வொரு அலகும் தன்னளவில் முழுமையான அதிகாரம் கொண்டிருக்கும், ஆயினும் ஒன்றிணைந்து, முழு நாட்டையும் பாதிக்கும் விடயங்களை கலந்தாலோசிக்க ஒன்று அல்லது இரண்டு சட்டமன்றங்களை கொண்டிருக்கும்” என அவர் விளக்கினார். ஐக்கிய அமெரிக்கா, ஒஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, கனடா ஆகிய அனைத்து சுயாட்சி டொமினியன்களும் இதே முறையைப் பின்பற்றுவதாக அவர் சுட்டிக்காட்டினார். ஆனால் இலங்கைக்கு மிக நெருக்கமான உதாரணமாக அவர் குறிப்பிட்டது சுவிஸ்நாடே. “ஒரு சிறு நாடாக இருந்தும் மூன்று இனங்கள் - பிரெஞ்சு, ஜேர்மன், இத்தாலியன் - அங்கு வாழ்கின்றனர். ஆயினும் சுவிஸ்நாட்டில் சமஷ்டி முறை மிகச் சிறப்பாக வெற்றி பெற்றிருக்கின்றது. ஒவ்வொரு மாநிலமும் தனது சொந்த விவகாரங்களை நிர்வகிக்கின்றது. ஆனால் வெளியுறவு, வர்த்தகம், பாதுகாப்பு போன்ற பொதுவான, சர்ச்சைக்குரிய விடயங்கள் மாத்திரம் கூட்டமைப்புச் சபையால் கையாளப்படுகின்றன” என அவர் நேரடியாக விளக்கினார்.[11] இது குறிப்பிடத்தக்கது - லியோனார்ட் உல்ப் 1938இல் தொழிலாளர் கட்சிக்குச் சமர்ப்பித்த குறிப்பாணையில் இதே சுவிஸ் ஒப்பீட்டைப் பயன்படுத்துவதற்கு பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே, பண்டாரநாயக்க தமது சொந்த யாழ்ப்பாண விரிவுரையிலேயே சுவிஸ் மாதிரியைப் பெயரிட்டுக் குறிப்பிட்டிருந்தார்.

இதன் அடிப்படையில், “இலங்கையின் ஒவ்வொரு மாகாணமும் முழுமையான சுயாட்சி பெற வேண்டும். தீவின் விசேட வருவாயைக் கையாள ஒன்று அல்லது இரண்டு சட்டமன்றங்கள் இருக்க வேண்டும்” என்று அவர் தெளிவாக முன்மொழிந்தார். சிறு சமூகங்களுக்கு, குறிப்பாக பயம் நிலவும் வரை, தற்காலிக விசேட பிரதிநிதித்துவ ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்றும், கொழும்பு தமிழர் தொகுதிக்கும் இதே கொள்கை பொருந்தும் என்றும் அவர் குறிப்பிட்டார். தீவின் மூன்று பிரதான பிரிவுகளாக கண்டியச் சிங்களவர், கரையோரச் சிங்களவர், தமிழர் ஆகியோரை அவர் அடையாளம் காட்டினார். “எல்லோரையும் முழுமையாகத் திருப்திப்படுத்தும் ஓர் அமைப்பு முறையை கண்டுபிடிப்பது கடினம். பிரச்சினை இருக்கின்றது என்பதை அங்கீகரிப்பதிலேயே அவர் திருப்தி அடைவார். இதற்குச் சிறந்ததொரு திட்டம் இருந்தால் அதை யாரேனும் மக்களுக்கு முன் கொண்டுவர வேண்டும் என அவர் நம்பினார்” என்பதே அன்றைய அறிக்கையின் இறுதி வரிகள்.

ஏன் இது தமிழருக்கு முக்கியமானதாக இருந்தது?

இந்த முழு வாதமும் தமிழருக்கு நேரடியாக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது என்பதற்குப் பல காரணங்கள் உண்டு. முதலாவதாக, இது யாழ்ப்பாணத்தில், தமிழ் மாணவர் காங்கிரசின் அழைப்பின் பேரில், தமிழ் அறிஞர் கலாநிதி ஐசக் தம்பையா தலைமையில் நிகழ்த்தப்பட்ட உரை. இரண்டாவதாக, பண்டாரநாயக்க முன்வைத்த தர்க்கம் வெறும் கோட்பாட்டு வாதமல்ல - கரையோரச் சிங்களவர் எண்ணிக்கை மேலாதிக்கத்தால் மற்ற இரு சமூகங்களும் அரசியல் ரீதியாக ஒடுக்கப்படும் அபாயத்தை அவர் நேரடியாக எச்சரித்தார். மையப்படுத்தப்பட்ட ஆட்சியில் பெரும்பான்மையின் அடிப்படையில் அமைச்சரவை உருவாகும் போது, ஒவ்வொரு சமூகமும் தமக்கான விகிதாசார பிரதிநிதித்துவத்தைக் கோரும் எனவும், இது தொடர்ச்சியான மோதலுக்கே வழிவகுக்கும் எனவும் அவர் தெளிவாக விளக்கினார். சமஷ்டி முறையில் ஒவ்வொரு சமூகமும் தனது சொந்த மாகாணத்தில் பெரும்பான்மையாக இருந்து தன்னாட்சியுடன் இயங்கும் - இதுவே தமிழருக்கு அவர் வழங்க முயன்ற உறுதிமொழி.

நான்காவதாக, பண்டாரநாயக்கவின் திட்டம்

பொருளாதார ரீதியாகவும் தமிழருக்கு ஒரு பாதுகாப்பை உறுதியளித்தது. வளங்கள் குறைந்த மாகாணங்கள் நிர்வாகத்தை நடத்த முடியாத நிலைமை ஏற்படலாம் என்று அரங்கில் இருந்த ஜே.எச்.பி. வீரசிங்கம் எழுப்பிய கேள்விக்கு நேரடியாகப் பதிலளிக்காவிட்டாலும், பொதுவான நிதியை உதவி தேவைப்படும் மாகாணங்களுக்கு இடையே பகிர்ந்து கொள்ளலாம் என்று பண்டாரநாயக்க பதிலளித்திருந்தார். இது இன்றைய மாகாண சபை நிதி ஒதுக்கீட்டு விவாதங்களுக்கு கூட ஒரு முன்னோடி மாதிரியாகப் பார்க்கத்தக்கது. ஐந்தாவதாக, மதம், சாதி போன்ற பிரச்சினைகளையும் அவர் நேரடியாக எதிர்கொண்டார். “மதம் தொடர்பான கேள்வி சட்டமூலத்தால் தீர்க்கக்கூடிய ஒன்றல்ல” என அவர் ஒப்புக்கொண்ட போதும், நிதி ஏற்றத்தாழ்வும் கல்வி வாய்ப்புகளும் தான் மிகக் கடுமையான ஆட்சேபனைகள் என ஏற்றுக்கொண்டார். இந்த நேர்மையான ஒப்புதல்களே அவரது வாதத்தை வெறும் பிரசாரமாக இல்லாமல், ஓர் உண்மையான அரசியல் விவாதமாக ஆக்கியது.

மூன்றாவதாக, தமிழரின் தனித்துவ அடையாளத்தை “படிப்படியாக மறைந்துவிடும் ஒரு தற்காலிக கட்டம்” எனப் பார்க்காமல், ஆயிரம் ஆண்டுகளாக நிலைத்திருந்த ஒரு நிரந்தர வரலாற்று உண்மையென அவர் அங்கீகரித்தார். இந்த அங்கீகாரமே, பிற்காலத்தில் அதே பண்டாரநாயக்க முற்றிலும் மாறுபட்ட நிலைப்பாட்டை எடுக்க இருந்தார் என்பதோடு ஒப்பிடும் போது, மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது. 1926இல் அவர் சொன்ன வார்த்தைகள் 1956இல் அவரே செய்த செயல்களுக்கு முற்றிலும் நேர்மாறானவை. ஆனால் அந்த முரண்பாட்டைக் காண்பதற்கு முன், அன்று யாழ்ப்பாணத்தில் அந்த அரங்கிலிருந்த தமிழ் மக்களே அவரது திட்டத்தை ஏற்காமல் தமது சொந்த ஆட்சேபனைகளை முன்வைத்தார்கள் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அதைத் தனியாகப் பார்ப்போம்.

இறுதியாக, யாழ்ப்பாண அரங்கில் நடந்த கேள்வி பதில் நேரமே இந்த முழு உரையின் மிக நேர்மையான தருணம். பண்டாரநாயக்கவின் திட்டத்தைப் பாராட்டியோ எதிர்த்தோ பேசிய ஒவ்வொருவரும் பெயர் குறிப்பிட்டுப் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். இது தமிழர் அன்று இந்த யோசனையை செயலற்று வெறுமனே கேட்டுக்கொண்டிருக்கவில்லை, மாறாக ஒவ்வொரு கோணத்திலும் தீவிரமாக ஆராய்ந்தார்கள் என்பதற்கான சான்று. அந்த விவாதத்தின் விவரங்களும், அதன் இறுதியில் பெரும்பான்மையான தமிழர் எட்டிய முடிவும் தனியாகப் பார்க்கப்பட வேண்டியவை.

பண்டாரநாயக்கவின் இந்த ஆறு கட்டுரைகளும், யாழ்ப்பாண விரிவுரையும் சேர்ந்து நமக்குக் காட்டுவது என்னவெனில், சமஷ்டி எனும் கோரிக்கை ஒரு தமிழ் அரசியல் தந்திரோபாயமாக அதன்பின் உருவானதல்ல. அது 1926இலேயே, ஓர் இளம் சிங்கள பௌத்த அறிவாளியால், தத்துவார்த்த அடிப்படையிலும், புவிசார் யதார்த்தவாத அடிப்படையிலும், வரலாற்று ஆதாரத்தின் அடிப்படையிலும் விரிவாக நிறுவப்பட்ட ஓர் அரசியல் திட்டமாக இருந்தது. அதை முன்வைத்தவரே பிற்காலத்தில் அதைக் கைவிட்டு எதிர்த்து நின்றார் என்பதும், அதை நிராகரித்த தமிழரே இருபது ஆண்டுகளுக்குள் அதைத் தமது சொந்தக் கட்சியின் பெயராகவே சூடிக்கொண்டார்கள் என்பதும்; இந்த நூற்றாண்டு நீண்ட கதையின் இரு பெரும் முரண்கள்.

II

சிங்களவர் தந்ததும் தமிழர்கள் மறுத்ததும்: தலைகீழாய் மாறிய வரலாறு

1926 ஜூலை 17ஆம் திகதி இரவு, யாழ்ப்பாணத்தில் பண்டாரநாயக்கவின் உரை முடிந்தவுடன் நடந்தது ஒரு சாதாரண நன்றி பாராட்டும் நிகழ்வல்ல. “ஓர் உயிர்ப்பான விவாதம் அங்கே நடைபெற்றது” என்று அன்றைய செய்தி நிருபரே பதிவு செய்திருக்கிறார். அந்த விவாதத்தில் பங்கெடுத்த ஒவ்வொரு தமிழ்ப் பார்வையாளரும் பெயர் குறிப்பிட்டுப் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். இதுவே அந்த இரவின் மிக முக்கியமான வரலாற்றுப் பதிவு. ஏனெனில் பண்டாரநாயக்க முன்வைத்த சமஷ்டித் திட்டத்தை அன்று யாழ்ப்பாண மாணவர் அரங்கிலிருந்த தமிழர் பெரும்பாலும் ஏற்கவில்லை என்பதை அந்தப் பெயர் பட்டியலே நமக்கு நிரூபிக்கின்றது.[12] சமஷ்டி என்பது தமிழரால் உருவாக்கப்பட்ட கோரிக்கை அல்ல, மாறாக சிங்கள பௌத்தத் தலைவரால் அவர்களுக்கு முன்வைக்கப்பட்ட ஒரு யோசனை; அதை அங்கிருந்த அந்தத் தமிழர்களே அன்று மறுத்தார்கள் ஆகிய இந்த இரட்டை உண்மையைப் புரிந்துகொள்வதே இந்த நூற்றாண்டு முழுவதும் நீண்ட கதையின் மையம்.

ஆறு பெயர்கள், ஆறு ஆட்சேபனைகள்

முதலில் எழுந்தவர் ஜே.கே. சண்முகம். இலங்கையின் பண்டைய வரலாற்றில் கூட்டாட்சி முறை எப்படிச் செயற்பட்டது என்பதைத் தான் புரிந்துகொள்ளவில்லை என்றும், தவறான எண்ணங்கள் ஆதிக்கம் செலுத்தும் இன்றைய சூழலில் அந்த முறை திருப்திகரமாகச் செயற்படுமா என்பதில் சந்தேகம் இருப்பதாகவும் அவர் கூறினார். தனது வாதத்திற்கு ஆதாரமாக, சேர் பொன்னம்பலம் அருணாசலம் கொழும்பு தொகுதிக்கு

போட்டியிட முற்பட்டபோது அவர் நடத்தப்பட்ட விதத்தையும், அரசாங்கச் சபைக்கான துணைத்தலைவர் தேர்தலில் சேர் இராமநாதன் நடத்தப்பட்ட விதத்தையும் அவர் நினைவூட்டினார். சமூக பிரதிநிதித்துவ அமைப்பே ஏற்கனவே பாரபட்சமாக செயற்படும் போது, சமஷ்டி முறை புதிதாக என்ன மாற்றத்தைத் தரும் என்பதே அவரது மறைமுக கேள்வி.

சுப்பையா என்பவர், சமஷ்டி அரசாங்கச் சபைக்குள்ளும் கூட வேறுபாடுகள் தலைதூக்கும் என்று எளிமையாகவும் ஆழமாகவும் சுட்டிக்காட்டினார். ஜூலியஸ் பிலிப்ஸ் என்பவர் ஓர் இனம் மட்டும் மிகுதியாக இருக்கும் மாகாணங்களில் சமஷ்டி முறை நன்றாகச் செயற்படலாம், ஆனால் மேல் மாகாணத்தில் (Western Province) கொழும்பையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் உள்ளடக்கிய, பல்லின மக்கள்தொகை கொண்ட பிரதேசத்தை எப்படிக் கையாள்வது என வினவினார். இந்தக் கேள்வி இன்றும் பொருத்தமானதே. கொழும்பு போன்ற பல்லின நகரங்களை எந்த மாகாணத்தில் இணைப்பது என்பது இன்றைய அதிகாரப் பரவலாக்க விவாதங்களிலும் தீராத ஒரு சிக்கலாகவே உள்ளது. ஜே.எச்.பி. விஜயரத்தினம் நிதி வளங்கள் குறைந்த மாகாணங்கள் நிர்வாகத்தை நடத்த முடியாத நிலைமையைச் சுட்டிக்காட்டினார்.

சி. பிலிப்ஸ் என்பவர் இரண்டு கடுமையான கேள்விகளை எழுப்பினார். மதம், சாதி தொடர்பான தகராறுகள் எப்படித் தீர்க்கப்படும்? வட இலங்கையில் இவை குறிப்பாக தீவிரமானவை என்றும், மூன்று பெரும் சமூகங்களுக்கிடையே தகராறு எழுந்தால் யார் அதைத் தீர்மானிப்பார்கள் என்றும், எண்ணிக்கையின் அடிப்படையில் கரையோரச் சிங்களவரே எளிதாக மேலோங்கி விடுவார்கள் என்றும் அவர் எச்சரித்தார். ஆர். சுப்பிரமணியம் சிறு சமூகங்கள் புறக்கணிக்கப்படக் கூடாது என வலியுறுத்தினார். இறுதியாக, பைலி மைல்வாகனம் என்பவர் மிகக் கடுமையான, ஆனால் யதார்த்தமான, ஓர் அறிக்கையை முன்வைத்தார்: “இந்த நிலைமைகளின் கீழ் பிரிட்டிஷாரின் கீழேயே இருப்பது பாதுகாப்பானது” என்று அவர் நேரடியாகக் கூறினார். சுயாட்சியைக் காட்டிலும் பாதுகாப்பான குடியுரிமையையே மக்கள் தேர்வு செய்வர் என்பதே அந்த வாக்கியத்தின் அர்த்தம்.

பண்டாரநாயக்கவின் பதிலும், அதன் வரம்புகளும்

இந்த ஆட்சேபனைகளுக்கு பண்டாரநாயக்க பதிலளித்த விதம் அவரது நேர்மையையும், அதே நேரம் அவரது தீர்வின் வரம்புகளையும் காட்டுகின்றது. மத விவகாரங்களை சட்டமூலத்தால் தீர்க்க முடியாது என அவர் நேரடியாக ஒப்புக்கொண்டார். நிதி ஏற்றத்தாழ்வும் கல்வி வாய்ப்பு வேறுபாடும் தான் பெரிய எதிர்பார்ப்புகள் என ஏற்றுக்கொண்ட அவர், உதவி தேவைப்படும் மாகாணங்களுக்கு பொது நிதியிலிருந்து பகிர்ந்தளிக்கலாம் எனப் பரிந்துரைத்தார். ஆனால் மேல் மாகாணம் போன்ற பல்லினப் பிரதேசங்கள் தொடர்பான கேள்விக்கு அவரால் ஓர் உறுதியான பதில் தர முடியவில்லை. ஏற்கனவே தெரிவித்தபடி, சிறு சமூகங்களுக்கு தற்காலிக விசேட பிரதிநிதித்துவம் என்ற பொதுவான பதிலையே அவர் மீண்டும் கூறினார். ஆனால் அவரது இறுதி வாக்கியமே மிக முக்கியமானது: “எல்லோரையும் முழுமையாகத் திருப்தி்ப்படுத்தும் ஓர் அமைப்பு முறையைக் கண்டுபிடிப்பது கடினம். பிரச்சினை இருக்கின்றது என்பதை அங்கீகரிப்பதுடன் திருப்தி அடைவர்” என்று ஒரு செய்தி பதிவு செய்யப்பட்டது.[13] வேறு வார்த்தைகளில் சொல்வதானால், அவரிடம் ஒரு முழுமையான தீர்வு இருக்கவில்லை. அவர் முன்வைத்தது ஒரு கட்டமைப்பே தவிர, ஒவ்வொரு நடைமுறைச் சிக்கலுக்கும் தயார் நிலையிலான பதில்கள் அல்ல.

ஐசக் தம்பையாவின் மலாயா ஆலோசனை

அன்றைய கூட்டத்தில் தலைமை தாங்கிய கலாநிதி ஐசக் தம்பையா தனது இறுதி உரையில் ஒரு நடைமுறை ஆலோசனையை முன்வைத்தார். “பிரிட்டிஷ் மலாயாவே சமஷ்டி முறை நன்றாக இயங்குகிற ஒரே இடம் என்று நான் அறிவேன்” என்று அவர் கூறினார். யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் உள்ள சிந்தனையாளர் தலைவர்கள் மலாயாவுக்குப் பயணம் செய்து, அங்கு நேரடியாகக் கண்டு, தமது கருத்துகளை வகுத்துக்கொள்ள வேண்டும் என அவர் பரிந்துரைத்தார். உரை “வலிமையாக நிகழ்த்தப்பட்டு, நியாயமான முறையில் சிந்திக்கப்பட்டிருந்தது” எனவும், இது பெரும் ஆர்வத்தை உருவாக்கும் எனவும் அவர் பாராட்டினார்.[14] ஆயினும் அவரது ஆலோசனையே ஒரு மறைமுகச் செய்தியைத் தாங்கியிருந்தது. கோட்பாட்டளவில் கவர்ச்சிகரமான இந்த யோசனையை நடைமுறையில் பரிசோதிக்காமல் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதே அது. அன்று அரங்கில் இருந்த யாருமே “ஆம், இதை நாம் இப்போதே ஏற்போம்” என்று சொல்லவில்லை என்பதை உணர முடிகிறது.

இந்த ஆறு ஆட்சேபனைகளையும் இன்றைய கண்ணோட்டத்தில் மீள வாசிக்கும் போது, அவை வெறும் பொறுப்பற்ற கருத்துகள் அல்ல, கட்டமைப்பு

பற்றிய ஆழமான கேள்விகள் என்பது தெளிவாகின்றது. நிர்வாகத் திறன், நிதிச் சுயசார்பு, பல்லின நகர்ப்புற முகாமை, சிறுபான்மை உரிமைகள் பாதுகாப்பு என இவை ஒவ்வொன்றும் இன்று உலகெங்கும் கூட்டாட்சி முறைகளை வடிவமைக்கும் போது எழும் அதே கேள்விகளே. 1926ஆம் ஆண்டு ஒரு காலனித்துவ சிற்றூரின் மாணவர் அரங்கில் இந்த அளவு நுணுக்கமான அரசியலமைப்பு பகுப்பாய்வு நடந்தேறியது என்பதே வியப்பூட்டும் ஒரு வரலாற்று உண்மை.

யாழ்ப்பாண மாணவர் காங்கிரசின் நிறுவன ரீதியான மறுப்பு

அந்த இரவின் தனிநபர் ஆட்சேபனைகளுக்கு அப்பால், யாழ்ப்பாண மாணவர் காங்கிரசே (பின்னர் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் என பெயர் மாற்றப்பட்டது) ஒரு நிறுவன ரீதியான நிலைப்பாட்டை எடுத்தது என்பது இன்றைய வரலாற்றாசிரியர்கள் பதிவு செய்கிற முக்கிய கருத்து. பண்டாரநாயக்கவின் சமஷ்டி முன்மொழிவை ஆதரிக்குமாறு பண்டாரநாயக்க விடுத்த வேண்டுகோளை மாணவர் காங்கிரஸ் நிராகரித்தது என இன்றைய ஆய்வுக் கட்டுரைகள் தெளிவாகப் பதிவு செய்கின்றன.[15] இந்தியத் தேசிய இயக்கத்தால் ஈர்க்கப்பட்ட, மதச்சார்பற்ற, சாதி ஒழிப்பை நாடிய, முழு

ஜேம்ஸ். ரி. இரத்தினம்

Image Source - thuppahis.com

சுயராஜ்யத்தை இலக்காகக் கொண்ட அந்த இளம் தமிழ் அறிவுஜீவிகள் இயக்கம், ஒரு பிரிவினைவாத அல்லது இனவாத அமைப்பாக ஒருபோதும் இருந்ததில்லை. மாறாக, ஓர் ஒருங்கிணைந்த, மதச்சார்பற்ற இலங்கைத் தேசியத்தையே அது கனவு கண்டது. அத்தகைய ஓர் இயக்கத்திற்கு, சமூக ரீதியாகப் பிரிக்கப்பட்ட மாகாணங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமஷ்டித் திட்டம், தேசிய ஒற்றுமைக்கு எதிரான ஒரு படிநிலையாகவே தோன்றியிருக்கக்கூடும். காந்தியையும் நேருவையும் முன்மாதிரியாகக் கொண்ட அந்த இளைஞர் இயக்கம், இந்தியத் தேசிய காங்கிரசைப் போலவே, சமூகப் பிரிவினைகளைக் கடந்த ஒரு பொதுத் தேசியத்தையே விரும்பியது.

முற்போக்குத் தேசியவாதிகள் கட்சியும், ஜேம்ஸ் ரத்னமும், அவரது எதிர்வினையும்

அரங்கில் நேரடியாகப் பேசாவிட்டாலும், பண்டாரநாயக்கவின் மிக நெருக்கமான ஆரம்பகால அரசியல் கூட்டாளியும், அவர் தலைமையிலான அதே கட்சியின் இணை நிறுவனருமான ஜேம்ஸ் தேவதாசன் ரத்னமே தமிழ்த் தரப்பின் மிக ஆழமான, மிக விரிவான எதிர்ப்பை பதிவு செய்திருந்தார். அதுவும் கட்சிக்குள்ளேயே, பண்டாரநாயக்க தலைமை தாங்கிய ஒரு கூட்டத்திலேயே அவ்வெதிர்ப்பை அவர் வெளிப்படுத்தினார். 1925இல் பண்டாரநாயக்கவுடன் சேர்ந்து முற்போக்கு தேசியவாதிகள் கட்சியை (*Progressive Nationalist Party*) இரத்தினம் நிறுவினார். ஆர்.எஸ். எஸ். குணவர்தன, சி. பொன்னம்பலம் (கட்சியின் முதலாவது செயலாளர், பின்னர் யாழ்ப்பாண மேயராக பதவி வகித்தவர்), ஏ.ஜே.எம். டி சில்வா, ஏ. டி பொன்சேகா, டி.என்.டபிள்யூ. டி சில்வா, எம்.டி. விஜேசிங்க ஆகியோர் இக்கட்சியின் ஏனைய ஸ்தாபக உறுப்பினர்களாக இருந்தனர். “நமது தேசிய கௌரவத்திற்குப் பொருத்தமான, நடைமுறையில் திருப்திகரமான ஒரு சுயாட்சி வடிவத்தை” அடைவதே தமது இலக்கு என அந்தக் கட்சி தன்னை “இலங்கை இளைஞர்களின் முன்னேற்றக் கட்சி” என அறிவித்துக்கொண்டது.[16] இந்தக் கட்சியின் முதலாவது செயலாளரே ஒரு தமிழர் (சி. பொன்னம்பலம்) என்பதும், அவர் பின்னர் யாழ்ப்பாண மேயராக இருந்தார் என்பதும் இன்று பெரும்பாலும் மறக்கப்பட்ட ஒரு விவரம். பண்டாரநாயக்கவின் இளமைக்கால அரசியல் திட்டத்தில் தமிழர் வெறும் பார்வையாளராக இராமல் நிறுவன ரீதியாகவே பங்குகொண்டிருந்தனர் என்பதை இது நிரூபிக்கின்றது.

ரத்தினம் தொடக்கத்தில் பண்டாரநாயக்கவின் தீவிர அபிமானியாகவே இருந்தார். பண்டாரநாயக்க வை. எம்.சி.ஏவில் நிகழ்த்திய முதலாவது பொது உரையின் போது, நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்த ரத்னமே அவரை “இளம் இலங்கையின் நம்பிக்கை” (*The hope of young Ceylon*) எனப் பாராட்டியிருந்தார். ஆயினும் அதே கட்சிக்குள் விரைவில் ஒரு கடுமையான உடைவு ஏற்பட்டது.

இதை ரத்தினமே தமது சொந்த வார்த்தைகளில் பதிவு செய்துள்ளார்: "விரைவிலேயே நான் பண்டாரநாயக்கவுடன் கருத்து வேறுபாடு கொள்ள ஆரம்பித்தேன். ஏனெனில் முற்போக்குத் தேசியவாதிகள் கட்சியில் பண்டாரநாயக்க ஓர் அடிப்படைக் கொள்கையைச் (இலங்கைக்கு சமஷ்டி ஆட்சி முறைக்காகப் பிரசாரம் செய்வதை) சேர்த்திருந்தார். 1926 மே, ஜூன் மாதங்களில் சமஷ்டிக் கருத்தை உயர்த்திப்பிடித்து அவர் பத்திரிகைகளில் கட்டுரைத் தொடர் எழுதியிருந்தார்.

நான் அந்த விவாதத்தில் அவருடன் இணைந்து, ஒரு நீண்ட கடிதம் மூலம் அவரை எதிர்த்தேன். இது சிலோன் மோர்னிங் லீடரில் ஜூலை 1926இல் வெளியானது. முற்போக்குத் தேசியவாதிகள் கட்சியின் யாப்பை வரைவு செய்யும் குழுவின் உறுப்பினராக நான் இருந்தேன், ஆனால் சமஷ்டி முறையை எதிர்த்து பொதுவான இலக்கிலிருந்தே நான் மாறுபட்டு நின்றேன். அறிக்கை விவாதிக்கப்பட்ட கூட்டத்தில் எனது கருத்து வேறுபாட்டை, அது கட்சியின் அடிப்படைக் கொள்கைக்கு எதிரானது என அறிவித்து, தலைவர் பண்டாரநாயக்க 'ஒழுங்கு மீறல்' எனத் தள்ளுபடி செய்தார்" என்று இரத்தினம் பதிவு செய்துள்ளார்.[17] இந்த ஒரு பத்தியே பண்டாரநாயக்கவின் சமஷ்டிப் பிரசாரத்தின் மறுபக்கத்தை நமக்குக் காட்டுகின்றது.

கட்சிக்குள்ளேயே ஒரு தமிழ் உறுப்பினரின் கருத்து வேறுபாட்டை, கட்சித் தலைவரே "அடிப்படைக் கொள்கைக்கு எதிரானது" என அறிவித்து ஒழுங்கு விதி மூலம் தடுத்து நிறுத்தினார் என்பது, பண்டாரநாயக்கவின் சமஷ்டி வாதம் எவ்வளவு உறுதியானதாக இருந்தது என்பதையும், அதே நேரம் அவர் உள்கட்சி விமர்சனத்தை எப்படிக் கையாண்டார் என்பதையும் வெளிப்படுத்துகின்றது. இந்தக் கருத்து வேறுபாடு தனிமைப்பட்ட ஒரு விவகாரமாக நீடிக்கவில்லை. இறுதியில் இருவருக்குமிடையிலான உறவு முற்றிலும் முறிந்தது. அதுவும் சமஷ்டிப் பிரச்சினையால் அல்ல, மாறாக ஒரு தேர்தல் மோதலால். ரத்னத்தின் அரசியல் குருவாக அவர் கருதிய தொழிற்சங்கத் தலைவர் ஏ.ஈ. குணசிங்கவுக்கு எதிராக, ஆர்.எஸ்.எஸ். குணவர்தனவின் ஆதரவுடன் பண்டாரநாயக்க மருதானை தொகுதியில் போட்டியிட்ட போது, ரத்னத்திற்கு வேறு வழியில்லாமல் போனது. தனது குருவுக்கு விசுவாசமாக இருப்பதைத் தவிர அவருக்கு வேறு தெரிவு இருக்கவில்லை என அவரே பதிவு செய்துள்ளார். இதன் பின் இரு பழைய கூட்டாளிகளும் அரசியல் ரீதியாக நிரந்தரமாகப் பிரிந்தார்கள்.

டொனமூர் ஆணைக்குழுவின் மூன்று காரணங்கள்

1927ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பை வடிவமைக்க அனுப்பப்பட்ட டொனமூர் ஆணைக்குழுவின் முன்னும் இதே பாணி நிலைப்பாடே தமிழ் தரப்பிலிருந்து மீண்டும் வெளிப்பட்டது. கண்டி தேசிய சங்கமும் பண்டாரநாயக்கவும் தனித்தனியே சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்த போதும், அந்த ஆணைக்குழு அதனை மூன்று காரணங்களுக்காக நிராகரித்தது. முதலாவது, தமிழர் தரப்பில் எவரும் சமஷ்டியைக் கோரவில்லை. இரண்டாவது, சமஷ்டியை முன்வைத்தவர்கள் ஒரு சிறு கோஷ்டியே. மூன்றாவது, பெரும்பான்மைச் சிங்களத் தலைவர்கள் தேசிய காங்கிரஸ் எனும் பலமான அமைப்பின் மூலம் ஓர் ஒற்றையாட்சி டொமினியன் அந்தஸ்தையே கோரியிருந்தார்கள்.[18] இந்த மூன்று காரணங்களில் முதலாவதே மிக முக்கியமானது. சமஷ்டியைக் கோரி ஆணைக்குழு முன் நின்று வாதாடும் வாய்ப்பு தமிழருக்கு இருந்தும், அவர்கள் அதைப் பயன்படுத்தவில்லை. தமக்கு ஏற்கனவே கிடைத்திருந்த அரசியலமைப்புக் கட்டமைப்புக்குள்ளேயே நியாயம் கிடைக்கும் என்கிற நம்பிக்கையிலேயே தமிழ் மக்கள் தமது அரசியலை அப்போது முன்னெடுத்தார்கள்.

கொழும்பு தமிழர் தொகுதியும் ஒரு மறக்கப்பட்ட விவரமும்

யாழ்ப்பாண உரையில் பண்டாரநாயக்க குறிப்பிட்ட ஒரு சிறிய, ஆனால் முக்கியமான விவரத்தை பின்னாளைய வரலாற்று விமர்சனங்கள் பெரும்பாலும் கவனிக்காமல் விட்டுவிடுகின்றன. கொழும்பு போன்ற பல்லின நகரங்களில் வாழும் தமிழருக்கு விசேட பிரதிநிதித்துவம் தேவைப்படும் என்பதை அவர் ஏற்கனவே 1926இலேயே அங்கீகரித்திருந்தார். "கொழும்பு தமிழர் தொகுதிக்கும் இதே கொள்கையைப் பரிந்துரைப்பேன்" என அவர் நேரடியாகவே கூறியிருந்தார்.[19] இது காட்டுவது என்னவெனில், பண்டாரநாயக்கவின் திட்டம் வெறும் புவியியல் மாகாணப் பிரிவினையாக மாத்திரம் இல்லாமல், பல்லின நகர்ப்புற மக்கள்தொகைக்கும் ஏற்ற வகையில் நெகிழ்வுத்தன்மை கொண்டதாக இருந்தது. ஜூலியஸ் பிலிப்ஸ் எழுப்பிய மேல் மாகாண கேள்விக்கு இதுவே அவரது பதிலின் மையம். தூய புவியியல் எல்லைகளை மாத்திரம் அடிப்படையாகக் கொள்ளாமல், குறிப்பிட்ட தொகுதிகளுக்கு விசேட ஏற்பாடுகள் செய்யும் ஒரு கலப்பு மாதிரியையே அவர் கருதியிருந்தார். ஆயினும் இந்த விவரம் அரங்கில் இருந்தவர்களை திருப்திப்படுத்தவில்லை என்பதையே அன்றைய தொடர் கேள்விகள் காட்டுகின்றன.

இன்னும் ஒரு கோணத்தையும் இங்கு கவனிக்க வேண்டும். அரங்கில் பேசிய ஆறு பேரில் ஒருவர் கூட, "இது ஒரு தேவையற்ற யோசனை, இதைப் பற்றி பேசவே வேண்டாம்" எனத் தள்ளிவிடவில்லை. ஒவ்வொருவரும் திட்டத்தின் ஒரு குறிப்பிட்ட பரிமாணத்தை (நிர்வாகம், நிதி, மதம், பிரதிநிதித்துவம்) தனித்தனியாக ஆராய்ந்தார்கள். இது ஒரு முதிர்ச்சியடைந்த அரசியல் கலாசாரத்தின் அடையாளம். ஏற்றுக்கொள்வதற்கு முன் ஒவ்வொரு கோணத்திலும் ஒரு திட்டத்தை பரிசீலிக்கும் பழக்கம், *1926*ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாணவர் அரங்கில் ஏற்கனவே வேரூன்றியிருந்தது என்பதை இந்த விவாதப் பதிவு நமக்கு நினைவூட்டுகின்றது.

ஏன் தமிழர் ஒரே நாட்டையே விரும்பினார்கள்

*1926*இல் அன்றைய தமிழ் அரசியல் மனநிலையை புரிந்துகொள்ள, அந்தக் காலகட்டத்தின் பரந்த சூழலை கவனத்தில் கொள்ள வேண்டும். பிரிட்டிஷ் காலனித்துவ நிர்வாகத்தில் தமிழர் (குறிப்பாக யாழ்ப்பாணத்து வெள்ளாள சாதியினர்) ஆங்கிலக் கல்வியில் முன்னேறி, அரசுத்துறை உத்தியோகங்களில் விகிதாசாரத்திற்கு அதிகமான பிரதிநிதித்துவம் பெற்றிருந்தார்கள். கொழும்பையே மையமாகக் கொண்ட தேசிய அரசியலில் சேர் பொன்னம்பலம் இராமநாதன் போன்ற தமிழ்த் தலைவர்கள் செல்வாக்கு மிக்கவர்களாக இருந்தார்கள். இந்த நிலையில், மாகாணங்களுக்குள் பிரிந்து செயற்படும் ஒரு சமஷ்டி முறை, கொழும்பு மைய அரசியலில் தமிழருக்கு இருந்த செல்வாக்கைக் குறைத்துவிடும் என்கிற அச்சம் அவர்களிடையே இருந்திருக்கலாம் என வரலாற்றாசிரியர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். ஓர் ஒற்றையாட்சி இலங்கையில், படிப்பறிவும் நிர்வாகத் திறமையும் கொண்ட தமிழர், விகிதாசாரத்திற்கும் அதிகமான செல்வாக்கைத் தொடர்ந்து செலுத்த முடியும் என்று அவர்கள் நம்பியிருக்கலாம்.

இரண்டாவதாக, பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையே பைலி மைல்வாகனத்தின் அறிக்கையில் தெளிவாக வெளிப்பட்டது. "பாதுகாப்பாக இருக்க பிரிட்டிஷாரின் கீழேயே இருப்பது நல்லது" எனும் அவரது வார்த்தைகள், சிறுபான்மைச் சமூகங்கள் பெரும்பான்மையினரிடமிருந்து பாதுகாப்பை பிரிட்டிஷாரிடம் தேடிய ஒரு பொதுவான மனநிலையையும் நமக்கு காட்டுகின்றன. சுயாட்சி பெற்ற பின், மாகாண எல்லைகளுக்குள் பெரும்பான்மையினரின் அதிகாரத்திற்கு உட்படுவதைவிட, மத்திய பிரிட்டிஷ் நிர்வாகத்தின் கீழ் ஒரு பொதுவான சட்டத்திற்கு உட்படுவதே பாதுகாப்பானது என அவர் கருதியிருக்கலாம். மூன்றாவதாக, யாழ்ப்பாண மாணவர் காங்கிரசின் இளைஞர் தலைவர்கள் இந்திய தேசிய இயக்கத்தால் ஈர்க்கப்பட்ட ஒரு மதச்சார்பற்ற, ஒருங்கிணைந்த தேசியக் கனவை கொண்டிருந்தார்கள். சமூக அடையாளங்களை அரசியல் அமைப்பின் அடிப்படை அலகுகளாக மாற்றும் எந்தவொரு திட்டமும் அவர்களுக்கு பிற்போக்குத்தனமாகவே தோன்றியிருக்கும்.

நாற்பது ஆண்டுகள் கழித்தும் மாறாத நிலைப்பாடு

ரத்தினம் தனது *1926*ஆம் ஆண்டு நிலைப்பாட்டிலிருந்து ஒருபோதும் பின்வாங்கவில்லை என்பதே அவரது வாழ்நாள் முழுவதும் நீடித்த வரலாற்று உண்மை. *1969*ஆம் ஆண்டு, தமிழரசுக் கட்சி நிறுவப்பட்டு இருபது ஆண்டுகளுக்குப் பின், சி. சுந்தரலிங்கம் "ஈழம்" எனும் தனி நாட்டுக் கோரிக்கையை முன்வைத்தபோது, அறுபத்து நான்கு வயதான ரத்தினம் அதைப் பகிரங்கமாக கடுமையாக எதிர்த்தார். "எமது சிங்கள சகோதர சகோதரிகள் இனரீதியாக தமிழரைப் போன்றவர்களே, மொழி மாத்திரமே வேறுபாடு" என அவர் எழுதினார். வடக்கு கிழக்கில் உள்ளோர் பொறுமையாக இருக்க வேண்டும் என வலியுறுத்திய அவர், "அவர்களுக்கும் மனசாட்சி உண்டு, பெரும்பான்மையினரும் தமது தவறை உணர்வார்கள். காத்திருப்பதால் எதுவும் இழக்கப்படாது. தேசங்களின் ஆயுள் எழுபது வருடங்களோடு முடிவடைவதில்லை" என்றார்.[20] "ஈழம்" (*Eylom*) எனும் ஆங்கிலச் சொல்லையே அவர் ஒரு "மொழியியல் விபரீதம்" எனக் கடுமையாக விமர்சித்தார். அது நீண்ட '*i*' உடன் "இழம்" எனும் பழைய தமிழ்ச் சொல்லின் தவறான ஒலிபெயர்ப்பே எனவும், "ஈழம்" என்பது உண்மையில் தமிழருக்கு மாத்திரமல்ல, முழு இலங்கைத் தீவுக்குமான பழைய பெயரே எனவும், அதே பொருளில் தமிழுக்கு இணையான எலு (*Elu*) சொல்லும் வழக்கிலிருந்ததாகவும் அவர் விளக்கினார்.

இதன் அர்த்தம் என்னவெனில், *1926*இல் ஒரு சிங்கள பௌத்தத் தலைவர் முன்வைத்த சமஷ்டி திட்டத்தை எதிர்த்த அதே ரத்தினம், *1969*இலும் (அதாவது நாற்பத்து மூன்று ஆண்டுகளுக்குப் பின்னும்) தமிழ் தரப்பிலிருந்தே எழுந்த பிரிவினைவாதக் கோரிக்கையையும் அதே கடுமையுடன் எதிர்த்தார். சமஷ்டியை ஆதரித்தால் மாத்திரமே ஒருவர் "தமிழ் நலன் காப்பவர்" என்றோ, அதை எதிர்த்தால் "தமிழ் துரோகி" என்றோ எளிமைப்படுத்தி பார்க்க முடியாது என்பதை ரத்னத்தின் அறுபது ஆண்டுகால

நிலைப்பாடு நிரூபிக்கின்றது. அவர் விரும்பியது சமஷ்டியும் அல்ல, பிரிவினையும் அல்ல. மாறாக இனங்களுக்கிடையிலான பரஸ்பரப் பொறுமையும் படிப்படியான புரிந்துணர்வும் கொண்ட ஓர் ஒருங்கிணைந்த இலங்கையே. "நான் ஒரு கிறிஸ்தவன், ஆனால் கிறிஸ்தவம் ஏகாதிபத்தியத்தின் கருவியாகப் பயன்படுத்தப்படுவதை நான் உறுதியாக எதிர்க்கின்றேன்" என்று 1931இல் காந்திக்கு எழுதிய கடிதத்தில் ரத்தினம் தன்னை வரையறுத்துக்கொண்ட விதமே, இனம் - மதம் கடந்த ஒரு மனிதநேயக் கண்ணோட்டத்தை அவர் தனது வாழ்நாள் முழுவதும் பின்பற்றியதற்குச் சான்று.

1936ஆம் ஆண்டு ஜி.ஜி. பொன்னம்பலத்தால் முன்வைக்கப்பட்ட "5050" கோரிக்கை - சிங்களவருக்கும் அனைத்துச் சிறுபான்மையினருக்கும் அரசாங்கச் சபையில் சமமான ஆசன எண்ணிக்கை வழங்கும் திட்டம், சமஷ்டியை விட வேறுபட்ட அணுகுமுறையாக இருந்தாலும், அதன் இயக்கு சக்தி ஒன்றே. எண்ணிக்கை அடிப்படையிலான ஜனநாயகத்தில் தமிழர் நிரந்தரமாக சிறுபான்மையாக மாறிவிடும் அபாயத்திற்கு ஓர் அரசியலமைப்பு பாதுகாப்பு தேட வேண்டும் என்பதே அது. அந்தக் கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டது. 1944-45இல் இலங்கைக்கு விஜயம் செய்த சோல்பரி ஆணைக்குழு முன்னிலையிலும் இதே தேவை மீண்டும் முன்வைக்கப்பட்டது, மீண்டும் புறக்கணிக்கப்பட்டது.[21] ஒவ்வொரு தொடர்ச்சியான நிராகரிப்பும், 1926இல் பிரிட்டிஷ் அரசை நம்பியிருந்த தமிழ் அரசியல் மனநிலையை மெல்ல மெல்ல அரித்தது. 1949ஆம் ஆண்டளவில், பிரிட்டிஷார் விடைபெற இருக்கும் நிலையில், அந்த நம்பிக்கைக்குப் பதிலாக ஏதோவொரு அரசியலமைப்பு உத்தரவாதமே தேவை என்கிற உணர்வு தமிழ் தலைமையிடையே உறுதியடைந்திருந்தது.

இருபத்து மூன்று ஆண்டுகளுக்குப் பின்: பெரும் திருப்பம்

1926இல் யாழ்ப்பாண அரங்கில் பெரும்பான்மையினரால் நிராகரிக்கப்பட்ட அதே யோசனை, 1949 டிசம்பர் 18ஆம் திகதி எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் தோற்றுவிக்கப்பட்ட புதிய தமிழ் அரசியல் கட்சியின் அடையாளமே ஆனது. "இலங்கைத் தமிழரசுக் கட்சி" எனத் தமிழில் பெயரிடப்பட்ட அந்த அமைப்பு, ஆங்கிலத்தில் தன்னை "Federal Party" என அறிவித்துக்கொண்டது. அதாவது "சமஷ்டிக் கட்சி" என்கிற பெயரிலேயே "சமஷ்டி"க் கொள்கையைக் கொண்டிருந்தது. 1951 திருகோணமலை மாநாட்டில் சமஷ்டி அரசியலமைப்புக் கோரிக்கையை தனது பிரதான தீர்மானமாக அந்தக் கட்சி நிறைவேற்றியது.[22] இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்தில் பிலிப்ஸ், விஜயரத்தினம், மைல்வாகனம் ஆகியோர் எழுப்பிய அதே கேள்விகளுக்கு, (அதாவது மேல் மாகாணத்தை எப்படிக் கையாள்வது, நிதி வளம் குறைந்த பகுதிகளை எப்படி நிர்வகிப்பது) இப்போது தமிழ் தலைமையே பதில் தேட வேண்டிய நிலைமை உருவானது. வரலாற்றின் இந்த முரண், 1926ஆம் ஆண்டு வெறுமனே ஒரு கோட்பாட்டு விவாதமாக இருந்த ஒன்று, 1949ஆம் ஆண்டளவில் தமிழருக்கு ஏன் இன்றியமையாததாக மாறியது என்பதைக் கேட்க நம்மை தூண்டுகின்றது.

அந்த இருபத்து மூன்று ஆண்டுகளில் நிகழ்ந்த மாற்றமே இந்தக் கேள்விக்கான பதில். 1931இல் சர்வஜன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டதுடன், எண்ணிக்கை அடிப்படையிலான அரசியல் தவிர்க்க முடியாததாகியது. கல்வியிலும் அரசுத்துறை உத்தியோகங்களிலும் தமிழருக்கு இருந்த விகிதாசாரத்திற்கு அதிகமான பிரதிநிதித்துவம், எண்ணிக்கை அடிப்படையிலான ஜனநாயகத்தில் ஒரு நிரந்தரப் பலவீனமாக மாறியது. 1936இல் "50-50" கோரிக்கை (சிங்களவருக்கும் அனைத்துச் சிறுபான்மையினருக்கும் சமமான பிரதிநிதித்துவம்) நிராகரிக்கப்பட்டது. 1944-45இல் சோல்பரி ஆணைக்குழு முன்னும் சிறுபான்மை பாதுகாப்புக் கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டன. இந்த தொடர்ச்சியான அனுபவங்களே, பிரிட்டிஷ் ஆட்சியிடமிருந்து பாதுகாப்பை நம்பியிருந்த 1926ஆம் ஆண்டு தமிழ் மனநிலையை, சுயாட்சி மாகாண அதிகாரத்தையே நம்பும் 1949ஆம் ஆண்டு மனநிலையாக மாற்றின.

எண்ணிக்கை அடிப்படையிலான அமைச்சரவையில் ஏற்படும் விகிதாசார பேரம் பேசல், மையப்படுத்தப்பட்ட ஆட்சி "ஓர் ஒருங்கிணைந்த இனக்குழுவை" முன்கூட்டியே அனுமானித்துக் கொள்வதன் ஆபத்து, ஆயிரம் ஆண்டுகளாக நிலைத்திருந்த சமூக வேறுபாடுகள் படிப்படியாக மறைந்துவிடாது என்கிற எச்சரிக்கை என பண்டாரநாயக்க 1926இல் முன்வைத்த வாதங்கள் ஒவ்வொன்றும், 1956க்குப் பின் கால ஓட்டத்தில் நிஜமாயின. ஆனால் அதற்குள் அந்த வாதங்களை முன்வைத்தவரே அவற்றைக் கைவிட்டுவிட்டிருந்தார், அவற்றை நிராகரித்தவர்களே அவற்றைத் தமது சொந்தக் கட்சியின் கோட்பாடாக ஏற்றுக்கொண்டு நின்றார்கள்.

யாழ்ப்பாண மாணவர் அரங்கில் 1926இல் எழுந்த ஒவ்வொரு குரலும் (சண்முகத்தின் சந்தேகம், பிலிப்ஸின் நடைமுறைக் கேள்வி, மைல்வாகனத்தின் பாதுகாப்புணர்வு) அன்றைய தமிழ் அரசியல் சிந்தனையின் ஓர் உண்மையான குறுக்குவெட்டு. அவர்கள் செயலற்று வெறுமனே கேட்டுக்கொண்டிருக்கவில்லை. ஒவ்வொரு கோணத்திலும் தீவிரமாக விசாரித்தார்கள், தமது சொந்த யதார்த்தத்தின் அடிப்படையில் தீர்மானித்தார்கள். அந்தத் தீர்மானம் பிற்காலத்தில் தவறு என நிரூபணமானது என்பது, 1926ஆம் ஆண்டு அவர்கள் எடுத்த முடிவு அவர்களது அன்றைய அனுபவத்திற்குப் பொருந்தாதது என அர்த்தமல்ல. வரலாற்றை நியாயந் தீர்ப்பதைவிட, அதை புரிந்துகொள்வதே அதிக மதிப்புமிக்கது. 1926 யாழ்ப்பாணம் நமக்குக் கற்பிக்கும் பாடம் இதுவே.

எளிமைப்படுத்தப்பட்ட கதைகளை மறுப்பது

இதுவரை நாம் பார்த்த வரலாறானது, இலங்கை அரசியலில் பரவலாக நிலவும் இரு எளிமைப்படுத்தப்பட்ட கதைகளையும் மறுக்கின்றது. முதலாவது கதை: "சமஷ்டி என்பது எப்போதுமே தமிழ் பிரிவினைவாதத்தின் ஒரு வெளிப்பாடே" என்பது. இரண்டாவது கதை: "தமிழர் எப்போதுமே சமஷ்டியை விரும்பினர், சிங்களவர் எப்போதுமே அதை எதிர்த்தனர்" என்கிற புனைவும் ஐதீகமும். இரண்டு கதைகளுமே 1926ஆம் ஆண்டு பண்டாரநாயக்கவின் உரையிலும் கட்டுரைகளிலும் மறுக்கப்படுகின்றன. சமஷ்டியை முதன்முதலில் ஆழமான தத்துவார்த்த, வரலாற்று, புவிசார் அடிப்படையில் நிறுவியவர் ஒரு சிங்கள பௌத்த அறிவாளி. அதை நிராகரித்தவர்கள் தமிழ் மாணவர் தலைவர்கள். இந்த வரலாற்று உண்மையை மறைத்து, இரு தரப்பினரும் தமக்கு வசதியான எளிமைப்படுத்தப்பட்ட கதைகளையே பிற்காலத்தில் பிரசாரம் செய்து வந்திருக்கின்றனர்.

1926 யாழ்ப்பாணம் நமக்குக் கற்பிக்கும் இன்னொரு உண்மையான பாடம் வேறு ஒன்று உள்ளது. அரசியல் நிலைப்பாடுகள் நிரந்தரமானவை அல்ல, அவை ஒவ்வொரு தலைமுறையும் தமது சொந்த அனுபவத்தின் அடிப்படையில் புதுப்பித்துக்கொள்ளும் ஓர் உயிருள்ள செயல்முறை. 1926இல் யாழ்ப்பாணத்தில் நின்ற தமிழ் மாணவரும், 1949இல் திருகோணமலையில் தமிழரசுக் கட்சியை நிறுவிய தலைவரும், 1926இல் யாழ்ப்பாணத்தில் பேசிய பண்டாரநாயக்கவும், 1956இல் சிங்கள மொழி மட்டும் சட்டமூலத்தை நிறைவேற்றிய பிரதமர் பண்டாரநாயக்கவும் வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவர்களாக முற்றிலும் மாறுபட்ட அரசியல் தீர்மானங்களை எட்டியவர்கள். அந்த மாற்றத்தை உந்திய வரலாற்றுச் சூழல்களை புரிந்துகொள்வதே, இன்றைய இலங்கை அரசியலைப் புரிந்துகொள்வதற்கான திறவுகோல்.

இந்த யாழ்ப்பாண உரையின் நூற்றாண்டு நிறைவைக் குறிக்கும் இந்த ஆண்டு (2026), அந்த மறக்கப்பட்ட விவாதத்தை மீள வாசிக்க ஒரு பொருத்தமான தருணம். ஆறு கடிதங்களும், ஓர் உரையும், ஆறு பெயரிடப்பட்ட ஆட்சேபனைகளும் சேர்ந்து நமக்குக் காட்டுவது இலங்கையின் இனப் பிரச்சினை எத்தனை ஆழமாக வேரூன்றியது, எத்தனை காலமாக அது ஒரு தீர்வை எதிர்நோக்கி நின்றது என்பதையே. அந்தத் தீர்வு இன்னும் முழுமையாகக் கிடைக்கவில்லை என்பதே இந்த நூற்றாண்டு நீண்ட கதையின் மிகக் கொடுமையான உண்மை.

இறுதியாக, ஒரு நடைமுறை அவதானிப்பையும் இங்கு பதிவு செய்ய வேண்டும். பண்டாரநாயக்க எழுப்பிய கேள்விகளுக்கும், அரங்கிலிருந்த தமிழர் எழுப்பிய ஆட்சேபனைகளுக்கும் இடையிலான இடைவெளியே, இன்றுவரை இலங்கை அரசியலமைப்பு விவாதங்களில் தீராமல் நீடிக்கும் அதே இடைவெளி. அதிகாரப் பரவலாக்கம் எந்த அளவு வரை செல்ல வேண்டும், பல்லின நகர்ப்புறங்களை எப்படிக் கையாள்வது, வள ஏற்றத்தாழ்வை எப்படிச் சரிசெய்வது போன்ற கேள்விகளுக்கு 1926இல் முழுமையான பதில் இல்லாதது போலவே, 2026இலும் நூற்றாண்டு கழிந்தும் முழுமையான ஒருமித்த பதில் இல்லை. ஆனால் வேறுபாடு ஒன்று உண்டு. 1926இல் இந்தக் கேள்விகள் ஒரு கோட்பாட்டுக் கலந்துரையாடலாக மாத்திரம் இருந்தன. 2026இல் அவை மூன்று தசாப்த காலப் போரையும், அதன் விளைவுகளையும் கடந்து வந்த ஒரு தேசத்தின் நிஜமான, தவிர்க்கவியலாத கேள்விகளாக நிற்கின்றன.

இதனை முழுமையாக வாசிக்கும் ஒரு வாசகர், ஒரு கேள்வியை தவிர்க்க முடியாது எழுப்ப முடியும். பண்டாரநாயக்க தமது சொந்த வாதங்களைப் பின்பற்றியிருந்தால், தமிழர் 1926இலேயே அதை ஏற்றிருந்தால், இலங்கையின் அடுத்த நூறு ஆண்டுகள் எப்படி வேறுபட்டிருந்திருக்கும்? இது ஒரு பதிலற்ற கேள்வியே. ஆனால் அந்தக் கேள்வியை எழுப்புவதே இந்த வரலாற்றை மீள்வாசிப்பதை மதிப்பாக்கும். 1926 யாழ்ப்பாணம் நமக்குக் காட்டுவது, சரியான யோசனைகள் சரியான தருணத்தில் ஏற்கப்படாமல் போகலாம் என்பதும், தவறான தருணத்தில் திணிக்கப்படும் சரியான யோசனைகள் கூட

மோதலுக்கே வழிவகுக்கலாம் என்பதுமே. பண்டாரநாயக்கவின் வாதங்களை முழுமையாக நிராகரிக்காமல், அவற்றின் ஒரு பகுதியை மாத்திரம் தமிழர் ஏற்றிருந்தால் என்ன நிகழ்ந்திருக்கும் என்பதும் ஒரு சுவாரசியமான கற்பனை. கொழும்பு தமிழர் தொகுதிக்கான விசேட பிரதிநிதித்துவம், வடக்குக் கிழக்கிற்கான ஒரு தன்னாட்சி மாகாண அலகு, இவை மாத்திரமேனும் அன்றே ஏற்கப்பட்டிருந்தால், பிற்காலத்தின் மொழிக் கொள்கை மோதல்களுக்கு ஒரு வேறுபட்ட பாதை திறந்திருக்கக்கூடும். ஆயினும் இது வெறும் ஊகமே.

அடிக்குறிப்புகள்

1. *S.W.R.D. Bandaranaike, "Federation (A solution for the problems of Ceylon's external and internal relations)," Letters I-VI, The Ceylon Morning Leader, May 19 - June 30, 1926; reproduced in Centre for Policy Alternatives, Powersharing in Sri Lanka: Constitutional and Political Documents 1926-2008 (Colombo: CPA), pp. 29-49.*

2. *S.W.R.D. Bandaranaike, Letter No. I, "Federation," The Ceylon Morning Leader, May 19, 1926.*

3. *S.W.R.D. Bandaranaike, Letter No. II, "External Federation," The Ceylon Morning Leader, May 27, 1926.*

4. *S.W.R.D. Bandaranaike, Letter No. III, "External Federation," The Ceylon Morning Leader, June 2, 1926.*

5. *S.W.R.D. Bandaranaike, Letter No. IV, "External Federation," The Ceylon Morning Leader, June 9, 1926, quoting General Smuts's address to the 1923 Imperial Conference.*

6. *S.W.R.D. Bandaranaike, Letter No. IV, "External Federation," The Ceylon Morning Leader, June 9, 1926, citing the 1923 Imperial Conference proceedings.*

7. *S.W.R.D. Bandaranaike, Letter No. V, "External Federation: Federation with India, The League of Nations," The Ceylon Morning Leader, June 23, 1926.*

8. *S.W.R.D. Bandaranaike, Letter No. VI, "Ceylon as a Mandate from the League of Nations," The Ceylon Morning Leader, June 30, 1926.*

9. *"A Federal Govt. For Ceylon - Mr. Bandaranaike Lectures in Jaffna - Various Objections Raised to System," The Ceylon Morning Leader, Saturday, July 17, 1926; reproduced in Powersharing in Sri Lanka: Constitutional and Political Documents 1926-2008.*

10. *"A Federal Govt. For Ceylon," The Ceylon Morning Leader, July 17, 1926, "Failings of centralised form".*

11. *"A Federal Govt. For Ceylon," The Ceylon Morning Leader, July 17, 1926, "The Federal Form" section.*

12. *"A Federal Govt. For Ceylon - Mr. Bandaranaike Lectures in Jaffna - Various Objections Raised to System," The Ceylon Morning Leader, July 17, 1926, "The lecturer catechised" section; reproduced in Powersharing in Sri Lanka: Constitutional and Political Documents 1926-2008.*

13. *"A Federal Govt. For Ceylon," The Ceylon Morning Leader, July 17, 1926, "Why not under British rule" section.*

14. *"A Federal Govt. For Ceylon," The Ceylon Morning Leader, July 17, 1926, closing remarks by Dr. Isaac Thambyah.*

15. *"A centuryold discourse on federalism," The Morning (Colombo), March 21, 2026, citing the Jaffna Students' Congress's rejection of Bandaranaike's federal proposal.*

16. *A.R.B. Amerasinghe, "James Thevathasan Rutnam," in Festschrift 1985 — James Rutnam (Colombo: Sri Lanka National Commission for UNESCO, 1985).*

17. *James T. Rutnam, quoted in A.R.B. Amerasinghe, "James Thevathasan Rutnam," Festschrift 1985 — James Rutnam, p. 5, from Rutnam's own account in the Tribune.*

18. *Neelan Tiruchelvam, "Autonomy and Ethnicity: The Politics of Federalism and Diversity in Sri Lanka" (2000); K.M. de Silva, A History of Sri Lanka (Colombo: Vijitha Yapa, 2005).*

19. *"A Federal Govt. For Ceylon," The Ceylon Morning Leader, July 17, 1926, "The Federal Form" section, final paragraph.*

20. *James T. Rutnam, in the Observer, May 15, 1969, quoted in A.R.B. Amerasinghe, "James Thevathasan Rutnam," Festschrift 1985 — James Rutnam.*

21. *K.M. de Silva, A History of Sri Lanka (Colombo: Vijitha Yapa, 2005), pp. 491-510, on the Soulbury Commission and minority representation.*

22. *"S.J.V. Chelvanayakam and the Ilankai Thamil Arasuk Katchi," Daily FT, December 2024.*

1920களில் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி என்ற பெயரில் கொழும்பு நகரில் ஓர் உயர்கல்வி நிறுவனம் தாபிக்கப்பட்டது. இக்கல்லூரி லண்டன் பல்கலைக்கழகத்தின் இளங்கலை/ விஞ்ஞானப் பட்டப்படிப்புக்கு வெளிவாரி பரீட்சார்த்திகளான இலங்கை மாணவர்களைத் தயார்ப்படுத்தும் கல்வி நிறுவனமாகச் செயற்பட்டது. 1942 இல் இக்கல்லூரி இலங்கைப் பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டு தனித்து இயங்க ஆரம்பித்தது. காலப்போக்கில் நாட்டின் பிறபகுதிகளிலும் பல்கலைக்கழகங்கள் தாபிக்கப்பட்டன. இலங்கையில் பல்கலைக்கழக முறை (University System) ஒன்று உருவாகியது. இம்மாற்றங்கள் மேற்குறித்த மூன்று கற்கைத்துறைகளிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தன. ‘இலங்கையின் வரலாறும், பொருளியலும், சமூகவியலும்’ என்ற இத்தொடரில் இக்கற்கைத்துறைகளின் வளர்ச்சி பற்றிய மதிப்பீடுகள், முக்கிய ஆய்வாளர்களின் நூல்களினதும், ஆய்வுக் கட்டுரைகளினதும் அறிமுகமும் விமர்சனமும், ஆய்வாளர்களின் கோட்பாட்டுப் பங்களிப்புகள் (Theoretical Contributions), அவர்களின் புலமைத்துறை வாழ்க்கை வரலாறு, மாணவர் பரம்பரைகளின் உருவாக்கம், அரசியல் – சமூக – பண்பாட்டு உயர்குழக்களின் (Elites) உருவாக்கம் என்பன குறித்த பகுப்பாய்வுகளாக அமையும் கட்டுரைகள் பதிவிடப்படும்

மேன்மக்கள் சரித்திரம்: கொழும்பு நகரின் தமிழ் உயர்குழாம் பற்றி சு. இரத்தினசாமி ஐயர் 1930ஆம் ஆண்டு எழுதிய நூல் பற்றிய அறிமுகம்

கந்தையா சண்முகலிங்கம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த ‘இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்’ என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.
‘நவீன அரசியல் சிந்தனை’, ‘கருத்தியல் எனும் பனிமூட்டம்’, ‘இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்’ ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

கொழும்பு, கொம்பனித்தெரு, அரசினர் புதிய பாடசாலைத் தமிழ் பண்டிதர் சு. இரத்தினசாமி ஐயர் 1930ஆம் ஆண்டில் 'மேன்மக்கள் சரித்திரம்' என்னும் நூலை வெளியிட்டார். இந்நூல் கொழும்பு மீனாம்பாள் அச்சியந்திர சாலையினால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. இந்நூலின் இரண்டாம் பதிப்பு 2008ஆம் ஆண்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வெளியிடப்பட்டது.

இலங்கையில் 19ஆம் நூற்றாண்டின் சமூக, பொருளாதார மாற்றங்களின் பயனாக பல்வேறு இன, மத, சாதிப் பிரிவுகளைச் சேர்ந்த சமூகப்பிரிவினர்களில் இருந்து இனத்துவ அடையாளங்களையுடைய உயர்குழுக்கள் தோன்றின.

இவ்வுயர் குழுக்களுள் ஒன்றான கொழும்பு நகரை மையமாகக் கொண்டு உருவாக்கம் பெற்றிருந்த தமிழ் உயர் குழாம் (Elites) பற்றிய வரலாற்றைக் கூறும் நூலாக சு. இரத்தினசாமி ஐயர் அவர்களின் நூல் அமைந்தது. அந்நூலிற்கான முடிவுரையில் ஐயரவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

"இந்நகரிலிருக்கும் தமிழ் மக்களுள் அநேகர் அரசாங்க உத்தியோகத்தர்களாகவும், நீதிபதிகளாகவும், பிரபல நியாயதுரந்தர்களாகவும், வியாபாரிமார்களாகவும், சீமை வர்த்தகர்களாகவும், பாரிய தனவந்தர்களாகவும், வேறுசிலர் 'அட்ட ஐஸ்வரிய'ப் பிரபுக்களாகவும் இருக்கின்றனர்." (முடிவுரை: XXVI)

இத்தகைய பெருமக்களின் இயல்புகளை சு. இரத்தினசாமி ஐயர் அவர்கள் தொடர்ந்து விவரிக்கையில், "பலரும் பலவித நோக்கமும், பலவித கொள்கையும், பலவித போக்கும், பலவிதமான உடன்பாடும் உடையவர்களாய் இருந்ததைக் காண்கிறோம் (மேலது XXVI)" என்றும் குறிப்பிடுகிறார். கொழும்பு நகரில் உருவாக்கம் பெற்றிருந்த தமிழ் உயர்குழாம் பல்வகைத் தன்மையுடையதாக இருந்தபோதும் அச்சமூகப் பிரிவினரிடையே காணப்பட்ட பொதுத்தன்மையை இரத்தினசாமி ஐயர் கவனிக்கத் தவறவில்லை. அவர்களைச் சமூகத்தின் மேன்மக்கள் எனவும், அவர்கள் யாவரும் புதிதாகத் தோற்றம் பெற்ற புதிய மேன்மக்கள் (New Elites) என்பதையும் அவர் உணர்ந்திருப்பது தெரிகிறது. தாம் ஆக்கிய நூலை அச்சில் பதிப்பிப்பதற்கு முன்னர் அவர் அக்காலத்தின் பெருமக்கள் பலருக்கும் தமது நூற்பிரதியைக் காண்பித்து, அவர்களது அபிப்பிராயங்களைக் கேட்டறிந்து அப்பெருமக்களின் கருத்துகளை நூலின் 6 பக்கங்களில் தந்துள்ளார்.

அக்காலத்தில் சட்ட சபை உறுப்பினராக இருந்தவரும், அறிவாளியுமான கே. பாலசிங்கம் இந்நூலை 'Dictionary of Tamil Biographies' (தமிழர் வாழ்க்கை வரலாற்று அகராதி) எனக் குறிப்பிட்டிருந்தார். அவரின் பாராட்டுரை பின்வருமாறு அமைந்தது.

"Pandit Ratnasamy Aiyar who is a renowned Tamil and Sanskrit scholar, has rendered great service to Tamils by writing a dictionary of Tamil biographies. his enterprise worthy of support."

புரக்டர் க. சிதம்பரநாதன் அவர்களின் கருத்துரை பின்வருமாறு அமைந்தது.

"இத்தகைய நூல்கள் ஐரோப்பிய நாடுகளிலும், இந்தியாவிலும் எழுதப்பெற்று அத்தேச மக்களை ஒரு திரட்டில் யாவரும் எளிது காணுமாறு இயற்றப் பெற்றுள்ளன. நம்மீழத்திலும், அதுவும் நம் தமிழ் மேன்மக்கள் சாலவும் செறிந்துள்ள இந்நாட்டில் இத்தகைய நூலொன்று வேண்டப்பட்டுள்ளதே."

சு. இரத்தினசாமி ஐயர் அவர்களின் நூலின் சிறப்பை க. சிதம்பரநாதன் அவர்கள் 'மேன்மக்கள் சரித்திரத்தை எழுத முன்வந்துள்ள முதற்பெருமை பண்டிதர் இரத்தினசாமியர்க்கே உரித்து' என்றும் பாராட்டினார். மேன்மக்கள் சரித்திரத்தை எழுதுவதன் மூலம் இலங்கையில் உருவாக்கம் பெற்றுவரும் தமிழ் தேசிய இனத்தின் சரித்திரத்தை எழுதும் புதுமையான முயற்சியில் ஐயர் முனைந்திருப்பதைக் கண்டு அக்கால அறிஞர் பெருமக்களான கே. பாலசிங்கம், க. சிதம்பரநாதன் ஆகியோர் வியந்து பாராட்டினர் என்பது குறிப்பிடத்தக்கது.



மேன்மக்கள் சரித்திரம்

மேன்மக்கள் பற்றிய அண்மைக்கால ஆய்வுகளும் வரைவிலக்கணமும்

'மேற்கு மாகாணத்தின் முதலியார்கள்' என்ற தலைப்பில் எழுநா இணையத்தில் வெளியாகிய

(19 ஓகஸ்ட் 2026) கட்டுரையில் உயர்குழாம் (Elites) என்னும் எண்ணக்கருவைப் பிரயோகித்து, நவீன காலத்தில் எழுச்சி பெற்ற உயர் சமூகப் பிரிவினர் பற்றி ஆராய்ந்தவர்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவரான மைக்கேல் றொபர்ட்ஸ் 'Elite Formation and Elites' (உயர்குழாம் உருவாக்கமும் உயர்குழாம்களும்) என்ற தலைப்பிலான கட்டுரையில் நவீன காலத்தில் இலங்கையில் தோற்றம் பெற்ற உயர்குழாம்கள் குறித்த வரலாற்றை ஆராய்ந்து எழுதியிருந்தார். 1973ஆம் ஆண்டு எழுதப்பட்ட அக்கட்டுரையில் உயர்குழாம் (Elites) பற்றிய வரைவிலக்கணத்தைத் தந்திருந்தார். நவீன அரசியல் சமூகவியல் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்துள்ள இந்த வரைவிலக்கணத்தின் முக்கிய கூறுகளை எமது வார்த்தைகளில் கீழே தந்துள்ளோம்.

1. உயர்குழாம் உறுப்பினரின் தகுதிகளில் ஒன்று பெருஞ்செல்வத்தை உடைமை கொண்டிருத்தலாகும். சமூகத்தால் பெறுமதிமிக்கதாகக் கருதப்படும் பண்டங்களையும், சேவைகளையும் ஏனைய சமூகக் குழுவினரையும் விடக் கூடிய அளவில் பெற்றுக்கொள்ளும் ஆற்றல் உடையவர்களே செல்வந்தர் எனப்படுவர்.

2. உயர்குழாத்தினர் அரசியல் அதிகாரம் உடையவர்களாக இருப்பர். அரசியல் அதிகாரம் இல்லாதவிடத்து, அந்த அதிகாரம் உடையவர்களை அணுகி கருமம் ஆற்றும் வல்லமை உடையவர்களாய் இருப்பர்.

3. சமூகத்தால் மதிப்பு மிக்கதெனக் கருதப்படும் உத்தியோகப் பதவிகளை வகிப்பவராய் உயர்குழாத்தினர் இருப்பர். அரசியல் அதிகாரத்தில் இருந்து வேறுபட்டதான உத்தியோகப் பதவி வழி அதிகாரம் (Authority) உயர்குழாத்தினரின் சமூக அந்தஸ்தின் ஆதாரமாகும்.

4. உயர்குழாத்தினர் வெகுஜனங்களிடமிருந்து வேறுபட்ட வாழ்க்கை முறையினையும் நடை, உடை, பாவனைகளையும் கொண்டிருப்பர். இவை ஏனைய சமூகக் குழுக்களால் உயர்ந்தன எனப் போற்றப்படுதலும் உண்டு. ஏற்புடையன அல்ல எனக் கண்டிக்கப்படுவதும் உண்டு.

5. சமூகத்தால் மதிக்கப்படும் அறிவுத்துறை ஈடுபாடுகளில் நாட்டமும் விருப்பமும் கொண்டோராகவும், புலமை பெற்றவராயும், கல்வியாளர்களாயும், கலைகளில் வல்லோராயும் இவர்கள் விளங்குவர்.

உயர் சமூக அந்தஸ்து (High Social Status) உயர்குழாத்தின் முக்கிய அடையாளம் ஆகும். இந்த அடையாளம் இலங்கை போன்ற சமூகங்களில் சாதியை அடிப்படையாகக் கொண்டும் நிர்ணயிக்கப்படும்.

1930இல் மேன்மக்கள் சரித்திரம் நூலை எழுதிய சு. இரத்தினசாமி ஐயர் அவர்கள் உயர்குழாம் (Elites) என்ற எண்ணக்கரு பற்றியோ, அல்லது அவ்விடயப்பொருள் சார்ந்த உயர்குழாம் கோட்பாடுகள் (Elite Theories) என அழைக்கப்படும் கோட்பாடுகள் பற்றியோ அறிவு உடையவராக இருந்தார் எனக் கூறுதல் இயலாது.

அத்தகைய கோட்பாட்டு அறிவை (Theoretical Knowledge) சு. இரத்தினசாமி ஐயரிடமும் நாம் எதிர்பார்ப்பதும் அறிவுடைமையாகாது. மைக்கல் றொபர்ட்ஸ் அவர்கள் கூறியிருக்கும், பெரும் செல்வத்தின் உடைமையாளர்கள், அரசியல் அதிகாரம் உடையவர்கள், உத்தியோகப் பதவிகள் வழி அதிகாரம் உடையவர்கள், உயர் பண்பாட்டைத் தழுவியவர்கள், அறிவாளிகள் ஆகிய முக்கிய உயர்குழாம் பண்புகளை உடைய பெருமனிதர்களை மேன்மக்கள் என சு. இரத்தினசாமி ஐயர் அடையாளம் கண்டிருப்பது வியந்து பாராட்டத்தக்கது. ஐயரவர்களின் முகவுரையில் மேன்மக்கள் குறித்து அவர் கூறுவது கவனத்திற்குரியது.

"மேன்மக்களென்றது மானிடருள் கல்வியறிவொழுக்கம், சமயபக்தி, தானதருமம், நற்குண நற்செய்கை, சாந்தம், பொறை, அடக்கம், பரோபகாரம், பிரபுத்துவம், பகுத்தறிவு, இன்சொல், ஈகை, இரக்கம் முதலான இன்னோரன்ன சிறந்த குணங்களையும் செயல்களையுமுடைய உத்தமர்களே. சொல்லளவிலும் பார்க்கச் செயலளவில் மேன்மக்களாதலே மிக்க விஷேடமென்றார் அறிவுடையோர்."

ஐயரவர்களின் மேன்மக்கள் குறித்த வரைவிலக்கணம் அகம் சார்ந்த மனிதாயப் பண்புகளுக்கு முதன்மையளிப்பதாக அமைந்துள்ளது. ஆயினும் நாம் ஏலவே எடுத்துக்காட்டிய பின்வரும் மேற்கோள் புறவயமான அளவுகோல்களையும் குறிப்பிடுவதைக் காணலாம்.

"இந்நகரிலிருக்கும் தமிழ் மக்களுள் அநேகர் அரசாங்க உத்தியோகத்தர்களாகவும், சட்டசபை அங்கத்தவர்களாகவும், பிரபல நியாயத்துரந்தர்களாகவும், டாக்டர்மார்களாகவும், வியாபாரிமார்களாகவும், புறோக்கர்மார்களாகவும், சீமை வர்த்தகர்களாகவும், அட்ட ஐஸ்வரியப் பிரபுக்களாகவும் இருக்கின்றனர்."

இக்கூற்றில் பலவகைப்பட்ட குழுவினரை நூலாசிரியர் குறிப்பிடுகிறார். இவர்களை மூன்று குழுக்களாக நாம் இனம் பிரித்துக் கொள்ள முடியும்.

1. உயர்தொழில்களில் ஈடுபட்டிருப்போர் (Professionals), அரசாங்க உத்தியோகத்தர்கள், சட்டசபை உறுப்பினர்கள், நீதிபதிகள், நியாயத்துரந்தர்கள்,

டாக்டர்கள் ஆகியோர் முதலாவது பிரிவினராவர்.

2. வியாபாரம், வங்கித்தொழில் ஆகியவற்றில் இடைத்தரகர்களாகச் செயற்பட்டோர், புறோக்கர்கள் (Brokers), சிறாப்பர்கள் (Shroffs) ஆகியோர் இரண்டாவது முக்கிய பிரிவினராவர்.

3. சீமை வர்த்தகர்கள் என்பது ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகத்தில் (Export-Import Trade) ஈடுபட்டோரையும், பாரியதான வர்த்தகர்களையும், பெருந்தோட்டங்களிலும் நகரச் சொத்துகளிலும் (Plantations and Urban Property) முதலீடு செய்துள்ளவர்களுமான முதலீட்டு முயற்சியாளர்களையும் உள்ளடக்கிய குழுவாகும்.

இக்குழுக்களைச் சேர்ந்த பெருமக்களின் வாழ்க்கை வரலாறுகளை அகரவரிசையில் தொகுத்துத் தருவதாக மேன்மக்கள் சரிதம் என்னும் இந்நூலில் ஏறக்குறைய 390 வரையான பெருமக்களின் வாழ்க்கைச் சரித்திரக் குறிப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன.

சமூக அசைவியக்கம்

சமூக மாற்றங்களின் பயனாக மேல்நிலைக்கு வரும் சமூகப் பிரிவினரின் உருவாக்கத்தை சமூக அசைவியக்கம் (Social Mobility) என்னும் எண்ணக்கருவின் துணையுடன் விளக்கலாம். சமூகக் கட்டமைப்பின் கீழ் அடுக்குகளில் இருந்தோர், கல்வியாலும், வர்த்தகம் போன்ற தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதாலும் சமூகக் கட்டமைப்பின் மேலடுக்குகளுக்கு உயர்ச்சியடைவதை சமூக அசைவியக்கம் என்ற கருத்தாக்கம் குறிப்பிடுகிறது. சு. இரத்தினசாமி ஐயரின் நூலில் குறிப்பிடப்பட்டோரில் பெரும்பான்மையினர் சாதாரண மனிதர்களாக இருந்து கல்வியாலும், வர்த்தக முயற்சிகளால் பொருளீட்டியும் வாழ்க்கையில் உயர்நிலையடைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இவ்வாறான உயர்ச்சியைச் சில தனிநபர்கள் தமது வாழ்க்கைக் காலத்திலேயே அடைந்திருத்தல் முடியும். இவ்வாறு சமூகப் படிநிலையில் உயர்ந்து சென்றவர்கள், தம்மோடு தம் குடும்பத்தினரையும், உறவினர்களையும் உயர்நிலைக்கு உயர்த்தி விடுவர். தனிநபர் ஒருவரின் வாழ்க்கைக் காலத்தில் அடையப்பெறும் உயர்ச்சியோடு தலைமுறை வழிவரும் அசைவியக்கத்தையும் (Intergenerational Mobility) இக்கருத்தாக்கம் உள்ளடக்கியுள்ளது. இலங்கையில் கொழும்பு நகரம் அரச நிர்வாகத்தினதும், வர்த்தகத் தொழில் முயற்சிகளினதும் மையமாக விளங்கியது. இக்காரணத்தால், வாழ்க்கையில் உயர்ச்சி பெற்ற மேலோர் குழுக்கள் கொழும்பை நோக்கி இடம்பெயர்தல் ஒரு கட்டாயத் தேவையாயிற்று. புவியியல் சார்ந்த இவ்விடப்பெயர்ச்சியை 'பக்கவாட்டு அசைவியக்கம்' (Lateral Mobility) எனக் குறிப்பிடலாம். வாழ்க்கையில் உயர்ச்சி பெற்ற வட இலங்கையின் யாழ்ப்பாணத் தமிழர்களில் பெரும்பான்மையினர் 1830-1930 காலத்தில் கொழும்பை நோக்கி இடம்பெயர்ந்தனர். மேன்மக்கள் சரித்திரம் நூல் பல நிலைகளிலும் ஏற்படும் உயர்ச்சியை எடுத்துக் கூறுகிறது. ஆங்கிலப் பாடசாலையில் கற்று 'சீனியர்' பரீட்சையில் தேறியபின் 'கிளரிக்கல் லைனில்' உயரும் இளைஞர்கள் முதல், கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலைக்குச் சென்று கல்வி கற்று சிவில் சேவைப் பரீட்சையில் சித்தி பெற்ற பெருமையைப் பெற்ற பொன்னம்பலம் அருணாசலம் வரை, பலர் இதில் அடங்குவர். இவ்வாறு உயர்ச்சி பெற்ற தனிநபர்களின் வாழ்க்கைச் சரிதக் குறிப்புகள் இந்நூலில் தரப்பட்டுள்ளன. இவர்கள் யாவரிடமும் காணும் பொது இயல்புகளாக விடாமுயற்சி, ஊக்கம், கடின உழைப்பு, கல்வியின் மீதான வேட்கை என்பன அமைந்திருப்பதைக் காணலாம். ஆகையால் மேன்மக்கள் சரித்திரத்தில் விவரிக்கப்படும் ஆளுமைகளில் பெரும்பான்மையினோர் உழைப்பால் உயர்ந்தோர் என்று கூறத்தக்கவர்களே ஆவர்.

சமூக அசைவியக்கம் - ஒரு மாதிரி

மரபுவழிச் சமூகங்களின் உயர்குலத்தின் (Aristocracy) பண்புகளும், தகுதியும், நிலையும் (Position) நபர்களின் முயற்சியால் அடையப்பெறுவன அல்ல; மாறாக அவை நபர்கள் மீது மரபுரிமையாக ஏற்றப்படுவனவாக இருந்தன. கொழும்பு மாநகரில் 'றிக்வெஸ்ற் கோட்'டென்னும், நீதித்தலத்திற்கு கொம்மிஷனராய் விளங்கும் W.D. நைல்ஸ் அவர்களின் வாழ்க்கைச் சரித்திரத்தை சு. இரத்தினசாமி ஐயர் பின்வருமாறு எழுதுகிறார்.

"இப்பேரறிஞருடைய சந்ததி வரலாற்றை இங்குள்ளாரிடம் விசாரித்த போது எமக்கு விபரமாகக் கூறுவாரில்லை. ஆகவே யாம் ஒரு வயோதிபரிடம் சென்று விசாரித்த பொழுதுதான் அவர் சிலவற்றைத் தெரிவித்தார். அதை இங்கு தருகிறோம். அதாவது புன்னாலைக் கட்டுவன் என்னுமிடத்தில் வேளாண் மரபிலே உதித்த வேலாயுதம் என்று ஒருவர் இருந்ததாகவும், இவருக்குக் கதிரேசன் என்ற ஒரு புத்திரன் இருந்ததாகவும், இக்காலத்தில் இவர் மிஷனரியிற் சேர்ந்து கல்வி கற்றுக் கிறிஸ்தவ மதத்தைத் தழுவி 'Nathaniel Niles' என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றிருந்தாரென்றும், இந்த நதானியல் நைல்ஸுக்கு ஜோன் நைல்ஸ் என்றும், டானியல் பூர் நைல்ஸ் என்றும், சாமுவல் நைல்ஸ் என்றும் மூன்று புத்திரர்கள் உண்டென்றும் தெரிவித்தார். இந்த மூவருள் டானியல் பூர் (Daniel Poor) என்பவர் வட்டுக்கோட்டை மிஷன் பாடசாலையில் கல்வி கற்று அரங்கேறியதாகவும், அக்காலத்திலிருந்த பாதிரியாரைத் தமக்குத் துணையாகக் கொண்டு வட்டுக்கோட்டையிற்றானே

ஹைஸ்கூல் என்ற நாமத்துடன் ஓர் வித்தியாசாலையைத் ஸ்தாபித்து பல மாணவர்களுக்குக் கல்வி கற்பித்து உலகில் நற்கீர்த்தி பெற்று விளங்கினாரென்றும், இவருடைய புத்திரரே இப்பொழுது நீதவானாக இருக்கின்றாரென்றும் அறியலானோம். ஆகவே சீமான் W.D. நைல்ஸ் அவர்களுடைய திறமையைப் பற்றி பலரும் மெச்சியதால் இப்பேரறிஞரை யாமும் நன்கு மதித்து எழுதலானோம். இவர் யாழ்ப்பாணத்தில் பலகாலம் பிரபல நியாயதுரந்தராக இருந்து பிரக்யாதி பெற்று விளங்கினார். இவருடைய திறமையை நன்குணர்ந்த அரசினர், 'டிஸ்திறிக்' நீதிபதியாக நியமித்தனர். இவர் இதுகாறும் மட்டக்களப்பு, சிலாபம், திரிகோணமலை என்னுமிடங்களிற் கடமை பார்த்துப் பலராலும் நன்கு மதிக்கப் பெற்றார். வடமாகாணத்திலுள்ள நியாயவாதிகளுள் முதலாவதாக இவ்வுத்தியோகத்தைப் பெற்றவர் இவர் ஒருவரேயாம். இவர் ஆழ்ந்த அறிவும், அமைதியான போக்கும், விவேக புத்தியும், சாந்த குணமும், மிக்க பொறுமையுடையவராகவும் காணப்படுகின்றார்."

W.D. நைல்ஸ் அவர்களின் வாழ்க்கைச் சரித்திரம் சட்டத்துறையில் பிரகாசித்த தமிழர்களுள் ஒருவரின் வாழ்க்கையின் உயர்ச்சியைச் சுருக்கமாகக் குறிப்பிடுகின்றது. இலங்கைச் சட்டக்கல்லூரி 1872இல் ஆரம்பிக்கப்பட்ட பின்னருள்ள ஏறக்குறைய 50 ஆண்டுக்காலப் பகுதியில் (1872-1930) உருவாக்கம் பெற்ற சட்டத்துறை நிபுணத்துவமுடைய நீதிபதிகள், நியாயதுரந்தர்கள் (Proctors and Advocates) ஆகிய உயர் தொழில் பிரிவினர் கொழும்புத் தமிழ்ச் சமூகத்தின் மிக முக்கியமான ஆளுமைகளாகப் பிரகாசித்தனர். சு. இரத்தினசாமி ஐயரின் நூல் இந்த ஆளுமைகள் பலர் பற்றிய விவரிப்பைத் தருகின்றது.

மருத்துவத்துறை உயர் தொழில் வகுப்பினர்

உயர்தொழில் வகுப்பினரில் சட்டத்துறையினருக்கு அடுத்த நிலையில் மருத்துவத்துறையில் பிரகாசித்த தமிழர்கள் விளங்கினர். மருத்துவத் துறையில் யாழ்ப்பாணத்தவர்கள் வியத்தகு முன்னேற்றத்தை அடைந்தனர். எஸ்.எவ். கிரீன் (1822-84) என்னும் அமெரிக்கர் 1848ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் மானிப்பாய் என்னும் இடத்தில் மருத்துவக் கல்லூரி ஒன்றை நிறுவி யாழ்ப்பாணத்து இளைஞர்கள் பலரை மேலைத்தேச மருத்துவ முறையில் பயிற்றுவித்தார். 1870ஆம் ஆண்டில் கொழும்பில் இலங்கை மருத்துவக் கல்லூரி அரசாங்கத்தால் தொடக்கப்பட்ட பொழுது, கிரீனின் மாணவர்கள் கொழும்புக்கு மாற்றப்பட்டனர். 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி தொடக்கம் யாழ்ப்பாணத்தின் பல்வேறு கிராமங்களையும் சேர்ந்த இளைஞர்கள் மருத்துவக் கல்வியைப் பெற்று தனியார் துறை மருத்துவ சேவையிலும் அரச சேவையிலும் பிரகாசித்தனர். இது பற்றிக் குமாரி ஜயவர்த்தன பின்வருமாறு கூறுகிறார்.

"முன்னிலையில் திகழ்ந்த மருத்துவர்களுக்கு சில உதாரணங்களைக் கூறலாம். Dr. M.R. றொக்வூட் (பிறப்பு 1843) சென்னை மருத்துவக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவர். 40 ஆண்டுகள் வரை இவர் அரச மருத்துவமனைகளில் பணியாற்றினார். Dr. S.C. போல் (பிறப்பு 1872) L.R.C.P., F.R.C.S. போன்ற உயர் பட்டங்களைப் பெற்றார். அவர் அரச சேவையில் உயர்ச்சி பெற்றுத் தனிச்சிறப்புகள் அடைந்ததோடு, மருத்துவக் கல்லூரியில் ஆசிரியராகவும் பணியாற்றினார். Dr. M. சின்னத்தம்பி (பிறப்பு 1859) F.R.C.S. (எடின்பேர்க்), M.D. (பிரஸ்ஸல்ஸ்) ஆகிய பட்டங்களைப் பெற்றதோடு டி சொய்சா மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நிபுணராகவும் சிறப்புறப் பணியாற்றினார். Dr. E.V. ரட்ணம் மருத்துவக் கல்வியை முடித்த பின் 1900ஆம் ஆண்டு முதல் அரசுப் பொது மருத்துவமனையில் கடமையாற்றத் தொடங்கினார். பின்னர் 1906ஆம் ஆண்டில் தனது சொந்த மருத்துவமனையை ஆரம்பித்தார். Dr. யொனதன் ஹோமர் (பிறப்பு 1878) தமது மருத்துவமனையை ஆரம்பிக்கும் முன்னர் அரச மருத்துவராகப் பணிபுரிந்தார். Dr. முத்துக்குமாரு (பிறப்பு 1865) அபர்டீன் சென்று கல்வி கற்றார். அவர் தனியார் மருத்துவமனையைத் தாபித்து அதன் மூலம் விசாலமான சேவையை வழங்கினார். 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிறதுறைகளிலும் யாழ்ப்பாணத்தவர்கள் தடம் பதித்தனர். சட்டத்துறை, பொறியியல்துறை என்பவற்றிலும் பிற உயர் தொழில்களிலும் இவர்கள் பிரகாசித்தனர். யாழ்ப்பாணத்தின் இரண்டாம் நிலைக் கல்விக்குரிய பாடசாலைகள் தரமான கல்வியை வழங்கின. இத்தரமான கல்வி யாழ்ப்பாணத்தவர்களின் உயர்ச்சிக்குக் காரணமாக அமைந்தது. இந்தியாவிற்கோ அல்லது பிரித்தானியாவிற்கோ சென்று மேற்படிப்பையும் அவர்கள் மேற்கொண்டனர்."

வர்த்தகம், வங்கித்தொழில் - இடைத்தரகர்கள்

உயர்தொழில் துறைகளில் புறோக்கர்கள், சிறாப்பர்கள், காசாளர்கள் என்னும் பதவிகளில் இருந்த தமிழர்களைத் தனித்த ஒரு பிரிவினராக நோக்குதல் வேண்டும். கொழும்புத் தமிழ்ச் சமூகத்தில் புறோக்கர்கள், சிறாப்பர்கள், காசாளர்கள், கொமிசன் ஏஜன்டுகள் போன்றோர் வகித்த முக்கியத்துவம் குறித்து சு. இரத்தினசாமி ஐயர் நன்கு உணர்ந்திருந்தார் என்பதை இந்நூலினைப் படிப்போர் தெரிந்துகொள்வர்.

குமாரி ஜயவர்த்தன அவர்கள் யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட சிறாப்பர்கள், காசாளர்கள், புறோக்கர்கள் ஆகியோர் கொழும்பு நகரில் மிகுந்த செல்வாக்குள்ள நபர்களாக இருந்தனர் என்பதை 'Nobodies to Somebodies' என்ற நூலின் 11ஆம் அத்தியாயத்தில் 'வர்த்தகம், வங்கித்துறைகளின் தரகர்களும், நடுவர்களும்' (Intermediaries in Commerce and Banking) என்னும் தலைப்பில் விரிவாக எழுதியுள்ளார் (தமிழ்மொழிபெயர்ப்பு நூல், பக். 187-190). அவரது நூலில் இருந்து சில தகவல்களை மேற்கோளாகக் கீழே தந்துள்ளோம். "கொழும்பு நகரின் செல்வாக்கு மிக்க மனிதர்களுள் 'அந்நிய உடைமையாளர்களின்' வர்த்தக நிறுவனங்களிலும், முகவர் இல்லங்களிலும் (ஏஜன்சி ஹவுஸஸ்) தரகர்கள், காசாளர்கள், சிறாப்பர்கள் ஆகிய இடைநடுவர்களாகப் பணிபுரிந்த யாழ்ப்பாணத் தமிழர்கள் முக்கியமான ஒரு குழுவாக விளங்கினர்" என அவர் குறிப்பிடுகிறார் (பக். 187). "இவ்வங்கித்துறையும் புறோக்கர் தொழிலும் சிங்களவர்களால் உள்நுழைந்து வெற்றிகளைக் காண முடியாத துறையாக இருந்தன" என்றும் அவர் குறிப்பிடுகிறார் (பக். 187). "இலங்கையில் கோப்பித்தொழில் செய்கையின் ஆரம்பகட்டத்தில் வங்கித் தொழிலும் வங்கி முறைமையும் வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. இக்காலத்தில் தரகர்கள் முக்கியமான சேவையொன்றை வழங்கினர். உண்டியல்களைக் கழிவு செய்யும் இச்சேவையினால் கொமிசன், வட்டி என்பன லாபமாகக் கிடைத்தன. யாழ்ப்பாணத்தில் கல்விகற்றோருக்கு இத்துறையில் சாதகமான வாய்ப்புகள் இருந்தன. அவர்களின் ஆசிரியர்களான அமெரிக்கர்கள் யாழ்ப்பாணத்து இளைஞர்களுக்குக் கல்வியை ஊட்டியதோடு வர்த்தகம் தொடர்பான திறன்களையும் அவர்களிடம் விதைத்தனர். ஐரோப்பியரல்லாத வர்த்தகர்களான செட்டிகள், முஸ்லிம்கள் ஆகியோர் தமிழ்பேசும் வர்த்தகர்களாதலால் யாழ்ப்பாணத் தமிழர்கள் இத்துறையில் பிறரை விட இலகுவாக நுழைந்து முன்னேற முடிந்தது (பக். 187-188)."

சிறாப்பர் கதிரவேலு குடும்பம்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த புரோக்கர்களில் கதிரவேலு குடும்பத்தினர் பிரபலம் மிக்கவர்கள் (பக். 189) எனக் குமாரி ஜயவர்த்தன குறிப்பிடுகிறார். கதிரவேலு பற்றியும் அவரது புத்திரர் ஞானசேகரம் பற்றியும் குமாரி ஜயவர்த்தன அவர்கள் கூறியிருப்பதை அடுத்து நோக்குவோம்.

"ஓரியன்டல் வங்கியின் பிரதம சிறாப்பராக இருந்த கதிரவேலு தனது இரு மகன்மாரையும் அத்துறையில் ஈடுபட வைத்தார். ஞானசேகரம் 1879ஆம் ஆண்டு தொடக்கம் கண்டியில் ஓரியன்டல் வங்கியில் உதவியாளராகப் பணியாற்றினார். பின்னர் ஹொங்கொங் அன்ட் ஷங்காய் வங்கியில் பணியாற்றினார். இறுதியில் இந்தியன் நாஷனல் வங்கியில் சேர்ந்து பணியாற்றினார். கின்சி வீதியில் 'மங்கள கிரி' என்ற மனையில் வசித்த ஞானசேகரம், ரேஸ் கிளப் உறுப்பினராகவும் இருந்தார். இவருடைய சகோதரன் கதிரவேலு நமசிவாயம் இலங்கைப் புகையிரதப் பகுதியில் தலைமைச் சிறாப்பராகப் பணியாற்றினார். பிற்காலத்தில் ஹொங்கொங் அன்ட் ஷங்காய் வங்கியின் பிரதம காசாளரானார். அவர் நிலங்களைக் கொள்வனவு செய்வதில் முதலீடு செய்தார். 1927இல் நமசிவாயம் 617 ஏக்கர் தென்னை, 273 ஏக்கர் ரப்பர் தோட்டங்களை உடைமை கொண்டிருந்தார் (ஜயவர்த்தன 2015: 189)."

குமாரி ஜயவர்த்தன அவர்களின் ஆய்வுக் குறிப்புகளின் உதவியோடு, கதிரவேலு குடும்பம் பற்றியும், ஞானசேகரம் பற்றியும் மேன்மக்கள் சரித்திரம் ஆசிரியர் சு. இரத்தினசாமி ஐயர் 3 பக்கங்களில் (பக். 42, 44, 45) தந்திருக்கும் விவரங்களை ஒப்பிட்டு வாசித்தல் பயனுடையது. நூலின் 42ஆம் பக்கத்தில் சமாதான நீதிபதி சீமான் க. ஞானசேகரம் J.P. அவர்களின் புகைப்படம் தரப்பட்டுள்ளது. கதிரவேலு அரசாங்கத்தில் அதிகாரம் படைத்த பிரபுவாகவும், தருமம் கொடுப்பதில் சிறந்த கொடை வள்ளலாயும், சிற்றரசனுக்கு ஒப்ப விளங்கியதாகவும் சு. இரத்தினசாமி ஐயர் குறிப்பிடுகிறார். கதிரவேலு குடும்பத்தினர் யாழ்ப்பாணத்தில் தமது பூர்வீக கிராமங்களோடு உள்ள தொடர்பை வலுப்படுத்தியிருந்தனர். இக்குடும்பம் நவாலிப் பகுதிக்கு அதிபதிகளாய் இருந்தனர் என சு. இரத்தினசாமி அவர்கள் குறிப்பிடுகிறார். கதிரவேலுவின் மகன் ஞானப்பிரகாசம் தமது தந்தையைப் போல் தானதருமங்களை இயன்ற மட்டும் செய்து புகழ் பெற்றார் என்று புகழ்ந்துரைக்கிறார். ஜெனரல் ஆஸ்பத்திரியில் தரும வைத்தியசாலை ஒன்றை ஏற்படுத்தியவர்; யாழ்ப்பாண இந்துக் கல்லூரி, கீரிமலைச் சிவன் கோவில், களவோடை அம்மன் கோவில் ஆகியவற்றின் திருப்பணிகளுக்கு உதவியவர் என்றும் குறிப்பிடுகிறார். ஞானசேகரத்தின் புத்திரராக விளங்கிய Dr. G. விக்னராஜா பற்றியும் குறிப்புகளை இரத்தினசாமி ஐயர் பதிவு செய்துள்ளார் (பக். 302-303).

1897ஆம் ஆண்டு பிறந்த விக்னராஜா, கேம்பிரிட்ஜ் பரீட்சைகளில் தேர்வடைந்து மெடிக்கல் கல்லூரியில் வைத்திய மாணவராயிருந்து, இங்கிலாந்துக்குச் சென்று உயர்தரக் கல்வியைப் பெற்று LRCP (London), MRCS (Eng.) ஆகிய உயர்பட்டங்களைப் பெற்றதையும், டாக்டராகப் பணியாற்றியதையும், மீண்டும் ஒருமுறை கல்விக்காக இங்கிலாந்துச் சென்று BarristeratLaw பட்டத்துடன் திரும்பியதையும் குறிப்பிடுகிறார்.

முன்னேற்றத்திற்கான தடைகள்

19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட முதலாளித்துவ உற்பத்திமுறையின் வளர்ச்சியை ஆராய்ந்த பொருளியல் வரலாற்று ஆசிரியர்கள் நான்கு துறைகள் முதலாளித்துவ உற்பத்தி முறையில் முக்கிய வகிபாகம் பெற்றதை எடுத்துக்காட்டியுள்ளனர். அவையாவன,

1. சாராய உற்பத்தியும் முதலீடுகளும்
2. பெருந்தோட்ட முதலீடுகள்
3. காரியச் சுரங்க அகழ்வுத்தொழில்
4. ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம்

இந்நான்கு துறை வளர்ச்சியின் குவிமையமாக இலங்கையின் மத்திய மாகாணமும், கொழும்பு நகரை மையமாகக் கொண்ட மேற்கு மாகாணமும் விளங்கின. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மேற்குறித்த துறைகளின் முதலீடுகளுக்கும், வளர்ச்சிக்கும் வாய்ப்புகள் இருக்கவில்லை. இதுபற்றி குமாரி ஜெயவர்த்தன அவர்கள் கூறியிருக்கும் கருத்துகளை எமது வார்த்தைகளில் சுருக்கமாகக் கீழே குறிப்பிட்டுள்ளோம்.

"இலங்கையில் 19ஆம் நூற்றாண்டில் மூலதன ஆக்கம் ஏற்படுவதற்கு பிரதான வழிகளாக இருந்தவை என்று கூறத்தக்க வழிகள் எதுவும் வடக்குக் கிழக்கு மாகாணத் தமிழர்களுக்குக் கிடைக்கவில்லை. மதுபான உற்பத்தித் தொழில், பெருந்தோட்ட முதலீடுகள், காரியச் சுரங்க அகழ்வு, ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் ஆகியனவே அக்காலத்தின் பிரதான முதலீட்டு வழிகளாக இருந்தன. வடக்குக் கிழக்கு மக்கள் தொகை அடர்த்தி குறைவாக இருந்த காரணத்தால் வர்த்தகம், மதுபான உற்பத்தி வியாபாரம் ஆகிய இருதுறைகளிலும் வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டவையாய் இருந்தன. இயற்கை வளங்களில் ஒன்றான காரியம் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இருக்கவில்லை. கோப்பி, தேயிலைத் தோட்டங்கள் மத்திய மலைநாட்டிலேயே உருவாக்கப்பட்டன." மூலதன ஆக்கத்திற்கும் முதலீட்டுக்குமான வாய்ப்புகள் தடைப்பட்ட நிலையில் ஆங்கிலக் கல்வியின் துணைகொண்டு தமிழர்கள் உயர் தொழில்களிலும், புறோக்கர்கள் என்னும் இடைத்தரகர் தொழிலிலும் முன்னிலைக்கு வந்தனர்.

விரிந்த நோக்கு

மேன்மக்கள் சரித்திரம் நூலின் ஆசிரியர் சு. இரத்தினசாமி ஐயர் 390 வரையான தமிழ்ப் பெருமக்களின் வாழ்க்கைச் சரிதக் குறிப்புகளைத் தமது நூலில் தந்துள்ளார் என்பதை முன்னர் குறிப்பிட்டோம். கிறிஸ்தவர்கள், கத்தோலிக்கர், சைவர்கள் என எல்லா மதப்பிரிவினரையும் சேர்ந்த மேன்மக்களின் சரிதம் இந்நூலில் கூறப்பட்டுள்ளது. அத்தோடு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, சிலாபம், புத்தளம், கொழும்பு, மலையகம் என இலங்கையின் தமிழர்கள் வாழும் பகுதிகள் யாவற்றினதும் பெருமக்களைப் பற்றிய விவரங்களை நூலாசிரியர் தருகிறார். அவர் தம் நூலில் சேர்த்துக்கொண்ட பெருமக்களின் அட்டவணையை வகுத்துக்கொள்வதில் நடுவுநிலை, விரிந்தநோக்கு என்பனவற்றை வெளிப்படுத்தியுள்ளார்.

M.A. அருளானந்தம் (சிலாபம்), C. அரியநாயகம் (மாத்தளை), பிரிட்டோ பபாப்பிள்ளை (கொழும்பு), A.C. செல்லையா (திருகோணமலை), A.S. இளையதம்பி (பொலிஸ் சுப்பிரிண்டன்ட், மட்டக்களப்பு), கதிரைவேற்பிள்ளை (பொறியியலாளர், கல்முனை), ஈ.ஆர். தம்பிமுத்து (சட்டசபை உறுப்பினர், மட்டக்களப்பு), R. குமாரசாமிச் செட்டியார் (வர்த்தகர், கொழும்பு), வ. மயில்வாகனம் (முல்லைத்தீவு/ திருகோணமலை), பெரி. சுந்தரம் (மலையகம்) ஆகியோர் பற்றிய பதிவுகள் சில உதாரணங்களாகும். நூலாசிரியர் சைவ அபிமானம் மிக்கவராயினும் கிறிஸ்தவம், கத்தோலிக்கம் என்னும் இருமதப் பிரிவினர்களையும் சார்ந்தவர்களான மேன்மையும் கீர்த்தியும் மிக்க பெரியோர்களின் வாழ்க்கைச் சரிதங்களையும் நடுவுநிலையோடு விவரித்துக் கூறுகிறார். றொக்வூட், நைல்ஸ், சரவணமுத்து, S.C. போல், A.R. ஹலக், திசவீரசிங்கம், புவிராஜசிங்கம் முதலியோரது வாழ்க்கைக் குறிப்புகள் இந்நூலில் தரப்பட்டுள்ளன. இவை கிறிஸ்தவர்களும், கத்தோலிக்கர்களும் தமிழர் சமூக வாழ்வியலிலும், கல்வி, பண்பாட்டுத் துறைகளிலும் ஆற்றிய அரும்பணிகளை எடுத்துரைப்பனவாய் அமைந்துள்ளன.

பொன்னம்பலம் - குமாரசுவாமி குடும்பம்

19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையின் சமூக, அரசியல் வாழ்வில் முதன்மை பெற்றிருந்த சேர். பி. இராமநாதன் (1851-1930), சேர். பி. அருணாசலம் (1853-1930) ஆகியோரின் வாழ்க்கைச் சரிதக் குறிப்புகள் நூலாசிரியரால் விவரமாகத் தரப்பட்டுள்ளன. அ. மகாதேவ, ஆர். சிறிபத்மநாதன் ஆகிய பல உறவினர்களின் வாழ்க்கைக் குறிப்புகளும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. நூலின் அனுபந்தம் என்னும் பகுதியில் 'கௌரவ சேர். அருணாசலம் இலங்கை அரசாங்க முறையைச் சீர்செய்து, இராச்சியத்தைத் திருத்திய விதங்கள்' என்னும் விரிவான கட்டுரையும் (பக். 304-310) நூலாசிரியரால் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது.

கொழும்புத் தமிழர்களான மேன்மக்கள் குழுமத்தின் வரலாற்றைச் சான்றாதாரங்களின் அடிப்படையில் தமிழில் எழுதும் முயற்சியை மேற்கொண்டவர் என்ற வகையில் சு. இரத்தினசாமி ஐயரவர்கள் முன்னோடியான வரலாற்று ஆய்வாளராக விளங்குகிறார்.

இலங்கையின் வடக்கு – கிழக்கு மாகாணங்கள் மூன்று தசாப்த ஆயுத மோதலின் பின் மீட்சியின் பாதையில் இருக்கின்றன. ஆனால் அந்த மீட்சியின் நடுவே ஒரு புதிய நெருக்கடி வளர்கிறது: சூழல் சீரழிவு. யாழ்ப்பாணத்தில் குடிநீர் வறட்சி, மன்னாரில் கடற்கரை அரிப்பு, முல்லைத்தீவில் வெள்ளம், வன்னியில் நில உரிமை மறுப்பு இவை ஒரே வேர் கொண்ட பிரச்சினைகளின் வெவ்வேறு வெளிப்பாடுகள். இந்த நெருக்கடிகள் அனைவரையும் சமமாகப் பாதிப்பதில்லை. 46,000 போர் விதவைகள், 55,000 பெண் தலைமைக் குடும்பங்களைக் கொண்ட வடக்கில் சூழல் சீரழிவின் முதல் பலி பெண்களே. காலநிலை மாற்றம் பாலின நடுநிலையானதல்ல அது ஏற்கனவே இருக்கும் ஏற்றத்தாழ்வுகளை ஆழப்படுத்துகிறது என்பதை ‘வடக்கும் கிழக்கும் பசுமையும்: சூழல் நெருக்கடிகளும் பாலின நீதியும்’ எனும் இந்தத் தொடர் ஆதாரங்களுடன் காட்டுகிறது.

திட்டமிடாத துயரம்: வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சமூகங்களின் மீது வறட்சியின் தாக்கம் – பாலின நோக்கிலான ஓர் ஆய்வு

அஸாம் ஷா

மட்டக்களப்பைச் சேர்ந்த அஸாம் ஷா, விவசாய அறிவியலில் இளநிலைப் பட்டம் (B.Sc. Agriculture) பெற்றதையடுத்து, சுற்றுச்சூழல் இயற்கையியல் துறையில் முதுகலைப் பட்டம் (M.Sc. Ecology and Environmental Studies) பெற்றார். மேலும், தொழில்துறை சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு (Occupational Health and Safety) துறையில் டிப்ளோமாவும் பெற்றுள்ளார். தற்போது, கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டப் பீடத்தில் சர்வதேச சுற்றுச்சூழல் சட்டம் மற்றும் காலநிலை மாற்றச் சட்டம் (LLM – International Environmental Law and Climate Change) தொடர்பாகப் பயின்று வருகிறார்.
விவசாயம், சுற்றுச்சூழல் இயற்கையியல் மற்றும் சட்டம் ஆகிய மூன்று துறைகளில் பெற்றுள்ள கல்வி மற்றும் ஆய்வு அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு, சுற்றுச்சூழல் நீதி தொடர்பான சிக்கலான விடயங்களை எளிய தமிழில் மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார். மேலும், கூடங்குளம் அணுமின் நிலையத்தின் விரிவாக்கம் இலங்கையில் ஏற்படுத்தக்கூடிய எல்லைகடந்த சுற்றுச்சூழல் விளைவுகள், UNCLOS மற்றும் சர்வதேசச் சட்டத்தின் கீழ் அரசுகளுக்குள்ள கடமைகள் குறித்து ஆய்வுக் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார்.

சர்வதேச சுற்றுச்சூழல் சட்டம், மனித உரிமைச் சட்டம் மற்றும் தென்னாசிய மூன்றாம் உலக அணுகுமுறை (TWAIL) ஆகியவற்றை ஒருங்கிணைத்த பன்முகக் கண்ணோட்டத்தில் தனது ஆய்வுகளையும் எழுத்துகளையும் முன்னெடுத்து வரும் இவர், வடக்கு–கிழக்கு மக்களின் வாழ்வுரிமையும் சுற்றுச்சூழல் நீதியும் நிலைநாட்டப்பட வேண்டும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் கல்வி, சட்ட விழிப்புணர்வு மற்றும் சமூக ஈடுபாடு ஆகிய மூன்று தளங்களிலும் தொடர்ந்து செயலாற்றி வருகிறார்.

முன்னுரை: மழையை எதிர்பார்த்துக் காயும் நிலங்கள்

யாழ்ப்பாணத்தின் வெளிச்சம் நிறைந்த வயல்வெளிகளில் நிற்கும் ஒரு பெண் விவசாயியின் கண்களில் தெரிவது வெறும் வறட்சி அல்ல — அது ஒரு முழு அமைப்பின் தோல்வி. வானத்தை நோக்கிய அவரது பார்வையில், தாமதமாகும் பருவமழை மட்டுமல்ல; தன்னை 'விவசாயி' என்று அங்கீகரிக்க மறுக்கும் அரசு பதிவேடுகளும், போரில் சிதைந்து இன்னும் முழுமையாக மீளக் கட்டப்படாத நீர்ப்பாசன அமைப்புகளும், காலநிலை மாற்றத்தின் சுமையை சமமற்ற முறையில் சுமத்தும் சமூகக் கட்டமைப்புகளும் பிரதிபலிக்கின்றன.

இலங்கையின் வடக்கு மாகாணம் இன்று எதிர்கொள்ளும் வறட்சி ஓர் 'இயற்கை அனர்த்தம்' அல்ல. அது திட்டமிடல் தோல்வியின், கொள்கைப் புறக்கணிப்பின், காலநிலை நீதி மறுப்பின் விளைவு. இந்தக் கட்டுரை, மீண்டும் மீண்டும் நிகழும் இந்த வறட்சிகளின் வரலாற்றையும், அதன் பொருளாதார சமூகத் தாக்கங்களையும், குறிப்பாக பெண்கள் மீதான சமமற்ற சுமையையும் விரிவாக ஆராய்கிறது.

1. மீண்டும் மீண்டும் வரும் பேரிடர்: ஒரு தொடர்கதை

வடக்கு மாகாணத்தின் வறட்சி வரலாறு தற்செயலான நிகழ்வுகளின் தொகுப்பு அல்ல — அது ஒரு தெளிவான, அச்சுறுத்தும் முறைமையாக (Pattern) கடந்த பத்தாண்டுகளில் தொடர்ந்து வெளிப்பட்டு வருகிறது. 2014ஆம் ஆண்டு நாடு தழுவிய வறட்சியில் வடக்கு மாகாணம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஒன்றாகப் பதிவானது; அந்த ஆண்டு மஹா போக நெல் சாகுபடி கணிசமாக வீழ்ச்சியடைந்து, ஆயிரக்கணக்கான விவசாயக் குடும்பங்கள் எதிர்பாராத நிதி நெருக்கடிக்குள் தள்ளப்பட்டன.

இதைத் தொடர்ந்து 2016-2017ஆம் ஆண்டுகளில் இலங்கை நாற்பது ஆண்டுகளில் காணாத மிக மோசமான வறட்சியைச் சந்தித்தது. அந்த வறட்சியில் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் நாடு முழுவதும் பாதிக்கப்பட்டனர்; வடக்கு, வட மத்திய, கிழக்கு மாகாணங்களில் நீர்த்தேக்கங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வறண்டு, உணவுப் பாதுகாப்பு நெருக்கடி நாடளாவிய அளவில் உருவானது. 2019ஆம் ஆண்டு யாலா போக சாகுபடி காலத்திலும் மழைப் பற்றாக்குறை தலைதூக்கியது, இது வடக்கின் விவசாயிகளை மீண்டும் கடன் சுழலுக்குள் தள்ளியது — முந்தைய வறட்சியில் ஏற்பட்ட கடன்களை இன்னும் தீர்க்காத நிலையிலேயே புதிய கடன் சுமையை சுமக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

2023ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நிலைமை மிக மோசமான கட்டத்தை எட்டியது. சுமார் 1,50,000 பேர் குடிநீரின்றித் தவித்தனர்; யாழ்ப்பாணம், அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மூன்று மாவட்டங்களிலும் பாதிப்பு 85% வரை பதிவானது. குடிநீர் தட்டுப்பாடு தீவிரமடைந்ததால், அரசு நீர் வழங்கல் வாகனங்கள் மூலம் அவசரகால விநியோகத்தை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானது — இது நிரந்தரத் தீர்வு அல்ல, தற்காலிக நிவாரணம் மட்டுமே. 2024ஆம் ஆண்டிலும் வறட்சி நிலைமைகள் மீண்டும் தலைதூக்கின; பருவமழை முறைமைகளின் நிலையற்ற தன்மை தொடர்ந்து பிரதேச மக்களை அச்சுறுத்தி வருகிறது.

இந்தத் தொடர்கதை நமக்கு உணர்த்தும் மையச் செய்தி இதுவே: இது இனி 'அசாதாரண' நிகழ்வு அல்ல — இது புதிய இயல்பு (New Normal) ஆக மாறிவிட்டது. ஐந்து ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை வந்த வறட்சி, இப்போது

Image Source - sundaytimes.lk

இரண்டுமூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை வருகிறது. காலநிலை மாற்றம் குறித்த அரசிடைக் குழுவின் (IPCC) அறிக்கைகள் தெற்காசியாவில் மழைப்பொழிவு முறைமைகளின் தீவிர மாறுபாடுகளை — அதாவது கடும் வறட்சியும் கடும் வெள்ளமும் மாறி மாறி வருவதை — முன்னரே எச்சரித்துள்ளன. வடக்கு இலங்கை அந்த முன்னறிவிப்பின் நேரடி, வலி நிறைந்த சாட்சியாக மாறியுள்ளது.

2. வறண்ட வலயத்தின் புவியியல் பாதிப்பு: ஏன் வடக்கு?

இலங்கையின் வறண்ட வலயத்தைச் சேர்ந்த வடக்கு மாகாணம், ஆண்டின் பெரும்பாலான மழைப்பொழிவை அக்டோபர் முதல் ஜனவரி வரை வீசும் வடகிழக்கு பருவமழை மூலமே பெறுகிறது. வருடத்தின் பெரும்பகுதியில் மற்ற பருவமழைகளின் பங்களிப்பு மிகக் குறைவாகவே இருப்பதால், இந்த

ஒற்றைப் பருவமழைச் சார்பு நிலை மாகாணத்தை காலநிலை மாறுபாடுகளுக்கு மிகவும் எளிதில் பாதிக்கப்படக்கூடியதாக்குகிறது. பருவமழை ஒரு மாதம் தாமதமானாலும், அல்லது எதிர்பார்த்த அளவை விடக் குறைவாகப் பொழிந்தாலும், அதன் விளைவு முழுச் சாகுபடிக் காலத்தையுமே பாதிக்கும் அளவுக்குத் தீவிரமானது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் நிலைமை இன்னும் சிக்கலானது. ஆறுகள் இல்லாத இந்தக் குடாநாடு முழுமையாக நிலத்தடி நீரையே நம்பியுள்ளது. சுண்ணாம்புக் கல் அடுக்குகளில் அமைந்த இந்த நிலத்தடி நீர் ஆதாரம், ஒரே நேரத்தில் மூன்று திசைகளில் இருந்து அழுத்தத்தை எதிர்கொள்கிறது: மழைப் பற்றாக்குறையால் நீர் மறு நிரப்பீடு குறைவது, வேளாண்மைக்கும் குடிநீருக்குமான தேவை காரணமாக அளவுக்கதிகமாக நீர் உறிஞ்சப்படுவது, கடல்நீர் ஊடுருவல் (*Saltwater Intrusion*) படிப்படியாக நன்னீர் அடுக்குகளுக்குள் நுழைவது. இதன் விளைவாக, வறட்சிக் காலங்களில் கிணறுகளின் உப்புத்தன்மை கூர்மையாக அதிகரித்து, குடிநீரும் விவசாய நீரும் ஒரே நேரத்தில் பறிபோகும் இரட்டை நெருக்கடி உருவாகிறது.

3. நெல்லும் ஏழ்மையும்: பொருளாதாரச் சங்கிலித் தொடர்

வறட்சியின் தாக்கம் வயல்களில் தொடங்கினாலும், அது அங்கு நிற்பதில்லை. உலக வங்கியின் 2018ஆம் ஆண்டு ஆய்வு மதிப்பீட்டின்படி, வறட்சியால் ஏற்படும் நெல் விளைச்சல் வீழ்ச்சி, பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஏழ்மையை 12% முதல் 26% வரை அதிகரிக்கக்கூடும். இந்த எண்ணிக்கையின் பின்னால் ஒரு தெளிவான பொருளாதாரச் சங்கிலித் தொடர் உள்ளது, அதைப் படிப்படியாகப் புரிந்துகொள்வது அவசியம்.

முதலில், விளைச்சல் வீழ்ச்சி விவசாயக் குடும்பத்தின் நேரடி வருமான இழப்பாக மாறுகிறது. அந்த வருமான இழப்பை ஈடுசெய்ய, குடும்பங்கள் அடுத்த சாகுபடிக்கான விதை, உரம், தொழிலாளர் செலவுகளுக்காக கடன் வாங்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகின்றன — பெரும்பாலும் இது முறைசாரா, உயர் வட்டி வீதம் கொண்ட கடனாகவே இருக்கும். ஏனெனில் முறையான வங்கிக் கடன் பெறுவதற்கான ஆவணங்களோ பிணையமோ பல சிறு விவசாயிகளிடம் இருப்பதில்லை. இந்தக் கடன் சுமை காலப்போக்கில் தாங்க முடியாத அளவை எட்டும்போது, குடும்பங்கள் தமது நிலத்தை அடமானம் வைக்கவோ அல்லது முழுமையாக விற்கவோ நிர்ப்பந்திக்கப்படுகின்றன. இது அவர்களை நிலமற்ற தொழிலாளர் நிலைக்குத் தள்ளுகிறது.

இந்தத் தனிப்பட்ட குடும்ப நெருக்கடிகள் திரண்டு கிராமியப் பொருளாதாரம் முழுவதையும் சுருக்குகின்றன — விவசாயம் சாராத சிறு தொழில்களும், அதாவது கடைகள், போக்குவரத்துச் சேவைகள், சிறு கைவினைத் தொழில்கள் ஆகியவையும் வாடிக்கையாளர்களை இழந்து வீழ்ச்சியடைகின்றன. இறுதியில், இந்தப் பொருளாதாரச் சுருக்கம் இடப்பெயர்வுக்கு வழிவகுக்கிறது: வேலைவாய்ப்புத் தேடி இளைஞர்கள் நகரங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் புலம்பெயர்கின்றனர், கிராமங்களில் முதியோரும் பெண்களும் மட்டும் எஞ்சி, விவசாயத்தையும் குடும்பப் பொறுப்பையும் தனியாகச் சுமக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

போரில் இருந்து மீண்டு வரும் ஒரு பிரதேசத்திற்கு, இந்தச் சுழல் இரட்டைத் தண்டனையாகும். போரால் ஏற்கனவே சொத்துகளையும் சேமிப்புகளையும் இழந்த குடும்பங்களுக்கு, ஒவ்வொரு வறட்சியும் மீட்சியின் பாதையில் பல ஆண்டுகள் பின்னோக்கிச் செல்வதற்குச் சமம் — புதிதாகக் கட்டியெழுப்பிய குடும்ப நிலைத்தன்மை மீண்டும் சிதைந்து, மீட்சிச் செயல்முறையை மீண்டும் தொடங்க வேண்டிய நிலை உருவாகிறது.

4. போர்க்கால நீர் உட்கட்டமைப்பு: மறக்கப்பட்ட சூழல் பரிமாணம்

முப்பது ஆண்டுகால ஆயுத மோதலின் சுவடுகளைத் தவிர்த்துவிட்டு, வடக்கின் நீர் நெருக்கடியை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது. நூற்றாண்டுகள் பழமையான குளங்கள் — சிறிய நீர்த்தேக்கங்களை தொடர்ச்சியாக இணைக்கும் பாரம்பரிய நீர்த்தொடர் அமைப்புகள் (*Cascade Systems*) — வாய்க்கால்கள், அணைக்கட்டுகள் ஆகியவை போர்க்காலத்தில் முறையான பராமரிப்பின்றி படிப்படியாகச் சிதைந்தன. சில நேரடியாக இராணுவ நடவடிக்கைகளால் சேதமடைந்தன; வேறு பல வண்டல் மண் நிரம்பி, ஆண்டுகள் கடந்தும் அகற்றப்படாமல், தமது நீர்ச் சேமிப்புக் கொள்ளளவை படிப்படியாக இழந்தன.

போருக்குப் பிந்தைய மறுகட்டமைப்பு முயற்சிகளில் ஓர் அடிப்படைக் குறைபாடு உள்ளது: உட்கட்டமைப்பு மீளமைப்பு பெரும்பாலும் பொறியியல் கண்ணோட்டத்தில் மட்டுமே அணுகப்பட்டது — அதாவது எவ்வளவு வேகமாக, எவ்வளவு குறைந்த செலவில் கட்டமைப்பை மீண்டும் எழுப்பலாம் என்ற நோக்கில் மட்டுமே திட்டமிடப்பட்டது — சூழலியல் பரிமாணம் பெரிதும் புறக்கணிக்கப்பட்டது. பாரம்பரியக் குளக்கட்டு அமைப்புகள் வெறும் நீர்ச் சேமிப்புக்

கட்டமைப்புகள் அல்ல என்பதை இங்கு வலியுறுத்த வேண்டும்; அவை நிலத்தடி நீர் நிரப்புதல், வெள்ளக் கட்டுப்பாடு, உள்ளூர்ச் சூழல் சமநிலை ஆகியவற்றை ஒருங்கிணைத்த சிக்கலான சூழலியல் அமைப்புகள். இந்த முழுமையான பார்வையின்றி மேற்கொள்ளப்படும் எந்த மறுகட்டமைப்பும், காலநிலை மாற்றக் காலத்தின் தேவைகளை நீண்ட காலத்திற்குப் பூர்த்தி செய்யாது.

மேலும், சுற்றாடல் தாக்க மதிப்பீடுகள் (Environmental Impact Assessments) பல மறுகட்டமைப்புத் திட்டங்களில் முறையாக நடத்தப்படவில்லை, அல்லது நடத்தப்பட்ட இடங்களிலும் சம்பிரதாய நடைமுறையாக மட்டுமே கடந்து சென்றன. தேசிய சுற்றாடல் சட்டத்தின் (National Environmental Act) கீழான கடமைகள், 'அபிவிருத்தி அவசரம்' என்ற பெயரில் மீண்டும் மீண்டும் நீர்த்துப்போயின. இதன் நீண்டகால விளைவை இன்று நாம் மீண்டும் மீண்டும் வரும் வறட்சிகளாக அனுபவித்து வருகிறோம்.

Image Source - sundaytimes.lk

5. பாலினக் கோணம்: வறட்சியின் சமமற்ற சுமை

காலநிலை மாற்றம் பாலின நடுநிலையானது அல்ல. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் — போரினால் கணவரை இழந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் அதிக எண்ணிக்கையில் உள்ள பிரதேசங்களில் — வறட்சியின் சுமை பெண்கள் மீது சமமற்ற முறையில் விழுகிறது. இந்தச் சமமின்மையை மூன்று தனித்தனி, ஆனால் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்த கோணங்களில் பார்க்கலாம்.

5.1 வேலை இழப்பும் முறைசாரா வேலைகளுக்குத் தள்ளப்படுதலும்

வறட்சியால் விவசாய வேலைவாய்ப்புகள் — குறிப்பாக நடவு, களை எடுத்தல், அறுவடை போன்ற பெண்கள் பெருமளவில் ஈடுபடும் கூலி வேலைகள் — முதலில் மறைகின்றன. குடும்ப வருமானம் வீழ்ச்சியடையும் போது, பெண்கள் முறைசாரா, பாதுகாப்பற்ற வேலைகளுக்குத் தள்ளப்படுகின்றனர்: வீட்டு வேலை, சிறு வியாபாரம், கடல் உணவு பதனிடல், சில சமயங்களில் சுரண்டல் நிறைந்த தொழில் நிலைமைகள். இந்த வேலைகளில் சட்டப் பாதுகாப்பு இல்லை; சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு இல்லை; தொழிற்சங்கப் பிரதிநிதித்துவமும் இல்லை என்பதால் இந்த மாற்றம் பெண்களை மேலும் பாதிப்புக்குள்ளானவர்களாக ஆக்குகிறது.

இதற்கு இணையாக, வீட்டிற்குள் பெண்களின் சம்பளமற்ற பராமரிப்பு வேலையும் (Unpaid Care Work) அதிகரிக்கிறது. நீர் எடுக்கச் செல்லும் தூரம் அதிகமாகும் போது, அந்தக் கூடுதல் மணி நேரங்கள் — சில வேளைகளில் நாளொன்றுக்கு பல மணி நேரங்கள் — பெண்களின் நேரத்தில் இருந்தே கழிக்கப்படுகின்றன. இந்த நேரத்தை அவர்கள் வருமானம் ஈட்டும் வேலைக்கோ, ஓய்விற்கோ, அல்லது தமது பிள்ளைகளின் கல்விக்கு உதவுவதற்கோ பயன்படுத்த முடியாமல் போகிறது. சிறுமிகள் பள்ளிக்குப் பதிலாக நீர் கொண்டு வர அனுப்பப்படும் நிலைமைகளும் அவ்வப்போது தோன்றுகின்றன. இது சிறுமிகளின் கல்வியை நேரடியாகப் பாதிக்கிறது.

5.2 வெப்பமும் பெண்களின் உடல் நலமும்

'Earth Journalism Network' (2025) ஆவணப்படுத்தியுள்ளபடி, வெளிப்புற வேலைகளில் ஈடுபடும் பெண்கள் வெப்ப அழுத்தத்தால் (Heat Stress) குறிப்பிடத்தக்க உடல்நலப் பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர். இவற்றில் நீரிழப்பும் உப்புச் சமநிலைக் குலைவும் காரணமாக ஏற்படும் தசைப்பிடிப்புகள் (Heat Cramps), நீண்ட நேரம் வெயிலில் நிற்பதால் ஏற்படும் திடீர் வெப்ப மயக்கம் (Heat Syncope), நாள்பட்ட நீரிழப்பின் அறிகுறியாக தோன்றும் தொடர் தலைவலி ஆகியவை அடங்கும்.

பெண்களுக்கு இந்த ஆபத்து குறிப்பாக அதிகரிக்கப் பல காரணங்கள் உள்ளன. வயல்களிலும் உப்பளங்களிலும் மீன் பதனிடல் தலங்களிலும் நிழலின்றி நீண்ட நேரம் வேலை செய்ய வேண்டிய

கட்டாயம் ஒரு காரணம். கர்ப்பக் காலத்திலும் குடும்ப பொருளாதார நிர்ப்பந்தத்தால் வேலையைத் தொடர வேண்டிய நிலைமையும் மற்றொரு காரணம். மேலும், பொது இடங்களில் போதிய கழிப்பறை வசதி இல்லாததால், பெண்கள் வேண்டுமென்றே நீர் அருந்துவதைக் குறைத்துக்கொள்ளும் நடைமுறையும் காணப்படுகிறது — இது நீரிழப்பை மேலும் தீவிரமாக்குகிறது. வெப்ப அழுத்தம் தொடர்பான தொழில்சார் சுகாதாரப் பாதுகாப்பு (Occupational Health and Safety) வழிகாட்டல்கள் இன்று வரை முறைசாரா துறையில் வேலை செய்யும் பெண்களை சென்றடைவதே இல்லை என்பது இந்தப் பிரச்சினையை மேலும் ஆழப்படுத்துகிறது.

5.3 'விவசாயி' என்ற அங்கீகாரம் மறுக்கப்படும் பெண்கள்

இது மிக அடிப்படையான, ஆனால் மிகக் குறைவாக பேசப்படும் அநீதி. வடக்கு, கிழக்கில் ஆயிரக்கணக்கான பெண்கள் — குறிப்பாக போரில் கணவரை இழந்த பெண் குடும்பத் தலைவிகள் — நிலத்தில் உழைக்கிறார்கள், பயிர் செய்கிறார்கள், அறுவடை செய்கிறார்கள். அவர்களே அன்றாடம் வயலில் நேரம் செலவழிக்கும் நபர்கள். ஆனாலும், அரசுப் பதிவேடுகளில் அவர்கள் 'விவசாயிகள்' என்று அங்கீகரிக்கப்படுவதில்லை.

இதற்கான காரணம் தெளிவானது: நில உரிமை ஆவணங்கள் பெரும்பாலும் ஆண்களின் பெயரிலேயே உள்ளன. கணவர் இறந்த பின்னரும் அந்த நில உரிமையை மனைவியின் பெயருக்கு மாற்றுவது சிக்கலான, செலவு மிகுந்த, நீண்ட காலம் எடுக்கும் நடைமுறையாக உள்ளது — பல பெண்கள் இந்த நடைமுறையை முழுமையாக்க முடியாமல் இடைநடுவில் விட்டுவிடுகின்றனர். விவசாயி ஓய்வூதியத் திட்டம், வறட்சி நிவாரணம், உர மானியம், பயிர் காப்புறுதி என அனைத்து அரசு உதவித் திட்டங்களும் 'பதிவு செய்யப்பட்ட விவசாயி' என்ற அதிகாரபூர்வ நிலையுடன் நேரடியாகப் பிணைக்கப்பட்டுள்ளதால், நிலத்தில் உண்மையில் உழைக்கும் பெண் அந்த நிவாரண வரிசையில் இடம்பெறாமலேயே விடுபடுகிறார்.

இது வெறும் நிர்வாகச் சிக்கல் அல்ல — இது கட்டமைப்பு ரீதியான பாலினப் பாகுபாடு. இலங்கை கையெழுத்திட்டுள்ள பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சமவாயம் (CEDAW), கிராமியப் பெண்களின் உரிமைகள் குறித்த உறுப்புரை 14இன் கீழ், விவசாயச் சீர்திருத்தங்களிலும் நிவாரணத் திட்டங்களிலும் பெண்களுக்குச் சம அணுகலை உறுதி செய்ய அரசுக்குத் தெளிவான கடமைகளை விதிக்கிறது. அந்தச் சர்வதேசக் கடமை நடைமுறையில் இங்கு நிறைவேற்றப்படவில்லை என்பதே கசப்பான உண்மை.

6. சட்ட, கொள்கைக் கட்டமைப்பு: இடைவெளிகளும் கடமைகளும்

வறட்சி மேலாண்மையை காலநிலை நீதியின் கண்ணோட்டத்தில் அணுக, சர்வதேச மற்றும் தேசிய மட்டங்களில் பல சட்டக் கட்டமைப்புகள் ஏற்கனவே இருந்தபோதிலும், அவற்றின் அமுலாக்கத்தில் பெரும் இடைவெளிகள் காணப்படுகின்றன.

சர்வதேச மட்டத்தில், 2015ஆம் ஆண்டு பாரிஸ் ஒப்பந்தத்தின் உறுப்புரை 7, காலநிலைத் தகவமைப்பை (Adaptation) ஓர் உலகளாவிய இலக்காக நிறுவுகிறது; இதன் அடிப்படையில் இலங்கையின் தேசிய தகவமைப்புத் திட்டம் (National Adaptation Plan) வடக்கின் வறட்சிப் பாதிப்பை முன்னுரிமைப் பிரச்சினையாக அணுக வேண்டும் என்ற கடமை உள்ளது. 'COP27' மாநாட்டில் நிறுவப்பட்ட இழப்பும் சேதமும் (Loss and Damage) நிதியம், இலங்கை போன்ற காலநிலைப் பாதிப்புக்குள்ளான நாடுகளுக்கு மீண்டும் மீண்டும் வரும் வறட்சி இழப்புகளுக்கு சர்வதேச நிதி கோர ஒரு புதிய வழியைத் திறந்துள்ளது — ஆனால் இந்த வாய்ப்பைப் பயன்படுத்த முறையான ஆவணப்படுத்தல் இன்னும் தேவைப்படுகிறது. மேலும், CEDAWஇன் பொதுப் பரிந்துரை 37, காலநிலை மாற்றம் தொடர்பான அனர்த்தக் குறைப்பு நடவடிக்கைகளில் பாலினப் பரிமாணத்தைக் கட்டாயமாக்குகிறது.

தேசிய மட்டத்தில், 2005ஆம் ஆண்டு அனர்த்த முகாமைத்துவச் சட்டம் வறட்சியை ஒரு அனர்த்தமாக அங்கீகரித்தாலும், அதன் அமுலாக்கம் எதிர்வினை சார்ந்ததாகவே (Reactive) உள்ளது — அதாவது நெருக்கடி ஏற்பட்ட பின்னரே நடவடிக்கை எடுக்கப்படுகிறது, முன்னெச்சரிக்கை மற்றும் முன்தயாரிப்பு அணுகுமுறை மிகவும் பலவீனமாக உள்ளது. தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுக் கடமைகள், நீர் உட்கட்டமைப்புத் திட்டங்களில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். மேலும், விவசாயி ஓய்வூதிய மற்றும் சமூகப் பாதுகாப்புச் சட்டம், 'விவசாயி' என்ற வரையறையை நில உரிமையில் இருந்து விடுவித்து, நிலத்தில் உண்மையில் உழைக்கும் பெண்களை உள்ளடக்கும் வகையில் திருத்தப்பட வேண்டிய அவசியம் உள்ளது.

7. முன்னோக்கிய பாதை: பரிந்துரைகள்

மேற்கூறிய பகுப்பாய்வின் அடிப்படையில், கொள்கை வகுப்பாளர்களும் அனர்த்த முகாமைத்துவ நிறுவனங்களும் உடனடியாகக் கவனம் செலுத்த



Image Source - sundaytimes.lk

வேண்டிய பல செயல்பாட்டு வழிகள் உள்ளன.

முதலாவதாக, பாலின உணர்திறன் கொண்ட விவசாயிப் பதிவு முறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும் — நில உரிமை இல்லாமலே, உண்மையான சாகுபடியாளர் என்ற அடிப்படையில் பெண்களை விவசாயிகளாக பதிவு செய்யும் மாற்று வழிமுறையை உருவாக்கி, கிராம சேவகர் மட்டத்திலேயே சான்றிதழ் வழங்கும் நடைமுறையை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இரண்டாவதாக, சூழலியல் அடிப்படையிலான குளக்கட்டு மீளமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் — நீர்த்தொடர் அமைப்புகளை (Cascade System) தனித்தனிக் கட்டமைப்புகளாக அல்லாமல் முழுமையான சூழல் அலகுகளாக மீட்டெடுத்து, வண்டல் அகற்றலுடன் நீர்ப்பிடிப்பு பகுதியின் மறு காடாக்கத்தையும் இணைத்துச் செயல்படுத்த வேண்டும்.

மூன்றாவதாக, வெப்ப அழுத்த தொழில்சார் சுகாதார வழிகாட்டல்கள் உருவாக்கப்பட வேண்டும் — வெளிப்புற வேலை செய்யும் பெண்களுக்கான வெப்ப எச்சரிக்கை முறைமையும், நிழல் - நீர் - ஓய்வு (Shade - Water - Rest) நெறிமுறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டு, அவை முறைசாரா துறையில் உள்ளவர்களுக்கும் விரிவாக்கப்பட வேண்டும்.
நான்காவதாக, யாழ் குடாநாட்டின் நிலத்தடி நீருக்கென தனியான, அறிவியல் அடிப்படையிலான உறிஞ்சுதல் கட்டுப்பாட்டு முறைமையை நிறுவும் ஒரு நிலத்தடி நீர் மேலாண்மைச் சட்டம் தேவைப்படுகிறது.

ஐந்தாவதாக, வானிலைக் குறியீட்டு அடிப்படையிலான காப்புறுதியை (Weatherindex Insurance) சிறு விவசாயிகளுக்கு, குறிப்பாக பெண் விவசாயிகளுக்கு எளிதில் அணுகக்கூடியதாக்கும் வகையில் பயிர்க் காப்புறுதி முறை மறுசீரமைக்கப்பட வேண்டும்.

இறுதியாக, வடக்கின் வறட்சி இழப்புகளை முறையாக ஆவணப்படுத்தி, சர்வதேசக் காலநிலை நிதிக்கான — குறிப்பாக 'இழப்பும் சேதமும்' (Loss and Damage) நிதியத்திற்கான — வலுவான கோரிக்கைத் தளத்தை உருவாக்க வேண்டும்.

இந்த ஆறு நடவடிக்கைகளும் தனித்தனியாக அல்லாமல், ஓர் ஒருங்கிணைந்த காலநிலை நீதிக் கொள்கையின் பகுதியாகச் செயல்படுத்தப்பட வேண்டும்.

நிறைவுரை: திட்டமிடாத துயரமா, திட்டமிட்ட புறக்கணிப்பா?

'திட்டமிடாத துயரம்' என்று நாம் அழைப்பது, உண்மையில் திட்டமிடலின் புறக்கணிப்பால் உருவான துயரம். வறட்சி வானத்தில் இருந்து வருகிறது; ஆனால் பேரிடர் கொள்கை அறைகளில் இருந்து வருகிறது. எந்தப் பெண் நிவாரணப் பட்டியலில் இடம்பெறுவார், எந்தக் குளம் மீளக்கட்டப்படும், எந்தக் கிராமத்திற்கு நீர் வழங்கல் வாகனங்கள் முதலில் செல்லும் — இவை அனைத்தும் இயற்கையின் தீர்மானங்கள் அல்ல, மனித முடிவுகள்.

காலநிலை மாற்றம் நியாயமற்றது என்பது உண்மை — அதை உருவாக்குவதில் மிகக் குறைந்த பங்கு வகித்த வடக்கின் விவசாய, மீனவச் சமூகங்களே அதன் மிகக் கடுமையான விலையைச் செலுத்துகின்றன. ஆனால் அந்த நியாயமின்மையை மேலும் ஆழப்படுத்துவதா, அல்லது நீதியான தகவமைப்பின் மூலம் சரிசெய்வதா என்பது நமது தேர்வு. வயலில் நிற்கும் அந்தப் பெண் விவசாயி, வானத்தை மட்டும் நோக்கவில்லை — நம்மையும் நோக்குகிறார்.

ஆதாரங்கள்: *World Bank* (2018) — வறட்சிஏழ்மை தாக்க மதிப்பீடு; *Earth Journalism Network* (2025) — வெப்ப அழுத்தமும் பெண் தொழிலாளர்களும்; இலங்கை அனர்த்த முகாமைத்துவ நிலையம் — வறட்சிப் பாதிப்புத் தரவுகள் (2014-2024); IPCC AR6 — தெற்காசிய காலநிலைக் கணிப்புகள்; CEDAW பொதுப் பரிந்துரைகள் 34, 37.

மலையகத் தமிழரின் வழிபாட்டு மரபில் பெரிய எழுத்துப் பொஸ்தகங்கள்

எம். எம். ஜெயசீலன்

எம்.எம். ஜெயசீலன் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணி, முதுதத்துவமாணிப் பட்டங்களைப் பெற்றுள்ள இவர், இந்தியப் பொதுநலவாய நாடுகளின் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் (தஞ்சாவூர்) கலாநிதிப் பட்ட ஆய்வைச் சமர்ப்பித்துள்ளார். கல்வெட்டியல், பண்பாட்டு வரலாறு, இலக்கிய விமர்சனம், நவீன இலக்கியம் முதலான துறைகளில் ஆர்வமுள்ள இவர், அத்துறைசார்ந்த ஆய்வுக் கட்டுரைகளைத் தேசிய மற்றும் சர்வதேச ஆய்வரங்குகளில் சமர்ப்பித்து வருவதுடன் ஆய்விதழ்களிலும் சஞ்சிகைகளிலும் தொடர்ந்தும் எழுதிவருகிறார்.

பெரிய எழுத்துப் பொஸ்தகங்களை வாசித்தலும் அவற்றை நாடகங்களாக நிகழ்த்துதலும் தமிழ்ப் பண்பாட்டின் ஓர் அங்கமாக நீண்ட காலம் இடம்பெற்று வருகின்றன. எளிதாக வாசிக்கக்கூடிய வகையில் வழமையான எழுத்துரு அளவிலிருந்து பெரிதாக அச்சிடப்பட்டுள்ள அந்நூல்கள், 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் அதிகமாக அச்சிடப்பட்டுள்ளன. கிராம சமூகத்தில் சமய, சமூக முக்கியத்துவம் பெற்றவையாக விளங்கிவந்த பெரிய எழுத்துப் பொஸ்தகங்கள் காலமாற்றத்தால் தம் முதன்மையை மெல்ல மெல்ல இழக்கத் தொடங்கினாலும் பண்பாட்டுத் தளத்தில் இன்றும் செல்வாக்கு பெற்றவையாகவே திகழ்கின்றன.

இரு நூற்றாண்டுகள் கடந்து மூன்றாம் நூற்றாண்டின் விடியலில் கால்பதித்துள்ள மலையகத் தமிழரின் பண்பாட்டு வாழ்வில், பெரிய எழுத்துப் பொஸ்தகங்களின் பயில்வு இன்றும் வெவ்வேறு மட்டங்களில் இடம்பெற்று வருகிறது. இந்த நீடித்த இருப்பு, பெரிய எழுத்துப் பொஸ்தகங்களின் பண்பாட்டு முக்கியத்துவத்தை உணர்த்தி நிற்கிறது. அவ்வகையில், மலையகத் தமிழரின் வழிபாட்டு மரபில் பெரிய எழுத்துப் பொஸ்தகங்களின் பயில்வை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது. கள ஆய்வுத் தகவல்களையும் ஏலவே வெளிவந்துள்ள பதிவுகளையும் முதன்மை ஆதாரமாகக் கொண்டே இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. அதனால், இங்கு விவரிக்கப்படும் பெரிய எழுத்துப் பொஸ்தகங்களைவிட வேறு புத்தகங்களும் பயில்வில் இருக்கலாம். அதேவேளை, கள ஆய்வுக்கு உட்படுத்தப்படாத தோட்டங்களில் வேறுபட்ட நடைமுறைகள் பின்பற்றப்படலாம்.

எளிமையான தொடர்களை வாசிக்கக்கூடிய அளவிலான வாசிப்புப் பயிற்சியைப் பெற்றவர்கள், இலகுவாக வாசிப்பதற்காகவே எழுத்துகளைப் பெரிதாக அச்சிடும் வழமை தோன்றியுள்ளது என்பர் (அரசு, 2014: 12). ஆனால், அந்நூல்களின் மறுபதிப்புகளில் எழுத்துகளைப் பெரிதாக அச்சிடும் முறைமை பரவலாகப் பின்பற்றப்படவில்லை. எளிமையான மெட்டுகளினாலான பாடல்களும் உரைநடையும் கலந்து ஆக்கப்பட்டுள்ள அந்நூல்கள் மலினமான தாளில் மிகக் குறைந்த விலையில் ஐதீகப் படங்களுடன் அச்சிடப்பட்டுள்ளன. இவையும் வாசிப்பு எளிமைக்கான உத்திகளாகவே விளங்குகின்றன. நூலின் புறக்கட்டமைப்பும் எடுத்துரைப்பும் வாசிப்பு எளிமையை மையமிட்டிருந்தாலும் அவை வெறுமனே வாசிப்பு எளிமை என்ற தளத்தை மட்டும் கொண்டவையல்ல. அந்நூல்களின் உருவாக்கமும் பயில்வும் ஆழமான சமூகப் பண்பாட்டுப் பின்புலத்தைக் கொண்டுள்ளன.

தமிழில் அச்சுப் பண்பாடு பரந்தளவில் பரவலாக்கம் பெற்றபோதே பெரிய எழுத்து நூல்கள் அச்சாக்கம் பெற்றுள்ளன. தமிழ்ச் சூழலில் அச்சுமுறைமை போர்த்துக்கேயர் காலத்தில் அறிமுகமாகியிருந்தாலும் 1835ஆம் ஆண்டே சுதேசியர்கள் அச்சினைப் பயன்படுத்தும் உரிமையைப் பெற்றனர். சுதேசியர்கள் அச்சுரிமையைப் பெற்றாலும் சுதேசிய மேட்டுக்குடிகளின் ஏகபோக உரிமமாகவே அச்சாக்கம் நீண்ட காலமாக விளங்கி வந்துள்ளது. ஏறக்குறைய 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே அச்சு ஜனநாயகமயப்படத் தொடங்கியுள்ளது. அக்காலத்திலேயே இத்தகைய பெரிய எழுத்து நூல்கள் அச்சிடப்பட்டுள்ளன. உதாரணமாக, நல்லதங்காள் கதை (1869), தேசிங்குராஜன் கதை (1869), கோவிலன் கதை (1873), மின்னொளியாள் குறம் (1874), சித்திரபுத்திரநாயனார் கதை (1876), திரௌபதி குறம் (1880) போன்ற பெரிய எழுத்து நூல்கள் தொடக்கக் காலத்தில் அச்சிடப்பட்டுள்ளன. அதன் தொடர்ச்சியாக 20ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியில் அதிக எண்ணிக்கையிலான பெரிய எழுத்து நூல்கள் அச்சிடப்பட்டுள்ளன.

அச்சுத் தொழில்நுட்பத்தின் பரவலாக்கம் நூல் உற்பத்தியிலும் நுகர்விலும் முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தியது. ஒரே நேரத்தில் அதிக பிரதிகள், குறைந்த விலை என்பவற்றால் நூல்களின் பயன்பாட்டு எல்லை விரிவாக்கம் பெற்றது; வாசிப்பு, வாசகர் வட்டத்தில் மாற்றங்கள் ஏற்பட்டன. அதுவரை காலமும் சமூகத்தின் மேற்தளத்தில் வாழ்ந்த ஒரு குறுகிய வட்டத்தில் மட்டும் தேங்கிக் கிடந்த அறிவுச் சொத்துகள் சாதாரண மக்களை நோக்கி நகரத்தொடங்கின. அந்நகர்வு மொழி இலக்கியங்களின் பண்பிலும் வாசிப்பு முறைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தியது. அதன்போது மேட்டுக்குடியினரின் வாசிப்புத் தேவையை நிறைவு செய்யும் வகையில் செவ்வியல் நூல்களைப் பதிப்பித்தல், புதிய நூல்களை உருவாக்குதல், பத்திரிகைஇதழ்களை வெளியிடுதல் என்பவை இடம்பெற்றபோது அதற்குச் சமாந்தரமாகச் சாதாரண மக்களின் வாசிப்புத் தேவையை நிறைவு செய்யும் வகையிலான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பிரதானமானதாகப் பெரிய எழுத்துப் பொஸ்தகங்கள் விளங்கியுள்ளன. அச்சு சுதேசியமயப்பட்டபோது மேட்டுக்குடியினர் அடித்தட்டு மக்கள் மத்தியில் நிலவிய சமய வழிபாட்டு மரபுகளையும் இலக்கிய

வெளிப்பாடுகளையும் நிராகரித்ததோடு அவற்றுக்கு மாறாக தமது வழிபாட்டு மரபுகளையும் இலக்கிய வெளிப்பாடுகளையும் அச்சுவாகனம் ஏற்றி ஆவணப்படுத்த முயன்றனர். இந்நிலையிலேயே அச்சுத் தொழில்நுட்பம் சாதாரண மக்களைச் சென்றடைந்தபோது அவர்கள் மேட்டுக்குடி அச்சுப் பண்பாட்டுக்கு மாறான அச்சுப் பண்பாட்டைக் கட்டியெழுப்பியுள்ளனர். அதனாலேயே செவ்வியல் மரபுக்கு மாறாகச் சாதாரண மக்கள் மத்தியில் தேங்கிக்கிடந்த கதைமரபுகளை அச்சுவாகனம் ஏற்றி, அவற்றை மதச்சடங்குகளின் ஓர் அங்கமாக்கிக் கொண்டுள்ளனர். தமிழ் அச்சு வரலாற்றில் ஏற்பட்ட இத்திருப்பமே அக்கதை மரபுகள் பலவற்றுக்கு அழிவற்ற இருப்பைத் தந்தன எனலாம்.

Image Source - globaltamilnews.net

பெரும்பாலான பெரிய எழுத்து நூல்கள் புகழேந்திப் புலவர் என்பவரால் எழுதப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. மக்கள் மத்தியில் காலம்காலமாக நிலவிவந்த கதைமரபுகளை எழுத்தாக்கம் செய்யும் செயற்பாட்டை அவர் செய்திருக்கிறார். இந்நூல்கள் யாவற்றையும் புகழேந்திப் புலவரே எழுதினாரா, அவருடைய ஆக்கங்களால் ஈர்க்கப்பட்டு பின்வந்த நூல்களுக்கும் அப்பெயர் இடப்பட்டதா என்பதை உறுதியாகக் கூறமுடியாதுள்ளது. இருப்பினும், எண்ணிக்கை அடிப்படையில் அதிகமான நூல்கள் காணப்படுவதால் அவை அனைத்தையும் புகழேந்திப் புலவரே எழுதியிருக்க வாய்ப்பில்லை எனக் கொள்ளலாம். இந்நூல்களில் விரியும் கதைகள் செவ்வியல் நூல்களில் இடம்பெறாத பல புதிய அம்சங்களை உள்ளடக்கியுள்ளன. பெரிய எழுத்து நூல்களில் அதிகமானவை மகாபாரத, இராமாயணக் கதைகளைத் தழுவியவையாகவும் அவற்றில் வரும் பாத்திரங்களின் கதைகளை விவரிப்பவையாகவும் அமைந்துள்ளன.

தொன்மங்களையும் ஐதீகங்களையும் கையாண்டு படைப்பாக்கங்களை மேற்கொள்வது பண்டுதொட்டு உலகம் முழுவதும் நிலவிவருகிறது. அத்தகைய புத்தாக்க முயற்சிகள் மூலத்தொன்மத்தின் கதையைச் சுருக்குதல், மூலத்தொன்மத்தின் யாதாயினும் ஒரு பகுதியை மட்டும் விரித்துரைத்தல், குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியை அல்லது பாத்திரத்தை முதன்மைப்படுத்தல், சமகாலத் தேவைக்கு ஏற்ப அல்லது ஆசிரியரின் தேவைக்கு ஏற்ப புதிய நிகழ்ச்சிகளையோ பாத்திரங்களையோ மூலத்தொன்மத்துடன் இணைத்தல், குறிப்பிட்ட நிகழ்ச்சியை அல்லது பாத்திரத்தை மூலத்தொன்மத்தின் நோக்கிலிருந்து விலக்கி வேறு கோணத்தில் சித்திரித்தல், மூலத்தொன்மத்தைத் தலைகீழாகக் கவிழ்த்து அதனைக் கேலிக்கும் நகைப்புக்கும் உட்படுத்தல் போன்ற பலவாறு இடம்பெற்று வருகின்றன.

தமிழ்ச் சூழலில் இராமாயண - மகாபாரதத் தொன்மங்களை அடிப்படையாகக் கொண்டு ஏராளமான புத்தாக்க முயற்சிகள் செவ்வியல் மரபிலும் நாட்டார் மரபிலும் இடம்பெற்றுள்ளன. அதிலும் அத்தகைய புத்தாக்க வடிவங்கள் நாட்டார் மரபிலேயே அதிகம் வழக்கில் உள்ளன. கதைகளாகவும் கூத்துகளாகவும் வில்லிசையாகவும் உடுக்கடிப் பாடலாகவும் அவை மக்கள் மத்தியில் உயிர்ப்புடன் வாழ்கின்றன. அக்கலைவடிவங்களில் கூறப்படும் செய்திகளுள் பல, மகாபாரதத்திலோ இராமாயணத்திலோ இடம்பெறாதவை என்பது குறிப்பிடத்தக்கது. உதாரணத்துக்கு, ஏணி ஏற்றம், புலந்திரன் களவு மாலை, பொன்னுருவி மசக்கை போன்றவற்றில் இடம்பெறும் கர்ணன் பற்றிய செய்திகள் எல்லாம் மகாபாரதத்தில் இடம்பெறாதவையாகும். ஏணி ஏற்றத்தில் பாண்டவர்கள் வனவாசம் சென்ற பின்னர் அர்ச்சுனனின் மனைவி சுபத்திரை அல்லியிடம் அடைக்கலமடைகிறாள். துரியோதனன் சுபத்திரையை

அடைய விரும்புகிறான். கர்ணன் அவனைத் தடுக்கிறான். அதனைக் கேட்காத துரியோதனன் சுபத்திரையைக் கவர்ந்துவர அல்லியிடம் செல்கிறான். அல்லி ஒரு மாய ஏணியைச் செய்து அதில் துரியோதனனை வைத்து அஸ்தினாபுரத்துக்கு அனுப்புகிறாள். யாராலும் துரியோதனனைக் காப்பாற்ற முடியவில்லை. இறுதியில் கர்ணன் அந்த ஏணியைக் காலால் உதைத்து அதன் பின்னேயே செல்கிறான். ஏணி மதுரைக்குச் செல்கிறது. மதுரை வந்த கர்ணனை அல்லி வரவேற்று உபசரிக்கிறாள். கர்ணன் துரியோதனனின் குற்றத்தை மன்னிக்க வேண்டும் எனக் கேட்க, அவள் மன்னித்து விடுவிக்கிறாள். இக்கதை பாரதத்தில் இல்லாததாகும். அதேபோல் பொன்னுருவி மசக்கையில் பொன்னுருவியை மயக்கிவிட்டு கர்ணன் உறவு கொள்வது பற்றி குறிப்பிடப்படுகின்றது. அர்ச்சுனனின் தமிழ்க் காதலிகள் பற்றியே ஏராளமான பெரிய எழுத்து நூல்கள் உள்ளன. அவ்வாறே மகாபாரதத்திலோ இராமாயணத்திலோ அதிக முதன்மை பெறாத பாத்திரங்களும் அவற்றில் இடம்பெறாத பாத்திரங்களும் நாட்டார் வழக்காறுகளில் அதிக அழுத்தம் பெற்றுள்ளன. ஜராசந்தன், சிசுபாலன், புலந்திரன், அல்லி போன்ற பல பாத்திரங்கள் பற்றிய கதைமரபுகள் அவ்வகையில் குறிப்பிட்டுக் கூறத்தக்கன.

சீதை, தமயந்தி, நல்லதங்காள், அல்லி, திரௌபதி, பவளக்கொடி எனப் பல பெண்களின் துயரம் நிறைந்த வாழ்வு, அவர்களின் துக்கம், அவர்களின் ஆவேசம், சிந்தனைத் திறம், ஆளுமை, வெற்றி என்பவற்றைப் பல கதைகள் விவரிக்கின்றன. அவற்றில் இடம்பெறும் செய்திகள் சாதாரண மக்கள் மத்தியில் இப்பெண் பாத்திரங்கள் பெற்றிருந்த முக்கியத்துவத்தை உணர்த்தி நிற்கின்றன.

மலையகத் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு வாழ்வியலில் பெரிய எழுத்து நூல்கள் பிரதான இடத்தைப் பெற்றிருந்துள்ளன. இன்று வழிபாடு என்ற தளத்தில் நிலைபெற்றுள்ள இந்நூல்கள் கலை வெளிப்பாட்டுக் கருவியாகவும் கல்வி நூல்களாகவும் பொழுதுபோக்கு வாசிப்பாகவும் துயர், சஞ்சலம் நீக்கும் மருந்தாகவும் விளங்கி வந்துள்ளன.

பொழுதுபோக்கு, கலை வெளிப்பாடு எனும்போது பல்வேறு கூத்துகள் இப்பெரிய எழுத்து கதைகளை அடிப்படையாகக் கொண்டு

மலையகத் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு வாழ்வியலில் பெரிய எழுத்து நூல்கள் பிரதான இடத்தைப் பெற்றிருந்துள்ளன. இன்று வழிபாடு என்ற தளத்தில் நிலைபெற்றுள்ள இந்நூல்கள் கலை வெளிப்பாட்டுக் கருவியாகவும் கல்வி நூல்களாகவும் பொழுதுபோக்கு வாசிப்பாகவும் துயர், சஞ்சலம் நீக்கும் மருந்தாகவும் விளங்கி வந்துள்ளன.

அரங்கேற்றப்பட்டுள்ளன. தமிழகச் சூழலில் கிராமப்புறக் கோயில் திருவிழாவின் ஓர் அங்கமாகப் பெரிய எழுத்து நூல்களின் நாடகங்களை அரங்கேற்றும் வழமை இன்றும் பரவலாக இடம்பெற்று வருவதோடு கலைக்குழுவினர், பரம்பரை பரம்பரையாகப் பெரிய எழுத்து நூல்களின் நாடகங்களைச் சடங்காகவும் தொழிலாகவும் நிகழ்த்தி வருகின்றனர். மலையகச் சூழலில் கோயில் திருவிழாக்களையொட்டி இத்தகைய நாடகங்கள் அரங்கேற்றப்பட்டதாக அறியக்கிடைக்கிறது. இன்றைய நிலையில் காட்மோர் கல்கந்தை தோட்டத்தில் பவளக்கொடி ஆற்றுகை இடம்பெற்று வருவதை சு. தவச்செல்வன், “கலையும் சமூகமும்: மலையகத்தில் பவளக்கொடி நாடக ஆற்றுகை” (2015) என்ற கட்டுரையில் பதிவு செய்துள்ளார். மலையகத்தில் பவளக்கொடி ஆற்றுகை, அந்த ஆற்றுகையினை நிகழ்த்திவரும் அண்ணாவிமார்கள், அக்கலைப் பாரம்பரியம் மலையகத்தில் வழக்கிழந்து வருவதற்கான காரணங்கள் போன்றவற்றை அக்கட்டுரையில் உரையாடியுள்ள தவச்செல்வன், 1980களுக்கு முன்னர் இக்கதை மலையகத்தின் பல இடங்களிலும் பயில்வில் இருந்தமையையும், 1989ஆம் ஆண்டு கல்கந்தை தோட்டத்தில் நல்லதங்காள் கதை நாடகமாக அரங்கேற்றப்பட்ட தகவலையும் தந்துள்ளார் (2015).

வழிபாடு என்ற நிலையில் இன்றும் சித்திரபுத்திரனார் கதை, நல்லதங்காள் கதை, ஏகாதசி மகத்துவம் போன்ற நூல்கள் மலையகத்தில் சடங்கின் அங்கமாக வாசிக்கப்படுகின்றன. இந்த வாசிப்பு அச்சுச் சாதனம் விருத்தி பெற்றதும் தோன்றிய மௌன வாசிப்பாக இன்றி வாய்விட்டு வாசிப்பதாகவும் கூட்டாக வாசிப்பதாகவும் இடம்பெற்று வருகின்றன. தமிழ்ச் சூழலில் அச்சுப் பண்பாட்டின் பரவலாக்கத்தினால் மேட்டுக்குடி மற்றும் நடுத்தர வர்க்கத்தினரிடையே தனிமையிலும் மௌனமாகவும் வாசிக்கும் வாசிப்பு

முறைமை மாற்றம் நிகழ்ந்துள்ளது. ஆனால், வெகுசனப் பண்பாட்டின் பெரிய எழுத்து நூல்கள் வாய்விட்டு வாசிப்பதாகவும் கூட்டு வாசிப்பாகவுமே இடம்பெற்று வருகின்றன. அதனால், பெரிய எழுத்து நூல்கள் வாசிப்பு எளிமைக்கான நூல்களாக மட்டுமன்றி மேட்டிமைப் பண்பாட்டுக்கு எதிரான பண்பாட்டு வடிவங்களாகவும் தொழிற்பட்டு வருகின்றன எனக் கொள்ளலாம்.

கிராமியப் பண்பாட்டு மரபில் நல்லதங்காள் கதைக்கு மிகுந்த முக்கியத்துவம் உண்டு. வாய்மொழி மரபிலும் பெரிய எழுத்து மரபிலும் பரவலாக வழக்கில் உள்ள இக்கதையினைக் கதைப்பாடலாக வாசித்து, அக்கதையின் நிகழ்வுகளை நிகழ்த்திக் காட்டுவதாக மலையகத்தில் நல்லதங்காள் சடங்கு நிகழ்த்தப்பட்டு வருகிறது. இக்கதைப்பாடலானது பக்திக்காகவும் தோட்ட நலனுக்காகவும் நேர்த்திகளை நிவர்த்தி செய்யவும் நம்பிக்கையின் அடிப்படையில் வருடந்தோறும் தவறாமல் நடத்தப்படுகிறது. மாசி மாதக் கடைசியில் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து பதினெட்டு நாட்களாக இச்சடங்கு இடம்பெறுகிறது. அப்புத்தளை பிரதேசத்தில் நல்லதங்காள் சடங்கு குறித்து ஆராய்ந்துள்ள ஆய்வாளர் சர்மிளா தரும் தகவலின்படி, அப்புத்தளை தோட்டத்தில் வாழும் மக்கள் நீண்டகாலமாக நல்லதங்காள் கதைப்பாடலை நடத்திவருவதை அறிய முடிகிறது. அத்தோட்டத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் அதனை முன்னெடுத்து வருகின்றனர். காப்புக்கட்டுதலில் ஆரம்பமாகும் இச்சடங்கு கரகம் பாலித்தல், கம்பம் ஊன்றுதல், விநாயகர் துதி, கதைப்படிப்பும் நிகழ்த்துதலும், படுகளம் போடுதல், கரகம் எடுத்தல், மாவிளக்குப் பூசை, அன்னதானம் என்ற ஒழுங்கில் இடம்பெறுகின்றன. நிகழ்வின் பதினேழாம் நாளே படுகளம் போடுதல் சடங்கு நிகழ்கிறது. இச்சடங்கின்போது அருளாடுபவர்களிடம் மக்கள் தம் குறைகளைக் கூறி ஆசி பெறுவர். அதன்போது எலுமிச்சம்பழமும் விபூதியும் பிரசாதமாக வழங்கப்படுகிறது. அதன்பின்னர் அருளாடியவர்கள் அப்படியே நிலத்தில் வீழ்ந்து மூர்ச்சையற்று கிடப்பர். விடியற்காலையில் அண்ணாவியர் அவர்களை உயிர் எழுப்புவார். இதுவே படுகளம் போடுதல் எனப்படுகின்றது (சர்மிளா: 2018).

மலையகத் தமிழரின் விசேட தினங்களில் ஒன்றாக இன்று சித்திரா பௌர்ணமி பரவலாக அனுசரிக்கப்படுகின்றது. தாயை இழந்தவர்கள் அன்றைய தினம் விரதமிருந்து அந்தணருக்கு (ஆலய குரு) தானமளித்து வருகின்றனர். இது மலையகத்தில் அண்மைக் காலத்தில் பெருகிவரும் மேல்நிலையாக்கத்தின் ஒரு வெளிப்பாடாகும். முற்காலத்தில் சித்திரா பௌர்ணமி அன்று விரதமிருப்பதும், சித்திரபுத்திரநாயனார் கதை படிப்பதும் கிராமிய நிகழ்வாக பல இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இன்று குறிப்பிட்ட தோட்டங்களில் மட்டும் இச்சடங்கு இடம்பெற்று வருகிறது. சில தோட்டங்களில் இச்சடங்கு ஊரின் பொது விழாவாகவும் சில தோட்டங்களில் பரம்பரை பரம்பரையாக சிலர் தமது வீடுகளில் மேற்கொள்ளும் நிகழ்வாகவும் இடம்பெறுகின்றது. பால், பழம் முதலியவற்றைப் படைத்து, விரதமிருந்து சித்திரபுத்திரனார் பெரிய எழுத்துப் புத்தகத்தை வாசிப்பர். அச்சடங்கை முன்னெடுக்கும் வீட்டார் அப்புத்தகத்தைப் புனிதமாகப் போற்றுவதோடு சித்திரா பௌர்ணமி அன்று மாத்திரமே அதனை வாசிக்கின்றனர். ஏனைய நாட்களில் அந்நூலினை யாரும் வாசிக்கக் கூடாது என்ற நம்பிக்கை பரவலாக வழக்கில் உண்டு.

மலையகத்தில் வருடந்தோறும் மார்கழி முதலாம் நாள் தொடக்கம் (டிசெம்பர் 16) தை மாத முதலாம் நாள் வரை இராமர் வழிபாடும் இராம பஜனையும் பெரும்பாலான தோட்டங்களில் விமரிசையாக இடம்பெற்று வருகின்றன. இராமர் பஜனையின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றாக ஏகாதசி விரதமும் ஏகாதசி புராணக்கதை படித்தலும் சில தோட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மார்கழி ஏகாதசி நாளன்று பஜனைக் குழுவினர் உட்பட ஊரின் சிலரும் விரதமிருப்பதோடு அன்று இரவு விடியும் வரை விசேட பூசைகளும் ஏகாதசி புராணக்கதை (ஏகாதசி மகத்துவம்) படித்தலும் இடம்பெற்று, விடிந்ததும் அன்னதானமிடப்படுவது வழமையாக உள்ளது. அதேவேளை, அன்று சில வீடுகளில் பிரத்தியேகமாகப் பூசை வைத்து, விரதமிருந்து ஏகாதசி மகத்துவம் என்ற நூலினைப் படிப்பர். ரங்கல நிவ் டிவிசனில் இடம்பெறும் இராமர் பஜனையில் தவறாது ஏகாதசி விரதமிருத்தலும் விரத நாளன்று ஏகாதசி மகத்துவம் நூல் படித்தலும் இடம்பெற்று வருகின்றன. விரதமிருப்பவரில் நன்கு வாசிக்கக்கூடிய இரண்டொருவர் மாறிமாறி விடியும் வரை கதையினைப் படிப்பர். ஊரார் சூழயிருந்து அதனைக் கேட்பர். இடைக்கிடை விசேட பூசைகள் இடம்பெறுகின்றன. விடிந்ததும் நல்ல நேரத்துக்கு ஏற்ப விரதத்தை முடித்துக்கொண்டு, ஊராருக்கு அன்னதானமிடுவர்.

மலையகத்தில் ஆரம்பத்தில் நிலவிய நிறுவனம்சாரா கல்வி முறையான லயன் பாடசாலையில்

கற்பிக்கப்பட்ட பாட நூல்கள் பற்றி முழுமையான தகவல்கள் எம்மிடம் இல்லை. எழுத்து, வாசிப்பு, கணக்கு என்பன கற்பிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இங்கு வாசிப்பில் எவை வாசிக்கப்பட்டன என்ற கேள்வியைப் பலரும் எழுப்பவில்லை. ஞானமுத்து அவர்கள் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலிய ஒழுக்கம் சார்ந்த நூல்கள் கற்பிக்கப்பட்டதாகக் கூறுவதோடு எழுத்துகளை வாசிக்க முடியாதவர்களுக்கு மாலை வேளையில் அல்லது விசேட நிகழ்வுகளில் வாசிக்கத் தெரிந்த ஒருவர் புராணங்களை, பண்டைய கதைகளை வாசித்துப் பொருள் கூறுவார் என்றும் கூறுகின்றார் (Gnanamuthu, 1977: 18). இங்கு அவர் எவ்வகையான புராணங்கள் என்று கூறவில்லை. மலையகச் சமய மரபோடு இணைத்து நோக்கும்போது செவ்வியல் புராணங்கள் மலையகத்தில் அதிகம் செல்வாக்குப் பெற்றதாகத் தெரியவில்லை. எனவே, அங்கு இத்தகைய பெரிய எழுத்து நூல்களே வாசிக்கப்பட்டிருக்க வேண்டும் எனலாம்.

பெரிய எழுத்து நூல்களில் இடம்பெறும் தொன்மப் பாத்திரங்களில் சாதாரண மக்கள் தம்மை இனங்கண்டுள்ளதுடன் அப்பாத்திரங்களின் துயரங்களில் தம் துயரைக் கண்டுள்ளனர். அத்தோடு அக்கதைகளில் இடம்பெறும் கதைத் தலைவன், தலைவி எல்லாத் துன்பங்களையும் கடந்து பெறும் வெற்றிகள் இவர்களுக்கு ஆறுதலைத் தந்துள்ளன. அதனால் அக்கதைகள் துயர், சஞ்சலம் நீக்கும் மருந்தாகவும் அமைந்திருந்துள்ளன. இன்றும் நல்லதங்காள் சடங்கில் அதன் பாடல்களைப் பாடும்போது பல பெண்கள் அழுது புலம்புகின்றனர். இது நல்லதங்காளில் தம்மை, தம் போன்றவர்களை உணர்வதன் வெளிப்பாடே ஆகும். ஸி.வி. வேலுப்பிள்ளையின் 'வீடற்றவன்' நாவலில் வரும் ஒரு காட்சியும் சஞ்சலம் நீக்க பெரிய எழுத்துப் புத்தகம் படித்தல், கேட்டல் இடம்பெறுவதைக் கூறுகின்றது. பெரியசாமி கங்காணி தன்னைத் தோட்டத்தைவிட்டு வெளியேற்றப் போகிறார்கள் என்ற அச்சத்தில், சஞ்சலத்தில் இருக்கும்போது அவர்கள் வீட்டுக்கு வரும் பழனி மாமா, "நளச்சக்கரவர்த்தி கதை, விக்கிரமாதித்தன் கதை இவைகளை நெடுநேரம் படிப்பார். பெரியசாமி கங்காணியும் காமாட்சி அம்மாளும் வெகு ஆர்வத்தோடு கதையைக் கேட்டுச் சாந்தியடைவர்..." (வேலுப்பிள்ளை, 1987: 80) இந்தக் குறிப்பு, பெரிய எழுத்து நூல்கள் மன சாந்தியைத் தரும் நூல்களாகவும் விளங்கியமையைக் காட்டுகின்றது.

நாட்டார் மரபில் சாதாரண மனிதர்கள் தமது விருப்பங்கள், தேவைகள் என்பனவற்றையும் அவர்களின் துயர், சஞ்சலம் என்பவற்றுக்கான ஆறுதல்களையும் இதிகாச புராண கதைமரபுகளில் இருந்து பெற்றுக்கொள்வதோடு தமது வாழ்வியல் போக்குகள், தாம் எதிர்கொள்ளும் சிக்கல்கள் என்பவற்றையும் தாம் விரும்பும் வாழ்க்கையையும் அந்த இதிகாச புராணத் தொன்மங்களுக்கு ஏற்றி, மூலக்கதையிலிருந்து மாற்றங்களை ஏற்படுத்திக்கொள்கின்றனர். சாதாரண மக்களின் வாழ்வியலோடு இணைந்த இப்பண்புகளாலேயே இற்றைவரை கிராமப்புறங்களில் இவை தொடர்ந்தும் வழக்கில் உள்ளன. ஒருவகையில் பெரிய எழுத்துப் புத்தகமொன்றை நாடகமாக, ஒரு கிராமத்தில் மேடையேற்றும்போது - சடங்கை நிகழ்த்தும்போது அங்குள்ள மனிதர்கள் தம் வாழ்வைப் புதுப்பித்துக்கொள்கிறார்கள், வருகின்ற சவால்களைத் தெம்போடு எதிர்கொள்ளத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்கிறார்கள், கிராமத்தவரிடையே கூட்டுணர்வை மேலும் வலுப்படுத்திக் கொள்கிறார்கள். இவற்றினால் அந்தக் கிராமமே தன்னைப் புதுப்பித்துக்கொள்கிறது.

தமிழ்நிலத்தின் மிக நீண்ட பண்பாட்டுத் தொடர்ச்சியின் அங்கமாக விளங்கியுள்ள மலையகத் தமிழர்கள், பெருந்தோட்டத் தொழிலின் நிமித்தம் கடல் கடந்து இலங்கை வந்து, இங்கேயே நிலைகுடிகளாகத் தங்கிவிட்ட போதிலும் தம் பூர்வீகப் பண்பாட்டின் தொடர்ச்சியை வெவ்வேறு மட்டங்களில் பின்பற்றியும் காலமாற்றத்துக்கு ஏற்ப தகவமைத்தும் பேணி வருகின்றனர். அதன் ஒரு வெளிப்பாடாக, பெரிய எழுத்துப் பொஸ்தகங்களின் பயில்வு அமைகிறது.

உசாத்துணை மூலங்கள்

அரசு, வீ. (க.ஆ.). (2014). "தமிழ் அச்சுப் பண்பாடு: உருவாக்கம் - வளர்ச்சி - நிலைபேறு." மாற்றுவெளி ஆய்விதழ், 15. சென்னை: மாற்று.

சர்மிளா, எஸ். (2018). நல்லதங்காள் கதைப்பாடலும் சடங்காசாரங்களும்: அப்புத்தளை பிரதேசத்தை முன்னிறுத்திய கள ஆய்வு. இளங்கலைப் பட்டத்துக்காக பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு (பிரசுரிக்கப்படாதது).

தவச்செல்வன், சு. (2015). படைப்பும் படைப்பாளுமையும். பெருவிரல் வெளியீடு.

வேலுப்பிள்ளை, ஸி.வி. (1987). வீடற்றவன். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

Gnanamuthu, G. A. (1977). *Education and the Plantation Workers in Sri Lanka*. Colombo: Council of Churches.

இலங்கைத் தமிழர்களிடையே கண்ணகி வழிபாடு என்றும் சிங்கள மக்களிடையே பத்தினி வழிபாடு என்றும் வழங்கப்பட்டு வரும் வழிபாடுகளுடன் தொடர்புடைய சடங்குசார் நிகழ்த்து கலைகளில் ஒன்றாகவே 'கொம்புமுறி' விளையாட்டு இடம்பெற்று வருகின்றது. இக்கொம்புமுறி விளையாட்டு சமயம், கலை ஆகிய இரு துறைகளிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. இது சிங்களவர்களால் 'அங்கெலிய' என்று அழைக்கப்படுகின்றது. இந்நிகழ்வு ஆடி மாதத்தில் அறுவடைக்குப் பின்னரான காலப்பகுதியில் நிகழ்த்தப்படுவது வழக்கம். தமிழர்களின் கொம்புமுறிக்கும் சிங்களவர்களின் அங்கெலியவிற்கும் பல ஒற்றுமைகள் இருப்பினும் அவை தமக்கிடையே தனித்துவமான பண்புகளையும் கொண்டிருக்கின்றன. இந்த வகையில் கண்ணகி வழிபாட்டிற்கும் அதனுடன் தொடர்புடைய நிகழ்த்து கலையான கொம்புமுறி விளையாட்டுக்கும் இடையிலான தொடர்பினையும், அதன் சமுதாய மானிடவியல் பின்புலத்தினையும், கொம்புமுறி விளையாட்டின் சடங்குசார் நிகழ்த்துகலை முறைமையினையும், தமிழ் – சிங்கள கொம்புமுறி விளையாட்டுகளுக்கு இடையிலான ஒற்றுமை – வேற்றுமைகளையும் ஆராய்வதாக 'கொம்புமுறி விளையாட்டு: இலங்கையில் கண்ணகி – பத்தினி வழிபாட்டின் எச்சம்' எனும் இத்தொடர் இடம்பெறுகின்றது.

இலங்கையில் சிங்கள மக்களிடையே காணப்படுகின்ற பத்தினி வழிபாட்டுடன் தொடர்புடைய அங்கெலிய விளையாட்டு

கிருபாகரன் கவிதாஞ்சன்

கிருபாகரன் கவிதாஞ்சன் மட்டக்களப்பு மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் சிறப்பு இளங்கலைமாணிப் பட்டத்தையும் அதே பல்கலைக்கழகத்தில் தமிழ் முதுகலை மாணிப் பட்டத்தையும் பெற்றவர் ஆவார். தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முது தத்துவமாணிப் பட்டத்திற்கான ஆய்வாளராக தொடர்ந்தும் தனது கல்விப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றார். நாட்டுப்புறவியல், நாடகமும் அரங்கியிலும் ஆகிய துறைகளிலும் பல ஆக்கங்களைத் தற்காலத்தில் எழுதி வருகின்றார். என்பதோடு இவர் சிறந்த மேடை நடிகரும் ஆவார்.

இலங்கையில் சிங்கள மக்களின் சமய வாழ்வில் பத்தினி வழிபாடு மிக முக்கியமான இடத்தினைப் பெற்றிருக்கின்றது. சிங்கள மக்கள் பத்தினித் தெய்வத்தினைத் தொற்று நோய்களைத் தீர்க்கும் அதிதேவதையாகக் கொள்கின்றனர். மழைவளம் குன்றிப் பசியும் பிணியும் தோன்றுவதற்கும் அதனால் ஏற்படுகின்ற நோய்களுக்கும் பத்தினியின் சீற்றமே காரணம் என்பதனை மனதிலே கொண்டு, பத்தினி தெய்வத்தினைச் சாந்தி செய்வதற்காகப் பலவகையான சடங்குகளையும் நிகழ்த்துகலைகளையும் சிங்கள மக்கள் செய்துவருகின்றனர். சிங்களவர்கள் கம்மடுவ, அங்கெலிய, கிரியம்மா தானம், சொக்கறி போன்ற சடங்குகளையும் நிகழ்த்துகலைகளையும் பத்தினி தெய்வத்தினைச் சாந்தி செய்வதன் பொருட்டு பயபக்தியுடன் மேற்கொண்டு வருகின்றார்கள்.

அங்கெலிய விளையாட்டு

அங்கெலிய என்பது சிங்கள மக்கள் மத்தியில் காணப்படுகின்ற பத்தினி வழிபாட்டுடன் தொடர்புடைய ஒரு சடங்குசார் நிகழ்த்துகலையாகும். இது மரக்கொம்பு அல்லது மான்கொம்பினைக் கொண்டு விளையாடுகின்ற விளையாட்டாகும். இவ்விளையாட்டின் போது கிராமத்தவர்கள் இரண்டு குழுக்களாகப் பிரிவர். இக்குழுக்கள் ‘உடபில’, ‘யட்டபில’ என்று அழைக்கப்படுகின்றன. உடபில என்பது கோவலனின் (அளுத் தெவியோ, பாலன்க) கட்சியாகும். யட்டபில என்பது பத்தினியின் கட்சியாகும். அங்கெலியவுடன் பெரஹெரா நிகழ்ச்சியும் இணைந்து நடைபெறுகின்றது. இது பாணமை, மாலிதுவ, பியன்வில, துனுஹெல போன்ற இடங்களில் நிகழ்த்தப்படுகின்றது.

ரொபேர்ட் நொக்ஸ் கி.பி. 1681இல் எழுதிய நூலில் அங்கெலிய பற்றிக் காணப்படும் குறிப்பு இலங்கையில் அங்கெலியவுக்கு நீண்ட வரலாறு உண்டு என்பதற்குச் சான்றாக விளங்குகின்றது. ரொபேர்ட் நொக்ஸ் அங்கெலிய விளையாட்டுத் தொடர்பாகத் தனது நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“There is another sport, which generally all people used with much delight, being, as they called it, a sacrifice to one of their Gods; to wit, potting Dio. And the benefit of it is, that it frees the country from grief and Diseases. For the beastliness of the Exercise they never celebrated it near any Town, not in sight of Women, but in a remote place. The manner of the game is thus. They have two crooked sticks like Elbows, one hooked to the other, and so with contrivances they pull with Rops, until the one breaks the other; some siding with one stick, and some with the other ; but never is money laid on either side. Upon the breaking of the stick, that party that hath won doth not a little rejoice. Which rejoicing is exprest by Dancing and Singing, and uttering such sordid beastly Expressions, together with postures of their Bodies, as I omit to write them...and even the King himself hath spent time in it, but now lately he hath absolutely forbidden it under penalty of a forfeiture of money. So that now the practice hereof is quite left off. But though it is thus gone into disuse, yet out of the great delight the people had in it, they of Gompala would revive it again, and did...” [1]

ரொபேர்ட் நொக்ஸின் இக்கூற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு பின்வருமாறு:

மக்களால் பொதுவாக மகிழ்ச்சியுடன் விளையாடப்படுகின்ற, பத்தினித் தெய்யோ (Potting Dio) என்று அவர்களால் பெயர்கூறி அழைக்கப்படும் தெய்வங்களுள் ஒருவருக்கு அர்ப்பணம் செய்வதன் பொருட்டு விளையாடப்படும் இன்னுமொரு விளையாட்டும் அங்கே உள்ளது. இவ்விளையாட்டின் மூலம் நாட்டிலுள்ள துயரங்களும் நோய்களும் விடுவிக்கப்படும் என்பதுதான் இவர்களின் நம்பிக்கை போல். மிருகத்தனமான அங்க அசைவுகளைக் கொண்ட விளையாட்டு என்பதினால், நகரங்களிலும் பெண்கள் இருக்கும் பகுதிகளிலும் இது விளையாடப்படாமல் சற்றுத் தொலைவாக உள்ள இடத்திலேயே விளையாடப்படுகின்றது. மடிக்கப்பட்ட முழங்கை வடிவிலான இரண்டு கோணலான தடிகளை அவர்கள் வைத்துள்ளனர். ஒன்று இன்னொன்றுடன் இணைக்கப்பட்டிருக்கும். அதன் பின்னர் அவர்கள் திட்டமிட்டுக் கயிறுகளைப் பிடித்துப் பலமாக இழுப்பர். அதாவது ஒரு கொம்பு மற்றையதை உடைக்கும் வரை இழுப்பர். சிலர் ஒரு தடியை வைத்துக் கொண்டு இதற்கு உதவி செய்கின்றார்கள். இவ்விளையாட்டில் இரு பக்கங்களிலும் பணம் பயன்படுத்தப்படுவதில்லை. கொம்புகள் முறிக்கப்பட்ட பின்னர் கொண்டாட்ட நிகழ்ச்சியொன்று நிகழும். இக்கொண்டாட்டமானது சிறிய அளவிலான மகிழ்ச்சி வெளிப்பாடாக இருக்காது. ஆடியும் பாடியும் மிருகத்தனமான கேவலமான சொற்களை உணர்ச்சிவசப்பட்ட நிலையிலே உச்சரித்தும் கொண்டாடுவர். உடல்களை ஒன்றிணைத்துக்கொண்டு... நான் அதனை எழுதுவதைத் தவிர்க்கின்றேன். மன்னனும் தானாக நேரத்தைச் செலவு செய்து அங்கே பிரவேசித்திருக்கின்றார். பின்னர் மன்னர் அச்செயற்பாடுகளிற்குத் (மிருகத்தனமான செயற்பாடு) தண்டப்பணம் விதித்துள்ளார். எனவே அத்தகைய

செயற்பாடுகள் தற்போது குறைவு. இந்த நடைமுறை மிகவும் அமைதியாக இடம்பெறுகின்றது. அவை குறைந்து பயன்படுத்தப்படாமற் போனாலும் மக்கள் தொடர்ந்து உச்ச மகிழ்ச்சியையே பெற்று வருகின்றனர். கம்பளையில் (*Gompla*) உள்ளவர்கள் இதனைப் புதுப்பிக்க எண்ணியுள்ளனர். புதுப்பித்தார்கள் (செய்தார்கள்).

அங்கெலிய விளையாட்டுத் தொடர்பாக சிங்கள மக்கள் மத்தியிலுள்ள ஐதீகக் கதை

பத்தினியும் பாலங்கனும் (கோவலன்) இரு மரக்கிளைகளைப் பிடித்து ஒரு செண்பகமலரைப் பறிக்க முயன்றனர். அப்போது, இரண்டும் ஒன்றோடொன்று கொழுவிக்கொண்டன. இருவரும் அதை விளையாட்டாக மாற்றிய போது, பாலங்கனின் கையிலிருந்த மரக்கொம்பு முறிந்தது. பத்தினி மகிழ்ச்சியில் குதித்தாள். அதனால் அங்கெலிய பத்தினியை மகிழ்ச்சியில் ஆழ்த்தும் முக்கியமான கலையாடல்களில் ஒன்றாகியது என்று சிங்கள மக்கள் நம்புகின்றனர்.[2] அங்கெலியவின் பழங்கதைகள் சிலப்பதிகாரத்துடனும் கம்மடுவவின் போது பாடப்படுகின்ற பத்தினி தெய்வப் பாடல்களுடனும் எவ்விதத் தொடர்பினையும் கொண்டனவல்ல.[3]

அங்கெலிய விளையாட்டு

அங்கெலிய விளையாட்டிற்கான முன்னாயத்தங்கள்

அங்கெலிய விளையாட்டு விளையாடப்படுகின்ற காலப்பகுதி வந்ததும் கப்புறாளை மற்றும் பஸ்ஸநாயக்க நிலமே போன்றோர் அதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வர். அங்கெலிய விளையாட்டினை நடாத்துவதற்காக உடபில, யட்டபில போன்ற அணிகளிற்குப் பொறுப்பாக வட்டாண்டிமார் நியமிக்கப்படுவர். இவர்கள் நியமிக்கப்பட்ட நாட்களிலிருந்து சுத்தமாக இருக்க வேண்டியது அவசியமாகும். மற்றும் அங்கெலிய முடிவடையும் நாட்கள் வரை 'ஹொாலுஹால்' எனப்படும் சோற்றுடன் முருங்கைக் கீரையையே இவர்கள் உண்ண வேண்டுமென்பதுடன், பாலியல் நடவடிக்கைகளிலிருந்து விலகியும் இருக்க வேண்டும். ஆனால் அங்கெலிய நிகழ்வின் போது இவர்கள் மதுபானம் அருந்துவர். மதுபானம் அருந்துவதால் இவர்களின் தூய்மைக்குப் பங்கம் ஏற்படாது என்று கருதப்படுகின்றது. அங்கெலிய நிறைவுபெறும் வரை இவர்கள் ஆலய வளாகத்திலேயே கூடாரமமைத்துத் தங்கவைக்கப்படுவர். வட்டாண்டி தூய்மையற்றவராகக் கருதப்படின் அவருக்குப் பதிலாக வேறு வட்டாண்டி நியமிக்கப்படுவார். அங்கெலிய நிறைவுறும் வரை இவர்கள் சவரம் செய்யவோ தலைக்கு எண்ணெய் வைக்கவோ கூடாது. அங்கெலிய விளையாட்டு ஆரம்பமாகும் நாள் அறிவிக்கப்பட்டவுடன் கிராமத்தில் மாமிச உணவானது முற்றாகத் தடை செய்யப்படும். மக்கள் அனைவரும் மரக்கறி உணவையே உண்பர். இதனை மேற்பார்வை செய்வதற்காக ஆலய நிர்வாகத்தினரால் ஒரு குழுவினர் நியமிக்கப்படுவர். யாராவது வீட்டிலே புலால் உணவினைச் சமைத்தாலோ அல்லது வைத்திருந்தாலோ ஆலயத்தினரால் நியமிக்கப்பட்ட குழுவினரால் அவர்களிற்குத் தண்டப்பணம் விதிக்கப்பட்டு, அவர்கள் ஊரை விட்டு விலக்கியும் வைக்கப்படுவர். இக்காலத்தில் கிராமத்தில் வசிப்பவர்களிடையே பாலியல் உறவுகள் தவிர்க்கப்படும். பிரசவமான தாய்மார்கள், மாதவிடாயுள்ள பெண்கள் போன்றோர் அருகாமையிலுள்ள வேறு கிராமத்திற்கு அனுப்பப்படுவர். அல்லது காட்டிலே 'குடிலிகே' என்ற கூடாரம் அமைத்துத் தங்கவைக்கப்படுவர்.

காட்டிற்குச் சென்று கொம்புகளையும் கயிற்றிற்குத் தேவையான கொடிகளையும் வெட்டியெடுக்கின்ற பணியில் ஒவ்வொரு கட்சியினரும் ஈடுபடுவர். இச்செயற்பாட்டிற்கு ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்த வட்டாண்டிமாரே பொறுப்பாக இருப்பர். பாலை, வீரை, குறுமண்கஸ், ஹபற, வாயன் போன்ற மரங்களிலிருந்தே கொம்புகள் பெறப்படுகின்றன. கயிறு திரிப்பதற்காக மைலா மரத்தின் வேரும் களவெல என்ற கொடியும் மான், மரை போன்றவற்றின் தோல்களும் பயன்படுத்தப்படுகின்றன. ஹெனகந்தவடவிற்காக (செவ்வாய்க்குற்றி) இடிவிழுந்த பனைமரம் அல்லது இடிவிழுந்த பாலை மரம் போன்றவற்றினைத் தெரிவு செய்வர். இளையோர் விளையாடுகின்ற விளையாட்டான கொழு அங்கெலியவிற்கான கொம்புகளே முதலிலே தெரிவு செய்யப்படும். உடபில, யட்டபில ஆகிய இரு அணியினரும் கப்புறாளவும் சேர்ந்தே இதற்கான கொம்புகளைத் தெரிவு செய்வர். அதன் பின்னரே மஹா அங்கெலியவிற்கான கொம்புகளை ஒவ்வொரு கட்சியினரும் தனித்தனியாகக் காட்டிற்குச் சென்று வெட்டியெடுப்பர்.

காட்டிலிருந்து வெட்டிக் கொண்டுவரப்பட்ட கொம்புகளை, மத்தியஸ்தம் வகிப்பதற்காகப் பஸ்ஸநாயக்க நிலமேயினால் நியமிக்கப்பட்டவர்கள் மற்றும் கப்புறாளைமார் போன்றோர் பரிசோதனை செய்து விளையாடத் தகுதியுள்ள கொம்புகளைத் தெரிவு செய்வர். ஒரே அளவினையுடைய கொம்புகளே விளையாடத் தகுதியுள்ளனவாகக் கருதப்படும். விளக்கெரிக்கப் பயன்படும் திரித்துண்டம் ஒன்றினால் கொம்பினது மார்புப்பகுதி அளக்கப்பட்டே கொம்பினது அளவு கணிக்கப்படும். கொம்பின் அளவு பெரியதாகக் காணப்படின் அது சீவப்பட்டுச்

சிறியதாக்கப்படும். கொம்பு சிறியதாக இருப்பின் அது கயிற்றினைக் கொண்டு கட்டிப் பெரிதாக்கப்படும்.

விளையாடத் தகுதியான கொம்புகளைத் தெரிவு செய்த பின்னர் கொம்புகளை வலுப்படுத்தும் செயற்பாடு இடம்பெறும். கொம்புகளை வலுப்படுத்துவதற்காக வட்டாண்டிமாரினால் கொம்புகளின் மீது மாக்கட்டிகளைக் கொண்டு தயார் செய்த பசையும் சோற்றுப்பசையும் பூசப்படும்.

அங்கெலிய விளையாட்டானது கதிர்காமத் தெய்வத்தின் திருவிழாவின் இறுதியில் நடைபெறுகின்ற நீர்வெட்டுச் சடங்கு முடிவடைந்த பின்னர் ஆரம்பமாகும். ஆவணி மாதத்திலுள்ள வளர்பிறையிலே தொடர்ந்து பதினைந்து நாட்களுக்கு இந்நிகழ்வு இடம்பெறும். இறுதிநாள் (பதினைந்தாவது நாள்) பூரணை நாளாக அமைந்திருக்கும். முதல் மூன்று நாட்கள் கொழு அங்கெலிய (*Kolu Ankeliya*) இடம்பெறும். இதனை இக்கிராமத்தில் வசிக்கின்ற இளவயதினையுடைய ஆண்கள் மேற்கொள்வர். அடுத்து வருகின்ற ஒன்பது நாட்கள் மஹா அங்கெலிய (*Maha Ankeliya*) இடம்பெறும். இது கிராமத்திலுள்ள பெரிய பருவமுள்ள திருமணமான ஆண்களால் மேற்கொள்ளப்படும் விளையாட்டாகும். பதின்மூன்றாம் நாள் வலிபனாவ (*Valibanava*) என்ற நிகழ்வு இடம்பெறும். பதினான்காம் நாள் பெரஹெரா ஊர்வலமும் பதினைந்தாம் நாள் நீர்வெட்டுச் (*Diya Keliya*) சடங்கும் இடம்பெறும்.

கொழு அங்கெலிய நிகழ்வு

அங்கெலியவில் முதல் மூன்று நாட்களும் இடம்பெறுகின்ற நிகழ்வு கொழு அங்கெலிய எனப்படும். இது அக்கிராமத்தில் வசிக்கின்ற இளவயதினையுடைய ஆண்கள் மட்டுமே விளையாடுகின்ற விளையாட்டாகும். இதன்போது முறிக்கப்படுகின்ற கொம்புகள் அளவில் சிறியனவாகக் காணப்படும். அனேகமாகப் பாலை மரங்களிலிருந்து பெறப்பட்ட கொம்புகளே இதன்போது முறிக்கப்படுகின்றன. கொம்பு முறிப்பதற்கு முன்னர் பத்தினி ஆலயத்திலும் அளுத் தெவியோவின் ஆலயத்திலும் இரு கட்சியினரும் தத்தம் கொம்புகளை வைத்துப் பூசை செய்வர். பூசைகள் நிறைவடைந்த பின்னர் கொம்புகள் தட்டிலே வைக்கப்பட்டுக் கொம்பு முறிப்பதற்கான இடத்திற்குக் கொண்டுவரப்படும். கொழு அங்கெலிய முறித்தலின் போது உடபில கட்சியினருக்குரிய ஹெனகந்தவட (செவ்வாய்க்குற்றி) பயன்படுத்தப்பட மாட்டாது. அதற்குப் பதிலாக நீளமான இரு கயிறுகளை உடபிலவின் கொம்புகளில் கட்டுவர். இக்கயிறு வரன் (*Varan*) என்று அழைக்கப்படும். அக்கயிறுகளில் ஒன்றை உடபிலவினரும் மற்றையதை யட்டபிலவினரும் பிடித்து இழுப்பர். கொழு அங்கெலியவில் முறிக்கப்படுகின்ற முதலாவது கொம்பு பத்தினியின் கட்சிக்கு வெற்றிதரும் முகமாகவே முறிக்கப்படுவது வழக்கமாகும். இவ்விளையாட்டு இடம்பெறும் நாட்களில் பெண்கள் ஆலய வளாகத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.



1. அன்கஹ (தாய்மரம்)
2. அன்கஹ வளையம்
3. வடம்தாங்கித் தடி
4. யட்டபிலவினரின் கயிறு
5. யட்டபில கொம்பு
6. உடபில கொம்பு
7. உடபிலவினரின் கயிறு
8. இழுவை வடம் (உடபில)
9. இழுவை வடம் (யட்டபில)

மஹா அங்கெலிய

கொழு அங்கெலிய நிறைவுற்றதும் அதனைத் தொடர்ந்து ஒன்பது நாட்கள் மஹா அங்கெலிய இடம்பெறும். இவ்விளையாட்டானது கிராமத்திலுள்ள திருமணம் முடித்த பெரிய பருவமுள்ள ஆண்களினால் விளையாடப்படும். இவ்விளையாட்டு விளையாடப்படும் நாட்களில் ஆலய வளாகத்திற்குள் பெண்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். இவ்விளையாட்டின் போதே யட்டபிலவினரிற்குரிய ஹெனகந்தவட (செவ்வாய்க்குற்றி) பயன்படுத்தப்பட்டுக் கொம்புகள் முறிக்கப்படும். இதற்காக ஹெனகந்தவட வெள்ளைத் துணியினால் மூடப்பட்டுக் கொம்பு முறிப்பதற்கான இடத்திற்குக் கொண்டுவரப்பட்டு, இதனை நடுவதற்காக அமைக்கப்பட்டிருக்கும் ஒரு குழியினுள் ஆதாரமாக வைக்கப்படும்.

இரவு நேரத்திலேயே மஹா அங்கெலியப் போட்டிகள் நடைபெறும். இவ்விளையாட்டின் போது ஆலய வளாகத்தினைவிட்டு இயற்கை உபாதைகளைக் கழிக்கக்கூட வெளியில் செல்ல முடியாது. போட்டிக்கான கொம்புகள் ஆலயத்தில் வைத்துப் பூசை செய்த பின்னரே எடுத்துவரப்படும். கொம்புகளை விளையாடப்படுகின்ற இடத்திற்கு எடுத்துவரப்படும் நிகழ்வு வைபவ ரீதியாக இடம்பெறும். முதலில் யட்டபிலவினைச் சேர்ந்த கொம்பினை வெள்ளைத்துணியால் போர்த்திக்கொண்டு அக்கட்சிக்குப் பொறுப்பான வட்டாண்டியார் கொம்பு முறிக்கப்படுகின்ற இடத்திற்குக் கொண்டுவருவார். அதன் பின்னர் உடபிலவிற்குரிய கொம்பானது வெள்ளைத் துணியால் போர்த்தப்பட்டு அக்கட்சிக்குப் பொறுப்பான வட்டாண்டியால் கொண்டுவரப்படும். அதன்பின்னர் கொம்புகளைத் தாங்கிய ஊர்வலம் இடம்பெறும். முதலிலே அளுத் தெவியோவினுடைய கொம்பினைத் தாங்கிக்கொண்டு செல்ல, பின்னர் பத்தினித் தெய்வத்தின் கொம்பு கொண்டு செல்லப்படும். இவ்வூர்வலமானது இடமிருந்து வலமாக உடபில மற்றும் யட்டபில சந்நிதானங்களை இணைக்கும் வகையிலே வட்டவடிவில் சுற்றிக் கொண்டுவரப்படும். இதற்குப் பின்னர் கொம்புகள் கொம்பு முறிக்கப்படவிருக்கின்ற இடத்திற்குக் கொண்டு செல்லப்படும். யட்டபிலவின் கொம்பானது அதற்குரிய கொடிக்கயிறுகளால் பிணைக்கப்பட்டுத் தாய்மரத்துடன் (*AnGaha*) கட்டப்படும். உடபிலவின் கொம்பானது அதற்குரிய கொடிக்கயிறுகளினால் பிணைக்கப்பட்டு ஹெனகந்தவடவுடன் (செவ்வாய்க்குற்றி) இணைக்கப்படும். ஹெனகந்தவடவிலே பிடித்து இழுப்பதற்காக இரண்டு வடக்கயிறுகள் கட்டப்பட்டிருக்கும். அதன்பின்னர் வட்டாண்டிமார் உடபில கொம்பினை யட்டபில கொம்புடன் ஒன்றுடனொன்று பிணைப்பார்கள். கொம்புகள் விலகாது இருப்பதற்காக 'றிக்கிலிய' என்ற தடியினைப் பயன்படுத்துவர். அதன்பின்னர் ஹெனகந்த வடவில் கட்டப்பட்ட ஒரு வடக்கயிறை உடபிலவினரும் மற்றைய வடக்கயிறை யட்டபிலவினரும் பிடித்து இழுப்பர். இழுவையின் போது எந்தக் கொம்பு முதலில் உடைகின்றதோ அது தோல்வியடைந்த கொம்பாகக் கருதப்படும். வெற்றிபெற்ற கொம்பானது ஆரவாரத்துடன் சிவப்புத் துணியினால் மூடப்பட்டு அதற்குரிய ஆலயத்திற்குக் கொண்டு செல்லப்படும். அதன்போது வெற்றிபெற்ற கட்சியினர் தோல்வியடைந்த கட்சியினரை இகழ்ந்து வசைப்பாடல்களைப் பாடுவர். ஆபாசக் கருத்துகளை வெளிப்படுத்தும் விதத்தில் சில செய்கைகள் இடம்பெறும். தாய் - மகன் உறவுகள் போன்றன தவறான முறையில் கூறப்பட்டு அது சைகைகள் மூலமும் செய்து காட்டப்படும். சிலர் நிர்வாணமாகவும் நடனமாடுவர். புத்தருக்குரிய வழிபாடுகள் கேலி செய்யப்படும். கொம்பு முறித்தலின் போது அவ்விளையாட்டில் ஈடுபடுபவர்கள் மதுபானத்தினையும் அருந்துவர். இவ்வாறாக ஒன்பது இரவுகளின் போதும் நாளொன்றிற்கு நான்கு அல்லது ஐந்து கொம்புகள் வீதம் உடைக்கப்படும். கொம்புகள் முறிக்கப்பட்ட பின்னர் பத்தினி ஆலயத்திற்குரிய கப்புறாளை பின்வரும் பாடலைப் பாடுவார்.

"மீதா குளமே உம் பத்தினியோ

நரலோவா அன்கெலி பலன்ன வெடியோ

மேகமு உவதிர சிரிபா ஹரியோ

அவ் அன்கெலியட சத் பத்தினியோ

ஏசிறி பொட்டக் கென காடத மீ கென

ரண் சலமக் கென தேத புராகன

நொமல நொகில பன நகுசே வயாகன

சித்த பத்தினி எகாதி திவஸ் பலாகன."[4]

பத்தினியின் கட்சி அங்கெலிய விளையாட்டின் போது வெற்றி பெற்றால் விவசாயம் செழிப்பாக நடைபெறும் என்றும் அளுத்தெவியோவின் கட்சி வெற்றி பெற்றால் நோய்நொடிகள் ஊரைவிட்டு நீங்கும் என்றும் மக்கள் நம்புகின்றனர்.



1. அன்கஹ (தாய்மரம்)
2. அன்கஹ வளையம்
3. யட்டபில கொம்பு
4. உடபில கொம்பு
5. றிக்கிலிய
6. யட்டபிலவினரின் கயிறு
7. உடபிலவினரின் கயிறு
8. ஹெனகந்தவடவினைச் சுற்றிப் போடப்பட்ட

கயிறு

9. யட்டபிலவினரின் இழுவை வடம்

10. உடபிலவினரின் இழுவை வடம்

11. ஹெனகந்தவட

12. ஹெனகந்தவடவினை நடுவதற்காக அமைக்கப்பட்ட குழி

வலிபனாவச் சடங்கு

மஹா அங்கெலிய நிறைவு பெற்றதும் பதின்மூன்றாம் நாள் இடம்பெறுகின்ற சடங்கு வலிபனாவ சடங்கு என்று அழைக்கப்படும். வலிபனாவ என்பது கயிற்றினைக் குறைத்தல் அல்லது கயிற்றினை இழுத்தல் என்று பொருள்படும். உடபில, யட்டப்பில போன்ற கட்சியினரிடையே இதுவரை காலமும் இருந்த போட்டி மனப்பான்மையை நீக்கவே இச்சடங்கானது செய்யப்படும். இச்சடங்கின் போதே பெண்கள் ஆலய வளாகத்தினுள் அனுமதிக்கப்படுவர். இச்சடங்கின் போது உடபிலவிற்குரிய கொம்பும் யட்டபிலவிற்குரிய கொம்பும் ஆலயத்திலிருந்து கொம்பு முறிக்கப்படும் இடத்திற்குக் கொண்டுவரப்படும். இக்கொம்புகள் இதுவரை காலமும் முறிக்கப்பட்ட கொம்புகளைவிட அளவில் பெரியதாகக் காணப்படும். கொம்புகள் அதற்கான இடத்திலே வைத்து ஒன்றுடனொன்று கொழுவப்படும். ஆனால் இதன்போது கொம்புகளை உடைப்பதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. அதன் பின்னர் இரண்டு அணிகளுமே வெற்றிபெற்ற அணிகளாக அறிவிக்கப்படும். இச்சடங்கில் வசைச் சொற்களைக் கூறுவதோ நடனமாடுவதோ இடம்பெறுவதில்லை.

இச்சடங்கு நிறைவுற்றதும் ஆலயத்தின் கதவு திறக்கப்பட்டுப் பூசை இடம்பெறும். ஆனால் அதன்போது திரைச்சீலையொன்றினால் ஆலயத்தின் வாயில் மூடப்பட்டிருக்கும். பக்தர்கள் ஆலயத்திற்குச் சென்று பத்தினி தெய்வத்தையும் அளுத்தெவியோவையும் வழிபடுவர். இதன்போது பக்தர்கள் வெள்ளைத் துணியொன்றில் நாணயக்குற்றியினைச் சுற்றிக்கட்டி ஆலயத்திலுள்ள விளக்கிலே தமக்குள்ள நோய்களைத் தீர்க்கும்படி பத்தினியை வேண்டி நேர்ந்து கட்டுவர். இது 'பண்டுறு' (Panduru) என்று அழைக்கப்படும். பூசை முடிவடைந்த பின்னர் உடபில, யட்டபில போன்ற கட்சியினர் தமக்குள் இனிப்பு வகைகளைப் பரிமாறிக்கொள்வர்.

பெரஹர நிகழ்வு

அங்கெலிய விளையாட்டின் பதினான்காம் நாள் பெரஹர செல்லுதல் (ஊர்வலம் செல்லுதல்) இடம்பெறும். இதன்போது மாலை நேரத்தில் ஆலயத்திலிருந்து பத்தினித் தெய்வத்தின் பேழை உடபிலவினரிற்குரிய ஹெனகந்தவிற்கு (செவ்வாய்க்குற்றி) அருகாமையில் எடுத்துவரப்படும். அதன்போது உடபிலவினருடைய சிறிய அளவிலான கொம்பினைக் கப்புறாளை வளைத்துப் பலவீனமாக்குவார். பின்னர் அக்கொம்பு யட்டப்பிலவினரின் கொம்புடன் பிணைக்கப்பட்டு உடைக்கப்படும். முறையாக வெற்றியானது பத்தினிக்கு உரித்தானதாக்கப்படும். அங்கெலிய விளையாட்டின் போது முதலாவதாக முறிக்கப்படுகின்ற கொம்பும் இறுதியாக முறிக்கப்படுகின்ற கொம்பும் பத்தினியின் கட்சிக்கே வெற்றி கிடைக்கத்தக்கதாக முறிக்கப்படுவது வழக்கமாகும்.

கொம்புகள் முறிக்கப்பட்ட பின்னர் பத்தினித் தெய்வத்தின் பேழையும் அளுத் தெவியோவின் பேழையும் ஊர்வலமாக யானைமீது ஏற்றப்பட்டுக் கொண்டு செல்லப்படும். இதற்கு பஸ்ஸநாயக்க நிலமே தலைமை தாங்குவார். முதலிலே அளுத் தெவியோவினுடைய ஊர்வலமும் அதன் பின்னர் பத்தினித் தெய்வத்தின் ஊர்வலமும் செல்லும். ஊர்வலத்தின் போது 'லிக்கிலிய' (Likeliya) என்றழைக்கப்படும் கோலாட்டக்காரர்களின் கோலாட்ட நடனமும் இடம்பெறும். இதன்போது லிக்கிலிய ஆடுபவர்கள் மது வகைகளைப் பாவிப்பதுண்டு.

கிராமத்தின் நுழைவாயிலில் பாரிய அரங்கமொன்று அமைக்கப்பட்டிருக்கும். அங்கே நெல், வெற்றிலை, பாக்கு, பூக்கள், தேங்காய், கற்பூரம் போன்றன பத்தினித் தெய்வத்திற்குப் படைக்கப்பட்டிருக்கும். இது அக்கிராமத்தின் தலைவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். அதன் பின்னர் பத்தினித் தெய்வம் யட்டப்பிலவினரின் வீடுகளிற்கும் அளுத் தெவியோ உடபிலவின் வீடுகளிற்கும் கொண்டு செல்லப்படும். ஒவ்வொரு வீட்டிலும் வீட்டிற்கு முன்புறமாகப் பலிப்பீடமொன்று அமைக்கப்பட்டிருக்கும். அதிலே நிறைகுடம், மஞ்சள் கலந்த நீர், வெற்றிலை, பாக்கு, கற்பூரம், பூக்கள், தேங்காய் எண்ணெய், விளக்கு போன்றன வைக்கப்பட்டிருக்கும். ஊர்வலம் வீட்டிற்கு அருகாமையில் வருகின்ற போது கப்புறாளை நிறைகுடத்திலுள்ள தேங்காயை எடுத்து உடைத்துப் பின்னர் மஞ்சள் கலந்த நீரினை எடுத்து வீட்டிலுள்ளவர்களின் மீது தெளிப்பார். அதன்பின்னர் கப்புறாளையினால் மதுரையில் நெருப்பு எவ்வாறு அணைக்கப்பட்டது என்பது தொடர்பான பாடல் பாடப்பட்டு மக்களுக்கு விளக்கம் கொடுக்கப்படும். அப்பாடல்கள் பின்வருமாறு அமைந்திருக்கும்.

“ஹெமி தெவியோ ஹெமி மஹிமா

ஹெமி மல்வசி வெஸ்ஸீ மெஹேம

மதுராவே கினி நிவ்வே மெஹேம”[5]

இதன் தமிழ் அர்த்தமானது பின்வருமாறு:

“கடவுளின் மிகுந்த வலிமை காரணமாக

வானத்திலிருந்து பூமழை பொழிந்தது

இவ்வாறே மதுரையில் தீ தணிக்கப்பட்டது”

இதன்போது பக்தர்கள் கப்புறாளைக்கு பண்டுறு எனப்படுகின்ற நேர்த்திக்கான சில்லறைக் காசுகளை வழங்குவர். இவ்வாறு மறுநாள் காலையிலேதான் ஊர்வலம் ஆலயத்திற்குக் கொண்டுவரப்படும். ஆலய வளாகத்திற்குக் கொண்டுவரப்பட்ட பத்தினியின் பேழையானது சந்நிதானத்தினுள் வைக்கப்படாமல் ஹெனகந்தவடவிற்கு அருகாமையிலே தற்காலிகமாக வைக்கப்படும். ஊர்வலம் செல்லுகின்ற பகுதியிலே யாராவது இறந்துவிட்டால் அப்பகுதியினூடாக ஊர்வலம் கொண்டு செல்லப்பட மாட்டாது.

நீர்வெட்டுச் சடங்கு

அங்கெலிய விளையாட்டில் இறுதிநாளான பதினைந்தாம் நாள் நடைபெறுகின்ற சடங்கு நீர்வெட்டுச் சடங்காகும். இது தியகெலிய (*Diya Keliya*) அல்லது திய கபீம (*Diya Kapeema*) என்று அழைக்கப்படுகின்றது. கஜபாகு மன்னன் கடலினைக் கடந்து தமிழ்நாட்டிற்குச் சென்று பத்தினி வழிபாட்டினை இலங்கைக்குக் கொண்டுவந்த கதையினை நினைவூட்டும் முகமாகவே இங்கு நீர்வெட்டுச் சடங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நீர்வெட்டுச் சடங்கின் முன்னதாகக் காவடியாட்டம் இடம்பெறும். இதன் போது ‘மாற இப்பதீம’ (*Mara Ippaddima*) என்ற நூலிலுள்ள பாடல்களைப் பாடியபடி உடபிலவினைச் சேர்ந்தவர்கள் நடனமாடுவர். வட்டாண்டியார் மஞ்சள் நீரினைக் கொண்டுவந்து தாய்மரத்திற்கு (*AnGaha*) ஊற்றுவார்.

அதன் பின்னர் அளுத் தெவியோ ஆலயத்திற்குரிய கப்புறாளை கத்தியினைக் கொண்டுவந்து தாய்மரத்தினைச் சுற்றிப் போடப்பட்டுள்ள கொடியினையும் ஹெனகந்தவடவினைச் (செவ்வாய்க்குற்றி) சுற்றிப் போடப்பட்டுள்ள கொடியினையும் வெட்டுவார். பின்னர் ஹெனகந்தவட வெள்ளைத் துணியைக் கொண்டு சுற்றப்பட்டு அவ்விடத்தைவிட்டு அப்புறப்படுத்தப்படும். பின்னர் பிரதேசத்திற்கு போதுமான அளவு மழை பெய்ய வேண்டுமென்று கப்புறாளை பிரார்த்திப்பார்.

ஹெனகந்தவடவினை அப்புறப்படுத்திய பின்னர் தியகெலிய ஊர்வலம் செல்வதற்கான ஆயத்தங்கள் இடம்பெறும். இதற்காகப் பத்தினி தெய்யோவின் பேழையும் அளுத் தெவியோவின் பேழையும் யானைகளின் மீது வைக்கப்பட்டு ஊர்வலமாகக் கொண்டு செல்லப்படும். இந்த ஊர்வலத்திற்குப் பத்தினி தெய்யோ ஆலயத்தின் கப்புறாளையும் அளுத் தெவியோ ஆலயத்தின் கப்புறாளையும் தலைமை தாங்குவர். இருவரின் கைகளிலும் நீரினை வெட்டுவதற்கான தடிகள் காணப்படும். இந்த ஊர்வலத்தின் போது காவடியாட்டங்களும் கோலாட்டங்களும் இடம்பெறும். பறை மேளக்காரர்களும் பறையை அடித்தபடி அணிவகுத்துச் செல்வர். ஊர்வலத்தின் போது ஊர் மக்கள் வீதியில் மஞ்சள் நீரினைக் கரைத்து ஊற்றுவர். ஊர் மக்களால் ஊர்வலத்தில் கலந்து கொள்பவர்களுக்குப் பிரசாதங்களும் வழங்கப்படும். இந்த ஊர்வலமானது கடற்கரை, அல்லது நீர்நிலைப் பிரதேசத்தில் நிறைவுபெறும். கப்புறாளைமார்கள் கைகளில் கோல்களையும் அளுத் தெவியோவின் பேழையையும் பத்தினியின் பேழையையும் கொண்டு நீரிற்குள் இறங்குவர். அதன்பின்னர் ஊர்வலத்தில் கலந்துகொண்ட மக்களும் நீரினுள் இறங்குவர். பின்னர் கப்புறாளைமார் மக்களிற்கு நீரினைத் தெளித்து ஆசீர்வாதம் வழங்குவர். இவ்வாறு நீர்வெட்டுச் சடங்கு முடிவடைந்ததும் மீண்டும் ஆலயத்திற்குச் சென்று பூசைகள் இடம்பெற்ற பின்னர் மக்களிற்கு அன்னதானம் வழங்கப்படும். அத்தோடு அங்கெலியவிற்கான அனைத்துச் சடங்குகளும் நிறைவுபெறும்.

அடிக்குறிப்புகள்

1. Robert Knox, *An Historical Relation of Ceylon AD* 1681. P.99.

2. M.D. Ragavan, (1951), *The Pattini Cult as a SocioReligious Institution*, Spolia Zeylonica, p.252.

3. Gananath Obeyesekere, (1994), *The Cult of the Goddess Pattini*, London, University of Chicago, p.383.

4. ஞானபால (பாணமைப் பத்தினி தெய்யோ ஆலயக் கப்புறாளை)

5. Gananath Obeyesekere, op cit, p.393.

இலங்கையில் ஆயுதப் போர் முடிவுக்கு வந்து 16 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், வடக்கு – கிழக்குச் சமூகத்தின் உண்மையான நிலையை ‘போருக்குப் பின் அமைதிக்கு முன்: வடக்குக் கிழக்கில் அறிவு, அதிகாரம், அன்றாட வாழ்க்கை’ எனும் இந்தத் தொடர் ஆராய்கிறது. ‘போர் முடிந்துவிட்டது’ என்ற மேலோட்டமான கொண்டாட்டங்களை நிராகரிக்கும் இத்தொடர், அங்கு இராணுவக் கட்டுப்பாடு, கண்காணிப்பு மற்றும் நில அபகரிப்பு போன்றவை இன்றும் ஒரு தொடர்ச்சியான நிர்வாக முறையாகவே நீடிப்பதாக வாதிடுகிறது. சமூகவியல், தொல்லியல், வரலாறு, மானிடவியல் எனப் பல துறைகளின் ஊடாக, மக்களின் அன்றாட வாழ்வில் அதிகாரம் எவ்வாறு ஊடுருவியுள்ளது என்பதை இது வெளிப்படுத்துகிறது. குறிப்பாக, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் வாழ்வியல் அனுபவங்களை முன்னிறுத்தி, முறையான அரசியல் தீர்வில்லாத இந்த நிலையை ‘முழுமையடையாத இறையாண்மை’ என வரையறுக்கிறது. போருக்குப் பிந்தைய நீதி மற்றும் நல்லிணக்கம் குறித்த ஒரு புதிய முன்னோக்கை வெளிப்படுத்துவதாக இத்தொடர் அமையும்.

போருக்குப் பின் பேசுதல்: மொழியும் மௌனமும் அன்றாடப் பேச்சும்

பகுதி -3

மீநிலங்கோ தெய்வேந்திரன்

ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக உள்ள ஞாலசீர்த்தி மீநிலங்கோ தெய்வேந்திரன் அங்கு சர்வதேச அபிவிருத்தி ஆய்வுகள் முதுகலைத் திட்டத்தை வழிநடத்துகிறார். பூகோளத் தெற்கில் புதுப்பிக்கத்தகு சக்தி மாற்றங்களின் சமத்துவமும் நீதியும் சார் அம்சங்கள் பற்றிய அவரது ஆய்வு, புவிசார் அரசியலின் இயக்கவியல் மீதும்; துப்புரவான சக்தி மாற்றங்களை எய்தலில் வளரும் நாடுகள் எதிர்கொள்ளும் கொள்கைச் சவால்கள் மீதும்; குறிப்பான கவனஞ் செலுத்துகிறது. இவர் கற்பித்தல், திட்ட முகாமை, பொதுக் கொள்கை, சர்வதேச அபிவிருத்தி ஆகியவற்றில் இருபது வருடப் பணி அனுபவம் உடையவர். ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் மானுடப் புவியியலில் முனைவர் பட்டம் பெற்றவராவார்.

அரசியல் வழிசெலுத்தலாக மொழிமாற்றம்: பன்மொழித்தன்மை, அடையாளம், அன்றாடப் பிழைப்பு

மௌனம் அரசியல் பிழைப்பின் ஓர் இலக்கணமாக அமைந்தால், மொழிமாற்றம் மற்றொரு இலக்கணமாக அமைகிறது. போருக்குப் பிந்தைய இலங்கையில், மக்கள் தங்கள் மொழித் திறனை மட்டும் கொண்டு தமிழ், சிங்களம் அல்லது ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஒன்றைத் தேர்ந்தெடுப்பதில்லை. மாறாக, மாறிவரும் சமூகச் சூழல்கள், நிறுவன அமைப்புகள் மற்றும் அரசியல் அபாயங்களுக்கு ஏற்ப, அவர்கள் மொழிகள், வட்டார வழக்குகள், சொற்களஞ்சியங்கள், உரையாடல் பாணிகள் ஆகியவற்றுக்கு இடையில் பயணிக்கின்றனர். மொழித் தேர்வு என்பது அரிதாகவே தற்செயலாக நிகழ்கிறது. அது கேட்போர், அதிகாரம், நெருக்கம் மற்றும் அதன் விளைவுகள் குறித்த ஒரு தொடர்ச்சியான மதிப்பீடாகும். போருக்குப் பிந்தைய இலங்கையில் மொழிமாற்றத்தை, இரு மொழி அல்லது பன்மொழித் தொடர்பின் ஓர் அம்சமாக மட்டும் புரிந்துகொள்ளாமல், அது ஓர் அரசியல் வழிசெலுத்தல் நடைமுறையாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும். பேசுபவர்கள் தங்கள் வீடுகள், அரசாங்க அலுவலகங்கள், இராணுவ இடங்கள், சந்தைகள், பல்கலைக்கழகங்கள், அரசு சாரா நிறுவனங்கள், மத நிறுவனங்கள் மற்றும் புலம்பெயர் சமூக வலைப்பின்னல்களுக்கு இடையில் பயணிக்கும் போது, தங்கள் மொழித் திறன்களைத் தொடர்ந்து மாற்றியமைத்துக் கொள்கிறார்கள். ஒவ்வொரு மொழி மாற்றமும், தகவல் தொடர்பு நிகழும் சமூகக் களத்தின் மதிப்பீட்டைப் பிரதிபலிக்கிறது.

பன்மொழித்தன்மை என்பது வெவ்வேறு மொழிகளின் சகவாழ்வு அல்ல என்பதை மொழியியல் மானிடவியல் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகிறது. மாறாக, மொழிகள் தமக்கெனத் தனித்துவமான சமூக வாழ்வைப் பெறுகின்றன. மைக்கேல் சில்வர்ஸ்டைன் (Michael Silverstein) வாதிட்டது போல, மொழியியல் வடிவங்கள் சுட்டுருகளாக (Indexical) மாறுகின்றன. அவை நேரடிப் பொருளைத் தாண்டி அடையாளங்கள், நிறுவனங்கள், தார்மீக நிலைப்பாடுகள் மற்றும் வரலாறுகளைச் சுட்டிக்காட்டுகின்றன. அதேபோல், பியர் போர்டியூ, மொழியியல் சந்தைகள் சூழலைப் பொறுத்து வெவ்வேறு மொழிகளுக்குச் சமமற்ற குறியீட்டு மதிப்பை வழங்குகின்றன என்று குறிப்பிட்டார். சில பேச்சு முறைகள் அதிகாரம், கல்வி, அதிகாரத்துவம் அல்லது சட்டபூர்வத்தன்மையுடன் தொடர்புபடுத்தப்படுகின்றன, அதேசமயம் மற்றவை நெருக்கம், வட்டாரம் அல்லது விளிம்புநிலையை உணர்த்துகின்றன. இந்தக் கோட்பாட்டுப் பார்வைகள் இலங்கையின் சூழலைத் தெளிவுபடுத்துகின்றன. அங்கு தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகியவை தகவல் தொடர்புக்கு அப்பாற்பட்ட அரசியல் அர்த்தங்களை நீண்ட காலமாகத் தாங்கி வந்துள்ளன. குறிப்பாக **1956**இல் சிங்களம் மட்டும் சட்டம் இயற்றப்பட்டதிலிருந்து, மொழி இந்தத் தீவின் நவீன அரசியல் வரலாற்றில் மையமாக இருந்து வருகிறது. ஸ்டான்லி ஜே. தம்பையா நிரூபித்தது போல, குடியுரிமை, தேசியம், அரச அதிகாரம் ஆகியவை போட்டியிடப்பட்ட ஒரு முக்கியக் கருவியாக மொழிக் கொள்கை மாறியது. ஒரு மொழியைப் பேசுவது என்பது ஒருபோதும் வெறுமனே தகவல் தொடர்பைப் பற்றியது அல்ல. அது சொந்தம், புறக்கணிப்பு மற்றும் அரசியல் அடையாளம் ஆகியவற்றுடன் பின்னிப் பிணைந்தது. போருக்குப் பிந்தைய இலங்கை இந்த வரலாறுகளை மரபுரிமையாகப் பெறுகிறது. ஆயினும், அன்றாடப் பன்மொழித்தன்மை பெரும்பாலும் தேசியவாத இருமைகளைத் தாண்டிச் செல்கிறது என்பதை இனவரைவியல் சந்திப்புகள் வெளிப்படுத்துகின்றன. தனிநபர்கள் மொழிகளுக்கிடையே நடைமுறைக்கு ஏற்றவாறு நகர்கிறார்கள்; அது அரசியல் அர்த்தங்கள் மறைந்துவிட்டதால் அல்ல. மாறாக அன்றாட வாழ்க்கையை வெற்றிகரமாக வழிநடத்துவதற்கு மொழியியல் நெகிழ்வுத்தன்மை பெருகிய முறையில் தேவைப்படுவதால்தான் அவ்வாறு செயற்படுகிறார்கள்.

கிளிநொச்சியில் களஆய்வின் போது, ஒரு பாடசாலை அதிபர் தனது அன்றாட மொழிப் பழக்கத்தை விவரித்தார். “வீட்டில் நான் தமிழ் மட்டுமே பேசுவேன். பாடசாலையில், பெரும்பாலும் தமிழ். அதிகாரிகளுடன் பேசும்போது, முடிந்த இடங்களில் சிங்களம் பயன்படுத்துவேன். மின்னஞ்சல்களுக்கு, பெரும்பாலும் எல்லாமே ஆங்கிலம்தான்.” அவர் சற்று நிறுத்திவிட்டு, புன்னகையுடன் மேலும் கூறினார், “மாலைக்குள் நான் மூன்று வெவ்வேறு மொழி உலகங்களில் வாழ்ந்துவிடுகிறேன்.” அவரது இந்தக் கருத்து, போருக்குப் பிந்தைய தகவல் தொடர்பின் பன்முகத்தன்மையைப் படம்பிடித்துக் காட்டுகிறது. வெவ்வேறு நிறுவனக் களங்கள் வெவ்வேறு மொழித் தொகுப்புகளுக்கு முன்னுரிமை அளிக்கின்றன, மேலும் வெற்றிகரமான பங்கேற்பு பெரும்பாலும் அவற்றுக்கிடையே மாறும் திறனையே சார்ந்துள்ளது.

ஆய்வில் பதிலளித்த பலருக்கு, தமிழ் உணர்வுபூர்வமான நெருக்கம், உறவுமுறை, துக்கம், நகைச்சுவை மற்றும் நினைவுகளின் மொழியாகவே இருந்தது. குடும்ப வரலாறுகள், குழந்தைப்பருவக் கதைகள், மத நடைமுறைகள் மற்றும் போர்க்கால அனுபவங்கள்

பற்றிய விவாதங்கள், இளைய உறுப்பினர்கள் சரளமாக ஆங்கிலம் பேசும் வீடுகளில்கூட, பெருமளவில் தமிழிலேயே விவரிக்கப்பட்டன. முல்லைத்தீவில் ஒரு வயதான பெண்மணி விளக்கினார், "தமிழில் மட்டுமே வெளிப்படும் உணர்வுகள் உள்ளன." அதன் அர்த்தம் என்ன என்று கேட்டபோது, அவர், "உங்களால் வார்த்தைகளை மொழிபெயர்க்க முடியும். ஆனால், வலியை எப்போதும் மொழிபெயர்க்க முடியாது" என்று பதிலளித்தார். அவருடைய இந்தக் கருத்து, மொழிக்கும் உணர்வுலகங்களுக்கும் இடையிலான உறவு குறித்து மொழியியல் மானிடவியலில் நிலவும் பரந்த விவாதங்களைப் பிரதிபலிக்கிறது. எந்தவொரு மொழிக்கும் உணர்வுகளின் மீது ஏகபோக உரிமை இல்லை என்றாலும், பேசுபவர்கள் சில உணர்ச்சிகளை குறிப்பிட்ட மொழி மரபுகளுக்குள் முழுமையாக வெளிப்படுத்த முடியும் என்று அடிக்கடி உணர்கிறார்கள். இலங்கைத் தமிழ்ச் சூழலில், இடப்பெயர்வு, துக்கம், உறவுமுறைக் கடமைகள் பற்றிய நினைவுகள், நேரடி மொழிபெயர்ப்பையும் தாண்டிய அர்த்தங்களைக் கொண்ட கலாசாரத்திற்கே உரிய மரபுத்தொடர்களில் அடிக்கடி விவரிக்கப்பட்டன. இருப்பினும், தமிழ் உரையாடல்களுக்குள்ளேயே கூட, மொழிமாற்றம் அடிக்கடி நிகழ்ந்தது. இளைய பதிலளிப்பாளர்கள் கல்வி, தொழில்நுட்பம், வளர்ச்சி அல்லது மனநலம் தொடர்பான ஆங்கிலச் சொற்றொடர்களைத் தவறாமல் பயன்படுத்தினர். ஒரு பல்கலைக்கழக மாணவர் குடும்ப உரையாடல்களை விவரிக்கும்போது சிரித்தார். "நான் ஆங்கிலப் பாணியில் தமிழ் பேசுவதாக என் பாட்டி சொல்வார்." இந்த உருவகம் பல உண்மைகளை வெளிப்படுத்துகிறது. அன்றாடப் பேச்சில் ஆங்கிலம் கலந்திருந்தாலும், அது முதன்மை மொழியாகத் தமிழை மாற்றிவிடவில்லை. மொழியியல் மாற்றீட்டைக் காட்டிலும், பதிலளித்தவர்கள் மொழியியல் அடுக்குமுறைச் செயல்முறையை விவரித்தனர்.

தமிழ் பெரும்பாலும் நெருக்கத்தைக் குறித்தால், சிங்களம் அடிக்கடி அரசைக் குறித்தது. இந்தத் தொடர்பு குறிப்பாகக் காவல் நிலையங்கள், பிரதேச செயலகங்கள், நிலப் பதிவகங்கள், மருத்துவமனைகள், போக்குவரத்து அதிகாரிகளுடனான உரையாடல்களில் தெளிவாகத் தெரிந்தது. குறைந்த

சிங்களப் புலமை கொண்ட பதிலளித்தவர்கள் கூட உத்தியோகபூர்வ சந்திப்புகளின் போது சிங்களச் சொற்றொடர்களைப் பயன்படுத்த முயன்றனர். வவுனியாவைச் சேர்ந்த ஒரு விவசாயி விளக்கினார், "நான் சிங்களத்தில் தொடங்கினால், அதிகாரிகள் அதிகப் பொறுமையுடன் இருப்பார்கள்." மன்னாரைச் சேர்ந்த மற்றொரு பதிலளித்தவர் குறிப்பிட்டார், "சில நேரங்களில் அவர்களுக்குத் தமிழ் புரியும் என்று எனக்குத் தெரிந்தாலும், நான் முதலில் சிங்களத்தில்தான் முயற்சிப்பேன்." இத்தகைய கூற்றுகளை வெறுமனே மொழியியல் இணக்கம் என்று விளக்கக்கூடாது. அவை நிறுவன அதிகாரத்தைப் பற்றிய புரிதலைப் பிரதிபலிக்கின்றன. இங்கு மொழி, குடிமக்கள் அதிகாரத்துவ உறவுகளைக் கையாள்வதற்கான ஒரு வளமாகச் செயல்படுகிறது.

கொழும்பில் படித்துவிட்டு வட மாகாணத்தில் பணிக்குத் திரும்பிய ஓர் இளம் அரசாங்க அதிகாரி, நிலைமையை வேறுவிதமாக விவரித்தார். "மக்கள் பேசுவதற்கு முன் தங்கள் சிங்களத்திற்காக மன்னிப்புக் கேட்கிறார்கள். அது அவசியமில்லை என்று நான் எப்போதும் அவர்களிடம் கூறுவேன்." மொழிசார் படிநிலை எவ்வாறு உள்வாங்கப்படுகிறது என்பதை அவரது அவதானிப்பு வெளிப்படுத்துகிறது. சொற்கள் பரிமாறப்படுவதற்கு முன்பே பேச்சாளர்கள் மதிப்பீட்டை எதிர்பார்க்கிறார்கள். இந்த நிகழ்வு, சமமற்ற மொழிச் சந்தைகள் பேச்சாளர்களைத் தங்கள் சொந்தப் பேச்சை ஆதிக்க நிறுவன நெறிகளின்படி மதிப்பிட ஊக்குவிக்கும் பூர்தியோவின் குறியீட்டு ஆதிக்கக் கருத்தை நினைவூட்டுகிறது. தகவல் தொடர்பு வெற்றி பெறுகிறதா என்பது மட்டுமல்ல பிரச்சினை, யாருடைய மொழி சட்டபூர்வமானதாகக் கருதப்படுகிறது என்பதே பிரச்சினை.

போருக்குப் பிந்தைய மொழியியல் வாழ்வில் ஆங்கிலம் ஒரு மாறுபட்ட இடத்தைப் பிடித்துள்ளது. பல பதிலளிப்பவர்களுக்கு, ஆங்கிலம் இனத்தை விட கல்வி, சர்வதேச அமைப்புகள், உயர் கல்வி, இடப்பெயர்வு, வளர்ச்சி ஆகியவற்றுடன் குறைவாகவே தொடர்புடையதாக இருந்தது. அரசு சாரா நிறுவனங்களின் பயிலரங்குகள் குறிப்பாகச் செழுமையான எடுத்துக்காட்டுகளை வழங்கின.

மட்டக்களப்பில் நடைபெற்ற ஒரு வாழ்வாதாரப் பயிற்சித் திட்டத்தின் போது, பயிற்றுவிப்பாளர்கள் 'திறன் மேம்பாடு', 'அதிகாரமளித்தல்', 'நிலைத்தன்மை', 'உளவியல் சமூக நல்வாழ்வு' அல்லது 'மீள்திறன்' போன்ற கருத்துகளை அறிமுகப்படுத்திய போதெல்லாம், தமிழில் நடத்தப்பட்ட கலந்துரையாடல்கள் குறிப்பிடத்தக்க வகையில் மாறின. இந்தக் கருத்துகளை முழுமையாகத் தமிழில் மொழிபெயர்ப்பதற்குப் பதிலாக, பங்கேற்பாளர்கள் அடிக்கடி ஆங்கிலச் சொற்களையே பயன்படுத்தினர். பயிற்சிப் பட்டறைக்குப் பிறகு, ஒரு பங்கேற்பாளர், "அவை அரசு சாரா நிறுவனங்களின் வார்த்தைகள்" என்று குறிப்பிட்டார். மற்றொருவர் சிரித்துக்கொண்டே, "நாங்கள் கிராமத்தில் ஒரு மொழியையும், பயிற்சிப் பட்டறைகளில் மற்றொரு மொழியையும் பேசுகிறோம்" என்றார். இந்த வேறுபாடு, நிறுவனப் பன்மொழித்தன்மை என்று அழைக்கப்படக்கூடிய ஒன்றின் தோற்றத்தை விளக்குகிறது. வளர்ச்சி குறித்த உரையாடல்கள், உள்ளூர் வழக்காறுகளை முழுமையாக மாற்றிவிடாமல், அவற்றுடன் இணைந்து செயல்படும் சிறப்புச் சொற்களஞ்சியங்களை அறிமுகப்படுத்துகின்றன. எனவே, குறியீட்டு மாற்றம் என்பது மொழிகளுக்கு இடையேயான நகர்வை மட்டுமல்ல, வெவ்வேறு அறிவியல்களுக்கு இடையேயான நகர்வையும் உள்ளடக்கியது.

பன்மொழித் தொடர்பின் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சம், அரசியல் வெளிப்பாட்டைக் கட்டுப்படுத்த மொழியை உத்தியோகபூர்வமாகப் பயன்படுத்தியதே ஆகும். நேர்காணல்களின் போது, பதிலளித்தவர்கள் சர்வதேச அரசு சாரா நிறுவனங்கள், சட்ட நடைமுறைகள் அல்லது மனித உரிமைகள் ஆவணங்கள் பற்றி விவாதிக்கும் போது அவ்வப்போது ஆங்கிலத்திற்கு மாறினர். இதற்கு மாறாக, உரையாடல்கள் உணர்வுபூர்வமாக தனிப்பட்டதாகவோ அல்லது அரசியல் ரீதியாக உணர்திறன் மிக்கதாகவோ மாறும் போது, அவர்கள் சில சமயங்களில் மீண்டும் தமிழுக்கு மாறினர். யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு வழக்கறிஞர் விளக்கினார், "ஆங்கிலம் ஓர் இடைவெளியை உருவாக்குகிறது." எந்த வகையான இடைவெளி என்று கேட்டதற்கு, அவர் "தொழில்முறை இடைவெளி" என்று பதிலளித்தார். இதற்கு மாறாக, தமிழ் உரையாடல்கள் வாழ்ந்த அனுபவத்திற்கு நெருக்கமாக வந்தன. அதேபோல், அதிகாரிகளை நேரடியாக மேற்கோள் காட்டவும், அதிகாரத்துவ உரையாடல்களை அவற்றின் அசல் மொழி வடிவத்தில் மீண்டும் உருவாக்கவும் சிங்களம் சில சமயங்களில் பயன்படுத்தப்பட்டது. பதிலளித்தவர்கள் மொழியின் மூலமே நிறுவன அதிகாரத்தைப் பாதுகாப்பதாகத் தோன்றியது. இது கேட்பவர்கள் உத்தியோகபூர்வ உரையாடலுக்கும் தனிப்பட்ட விளக்கத்திற்கும் இடையில் வேறுபடுத்த அனுமதித்தது. இத்தகைய நடைமுறைகள், குறியீட்டு மாற்றம் என்பது வெறும் பொருளைக் காட்டிலும் நிலைப்பாட்டை அடிக்கடி ஒழுங்கமைக்கிறது என்பதை நிரூபிக்கின்றன. வெவ்வேறு மொழிகள், பேசுபவர்களை நிறுவனங்கள், நினைவுகள் மற்றும் பார்வையாளர்களுடன் வெவ்வேறு விதமாகத் தொடர்புபடுத்துகின்றன.

வயதும் மொழிமாற்றப் பழக்கவழக்கங்களை வடிவமைக்கிறது. வயதான பதிலளிப்பவர்கள் பொதுவாக மொழியை வரலாற்று அடையாளத்துடனும் சமூக அனுபவத்துடனும் நெருக்கமாக இணைந்ததாகக் கருதினர். இளைய பதிலளிப்பவர்கள், குறிப்பாகப் பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் வல்லுநர்கள், மொழிகளைப் பெரும்பாலும் ஒரு கருவியாகவே விவரித்தனர். யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு மாணவர் இவ்வாறு குறிப்பிட்டார், "என் பெற்றோருக்கு, மொழி என்பது அரசியல். எங்களுக்கு, மொழி என்பது ஒரு வாய்ப்பும் கூட." ஆயினும், இந்த வெளிப்படையான தலைமுறை வேறுபாட்டை மிகைப்படுத்திக் கூறக்கூடாது. இளைய பதிலளிப்பவர்கள் கூட மொழியுடன் இணைந்த அரசியல் வரலாறுகள் குறித்த ஆழ்ந்த விழிப்புணர்வை வெளிப்படுத்தினர். ஒரு பல்கலைக்கழக மாணவர் விளக்கினார், "நாங்கள் இயல்பாகவே மொழிகளை மாற்றுகிறோம். ஆனால் அந்த மொழிகள் ஏன் முக்கியமானவை என்பதையும் நாங்கள் அறிவோம்." அவரது கூற்று நடைமுறைவாதமும் வரலாற்று உணர்வும் ஒருங்கே நிலவுவதைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

களஆய்வு முழுவதும், மொழிமாற்றம் என்பது வெறும் ஒரு தகவல் தொடர்பு உத்தி மட்டுமல்ல, அது ஒரு நெறிமுறைப் பழக்கமும் கூட என்பது மேலும் மேலும் தெளிவாகியது. பேசுபவர்கள் எந்த மொழி மிகவும்

திறமையானது என்பதை மட்டுமல்லாமல், எந்த மொழி மிகவும் மரியாதைக்குரியது, பாதுகாப்பானது அல்லது ஒரு குறிப்பிட்ட உறவுக்கு மிகவும் பொருத்தமானது என்பதையும் தொடர்ந்து மதிப்பிடுகிறார்கள். ஓர் இறுதிச் சடங்கில், வழக்கமாகத் தமிழ் மற்றும் ஆங்கிலம் கலந்து பேசும் துக்கப்படுபவர்கள், துயருற்ற குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறும்போது பெரும்பாலும் தமிழில் மட்டுமே பேசினார்கள். பின்னர் ஓர் இளம் ஆசிரியர் விளக்கினார், "ஆங்கிலம் தவறாக ஒலித்திருக்கும்." இங்கு மொழித் தேர்வு, மொழியியல் திறனை விட தார்மீக உணர்திறனையே பிரதிபலித்தது. இதேபோல, வயதான உறவினர்கள் ஒதுக்கப்பட்டுவிட்டதாக உணர்வதைத் தவிர்க்க, அவர்களுக்காக உரையாடல்களை மொழிபெயர்த்துச் சொல்வதாகப் பதிலளித்தவர்கள் தெரிவித்தனர்.

ஒட்டுமொத்தமாக, இந்த இனவரைவியல் அவதானிப்புகள், போருக்குப் பிந்தைய இலங்கையில் அரசியல் பிழைப்புக்கான மைய இலக்கணங்களில் ஒன்றாக மொழிமாற்றத்தைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று சுட்டிக்காட்டுகின்றன. இது பேசுபவர்களை நிறுவன உலகங்களுக்கு இடையில் பயணிக்கவும், சமமற்ற அதிகார உறவுகளைக் கையாளவும், அரசியல் வெளிப்பாட்டை நிர்வகிக்கவும், நெருக்கத்தைப் பாதுகாக்கவும், பல்வேறு சமூக உறவுகளைத் தக்கவைத்துக் கொள்ளவும் உதவுகிறது. முக்கியமாக, இந்த வழிசெலுத்தல் என்பது வெறும் கணக்கீட்டால் மட்டும் சுருக்கப்படக்கூடியதல்ல. இது உணர்ச்சி, பழக்கம், ஒழுக்கநெறி, வரலாற்று நினைவு ஆகியவற்றாலும் வடிவமைக்கப்படுகிறது. மொழிகள் வெவ்வேறு உணர்ச்சி மற்றும் அரசியல் ரீதியான எதிரொலிகளைக் கொண்டுள்ளன. மேலும் பேசுபவர்கள் இந்தத் திறன்களின் தொகுப்பை குறிப்பிடத்தக்க நுட்பத்துடன் பயன்படுத்துகின்றனர். எனவே, போருக்குப் பிந்தைய தகவல்தொடர்பு என்பது மொழியியல் சிதைவால் அல்ல, மாறாக மொழியியல் திறமையால் வகைப்படுத்தப்படுகிறது என்பதை மொழிமாற்றம் வெளிப்படுத்துகிறது. சாதாரண மக்கள் தொடர்ந்து பல தகவல்தொடர்பு உலகங்களைக் கடந்து செல்கின்றனர். சொற்களஞ்சியத்தை மட்டுமல்ல, அடையாளம், அதிகாரம் மற்றும் உணர்ச்சி ரீதியான நெருக்கத்தையும் சரி செய்கின்றனர். இந்த வாதத்தின் முக்கியத்துவம் இலங்கையைத் தாண்டியும் நீள்கிறது. நீண்டகால அரசியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட சமூகங்களில், பன்மொழித்தன்மையை வெறும் மொழிப் பன்முகத்தன்மை என்று மட்டும் புரிந்துகொள்ளக் கூடாது. அது பெரும்பாலும், மக்கள் சிக்கலான அரசியல் நிலப்பரப்புகளில் இயங்குவதற்குப் பயன்படுத்தும் ஓர் அன்றாடத் தொழில்நுட்பமாகும். மொழி இயக்கமாகிறது. பேசுவது வழிசெலுத்தலாகிறது.

நயமொழி, உருவகம், அச்சத்தின் இலக்கணம்

மௌனம் என்பது நேரடியாகப் பேச மறுப்பதையும், மொழி உலகங்களுக்கு இடையேயான நகர்வு என்பது குறியீட்டு மாற்றம் என்பதையும் குறித்தால், நயமொழி என்பது பேச்சின் உருமாற்றத்தையே குறிக்கிறது. போருக்குப் பிந்தைய இலங்கையில், அரசியல் ரீதியாக உணர்திறன் மிக்க உண்மைகள் பெரும்பாலும் பேசப்படாமல் விடப்படுவதில்லை. மாறாக, அவை மறைமுகமாகப் பேசப்படுகின்றன. மக்கள் பெயர்களுக்குப் பதிலாகப் பிரதிப்பெயர்களையும், நிறுவனங்களுக்குப் பதிலாக உருவகங்களையும், திகதிகளுக்குப் பதிலாகப் பருவங்களையும், வரலாற்று நிகழ்வுகளுக்குப் பதிலாகச் சாதாரணமாகத் தோன்றும் சொற்றொடர்களையும் பயன்படுத்துகின்றனர். இந்த மாற்றீடுகளின் மூலம், மொழி ஒரே நேரத்தில் வெளிப்படுத்துவதாகவும் மறைப்பதாகவும் மாறுகிறது. அது எல்லாவற்றையும் கூறாததால், துல்லியமாகத் தொடர்புகொள்கிறது. நயமொழி என்பது வெறும் சொல்லாட்சிக் கருவி மட்டுமல்ல என்று இந்தப் பகுதி வாதிடுகிறது. அது ஒரு சமூகத் தொழில்நுட்பமாகும், இதன் மூலம் தனிநபர்கள் தகவல் தொடர்பு நெருக்கத்தைப் பாதுகாத்துக்கொண்டே அரசியல் நிச்சயமற்ற தன்மையைக் கையாள்கின்றனர். மறைமுகப் பேச்சை அச்சத்தின் சான்றாக மட்டும் கருதாமல், இது நயமொழியை அரசியல் பிழைப்புக்கான ஒரு பரந்த இலக்கணத்தின் பகுதியாக அணுகுகிறது. இது மக்கள் தங்களையோ மற்றவர்களையோ தேவையற்ற முறையில் வெளிப்படுத்தாமல், சர்ச்சைக்குரிய உண்மைகளைப் பற்றி விவாதிக்க அனுமதிக்கும் கலாசார ரீதியாகக் கற்றுக்கொண்ட ஒரு திறன்களின் தொகுப்பாகும்.

மொழி பெரும்பாலும் மறைமுகமாகவே தொடர்பு கொள்கிறது என்பதை மானிடவியலாளர்கள் நீண்ட காலமாகவே உணர்ந்துள்ளனர். ஒவ்வொரு பேச்சும், அதற்கு முந்தைய எதிர்பார்க்கப்பட்ட குரல்களின் களத்திற்குள் நிலவுகிறது என்று மிகைல் பக்தின் வாதிட்டார். சொற்கள் ஒருபோதும் தனித்து இருப்பதில்லை. அவை எப்போதும் முந்தைய உரையாடல்களுக்கும் எதிர்கால விளக்கங்களுக்கும் ஏற்பவே செயல்படுகின்றன. இதேபோல், கீழ்நிலை மக்கள் அதிகாரபூர்வ உரையாடலுக்கு வெளியே அரசியல் அறிவை வெளிப்படுத்த, கதைகள், நகைச்சுவைகள், வதந்திகள், குறியீட்டு வெளிப்பாடுகள்

போன்ற மாறுவேடமிட்ட தகவல் தொடர்பு வடிவங்களை அடிக்கடி நம்பியிருக்கிறார்கள் என்பதை ஜேம்ஸ் சி. ஸ்காட் நிரூபித்தார். இலங்கையிலிருந்து பெறப்பட்ட இனவரைவியல் தரவுகள், நயமொழி என்பது எதிர்ப்புத் தருணங்களுக்கு மட்டும் உரியதல்ல என்பதை நிரூபிப்பதன் மூலம் இந்த நுண்ணறிவுகளை விரிவுபடுத்துகின்றன. அது அன்றாட வாழ்வில் ஆழமாகப் பதிந்துவிட்டது. அதிகாரத்தை எதிர்ப்பதால் மட்டுமல்ல, அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த அனுபவங்களை விவரிக்கும் இயல்பான வழிகளில் ஒன்றாக மறைமுகத்தன்மை மாறிவிட்டதாலும் மக்கள் மறைமுகமாகப் பேசுகிறார்கள்.

களஆய்வின் போது நான் அடிக்கடி சந்தித்த நயமொழிச் சொற்றொடர் 'அந்த நாட்கள்'. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை முழுவதும், பதிலளித்தவர்கள் திகதிகளையோ நிகழ்வுகளையோ குறிப்பிடாமல், 'அந்த நாட்கள்' என்று மீண்டும் மீண்டும் குறிப்பிட்டனர். முல்லைத்தீவில் ஒரு வயதான விவசாயி குறிப்பிட்டார், "அந்த நாட்களில் நாங்கள் பலமுறை இடம்பெயர்ந்தோம்." அவர் எந்த ஆண்டைக் குறிப்பிடுகிறார் என்பதை அவர் அடையாளம் காட்டவில்லை. அங்கு இருந்த எவரும் அதைக் கேட்கவும் இல்லை. ஒத்த வரலாற்று அனுபவத்தைப் பகிர்ந்துகொள்பவர்களிடையே, இந்தச் சொற்றொடர் பல ஆண்டுகாலப் போராட்டத்தை, அதிகம் விளக்கத் தேவையில்லாத ஒரு காலக் குறியீடாகச் சுருக்கியது. ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவர் பின்னர் இவ்வாறு குறிப்பிட்டார், "அந்த நாட்கள் என்பது எதைக் குறிக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். எல்லாவற்றையும் ஏன் திரும்பவும் சொல்ல வேண்டும்?"

இந்தச் சொற்றொடர் ஒரு குறிப்பிடத்தக்க மொழியியல் பணியைச் செய்கிறது. அது வெளிப்படையான பொறுப்பைச் சுமத்துவதைத் தவிர்த்து, அதே நேரத்தில் ஒரு முழுமையான வரலாற்றுப் பின்னணியை நினைவுபடுத்துகிறது. அதன் பொருள் சொற்களின் துல்லியத்தைச் சார்ந்திருக்கவில்லை, மாறாக கூட்டு நினைவைச் சார்ந்திருக்கிறது. பேரழிவு நிகழ்வுகள் பெரும்பாலும் சாதாரண மொழியில் மடிந்துவிடுகின்றன. வன்முறை என்பது முறையான வரலாறுகள் மூலம் மட்டுமல்ல, அவற்றின் நேரடி உள்ளடக்கத்தை விட ஆழமான அர்த்தங்களைக் கொண்ட அன்றாட வெளிப்பாடுகள் மூலமாகவும் நிலைத்திருக்கிறது. உரையாடலின் மற்றொரு தொடர்ச்சியான அம்சம், இலக்கண



எழுவாய்கள் மறைந்து போவதாகும். நிறுவனங்களையோ அல்லது ஆயுதம் ஏந்தியவர்களையோ அடையாளம் காட்டுவதற்குப் பதிலாக, பதிலளித்தவர்கள் அடிக்கடி பிரதிப்பெயர்களைப் பயன்படுத்தினர்: "அவர்கள் வந்தார்கள்," "அவர்கள் அவனை அழைத்துச் சென்றார்கள்", "அவர்கள் கேள்விகள் கேட்டார்கள்", "அவர்கள் எங்களை வெளியேறச் சொன்னார்கள்". இவ்வாறு யார் என்பது அவர்கள் வழி புரிந்துகொள்ளப்பட்டது. கிளிநொச்சியில் நடந்த ஒரு நேர்காணலின் போது, ஒரு வயதான பெண்மணி தனது கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்ததை விவரித்தார், "ஒரு நாள் காலையில் அவர்கள் வந்தார்கள். அதன்பிறகு நாங்கள் வெளியேறினோம்." 'அவர்கள்' என்று யாரைக் குறிப்பிடுகிறார்கள் என்று நான் மென்மையாகக் கேட்டபோது, அவர் புன்னகைத்தார். "வெவ்வேறு நேரங்களில் அது வெவ்வேறு நபர்களாக இருந்தது." அவரது பதில், போருக்குப் பிந்தைய கதைசொல்லலின் சிக்கலான தன்மையை வெளிப்படுத்துகிறது. வெளிப்படையாகப் பெயரிடுவதற்கு, பல வரலாற்றுத் தருணங்கள், அரசியல் செயல்பாட்டாளர்கள், மாறிவரும் அதிகார உறவுகள் ஆகியவற்றுக்கு இடையே வேறுபடுத்திக் காட்ட வேண்டியிருந்திருக்கும். பிரதிப்பெயர், கதைசொல்லலின் உணர்வுபூர்வமான உண்மையைப் பாதுகாக்கும் அதே வேளையில், அது வேண்டுமென்றே திறந்த நிலையில் இருக்க அனுமதித்தது. மொழியியல் ரீதியாக, எழுவாய்களின் மறைவு, குற்றவாளிகளிடமிருந்து கவனத்தை விலக்கி,

வாழ்ந்த அனுபவத்தின் பக்கம் திருப்புகிறது. திட்டவட்டமான அரசியல் அடையாளத்தை விட, இயக்கம், சீர்குலைவு, உயிர்வாழ்தல் ஆகியவற்றின் மீது கவனம் திரும்புகிறது.

பயம் மக்கள் சொல்வதை மட்டும் மாற்றுவதில்லை; அது இலக்கணத்தையே மாற்றுகிறது. களஆய்வு முழுவதும், பதிலளித்தவர்கள் அடிக்கடி செயற்பாட்டு வினைகளையே நம்பியிருந்தனர். "நாங்கள் இடம்பெயர்க்கப்பட்டோம்", "வீடு சேதமடைந்தது", "மக்கள் காணாமல் போனார்கள்", "அது நடந்தது". இத்தகைய சொற்றொடர்கள் பெரும்பாலும் வாக்கியங்களிலிருந்து செயலுறுப்பை நீக்கிவிடுகின்றன. சில நேரங்களில் நாம் செயப்பாட்டு வினையாகப் பேசுகிறோம் என்பதை உணர்வது கூட இல்லை. அது இயல்பாகிவிட்டது. இலக்கண மறைமுகப் பயன்பாட்டின் இந்த இயல்பாக்கம், பல பத்தாண்டுகால அரசியல் வன்முறையானது சொற்களஞ்சியத்தை மட்டுமல்ல, பழக்கமான கதை சொல்லும் முறைகளையும் பாதிக்கிறது என்பதைக் காட்டுகிறது. "யார் என்ன செய்தார்கள்?" என்று கேட்பதற்குப் பதிலாக, பேசுபவர்கள் பெரும்பாலும் விளைவுகளை மையமாகக் கொண்டு கதைகளை அமைக்கிறார்கள். அந்த இலக்கணமே, குற்றம் சாட்டுவதை விட, உயிர் பிழைப்பதை நோக்கிய ஒரு தார்மீக நோக்குநிலையைப் பிரதிபலிக்கிறது.

அன்றாட அரசியல் உரையாடல்களில் உருவகங்கள் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தன. விவசாயிகள் போரை விவரிக்க அடிக்கடி விவசாயம் சார்ந்த படிமங்களைப் பயன்படுத்தினர்.

"வேர்கள் இன்னும் அங்கேயே இருக்கின்றன", "மண்ணுக்கு நினைவிருக்கிறது", "எரித்த உடனேயே பயிரிட முடியாது". இச்சொற்றொடர்கள் ஒரே நேரத்தில் பயிர்ச்செய்கையையும் கூட்டு அனுபவத்தையும் குறித்தன. மன்னாரைச் சேர்ந்த ஒரு முதிய விவசாயி இவ்வாறு விளக்கினார், "ஒரு வயல் எரிக்கப்பட்டால், நிலம் அப்படியே இருக்கும். ஆனால் அது மீண்டும் பழைய நிலையை அடைய பல ஆண்டுகள் ஆகும்." விவசாயம் பற்றிப் பேசினாலும், அங்கு கூடியிருந்த அனைவரும் அதன் பரந்த உட்பொருளைப் புரிந்துகொண்டனர். அதேபோல, திருகோணமலையைச் சேர்ந்த மீனவர்கள் கடலை உருவகமாகப் பயன்படுத்தினர். "கடல் அமைதியாகத் தெரிகிறது. ஆனால் அடியில் நீரோட்டம் வேறாக இருக்கிறது." மற்றொரு மீனவர் இவ்வாறு குறிப்பிட்டார், "மேற்பரப்பை வைத்து மட்டும் கடலை மதிப்பிட முடியாது." நிலப்பரப்புகள் எவ்வாறு அரசியல் மொழியின் களஞ்சியங்களாக மாறுகின்றன என்பதை இத்தகைய உருவகங்கள் விளக்குகின்றன. நேரடி மோதல் இன்றி கடினமான வரலாறுகளைப் பற்றி விவாதிக்கத் தேவையான சொற்களஞ்சியத்தை இயற்கை வழங்குகிறது. குறியீட்டு வெளிப்பாடுகள் வாழ்வியல் சார்ந்த கலாசார உலகங்களிலிருந்து உருவாகின்றன என்று கணநாத் ஒபயசேகர வலியுறுத்திய கருத்துடன் இவை ஒத்துப்போகின்றன. உருவகங்கள் என்பவை பேச்சுக்குச் சேர்க்கப்படும் அலங்காரங்கள் அல்ல. அவை அனுபவத்தையே கட்டமைக்கின்றன.

நிறுவனங்களின் பெயர்களும் சமூகத்தில் எளிதில் அடையாளம் காணக்கூடிய மாற்றுச் சொற்களால் அடிக்கடி குறிப்பிடப்பட்டன. பதிலளித்தவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டனர்: 'முகாம்', 'அலுவலகம்', 'இயக்கம்', 'அமைப்பு', 'பொடியள்', 'கொழும்பிலிருந்து வந்தவர்கள்', 'சர்வதேசத் தரப்பினர்', 'திணைக்களம்'. ஒவ்வொரு சொல்லும் முறையான வரையறையை விட, சூழலைப் பொறுத்தே அர்த்தத்தைப் பெற்றது. உதாரணமாக, பேசுபவர், இடம் மற்றும் உரையாடல் ஆகியவற்றைப் பொறுத்து 'முகாம்' என்பது இராணுவ முகாம், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான முகாம் அல்லது மறுவாழ்வு மையம் ஆகியவற்றில் எதையேனும் குறிக்கலாம். எனவே, இத்தகைய தெளிவற்ற தன்மை என்பது தகவல் பரிமாற்றத் தோல்வி அல்ல. அது ஒரு தகவல் பரிமாற்ற உத்தி. வவுனியாவைச் சேர்ந்த ஒருவர் குறிப்பிட்டது போல, "இடம் தெரிந்தால், அதன் அர்த்தமும் தெரியும்." இந்தச் சூழல் சார்ந்த தன்மை, மொழியியல் மானிடவியலின் ஒரு முக்கியக் கோட்பாட்டை உறுதிப்படுத்துகிறது. அதாவது, அர்த்தம் என்பது சொற்களில் மட்டுமல்லாமல், பகிரப்பட்ட சமூக உலகங்களிலும் பொதிந்துள்ளது.

முக்கியமாக, அரசியல் ஆபத்துக் காரணமாக நயமொழி எப்போதும் பயன்படுத்தப்படவில்லை.

பல பதிலளிப்பவர்கள் மறைமுகமான மொழியை அதிக மரியாதைக்குரியதாகக் குறிப்பிட்டனர்.

மட்டக்களப்பில் உள்ள ஒரு விதவை, காணாமல் போன தன் கணவரைப் பற்றி ஏன் அரிதாகவே நேரடியாகக் குறிப்பிடுகிறார் என்பதை விளக்கினார், "அவர் காணாமல் போனார் என்று சொல்வது எனக்குப் பிடிக்கவில்லை. அவர் திரும்பி வரவே இல்லை என்றுதான் சொல்வேன்." ஏன் என்று கேட்டதற்கு, அவர் அமைதியாகப் பதிலளித்தார், "இரண்டாவது வழி அவரை நமக்கு நெருக்கமாக வைத்திருக்கிறது." அவரது தேர்வு, மொழியுடனான ஓர் அறநெறி உறவைப் பிரதிபலிக்கிறது. சொற்கள் உண்மைகளின் துல்லியத்தின் அடிப்படையில் மட்டுமல்லாமல்,

உணர்ச்சிபூர்வமான விளைவுகளின் அடிப்படையிலும் மதிப்பிடப்படுகின்றன. இதேபோல், பெற்றோர்கள் குழந்தைகளுடன் பேசும்போது வெளிப்படையான போர்க்காலச் சொற்களை அடிக்கடி மாற்றினர்.

நகைச்சுவை, நயமான பேச்சுக்கான ஒரு முக்கிய வடிவமாகவும் செயல்பட்டது. தேநீர்க் கடைகளில், பதிலளித்தவர்கள் வெளிப்படையாகவே வேதனையான அனுபவங்களைப் பற்றி விவாதிக்கும் போது அவ்வப்போது சிரித்தனர். ஓய்வுபெற்ற ஓர் அரசு ஊழியர் நகைச்சுவையாகக் கூறினார், "எங்கள் கிராமம் மிகவும் பிரபலமானது. அதற்கு வேறு ஒரு காரணம் இருந்திருந்தால் நாங்கள் விரும்பியிருப்போம்." கூடியிருந்தோர் சிரித்தனர். அதன்பிறகு வேறு எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை. அந்த நகைச்சுவையே, உரையாடல் உணர்ச்சிப் பெருக்கில் மூழ்கிவிடாமல் தடுத்ததோடு, பகிரப்பட்ட அனுபவத்தையும் அங்கீகரித்தது. மானிடவியல் ரீதியாக இத்தகைய தருணங்கள், மறைமுக மொழி என்பது வெறும் அரசியல் பாதுகாப்பை வழங்குவதை விட, பெரும்பாலும் உணர்வுபூர்வமான வெளியை உருவாக்குகிறது என்பதை விளக்குகின்றன. ஒட்டுமொத்தமாக, இந்த இனவரைவியல் அவதானிப்புகள், நயமொழியை வெறுமனே தவிர்ப்பாகப் புரிந்துகொள்ளக்கூடாது என்று சுட்டிக்காட்டுகின்றன. அது ஒரு வகையான சமூக உட்கட்டமைப்பாகும். மறைமுக மொழி, வெவ்வேறு அரசியல் பின்னணிகளைக் கொண்ட அண்டை - அயலார் உரையாட அனுமதிக்கிறது.

வதந்தி, கிசுகிசு, மறைக்கப்பட்ட பொதுமக்கள்: அரசியல் அறிவின் முறைசாரா பரவல்

பேசப்படாததை மௌனம் ஒழுங்குபடுத்துகிறது என்றால், பேசக்கூடியதை நயமான சொற்கள் மறுவடிவமைக்கின்றன என்றால், அவற்றுக்கிடையே பரவுவதை வதந்தி ஆளுகிறது. போருக்குப் பிந்தைய இலங்கையில், வதந்திகள் என்பவை வெறுமனே தவறான தகவல்களோ அல்லது உண்மையின் திரிபுபடுத்தப்பட்ட வடிவங்களோ அல்ல. நிச்சயமற்ற தன்மையை விளக்குவதற்கும், அரசியல் சாத்தியக்கூறுகளைக் கற்பனை செய்வதற்கும், சமூகங்கள் கூட்டாக அதிகாரபூர்வ அறிவின் வரம்புகளைப் பற்றி விவாதிப்பதற்கும் அவை முதன்மையான வழிகளில் ஒன்றாகும். சமூக வாழ்வின் விளிம்புகளில் இருப்பதற்குப் பதிலாக, வதந்திகள் அன்றாட அரசியல் தகவல்தொடர்பின் இன்றியமையாத அங்கமாக அமைகின்றன. மானிடவியல் நீண்ட காலமாக வதந்தியைத் தவறான தகவலுக்கு அப்பாற்பட்ட ஒன்றாகக் கருதி வருகிறது. வதந்திகள் உண்மையா என்று கேட்பதற்குப் பதிலாக, அவற்றை உருவாக்கும் சமூகங்களைப் பற்றி வதந்திகள் என்ன வெளிப்படுத்துகின்றன என்பதை மானிடவியலாளர்கள் ஆராய்ந்துள்ளனர். வதந்திகள் கவலைகள், தார்மீகக் கற்பனைகள், தகவல்களைப் பெறுவதில் உள்ள சமமற்ற தன்மை, குடிமக்களுக்கும் அதிகாரத்திற்கும் இடையிலான உறவு ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன. அதிகாரபூர்வ விளக்கங்கள் இல்லாத, அவநம்பிக்கைக்குள்ளான, முழுமையற்ற அல்லது அரசியல் ரீதியாக எதிர்க்கப்படும் இடங்களில் அவை மிகவும் வலுவாக வெளிப்படுகின்றன.

போருக்குப் பிந்தைய இலங்கையில், வதந்தியானது ஒரு மாற்றுப் பொதுவெளியாகச் செயல்படுகிறது. துண்டு துண்டான தகவல்கள், தனிப்பட்ட அனுபவங்கள், ஊகங்கள், நினைவுகள் மற்றும் அரசியல் விளக்கங்கள் அனைத்தும் ஒன்றிணையும் ஒரு தகவல் பரிமாற்றக் களமாகவே இது அமைகிறது என்று இந்தப் பகுதி வாதிடுகிறது. எனவே, வதந்திகளை நிச்சயமற்ற தன்மைக்கான பகுத்தறிவற்ற பதில்களாகப் புறக்கணிக்கக் கூடாது. முரண்பாடான, முழுமையற்ற, அல்லது தார்மீக ரீதியாக திருப்தியற்றதாகத் தோன்றும் வாழ்வியல் அனுபவங்களுடன் அதிகாரபூர்வ விவரிப்புகள் பெரும்பாலும் இணைந்து காணப்படும் ஓர் உலகத்தைப் புரிந்துகொள்வதற்கான கூட்டு முயற்சிகளை அவை பிரதிபலிக்கின்றன.

வடக்குக் கிழக்கு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட களஆய்வின் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்று, போர் முறையாக முடிவடைந்த பின்னரும் நீண்ட காலத்திற்கு நிச்சயமற்ற தன்மை நீடித்ததே ஆகும். காணாமல் போன உறவினர்கள், நில உரிமை, இராணுவ விலகல், எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள், தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகள், அரசாங்கக் கொள்கைகள், சர்வதேசத் தலையீடுகள் தொடர்பான கேள்விகள் பல ஆண்டுகளாகத் தீர்க்கப்படாமல் இருந்தன. இத்தகைய சூழ்நிலைகளில், அன்றாட வாழ்க்கையை வழிநடத்துவதற்கான ஒரு நடைமுறை வழியாக வதந்தி மாறியது. முல்லைத்தீவில் உள்ள ஒரு மீனவர், இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்கள் விடுவிக்கப்படலாம் என்பது குறித்த தகவல்கள் எவ்வாறு பரவின என்பதை விவரித்தார். "யாரும் எங்களிடம் அதிகாரபூர்வமாகச் சொல்வதில்லை. பிரதேச செயலகத்தில் யாரோ ஒருவர் ஏதோ கேள்விப்படுகிறார். மற்றொருவருக்கு அங்கு பணிபுரியும் ஒருவரைத் தெரியும். பிறகு எல்லோரும்

பேசத் தொடங்குகிறார்கள்.” இந்த வதந்திகள் பொதுவாக உண்மையாக இருக்குமா என்று கேட்டபோது, அவர் புன்னகைத்தார். “சில நேரங்களில், ஆம். சில நேரங்களில், இல்லை. ஆனால், எதில் கவனம் செலுத்த வேண்டும் என்பதை வதந்திகள் உங்களுக்குச் சொல்கின்றன.” இந்தக் கருத்து மானிடவியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தது. வதந்தியின் மதிப்பு அதன் உண்மைத்தன்மையில் மட்டுமல்ல, கூட்டுக் கவனத்தைத் திரட்டும் அதன் திறனிலும் உள்ளது. சமூகங்கள் எதைச் சாத்தியமானதாக, விரும்பத்தக்கதாக அல்லது அச்சுறுத்தலாகக் கருதுகின்றன என்பதை வதந்திகள் சுட்டிக்காட்டுகின்றன. அதிகாரபூர்வ அறிவிப்புகளைப் போலல்லாமல், வதந்திகள் முடிவில்லாதவையாக இருக்கின்றன. அவை ஒரு முடிவுக்கு வருவதை விட, விவாதத்திற்கே வழிவகுக்கின்றன.

இலங்கையின் வடபகுதி முழுவதும், தேநீர்க் கடைகள் முறைசாரா அரசியல் தகவல் தொடர்புக்கான முக்கிய இடங்களாக மீண்டும் மீண்டும் உருவெடுத்தன. செய்தித்தாள்கள், தொலைக்காட்சி, சமூக ஊடகங்கள் நிச்சயமாக பொது விவாதத்தை வடிவமைத்த போதிலும், அர்த்தமுள்ள விளக்கம் நேருக்கு நேர் சந்திப்பின் மூலமே நிகழ்ந்தது என்று பல பதிலளிப்பவர்கள் வலியுறுத்தினர். பரந்தனுக்கு வெளியே உள்ள ஒரு தேநீர்க் கடையில் ஒரு நாள் காலை, வரவுள்ள ஒரு பெரிய அபிவிருத்தித் திட்டம் சுற்றியுள்ள விவசாய நிலங்களைப் பாதிக்கக்கூடும் என்ற செய்திகளைப் பற்றி பல விவசாயிகள் விவாதித்தனர். யாரும் தங்களுக்கு நேரடியாகத் தெரியும் என்று கூறவில்லை. மாறாக, அந்த உரையாடல் கூட்டாக விரிந்தது. “அவர்கள் கடந்த வாரம் ஆய்வு செய்ததாகக் கேள்விப்பட்டேன்”, “என் உறவினர் அதிகாரிகளைப் பார்த்தார்”, “அவர்கள் சந்திக்கு அருகில் எதையோ அளந்தார்கள்”, “அது உண்மை என்று நான் நினைக்கவில்லை”, “இல்லை, பிரதேச சபையைச் சேர்ந்த ஒருவர் அதைக் குறிப்பிட்டார்” என்று ஏறக்குறைய ஒரு மணி நேரத்தில், தகவல்களின் துண்டுகள் குவிந்தன. எந்தவொரு திட்டவட்டமான முடிவும் வெளிவரவில்லை.

பங்கேற்பாளர்களில் ஒரு முதியவர் பின்னர் குறிப்பிட்டார், “தேநீர்க் கடைதான் எங்கள் செய்தித்தாள்.” அவரது கருத்தை அதன் நேரடிப் பொருளில் எடுத்துக்கொள்ளக் கூடாது. மாறாக, உத்தியோகபூர்வத் தகவல்கள் பெரும்பாலும் எச்சரிக்கையுடன் கருதப்படும் சூழல்களில், தனிநபர்களுக்கிடையேயான தகவல் தொடர்பின் முக்கியத்துவத்தை அது எடுத்துக்காட்டுகிறது.

மானிடவியல் விவாதங்கள் பெரும்பாலும் புறம்பேச்சையும் வதந்தியையும் வேறுபடுத்திக் காட்டுகின்றன. புறம்பேச்சு பொதுவாக அடையாளம் காணக்கூடிய தனிநபர்களைப் பற்றியது. அதேசமயம் வதந்தி நிச்சயமற்ற நிகழ்வுகள் அல்லது பரந்த அரசியல் முன்னேற்றங்களைப் பற்றியது. இருப்பினும், களப்பணியின் போது, இந்த வேறுபாடு பெரும்பாலும் மங்கலாகியது. நிலம், நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான பரந்த விவாதங்களுடன், உள்ளூர் அரசியல்வாதிகள், அரசு சாரா நிறுவனப் பணியாளர்கள், மதத் தலைவர்கள், இராணுவ அதிகாரிகள், திரும்பி வரும் புலம்பெயர்ந்தோர், சமூக ஆர்வலர்கள் பற்றிய கதைகளும் பரவின. இந்த உரையாடல்களை ஒன்றிணைத்தது அதன் உள்ளடக்கம் அல்ல, மாறாக நம்பிக்கை. தகவல்களைப் பரப்புபவர்களின் நம்பகத்தன்மையின் அடிப்படையிலேயே அவை மதிப்பிடப்படுவதாகப் பதிலளித்தவர்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினர். யாழ்ப்பாணத்தில் உள்ள ஓய்வுபெற்ற பாடசாலை ஆசிரியர் ஒருவர் விளக்கினார், “முக்கியமான கேள்வி என்ன சொல்லப்பட்டது என்பதல்ல. முக்கியமான கேள்வி, உங்களுக்கு யார் சொன்னார்கள் என்பதுதான்.” மற்றொருவர் மேலும் கூறினார், “சிலர் கதைகளைப் பரப்புகிறார்கள். மற்றவர்களோ, தெரிந்தால் மட்டுமே பேசுகிறார்கள்.” ஏற்கனவே இருக்கும் தார்மீக உறவுகள் வழியாக வதந்திகள் பரவுகின்றன என்பதை இந்தக் கூற்றுகள் வெளிப்படுத்துகின்றன. சமூகங்கள் தகவல்களை மட்டுமல்லாமல், அவற்றைத் தெரிவிப்பவர்களின் நற்பெயரையும் தொடர்ந்து மதிப்பிடுகின்றன. எனவே, நம்பிக்கை என்பது அரசியல் அறிவின் ஒரு மையக் கூறாக மாறுகிறது.

காணாமல் ஆக்கப்படுதல் என்ற கேள்வியை விட, வேறு சில பிரச்சினைகளே இவ்வளவு நீடித்த வதந்திகளை உருவாக்கின. மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா முழுவதும், தடுப்புக் காவல் மையங்கள், அடையாளம் தெரியாத கல்லறைகள், புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஆவணங்கள், சர்வதேச விசாரணைகள் அல்லது சாத்தியமான சாட்சிகள் பற்றிய இடைப்பட்ட செய்திகளுடன் வாழ்வதாகக் குடும்பங்கள் மீண்டும் மீண்டும் விவரித்தன. 2009இல் காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடும் ஒரு தாய் அமைதியாகச் சொன்னார், “ஒவ்வொரு சில மாதங்களுக்கும் யாராவது தங்களிடம் புதிய தகவல் இருப்பதாகச் சொல்கிறார்கள்.” அவர் சற்று

நிறுத்தினார். “அது உண்மையாக இல்லாமல் இருக்கலாம் என்று உங்களுக்குத் தெரியும். ஆனாலும் நீங்கள் அதைக் கேட்கிறீர்கள்.” அவரது பதில், வதந்தியின் உணர்ச்சிபூர்வமான சிக்கலான தன்மையை விளக்குகிறது. நம்பிக்கையும் நிச்சயமின்மையும் ஒருங்கே நிலவுகின்றன. மக்கள் அப்பாவிகளாக இருப்பதால் வதந்திகள் நீடிப்பதில்லை, மாறாக உறுதியான பதில்கள் கிடைக்காததால் அவை நீடிக்கின்றன. மற்றொரு பெண் விளக்கினார், “நிச்சயமான ஒன்று இருந்தால், வதந்திகள் மறைந்துவிடும்.” இந்த எளிய அவதானிப்பு ஒரு முக்கியமான சமூகவியல் கோட்பாட்டைப் படம்பிடிக்கிறது. நிறுவனங்கள் நம்பகமான தீர்வை வழங்கத் தவறும் இடங்களில் வதந்திகள் செழித்து வளர்கின்றன. இந்த வகையில், வதந்திகள் நிச்சயமற்ற தன்மையின் அறிகுறிகளாக மட்டுமல்லாமல், முழுமையடையாத அரசியல் செயல்முறைகளின் அறிகுறிகளாகவும் மாறுகின்றன.

திறன்பேசிகளினதும் (*Smartphones*) சமூக ஊடகங்களினதும் வருகை, இலங்கை முழுவதும் வதந்திகள் பரவும் விதத்தை மாற்றியமைத்துள்ளது. பல்வேறு வயதுப் பிரிவினர், தகவல்கள் தற்போது பயணிக்கும் மிக வேகமான வழிகளில் ஒன்றாக ‘வட்ஸ்அப்’ஐக் (*WhatsApp*) குறிப்பிட்டனர். ஆயினும், சுவாரஸ்யமாக, எண்ணிமத் தகவல்தொடர்பு நேருக்கு நேர் கலந்துரையாடலை அரிதாகவே மாற்றியது. மாறாக, அதுவே கலந்துரையாடலைத் தொடங்கியது. பேராதனையில் பயிலும் ஒரு பல்கலைக்கழக மாணவர் குறிப்பிட்டார், “வட்ஸ்அப்’இல் ஏதோ ஒன்று தோன்றுகிறது. பிறகு அது உண்மையா என்று அனைவரும் விவாதிக்கத் தொடங்குகிறார்கள்.” இதேபோல், ஒரு கிராம அதிகாரி கவனித்தார், “முகநூல் வதந்தியைத் தருகிறது. அதன் அர்த்தத்தை கிராமம் தீர்மானிக்கிறது.” எனவே, எண்ணிமத் தளங்கள் இறுதிப் புள்ளிகளாகச் செயல்படுவதை விட, கூட்டு விளக்கத்திற்கான தொடக்கப் புள்ளிகளாகவே செயல்படுகின்றன. அர்த்தம் சமூக ரீதியாகவே உருவாக்கப்படுகிறது.

எல்லா வதந்திகளும் எதிர்காலத்தைப் பற்றியவை அல்ல. பல வதந்திகள் கடந்த காலத்தைப் பற்றியவை. களஆய்வின் போது, மறைக்கப்பட்ட புதைகுழிகள், மறக்கப்பட்ட போர்க்களங்கள், கைவிடப்பட்ட பதுங்குகுழிகள், காணாமல் போன ஆவணங்கள் அல்லது அதிகாரபூர்வ வரலாறுகளில் இடம்பெறாத போர்க்காலச் சம்பவங்கள் பற்றிய கதைகள் அடிக்கடி பரவின. இந்தக் கதைகளை வரலாற்று ரீதியாகச் சரிபார்க்க முடியுமா என்பது பெரும்பாலும் ஒரு பொருட்டாக இருக்கவில்லை. அவற்றின் முக்கியத்துவம் வேறு இடத்தில் இருந்தது. எந்தெந்தக் கடந்த காலங்கள் தீர்க்கப்படாமல் இருப்பதாக சமூகங்கள் நம்புகின்றன என்பதை அவை வெளிப்படுத்தின. விசுமடு அருகே இருந்த ஒரு விவசாயி கைவிடப்பட்ட ஒரு வயலை நோக்கிச் சுட்டிக்காட்டினார். “அங்கே இன்னும் சில பொருட்கள் புதைக்கப்பட்டிருப்பதாக மக்கள் சொல்கிறார்கள்.” எந்த மாதிரியான பொருட்கள் என்று கேட்டபோது, அவர் என் தோள்களைக் குலுக்கியபடி சொன்னார் “யாருக்கும் சரியாகத் தெரியாது.” அந்தத் தெளிவின்மையே உரையாடலைத் தொடரச் செய்தது. எனவே, வதந்திகள் தீர்வு காணப்படாத நினைவுகளின் களஞ்சியங்களாகச் செயல்படுகின்றன. அதிகாரபூர்வ அங்கீகாரம் இல்லாத நிலையிலும், அவை சில வரலாறுகளைச் சமூக அளவில் உயிர்ப்புடன் வைத்திருக்கின்றன.

அபிவிருத்தித் திட்டங்கள் வதந்திகளின் மற்றொரு முக்கியக் களத்தை உருவாக்கின. சாலைக் கட்டுமானம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்கள், சுற்றுலா முயற்சிகள், தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகள், வனவிலங்குப் பாதுகாப்பு, நில அளவீடுகள் ஆகியவை முறையான தகவல்கள் உள்ளூர் சமூகங்களைச் சென்றடைவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, ஊக அலைகளை அடிக்கடி உருவாக்கின. மன்னாரில், முன்மொழியப்பட்ட காற்றாலைத் திட்டத்திற்குச் சுற்றியுள்ள விவசாய நிலங்களைக் கையகப்படுத்த வேண்டியிருக்கும் என்று கேள்விப்பட்டதாக கிராமவாசிகள் விவரித்தனர். ஒரு விவசாயி நினைவு கூர்ந்தார், “பல மாதங்களாக என்ன நடக்கிறது என்று யாருக்கும் தெரியவில்லை. ஒவ்வொரு நாளும் ஒரு புதிய கதை எமக்குக் கிடைக்கிறது.” மற்றொருவர் சிரித்தார், “ஒவ்வொரு வாரமும் வதந்தி மாறியது.” இறுதியில், அதிகாரபூர்வ ஆலோசனைகள் பல விவரங்களைத் தெளிவுபடுத்தின. ஆயினும்கூட, அதிகாரபூர்வக் கூட்டங்கள் நடப்பதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே வதந்திகள் குடும்ப முடிவுகளை வடிவமைத்ததாகப் பதிலளித்தவர்கள் வலியுறுத்தினர். சிலர் நடவு செய்வதைத் தாமதப்படுத்தினர். மற்றவர்கள் வீட்டு மேம்பாடுகளை ஒத்திவைத்தனர். ஒரு சிலர் இடம்பெயர்வதைக் கருத்தில் கொண்டனர். எனவே, வதந்திகள் பின்னர் தவறென நிரூபிக்கப்பட்டாலும் கூட, பொருள்சார்ந்த விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

வதந்திகளைப் பகுத்தறிவற்றவை என்று நிராகரிப்பதற்குப் பதிலாக, பல பதிலளித்தவர்கள் அவற்றை நடைமுறைக் கருவிகளாக விவரித்தனர்.

திருகோணமலையைச் சேர்ந்த ஒரு மீனவர் விளக்கினார், "நீங்கள் எல்லாவற்றையும் கேட்கிறீர்கள். பிறகு எதை நம்புவது என்று முடிவு செய்கிறீர்கள்." மற்றொருவர் மேலும் கூறினார், "வதந்திகளைப் புறக்கணிப்பதும் ஆபத்தானதுதான்." இந்தக் கருத்துகள், வதந்திகள் ஒரு வகையான கூட்டு இடர் மேலாண்மையாகச் செயல்படுகின்றன என்பதை உணர்த்துகின்றன. சமூகங்கள் அதிகாரபூர்வ அறிவிப்புகளுக்காக செயலற்ற முறையில் காத்திருப்பதை விட, பகிரப்பட்ட கலந்துரையாடல் மூலம் நிச்சயமற்ற எதிர்காலங்களை மதிப்பிடுகின்றன. நிறுவன ரீதியான தகவல் தொடர்பு மெதுவாக, முழுமையற்றதாக, அல்லது அரசியல் ரீதியாக மத்தியஸ்தம் செய்யப்பட்டதாகக் கருதப்படும் இடங்களில் இந்தப் பழக்கம் குறிப்பாக முக்கியத்துவம் பெறுகிறது.

இங்கு முன்வைக்கப்பட்டுள்ள இனவரைவியல் தரவுகள், மறைக்கப்பட்ட பொதுமக்கள் என்று அழைக்கப்படக்கூடியவர்களின் இருப்பைச் சுட்டிக்காட்டுகின்றன. முறையான நிறுவனங்களுக்குள் பகுத்தறிவு விவாதத்தை மையமாகக் கொண்ட பொதுக்களம் (*Public Sphere*) பற்றிய ஹேபர்மாசின் (*Jürgen Habermas*) அவர்களின் கருத்துகளுக்கு மாறாக, இந்தப் பொதுமக்கள் பேருந்துகள், இறுதிச் சடங்கு இல்லங்கள், தேநீர்க் கடைகள், மீன்பிடித் துறைமுகங்கள், கோயில்கள், தேவாலயங்கள், மகளிர் சேமிப்புக் குழுக்கள், விவசாயக் கூட்டுறவுகள், 'வட்ஸ்அப்' குழுக்கள் முழுவதும் பரவலான உரையாடல்கள் மூலம் வெளிப்படுகிறார்கள். அறிவு படிப்படியாகப் பரவுகிறது. அதிகாரம் பரவலாக்கப்பட்டே உள்ளது. எந்தவொரு உரையாடலும் முழுக் கதையையும் கொண்டிருக்கவில்லை. ஆயினும், கூட்டாக இந்த ஊடாட்டங்கள் அரசியல் வாழ்வின் வியக்கத்தக்க நுட்பமான விளக்கங்களை உருவாக்குகின்றன. இந்தக் கருத்து, ஜேம்ஸ் சி. ஸ்காட்டின் மறைக்கப்பட்ட பதிவுகள் குறித்த விவாதத்துடன் ஒத்துப் போவதோடு, அதை வெறும் எதிர்ப்பையும் தாண்டி விரிவுபடுத்துகிறது. மறைக்கப்பட்ட பொதுவெளிகள் என்பவை கட்டாயமாக எதிர்க்கும் தன்மையுடையவை அல்ல. அவை, சாதாரணக் குடிமக்கள் துண்டு துண்டான தகவல்களைத் திரட்டி சமூக அர்த்தமுள்ள கதைகளாக உருவாக்கும் களங்கள் ஆகும்.

ஒருவேளை, மிகவும் கவனத்தை ஈர்க்கும் இனவரைவியல் பாடம் செவிமடுத்தல் பற்றியதுதான். களஆய்வு முழுவதும், பதிலளித்தவர்கள் வதந்திகளை உடனடியாக ஏற்றுக்கொண்டது அரிது. அதற்குப் பதிலாக, அவர்கள் அதன் பல்வேறு வடிவங்களை ஒப்பிட்டுப் பார்த்தனர், ஆதாரங்களை மதிப்பிட்டனர், முந்தைய அனுபவங்களை நினைவுகூர்ந்தனர், மேலும் குறிப்பிட்ட கூற்றுகளுக்குப் பின்னால் உள்ள சாத்தியமான நோக்கங்களைப் பற்றி விவாதித்தனர். ஓய்வுபெற்ற ஓர் அரசு ஊழியர் இந்தச் செயல்முறையைச் சுருக்கமாகக் கூறினார். "நீங்கள் முதல் கதையை ஒருபோதும் நம்புவதில்லை." அவர் புன்னகைத்தவாறே மேலும் கூறினார், "ஆனால் நீங்கள் அதை ஒருபோதும் புறக்கணிப்பதும் இல்லை." சந்தேக மனப்பான்மைக்கும் கவனத்திற்கும் இடையிலான இந்தச் சமநிலையே செவிமடுத்தலின் அறவியலை உருவாக்குகிறது. சமூகங்கள் செயல்படுவதற்கு முன்பு தீர்ப்பைக் கைவிடுவதும் இல்லை, உறுதியைக் கோருவதும் இல்லை. அதற்குப் பதிலாக, அவை நிச்சயமற்ற தன்மையைக் கூட்டாக வாழ்கின்றன.

வதந்திகள், கிசுகிசுக்கள் மற்றும் முறைசாரா உரையாடல்கள் ஆகியவை பெரும்பாலும் நம்பத்தகாத அறிவு வடிவங்களாகப் புறக்கணிக்கப்படுகின்றன. ஆயினும், போருக்குப் பிந்தைய இலங்கையிலிருந்து கிடைத்த இனவரைவியல் சான்றுகள் இதற்கு நேர்மாறானதையே சுட்டிக்காட்டுகின்றன. இந்தத் தகவல் தொடர்பு நடைமுறைகள், சமூகங்கள் நிச்சயமற்ற தன்மையைப் புரிந்துகொள்வதற்கும், அரசியல் அதிகாரத்தைப் பேச்சுவார்த்தை மூலம் பெறுவதற்கும், வரலாற்று நினைவுகளைப் பாதுகாப்பதற்கும், எதிர்கால மாற்றத்தை எதிர்பார்ப்பதற்கும் அவசியமான வழிமுறைகளாக விளங்குகின்றன. வதந்திகள் என்பவை வெறுமனே தகவல்களின் தோல்விகள் அல்ல. அவை முழுமையற்ற உலகங்களுக்கான எதிர்வினைகள். அதிகாரபூர்வ விவரிப்புகள் போதுமானதாக இல்லாத இடங்களிலும், நிறுவனங்கள் தார்மீகக் கேள்விகளுக்கு முழுமையாகப் பதிலளிக்க முடியாத இடங்களிலும், வாழ்ந்த அனுபவம் அதிகாரத்துவ விளக்கத்தை மீறும் இடங்களிலும் அவை தோன்றுகின்றன. மானிடவியல் ரீதியாகப் பார்க்கும்போது, வதந்திகள் அரசியல் கற்பனையின் முதன்மையான இலக்கணங்களில் ஒன்றாக அமைகின்றன. முறையான அரசியல் விவாதம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் போதும், சாதாரண மக்கள் எவ்வாறு தொடர்ந்து அரசியல் ரீதியாகச் சிந்திக்கிறார்கள் என்பதை அவை வெளிப்படுத்துகின்றன. வதந்திகளின் பரவலை ஆராய்வதன் மூலம், சமூகங்கள் தங்களுக்குத் தெரிந்த விஷயங்களை மட்டுமல்லாமல், நிச்சயமற்ற சூழலில் அவை எவ்வாறு கூட்டாக அறிவை உருவாக்குகின்றன என்பதையும் மானிடவியல் கண்டறிகிறது.

குழந்தைகள், நினைவுகள், அரசியல் மொழிசார் மரபு

போரின் மிக நீண்டகால விளைவுகளில் ஒன்று, அது விட்டுச்செல்லும் அழிவு மட்டுமல்ல. போரை நேரடியாக அனுபவிக்காதவர்களுக்கு அது கடத்தும் சொற்களஞ்சியமும் ஆகும். போருக்குப் பிந்தைய இலங்கையில், தீவிர ஆயுத மோதல்கள் குறித்த நேரடி நினைவுகள் ஏதுமின்றி அல்லது மிகக் குறைந்த நினைவுகளுடன் ஒரு தலைமுறை வளர்ந்து பெரியவர்களாகியுள்ளது. இவர்களில் பலர் 2009க்குப் பிறகு பிறந்தவர்கள்; மற்றவர்கள் போரின் இறுதிக்கட்டத்தின் போது கைக்குழந்தைகளாக இருந்தவர்கள். ஆயினும், பெற்றோர், தாத்தாபாட்டி, ஆசிரியர்கள், மதத் தலைவர்கள், சமூகங்களிடமிருந்து பெறப்பட்ட சொற்கள், மௌனங்கள், உருவகங்கள், நினைவுகூரல்கள், மொழிசார் நடைமுறைகள் ஆகியவற்றால் இவர்களின் அன்றாட வாழ்க்கை தொடர்ந்து வடிவமைக்கப்படுகிறது. போர் என்பது வெறும் நினைவுச் சின்னங்கள் அல்லது ஆவணக் காப்பகங்கள் வழியாக மட்டுமல்லாமல், மொழியின் வழியாகவே தொடர்ந்து நிலைத்திருக்கிறது. போருக்குப் பிந்தைய தலைமுறையினர் வன்முறை குறித்த கதைகளை மட்டுமல்லாமல், வன்முறையைப் பற்றிப் பேசும் முறைகளையும் மரபுரிமையாகப் பெறுகிறார்கள் என்பதை இப்பகுதி முன்வைக்கிறது. எதைக் கேட்கலாம், எதைப் பேசாமல் விட வேண்டும், வரலாற்று நிகழ்வுகள் எவ்வாறு பெயரிடப்படுகின்றன, எந்தச் சொற்கள் உணர்வுபூர்வமான முக்கியத்துவம் வாய்ந்தவை, எப்போது விளக்கத்தை விட மௌனம் பொருத்தமானதாகக் கருதப்படுகிறது ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு மொழிசார் திறனை குழந்தைகள் பெறுகிறார்கள். எனவே, அரசியல் நினைவுகளின் பரிமாற்றம் என்பது வரலாற்று அறிவு வழியாக மட்டுமல்லாமல், 'தகவல் தொடர்புசார் அறநெறி மரபு' (*Inheritance of Communicative Ethics*) என்று அழைக்கப்படக்கூடிய ஒன்றின் வழியாகவும் நிகழ்கிறது.

குழந்தைப் பருவம் என்பது வெறும் உயிரியல் சார்ந்த நிலை மட்டுமல்ல, அது தனிநபர்கள் சமூகத்தின் உறுப்பினர்களாக மாறுவதைக் கற்றுக்கொள்ளும் கலாசார ரீதியாக அமைக்கப்பட்ட ஒரு செயல்முறை என்பதை மானிடவியலாளர்கள் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றனர். குழந்தைகள் மொழிக்கு அப்பால் அறநெறி, சமூக உறவுகள், உணர்வுகள், அரசியல் அடையாளங்கள் ஆகியவற்றைக் கற்றுக்கொள்கிறார்கள். மொழிசார் மானிடவியலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளபடி, குழந்தைகள் வெறும் சொற்களஞ்சியத்தை மட்டும் கற்றுக்கொள்வதில்லை. அவர்கள் தகவல் தொடர்புத் திறனை - அதாவது குறிப்பிட்ட சூழல்களில் மொழியைச் சமூகத்திற்குப் பொருத்தமான வகையில் பயன்படுத்தும் திறனை - கற்றுக்கொள்கிறார்கள். போருக்குப் பிந்தைய இலங்கையில், இத்திறன் அரசியல் சூழல் குறித்த குறிப்பிடத்தக்க உணர்திறனையும் உள்ளடக்கியுள்ளது. கிளிநொச்சியில் களஆய்வில் ஈடுபட்டிருந்த போது, ஒன்பது முதல் பதினேழு வயது வரையிலான மூன்று குழந்தைகளைக் கொண்ட ஒரு குடும்பத்துடன் நான் பல மாலைப் பொழுதுகளைக் கழித்தேன். அக்குடும்பத்தின் பெற்றோர் இருவரும் போரின்போது பலமுறை இடம்பெயர்ந்த அனுபவம் கொண்டவர்கள். ஆனால், அவர்களது இளைய மகன் மோதல் முடிவடைந்த பின்னரே பிறந்தவன். ஒரு மாலை வேளையில் அவன் தன் தந்தையிடம் இப்படிக் கேட்டான். "ஏன் நாம் எப்போதும் மே மாதத்தில் தாத்தாவின் கிராமத்திற்குச் செல்கிறோம்?" தந்தை பதிலளிப்பதற்கு முன் சற்று மௌனித்தார். "ஏனென்றால், அங்கே நாம் நினைவுகூர வேண்டிய மனிதர்கள் இருக்கிறார்கள்." அந்தப் பதில் குழந்தைக்குத் திருப்தியளித்ததாகத் தோன்றியது; அவன் தொடர்ந்து சாப்பிடத் தொடங்கினான். பின்னர், நாங்கள் தனியாகப் பேசிக்கொண்டிருந்த போது அந்தத் தந்தை இவ்வாறு குறிப்பிட்டார். "ஒரு நாள் மே மாதம் ஏன் முக்கியமானது என்பதை அவன் புரிந்துகொள்வான். ஆனால் இன்று, நினைவுகூருதல் என்பது முக்கியமானது என்பதை மட்டும் அவன் அறிந்திருந்தால் போதும்."

நினைவுகள் படிப்படியாகக் கடத்தப்படுகின்றன என்பதை அவரது பதில் விளக்குகிறது. பெற்றோர்கள், நினைவாற்றலைக் கற்பிப்பதற்கும் வரலாற்றைக் கற்பிப்பதற்கும் இடையே அடிக்கடி வேறுபடுத்திக் காட்டுகிறார்கள். முதலாவது குழந்தைப் பருவத்தில் தொடங்குகிறது. இரண்டாவது காலப்போக்கில் படிப்படியாக விரிகிறது. குறிப்பிட்ட இடங்கள், திகதிகள், சடங்குகள், குடும்பப் பழக்கவழக்கங்களுக்குப் பின்னால் உள்ள அரசியல் நிகழ்வுகளைப் புரிந்துகொள்வதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, குழந்தைகள் அவற்றின் உணர்வுபூர்வமான முக்கியத்துவத்தைக் கற்றுக்கொள்கிறார்கள். உணர்ச்சிபூர்வமான மரபுரிமைக்கும் வரலாற்று விளக்கத்திற்கும் இடையிலான இந்த வேறுபாடு களஆய்வின் போது மீண்டும் மீண்டும் வெளிப்பட்டது. வெளிப்படையான விவரிப்பின் மூலம் குழந்தைகளுக்கு நினைவுகளை அறிமுகப்படுத்துவதை விட, அன்றாடப் பழக்கவழக்கங்கள் மூலமாகவே அறிமுகப்படுத்துவதாகப் பெற்றோர்கள் தங்களை அடிக்கடி விவரித்தனர். முல்லைத்தீவில் உள்ள ஒரு தாய் விளக்கினார், "நாங்கள் போரிலிருந்து தொடங்குவதில்லை. நாங்கள் குடும்பத்திலிருந்து தொடங்குகிறோம்." அவர் தனது மகள்களை

பகுதி -4

மயானத்திற்கும், தேவாலயத்திற்கும், ஒரு காலத்தில் அவர்களின் முந்தைய வீடு இருந்த நிலத்திற்கும் அழைத்துச் சென்றதை விவரித்தார். "அவர்கள் கேள்விகள் கேட்கிறார்கள்" என்றார் அவர். "சில நேரங்களில் நான் பதிலளிக்கிறேன். சில நேரங்களில், பிறகு சொல்லுறன் என்று சொல்கிறேன்." அவரது பதில், நேர்காணல்கள் முழுவதும் வெளிப்பட்ட ஒரு பரந்த தார்மீக தர்க்கத்தைப் பிரதிபலிக்கிறது. மௌனம் என்பது கடந்த காலத்தை அழிப்பதற்காகப் பயன்படுத்தப்படுவதில்லை, மாறாக அதன் பரிமாற்றத்தை மெதுவாக்குவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. அறிவு என்பது உடனடியாக வழங்கப்படும் ஒன்றாக இல்லாமல், குழந்தைகள் வளர வளரப் பெறும் ஒன்றாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. எதைக் கேட்கக் கூடாது என்பதைக் கற்றுக்கொள்ளும் செயல்முறையும் அதே அளவு முக்கியத்துவம் வாய்ந்தது. உரையாடல்கள் நிற்கும் தருணங்கள், பெரியவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளும் தருணங்கள், அல்லது குறிப்பிட்ட தலைப்புகள் வெளிப்படையான சங்கடத்தை உருவாக்கும் தருணங்கள் ஆகியவற்றில் குழந்தைகள் விரைவாகக் கவனம் செலுத்தத் தொடங்குகிறார்கள்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு பல்கலைக்கழக மாணவி தனது தொடக்கப் பள்ளி அனுபவத்தை நினைவு கூர்ந்தார். "எங்கள் வீட்டிற்கு விருந்தினர்கள் வரும்போதெல்லாம், உரையாடல்கள் மாறிவிடும். ஏன் என்று எனக்குப் புரியவில்லை. அந்நியர்கள் முன்னிலையில் நான் சில கேள்விகளைக் கேட்கக் கூடாது என்பது மட்டுமே எனக்குத் தெரிந்திருந்தது." இதை எப்படிக் கற்றுக்கொண்டீர்கள் என்று கேட்டபோது, அவர் சிரித்தார். "யாரும் என்னிடம் நேரடியாகச் சொல்லவில்லை. நீங்கள் இயல்பாகவே கவனிப்பீர்கள்." அவரது இந்தச் சிந்தனை ஒரு முக்கியமான மானிடவியல் செய்தியைப் படம்பிடிக்கிறது. பெரும்பாலான தகவல் தொடர்பு கற்றல், வெளிப்படையான அறிவுறுத்தல்கள் இல்லாமலேயே நிகழ்கிறது. குழந்தைகள் முறையான போதனைகளை விட, பங்கேற்பதன் மூலமே மௌனத்தைக் கற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் வடிவங்களைக் கவனிக்கிறார்கள், நடத்தையைப் பின்பற்றுகிறார்கள், மேலும் பேச்சைக் கட்டுப்படுத்தும் சமூக விதிகளைப் படிப்படியாக உள்வாங்கிக் கொள்கிறார்கள். இலங்கையில், சாதாரண குடும்ப உரையாடல்களே, குழந்தைகள் நினைவுகளை மட்டுமல்ல, தகவல் தொடர்பு மனப்பான்மைகளையும் மரபுரிமையாகப் பெறும் களமாக மாறுகிறது. வன்முறையானது, நாடகத்தனமான கதைசொல்லல் வழியாக அடுத்த தலைமுறைக்குள் நுழைவதை விட, அன்றாட மொழிப் பழக்கவழக்கங்கள் மூலமாகவே நுழைகிறது. இருப்பினும், அரசியல் மொழியைக் கற்றுக்கொள்வதற்கான ஒரு தளம் மட்டுமே வீடு. பாடசாலைகள் மற்றொரு தளமாக அமைகின்றன.

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை முழுவதும் நேர்காணல் செய்யப்பட்ட ஆசிரியர்கள், மிகவும் சீரற்ற குடும்ப அனுபவங்களைக் கொண்ட மாணவர்கள் உள்ள வகுப்பறைகளில் சமீபத்திய வரலாற்றைப் பற்றி விவாதிப்பதில் உள்ள சவால்களை அடிக்கடி விவரித்தனர். சில மாணவர்கள் போர்க்கால நினைவுகள் வெளிப்படையாகப் பேசப்படும் குடும்பங்களிலிருந்து வந்திருந்தனர். மற்றவர்களின் பெற்றோர்கள் அத்தகைய உரையாடல்களை வேண்டுமென்றே தவிர்த்தனர். சிலருக்கு, புலம்பெயர்ந்து வாழும் உறவினர்கள் இணையத்தில் மாற்றுக்கதைகளைப் பகிர்ந்துகொண்டனர். மற்றவர்கள் முதன்மையாகப் பாடப்புத்தகங்களையும் வகுப்பறைக் கற்பித்தலையும் சார்ந்திருந்தனர். யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு வரலாற்று ஆசிரியர் இவ்வாறு குறிப்பிட்டார், "ஒரே செய்திக்கு வெவ்வேறு பக்கங்கள் உள்ளன என்பதை மாணவர்கள் பெரும்பாலும் அறிவார்கள். சில சமயங்களில், எது உண்மை என்று அவர்கள் கேட்கிறார்கள்." அவர் சற்று நிறுத்திவிட்டு மேலும் கூறினார், "வரலாறும் வித்தியாசமாக அனுபவிக்கப்படுகிறது என்பதை அவர்களுக்குப் புரிய வைப்பதுதான் கடினமான பகுதி."

அவரது இந்தக் கருத்து, போருக்குப் பிந்தைய கல்வியின் கற்பித்தலில் உள்ள சிக்கலான தன்மையை எடுத்துக்காட்டுகிறது. ஆசிரியர்கள் வெறும் தகவல்களைப் பரிமாறுபவர்கள் மட்டுமல்ல. அவர்கள் முரண்பட்ட நினைவுகள், அரசியல் உணர்வுகள் மற்றும் நிறுவனப் பாடத்திட்டங்களுக்கு இடையில் ஒரு பாலமாகச் செயல்படுகிறார்கள். பல மாணவர்கள் பாடசாலை மொழிக்கும் வீட்டு மொழிக்கும் உள்ள வேறுபாட்டைக் கற்றுக்கொண்டதாக விவரித்தனர். ஒரு பட்டதாரி மாணவர் விளக்கினார், "பாடசாலையில் நாங்கள் திகதிகளையும் உடன்படிக்கைகளையும் கற்றுக்கொண்டோம். வீட்டில் நாங்கள் பெயர்களையும் மக்களையும் கற்றுக்கொண்டோம்." மற்றொருவர் குறிப்பிட்டார், "பாடப்புத்தகம் என்ன நடந்தது என்று சொல்கிறது. என் பாட்டி அதை நாம் எப்படி உணர்ந்தோம் என்றும் அது என்ன செய்யது என்றும் சொல்கிறார்." இந்தக் கருத்துகள், குழந்தைகள் ஒரே நேரத்தில் பல மொழி உலகங்களில் வாழ்கிறார்கள் என்பதைக் காட்டுகின்றன. இளைஞர்கள் வெவ்வேறு நினைவு முறைகளுக்கு இடையில் மொழிபெயர்ப்பாளர்களாக மாறுகிறார்கள். நினைவுகூரும் மொழியை வடிவமைப்பதில் மதமும்

ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. தேவாலய வழிபாடுகள், கோயில் திருவிழாக்கள், நினைவுப் பிரார்த்தனைகள், விரிவான வரலாற்று விளக்கத்தை அளிக்காமலேயே, குழந்தைகளைத் துக்கத்தின் கூட்டு நடைமுறைகளுக்கு அறிமுகப்படுத்துகின்றன. மன்னாரில் உள்ள ஒரு கத்தோலிக்கப் பாதிரியார் இந்த செயல்முறையை விவரித்தார். "சில பிரார்த்தனைகளின் போது பெரியவர்கள் அமைதியாகிவிடுவதை குழந்தைகள் கவனிக்கிறார்கள். அவர்கள் ஏன் என்று கேட்கிறார்கள். நாங்கள் அவர்களின் வயதுக்கு ஏற்ப மென்மையாக விளக்குகிறோம்." இதேபோல், கிளிநொச்சியில் உள்ள ஓர் இந்துக் கோயில் அறங்காவலர் குறிப்பிட்டார், "இளைஞர்களுக்கு எல்லா நிகழ்வுகளும் தெரிந்திருக்காது. ஆனால் சில இடங்களுக்கு மரியாதை தேவை என்பதை அவர்கள் அறிவார்கள்."

அரசியல் மொழி என்பது சடங்கு நடைமுறையிலிருந்து பிரிக்க முடியாதது என்ற கருத்தை இந்தக் கவனிப்புகள் வலுப்படுத்துகின்றன. குழந்தைகள் வரலாற்று நினைவுகளை முதன்முதலில் எதிர்கொள்வது, எப்போதும் வெளிப்படையான அரசியல் உரையாடல்கள் மூலமாக அல்ல, மாறாக, உடல்சார்ந்த பங்கேற்பு வடிவங்கள் மூலமாகவே ஆகும். எண்ணிமத் தொழில்நுட்பம் இந்தச் செயல்முறைக்கு மற்றொரு முக்கியமான பரிமாணத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. முந்தைய தலைமுறையினரைப் போலல்லாமல், தற்கால இலங்கை இளைஞர்கள் யூடியூப் ஆவணப்படங்கள், முகநூல் நினைவுப் பக்கங்கள், வாட்ஸ்அப் குழுக்கள், டிக்டாக் காணொளிகள், புலம்பெயர் ஊடகங்கள் வழியாகப் போர்க்காலக் கதைகளை எதிர்கொள்கின்றனர். இந்த எண்ணிமத் தளங்கள், இளைஞர்களுக்குப் புதிய போட்டிச் சொற்களையும் சர்வதேச அரசியல் உரையாடல்களையும் அறிமுகப்படுத்துகின்றன. ஒரு பல்கலைக்கழக மாணவி விளக்கினார், "சில நேரங்களில் ஒரு சம்பவம் தொடர்பாக வீட்டில் ஒரு கதையையும், யூடியூபில் மற்றொரு கதையையும், வெளிநாட்டில் உள்ள உறவினர்களிடமிருந்து வேறொரு கதையையும் கேட்கிறேன்." இந்த வேறுபாடுகளை எவ்வாறு சமன் செய்கிறீர்கள் என்று கேட்டபோது, அவர் புன்னகைத்தார். "முடிவெடுப்பதற்கு முன் கேட்கக் கற்றுக்கொள்கிறீர்கள்." இந்தப் பதில், நுட்பமான ஒரு விளக்கத் திறனைப் பிரதிபலிக்கிறது. இளைஞர்கள் போட்டிக் கதைகளைச் செயலற்ற முறையில் உள்வாங்கிக் கொள்வதில்லை. அவர்கள் மூலங்களை மதிப்பிடுகிறார்கள், விவரங்களை ஒப்பிடுகிறார்கள், மேலும் பலதரப்பட்ட அதிகார வடிவங்களுடன் இணங்கிப் போகிறார்கள். பல பதிலளிப்பாளர்கள், இளைய தலைமுறையினர் தங்கள் பெற்றோரை விட நேரடிக் கேள்விகளைக் கேட்க அதிக விருப்பம் கொண்டவர்கள் என்று விவரித்தனர். ஓய்வுபெற்ற ஒரு தலைமை ஆசிரியர் குறிப்பிட்டார், "நாங்கள் முதலில் மௌனத்தைக் கற்றுக்கொண்டோம். அவர்கள் முதலில் கேள்விகளைக் கற்றுக்கொள்கிறார்கள்."

ஆயினும், இந்த வெளிப்படையான தலைமுறை மாற்றத்தைக்கூட மிகைப்படுத்திக் கூறக்கூடாது. பல இளம் பதிலளிப்பாளர்கள், சூழலுக்கு ஏற்பத் தங்கள் பேச்சை மாற்றிக்கொள்வதாக ஒப்புக்கொண்டனர். ஒரு மாணவர் விளக்கினார், "நண்பர்களுடன் நாங்கள் எல்லாவற்றையும் விவாதிக்கிறோம். தாத்தா - பாட்டியுடன் நாங்கள் வேறுவிதமாகப் பேசுகிறோம். பல்கலைக்கழகத்தில் நாங்கள் மீண்டும் வேறுவிதமாகப் பேசுகிறோம்."

அவரது கருத்து இக்கட்டுரையின் பரந்த வாதத்தை எதிரொலிக்கிறது. போருக்குப் பிந்தைய இலங்கையில் தகவல் தொடர்புத் திறன் என்பது சுதந்திரமாகப் பேசுவதிலோ அல்லது முற்றிலும் மௌனமாக இருப்பதிலோ இல்லை, மாறாக வெவ்வேறு மொழி உலகங்களுக்கு இடையில் எப்படி நகர்வது என்பதை அறிவதில்தான் உள்ளது. மேலும், குழந்தைகள் குறிப்பிட்ட உருவகங்களையும் நயமான சொற்களையும் அவற்றின் மூலத்தை ஆரம்பத்தில் புரிந்து கொள்ளாமலேயே எவ்வாறு உள்வாங்கிக் கொள்கிறார்கள் என்பதையும் களப்பணி வெளிப்படுத்தியது. ஒரு தாய், தனது மகள் போரை வெறுமனே 'அந்த நாட்கள்' என்று குறிப்பிட்டதை நினைவு கூர்ந்தார்; இது மூத்த உறவினர்கள் அடிக்கடி பயன்படுத்தும் ஒரு சொற்றொடராகும். "அந்த நாட்கள் என்பதன் சரியான அர்த்தம் அவளுக்குத் தெரியவில்லை" என்று தாய் சிரித்தார். "பெரியவர்கள் அதைச் சொல்லும்போது எப்போதும் தீவிரமாகிவிடுவார்கள் என்பது மட்டுமே அவளுக்குத் தெரிந்திருந்தது." இங்கே மொழி புரிதலுக்கு முந்தியது. சொற்றொடர்களின் வரலாற்று அர்த்தங்கள் முழுமையாகப் புரிந்து கொள்ளப்படுவதற்கு முன்பே, அவை தலைமுறைகளைக் கடந்து பரவுகின்றன. காலப்போக்கில், குழந்தைகள் பழக்கமான சொற்றொடர்களுக்கு மேலும் மேலும் சிக்கலான விளக்கங்களை அளிக்கின்றனர். ஆகவே, அரசியல் மொழியின் மரபு என்பது படிப்படியாகக் குவியக்கூடியது. அது சொற்களுடனான தொடர்ச்சியான சந்திப்புகள், மௌனங்கள், நினைவுகூரல்கள், சடங்குகள், நகைச்சுவைகள், பாடல்கள், குடும்பப் புகைப்படங்கள், அன்றாட உரையாடல்கள் மூலம் வெளிப்படுகின்றது. நினைவகம் ஒரு ஒற்றை, தீர்க்கமான கதை மூலம் அரிதாகவே கடத்தப்படுகிறது. மாறாக, அது துண்டுகளின் மூலம்

குவிகிறது. சமூகங்கள் எழுதப்பட்ட வரலாறு மூலம் மட்டுமல்லாமல், உடல் சார்ந்த நடைமுறைகள் மூலமாகவும் நினைவில் கொள்கின்றன என்ற போல் கானெர்டனின் (Paul Connerton) வாதத்தை இந்த செயல்முறை நினைவூட்டுகிறது. இலங்கைச் சூழலில், மொழியே அத்தகைய ஓர் உடல் சார்ந்த நடைமுறையாக மாறுகிறது. குழந்தைகள் தங்கள் குரலைத் தாழ்த்துவது, தலைப்புகளை மாற்றுவது, மொழிகளை மாற்றுவது அல்லது உரையாடல் அதன் எல்லையை எட்டியதை உணர்ந்து கொள்வது போன்ற வழிகளை மரபுரிமையாகப் பெறுகிறார்கள். அதே நேரத்தில், இளைய தலைமுறையினர் இந்த மரபுரிமையாகப் பெறப்பட்ட திறன்களை மறுவடிவமைத்து வருகின்றனர். பல்கலைக்கழக வளாகங்கள், சமூக ஊடகத் தளங்கள், இடப்பெயர்வு, நாடுகடந்த கல்வி வாய்ப்புகள் ஆகியவை இளைஞர்களை மனித உரிமைகள், மாற்றத்திற்கான நீதி, மனநலம், காலனித்துவ நீக்கம், சுற்றுச்சூழல் நீதி, எண்ணிமச் செயல்பாடு ஆகியவற்றின் புதிய சொற்களஞ்சியங்களுக்கு அறிமுகப்படுத்துகின்றன. இந்தக் கருத்துகள், துன்பம், சகிப்புத்தன்மை, கண்ணியம், உயிர்வாழ்தல் பற்றிய பழைய குடும்பப் பேச்சுவழக்குகளுடன் மேலும் மேலும் ஒன்றிணைகின்றன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு முனைவர் பட்ட மாணவர் இந்த மாற்றத்தைப் பற்றிச் சிந்தித்தார். “என் பாட்டி விதியைப் பற்றிப் பேசுகிறார். என் பெற்றோர் உயிர்வாழ்தலைப் பற்றிப் பேசுகிறார்கள். என் தலைமுறை உரிமைகளைப் பற்றிப் பேசுகிறது.” அவர் சிந்தனையுடன் சற்று நிறுத்தினார், பின்னர் தொடர்ந்தார், “மூவரும் ஒரே வாழ்க்கையைப் பற்றித்தான் பேசுகிறார்கள்.” அவரது இந்தக் கருத்து, அரசியல் மொழியின் வரலாற்று அடுக்குகளைப் படம்பிடித்துக் காட்டுகிறது. ஒவ்வொரு தலைமுறையும் முந்தைய சொற்களஞ்சியங்களை மரபுரிமையாகப் பெறுவதோடு, அதே நேரத்தில் புதியவற்றையும் உருவாக்குகிறது. எனவே, போருக்குப் பிந்தைய மொழி என்பது நிலையானதாகவோ அல்லது நேர்கோட்டுத் தன்மையுடையதாகவோ இல்லை. அது நினைவிற்கும் மாற்றத்திற்கும் இடையிலான உரையாடல் மூலம் பரிணமிக்கிறது.

இங்கு முன்வைக்கப்பட்டுள்ள இனவரைவியல் தரவுகள், போருக்குப் பிந்தைய தலைமுறையினர் வரலாற்றுத் தகவல்களை விட ஆழமான ஒன்றைப் பெறுகிறார்கள் என்று சுட்டிக்காட்டுகின்றன. அவர்கள் அரசியல் பேச்சின் நெறிமுறைகளைப் பெறுகிறார்கள். மொழிக்கு பொறுப்புகள் உண்டு என்பதையும்; கேட்போர் முக்கியமானவர்கள் என்பதையும்; சில நினைவுகளுக்குக் கவனம் தேவை என்பதையும்; சொற்கள் குணப்படுத்தவோ காயப்படுத்தவோ முடியும் என்பதையும் அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள். மேலும், விளக்கத்தை விட மௌனமே சில சமயங்களில் மரியாதையை மிகவும் திறம்பட வெளிப்படுத்தக்கூடும்.

இந்த மரபு மானிடவியலில் குறிப்பிடத்தக்க தாக்கங்களைக் கொண்டுள்ளது. இளைஞர்கள் போரைத் துல்லியமாக நினைவில் வைத்திருக்கிறார்களா என்று கேட்பதற்குப் பதிலாக, அதைப் பற்றிப் பேச அவர்கள் எவ்வாறு கற்றுக்கொண்டார்கள் என்று நாம் கேட்கலாம். இத்தகைய மாற்றம், வரலாற்று உள்ளடக்கத்திலிருந்து கவனத்தைத் தகவல் தொடர்பு நடைமுறைக்குத் திருப்புகிறது. அரசியல் நினைவுகள் வெறுமனே ஆவணக் காப்பகங்களிலோ அல்லது நினைவுச்சின்னங்களிலோ சேமிக்கப்படுவதில்லை, மாறாக அன்றாட ஊடாடல்கள் மூலமாகவே அவை மீண்டும் உருவாக்கப்படுகின்றன என்பதை இது வெளிப்படுத்துகிறது.

இறுதியில், குழந்தைகள் போரின் பின்விளைவுகளை மட்டுமல்ல, அதன் மொழிக் கட்டமைப்பையும் மரபுரிமையாகப் பெறுகிறார்கள். தாங்கள் உருவாக்காத இலக்கணங்களில் அவர்கள் சரளமாகப் பேசக் கற்றுக்கொள்வதோடு, படிப்படியாக அவற்றை புதிய அரசியல் யதார்த்தங்களுக்கு ஏற்ப மாற்றியமைக்கிறார்கள். அவ்வாறு செய்வதன் மூலம், போருக்குப் பிந்தைய காலம் வெறும் ஒரு வரலாற்றுக் காலகட்டமாக மட்டும் இல்லாமல், ஒரு பரிணாம வளர்ச்சி பெறும் தகவல் தொடர்புச் சூழலாக நிலைத்திருப்பதை அவர்கள் உறுதி செய்கிறார்கள்.

புலம்பெயர் மொழியும் நினைவின் பன்னாட்டு இலக்கணங்களும்

முந்தைய பகுதி இலங்கைக்குள் அரசியல் மொழி எவ்வாறு தலைமுறைகள் கடந்து கடத்தப்படுகிறது என்பதை ஆராய்ந்திருந்தால், இந்தப் பகுதி ஒரு வேறுபட்ட கேள்வியை எழுப்புகிறது. அரசியல் மொழி எல்லைகளைக் கடந்து பயணிக்கும்போது அதற்கு என்ன நேர்கிறது? போர், இழப்பு, தேசியம், நல்லிணக்கம், நீதி, சொந்தம் என்ற உணர்வு ஆகியவற்றின் சொற்களஞ்சியங்கள் யாழ்ப்பாணத்திற்கும் ரொரென்டோவிற்கும், கிளிநொச்சிக்கும் லண்டனுக்கும், மன்னாருக்கும் மெல்போர்னுக்கும், மட்டக்களப்பிற்கும் பாரிஸிற்கும், முல்லைத்தீவிற்கும் ஒஸ்லோவிற்கும் இடையில் புழங்கும்போது எவ்வாறு உருமாற்றம் அடைகின்றன? இடப்பெயர்வு என்பது இலங்கைத் தமிழர்களைப் புவியியல் ரீதியாக வெறுமனே சிதறடித்தது மட்டுமல்ல. அது, போர் நினைவுகூரப்படுவதற்கும், விளக்கப்படுவதற்கும்,

வெவ்வேறு விதங்களில் விவரிக்கப்படுவதற்கும் பல மொழி உலகங்களை உருவாக்கியுள்ளது. இலங்கையின் உள்நாட்டுப் போரின் அரசியல், கலாசார ரீதியாக மிக முக்கியமான விளைவுகளில் ஒன்று தமிழ் புலம்பெயர் சமூகம் ஆகும். 1970களின் பிற்பகுதியிலிருந்தும், குறிப்பாக 1983 ஜூலையில் நடந்த தமிழர்களுக்கு எதிரான வன்முறையைத் தொடர்ந்தும், அடுத்தடுத்த இடப்பெயர்வு அலைகள் கனடா, ஐக்கிய இராச்சியம், ஐரோப்பியக் கண்டம், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் வட அமெரிக்கா முழுவதும் கணிசமான சமூகங்களை நிறுவின. இந்தச் சமூகங்கள் தங்களோடு மக்களை மட்டுமல்லாமல், மொழிகள், நினைவுகள், சடங்குகள், அரசியல் உறுதிப்பாடுகள் மற்றும் தார்மீகச் சொற்களஞ்சியங்களையும் சுமந்து வந்தன. இருப்பினும், காலப்போக்கில், இந்தச் சொற்களஞ்சியங்கள் வெவ்வேறு சட்ட அமைப்புகள், அரசியல் கலாசாரங்கள், ஊடகச் சூழல்கள், தலைமுறை அனுபவங்களுக்குள் பரிணமித்தன. இதன் விளைவாக, போருக்குப் பிந்தைய மொழி இனி இலங்கைக்குள் மட்டுமே உருவாக்கப்படுவதில்லை. அது நாடுகடந்த தகவல் தொடர்பு வலைப்பின்னல்கள் முழுவதும் கூட்டாக உருவாக்கப்படுகிறது.

புலம்பெயர்ந்தோர் என்பவர்கள் ஒரு தாய்நாட்டிற்கு வெளியே வாழும் வெறும் மக்கள் தொகையினர் மட்டுமல்ல என்பதை மானிடவியல் அறிஞர்கள் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றனர். அவர்கள் மக்கள், பணம், ஊடகம், சின்னங்கள் மற்றும் கருத்துகளின் தொடர்ச்சியான இயக்கத்தின் மூலம் நிலைநிறுத்தப்படும் சமூகக் களங்கள் ஆவர். புலம்பெயர்ந்தோர் ஒரே நேரத்தில் பல இடங்களில் வசிப்பதாகவும், அதன் மூலம் முழுமையாக வேரூன்றியிராத அல்லது முற்றிலும் தொடர்பற்ற அடையாளங்களை உருவாக்குவதாகவும் ஜேம்ஸ் கிளிஃபோர்ட் (*James Clifford*) வாதிட்டார். அதேபோல், உலகமயமாக்கல் நாடுகடந்த 'நிலப்பரப்புகளை' உருவாக்குகிறது என்றும், அதன் வழியாகப் படங்கள், கதைகள் மற்றும் அரசியல் கற்பனைகள் பிராந்திய எல்லைகளுக்கு அப்பால் பரவுகின்றன என்றும் அர்ஜுன் அப்பாதுரை (*Arjun Appadurai*) நிரூபித்தார். இலங்கைத் தமிழ் புலம்பெயர்ந்தோர் இந்தச் செயல்முறைகளுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர். அரசியல் மொழி இப்போது வாட்ஸ்அப் குழுக்கள், ஜூம் சந்திப்புகள், யூடியூப் சேனல்கள், முகநூல் பக்கங்கள், இணையவழி நினைவேந்தல்கள், புலம்பெயர் செய்தித்தாள்கள், பாட்காஸ்ட்கள், பல்கலைக்கழகக் கருத்தரங்குகள், குடும்பக் காணொளி அழைப்புகள் என அனைத்திலும் பரவி, ஒரே நேரத்தில் உள்ளூர் மற்றும் உலகளாவிய ஒரு தகவல் தொடர்பு உலகத்தை உருவாக்குகிறது.

களஆய்வின் போது, வெளிநாடுகளில் உள்ள உறவினர்களுடனான உரையாடல்கள் இலங்கைக்குள் நடக்கும் உரையாடல்களிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றன என்பதைப் பதிலளித்தவர்கள் மீண்டும் மீண்டும் விவரித்தனர். யாழ்ப்பாணத்தில் உள்ள ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவர், கனடாவில் உள்ள தன் மகனுடனான உரையாடல்களை ஒப்பிட்டுச் சிரித்தார். "அவன் சர்வதேசச் சட்டத்தைப் பற்றிப் பேசுகிறான். நான் நீர்ப்பாசனத்தைப் பற்றிப் பேசுகிறேன்." சிறிது நேரம் நிறுத்திவிட்டு, "நாங்கள் இருவரும் ஒரே இடத்தைப் பற்றித்தான் பேசுகிறோம்" என்று மேலும் கூறினார். தூரம் அரசியல் மொழியை எவ்வாறு மறுசீரமைக்கிறது என்பதை அவரது இந்தக் கருத்து விளக்குகிறது. இலங்கைக்கு வெளியே வாழ்வது, மக்கள் மோதலைப் புரிந்துகொள்ளும் கருத்தியல் சொற்களஞ்சியத்தை அடிக்கடி மாற்றிவிடுகிறது. உரிமைகள், பொறுப்புக்கூறல், இனப்படுகொலை, இடைக்கால நீதி, சர்வதேச விசாரணைகள், சுயநிர்ணயம், நல்லிணக்கம், கொலனித்துவ நீக்கம், நினைவுகூர்தல் ஆகியவை புலம்பெயர் சமூக உரையாடலில் மையக் கூறுகளாக மாறுகின்றன. இதற்கு மாறாக, இலங்கைக்குள், உரையாடல்கள் பெரும்பாலும் நிலத்திற்கான அணுகல், வாழ்வாதாரங்கள், கல்வி, இடப்பெயர்வு, விவசாயம், மீன்பிடித்தல், கடன், வேலைவாய்ப்பு, அன்றாட சகவாழ்வு ஆகியவற்றைச் சுற்றியே அமைகின்றன. இந்த வேறுபாடுகளை முரண்பாடுகளாகப் புரிந்துகொள்ளக் கூடாது. மாறாக, அவை தனித்துவமான சமூக நிலைகளைப் பிரதிபலிக்கின்றன.

முல்லைத்தீவில் வசிக்கும், ஜெர்மனியில் குடியேறிய தனது இரண்டு மகள்களைக் கொண்ட ஒரு விதவை, இந்த முரண்பட்ட தகவல் பரிமாற்ற உலகங்களை விவரித்தார். "அவர்கள் அழைக்கும்போது, என்னிடம் நீதியைப் பற்றிக் கேட்கிறார்கள். நான் அவர்களிடம் கூரை ஒழுகுகிறது என்று சொல்கிறேன்." அவர் மென்மையாகச் சிரித்தபடி, "அவர்கள் வரலாற்றைப் பற்றிக் கவலைப்படுகிறார்கள். நான் நாளைய தினத்தைப் பற்றிக் கவலைப்படுகிறேன்" என்றார். அவரது கூற்றை அரசியல் கேள்விகள் மீதான அக்கறையின்மையாகப் புரிந்துகொள்ளக் கூடாது. மாறாக, அது வெவ்வேறு இடங்களில் மொழியைக் கட்டமைக்கும் வெவ்வேறு காலச்சூழல்களை வெளிப்படுத்துகிறது. புலம்பெயர் உறவினர்கள் பெரும்பாலும் அங்கீகாரம், நினைவகம், பொறுப்புக்கூறல் ஆகியவற்றை மையமாகக் கொண்ட ஓர் அரசியல் காலச்சூழலில் வாழ்கின்றனர். வடக்கிலும் கிழக்கிலும் தங்கியிருப்பவர்கள், அன்றாட வாழ்வாதாரத்திற்கான ஒரு காலச்சூழலில் அடிக்கடி வாழ்கின்றனர்; அங்கு உடனடிக் கவலைகள்

தீர்க்கப்படாத வரலாற்றுப் புகார்களுடன் ஒருங்கே நிலவுகின்றன. குடும்பத்தினருடனான காணொளிக் கலந்துரையாடல் நேர்காணல்களின் போது இந்த வேறுபாடு குறிப்பாகத் தெளிவாக வெளிப்பட்டது. கிளிநொச்சிக்கு அருகிலுள்ள ஒரு வீட்டில், சுவிட்சர்லாந்தில் உள்ள உறவினர்கள் வாராந்திர இணையவழி உரையாடலில் பங்கேற்றனர். குழந்தைகளின் பாடசாலைப் பரீட்சைகள், உயர்ந்து வரும் உணவுப் பொருட்களின் விலை, தங்காணை (*Visa*) விண்ணப்பங்கள், கிராமச் செய்திகள், வெளிநாடுகளில் நடைபெறும் நினைவு நிகழ்வுகள் மற்றும் உள்ளூர் மத விழாக்கள் ஆகியவற்றுக்கு இடையே உரையாடல்கள் இயல்பாக நகர்ந்தன. ஆயினும், உரையாடல் போர்க்கால அனுபவங்களை நெருங்கும் போதெல்லாம், மொழியியல் மாற்றங்கள் வெளிப்பட்டன. வெளிநாட்டில் உள்ள உறவினர்கள் ‘மனித உரிமைகள்’, ‘பொறுப்புக்கூறல்’, ‘ஆவணப்படுத்தல்’, ‘சர்வதேசப் பரிந்துரை’ போன்ற ஆங்கிலச் சொற்றொடர்களை அதிகளவில் பயன்படுத்தினர். இலங்கையில் உள்ள குடும்ப உறுப்பினர்கள் முதன்மையாகத் தமிழில், ‘அந்த நாட்கள்’, ‘எங்கள் மக்கள்’, ‘எங்கள் கிராமம்’ அல்லது ‘இங்கே என்ன நடந்தது’ போன்ற சொற்றொடர்களைப் பயன்படுத்தினர். அழைப்பு முடிந்த பிறகு, பங்கேற்பாளர்களில் ஒருவர் இவ்வாறு விவரித்தார்: “நாம் ஒரே வரலாற்றை வெவ்வேறு அகராதிகளுடன் நினைவுகூர்கிறோம்.” இந்தக் கருத்து, இப்பிரிவின் மையக் கருத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறது. நினைவுகள் இடங்களுக்கிடையே வெவ்வேறு விதமாகப் புரிந்துகொள்ளப்படுவது மட்டுமல்ல, அவை வெவ்வேறு விதமாகப் பேசப்படுகின்றன. மக்கள் வாழும் நிறுவனச் சூழல்களால் அரசியல் சொற்களஞ்சியங்கள் வடிவமைக்கப்படுகின்றன.

மொழித் தேர்வே இந்த நாடுகடந்த மாற்றங்களை அடிக்கடி பிரதிபலித்தது. ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் உள்ள இரண்டாம் தலைமுறைத் தமிழர்களிடையே, அரசியல் விவாதங்கள் பெரும்பாலும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தின் கலவைகளின் மூலமாகவே வெளிப்பட்டன. இதில், சட்டம், செயல்பாடு, கல்வித்துறை, சர்வதேச அரசியல் ஆகியவற்றுக்கான சொற்களஞ்சியத்தை ஆங்கிலம் வழங்கிய அதே வேளையில், தமிழ் உணர்வுபூர்வமான, குடும்பரீதியான மற்றும் நினைவுகூரத்தக்க முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் உள்ள உறவினர்களைச் சந்திக்க வந்த ஒரு முதுகலை மாணவி இந்த மொழிக் கலவையை விவரித்தார். “நான் என் பாட்டியிடம் பேசும்போது, முக்கியமான அனைத்தும் தமிழில் வருகின்றன. என் ஆராய்ச்சியைப் பற்றிப் பேசும்போது, அது ஆங்கிலமாகிவிடுகிறது.” ஏன் என்று கேட்டதற்கு, அவர் பதிலளித்தார், “சில கருத்துகள் என் வாழ்வில் ஆங்கிலத்தில் நுழைந்தன. சில உணர்வுகள் தமிழை விட்டு ஒருபோதும் நீங்கவில்லை.” இடங்களுக்கு இடையில் நினைவுக் கொண்டாட்ட மொழி எவ்வாறு மாறுகிறது என்பதையும் களஆய்வு வெளிப்படுத்தியது. இலங்கைக்குள், பதிலளித்தவர்கள் பெரும்பாலும் நினைவுக் கொண்டாட்ட நடைமுறைகளைப் பற்றி மறைமுகமாகக் குறிப்பிட்டனர்; ‘சிறப்புப் பிரார்த்தனைகள்’, ‘நினைவுகூர்தல்’, அல்லது ‘சுடுகாட்டிற்குச் செல்லுதல்’ என்று பேசினர். சாதாரண உரையாடலில் வெளிப்படையான அரசியல் சொற்கள் ஒப்பீட்டளவில் அரிதாகவே காணப்பட்டன. இதற்கு மாறாக, புலம்பெயர் மக்களின் நினைவுக் கொண்டாட்டங்கள், கூட்டு நினைவு, தேசிய அடையாளம், தியாகம், இனப்படுகொலை, எதிர்ப்பு அல்லது சர்வதேச நீதி தொடர்பான மிகவும் முறைப்படுத்தப்பட்ட சொற்களஞ்சியங்களை அடிக்கடி பயன்படுத்தின. பொது உரைகள், பதாகைகள், சமூக ஊடகப் பதிவுகள், சமூக நிகழ்வுகள் ஆகியன வடக்குக் கிழக்கில் அன்றாட உரையாடல்களின் போது அரிதாகவே காணப்படும் ஒருவித மொழியியல் வெளிப்படைத்தன்மையை அடிக்கடி வெளிப்படுத்தின.

ஒஸ்லோவில் உள்ள ஓர் அரசியற் செயற்பாட்டாளர் இந்த வேறுபாட்டைப் பற்றிச் சிந்தித்தார். “இங்கே நாம் சில வார்த்தைகளை சிந்திக்காமல் சொல்லிவிடுகிறோம். நான் யாழ்ப்பாணத்திற்குச் செல்லும்போது, உடனடியாகவே வித்தியாசமாகப் பேசுகிறேன்.” இந்த மாற்றம் உணர்வுபூர்வமானதா என்று கேட்டபோது, அவர் பதிலளித்தார், “முதலில் அப்படித்தான் இருந்தது. இப்போது அது தானாகவே நிகழ்கிறது.” அவரது பதில், தகவல் தொடர்புத் திறன் என்பது இடத்தைப் பொறுத்து அமைகிறது என்பதைக் காட்டுகிறது. சட்டங்கள் வேறுபடுவதால் மட்டுமல்ல, உறவுகள், பார்வையாளர்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் மாறுவதாலும் தனிநபர்கள் தங்களைத் தகவமைத்துக் கொள்கிறார்கள். ஒரே நபர், இருப்பிடத்தைப் பொறுத்து வெவ்வேறு மொழித் தொகுப்புகளைக் கொண்டிருக்கலாம். இந்த வேறுபாடுகள் சில சமயங்களில் குடும்பங்களுக்குள் தவறான புரிதல்களை ஏற்படுத்துகின்றன. இலங்கையில் உள்ள பல பதிலளிப்பாளர்கள், புலம்பெயர் உறவினர்கள் உணர்வுபூர்வமாக விலகியவர்களாகவோ அல்லது அரசியல் ரீதியாகப் புரிந்துகொள்ள முடியாதவர்களாகவோ பேசும் விதத்தில் பேசுவதாக விவரித்தனர். மன்னாரைச் சேர்ந்த ஒரு விவசாயி இவ்வாறு குறிப்பிட்டார், “நாங்கள் ஏன் அதிகமாகப் போராடுவதில்லை என்று அவர்கள் கேட்கிறார்கள்.

நாளையும் நாங்கள் இங்கேதான் வாழ வேண்டும் என்பதை அவர்கள் புரிந்துகொள்வதில்லை.” இதற்கு மாறாக, இளம் புலம்பெயர் பதிலளிப்பாளர்கள், இலங்கையில் உள்ள உறவினர்கள் சில சமயங்களில் அதிக எச்சரிக்கையுடன் இருப்பதாகக் கருதினர். கனடாவில் பிறந்த ஒரு தமிழ் இளையோர் விளக்கினார், “சில சமயங்களில் என் மாமாக்கள் ஒரு வாக்கியத்தின் பாதியிலேயே பேசுவதை நிறுத்திவிடுவார்கள். அவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்கிறார்கள் என்று எனக்குத் தெரியும், ஆனால் அது விசித்திரமாக இருக்கிறது, ஏனென்றால் நாங்கள் அப்படிப் பேசுவதில்லை.” இந்த முரண்பாடான அவதானிப்புகள், மொழி என்பது அரசியல் அபாயத்தின் வெவ்வேறு அனுபவங்களைப் பிரதிபலிக்கிறது என்பதை வெளிப்படுத்துகின்றன. அன்றாடச் சூழல்களுக்கு ஏற்ப தகவல் தொடர்பு நடைமுறைகள் உருவாகின்றன. தூரம் நினைவுகளை அழிப்பதில்லை, ஆனால் நினைவுகள் வெளிப்படுத்தப்படும் சூழ்நிலைகளை அது மாற்றியமைக்கிறது.

எண்ணிம ஊடகங்கள் இந்தத் தொடர்புகளைத் தீவிரப்படுத்தியதோடு, மொழிசார்ந்த பேச்சுவார்த்தைகளின் புதிய வடிவங்களையும் உருவாக்கியுள்ளன. வாட்ஸ்அப் குடும்பக் குழுக்களில் பெரும்பாலும் பல கண்டங்களில் பரவியுள்ள உறவினர்கள் உள்ளனர். ஒரு கலந்துரையாடலில் பங்கேற்பாளர்கள் தமிழ் எழுத்து, ரோமானியத் தமிழ், ஆங்கிலம், சிங்களம், நோர்வேஜியன், பிரெஞ்சு அல்லது ஜெர்மன் ஆகிய மொழிகளில் எழுதலாம். ஈமோஜிகள், புகைப்படங்கள், குரல் குறிப்புகள், செய்தித்தாள் இணைப்புகள் மற்றும் குறுகிய காணொளிகள் அன்றாட உரையாடலுடன் சேர்ந்து பரவி, பாரம்பரிய மொழி எல்லைகளைக் கடக்கும் கலப்பினத் தொடர்பு வடிவங்களை உருவாக்குகின்றன. எனக்குப் பதிலளித்த ஒருவர் தனது குடும்பத்தின் வாட்ஸ்அப் குழுவை நகைச்சுவையாக “எங்கள் சர்வதேச பாராளுமன்றம்” என்று குறிப்பிட்டார். அந்த நகைச்சுவைக்கு மத்தியிலும், அவரது கருத்து ஒரு முக்கியமான மானிடவியல் கருத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறது. எண்ணிமத் தொடர்பு புதிய நாடுகடந்த பொதுமக்களை உருவாக்கியுள்ளது. அதில் அரசியல் மொழி தொடர்ந்து மொழிபெயர்க்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு, மறுவிளக்கம் அளிக்கப்படுகிறது. ஆயினும், மொழியின் பரவல் ஒருவழிப் பாதையாக இல்லை. புலம்பெயர் சொற்களஞ்சியங்கள் இலங்கைக்குள் உள்ளூர் உரையாடல்களில் அதிகளவு செல்வாக்கு செலுத்துகின்றன. யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு மாணவர் விளக்கினார், “இந்தச் சொற்களில் சில புலம்பெயர் சமூகத்திலிருந்து வந்தவை. ஆனால் அவை இங்கு வந்தவுடன், மாறத் தொடங்குகின்றன.” உண்மையில், இறக்குமதி செய்யப்பட்ட சொற்களஞ்சியங்கள் ஒருபோதும் அப்படியே ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. அவை உள்ளூர்மயமாக்கப்பட்டு, மொழிபெயர்க்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு, ஏற்கனவே உள்ள பண்பாட்டுக் கட்டமைப்புகளில் ஒருங்கிணைக்கப்படுகின்றன. துன்பம், மாண்பு, உறவுமுறை, தியாகம், சகிப்புத்தன்மை ஆகியவற்றின் தமிழ் வெளிப்பாடுகள், உரிமை மற்றும் நீதியின் உலகளாவிய மொழிகளுடன் ஊடாடி, புதிய கலப்பின அரசியல் சொற்றொடர்களை உருவாக்குகின்றன.

இந்தச் செயல்முறை, ஹோமி கே. பாபாவின் (*Homi K. Bhabha*) பண்பாட்டுக் கலப்பு என்ற கருத்தாக்கத்துடன் வலுவாக ஒத்துப் போகிறது. ஆயினும், கலப்பு என்பது வெறும் பண்பாட்டு ரீதியானது மட்டுமல்ல, அது ஆழமான மொழியியல் தன்மை கொண்டது என்பதையும் இலங்கைச் சூழல் நிரூபிக்கிறது. உள்ளூர் அனுபவத்திற்கும் உலகளாவிய உரையாடலுக்கும் இடையிலான தொடர்ச்சியான மொழிபெயர்ப்பின் மூலம் அரசியல் அர்த்தங்கள் உருவாகின்றன. இனவரைவியல் சான்றுகள் மானிடவியலுக்கான முக்கியமான வழிமுறை சார்ந்த கேள்விகளையும் எழுப்புகின்றன. இலங்கைக்குள் மட்டுமே பணிபுரியும் ஆய்வாளர்கள், அரசியல் மொழியின் பன்னாட்டு உருவாக்கத்தைக் கவனிக்கத் தவறும் அபாயத்தை எதிர்கொள்கின்றனர். இதற்கு மாறாக, புலம்பெயர் சமூகங்களுக்குள் மட்டுமே கட்டுப்படுத்தப்பட்ட ஆய்வுகள், வடக்குக் கிழக்கில் தொடர்ந்து வாழ்பவர்களின் தகவல் தொடர்பு நடைமுறைகளைத் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடும். போருக்குப் பிந்தைய காலகட்டம், பல இடங்களைத் தழுவிய உறவுகளின் மூலம் பெருகிய முறையில் கட்டமைக்கப்படுகிறது. அதன் மொழியைப் பிராந்திய ரீதியாக மட்டும் புரிந்துகொள்ள முடியாது. வழிமுறை ரீதியாக, இதற்குப் பல இடங்களை உள்ளடக்கிய ஒரு மொழியியல் இனவரைவியல் தேவைப்படுகிறது. இது எண்ணிம ஊடகங்கள், இடப்பெயர்வு, வருகைகள், பணம் அனுப்புதல், நினைவுகூர்தல்கள், குடும்ப உறவுகள் வழியாகத் தேசிய எல்லைகளைக் கடந்து செல்லும் உரையாடல்களில் கவனம் செலுத்த வேண்டும். அரசியல் பேச்சு இனி கிராமங்களுக்கோ அல்லது நகரங்களுக்கோ அடங்கியிருக்கவில்லை. அது பன்னாட்டு சமூகத் தளங்களில் புழங்குகிறது.

இறுதியாக, புலம்பெயர் மொழியை இலங்கைக்குள் இருக்கும் மொழியை விட அதிக நம்பகத்தன்மை வாய்ந்ததாகவோ அல்லது குறைந்த நம்பகத்தன்மை வாய்ந்ததாகவோ கருதக்கூடாது. ஒவ்வொன்றும் வெவ்வேறு வரலாற்று அனுபவங்களிலிருந்தும் அரசியல் சூழல்களிலிருந்தும் உருவாகின்றன. ஒன்று அன்றாட

ஆட்சிமுறை மற்றும் சமூக சகவாழ்வின் அருகாமையால் வடிவமைக்கப்படுகிறது; மற்றொன்று தூரம், வாதம், நினைவாற்றல் பணி மற்றும் சர்வதேச அரசியல் ஈடுபாடு ஆகியவற்றால் வடிவமைக்கப்படுகிறது. அவை ஒன்றிணைந்து, நினைவுகூர்தலின் ஒன்றோடொன்று இணைந்த ஆனால் தனித்துவமான இலக்கணங்களை உருவாக்குகின்றன. எனவே, அரசியல் பேச்சின் மானிடவியல், போருக்குப் பிந்தைய காலம் ஒரே நேரத்தில் உள்ளூர் சார்ந்ததாகவும் நாடு கடந்ததாகவும் இருக்கிறது என்பதை அங்கீகரிக்க வேண்டும். சொற்கள் பயணிக்கின்றன. மௌனங்கள் பயணிக்கின்றன. நயமொழிகள் பயணிக்கின்றன. பழைய மரபுத்தொடர்கள் நிலைத்திருக்கும் அதே வேளையில், புதிய சொற்களஞ்சியங்கள் உருவாகின்றன. நினைவுகள் எல்லைகளைக் கடந்து செல்லும்போது, அவை வெவ்வேறு தார்மீக, அரசியல், மொழியியல் உலகங்களாக மொழிபெயர்க்கப்படுகின்றன.

மொழியும் அரசும் போருக்குப் பிந்தைய காலத்தின் கதையாடலின் ஆளுகையும்

முந்தைய பிரிவுகள், போருக்குப் பிந்தைய காலகட்டத்தில் சாதாரண மக்கள் பயணிக்கும் மொழிகளை ஆராய்ந்திருந்தால், இந்தப் பிரிவு ஒரு வேறுபட்ட மொழியியல் காரணியான அரசைப் பற்றி ஆராய்கிறது. அரசுகள் சட்டங்கள், நிறுவனங்கள், நிலப்பரப்பு மற்றும் நிர்ப்பந்திக்கும் திறன் ஆகியவற்றின் மூலம் மட்டும் ஆட்சி செய்வதில்லை. அவை மொழியின் மூலமாகவும் ஆட்சி செய்கின்றன. கொள்கைகள், உரைகள், சட்டங்கள், அபிவிருத்தித் திட்டங்கள், இராணுவ அறிக்கைகள், நீதிமன்ற ஆவணங்கள், ஊடக வெளியீடுகள், நிர்வாகக் கடிதப் போக்குவரத்து, அதிகாரத்துவப் பிரிவுகள் ஆகிய அனைத்தும் அரசியல் யதார்த்தத்தைப் பற்றிய ஒரு குறிப்பிட்ட புரிதலை உருவாக்குவதற்குப் பங்களிக்கின்றன. போருக்குப் பிந்தைய இலங்கையில், போர் என்றால் என்ன, அது எவ்வாறு முடிந்தது, யார் பாதிக்கப்பட்டார்கள், எதை நினைவுகூர வேண்டும், மற்றும் எதிர்காலம் எப்படி அமைய வேண்டும் என்பதை வரையறுப்பதில் உத்தியோகப்பூர்வ மொழி மையமாக இருந்துள்ளது.

போருக்குப் பிந்தைய ஆளுகை என்பது ஒரே நேரத்தில் கதையாடல்சார் ஆளுகையாகவும் இருக்கிறது. அரசு, மக்களை நிர்வகிப்பதை மட்டும் நோக்கமாகக் கொள்ளாமல், போருக்குப் பிந்தைய காலகட்டம் புரிந்துகொள்ளப்படும் பிரிவுகளை ஒழுங்கமைக்கவும் முயல்கிறது. அமைதி, அபிவிருத்தி, புனர்வாழ்வு, நல்லிணக்கம், தேசிய பாதுகாப்பு, பயனாளர், மீள்குடியேற்றம், பயங்கரவாதம், தீவிரவாதம், ஒருங்கிணைப்பு, சமூக ஒருமைப்பாடு போன்ற சொற்கள் வெறும் கொள்கைகளை விவரிப்பதோடு நின்றுவிடுவதில்லை. அவை, குடிமக்கள் அரசாங்க நிறுவனங்களுக்குப் புரியக்கூடியவர்களாக மாறும் குறிப்பிட்ட தார்மீக மற்றும் அரசியல் கட்டமைப்புகளை உருவாக்குகின்றன. ஆயினும், இந்த உத்தியோகபூர்வ சொற்களஞ்சியங்கள் ஒருபோதும் அப்படியே ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை என்று இனவரைவியல் சான்றுகள் சுட்டிக்காட்டுகின்றன. சாதாரண மக்கள் அன்றாடப் பேச்சின் மூலம் அவற்றை மறுவிளக்கம் செய்கிறார்கள், மொழிபெயர்க்கிறார்கள், எதிர்க்கிறார்கள், தனதாக்கிக் கொள்கிறார்கள், அமைதியாக உருமாற்றுகிறார்கள்.

இந்தக் கண்ணோட்டம், மைக்கேல் ஃபூக்கோவின் (Michel Foucault) படைப்புகளை அடிப்படையாகக் கொண்டது. அவரது உரையாடல் பகுப்பாய்வுகள், மொழி என்பது வெறும் பிரதிநிதித்துவமானது மட்டுமல்ல, ஆக்கபூர்வமானது என்பதையும் நிரூபித்தன. உரையாடல்கள், எதை உண்மையெனக் கருதுவது என்பதை நிறுவுகின்றன, எந்தப் பிரிவுகள் சட்டபூர்வமானவை ஆகின்றன என்பதைத் தீர்மானிக்கின்றன, நிறுவனங்கள் அங்கீகரிக்கும் நபர்களின் வகைகளை வடிவமைக்கின்றன. போருக்குப் பிந்தைய இலங்கையில், புனர்வாழ்வளிக்கப்பட்ட நபர், போரினால் பாதிக்கப்பட்ட பயனாளர், மீள்குடியேற்றப்பட்ட குடும்பம், முன்னாள் போராளி, நலிவடைந்த குடும்பம் போன்ற பிரிவுகளை உருவாக்குவதில் உத்தியோகபூர்வ உரையாடல் ஒரு குறிப்பிடத்தக்க பங்கை ஆற்றியுள்ளது. இந்த வகைப்பாடுகள் நிர்வாக ரீதியாகப் பயனுள்ளவை, ஆனால் அவை அதிகாரத்துவ நடைமுறைகளுக்கு அப்பாற்பட்ட வழிகளில் சமூக அடையாளங்களையும் ஒழுங்கமைக்கின்றன.

கிளிநொச்சியில், ஒரு பிரதேச செயலக அதிகாரி வகைப்படுத்தலின் நடைமுறைத் தேவையை விவரித்தார், “திட்டங்களுக்குத் தகுதி தேவைப்படுவதால் எங்களுக்கு வகைப்பாடுகள் தேவை. வகைப்பாடுகள் இல்லாமல், நிர்வாகம் சாத்தியமற்றதாகிவிடும்.” அவரது இந்தக் கருத்து, நவீன அரசுகளில் பொதுவாகக் காணப்படும் ஒரு நிறுவன தர்க்கத்தைப் பிரதிபலிக்கிறது. ஆளுகைக்கு வகைப்பாடு தேவைப்படுகிறது. திட்டமிடல், வரவு செலவுத் திட்டமிடல், கொள்கை அமலாக்கத்தை எளிதாக்கும் நிர்வாக முத்திரைகள் மூலம் குடிமக்கள்

வெளிப்படுகிறார்கள். ஆயினும், அதே வகைப்பாடுகள் சமூக உறுப்பினர்களால் முற்றிலும் மாறுபட்ட விதத்தில் விளக்கப்பட்டன. முல்லைத்தீவில், அரச, அரசு சாரா நிறுவனங்களின் பதிவுப் படிவங்களை மீண்டும் மீண்டும் பூர்த்தி செய்த ஒரு விதவை, "ஒவ்வொரு அலுவலகமும் என் வாழ்க்கையை வெவ்வேறு கட்டங்களைப் பயன்படுத்தி விவரிக்கச் சொல்கிறது" என்று குறிப்பிட்டார். அவர், "அந்தக் கட்டங்களில் எதுவும் என் வாழ்க்கையை விளக்கவில்லை" என்றும் மேலும் கூறினார். அவரது இந்தக் கருத்து, நிர்வாக மொழிக்கும் வாழ்ந்த அனுபவத்திற்கும் இடையே நிலவும் ஒரு நீடித்த பதற்றத்தை எடுத்துக்காட்டுகிறது. அதிகாரத்துவ வகைப்பாடுகள், சிக்கலான வாழ்க்கை வரலாறுகளைத் தரப்படுத்தப்பட்ட வகைப்பாடுகளாக எளிமைப்படுத்துகின்றன. அவை மக்களை ஆளக்கூடியவர்களாக ஆக்குகின்றன. ஆனால் அவ்வாறு செய்வதன் மூலம், அன்றாட வாழ்வின் தன்மைகளாக விளங்கும் தெளிவின்மை, பன்முகத்தன்மையை அவை பெரும்பாலும் குறைத்துவிடுகின்றன.

நவீன அரசுகள் எளிமைப்படுத்தப்பட்ட வகைப்பாடுகள் மூலம் சமூகங்களை 'வாசிக்கக்கூடியதாக' மாற்ற முயல்கின்றன என்ற ஜேம்ஸ் சி. ஸ்காட்டின் வாதத்தை இந்த நிகழ்வு நினைவூட்டுகிறது. மக்கள்தொகைக் கணக்கெடுப்பு வகைப்பாடுகள், நிலப் பதிவேடுகள், தரப்படுத்தப்பட்ட பெயர்கள், அபிவிருத்திக் குறிகாட்டிகள், அதிகாரத்துவப் படிவங்கள் ஆகிய அனைத்தும் நிர்வாகத் தலையீட்டிற்கு வழிவகுக்கின்றன. இலங்கையின் போருக்குப் பிந்தைய காலகட்டம் இந்தச் செயல்முறையைத் தெளிவாக விளக்குகிறது. பல தசாப்த கால மோதல்களால் பாதிக்கப்பட்ட சமூகங்கள், ஆவணங்கள், தரவுத்தளங்கள், பயனாளிகள் பட்டியல்கள், பாதிப்பு மதிப்பீடுகள், வாழ்வாதாரக் கணக்கெடுப்புகள், மீள்குடியேற்றப் பதிவேடுகள் மூலம் பெருகிய முறையில் வெளிப்படுகின்றன. இருப்பினும், இனவரைவியல் சந்திப்புகள், உள்ளூர் சமூகங்கள் உத்தியோகபூர்வ அடையாளங்களுக்கும் சமூக அடையாளங்களுக்கும் இடையில் அடிக்கடி வேறுபடுத்திப் பார்த்ததை வெளிப்படுத்தின. மன்னாரைச் சேர்ந்த ஒரு விவசாயி, "அரசாங்கத்தின்படி, நான் மீள்குடியேற்றப்பட்ட விவசாயி. என் கிராமத்தின்படி, நான் வெறுமனே வீட்டிற்குத் திரும்புகிறேன்." இந்த வேறுபாடு நுட்பமானது ஆனால் முக்கியமானது. உத்தியோகபூர்வ மொழி நிர்வாக அந்தஸ்தை வலியுறுத்துகிறது, அதேசமயம் அன்றாட மொழி சொந்தம் மற்றும் தொடர்ச்சியை முன்னிலைப்படுத்துகிறது. இந்த இணையான சொற்களஞ்சியங்கள் ஒன்றிணையாமல் இணைந்து வாழ்கின்றன. ஒருவேளை, உத்தியோகபூர்வ உரையாடலில் 'வளர்ச்சி' என்ற சொல்லை விட வேறு எந்தச் சொல்லும் இவ்வளவு அடிக்கடி தோன்றியதில்லை. சாலைகள், பாலங்கள், நீர்ப்பாசன அமைப்புகள், வீட்டுவசதித் திட்டங்கள், பாடசாலைகள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்கள், சுற்றுலா முயற்சிகள், தொழிற்பயிற்சி, வாழ்வாதாரத் திட்டங்கள் ஆகியவை போருக்குப் பிந்தைய முன்னேற்றத்திற்கான சான்றுகளாகத் தொடர்ந்து விவரிக்கப்பட்டன. அரசாங்க அறிக்கைகள், நன்கொடையாளர் ஆவணங்கள், வளர்ச்சி முகமைகள் ஆகியவை புனரமைப்பு, மீட்பு, மீள்திறன், முதலீடு, நவீனமயமாக்கல், வளர்ச்சி ஆகியவற்றை மையமாகக் கொண்ட வியக்கத்தக்க வகையில் ஒத்த சொற்களஞ்சியங்களைப் பயன்படுத்தின. ஆயினும், வளர்ச்சி குறித்த உள்ளூர் புரிதல்கள் பெரும்பாலும் கணிசமாக வேறுபட்டன என்பதை இனவரைவியல் உரையாடல்கள் சுட்டிக்காட்டின. முல்லைத்தீவில் ஒரு நேர்காணலின் போது, வளர்ச்சி என்றால் என்ன என்று ஒரு மீனவரிடம் கேட்டேன். அவர் சமீபத்தில் சீரமைக்கப்பட்ட சாலையைப் பார்த்தவாறே பதிலளித்தார், "வீதி நன்றாக இருக்கிறது", சிறிது இடைவெளிக்குப் பிறகு அவர் மேலும் கூறினார், "ஆனால், என் மகன் இங்கே இருக்க விரும்பவில்லை, ஆகவே இதை எவ்வாறு வளர்ச்சி என்பது" என்றார். அவரது பதில் பகுப்பாய்வுக் கண்ணோட்டத்தை மாற்றுகிறது. உட்கட்டமைப்பு மட்டுமே வளர்ச்சியின் முழுமையான அர்த்தம் அல்ல. இடப்பெயர்வு, வேலைவாய்ப்பு, கல்வி, கண்ணியம், சொந்தம் குறித்த முடிவுகளும் சமமான முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கின்றன. இன்னொருவர் இவ்வாறு குறிப்பிட்டார், "வீதிகளை விரைவாக அமைக்கலாம். நம்பிக்கை ஏற்பட அதிக காலம் ஆகும்." இந்தக் கூற்று, அன்றாட மொழி எவ்வாறு அதிகாரபூர்வப் பிரிவுகளை அமைதியாக விரிவுபடுத்துகிறது என்பதை விளக்குகிறது. வளர்ச்சி என்பது முற்றிலும் பொருள் சார்ந்ததாக இல்லாமல், உறவு சார்ந்ததாக மாறுகிறது.

நல்லிணக்கத்தின் மொழியும் இதே போன்ற ஒரு சிக்கலான நிலையை வகிக்கிறது. அரசாங்க நிறுவனங்கள், குடிமைச் சமூக அமைப்புகள், சர்வதேச முகமைகள் மற்றும் மதத் தலைவர்கள், போருக்குப் பிந்தைய மீட்சியின் மைய நோக்கமாக நல்லிணக்கத்தை அடிக்கடி குறிப்பிடுகின்றனர். அதிகாரபூர்வ ஆவணங்கள் குணப்படுத்துதல்,

சகவாழ்வு, சமூக ஒருமைப்பாடு, நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல், தேசிய ஒற்றுமை ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றன. ஆயினும், களஆய்வின் போது, சாதாரண உரையாடலில் அந்த வார்த்தையே ஆச்சரியப்படும் விதமாக அரிதாகவே காணப்பட்டது. அதற்குப் பதிலாக, பதிலளித்தவர்கள் பின்வருவனவற்றைப் பற்றிப் பேசினர்: “ஒன்றாக வாழ்வது”, “வாழ்க்கையைத் தொடர்வது”, “மீண்டும் ஒருவரையொருவர் சந்திப்பது”, “குழந்தைகள் ஒன்றாகப் படிப்பது”, “பழைய காயங்களை மீண்டும் கிளறாமல் இருப்பது”. இந்த வெளிப்பாடுகள் அரிதாகவே அருவமான அரசியல் சொற்களைப் பயன்படுத்தின. அவை நிறுவனத் திட்டங்களை விட நடைமுறைச் சமூக உறவுகளை விவரித்தன. மட்டக்களப்பில் உள்ள ஓர் ஓய்வுபெற்ற ஆசிரியர் இவ்வாறு குறிப்பிட்டார், “வெளியில் உள்ளவர்கள் நல்லிணக்கம் நிகழ்ந்துவிட்டதா என்று கேட்கிறார்கள். இங்கே நாங்கள், அண்டை வீட்டார் இன்னும் ஒருவரையொருவர் சந்திக்கிறார்களா என்று கேட்கிறோம்.” அவரது இந்தக் கருத்து, சாதாரண மொழி எவ்வாறு நல்லிணக்கத்தை கொள்கை விவாதத்திலிருந்து அன்றாட நடைமுறைக்கு மாற்றுகிறது என்பதை நிரூபிக்கிறது. சமூகச் சீரமைப்பு நிகழ்வதற்கான முதன்மைக் களம் அன்றாட நிகழ்வுகளே. நல்லிணக்கத்தை ஆணையங்கள், அறிக்கைகள் அல்லது அதிகாரபூர்வ அறிவிப்புகள் மூலம் மட்டுமே புரிந்துகொள்ள முடியாது. சகவாழ்வின் அன்றாடச் செயல்கள் மூலமாகவும் அதை ஆராய வேண்டும்.

போருக்குப் பிந்தைய உரையாடலின் மற்றொரு முக்கிய அம்சம், தேசியப் பாதுகாப்பின் தொடர்ச்சியான முக்கியத்துவத்தைப் பற்றியது. அமைதிக்கும் வளர்ச்சிக்கும் பாதுகாப்புதான் முதன்மை அடித்தளம் என்று அரசு அதிகாரிகள் அடிக்கடி கூறுகின்றனர். இராணுவ இருப்பு, கண்காணிப்பு வழிமுறைகள், உட்கட்டமைப்புத் திட்டங்கள், நிர்வாக ஒருங்கிணைப்பு ஆகியவை பெரும்பாலும் இந்தச் சொற்களஞ்சியத்தின் மூலம் நியாயப்படுத்தப்படுகின்றன. சமூக உறுப்பினர்கள் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை அடியோடு நிராகரித்தது அரிது. மாறாக, அவர்கள் அந்தச் சொல்லை அன்றாட அனுபவத்தின் மூலமே அடிக்கடி விளக்கினர். வவுனியாவில் உள்ள ஒரு கடைக்காரர் குறிப்பிட்டார், “பேசுபவரைப் பொறுத்து பாதுகாப்பு என்பது வெவ்வேறு அர்த்தங்களைக் கொண்டுள்ளது”. இதை விளக்குமாறு கேட்கப்பட்ட போது, அவர் தொடர்ந்தார், “அதிகாரிகளுக்கு, பாதுகாப்பு என்பது நாட்டைக் காப்பதாகும். எனக்கு, பாதுகாப்பு என்பது என் பிள்ளைகள் பத்திரமாக வீடு திரும்புவார்கள் என்பதை உறுதிப்படுத்துவதைக் குறிக்கிறது”. அவரது பதில், அதிகாரபூர்வப் பிரிவுகள் சாதாரண வாழ்வின் மூலம் எவ்வாறு மறுவிளக்கம் பெறுகின்றன என்பதை விளக்குகிறது. தேசியப் பாதுகாப்பு என்பது குடும்பப் பாதுகாப்பு, பொருளாதாரப் பாதுகாப்பு, உணர்வுப் பாதுகாப்பு என மொழிபெயர்க்கப்படுகிறது.

புனர்வாழ்வு என்ற சொல்லை விட சிக்கலான பதில்களை உருவாக்கிய அதிகாரபூர்வச் சொற்கள் சிலவே. புனர்வாழ்வு என்ற சொல்லின் மொழி, இலங்கையின் போருக்குப் பிந்தைய ஆட்சியில், குறிப்பாக முன்னாள் போராளிகள், பரந்த மறு ஒருங்கிணைப்புத் திட்டங்கள் தொடர்பாக ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. ஆயினும், பல பதிலளிப்பவர்கள் அந்தச் சொல்லில் பொதிந்துள்ள அனுமானங்களைக் கேள்விக்குள்ளாக்கினர். முன்னாள் கைதி ஒருவர் விளக்கினார், “புனர்வாழ்வு என்பது, அனைவரும் ஒரே கதையுடன் நுழைந்தது போல் ஒலிக்கிறது”. மற்றொருவர், “சிலர் குணமடைய வேண்டியிருந்தது. மற்றவர்களுக்கு வேலை தேவைப்பட்டது. மற்றவர்கள் வெறுமனே வீட்டிற்குச் செல்ல விரும்பினர்”. நிர்வாக மொழி பெரும்பாலும் சீரான பாதைகளை முன்னிறுத்துகிறது என்பதையும், இனவரைவியல் அனுபவம் அதனைச் சிக்கலாக்குகிறது என்பதையும் இந்தக் கருத்துகள் வெளிப்படுத்துகின்றன. ஆகவே, பெயரிடுதல் என்பது அரசியல்மயமாகிறது. பெயர்ச்சொற்கள் எதிர்பார்ப்புகளையும், நிறுவனங்களின் பதில்களையும், பொதுமக்களின் கருத்துகளையும் வடிவமைக்கின்றன.

ஒருவேளை, மிகவும் கவர்ச்சிகரமான இனவரைவியல் அவதானிப்பு, சாதாரண மக்கள் அதிகாரபூர்வ மொழியை மொழிபெயர்க்கும் விதங்களைப் பற்றியது. அரசாங்க அறிவிப்புகள் கிராமங்களுக்குள் அரிதாகவே அப்படியே மீண்டும் கூறப்படுகின்றன. மாறாக, அவை விளக்கப்படுகின்றன, சுருக்கப்படுகின்றன, விவாதிக்கப்படுகின்றன, கேலி செய்யப்படுகின்றன, மேலும் ஏற்கனவே உள்ள உள்ளூர் சொற்களஞ்சியங்களில் இணைக்கப்படுகின்றன. கிளிநொச்சியில் உள்ள ஒரு கிராம அலுவலர் இந்தச் செயல்முறையை விவரித்தார். “ஒரு சுற்றறிக்கை வரும்போது, நாங்கள் முதலில் அதிகாரபூர்வ தமிழைப் படிப்போம். பிறகு அதை கிராமத் தமிழில் விளக்குவோம்”. இந்த இரண்டாவது மொழிபெயர்ப்பு ஏன் அவசியம் என்று கேட்டபோது, அவர் புன்னகைத்தார். “ஏனென்றால், அதிகாரத்துவத்தை விட மக்கள் வாழ்க்கையை நன்கு புரிந்துகொள்கிறார்கள்”. பலர், அதிகாரபூர்வ மொழி பெரும்பாலும் உணர்வுபூர்வமான இடைவெளியை உருவாக்குவதாகவும் குறிப்பிட்டனர்.

‘பாதிக்கப்பட்ட மக்கள்’, ‘பயனாளிகள்’, ‘சேவை வழங்கல்’ அல்லது ‘இலக்குக் குடும்பங்கள்’ போன்ற சொற்றொடர்கள், அதிக உறவுமுறைகளைக் கொண்ட உள்ளூர் சொற்றொடர்களுடன் அடிக்கடி ஒப்பிடப்பட்டன. ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் கள அதிகாரி இவ்வாறு குறிப்பிட்டார், “எங்கள் அறிக்கைகள் பயனாளிகளைப் பற்றிப் பேசுகின்றன. கிராமவாசிகள் விதவைகள், அண்டை வீட்டார், உறவினர்கள் அல்லது குடும்பங்களைப் பற்றிப் பேசுகிறார்கள்”. இந்த வேறுபாடு, மொழியின் வெவ்வேறு தார்மீக சிக்கனங்களை விளக்குகிறது. நிர்வாக உரையாடல் கருத்தியல் கருத்துகளுக்கு முன்னுரிமை அளிக்கிறது. அன்றாட உரையாடல் உறவுகளுக்கு முன்னுரிமை அளிக்கிறது. இந்த இரண்டு சொற்களஞ்சியங்களும் இயல்பாகவே தவறானவை அல்ல. ஒவ்வொன்றும் வெவ்வேறு நோக்கங்களுக்குப் பயன்படுகின்றன. இருப்பினும், மானிடவியல் ரீதியாக, இந்த வேறுபாடுகளில் கவனம் செலுத்துவது, நிறுவன மொழி எவ்வாறு போருக்குப் பிந்தைய வாழ்க்கையின் சிக்கலான அனுபவங்களை தற்செயலாக மறைக்கக்கூடும் என்பதை வெளிப்படுத்துகிறது.

இந்த வேறுபாடுகள் இருந்தபோதிலும், அதிகாரபூர்வ மொழி வெறுமனே மேலிருந்து திணிக்கப்படுவதில்லை. சமூகங்கள் அரசின் சொற்களஞ்சியத்தை அடிக்கடி தங்கள் சொந்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்துகின்றன. கிராமத் தலைவர்கள் நிதி முன்மொழிவுகளைத் தயாரிக்கும் போதும் அல்லது அரசாங்கத் துறைகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் போதும் ‘மீள்திறன்’, ‘அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி’, ‘சமூகப் பங்கேற்பு’ போன்ற சொற்களை உத்திபூர்வமாகப் பயன்படுத்துகின்றனர். ஒரு சமூக சேவகர் சிரித்துக்கொண்டே, “எந்த வார்த்தைகள் கதவுகளைத் திறக்கின்றன என்பதை நீங்கள் கற்றுக்கொள்கிறீர்கள்” என்றார். அவரது இந்தக் கருத்து, போர்தியோவின் மொழியியல் மூலதனம் (Linguistic Capital) என்ற கருத்தை எதிரொலிக்கிறது. அதிகாரபூர்வ சொற்களஞ்சியங்கள், குடிமக்கள் தங்களுக்குள் வெவ்வேறு அன்றாடப் புரிதல்களைப் பேணிக்கொண்டே, நடைமுறைக்கு ஏற்றவாறு பயன்படுத்தும் வளங்களாக மாறுகின்றன. எனவே, மொழி பல திசைகளில் பரவுகிறது. அரசு பொது உரையாடலை வடிவமைக்கிறது. குடிமக்கள் அரசின் மொழியை மறுவடிவமைக்கின்றனர்.

ஒட்டுமொத்தமாக, இந்த இனவரைவியல் அவதானிப்புகள், போருக்குப் பிந்தைய ஆளுகையை நிறுவனங்கள், கொள்கைகள் அல்லது சட்டங்கள் மூலம் மட்டுமே புரிந்துகொள்ள முடியாது என்று சுட்டிக்காட்டுகின்றன. அதை மொழியின் மூலமாகவும் புரிந்துகொள்ள வேண்டும். அரசு, வகைகளை வரையறுப்பதன் மூலமும், முறையான சொற்களஞ்சியங்களை நிறுவுவதன் மூலமும், நிர்வாக அடையாளங்களை ஒழுங்கமைப்பதன் மூலமும், அமைதி, வளர்ச்சி, நல்லிணக்கம், பாதுகாப்புக் குறித்த அதிகாரபூர்வமான விவரிப்புகளை உருவாக்குவதன் மூலமும் ஆட்சி செய்கிறது. ஆயினும், இந்த உரையாடல்கள் ஒருபோதும் முழுமையான ஆதிக்கத்தை அடைவதில்லை. குடும்ப வரலாறுகள், உள்ளூர் ஒழுக்கநெறிகள், மத நடைமுறைகள், அன்றாட வாழ்வாதாரங்கள், பகிரப்பட்ட நினைவுகளில் வேரூன்றிய சொந்த மொழி உலகங்களைக் கொண்ட சமூகங்களை அவை எதிர்கொள்கின்றன. அலுவல் மொழியை செயலற்ற முறையில் பெறுபவர்களாக இருப்பதற்குப் பதிலாக, சாதாரண மக்கள் செயலூக்கமுள்ள மொழிபெயர்ப்பாளர்களாக மாறுகிறார்கள். அவர்கள் நிறுவனச் சொற்களஞ்சியங்களைத் தேர்ந்தெடுத்து ஏற்றுக்கொள்கிறார்கள். உள்ளூர் அனுபவத்தின் மூலம் அவற்றை அவர்கள் மறுவிளக்கம் செய்கிறார்கள். உறவுசார் மொழியைக் கொண்டு அதிகாரத்துவத்தின் நுண்புலக் கருத்துகளை அவர்கள் மென்மையாக்குகிறார்கள். அவ்வப்போது, மௌனத்தின் மூலமாகவோ அல்லது நகைச்சுவையின் மூலமாகவோ அவற்றை அவர்கள் எதிர்க்கிறார்கள். இருப்பினும், பெரும்பாலும், அவர்கள் அவற்றை வாழத் தகுந்தவையாக மாற்றிவிடுகிறார்கள். அரசியல் மொழி ஒருபோதும் அரசுக்கு மட்டுமே சொந்தமானது அல்ல என்பதை இந்தச் செயல்முறை வெளிப்படுத்துகிறது.

அது வீடுகள், தேநீர்க் கடைகள், பாடசாலைகள், தேவாலயங்கள், கோயில்கள், பேருந்துகள், சந்தைகள், வாட்ஸ்அப் குழுக்கள் மற்றும் கிராமக் கூட்டங்களுக்குள் தொடர்ந்து மறுபேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்படுகிறது. எனவே, போருக்குப் பிந்தைய காலம் என்பது ஓர் அரசியல் தீர்வாக மட்டுமல்லாமல், பலதரப்பட்ட சொற்களஞ்சியங்கள் போட்டியிடும், ஒன்றுடன் ஒன்று மேற்பொருந்தும், இணைந்து வாழும் ஓர் உரையாடல் களமாகவும் உள்ளது. இந்தப் போட்டியிடும் மொழிகளைப் புரிந்துகொள்வது, மானிடவியலை அதிகாரபூர்வ விவரிப்புகளுக்கும் மக்கள் எதிர்ப்புக்கும் இடையிலான இருமை வேறுபாடுகளைக் கடந்து செல்ல அனுமதிக்கிறது. அது, ஆளுகையே அன்றாட வாழ்வின் பேச்சுவழக்குகளாகத் தொடர்ந்து மொழிபெயர்க்கப்படும் மிகவும் ஆற்றல்மிக்க நிலப்பரப்பை வெளிப்படுத்துகிறது.

நிறைவுக் குறிப்புகள்

இக்கட்டுரை, 'போருக்குப் பிறகு பேசுவது என்றால் என்ன?' என்ற எளிமையான ஒரு கேள்வியுடன் தொடங்கியது. போருக்குப் பிந்தைய சமூகங்கள் குறித்த பெரும்பாலான ஆய்வுகள், இந்தக் கேள்வியை குரல், மௌனம் என்ற மொழியின் வழியாகவே அணுகியுள்ளன. தாராளவாத அமைதிக் கட்டமைப்பு முறைகள், அமைதி பேச்சை மீட்டெடுக்கிறது என்றும், தொடர்ச்சியான மௌனம் என்பது மனக்காயம், அச்சம், அடக்குமுறை அல்லது ஜனநாயகத் தோல்விக்கான சான்றாகப் புரிந்துகொள்ளப்படுகிறது என்றும் அடிக்கடி கருதுகின்றன. இத்தகைய அனுமானங்கள், உலகளாவிய தெற்குப் பகுதிகளில் நிலைமாறுகால நீதி வழிமுறைகள், உளவியல் சமூகத் தலையீடுகள், நல்லிணக்கத் திட்டங்கள், பொது நினைவு முயற்சிகளை வடிவமைத்துள்ளன. அரசியல் மீட்சிக்கு படிப்படியாக அதிக வெளிப்படைத்தன்மை தேவைப்படுகிறது. அதாவது, சாட்சியத்தின் மூலம் குணமடைதல், வெளிப்பாட்டின் மூலம் ஜனநாயகம், உரையாடலின் மூலம் நல்லிணக்கம் ஆகியவை அடையப்படுகின்றன என்பதே இதன் அடிப்படையான எதிர்பார்ப்பாகும். இக்கட்டுரை முழுவதும் முன்வைக்கப்பட்டுள்ள இனவரைவியல் தரவுகள் ஒரு மாறுபட்ட முடிவைச் சுட்டிக்காட்டுகின்றன.

போருக்குப் பிந்தைய நிலை என்பது பேச்சின்மையால் வகைப்படுத்தப்படுவதில்லை. அதுபோலவே, மௌனத்திலிருந்து குரலுக்கு மாறும் ஒரு படிப்படியான மாற்றமாகவும் அது போதுமான அளவு விவரிக்கப்படவில்லை. மாறாக, போருக்குப் பிந்தைய இலங்கை, அரசியல் பேச்சுக்கான ஓர் அசாதாரணமான நுட்பமான இலக்கணத்தின் தோற்றத்தை வெளிப்படுத்துகிறது. அதன் மூலம் சாதாரண மக்கள் நிச்சயமின்மை, அதிகாரம், நெருக்கம், கண்ணியம், சகவாழ்வு ஆகியவற்றைத் தொடர்ந்து கையாள்கின்றனர். மக்கள் பேசுவதா அல்லது மௌனமாக இருப்பதா என்பதை வெறுமனே தீர்மானிப்பதில்லை. எப்படிப் பேசுவது, எங்கே பேசுவது, யாருடன் பேசுவது, எந்த மொழியின் மூலம் பேசுவது, எந்த உருவகங்களைப் பயன்படுத்துவது, எந்த அளவில் பேசுவது, எந்த அளவு தெளிவின்மையுடன் பேசுவது, எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய எந்த விளைவுகளை நோக்கியது என்பதை அவர்கள் தீர்மானிக்கிறார்கள். எனவே, அரசியல் தொடர்பு என்பது வெளிப்படுத்துவதை விட, வழிநடத்துவதைப் பற்றியதாகவே மாறுகிறது.

இக்கட்டுரை முழுவதும், மௌனம் என்பது தகவல் தொடர்பு இல்லாத நிலையாக அல்லாமல், தகவல் தொடர்புள்ள இருப்பாக மறுவரையறை செய்யப்பட்டுள்ளது. மௌனம் பல வடிவங்களில் சமூகப் பணிகளைச் செய்கிறது என்பதை இனவரைவியல் சந்திப்புகள் நிரூபித்துள்ளன. அது பாதிக்கப்படக்கூடிய உறவுகளைப் பாதுகாக்கிறது. அது துக்கத்தை ஒரு வேடிக்கைப் பொருளாக மாற்றாமல் அதை ஏற்றுக்கொள்கிறது. வெவ்வேறு போர்க்கால அனுபவங்களைக் கொண்ட சமூகங்கள், பகிரப்பட்ட சமூக உலகங்களில் தொடர்ந்து வாழ்வதற்கு அது அனுமதிக்கிறது. அது கடினமான உரையாடல்களை அழிப்பதற்குப் பதிலாகத் தள்ளிப்போடுகிறது. அது வெளிப்படையான விவரிப்பின் மூலம் அல்லாமல், பரஸ்பரப் புரிதலின் மூலம் அங்கீகாரத்தைத் தெரிவிக்கிறது. எனவே, மௌனம் என்பது இயல்பாகவே விடுதலையளிப்பதும் அல்ல, இயல்பாகவே ஒடுக்குவதும் அல்ல. அதன் பொருள் உறவுகள், தார்மீகக் கடமைகள், வரலாற்று அனுபவம், சூழல் ஆகியவற்றின் மூலம் வெளிப்படுகிறது. போருக்குப் பிந்தைய இலங்கை அனுபவம், வன்முறையானது சாதாரண மொழியிலும் பின்னிப் பிணைந்துவிடுகிறது என்பதைக் காட்டுகின்றன. அது இடைநிறுத்தங்கள், பிரதிப்பெயர்கள், முழுமையடையாத வாக்கியங்கள், தாழ்ந்த குரல்கள், கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உருவகங்கள், மற்றும் ஒருவருக்கொருவர் கதைகளை முழுமையாக்கத் தேவையில்லாத பேச்சாளர்களிடையே பகிரப்படும் அமைதியான அங்கீகாரம் ஆகியவற்றில் நிலைத்திருக்கிறது. எனவே, அன்றாட வாழ்வு மொழியியல் ரீதியாக நடுநிலையானதல்ல. அது, வரலாற்று ரீதியாகப் படிந்த தகவல் தொடர்புப் பழக்கவழக்கங்களின் வடிவங்களால் நிறைந்துள்ளது.

பன்மொழித்தன்மையை ஓர் அரசியல் வழிநடத்தலாக ஆராய்வதும் சம முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்துள்ளது. தமிழ், சிங்களம், ஆங்கிலம், அதிகாரத்துவ மொழி, வளர்ச்சிச் சொற்கள், புலம்பெயர் சொற்களஞ்சியங்களுக்கு இடையே மொழி மாறுதல் நிகழ்வது, மொழித் தேர்வு என்பது ஒருபோதும் வெறும் மொழி சார்ந்ததல்ல என்பதை விளக்குகிறது. அது நிறுவன ரீதியானது, அறநெறி சார்ந்தது, உணர்ச்சி ரீதியானது, அரசியல் ரீதியானது. பேச்சாளர்கள் குறிப்பிட்ட மொழித் தொகுப்புகளைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பு, கேட்போர், அதிகாரம், சட்டபூர்வத்தன்மை, நெருக்கம் ஆகியவற்றைத் தொடர்ந்து மதிப்பீடு செய்கிறார்கள். பியர் போர்தியோ வாதிட்டது போல, மொழி எப்போதும் சமமற்ற குறியீட்டுச் சந்தைகளுக்குள் நிலவுகிறது. சாதாரண குடிமக்கள், வீடுகள், அரசாங்க அலுவலகங்கள், மத நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசு சாரா நிறுவனங்கள், சமூக ஊடகங்கள் மற்றும் நாடுகடந்த குடும்ப வலைப்பின்னல்களுக்கு இடையில் பயணிக்கும்

போது, தங்கள் பேச்சை மாற்றியமைத்து, ஒரே நேரத்தில் பல மொழியியல் சந்தைகளில் எவ்வாறு பயணிக்கிறார்கள் என்பதை இலங்கைச் சூழல் விளக்குகிறது.

நயமொழிப் பகுப்பாய்வு, அரசியல் மொழி பெரும்பாலும் மறைமுகமாகவே மிகவும் திறம்படத் தொடர்புகொள்கிறது என்பதை மேலும் வெளிப்படுத்தியது. பிரதிப்பெயர்கள் நிறுவனங்களுக்குப் பதிலாகவும், உருவகங்கள் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலாகவும், காலச்சொற்கள் வரலாற்றுக் காலவரிசைக்குப் பதிலாகவும், செயப்பாட்டு வினைகள் வெளிப்படையான பொறுப்பேற்புக்குப் பதிலாகவும் பயன்படுத்தப்படுகின்றன. இந்த மொழியியல் நடைமுறைகளை வெறுமனே தவிர்ப்பு என்று விளக்குவதற்குப் பதிலாக, அவை தகவல்தொடர்பின் ஒரு நெறிமுறையை உருவாக்குகின்றன என்று இக்கட்டுரை வாதிடுகிறது. தொடர்ச்சியான வாய்மொழி மோதல் தேவைப்படாமல், மறைமுகத்தன்மை பேசுபவர்கள் உறவுகளைப் பேணவும், சிக்கலான வரலாறுகளை ஒப்புக்கொள்ளவும், அன்றாட சகவாழ்வைப் பராமரிக்கவும் அனுமதிக்கிறது. எனவே, நயமொழி என்பது அச்சத்திலிருந்து மட்டுமல்ல, அக்கறையிலிருந்தும் உருவாகிறது.

வதந்தியும் கூட மறுபரிசீலனை செய்யப்பட்டுள்ளது. பகுத்தறிவற்ற தவறான தகவல்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு மாறாக, வதந்திகள் என்பவை நிச்சயமற்ற தன்மையை விளக்குவதற்கும், அரசியல் எதிர்காலங்களைக் கற்பனை செய்வதற்கும், முழுமையற்ற அதிகாரபூர்வ விவரிப்புகளை மதிப்பீடு செய்வதற்கும் பயன்படும் ஒரு கூட்டு இயக்கமுறையாகச் செயல்படுகின்றன. தேநீர்க் கடைகள், பேருந்துகள், இறுதிச் சடங்கு இல்லங்கள், தேவாலயங்கள், கோயில்கள், சந்தைகள், மீன்பிடித் துறைமுகங்கள், வாட்ஸ்அப் குழுக்கள் ஆகியவை அரசியல் பகுத்தறிவின் பரவலான தளங்களாக மாறுகின்றன. முறையான அறிவிப்புகளின் வழியாக அல்லாமல், துண்டுகளின் வழியாக அறிவு படிப்படியாகப் பரவுகிறது. அதிகாரபூர்வ அரசியல் பேச்சு கட்டுப்படுத்தப்பட்டதாகத் தோன்றும் இடங்களிலும்கூட அரசியல் வாழ்க்கை தொடர்கிறது என்பதை இந்த மறைக்கப்பட்ட பொதுவெளிகள் வெளிப்படுத்துகின்றன.

தகவல் தொடர்பு நெறிமுறைகள் தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்படுவதையும் இக்கட்டுரை வலியுறுத்தியுள்ளது. குழந்தைகள் போரின் நினைவுகளை மட்டுமல்ல, போரைப் பற்றிப் பேசுவதற்கான இலக்கணங்களையும் மரபுரிமையாகப் பெறுகிறார்கள். கேள்விகளை எப்போது ஒத்திவைக்க வேண்டும், குரல்கள் எப்போது மென்மையாகின்றன, உரையாடல்களைத் தொடர்வதற்கு முன்பு பெரியவர்கள் ஏன் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கிறார்கள், சில சொற்கள் எவ்வாறு உணர்வுபூர்வமான பொறுப்புகளைச் சுமக்கின்றன என்பதையும் அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள். எனவே, அரசியல் மொழி பாடப்புத்தகங்களிலோ அல்லது பொது நிறுவனங்களிலோ நுழைவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே குடும்பங்கள் வழியாக மீண்டும் உருவாக்கப்படுகிறது. நினைவாற்றல் வரலாற்று ரீதியாக மட்டுமல்ல, மொழியியல் ரீதியாகவும் மரபுரிமையாகப் பெறப்படுகிறது.

இதேபோல், புலம்பெயர் தகவல் தொடர்புகளின் பகுப்பாய்வு, அரசியல் மொழி மாறாமல் எல்லைகளைக் கடந்து பயணிக்கிறது என்பதை நிரூபித்தது. வெவ்வேறு அரசியல் சூழல்கள் வெவ்வேறு சொற்களஞ்சியங்களை உருவாக்குகின்றன. சர்வதேச சட்ட உரையாடல், மனித உரிமைகள் மொழி, அன்றாடக் கிராமியப் பேச்சுவழக்குகள், குடும்பக் கதைகள், எண்ணிமத் தகவல் தொடர்பு ஆகியவை ஒன்றிணைந்து, நினைவுகளின் பல நாடுகடந்த இலக்கணங்களை உருவாக்குகின்றன. எனவே, போருக்குப் பிந்தைய காலம் இனி பிராந்திய ரீதியாகக் கட்டுப்படுத்தப்படவில்லை. அது இலங்கைக்குள்ளும், உலகெங்கிலும் பரவியுள்ள தமிழ்ச் சமூகங்களிடையேயும் ஒரே நேரத்தில் நிலவுகிறது. அவற்றின் மொழியியல் நடைமுறைகள் தொடர்ந்து ஒன்றையொன்று பாதிக்கின்றன.

அரச உரையாடல்களின் ஆய்வு, இறுதியாக ஆளுகை என்பதே ஆழமாக மொழிசார்ந்தது என்பதை நிரூபித்தது. அரசு, சட்டங்கள் - நிறுவனங்கள் மூலமாக மட்டுமல்லாமல், வளர்ச்சி, மறுவாழ்வு, நல்லிணக்கம், தேசியப் பாதுகாப்பு, பயனடைதல், மீள்திறன், சமூக ஒருமைப்பாடு போன்ற பிரிவுகள் மூலமாகவும் ஆட்சி செய்கிறது. ஆயினும், சாதாரண குடிமக்கள் இந்தச் சொற்களஞ்சியங்களின் செயலற்ற பெறுநர்கள் அல்ல. அவர்கள் அன்றாட ஊடாடல்கள் மூலம் அதிகாரபூர்வ மொழியை மொழிபெயர்க்கிறார்கள், மறுவிளக்கம் அளிக்கிறார்கள், மென்மையாக்குகிறார்கள், தனதாக்கிக் கொள்கிறார்கள், சில சமயங்களில் சீர்குலைக்கிறார்கள். அதிகாரத்துவ உரையாடல், குடும்பங்கள், கிராமங்கள், மத நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் சமூகங்களின் தார்மீக உலகங்களைக் கடந்த பின்னரே சமூகப் பொருளைப் பெறுகிறது.

ஒட்டுமொத்தமாக, இந்த இனவரைவியல் அவதானிப்புகள் ஒரு பரந்த கோட்பாட்டுத்

தலையீட்டிற்கு வழிவகுக்கின்றன. மானிடவியல், மொழியை அடையாளத்தின் குறியீடாகவோ அல்லது அரசியல் கருத்துகளை வெளிப்படுத்தும் ஓர் ஊடகமாகவோ அடிக்கடி கருதியுள்ளது. இக்கட்டுரை ஒரு மாறுபட்ட பகுப்பாய்வு அணுகுமுறையை முன்மொழிகிறது. நீடித்த வன்முறையிலிருந்து வெளிவரும் சமூகங்களில், மொழியே அரசியல் உயிர்வாழ்வின் ஒரு தொழில்நுட்பமாக மாறுகிறது. அது, நிச்சயமற்ற தன்மைக்கு அடிபணியாமல், அதில் வாழ மக்களுக்கு உதவுகிறது.

தீர்க்கப்படாத வரலாறுகள் இருந்தபோதிலும், அறநெறி வாழ்வு தொடர அது அனுமதிக்கிறது. வெளிப்படையான உறுதித்தன்மை பலவீனமான சகவாழ்வைப் பிளவுபடுத்தக்கூடிய இடங்களில், அது உறவுகளைப் பாதுகாக்கிறது. மிக முக்கியமாக, அரசியல் வாழ்வு என்பது பாராளுமன்றங்கள், நீதிமன்றங்கள், தேர்தல்கள், போராட்டங்கள் அல்லது அதிகாரபூர்வ நிறுவனங்களுக்குள் மட்டும் அடங்கியிருக்கவில்லை என்பதை இது நிரூபிக்கிறது. அது சமையலறைகள், பேருந்துகள், தேநீர்க் கடைகள், வகுப்பறைகள், தேவாலயங்கள், இறுதிச் சடங்கு இல்லங்கள், வாட்ஸ்அப் உரையாடல்கள், கிசுகிசுக்கப்படும் நகைச்சுவைகள், பகிரப்படும் மௌனங்கள் மற்றும் முடிக்கப்படாத வாக்கியங்களுக்குள்ளும் குடிகொண்டிருக்கிறது.

பேச்சும் மௌனமும் ஒன்றுக்கொன்று எதிரானவை என்ற அனுமானத்திற்கு சவால் விடுப்பதன் மூலம், இந்த வாதம் மொழியியல் மானிடவியல், அரசியல் மானிடவியல், பின்கொலனித்துவக் கோட்பாடு ஆகியவற்றில் உள்ள பரந்த விவாதங்களுக்குப் பங்களிக்கிறது. மாறாக, அவை பரந்த தகவல் தொடர்புத் தொகுப்புகளுக்குள் அமைந்த, பரஸ்பரம் உருவாக்கும் நடைமுறைகளாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும். பேச்சின் மூலம் மௌனம் பொருள் பெறுகிறது; மௌனத்தின் மூலம் பேச்சு பொருள் பெறுகிறது. குறியீட்டு மாற்றம், உருவகம், வதந்தி, நயமொழி, மொழிபெயர்ப்பு, உத்திசார்ந்த தெளிவின்மை ஆகியவை ஒரே தகவல் தொடர்புச் சூழலியலின் பகுதியாக அமைகின்றன.

போருக்குப் பிந்தைய சமூகங்களில் மானிடவியல் களஆய்வு என்பது வெறும் கதைகளைச் சேகரிப்பதை விட மேலானது. அது, இடைநிறுத்தங்கள், தயக்கங்கள், தலைப்பு மாற்றங்கள், மொழிமாற்றங்கள், சிரிப்பு, பார்வைகள், உருவகங்கள் மற்றும் பதிலளிப்பவர்கள் வேண்டுமென்றே வாக்கியங்களை முடிக்காமல் விடும் தருணங்களை அடையாளம் காணக் கற்றுக்கொள்வதைக் கோருகிறது. இவை தரவுகளில் உள்ள இடைவெளிகள் அல்ல. மாறாக, இவை தரவுகளின் மிக முக்கியமான வடிவங்களில் சிலவாகும். எனவே, இனவரைவியலாளர்கள், செவிமடுக்கும் அறநெறி என்று அழைக்கப்படக்கூடிய ஒன்றை வளர்த்துக் கொள்ள வேண்டும். அது சொற்களுக்கு மட்டுமல்லாமல், சொற்கள் சாத்தியமாகவோ அல்லது சாத்தியமற்றதாகவோ மாறும் சமூக உறவுகளிலும் கவனம் செலுத்துவதாக இருக்க வேண்டும். செவிமடுத்தல் என்பது வெறும் தொழில்நுட்ப முறையாக இல்லாமல், ஒரு விளக்கமளிக்கும் பயிற்சியாக மாறுகிறது.

நிறைவாக, அரசியல் பேச்சு குறித்த ஒரு மானிடவியலை முன்மொழிவதே இக்கட்டுரையின் பிரதான பங்களிப்பாகும். அத்தகைய மானிடவியல், குரல் - மௌனம் என்ற இருமையிலிருந்து தொடங்காமல், வன்முறைக்குப் பிறகு பேசுவது என்பது எப்போதும் உறவு சார்ந்தது, வரலாற்று ரீதியாக நிலைநிறுத்தப்பட்டது, அறநெறி ரீதியாகப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது, அரசியல் ரீதியாக விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது என்ற அங்கீகாரத்திலிருந்து தொடங்குகிறது. சாதாரண மக்கள் வெறுமனே மௌனமாக இருப்பதில்லை. அவர்கள் வெறுமனே வெளிப்படையாகப் பேசுபவர்களாகவும் இருப்பதில்லை. அவர்கள் வியக்கத்தக்க திறமையுடன் பலதரப்பட்ட தகவல் தொடர்பு உலகங்களில் வாழ்கிறார்கள்; உறவுகளைப் பேணவும், கண்ணியத்தைப் பாதுகாக்கவும், நிச்சயமற்ற தன்மையைச் சமாளிக்கவும், வன்முறைக்கு அப்பாற்பட்ட எதிர்காலங்களைக் கற்பனை செய்யவும் தங்கள் மொழியைத் தொடர்ந்து சரி செய்கிறார்கள்.

எனவே, போருக்குப் பிந்தைய நிலையை, ஒரு சமூகம் தனது குரலை மீட்டெடுக்கக் காத்திருப்பதாகப் புரிந்துகொள்ளக் கூடாது. அது, பேசுதல், கேட்டல், நினைவுகூர்தல், மௌனமாக இருத்தல் ஆகியவற்றிற்கான புதிய இலக்கணங்களை ஏற்கனவே உருவாக்கிய ஒரு சமூகமாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும். இந்த இலக்கணங்கள் போருக்குப் பிந்தைய அரசியல் வாழ்க்கையை வெறுமனே விவரிப்பதில்லை. அவையே அதை உருவாக்குகின்றன.

1833 முதல் 1921 வரை நீடித்த ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றின் முதலாவது காலகட்டத்தில், தமிழர்கள் அரசியல்ரீதியில் 'இலங்கையர்' என்றும், பண்பாட்டுரீதியில் 'தமிழர்' என்றும் அடையாளம் கொண்டிருந்தனர். 1921 ஆகஸ்ட் 15 அன்று சேர்.பொன். அருணாசலம் தேசிய காங்கிரஸில் இருந்து விலகி தமிழர் மகாசபையைத் தொடங்கியதுடன், இரண்டாவது காலகட்டம் ஆரம்பமானது. இது 1949 டிசம்பரில் தந்தை செல்வா அகில இலங்கை தமிழரசுக் கட்சியைத் தொடங்கும் வரை நீடித்தது. 1949 முதல் 1968 வரை நீடித்த மூன்றாவது காலகட்டத்தில், வடக்கு – கிழக்கு தமிழர் தாயகம் என வரையறுக்கப்பட்டு, சமஷ்டிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. 1968 இல் ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்துடன் தொடங்கி, 2009 இல் ஆயுதப்போர் முடிவடையும் வரை நீடித்த நான்காவது காலகட்டத்தில், தனிநாட்டுக் கோரிக்கை முன்னெடுக்கப்பட்டது. 'ஈழத்தமிழர் அரசியல் வரலாறு' எனும் இத்தொடர், இந்த ஒவ்வொரு காலகட்டத்திலும் நிகழ்ந்த முக்கிய நகர்வுகளைத் தொகுத்து வழங்குகிறது; அதன்மூலம், இன்னும் முழுமையடையாத ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றுக்கு ஓர் அடித்தளம் அமைக்க முயற்சிக்கின்றது

1991 – 2009: ஈழப்போரின் சர்வதேசப் பரிமாணமும் ஆயுதப் போராட்டத்தின் முடிவும்

பகுதி -3

சி. அ. யோதிலிங்கம்

சி. அ. யோதிலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் சிறப்புக் கலைமாணிப்பட்டத்தையும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தினையும் இலங்கைச் சட்டக்கல்லூரியில் சட்டமாணிப் பட்டத்தினையும் பெற்றவராவார். 'இலங்கையின் அரசியல் யாப்புகள்', 'இலங்கையின் இனகுழும அரசியல்', 'சமாதான முன்னெடுப்பின் அரசியல் சவால்கள்', 'இலங்கையின் இனப்பிரச்சினையும் அரசியல் தீர்வு யோசனைகளும்', 'இலங்கையில் இனப்பிரச்சினையின் வரலாறு', 'அரசறிவியல் ஓர் அறிமுகம்', 'ஒப்பியல் அரசாங்கம்' போன்ற பல நூல்களை எழுதியுள்ள யோதிலிங்கம் பல ஆய்வுக்கட்டுரைகளைப் பத்திரிகைகளில் தொடர்ச்சியாக எழுதிவருகின்றார்.

ஆனையிறவு முற்றுகைச் சமர்

ஓயாத அலைகள் மூன்றில் நான்காவது கட்டமாக அமைந்த ஆனையிறவுச் சமரானது வன்னிப் பெருஞ்சமர்கள் எல்லாவற்றுக்கும் சிகரமாக அமைந்தது. இராணுவத்தினரின் ஆனையிறவுப் பெருந்தலத்தின் புவியியல் கட்டமைப்பு, அதன் படைவலு, ஆயுதவலு, அதன் கேந்திர முக்கியத்துவம் ஆகியவற்றை நன்கு பரிசீலனை செய்து ஒரு நுட்பமான தாக்குதல் திட்டம் வகுக்கப்பட்டது. ஆனையிறவுச் சமர் ஒரு முற்றுகைச் சமராகவே நெறிப்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கு அமைவாக ஓயாத அலைகள் மூன்றின் மூன்றாம் கட்டம் முடுக்கிவிடப்பட்டது. இத்தாக்குதல் திட்டத்தின் முதற்கட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

ஆனையிறவின் பாதுகாப்புத் தூண்களாக அதன் தென்கிழக்குப் பிராந்தியத்தில் அமைந்திருந்த படைத்தலங்களைத் தாக்கி அழித்து, அப்பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டதால் முற்றுகைத் திட்டத்தின் ஒரு முக்கிய அம்சம் நிறைவடைந்தது. அடுத்த கட்டமாக ஆனையிறவின் பலம் பொருந்திய முன்கவசக் கோட்டைகளாக அமைந்திருந்த பரந்தன், உமையாள்புரம், பிரிகேட் படைத்தலங்களைத் தாக்கியழிப்பதுதான் திட்டமாக இருந்தது. இச்சமர்முனைக்கான கட்டளைத் தளபதியாக கேணல் தீபன் நியமிக்கப்பட்டார். 1999ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16ஆம் நாள் பரந்தன் - உமையாள்புரம் சமர் வெடித்தது. பீரங்கி - மோட்டார் அணிகளின் ஆதரவுடன் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியும் மாலதி படையணியும் இணைந்த படைத்தொகுதி இந்த முனைகளில் நேராக ஏ9 வீதியூடாகவும், பக்கவாட்டாக பரந்தன் - முல்லை வீதியூடாகவும் முன்னேறின. பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகிய சமர் அடுத்த நாள் காலை வரை ஓயாது தொடர்ந்தது. இராணுவப் படையணிகளும் தமது நிலையிலிருந்து மூர்க்கமாகப் போரிட்டன.

டிசம்பர் 27ஆம் நாள் மீண்டும் சமர் வெடித்தது. புலிகளின் படையணிகள் மும்முனைகளிலிருந்தும் உமையாள்புரம், பிரிகேட் தலைமையகம் நோக்கி முன்னேறின. 2000ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆம் நாள் பிற்பகல் ஆனையிறவு இறுதிச் சமருக்கான நகர்வு ஆரம்பமானது. உயர்கடலில் இலங்கைக் கடற்படையின் கட்டளைத் தாய்க்கப்பல் வழிநடத்த, 16 'டோரா' பீரங்கிப் படகுகள் கடற்சமரில் களமிறங்கின. இராணுவத்தின் பீரங்கிச் சண்டைப் படகுகள் முன்னேறி தரையிறக்கப் படகுகளைத் தாக்கவிடாதவாறு வியூகம் அமைத்துக் கடற்புலிகளின் தாக்குதல் அணிகள் போரிட்டன. 29ஆம் நாள் அதிகாலை 3 மணிக்கு புலிகளின் படையணிகள் இருமுனைகளில் மூர்க்கமாக மோதி முன்னேறின. புலிப்படையின் வீராவேசத் தாக்குதலுக்கு முகங்கொடுக்க முடியாத எதிரிப் படைகள் பின்வாங்கிச் சிதறியோடின. செம்பியன்பற்று, மருதங்கேணிப் பகுதிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன.

இத்தாவில் பகுதியில் புலிப்படையின் பலத்தையும் சுடுகலச் சக்தியையும் மனோதிடத்தையும் கணிப்பீடு செய்து பார்க்கவே இந்த ஊடுருவல் தாக்குதல் நடத்தப்பட்டது. புலிகளின் போர்வலுவை மதிப்பீடு செய்துகொண்ட இராணுவம் பெரும் எடுப்பிலான படை நடவடிக்கைகளுக்குத் திட்டமிட்டது. விமானங்கள் குண்டு பொழிய, பீரங்கி - மோட்டார் சூட்டாதரவுடன் யுத்த தாங்கிகள், கவச வாகனங்கள் சகிதம் பெரும் எடுப்பில் மார்ச் 30ஆம் நாளன்று இராணுவம் மேற்கொண்ட தீவிரமான தாக்குதலுக்கு இம்முறையும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படை முகங்கொடுத்தது. மார்ச் 31ஆம் நாள் யாழ்ப்பாணத்திலிருந்து டாங்கிகள், கவச வாகனங்களுடன் முன்னேறிவந்த எதிரிப் படைகளை கண்டி வீதியில் வைத்து வழிமறித்தனர் சோதியா படையணிப் போராளிகள். பல மணி நேரமாக நடைபெற்ற உக்கிரமான சண்டையின் பின்பு இராணுவப் படையணிகள் பின்வாங்கின.

ஏப்ரல் 2ஆம் திகதி ஒரு புதிய தந்திரோபாய நகர்வுடன் தனது அசுர பலத்தைப் பிரயோகித்துப் புலிகளுடன் பொருதியது இராணுவம். ஆனையிறவிலிருந்து ஒரு படைத்தொகுதியும் யாழ்ப்பாணத்திலிருந்து இன்னொரு படைப்பிரிவுமாக ஒரே சமயத்தில் இத்தாவிலில் அமைந்த புலிகளின் வலயத்தை உடைக்க முயன்றன. யுத்த தாங்கிகள், கவச வாகனங்கள் சகிதம் இத்தாவில் வலயத்திற்குள் புகுந்த அரச படையணிகள் புலிப்போராளிகளின் ஒரு பகுதியைச் சுற்றிவளைத்து முற்றுகையிட முனைந்தன. எதிரியின் தந்திரோபாய நகர்வை ஊகித்தறிந்த வீரர்கள், சண்டைகளை நிகழ்த்தி அத்திட்டத்தை முறியடித்தனர்.

ஏப்ரல் 4ஆம் திகதி மீண்டும் இத்தாவிலில் புலிகளின் நிலைகள் மீது ஆக்ரோஷமான தாக்குதல் தொடர்ந்தது. கடைசி முயற்சி போன்று ஆனையிறவு படைமுகாமிலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் படையணிகளை நகர்த்தி, ஒரே நேரத்தில் இத்தாவில் மீது படையெடுப்பு நிகழ்த்தப்பட்டது. ஆனையிறவிலிருந்து முன்னேறிய பிரதான படையணியை கேணல் விதுஷாவின் தலைமையிலான மாலதி படையணியைச் சேர்ந்த போராளிகள்

எதிர்கொண்டு தாக்கினர். ஏப்ரல் 22ஆம் திகதி முற்றுகைச் சமரின் இறுதி நாளன்று ஆனையிறவின் அனைத்துப் பாதைகளையும் அடைத்து மூடி, இயக்கச்சித் தலத்தை நோக்கி புலிப்படை முன்னேறியது. 2000ஆம் ஆண்டு ஏப்ரல் 23ஆம் திகதி காலை 9 மணியளவில் ஆனையிறவு மீட்கப்பட்ட வெற்றிச் சின்னமாக புலிக்கொடி ஏற்றப்பட்டது. வரலாற்றுப் புகழீட்டிய ஆனையிறவுச் சமரின் ஒருங்கிணைப்புக் கட்டளைத் தளபதி கேணல் பானு, சமர்முனைத் தளபதிகள், போராளிகள் புடைசூழ கொடியை ஏற்றிவைத்தார்.

எவராலும் வெற்றிகொள்ள முடியாத பலம் பெற்றது என அமெரிக்க இராணுவ நிபுணர்களால் கருதப்பட்ட ஆனையிறவுக் கூட்டுப் படைத்தலம் புலிகளிடம் வீழ்ச்சியடைந்தமை விடுதலைப் போரியல் வரலாற்றில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது. ஆனையிறவில் புலிகள் ஈட்டிய வெற்றியுடன் படைவலு மேலாதிக்கத்தை இலங்கை இராணுவம் இழந்தது. இராணுவச் சமச்சீர் வலுநிலையை புலிகள் இயக்கம் பெற்றுக்கொண்டது.

நோர்வேயின் சமாதான முயற்சி

2000ஆம் ஆண்டு அக்டோபர் 31ஆம் நாள் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் நோர்வே சமாதானத் தூதுவர்களுக்கும் மத்தியிலான சந்திப்பு நிகழ்ந்தது. வன்னிப் பிராந்தியத்தின் மையத்தில் அமைந்திருந்த மல்லாவியில் நிகழ்ந்த இச்சந்திப்பில் நோர்வே அரசு சார்பில் நோர்வேயின் விசேட தூதுவர் திரு. எரிக் சூல்கைம், கொழும்புக்கான நோர்வே தூதுவர் திரு. ஜோன் வெஸ்ட்போர்க், நோர்வே வெளிவிவகார அமைச்சின் நிர்வாக அலுவலர் சிறீமதி ஜெர்ஸ்டி ரோம்ஸ்டல் ஆகியோர் கலந்து கொண்டனர். பிரபாகரனுக்கு உதவியாக கேணல் சங்கரும், அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வனும் இச்சந்திப்பில் பங்குபற்றினர்.

தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்குச் சமரசப் பேச்சுகள் மூலம் ஓர் அரசியல் தீர்வை எட்டுவதற்கு புலிகள் இயக்கம் தயாராக இருக்கிறது என நோர்வேத் தூதுவர்களிடம் பிரபாகரன் விளக்கினார். ஆனால் சந்திரிகாவின் அரசாங்கமோ இராணுவ வழிமுறையைக் கையாண்டு யுத்தத்தைத் தீவிரப்படுத்தி, தமிழர் தாயகத்தை அடிமைகொள்வதிலேயே முனைப்பாக இருக்கிறது என்பதையும் விளக்கினார். வன்னியிலிருந்து திரும்பிய நோர்வே சமரசக் குழு ஜனாதிபதி சந்திரிகாவைக் கொழும்பில் சந்தித்து பிரபாகரனின் கருத்தையும் நிலைப்பாட்டையும் தெரிவித்த போது, பேச்சுவார்த்தைக்கு முன்பாகப் போர் நெருக்கடியைத் தளர்த்தும் யோசனைக்கு அவர் சாதகமாகப் பதிலளிக்கவில்லை.

'மனிதாபிமான புரிந்துணர்வு உடன்படிக்கை' என்ற தலைப்பைக் கொண்ட இந்தத் திட்ட வரைவு ஆவணங்களின் பிரதிகளை இலங்கை அரசாங்கத்திடமும் புலிகள் இயக்கத்திடமும் நோர்வே அரசு கையளித்தது. அந்தத் திட்ட வரைவின் உள்ளடக்கங்கள்:

1. போர் உபகரணங்கள் அல்லாத பொருட்கள் வன்னிக்கு அனுப்பப்படுவதை உறுதிப்படுத்தல்: மடு ஊடான பாதை வழியாகப் பொருட்கள் தாராளமாக அனுப்பப்படுவதற்கு வழிவகை செய்வதுடன், நெடுஞ்சாலையில் - வவுனியாவுக்கு வடக்கே - புதிய பாதை ஒன்றைத் திறந்து, இரு பாதைகள் வழியாகவும் பொருட்களைத் தாமதங்களின்றி அனுமதிக்க இலங்கை அரசாங்கம் ஏற்பாடு செய்யும். போர்ப் பாவனைக்கு அல்லாத பொருட்கள் வன்னிக்கு அனுப்பப்படுவதை உறுதிப்படுத்துவதுடன், அவை சாதாரண பொது மக்களைச் சென்றடைவதையும் புலிகள் இயக்கம் மேற்பார்வை செய்யும்.

2. பொது மக்களை இலக்கு வைக்கும் தாக்குதல்களைத் தவிர்த்தல்: கொலைகள், குண்டுத் தாக்குதல்கள், நாசவேலைகள், அரசியல் குழுக்களையோ அல்லது தனிநபர்களையோ மிரட்டும் வன்முறைகள் போன்ற அனைத்துச் செயற்பாடுகளும் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் செயல்களாகக் கொள்ளப்படும்.

புரிந்துணர்வு உடன்படிக்கைத் திட்ட வரைவின் யோசனைகளைத் தாங்கள் முழு மனதோடு பரிசீலித்து வருவதாகப் புலிகள் இயக்கம் நோர்வே அரசுக்கு அறிவித்தது. ஆனால் நோர்வேயின் முயற்சிகளுக்குப் பதில் அளிப்பதைச் சந்திரிகா அரசாங்கம் தாமதப்படுத்தியது.

தீச்சுவாலைச் சமர்

புலிகளின் நான்கு மாத காலப் போர் நிறுத்தம் முடிவுக்கு வந்த சில மணி நேரங்களுக்குள்ளேயே யாழ் குடாநாட்டின் தென்முனையிலிருந்த புலிகளின் முன்னரங்கப் போர் அரண்களை நோக்கிப் பாரிய அதிரடிப் படையெடுப்பு ஒன்றை இராணுவத் துருப்புகள் தொடுத்தன. இலங்கையின் முப்படையினரும் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட போர்த் திட்டத்தோடு இந்தத் தாக்குதற் படையெடுப்பிற்காகக் குவிக்கப்பட்டிருந்தனர். ஏப்ரல் 25ஆம் திகதி அதிகாலைப் பொழுதில் இலங்கைத்

தரைப்படையின் 52, 53, 55 ஆவது சிறப்புத் தாக்குதல் பிரிவுகளைச் சேர்ந்த 12,000 படையினர் கிளாலி - முகமாலை - நாகர்கோவில் நெடுங்கோட்டில் இருந்த புலிகளின் முன்நிலை அரண்கள் மீது பல்முனைத் தாக்குதலைச் செய்தனர். இராணுவத்தினர் மூர்க்கத்தனமாகப் பாவித்த அந்தப் பிரம்மாண்டமான சுடுகலச் சக்திக்கு 'தீச்சுவாலை' என்று பெயரிட்டனர். புலிகளுக்கு எதிராக இலங்கைப் படையினரால் எடுக்கப்பட்ட கடைசிப் படையெடுப்பு இந்தத் தீச்சுவாலை நடவடிக்கை. ஆனால் புலிகள் எதிர் தாக்குதல் நிகழ்த்தி இதனை முறியடித்தனர்.

இந்தச் சமரின் இராணுவத் தோல்விக்குப் பின்னர் தனது இராணுவ வழிமுறைக் கொள்கையைக் கைவிட வேண்டிய நிலைக்குச் சந்திரிகா அரசாங்கம் தள்ளப்பட்டது. இருந்தபோதும், நோர்வே அரசால் முன்வைக்கப்பட்டிருந்த புரிந்துணர்வு உடன்படிக்கைக்கான நகல் திட்டத்தைச் சாதகமாகப் பரிசீலிக்கவோ அல்லது புலிகளுடன் ஒரு சமரசப் பேச்சுவார்த்தையை நிபந்தனையின்றித் தொடங்கவோ அரசு விரும்பவில்லை. இத்தகைய சூழ்நிலையில்தான் மிகப் பாரதூரமான பின்விளைவுகளை ஏற்படுத்திய ஒரு பேரழிவை இலங்கை அரசாங்கம் சந்தித்தது.

கட்டுநாயக்கா விமானப் படைத்தலத் தாக்குதல்

இது 2000ஆம் ஆண்டு யூலை 24 அன்று புலிகளின் 14 தற்கொலைப் படை உறுப்பினர்களால் நடத்தப்பட்ட ஒரு தாக்குதலாகும். கட்டுநாயக்கா விமானப் படைத்தலத்திற்கு அருகிலேயே பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் அமைந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. தாக்குதல் நடத்தப்படுவதற்கு ஒரு நாள் முன்னர் சிங்கள இசையைக் கேட்டுக்கொண்டிருந்த புலிகளின் உறுப்பினர்கள் விமான நிலையத்தின் அருகிலிருந்த பூங்காவில் இருந்தனர் என்பதும், அவர்கள் மீது ஏற்பட்ட சந்தேகத்தினால் விமான நிலையத்திற்கு அருகில் வசித்தவர்கள் விமான நிலைய அதிகாரிகளுக்குத் தகவல்கள் அளித்தும் துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. பின்னர் அங்கு அதிகாரிகள் வந்து பார்க்கும்பொழுது பூங்காவில் எவரும் இருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இத்தாக்குதலை வடிவமைத்தவர்கள் வேலுப்பிள்ளை பிரபாகரன் மற்றும் பொட்டு அம்மான் ஆகியோராவர்.

1.2000 யூலை 23 திங்கட்கிழமை இரவு 8.30 மணிக்கு 14 கரும்புலி உறுப்பினர்கள் ராஜா பெர்னாண்டோ விளையாட்டு மைதானத்தில் கூடினர்.

2.2000 யூலை 23 திங்கட்கிழமை இரவு 9:45 மணியிலிருந்து 11:15 வரை அப்பகுதியில் மின்சார சேவை தடைப்பட்டது.

3.2000 யூலை 24 செவ்வாய்க்கிழமை அதிகாலை 3:30 மணியளவில் தாக்குதல் தொடங்கப்பட்டது.

4.2000 யூலை 24 செவ்வாய்க்கிழமை படைத்தலத்தில் இருந்த 21 படை விமானங்கள் மற்றும் பயணிகள் விமானங்கள் அழிக்கப்பட்டன.

5.2000 யூலை 24 செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிவரை தாக்குதல் நீடித்தது.

இலங்கை அரசின் கூற்றுப்படி, அழிக்கப்பட்ட விமானங்கள் 14 ஆகும். புலிகளின் அதிகாரபூர்வப் பத்திரிகையான ஈழநாதத்தின் கூற்றுப்படி, அழிக்கப்பட்ட விமானங்களின் எண்ணிக்கை 28 ஆகும். சார்பற்ற அறிக்கை ஒன்றில், 26 விமானங்கள் அழிக்கப்பட்டன அல்லது சேதமாக்கப்பட்டன என்று கூறப்பட்டுள்ளது.

முற்றிலுமாக அழிக்கப்பட்டவை:

- இரண்டு A340-300 பயணிகள் விமானங்கள்
- ஒரு A330-200 பயணிகள் விமானம்
- நான்கு 'கிபிர்' போர் விமானங்கள்
- மூன்று K8 பயிற்சி விமானங்கள்
- இரண்டு MIG27 'ஜெட்' போர் விமானங்கள்
- இரண்டு Bell 412 உலங்கு வானூர்திகள்
- இரண்டு VVIP 412 உலங்கு வானூர்திகள்
- இரண்டு MI17 உலங்கு வானூர்திகள்

சேதப்படுத்தப்பட்டவை:

- இரண்டு A320 பயணிகள் விமானங்கள்
- ஒரு A340 பயணிகள் விமானம்
- ஒரு Antonov போக்குவரத்து விமானம்
- ஒரு MI24 உலங்கு வானூர்தி
- ஒரு Bell 412 உலங்கு வானூர்தி
- நான்கு 'கிபிர்' போர் விமானங்கள்

இத்தாக்குதலின் மூலம் அரசுக்குச் சொந்தமான சுமார் 375 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான சொத்துகள் அழிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் புதிய ஆட்சியமைப்பு

2001ஆம் வருடம் டிசம்பர் மாதம் 5ஆம் திகதி இலங்கை நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெற்றது. தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு ஒரு சமரசத் தீர்வு காண்பது, நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவது என்பனவே அத்தேர்தல் பிரசாரத்தின் மையக் கருத்துகளாக அமைந்தன. ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி சமாதானத்தை நிலைநாட்டவும், விடுதலைப் புலிகளுடன் சமரசப் பேச்சுகளை நடத்தவும் சிங்கள மக்களிடம் ஓர் ஆணையைக் கேட்டது.

ரணில் விக்ரமசிங்க

Image Source - colombotelegraph.com

தமிழ்த் தேசிய இனச் சிக்கலுக்கு சமரசத் தீர்வு கண்டு சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான அமோக ஆணையைப் பெற்று அந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியீட்ட, ரணில் விக்ரமசிங்க நாட்டின் புதிய பிரதமராகப் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். அவ்வாறு பதவியேற்றுக் கொண்டவுடன் நோர்வேத் தூதுவர் வெஸ்ட்போர்க்கைச் சந்தித்து, விடுதலைப் புலிகளுடன் சமரசப் பேச்சுகளில் ஈடுபடுவதற்கான தனது அரசாங்கத்தின் விருப்பத்தைத் தெரிவித்தார். அனுசரணைப் பணியைத் தொடர்ந்து முன்னெடுத்து, தனது அரசுக்கும் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் பேச்சுகளை நிகழ்த்துவதற்கான முயற்சியை ஆரம்பிக்குமாறு நோர்வே அரசாங்கத்தை வேண்டிக்கொண்டார். அத்தோடு, நோர்வேத் தூதுவர் ஊடாகப் புலிகளின் தலைமைக்கு அனுப்பிவைத்த ஒரு தகவலில், "தமிழ் மக்களின் குறைகளைத் தீர்த்து, அவர்கள் நிம்மதியான வாழ்வுக்கு மீளத் திரும்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளைத் தனது அரசாங்கம் விரைந்து மேற்கொள்ளும்" என்று ரணில் தெரிவித்திருந்தார். இந்தப் புதிய அரசாங்கத்திற்கு தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் முகமாக, 2001ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் திகதி நள்ளிரவு முதல் ஒரு மாத கால யுத்த நிறுத்தம் ஒன்றை ஒருதலைப்பட்சமாக அறிவித்த புலிகள் இயக்கம், அதற்குச் சாதகமாகப் பதிலளிக்குமாறு ரணிலின் ஆட்சியிடம் கோரியது.

பரஸ்பரமாக இணங்கப்பட்ட போர் நிறுத்தம்

இருதரப்பும் இணங்கிய ஒரு போர் நிறுத்தம் உருவாக்கப்பட வேண்டிய இன்றியமையாத் தேவையை ஏற்றுக்கொண்ட புலிகளின் தலைமை, ஒழுங்கமைக்கப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்றிற்குரிய அதிகாரங்கள், கட்டுப்பாடுகள், வரையறைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்குத் தாம் தயாராக இருப்பதாக நோர்வே அரசாங்கத்திற்கு அறிவித்தது. அத்தோடு, பரஸ்பர இணக்கப்பாட்டுடன் கூடிய போர் நிறுத்தம் ஒன்றை உருவாக்கும் வேலைத்திட்டத்திற்கான தமது தரப்பின் யோசனை வரைவு ஒன்றை அரசாங்கத் தரப்பினரின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்க இருப்பதாகவும் நோர்வே தரப்பினரிடம் தெரிவித்தது. மேலும், இரு தரப்பினரும் சேர்ந்து, நோர்வேயின் துணையுடன் ஒரு பொதுப் போர் நிறுத்த ஒழுங்கமைப்பை உருவாக்கும் வரைக்கும், அனைத்துச் சுற்றிவளைப்பு, தேடுதல், கைது மற்றும் கள நடவடிக்கைகளையும் அரசாங்கம் இடைநிறுத்தி வைக்க வேண்டும் என்றும் புலிகள் யோசனை தெரிவித்தனர். அத்தோடு, தமிழ் மக்கள் எதிர்கொண்டு நின்ற அநீதியை நீக்குவதிலும் சமத்துவமின்மையை அகற்றுவதிலும் புதிய அரசாங்கம் இதயசுத்தியுடன் இருக்கின்றது என்றால், தென்னிலங்கையில் சிங்களவர்களால் இலகுவில் பெறக்கூடிய அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தையும் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களும் இலகுவில் பெறக்கூடியதை அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் புலிகள் இயக்கம் வாதிட்டது.

புலிகளின் இந்தக் கோரிக்கை பிரதம மந்திரிக்குத் தெரிவிக்கப்பட்டவுடன், பதில் நடவடிக்கை காலம் தாழ்த்தாது எடுக்கப்பட்டது. அனைத்துச் சுற்றிவளைப்புகள், தேடுதல் மற்றும் கைது நடவடிக்கைகளை அரசாங்கம் இடைநிறுத்தம் செய்கிறது என்று நோர்வே தரப்பினர் மூலமாகத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அத்தோடு, நோர்வேயின் புரிந்துணர்வு உடன்படிக்கைத் திட்ட வரைவில்

உள்ளதன்படி, 2002 ஜனவரி 15ஆம் திகதியில் இருந்து பொருளாதாரத் தடையை நீக்கி, அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் தமிழ் பகுதிகளுக்குத் தாராளமாக எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படும் எனவும் அரசு உறுதி அளித்தது.

சமாதானப் பேச்சுகளின் அங்குரார்ப்பணம்

2002 செப்டம்பர் 16ஆம் திகதி, தாய்லாந்தின் தலைநகரான பாங்காக்கிலிருந்து 50 கிலோமீட்டர் தொலைவில் உள்ள 'ஜொம் தைம்' என்ற பட்டினத்தில் அமைந்திருந்த 'அம்பாசிடர் சிற்றி' என்ற பிரபல ஐந்து நட்சத்திர விடுதியில் சமாதானப் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டன. சர்வதேச ஊடகவியலாளர்கள், இராஜதந்திரிகள், தாய்லாந்து அரச அதிகாரிகள், பாதுகாப்புப் படையினர் எனப் பெருந்திரளானோர் அங்கு திரண்டிருந்தனர். அமைதி முயற்சி ஒன்றின் மீது உலக சமூகத்திற்கு இருந்த எதிர்பார்ப்பையும் நல்லெண்ண உணர்வையும் அந்த விடுதியின் வாசலில் குழுமி நின்றோரின் ஆர்வத்திலும் ஆர்ப்பரிப்பிலும் காணக்கூடியதாக இருந்தது.

இலங்கையின் அரச தரப்புப் பிரதிநிதிகளாக பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், மிலிந்த மொறகொட, ரவூப் ஹக்கீம், பெர்னாட் குணத்திலக்க ஆகியோரும் அவர்களது உதவியாளர்களும் இருந்தனர். விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளாக அன்ரன் பாலசிங்கம், புலிகள் இயக்கத்தின் சட்ட ஆலோசகர் விசுவநாதன் உருத்திரகுமாரன், பொருளாதார அபிவிருத்தி நிபுணர் ஜே. மகேஸ்வரன், புலிகளின் பேச்சுக் குழுச் செயலாளர் அடேல் பாலசிங்கம் ஆகியோர் இருந்தனர்.

முதல் கட்டப் பேச்சு

பிரதம அனுசரணையாளரான விடார் ஹெல்கிசன் பேச்சுக் குழுவிற்குத் தலைமை வகித்தார். இரு தரப்புக் குழுத் தலைவர்களும் மற்றைய பிரதிநிதிகளும் பேச்சு மேசையில் ஒருவரை ஒருவர் முகம்கொடுத்து எதிரெதிரே அமர்ந்திருந்தனர். பேச்சுக் குழுப் பிரதிநிதிகளுக்குப் பின்புறமாக, பேச்சுக் குழுக்களுக்கு உதவியாளர்களாக நிபுணர்களும் அரச அதிகாரிகளும் வீற்றிருந்தனர். எரிக் சூல்கைம், ஜோன் வெஸ்ட்போர்க், லீசா கோல்டன், தோமஸ் ஆகியோர் பிரதம அனுசரணையாளருக்கு உதவியாக அவருக்கு அக்கம்பக்கமாக அமர்ந்திருந்தனர். அதிகாரபூர்வமாகப் பேச்சுகளை ஆரம்பித்துவைத்த ஹெல்கிசன்,

எரிக் சூல்கைம்
Image Source - island.lk

பேச்சுகளின் நடைமுறை பற்றி விளக்கினார். பேச்சுகளின் நெறிமுறை, நிகழ்ச்சி நிரல் தயாரித்தல், தீர்மானங்களைப் பதிவு செய்தல், ஊடகவியலாளர்களைக் கையாளுதல் போன்ற நடைமுறைகள் பற்றி ஹெல்கிசன் முன்வைத்த விளக்கங்களை இரு தரப்பினரும் ஏற்றுக்கொண்ட போதும், பேச்சு விதிகளும் நியமங்களும் இறுக்கமாக அமையக்கூடாது என்பதை அன்ரன் பாலசிங்கம் வலியுறுத்தினார். பேச்சுகளுக்கு வரம்புகளிட்டுக் கட்டுப்படுத்தக்கூடாது என்ற அன்ரன் பாலசிங்கத்தின் கருத்தைப் பேராசிரியர் பீரிஸ் ஆதரித்தார். பேச்சு நடைமுறைகள் இறுக்கப்படாமல் நெகிழ்வாக இருந்தால்தான் சுதந்திரமாகக் கருத்தாடுவது சாத்தியம் எனவும் பீரிஸ் கூறினார்.

பேச்சுகளின் அடிப்படையில், தமிழரின் தேசியப் பிரச்சினையை இரு பரிமாணங்களில் அணுகலாம் எனக் கூறப்பட்டது. அதனடிப்படையில், தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அவசரகால ஜீவாதார மற்றும் மனிதாபிமானப் பிரச்சினைகள் ஒருபுறமும், இனநெருக்கடிக்கு மூலமான அடிப்படைப் பிரச்சினைகள் மறுபுறமும் என இரு பரிமாணங்களைக் கொண்ட அணுகுமுறை குறித்து ஆராயப்பட்டது. உயர் பாதுகாப்பு வலயங்கள் பற்றியும் இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள் பற்றியும் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க ஒரு கூட்டுக் குழுவை நியமிக்கலாம் என அமைச்சர் மிலிந்த மொறகொட யோசனை தெரிவித்தார். ஓர் இடைக்கால நிர்வாக சபையை நிறுவும் அவசியம் பற்றியும் பாலசிங்கத்தினால் கருத்து முன்வைக்கப்பட்டது.

தமிழரின் பிரச்சினைகளைக் கையாள்வதில் இரு துருவங்களில் இருந்தும் அரசாங்கம் முட்டுக்கட்டைகளைச் சந்தித்தது. ஒன்று இலங்கையின் அரசியல் யாப்பு; மற்றையது ஜனாதிபதி ஆட்சி முறை. இவ்வாறாகத் தொடர்ந்த முதலாவது கட்டச் சுற்றுப் பேச்சில் பிரமாதமான சாதனைகள் எதுவும் எட்டப்படவில்லை என்றபோதும், பகை உணர்வு கொண்ட இருதரப்பினரும் கலந்துரையாடிப் பேசி, பழகி, புரிந்துணர்வையும் நல்லுறவையும் வளர்த்துக்கொள்ள இது களம் அமைத்துக் கொடுத்தது எனலாம்.

இரண்டாவது கட்டப் பேச்சுகள்

விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் மத்தியிலான இரண்டாம் கட்டப் பேச்சுகள் 2002 அக்டோபர் 3ஆம் திகதி முதல் நவம்பர் 3ஆம் திகதி வரை, தாய்லாந்திலுள்ள பாங்காக் நகரிலிருந்து 30 கிலோமீட்டர் தொலைவில் உள்ள பிரபல உல்லாசப் பயணிகள் விடுதியான 'றோஸ் கார்டனில்' இடம்பெற்றது. விடுதலைப் புலிகளின் சார்பில் பிரதான பேச்சுக் குழுவின் புதிய பிரதிநிதிகளாக அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், முன்னாள் மட்டுஅம்பாறை விசேட தளபதியான முரளிதரன் (கருணா) போன்றோர் இணைந்துகொண்டனர். உருத்திரகுமாரனும், கலாநிதி மகேஸ்வரனும் நிபுணத்துவ ஆலோசகர்களாகக் கலந்து கொண்டனர். அரச தரப்புப் பிரதிநிதிகள் குழுவில் மாற்றம் நிகழவில்லை. இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் ஒஸ்டின் பெர்னான்டோ, இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் சாந்தா கொட்டேகொட, இலங்கை முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த அஸீஸ் ஆகியோர் அரச தரப்பு நிபுணத்துவ ஆலோசகர்களாகக் கலந்து கொண்டனர்.

இரண்டாம் கட்டப் பேச்சுகளை ஆரம்பித்து வைத்துப் பேசிய பேராசிரியர் பீரிஸ், பேச்சுகளின் முன்னேற்றம் குறித்து சர்வதேச சமூகம் திருப்தி அடைந்திருப்பதாகவும், சமாதான முயற்சிக்கு உலக நாடுகளின் முழு ஆதரவும் அணிதிரண்டு வருவதாகவும் தெரிவித்தார். சமாதான முன்னெடுப்புகளுக்கு உலகத்தின் நல்லாதரவு இருப்பதால், சமாதான வழிமுறையை மேலும் பலப்படுத்துவது அவசியம் எனவும் கேட்டுக்கொண்டார். அன்றைய முழுநாள் விவாதங்களை அடுத்து, கிழக்கு மாகாணப் பாதுகாப்பு நிலவரம் சம்பந்தமாக இருதரப்பினரின் இணக்கப்பாட்டுடன் கீழ்க்கண்ட தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

• இலங்கை கண்காணிப்புக் குழுவின் உள்ளூர் கமிட்டிகளை மீளமைத்து விரிவாக்குதல்.

• மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் மேலதிக செயலகங்களை நிறுவுமாறு இலங்கை கண்காணிப்புக் குழுவினரிடம் கோருதல்.

• பாதுகாப்பு நிலவரத்தைச் சீர்செய்யும் நோக்குடன் விடுதலைப் புலிகளின் களத் தளபதிகளுக்கும் அரச படைத் தளபதிகளுக்கும் மத்தியில் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்துதல்.

• விடுதலைப் புலிகளின் களத் தளபதிகளுக்கும் முஸ்லிம் அரசியல் தலைவர்களுக்கும் மத்தியில் அடிக்கடி கலந்துரையாடல்களை ஒழுங்குசெய்தல்.

• உள்ளூர் தகராறுகளைத் தீர்த்து, இன ஒற்றுமையை மேம்படுத்தும் நோக்குடன் சமாதானக் குழுக்களை நியமித்தல்.

அடுத்த இரு நாட்களாக (நவம்பர் முதலாம், இரண்டாம் திகதிகளில்) நடைபெற்ற பேச்சுகளின் போது, இருதரப்புப் பேச்சுக் குழுக்களின் ஆணையின் கீழ் சில முக்கிய விவகாரங்கள் சம்பந்தமாக உப குழுக்களை அமைப்பதென முடிவெடுக்கப்பட்டது. இந்தக் குழுக்கள் தனித்துச் சுதந்திரமாக இயங்கும் எனினும், அவற்றின் செயற்பாட்டு முன்னேற்ற அறிக்கைகள் சுற்றுப் பேச்சுகளின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் கூறப்பட்டது. நீண்ட நேரமாக நீடித்த விவாதங்களின் பின்பு, மூன்று முக்கிய விவகாரங்கள் தொடர்பான மூன்று குழுக்களை நிறுவுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. அவை வருமாறு:

1. உடனடி மனிதாபிமான, புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உப குழு

2. போர் நெருக்கடியைத் தணித்து, இயல்பு நிலையை உருவாக்குவதற்கான உப குழு

3. அரசியல் விவகார உப குழு

சிரான் எனப்படும் உடனடி மனிதாபிமான, புனர்வாழ்வுத் தேவைக்கான உப குழுவானது (SubCommittee for Immediate Humanitarian and Rehabilitation Needs - SIHRN), முதற்கட்ட சுற்றுப் பேச்சில் பரிந்துரைக்கப்பட்ட கூட்டுச் செயலணிக்குப் பதிலாக அமைக்கப்பட்டது. இந்த உப குழுவின் செயற்பாடுகள் வருமாறு:

1. போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் மனிதாபிமான, புனர்வாழ்வுத் தேவைகளை இனம் கண்டு, இத்தேவைகளை நிறைவு செய்யும் வகையில் செயற்றிட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்தல். இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றம் செய்தல். மனிதாபிமான அடிப்படையில் கண்ணிவெடிகளை

அகற்றுதல் போன்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.

2.முன்னுரிமை வழங்கப்பட்ட திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வது பற்றி தீர்மானித்தல்.

3.முன்னுரிமை வழங்கப்பட்ட திட்டங்களைச் செயற்படுத்தப் பொருத்தமான நிறுவனங்களைத் தேர்வு செய்தல்.

வடக்கு - கிழக்கு புனர்நிர்மாண நிதி (North East Recon struction Fund - NERF) என்ற நிதியம் மூலமாகப் பெறப்படும் நிதியிலிருந்து உப குழுக்களின் வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படும். சர்வதேசக் கடனுதவி வழங்கும் ஒரு நிறுவனம் இந்த நிதியின் வைப்பகமாக இயங்கும்.

சிரான் அமைப்பின் நிர்வாகத் தலைமையகத்தை கிளிநொச்சியிலுள்ள அரசாங்க அதிபர் காரியாலயத்தில் செயற்படுத்துவதென இருதரப்பினரும் இணக்கம் கண்டனர். விடுதலைப் புலிகள் சார்பில் நால்வரும், அரசாங்கத்தின் சார்பில் நால்வருமாக, எட்டு பிரதிநிதிகளைக் கொண்ட நிர்வாக சபை ஒன்றை நியமிக்கவும் முடிவாகியது. இரு தரப்பினரின் பேச்சுக் குழுவில் உள்ள பிரதிநிதி ஒருவர் நிர்வாக சபையில் அந்தந்தத் தரப்புக்குத் தலைமை வகிப்பார். கீழ்க்கண்டோரை சிரான் நிர்வாக சபைக்கு நியமிக்கவெனத் தீர்மானிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் அங்கத்தவர்:

•திரு. தமிழ்ச்செல்வன் (அரசியல் துறைப் பொறுப்பாளர்)

•திரு. பூவண்ணன் (பொறுப்பாளர், தமிழீழ நிர்வாக சேவை)

•திரு. வே. பாலகுமாரன் (புலிகளின் மூத்த உறுப்பினர்)

•திரு. ஜே. மகேஸ்வரன் (பொருளாதார அபிவிருத்தி நிபுணர்)

இலங்கை அரசாங்கத்தவர்:

•திரு. பெர்னான்டோ குணத்திலக (பணிப்பாளர் நாயகம், இலங்கை சமாதானச் செயலகம்)

•திரு. எம்.டி.ஏ. பீரிஸ் (பொருளாதார சீரமைப்பு அமைச்சின் ஆலோசகர்)

•திரு. எம்.ஐ.எம். ராபீக் (திட்ட அமைச்சின் மேலதிக செயலர், ஒரு முஸ்லிம் பிரதிநிதி)

போர் நெருக்கடியைத் தணித்து, இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதற்கான உப குழு (SubCommittee on DeEscala tion and Normalization) ஒன்றையும் நிறுவ இருதரப்பினரிடையே இணக்கம் காணப்பட்டது. உயர் பாதுகாப்பு வலயம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றம் செய்தல், தனியார் சொத்துரிமைகளை மீளப்பெறுதல் போன்ற விவகாரங்களை இந்த உப குழு கையாளும். இருதரப்பைச் சேர்ந்த தளபதிகளும் உயர் அதிகாரிகளும் இந்த உப குழுவில் அங்கம் வகிப்பர். இருதரப்பினரது பேச்சுக் குழுவில் உள்ள உறுப்பினர் ஒருவர் இக்குழுவில் அவரவர் தரப்பில் அங்கத்துவம் பெறுவர்.

இந்த உப குழுவில் அங்கம் வகிக்கத் தெரிவு செய்யப்பட்ட புலிகளின் உறுப்பினர்கள் வருமாறு:

•கேணல் தீபன் (வட பிராந்தியக் கட்டளைத் தளபதி)

•கருணா (முன்னாள் மட்டுஅம்பாறை விசேட தளபதி)

•கேணல் ஜெயம் (மன்னார் மாவட்ட விசேட தளபதி)

•திரு. இளம்பரிதி (யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர்)

•கேணல் பதுமன் (முன்னாள் திருகோணமலை விசேட தளபதி)

•திரு. திலக் (முன்னாள் திருகோணமலை அரசியல்துறைப் பொறுப்பாளர்)

•திரு. கௌசல்யன் (முன்னாள் மட்டுஅம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர்)

அரச பிரதிநிதிகள்:

•திரு. ஒஸ்டின் பெர்னான்டோ (செயலர், பாதுகாப்பு அமைச்சு)

•மேஜர் ஜெனரல் கொட்டேகொட

•ரியர் அட்மிரல் எஸ்.பி. வீரசேகரா

•பிரிகேடியர் எஸ்.ஆர். பாலசூர்யா

•நிமால் லூரகே (காவல்துறை உயர் அதிகாரி)

•கப்டன் கொலிதாக குணதிலகே

•திரு. திவின்தா காலுபானு

•திரு. எம்.ஏ. மஜீத்

ஆரம்பகட்டப் பேச்சுகளின் போது தமிழர் தாயகத்தில் அமைதியையும் இயல்பு நிலையையும் நிலைநாட்டி, போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்நிலையை மேம்படுத்துவதற்கு முதன்மை அளிப்பதென இருதரப்பினரும் முடிவு செய்தனர்.

(தொடரும்)

இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பில் புதிதாக உட்புகுத்தப்பட்ட பெருந்தோட்டங்களுக்கென உருவாக்கப்பட்ட சமூகமே பெருந்தோட்டச் சமூகமாகும். தென்னிந்தியத் தமிழ்க் கிராமங்களில் இருந்து வருகைதந்த இவர்களுக்கு வழங்கப்பட்ட ஜனநாயக உரிமைகள், தொழிற்சங்கச் செயற்பாடுகள் வழியாக அரசியலில் தமது வல்லமையைக் காட்ட இவர்களுக்கு உதவின. ஆனாலும், இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் இவர்களது வாழ்வு இருள்மயமாகியது; குடியுரிமையற்ற நிலையில், இந்தியத் தமிழ்த் தொழிலாளர்களுக்கென உருவாக்கப்பட்ட தொழிற்சங்கக் கட்டளைச் சட்டத்தின்படி வாழ்வதற்கு இவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதனால், தேசியமட்டத்தில் வளர்ச்சியடைந்து வந்த கல்வி, வீடமைப்பு, சுகாதாரம், குடிநீர் போன்ற வசதிகளை பெருந்தோட்டச் சமூகம் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. மலைக்காடுகளில் உருவாக்கப்பட்ட பெருந்தோட்டங்களே இலங்கையை ஒரு நவீன பொருளாதாரத்திற்கு இட்டுச் சென்றது. ஆனால், அதற்கான உழைப்பை நல்கிய மக்கள் நாட்டில் வளர்ச்சி அடைந்துள்ள ஏனைய சமூகங்களுக்கு நிகரான வளர்ச்சியை இன்றுவரை பெறவில்லை என்பதே இதிலுள்ள முரண். இது எவ்வாறு நடந்தது? குடியுரிமை இழக்கப்பட்ட போதும், குடியகல்வின் போதும் இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கிய சவால்கள் எவை? அவர்களும் இந்த நாட்டில் சமத்துவத்துடன் வாழ்வதற்கு என்னென்ன வழிகள் உள்ளன? என்பன பற்றி அலசுவதாக 'இலங்கையில் மீள் எழுச்சி பெற்றுவரும் பெருந்தோட்டச் சமூகம்' எனும் இத்தொடர் அமைகிறது. *இலங்கையின் பெருந்தோட்டச் சமூகத்தினரை 'மலையகத் தமிழர்' என அடையாளப்படுத்துவதே அவர்களை இந்நாட்டின் இன்னொரு தனித்துவமான தேசிய இனமாக அங்கீகரிப்பதற்கான பொருத்தமான பதம் என்பது ஏற்கப்பட்டுள்ளது. ஆயினும், இக்கட்டுரையாசிரியரின் கருத்திற்கு இணங்கவும், பன்முக உரையாடலை வளர்த்தெடுக்கும் நோக்கிலும், இத்தொடரில் 'இலங்கைவாழ் இந்தியத்தமிழர்' எனும் பதம் உபயோகிக்கப்படுகின்றது.

1973 – 1976 காலப்பகுதியில் பெருந்தோட்டங்களை ஊடுருவிய பஞ்சமும் பட்டினியும்: சமூக விளைவுகளும் மீள் எழுச்சியும்

ஏ. எஸ். சந்திரபோஸ்

மலையகத்தில் வாழ்கின்ற இந்திய வம்சாவளித் தமிழரான ஏ.எஸ். சந்திரபோஸ், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சமூகக் கற்கைகள் துறையில் முப்பது வருடங்களாகக் கற்பித்தல் துறையில் கடமையாற்றிய பின்பு, 2022 ஆண்டு முதல் ஓய்வு நிலையில் இருக்கும் பேராசிரியராவார். ஆரம்பக்கல்வியை தோட்டப் பாடசாலையிலும், இரண்டாம் நிலைக்கல்வியை ஹட்டன் ஹலண்ட்ஸ் கல்லூரியிலும் பெற்றுக்கொண்ட இவர், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியியல் துறையில் B.A (Hons) மற்றும் M.A கற்கைநெறிகளைப் பூர்த்திசெய்தார். இந்திய இலங்கை கலாசார திட்டத்தின்கீழ் புலமைப்பரிசில் கிடைக்கப்பெற்று புதுடில்லி, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் பிரதேசத் திட்டமிடல் துறையில் M.Phil மற்றும் Ph.D ஆகிய கற்கைநெறிகளைப் பூர்த்திசெய்து கொண்டார். USA Wisconsin, Japan, Sweden, Geneva, German, Malaysia, Nepal, India போன்ற நாடுகளில் இடம்பெற்ற சர்வதேசக் கருத்தரங்குகளில் ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார். இவர் மேற்கொண்ட ஆய்வுகளில் பெரும்பாலானவை பெருந்தோட்ட மக்களின் வாழ்நிலையை மேம்படுத்துவதற்கான கருப்பொருளைக் கொண்டதாகவே காணப்படுகின்றன. ஏ.எஸ். சந்திரபோஸ், 'சமூக நல்லிணக்கம்', 'பட்டப்பின்படிப்பிற்கான ஆய்வு முறைகள்' போன்றவற்றையும் 'New York, Columbia University, Mailman School' இன் அனுசரணையுடன் 'Care and Protection of Children' போன்ற புதிய கற்கைநெறிகளையும் அறிமுகப்படுத்தியுள்ளார். 2018 ஆம் ஆண்டில் ஜப்பானின் 'Kyoto' மற்றும் 'Utsunomiya' பல்கலைக்கழகங்களின் அழைப்பினை ஏற்று பட்டப்பின்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு, இலங்கையின் பெருந்தோட்டங்கள் தொடர்பாக இவர் தொடர் விரிவுரைகளை நடாத்தியமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

அறிமுகம்

பஞ்சமும் பட்டினியும் போரும் ஒரு சமூகத்தைப் புரட்டிப் போடுகின்ற வல்லமைமிக்கதாகும். இதற்கு இலங்கையில் உள்ள பெருந்தோட்ட சமூகமும் விதிவிலக்கானது அல்ல. 1970ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் அப்போது ஆட்சியில் இருந்த இலங்கை அரசாங்கமானது உணவுப் பொருட்களின் இறக்குமதிக்குக் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தது. உள்நாட்டில் உணவு உற்பத்தியை மேற்கொண்டுவரும் கிராமியத் துறையானது நாட்டின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது காணப்பட்ட நிலையில், உணவுப் பொருட்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாடுகளானது நேரடியாகப் பெருந்தோட்ட சமூகத்தைப் பாதித்தன. இவர்களில் பலர் பட்டினியால் மாண்டனர். சுமார் ஐந்து ஆண்டுகள்வரை நீடித்திருந்த உணவுப் பொருட்களுக்கான தட்டுப்பாட்டின் காரணமாக, பஞ்சமும் பட்டினியும் இம்மக்களின் சாதாரண வாழ்க்கையைச் சவால்களுக்குள்ளாக்கின. இந்நிலையில், ஏன் உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அப்போதைய இலங்கை அரசாங்கம் கட்டுப்பாடுகளை விதித்தது? இதனால் இலங்கையில் உள்ள பெருந்தோட்ட மக்கள் ஏன் தனித்துவமான துயரத்திற்கு உள்ளாக்கப்பட்டனர்? அதனால் ஏற்பட்ட சமூக விளைவுகள் என்ன? அதிலிருந்து எவ்வாறு மீள் எழுச்சி பெற்றனர்? என்பன பற்றி சுருக்கமாக அணுகுவது இக்கட்டுரையின் பிரதான உள்ளடக்கமாகும்.

இக்கட்டுரைக்கான ஆதாரங்களாக 1974-76 காலப்பகுதியில் வெளிவந்த மத்திய வங்கியின் ஆண்டு அறிக்கைகளே பெருமளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதைவிட, அமர்த்தியா சென் எழுதிய நூலும் உலகத் தொழிலாளர் அமைப்பின் அறிக்கைகளும் உசாத்துணையாகக் கொள்ளப்பட்டன. மேலும், இக்காலத்தில் ஏற்பட்ட துயரங்கள் பற்றிய பதிவுகள் என்பன எளிதாகக் கிடைக்கக்கூடியதாக இல்லை. இருப்பினும், இக்கட்டுரையின் எழுத்தாளர் தாம் பார்த்து அனுபவித்த விடயங்களுடன் சிலரிடம் மேற்கொண்ட கலந்துரையாடல்களையும் பின்னணியாகக் கொண்டே இக்கட்டுரை தொகுக்கப்பட்டுள்ளது.

பஞ்சமும் பட்டினியும்

பஞ்சம் (Famines) என்பது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் அல்லது நாட்டில் நீண்டகாலமாக உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டு, பெருமளவிலான மக்கள் பட்டினி, ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் மரணங்களை எதிர்கொள்ளும் ஒரு கடுமையான மனிதாபிமான நெருக்கடி ஆகும். பஞ்சம் ஏற்படுவதற்கான முக்கிய காரணங்கள்: 1) வறட்சி, வெள்ளம் மற்றும் இயற்கை அனர்த்தங்கள், 2) போர்கள் மற்றும் உள்நாட்டு மோதல்கள், 3) பொருளாதார நெருக்கடிகள் மற்றும் விலைவாசி உயர்வு, 4) விவசாய உற்பத்திக் குறைவு, 5) அரசாங்கக் கொள்கைகளின் தோல்வி, 6) உணவுப் பொருட்களின் சமமற்ற விநியோகம். உலக வரலாற்றில் அயர்லாந்துப் பஞ்சத்தின் (Irish Famine) போது உருளைக்கிழங்குப் பயிர் நோயால் சுமார் ஒரு மில்லியன் மக்கள் உயிரிழந்தனர். இந்தியாவின் கிழக்கே வங்காள (Bengal) மாநிலத்தில் உணவுப் பற்றாக்குறை மற்றும் நிர்வாகத் தவறுகளால் சுமார் 3 மில்லியன் மக்கள் பட்டினியால் உயிரிழந்தனர். இது உலக வரலாற்றில் மிகப்பெரிய பஞ்சங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. சீனப் பெரும்பஞ்சம் (Chinese Great Famine) உலக வரலாற்றின் மிகப்பெரிய பஞ்சங்களில் ஒன்றாகும். சீனாவில் சுமார் 25 முதல் 50 மில்லியன் பேர் 1959-62 வரையான இடைப்பட்ட காலப்பகுதியில் இறந்துள்ளனர். மேலும், வறட்சி மற்றும் உள்நாட்டு மோதல்களால் ஆபிரிக்க நாடான எத்தியோப்பியாவில் (Ethiopia), 1983-85 காலப்பகுதியில் சுமார் 3 மில்லியன் பேர் இறந்துள்ளனர். இந்நாட்டில் ஒரு புறம் வறட்சியும் மறுபுறம் இடம்பெற்றுவந்த போரும் காரணமாக, 2020 ஆம் ஆண்டிலும் உணவுப் பஞ்சம் காரணமாக இலட்சக்கணக்கானோர் இறந்துள்ளதாகவும் அறியக்கிடைக்கின்றது. இதைவிட, மேற்கூறிய ஓரிரண்டு காரணங்களால் உலக நாடுகள் சிலவற்றில் ஏற்படும் உணவுப் பஞ்சத்தினால் தொடர்ந்து இறப்புகள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. இலங்கையும் இந்த அனுபவங்களில் இருந்து விலகியிருக்கவில்லை.

பஞ்சங்கள் சமூகத்தில் கடுமையான மற்றும் நீண்டகாலத் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. உடனடி விளைவுகளாகப் பரவலான பசி, ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் மரணம் ஆகியவை ஏற்படுகின்றன. குறிப்பாக, குழந்தைகள், முதியவர்கள் மற்றும் தொழிலாளர்கள் போன்ற ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர். மேலும், நோய்ப் பெருக்கமும் குறைந்துவரும் உடல்மன நலனும் பொதுச் சுகாதாரத்தைச் சீர்குலைக்கின்றன. பொருளாதார ரீதியாக, பஞ்சங்கள் வாழ்வாதாரங்களை அழிக்கின்றன, விவசாய உற்பத்தியைக் குறைக்கின்றன, வேலை இல்லாமையை அதிகரிக்கின்றன மற்றும் வறுமையை மேலும் தீவிரப்படுத்துகின்றன. சமூக ரீதியாக, மக்கள் இடப்பெயர்வு, குடும்பப் பிரிவு, குழந்தைத் தொழில், குற்றச்செயல்கள் மற்றும் சமூகக் கலக்கம் போன்ற பிரச்சினைகளை உருவாக்குகின்றன. பல சந்தர்ப்பங்களில், உணவு மற்றும் வளங்களை இன்னும்

அணுகக்கூடிய செல்வந்தர்களைவிட ஏழைகள் அதிகம் பாதிக்கப்படுவதால், பஞ்சம் சமத்துவமின்மையை மேலும் அதிகரிக்கிறது. அரசியல் ரீதியாக, பஞ்சங்கள் பொதுமக்களின் அதிருப்தி, போராட்டங்கள் மற்றும் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையின்மையை உருவாக்கலாம். வரலாற்றில் சில பஞ்சங்கள் முக்கியமான அரசியல் மற்றும் சமூக மாற்றங்களுக்கும் காரணமாகியுள்ளன. பஞ்சத்தின் உளவியல் விளைவுகள் தலைமுறைகள் கடந்தும் நீடித்து, சமூகங்களில் மன உளைச்சல் மற்றும் பாதுகாப்பின்மையை ஏற்படுத்தக்கூடும்.

Image Source - bridgemanimages.com

இவ்வாறு பஞ்சங்கள் ஏற்படுவதற்கான அறிவியல் ரீதியான விளக்கத்தை அமர்த்தியா சென் தான் எழுதிய *'Poverty and Famines'* (1981) என்ற நூலில் வெளிப்படுத்தியுள்ளார். இவரது ஆய்வானது அபிவிருத்திப் பொருளாதாரமும் பஞ்ச ஆய்வுகளும் தொடர்பான மிகுந்த செல்வாக்கு வாய்ந்த படைப்புகளில் ஒன்றாகும். இந்த நூல், பஞ்சங்கள் ஏன் ஏற்படுகின்றன என்பதை ஆராய்கிறது மற்றும் பஞ்சங்கள் பெரும்பாலும் உணவுப் பற்றாக்குறையால் மட்டுமே ஏற்படுகின்றன என்ற பாரம்பரிய நம்பிக்கையைச் சவாலுக்கு உட்படுத்துகிறது. பஞ்சம் என்பது வெறும் உணவுக் கிடைப்பின் குறைவால் மட்டும் ஏற்படுவதில்லை. அதற்குப் பதிலாக, மக்கள் தங்களுடைய 'உரிமைத்தகுதிகளை' (Entitlements) இழப்பதாலேயே பட்டினியால் பாதிக்கப்படுகிறார்கள். அதாவது, தமது தொழில், உற்பத்தி அல்லது சமூக ஆதரவு வழியாக உணவைப் பெறும் திறனை அவர்கள் இழக்கின்றனர். இந்தக் கருத்து பின்னர் 'உரிமைத்தகுதிக் கோட்பாடு' (Entitlement Theory) என்றவாறு அறியப்பட்டது. வருமானத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு வறுமையை வரையறுப்பதை அமர்த்தியா சென் விமர்சிக்கிறார். வறுமை என்பது சமத்துவமின்மை, வேலை இல்லாமை, உரிமைகள் இல்லாமை மற்றும் வளங்களின் சமமற்ற பகிர்வு ஆகியவற்றுடன் நெருக்கமாகத் தொடர்புடையது என அவர் விளக்குகிறார்.

இந்த நூலில் எடுத்துக்கூறப்படும் சுருக்கமான விளக்கம் என்னவெனில்: மக்கள் பஞ்சத்தில் இறப்பது உணவு குறைவாக இருப்பதனால் மட்டுமல்ல, உணவை அணுகுவதற்கான சமூகத் திறனை இழப்பதாலுமாகும். இந்தச் சிந்தனை, 'உணவுப் பற்றாக்குறை' என்ற பார்வையிலிருந்து 'உரிமைகள், பகிர்வு மற்றும் அணுகல்' என்பவற்றைப் பசி மற்றும் பஞ்சத்தைப் புரிந்துகொள்வதற்கான முக்கிய அம்சங்களாகக் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதை உலகிற்கு எடுத்துக்காட்டியதாகக் குறிப்பிடலாம். மொத்தத்தில், பஞ்சம் என்பது சமூகத்தின் முழு அமைப்பையும் பாதிக்கும் ஒரு பேரழிவாகும்.

சர்வதேச தொழிலாளர் அமைப்பு (International Labour Organization) உலக வேலைவாய்ப்புத் திட்டத்திற்காக எழுதிய அறிக்கையில், நான்கு முக்கியமான பஞ்சங்கள் குறித்த நிகழ்வு ஆய்வுகள் (Case Studies) வழங்கப்பட்டுள்ளன: மகா வங்காளப் பஞ்சம் (1943), எத்தியோப்பியப் பஞ்சங்கள் (1972-75), ஆபிரிக்காவின் சஹேல் பிராந்தியப் பஞ்சங்கள் (செனெகல், மாலி, அப்பர் வோல்டா, நைஜர் மற்றும் சாட் ஆகிய நாடுகளில் 1970களின் ஆரம்பகாலத்தில் ஏற்பட்டவை) மற்றும் பங்களாதேஷ் பஞ்சம் (1974). இந்த அறிக்கை, பஞ்சங்கள் உணவுக் குறைவால் மட்டுமல்லாது, உணவு பகிர்ந்தளிக்கப்படும் முறைகளில் உள்ள சமத்துவமின்மையாலும் ஏற்படுகின்றன என்பதை எடுத்துக்காட்டுகிறது. மேலும், சமூகத்தின் பல்வேறு குழுக்களுக்கிடையில் உணவு எவ்வாறு பகிரப்படுகின்றது என்பதை நிர்ணயிக்கும் காரணிகளை ஆய்வு செய்கிறது.

'சென்' வாதிப்பதாவது, உணவுத் தட்டுப்பாட்டை மட்டுமே மையமாகக் கொண்டு செய்யப்பட்ட பாரம்பரியப் பஞ்ச ஆய்வுகள் தவறானவை; எனவே, அவை கொள்கை வடிவமைப்பையும் வழிதவறச் செய்கின்றன. இதற்குப் பதிலாக, உரிமைத்தகுதி (Entitlements) என்ற மாற்று அணுகுமுறையை அவர் முன்வைக்கிறார். இந்த அணுகுமுறை, சொத்துரிமை மற்றும் பரிமாற்ற முறைகளை அடிப்படையாகக் கொண்டது. மக்கள் உணவை வாங்குவதற்கோ அல்லது வேறு வழிகளில் அதை அணுகுவதற்கோ எவ்வாறு திறன் பெறுகின்றனர் என்பதையே இது கவனத்தில் கொள்கிறது. இதன்படி, வேலையின்மை, ஊதியக் குறைவு, உணவுப் பொருட்களின் விலை உயர்வு போன்ற காரணிகளே சில மக்களுக்குப் போதுமான உணவை அணுக முடியாத நிலைமையை உருவாக்கின

என சென் சுட்டிக்காட்டுகிறார்.

மேலும், வறுமையின் கருத்துகளையும் அதன் அளவீடுகளையும் சென் விமர்சன ரீதியாக ஆராய்கிறார். ஏழை மக்களை ஒரே குழுவாகக் கருத முடியாது; வறுமையைப் புரிந்துகொள்ள நுட்பமான மற்றும் ஆழமான பகுப்பாய்வு தேவைப்படுகிறது. வளங்களின் பகிர்வு தொடர்பான பிரச்சினைகள், வறுமையையும் பஞ்சத்தின் காரணிகளையும் புரிந்துகொள்ள மிகவும் முக்கியமானவை என சென் வலியுறுத்துகிறார். பொதுவாக, சமூகப் பொருளாதார ரீதியில் பின்தங்கிய குழுக்களே நெருக்கடிக் காலங்களில் பசியால் அதிகம் பாதிக்கப்படுகின்றன.

இந்த நூலின் முக்கிய அவதானிப்புகள் பின்வருமாறு:

• மிகக் கடுமையான சில பஞ்சங்கள், நாட்டின் மொத்த உணவுத் தயாரிப்பில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி இல்லாதபோதும் ஏற்பட்டுள்ளன. 1943ஆம் ஆண்டின் வங்காளப் பஞ்சத்தில், கோடிக்கணக்கான மக்கள் பட்டினியால் இறந்தபோதிலும், உணவுத் தயாரிப்பு 1941ஆம் ஆண்டைவிடக் குறைவாக இருக்கவில்லை.

• சில பஞ்சங்களில் மொத்த உணவுத் தட்டுப்பாடு இருந்தாலும், எந்தக் குழுக்கள் பட்டினியால் பாதிக்கப்படுகின்றன, எந்தக் குழுக்கள் உணவை அணுகுகின்றன என்பதை வேறு காரணிகளே தீர்மானிக்கின்றன. எடுத்துக்காட்டாக, விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் சிறிய நிலத்தைக் கொண்ட விவசாயிகள் போன்ற பல்வேறு தொழில் குழுக்கள் உணவை வெவ்வேறு முறைகளில் பெறுகின்றன; ஆகவே, பஞ்சம் அவர்களை வெவ்வேறு விதமாகப் பாதிக்கிறது.

இலங்கையில் பஞ்சம் 1973-76

இலங்கையில் 1973-76 காலப்பகுதியில் உணவுப் பற்றாக்குறையால் ஏற்பட்ட பஞ்சம், அதன் காரணமாக நெருக்கடிக்குள்ளான பெருந்தோட்ட மக்களின் இன்னல்கள், அதிலிருந்து அவர்கள் எவ்வாறு மீண்டெழுந்தனர் என்பதை இனிவரும் பகுதி அவதானிக்கிறது. இக்காலப்பகுதியில் இலங்கையில் ஏற்பட்ட பஞ்சம் உணவின் முழுமையான பற்றாக்குறையால் மாத்திரம் ஏற்பட்டதல்ல. உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட எண்ணெய் விலை அதிகரிப்பு, உள்ளூர் விவசாய உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி, அரசியல் - பொருளாதாரச் சூழல், காலநிலை மாற்றங்கள் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த விளைவாகவும் அது ஏற்பட்டது. இதனைப் பின்வருமாறு காணலாம். உலகளாவிய எண்ணெய் நெருக்கடி: 1973ஆம் ஆண்டில் மத்திய கிழக்கில் ஏற்பட்ட எண்ணெய் நெருக்கடி உலகளவில் பெற்றோலியத்தின் விலையைப் பெருமளவில் உயர்த்தியது. இலங்கை இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருளில் அதிகளவு சார்ந்திருந்ததால், போக்குவரத்து மற்றும் உற்பத்திச் செலவுகள் வேகமாக அதிகரித்தன. இதன் விளைவாக உணவுப் பொருட்கள் மற்றும் உரங்களை இறக்குமதி செய்வதற்கான செலவுகளும் உயர்ந்தன.

அத்துடன், உணவுத் தேவையின் பெரும்பகுதியை இறக்குமதியின் மூலம் பூர்த்தி செய்துவந்த இலங்கை, 1970களின் ஆரம்பத்தில் அரிசி, கோதுமை, சீனி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் சர்வதேச விலைகள் அதிகரித்ததால், குறைந்தளவிலிருந்த வெளிநாட்டு நாணய இருப்பைக் கொண்டு அவற்றை இறக்குமதி செய்வதில் சிரமங்களை எதிர்கொண்டது. மறுபுறம், அப்போது ஆட்சியில் இருந்த அரசாங்கம் நாட்டில் கைத்தொழில் மயமாக்கலை ஊக்குவிக்கும் நோக்கில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. இதற்காகப் பெருமளவிலான மூலப்பொருட்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதுடன், அவற்றுக்கான கொடுப்பனவுகளையும் வருடாந்தம் மேற்கொள்ள வேண்டிய நிலை காணப்பட்டது. இவ்வாறு, ஒருபுறம் எண்ணெய் விலை அதிகரிப்பு உள்ளிட்ட காரணிகளால் அத்தியாவசிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வது சவாலாக இருந்ததுடன், மறுபுறம் கைத்தொழில் துறைக்காக இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டிய இக்கட்டான நிலையும் அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. இந்நிலையில், உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யக்கூடிய உணவுப் பொருட்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தி, கைத்தொழில் அபிவிருத்திக்காக இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதன் மூலம் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டெழுவதற்கான உபாயம் ஒன்று கடைப்பிடிக்கப்பட்டது.

குறைந்த விவசாய உற்பத்தி: இறக்குமதிகளுக்கான கட்டுப்பாடுகள் காரணமாக உரங்கள் மற்றும் விவசாயத்திற்குத் தேவையான இரசாயனப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனால் விவசாய உற்பத்திக்குத் தேவையான உள்ளீடுகளின் கிடைப்பில் பற்றாக்குறை ஏற்பட்டது. இதேவேளை, இக்காலப்பகுதியில் நிலவிய தொடர்ச்சியான வறட்சி, விவசாயத்திற்குப் போதுமான அளவில் விரிவுபடுத்தப்படாத நீர்ப்பாசன வசதிகள் போன்ற காரணிகளால் கிராமிய விவசாய உற்பத்தியை எதிர்பார்த்த அளவுக்கு அதிகரிக்க முடியவில்லை. சாதகமற்ற காலநிலை காரணமாகப் பல அறுவடைகள் பாதிக்கப்பட்டன. இதன் விளைவாக, நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு நெல்

உற்பத்தியையும் அதிகரிக்க முடியவில்லை. அதுமட்டுமன்றி, அடிப்படையான உணவுப் பொருளான அரிசியையே போதுமான அளவில் உற்பத்தி செய்ய முடியாத நிலையில், உப உணவுப் பொருட்களின் உற்பத்தியும் நாட்டு மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு இருக்கவில்லை. இக்காலப்பகுதியில் இலங்கையின் தேசிய உற்பத்தி 3.0 வீத வளர்ச்சியை மட்டுமே கொண்டிருந்தது. இது 1968 மற்றும் 1970ஆம் ஆண்டுகளில் முறையே 8.4 வீதமாகவும் 4.5 வீதமாகவும் காணப்பட்டது. விவசாய உற்பத்தி பலமடங்கு வீழ்ச்சியடைந்ததையும் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. உதாரணமாக, நெல் அறுவடை செய்யும் கிராமங்களில் 1973ஆம் ஆண்டில் 73 மில்லியன் புசல் அரிசி உற்பத்தி செய்யப்பட்ட நிலையில், 1975ஆம் ஆண்டில் அதன் அளவு 55 மில்லியன் புசலாகக் குறைந்து, சுமார் 28.6 வீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. தெங்கு உற்பத்தியும் 1973-76 காலப்பகுதியில் 12 வீதம் வீழ்ச்சியடைந்தது (Ceylon Labour Gazette Annual Report: 1975-76). இவ்வாறான நிலையில்தான் நாட்டின் அத்தியாவசிய உணவுப் பொருளான அரிசிக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது.

வெளிநாட்டு நாணயப் பற்றாக்குறை: தேயிலை மற்றும் ரப்பர் போன்ற ஏற்றுமதிகளிலிருந்து இலங்கைக்குக் கிடைத்த வெளிநாட்டு வருமானம் குறைவாக இருந்தது. குறிப்பாக, 1975ஆம் ஆண்டு தேயிலை உற்பத்தி 213 மில்லியன் கிலோவாகக் காணப்பட்ட நிலையில், 1976ஆம் ஆண்டு அது 8.1 வீத வீழ்ச்சியுடன் 195 மில்லியன் கிலோவாகக் குறைந்தது. இவ்வீழ்ச்சியானது, 1959ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையின் தேயிலை உற்பத்தியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியாகவும் அவதானிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, இறக்குமதிச் செலவுகள் கடுமையாக அதிகரித்தன. இதனால், நாட்டின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான உணவு, தானியங்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்குப் போதுமான அளவு வெளிநாட்டு நாணயம் அரசாங்கத்திடம் இருக்கவில்லை.

இந்நிலையில், அரிசி மட்டுமன்றி சீனி, மாவு, பருப்பு, தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், மாசி, நெத்தலி மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களைத் தாராளமாக இறக்குமதி செய்வதற்குப் போதுமான அந்நியச் செலாவணி இல்லாததால், இப்பொருட்களை மக்களுக்குப் பங்கீட்டு முறையில் விநியோகிக்கத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கான விநியோகம், அக்காலத்தில் நாடு முழுவதும் பரவலாக வளர்ச்சியடைந்திருந்த கூட்டுறவுச் சங்கக் கடைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. இக்கடைகளில் விநியோகிக்கப்பட்ட அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருக்க வேண்டியிருந்தது. இதேவேளை, நாட்டில் கள்ளச்சந்தைகளும் உருவாகின. பொருளாதார வீழ்ச்சியினால் ஏற்பட்ட பணவீக்கம் பொதுமக்களின் கொள்வனவு சக்தியைக் குறைத்தது. உணவுப் பொருட்கள் கிடைத்தபோதிலும், அவற்றின் விலைகள் உயர்ந்த அளவுக்கு ஊதியங்கள் அதிகரிக்காததால், ஏழைக் குடும்பங்களால் போதுமான உணவை வாங்க முடியாத நிலை ஏற்பட்டது. தோட்டத் தொழிலாளர்கள், கிராமப்புற மக்களைப் போல உணவு உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு அதன்மூலம் வருமானத்தையும் கொள்வனவு சக்தியையும் பெற்றிருக்காத காரணத்தால், இந்நெருக்கடியால் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டனர். தோட்டப் பகுதிகளில் ஊட்டச்சத்துக் குறைபாடும் மரண விகிதமும் அதிகரித்திருந்ததாகப் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையை அறிந்த அரசாங்கம், மலையகத் தோட்டத் தொழிலாளர் சமூகத்திற்கும் அடிப்படை உணவுப் பாதுகாப்பை வழங்குவதில் கவனம் செலுத்தியது. இதன்படி, தோட்டத் தொழிலாளர்களுக்கும் குடும்ப அட்டையின் அடிப்படையில் அரிசி, மாவு, சீனி, பருப்பு மற்றும் பிற அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டன. இதனால் குறைந்த வருமானம் கொண்ட தோட்டத் தொழிலாளர் குடும்பங்களாலும் குறைந்த விலையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. இதன் மூலம் நாட்டின் பிற பகுதிகளைப் போலவே தோட்டப் பகுதிகளிலும் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தோட்டத் தொழிலாளர் சமூகமும் பஞ்சமும்

இவ்வாறான சூழலில், அரிசிச் சோற்றை உட்கொள்வதில் அதிகமான சிரமத்திற்கு உட்பட்டவர்கள் அதனை உற்பத்தி செய்யும் கிராமிய மக்களாக அன்றி, அதனைப் பிரதான உணவாகவும், அதுமட்டுமன்றி, அதனை உற்பத்தி செய்ய முடியாதவர்களாகவும் காணப்பட்ட பெருந்தோட்ட மக்களாவர். யாவரும் அறிந்தவாறு, தமக்குத் தேவையான உணவுப் பொருட்களைத் தாமே உற்பத்தி செய்துகொள்ள வேண்டும் என்ற வாய்ப்புகள் தோட்டங்களில் இல்லை. பெருந்தோட்டங்களில் வசிப்பவர்களுக்கு தமது குடியிருப்புடன் வீட்டுத்தோட்டம் அமைப்பதற்காக, அவர்களது வீட்டோடு ஒரு சிறிய நிலத்துண்டு வழங்கப்பட்டது. ஆனாலும், அந்த வீட்டுத் தோட்டங்களைப்

பராமரிக்கக்கூடிய நிலைமையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஓய்வு கிடைப்பதில்லை. மாறாக, அந்த வீட்டுத் தோட்டத்தை விறகுகளைச் சேமித்து வைக்கும் இடமாகவே பயன்படுத்தினர். சாதகமான சூழ்நிலையில் காணப்பட்ட சில வீட்டுத் தோட்டங்களில் வாழை மரங்கள், மரவள்ளிச் செடிகள், ஓரிரண்டு மிளகாய்ச் செடிகள் மற்றும் இயற்கையாக வளர்ந்த சவுக்கை, புளி, கத்திரிக்காய், கொய்யா, சேமன் கீரை மற்றும் பலா மரங்கள் இருந்தன. இவையாவும் தேவையான உப உணவுகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

பெருந்தோட்ட மக்களுக்கு, கிராமிய மக்களைப் போலத் தமக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்து, அதனைக் களஞ்சியப்படுத்தி நுகர்கின்ற ஒரு நிலைமை காணப்படுவதில்லை. மாறாக, பெருந்தோட்டத்தில் உள்ளவர்கள் பெருந்தோட்ட வேலையில் மட்டுமே கவனத்தைச் செலுத்த வேண்டியவர்களாக இருப்பதன் காரணமாகவும், தமக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்வதற்கான போதுமான வாய்ப்புகள் இல்லாததன் காரணமாகவும், தமது அடிப்படைத் தேவைகளை அருகில் இருக்கும் நகரங்களில் விலை கொடுத்து வாங்கி நுகர்கின்ற பழக்கமே தோட்டங்களில் காணப்படுகின்றது. ஒரு கட்டத்தில், பெரும்பாலான தோட்டங்களில் தோட்ட முகாமையானது அடிப்படை உணவுப் பொருட்களான அரிசி, மா, சீனி, பருப்பு, மாசி போன்றவற்றை மொத்த வியாபாரிகளிடமிருந்தோ அல்லது கூட்டுறவுச் சங்கக் கடைகளிலிருந்தோ பெற்று, அதனை அப்போதைய அரசாங்கம் முன்மொழிந்த நியமங்களின்படி வாராந்தம் தொழிலாளர்களுக்கு வழங்கியது. அத்தகைய சேவையைத் தோட்டங்களில் இருந்த களஞ்சியப் பொறுப்பாளர் (Store Keeper) ஊடாக நிறைவேற்றினர்.

மேற்குறிப்பிட்டது போல, தோட்ட முகாமையினர் அரசாங்கத்தின் நியமங்களின்படி தொழிலாளர்களுக்கு வாராந்த அடிப்படையில் உணவுப் பொருட்களைப் பங்கிட்டு வழங்கியபோதிலும், இந்த உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதில் ஏற்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக, அதனைப் பங்கிட்டு வழங்குவதிலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. ‘வெள்ளைக் கோதுமை’ மாவு இறக்குமதி செய்யப்பட்டு, களஞ்சியப் பொறுப்பாளர் ஊடாகப் பங்கீட்டு முறையில் வழங்கப்பட்ட போது, இலகுவாகக் கிடைக்கப்பெற்ற அந்த மாவில் இருந்து தோட்டத் தொழிலாளர் ரொட்டியைத் தயாரிக்கப் பழகிக்கொண்டனர். மிக இலகுவாகவும் மிகக் குறுகிய நேரத்திலும் தயாரிக்கக்கூடிய வெள்ளை மாவிலான ‘ரொட்டி’ நாளடைவில் அவர்களின் பிரதான உணவாகவும் மாறியது. வெள்ளைக் கோதுமை மாவினைக் கொண்டு ரொட்டி தயாரித்து, அதனை உணவாகப் பயன்படுத்தும் வழக்கம், அவர்கள் குடிபெயர்ந்து வந்த தென்னிந்தியக் கிராமங்களில் எப்போதும் இருந்ததில்லை என்பதை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும். எனினும், இந்த உணவுப் பஞ்சத்தின் போது வெள்ளைக் கோதுமையை இறக்குமதி செய்வதில் காணப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக, அதற்குப் பதிலாக ‘சோள மாவு’ இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டது. இதன்போது சீனியின் பங்கீட்டு அளவும் கணிசமாகக் குறைக்கப்பட்டது. அத்துடன், அதுவரைகாலம் வழங்கப்பட்டுவந்த பச்சைப் பயறு, துவரம் பருப்பு, கடலை, மாசி போன்றவற்றிற்கான இறக்குமதிகளுக்கும் முற்றாகத் தடை விதிக்கப்பட்டன. அதனால், இத்தகைய உப உணவுப் பொருட்கள் அன்றாடத் தேவையில் இருந்து மெதுமெதுவாக மறைந்துவிட்டதையும் அக்காலத்தில் உணர முடிந்தது. மேலும், ஒரு குடும்பத்திற்கு வாரத்திற்கு 2½ இராத்தல் அரிசி மட்டுமே வழங்கப்பட்டது. இதன் காரணமாக, தொழிலாளர்கள் போதுமான அரிசி உணவை உட்கொள்ள முடியாதவர்களாகினர்.

தோட்டத் தொழிலாளர்கள் ஒருபுறம் பங்கீட்டு முறையில் வழங்கப்பட்ட உணவு தமக்குப் போதுமானதாக இல்லாத நிலையில், மறுபுறம் அப்பொருளை அதிக விலை கொடுத்து கறுப்புச் சந்தையில் வாங்க வேண்டிய ஓர் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டனர். கறுப்புச் சந்தையில் அதிக விலை கொடுத்து வாங்குவதற்குப் போதுமான வருமானம் இல்லாத போது, தங்களிடமிருந்த பெறுமதியான பொருட்களை ஈடுவைத்து அல்லது அவற்றை விற்றுப் பணம் தேடி, பொருட்களைக் கொள்வனவு செய்வது தவிர்க்க முடியாத செயலாகிவிட்டது. இதன்போது, தாங்கள் சேமித்து வைத்திருந்த தங்க ஆபரணங்களை முதலில் ஈடுவைத்தனர்; அவற்றில் அதிகமானவை மீட்கப்படாமல் போயின. இதற்கு அடுத்த நிலையில், தாம் தென்னிந்தியாவிலிருந்து வரும்போது கொண்டு வந்த பித்தளைப் பாத்திரங்கள், வெண்கலப் பாத்திரங்கள் போன்றவற்றை ஒன்றில் ஈடுவைத்தனர் அல்லது விற்பனை செய்தனர். மேற்குறிப்பிட்டது போல ஈடுவைத்த பெரும்பாலான பொருட்களை மீளப்பெற முடியாமல் போய்விட்டது.

இதன்போது, தோட்ட மக்கள் பாரம்பரியமாகத் தமது பாதுகாப்பில் வைத்திருந்த பல்வேறு கலை

வடிவங்களிலானதும், பரம்பரை பரம்பரையாகப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டியதுமான, தமது திருமணத்தின் போது அணியப்பட்ட தாலி, தாலிக்கொடி, பெயர் பதிக்கப்பட்டிருந்த பித்தளைப் பாத்திரங்கள், வெண்கலத் தட்டுகள், குடம், அகலமான தாம்பாளம், சர்வபானை, வெற்றிலைத் தட்டுகள், கும்பா, செம்பு, திருகாணிச் செம்பு, வெள்ளித் தட்டுகள், கால் சிலம்பு, கைக்காப்புகள், பித்தளைப் பூட்டுகள், பல்வேறு வடிவங்களிலான பித்தளை விளக்குகள் (உதாரணமாக: சேவல், மயில்), மேலங்கியில் பதிக்கப்பட்டிருந்த பித்தளைப் பொத்தான்கள், சலங்கைகள், பட்டுச் சேலைகள், பித்தளையிலான எச்சில் பணிக்கம், இசைக்கருவிகளான ஹார்மோனியப் பெட்டி, மென்டோலின் போன்ற யாவற்றையும் ஒன்றில் அடகு வைத்து அல்லது விற்றுத் தமது அடிப்படை உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய முயன்றனர்.

மாற்றமடைந்த உணவு வகைகள்

பெருந்தோட்ட முகாமைத்துவம், தரிசு நிலங்களைத் தொழிலாளர்களுக்குப் பகிர்ந்தளித்து, சேனை முறையில் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு வாய்ப்புகளை வழங்கியது. பெரும்பாலான தோட்டத் தொழிலாளர்கள் மரவள்ளிக் கிழங்கு, வற்றாளைக் கிழங்கு, சீனிவாளைக் கிழங்கு போன்ற கிழங்கு வகைகளைப் பிரதான உணவாகவும் மாற்று உணவாகவும் இணைத்துக்கொண்டனர். குறிப்பாக, சோளம் பெரும்பாலும் ரொட்டி தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. சோள மாவுடன் தமது காணியில் விளைந்த வற்றாளை, சீனிவாளைக் கிழங்குகளைக் கலந்து ரொட்டி தயாரித்து உண்ணுகின்ற ஒரு புதிய பழக்கமும் இந்த மக்களிடம் உருவாகியது. இவை எல்லாம் தமக்குத் தேவையான அளவு இல்லாத நிலையில், அதிகமானோர் இந்தப் பட்டினியில் வாழுகின்ற சூழ்நிலை காணப்பட்டது. சந்தையில் பயறு, பருப்பு போன்ற பொருட்கள் கூட்டுறவுக் கடைகளில் பங்கீட்டு முறையில் வழங்கப்பட்ட போதும், அங்கு பழுதடைந்த பொருட்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம்தான் பங்கீட்டுப் பொருட்களை வழங்க முடியும் என்ற ஒரு கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. இதன் காரணமாக, துர்நாற்றம் வீசிய கருவாடு, பழுதடைந்த நெத்திலி, மாசி ஆகியவை இவர்களுடைய சாதாரண வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாறிவிட்டன.

பொதுவாக, பெருந்தோட்டங்களில் சோள மாவிலான ரொட்டி, கீரை வகைகள் போன்றவை மட்டுமின்றி, கிராமத்தை அண்டி வாழ்ந்த தோட்டங்களில் பலாக்காய், பலா மரத்துப் பொருட்கள், காய்கள், விதைகள் போன்ற அனைத்தையும் தமது உணவுப் பொருட்களாகப் பயன்படுத்தினர். மேலும், வெதுப்பகங்களில் தயாரிக்கப்பட்ட பாண், ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு அரை இராத்தல் என்ற அளவிலேயே வழங்கப்பட்டது. மக்கள் தினமும் வரிசையில் காத்திருந்து அதைப் பெற வேண்டியிருந்தது; பல நேரங்களில், தாமதமாகச் செல்பவர்களுக்கு பாண் கிடைப்பதே இல்லை.

பஞ்சம் நிலவிய அக்காலகட்டத்தில் ஏற்பட்ட உணவுப் பற்றாக்குறையால், பழுதடைந்த உணவைக் கூட உண்ண வேண்டிய கட்டாயத்திற்கு மக்கள் தள்ளப்பட்டனர். இதனால் பலர் நோய்வாய்ப்பட்டதுடன், அதிகமானோர் தோல் நோய்களினாலும் பாதிக்கப்பட்டனர். உணவின்றி முதியோர்கள் பலர் பரிதாபமாக உயிரிழந்தனர். மக்கள் காலங்காலமாகச் சேர்த்து வைத்த செல்வங்களை இழந்து நின்றதால், பெரும்பாலான வீடுகள் வெறிச்சோடிக் கிடந்தன. தோட்டத்தில் முன்னாட்களில் விமரிசையாக நடந்த திருவிழாக்கள், கூத்துகள், நடனங்கள் மற்றும் நாடகங்கள் அனைத்தும் மறைந்துபோக, தோட்ட மக்களின் வாழ்வு இருளில் மூழ்கியது. இதனிடையே, இந்தியக் குடியுரிமை பெற்றவர்கள் தாயகம் நோக்கி வேகமாகத் திரும்பத் தொடங்கியமை அவர்களின் வெறுமை நிலையை மேலும் மோசமாக்கியது. முன்னதாக ஒரு லயத்தில் 10 முதல் 12 குடும்பங்கள் வாழ்ந்த நிலையில், அந்நாட்களில் 5 அல்லது 6 குடும்பங்கள் மட்டுமே வாழும் சூழல் ஏற்பட்டது. தொழிலாளர்களின் இந்த இடப்பெயர்வு காரணமாகத் தோட்டங்களில் வேலை செய்வதற்கான ஆட்களின் எண்ணிக்கையிலும் பற்றாக்குறை ஏற்பட்டது (Sinnathamby: 1984). ஒருவகையில், இப்பஞ்சம் மலையக மக்களின் இயல்பான வாழ்வியலை அடியோடு ஸ்தம்பிக்கச் செய்துவிட்டது.

மீள் எழுச்சி

இக்கட்டான இந்த இருண்ட காலம் சில ஆண்டுகள் மட்டுமே நீடித்தது. 1977இல் ஆட்சிக்கு வந்த புதிய அரசு திறந்த பொருளாதாரக் கொள்கையுடன், தோட்டங்களை JEDB மற்றும் SLSPC (Janatha Estate Development Board/ Sri Lanka State Plantation Corporation) போன்ற அரசு கூட்டுத் தாபனங்களின் கீழ் கொண்டு வந்தது. தோட்டங்களில் செய்யப்பட்ட புதிய முதலீடுகளும், கிராமிய அபிவிருத்தித் திட்டங்களும் மலையக மக்களின் வாழ்க்கையில் புதிய விடியலை ஏற்படுத்தின.

குறிப்பாக, தோட்டங்களில் நிலவி வந்த குழந்தைகள் மரணம் மற்றும் கர்ப்பிணிகளின் ஆரோக்கியம்

குறித்துக் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. பஞ்ச காலத்தில் 1000 குழந்தைகளுக்கு 39 ஆக இருந்த சிசு மரண விகிதம், அரசு எடுத்த தாய் சேய் நல நடவடிக்கைகளால் 1980களில் 28 ஆகக் குறைந்தது. 1973இல் கர்ப்பிணித் தாய்மார்களில் 90 சதவீதம் பேர் இரத்த சோகையினால் பாதிக்கப்பட்டிருந்த நிலை படிப்படியாக மாறத் தொடங்கியது (SLSPC சுகாதார அறிக்கை, 1984). குடும்பக் கட்டுப்பாட்டை வலியுறுத்தி, இரண்டு குழந்தைகள் உள்ள இளம் தம்பதியருக்கு அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டன. தோட்டங்கள்தோறும் நலன்புரி அதிகாரிகள் நியமிக்கப்பட்டுத் தொழிலாளர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டன; சுகாதார ஆலோசனைகளும் அளிக்கப்பட்டன. குழந்தைகள் பராமரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுச் சிறுவர்களின் ஆரோக்கியம் பாதுகாக்கப்பட்டது.

இவ்வாறான வளர்ச்சிப் பணிகளோடு, உணவும் உடைகளும் தாராளமாகக் கிடைக்கத் தொடங்கின. புதிய வேலை வாய்ப்புகளும் மாதம் முழுவதும் தொடர்ச்சியான வேலையும் உறுதி செய்யப்பட்டன. இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக, 1984 முதல் நடைமுறைக்கு வந்த ஆண், பெண் தொழிலாளர்களுக்கான சம சம்பள முறை, மலையக மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை ஓரளவு மீட்டு எடுத்துத் தோட்டத்தில் நிலைத்து வாழ வழிவகுத்தது.

முடிவுரை

1973-76 காலப்பகுதியில் இலங்கையில் ஏற்பட்ட உணவுப் பஞ்சத்திற்கு உலக நாடுகளின் மசகு எண்ணெயில் ஏற்பட்ட விலை அதிகரிப்பும், இக்காலப்பகுதியில் ஏற்பட்ட வறட்சியும் பிரதான காரணங்களாக இருந்தன என்பதை நாம் அறிந்துகொண்டோம். இந்த நிலையில், இலங்கையில் கிராமிய மக்களை விட, பெருந்தோட்டங்களில் அத்தகைய உணவு உற்பத்தியில் ஈடுபடாத மக்கள் இக்காலப்பகுதியில் அதிகமான சிரமங்களுக்கு உட்பட்டனர். தமது உணவுத் தேவைக்காகப் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டிருந்த இம்மக்களுக்கு, தோட்ட முகாமை பல்வேறு வகையில் உதவிக்கரம் நீட்டினாலும், அவர்களது பசியைத் தீர்த்துவைக்க முடியவில்லை. தாம் இந்தியாவில் இருந்து கொண்டு வந்த, பாதுகாப்பாக வைத்திருந்த பெறுமதியான கலாச்சார அடையாளங்களை இழந்த வரலாறு என்பது மிகவும் உருக்கமானது. அதுமட்டுமன்றி, ஒரு புதிய வாழ்க்கையைச் சுதாகரிக்க வேண்டிய நிலைக்கு மலையக மக்கள், குறிப்பாகப் பெருந்தோட்ட மக்கள், தள்ளப்பட்டனர். ஆயினும், இந்தப் பஞ்ச காலம் பற்றிய பதிவுகள் எங்கும் எளிதில் கிடைக்கக்கூடியதாக இல்லை. அதனால், 1974-76 காலப்பகுதியில் வெளியான மத்திய வங்கியின் அறிக்கைகளைப் பயன்படுத்தியும், எனது சொந்த அனுபவங்களையும் மற்றவர்களுடன் கலந்துரையாடிய அனுபவங்களையும் பயன்படுத்தியும் இந்தக் கட்டுரையைத் தொகுத்துள்ளேன். இந்தச் சமூகத்தின் கலாசார அடையாளங்களை மாற்றியமைத்த நிகழ்வுகள் பற்றி ஆணித்தரமான ஓர் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு இக்கட்டுரை வரையப்பட்டுள்ளது. இளைஞர்கள், ஆய்வாளர்கள் இதனைக் கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் இது பற்றிய ஆழமான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

உசாத்துணை மூலங்கள்

Alailama, P. J. (1997). Poverty and Unemployment in Sri Lanka. Colombo: Department of National Planning, Ministry of Finance and Planning, Government of Sri Lanka.

Central Bank of Sri Lanka. (1974, 1975 & 1976). Annual Reports. Colombo: Central Bank of Sri Lanka.

Chandrabose, A. S., & Ramesh, R. (2022, March). SocioPoliti cal and Economic Status of Plantation Residents in Abandoned Estates of Sri Lanka: The Case of Central, Sabaragamuwa and Uva Provinces. Kandy: Institute of Social Development (ISD).

Chandrabose, A. S. (2020, February). Changing Scope of Plantation Industry and Emergence of Strata as a Nation. In M. Muthulingam (Ed.), 150 Years of Ceylon Tea & Communi ty. Kandy, Sri Lanka: Institute of Social Development. Institute of Social Development

Department of Census and Statistics. (1985/86). Labour Force and SocioEconomic Survey 1985/86. Colombo: Department of Census and Statistics.

Isenman, Paul. (1980). Basic Needs: The Case of Sri Lanka. World Development, 8(3), March 1980.

Romeshun, K., & Fernando, Priyanthi. (2015). Poverty in the Estate Sector: Has It Turned the Corner? Colombo: Centre for Poverty Analysis (CEPA).

Sen, Amartya. (1980). Famines. World Development, 8, 613-621.

Sen, Amartya. (1981). Poverty and Famines: An Essay on Entitlement and Deprivation. Oxford: Clarendon Press, Oxford University Press.

Sen, Amartya. (1989). Development as Capability Expansion. Journal of Development Planning, 19, 41-58.

1978 ஆம் ஆண்டு அன்றைய ஜே.ஆர். ஜயவர்த்தன தலைமையிலான ஆட்சியாளர்களால் இயற்றப்பட்டு, நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு கடந்த நாலு தசாப்தங்களுக்கு மேலாக இருந்துவரும் ‘பயங்கரவாதத் தடைச்சட்டம்: இல – 48/1979’ தமிழ் வாசகர்களுக்கு ஒன்றும் புதுமையான ஒரு சட்டம் அல்ல. அது முதலில் ஒரு தற்காலிக தேவைக்கான சட்டமாகக் கொண்டுவரப்பட்டுப் பின்னர் நிரந்தரமான ஒரு சட்டமாக (1982) மாற்றப்பட்டது. பல்வேறு உலக நாடுகள் உட்பட உள்நாட்டு மக்களாலும் எதிர்க்கப்பட்டு வந்ததன் காரணமாக அவ்வப்போது சில திருத்தங்களுக்கான முயற்சிகள் நடந்தபோதும், அதற்குப் பதிலாக ஒரு திருத்தமாக 2022 இல் தயாரிக்கப்பட்ட ‘பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்’ என்ற ஒரு ‘சட்டவரைபு – 2023’ வெளியிடப்பட்டு விவாதிக்கப்பட்டிருக்கிறதே ஒழிய, இன்னமும் பழைய பயங்கரவாதத் தடைச் சட்டமே அரசாங்கத்தால் பயன்படுத்தக்கூடிய வகையில் நடைமுறையில் உள்ளது. அதை ஓர் அரசாங்கம் தனது நடவடிக்கைகளுக்காகக் கைகளில் எடுக்கின்றதா, இல்லையா என்பதைப் பொறுத்தே அது அதிகமாகப் பேசப்படும் சூழல் உருவாகிறது. இப்போது அத்தகைய ஒரு நிலை நிலவவில்லை என்றாலும் கூட, இந்தச் சட்டம் பற்றிய, மக்களது ஜனநாயக உரிமைகளைக் கட்டுப்படுத்த அரசுக்கு அது வழங்குகின்ற அதிகாரங்கள் பற்றிய உரையாடல் அவசியமானது. அந்த அடிப்படையில், இந்த ‘இலங்கை: பயங்கரவாதத் தடைச்சட்டம் – ஒரு விமர்சனரீதியான மதிப்பீடு’ என்றநூலிலுள்ள கட்டுரைகளை நமது ‘எழுநா’ வாசகர்களுக்காக அதே பெயரில் தொடராக இங்கு தமிழில் தருகிறோம். இந்த நூல், ‘மனித உரிமைகளுக்கும் அதன் வளர்ச்சிக்குமான மையத்’தைச் (Centre for Human Rights and Development – CHRD) சேர்ந்த, பேராசிரியர் பேற்றன் பஸ்தியாம்பிள்ளை, றோகண எதிரிசிங்க, என். கந்தசாமி ஆகிய அதன் அமைப்பாளர்களால் தொகுத்து வெளியிடப்பட்ட, நாட்டின் முக்கிய ஆளுமைகளால் எழுதப்பட்ட சட்டம் பற்றிய விமர்சனபூர்வமான பத்து ஆக்கங்களைக் கொண்ட ஒரு தொகுப்பு நூலாகும். எழுநா வாசகர்களுக்கு, நமது ஏனைய நூல்கள் போலவே இதுவும் இன்னொரு முக்கிய நூலாக அமையும் என்று நம்புகிறோம்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்து செய்யவும் அரசியல் கைதிகளை விடுவிக்கவும் கோரும் ‘மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான மத்திய நிலையத்தின்’ (CHRD) மகஜர் (2002)

எஸ்.கே. விக்னேஸ்வரன்

எஸ்.கே. விக்னேஸ்வரன், எழுபதுகளின் பிற்கூறுகளில் சிறுகதை எழுத்தாளராக ஈழத்தின் எழுத்துத்துறைக்குள் அறிமுகமானவர். வடமராட்சியிலுள்ள அம்பன் கிராமத்தைச் சேர்ந்த இவர், சிறுகதைகள், கவிதைகள் எழுதுவதுடன் மட்டுமன்றி, இலக்கியம், அரசியல் சார்ந்த கட்டுரைகள் எழுதுவதிலும், ஆங்கிலத்தில் வரும் முக்கியமான எழுத்துகளைத் தமிழில் மொழிபெயர்ப்பதிலும் தொடர்ந்து ஈடுபாட்டுடன் இயங்கி வருபவர். தொண்ணூறுகளில் கொழும்பிலிருந்து வெளியான ‘சரிநிகர்’ வாரப்பத்திரிகையின் நிர்வாக ஆசிரியராகவும், பின்னர் கனடாவில் வெளியான ‘தீபம்’ வாரப்பத்திரிகையின் ஆசிரியராகவும் செயற்பட்டு வந்தவர். சரிநிகரில் தொடராக வெளிவந்த அவரது மொழிபெயர்ப்பு நூலான ‘குழந்தைகளுக்கும் உங்களுக்கும் இடையே’ என்ற பெற்றோருக்கான வழிகாட்டிநூல் இன்றுவரை பல பதிப்புகளைக் கண்டுள்ளது. இப்போது தாய்வீடு இதழில் அவரது ‘பதின்ம வயதினருக்கும் உங்களுக்கும் இடையே’ என்ற இன்னொரு மொழிபெயர்ப்பு நூல் தொடராக வெளிவந்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே சரிநிகரில் வெளிவந்து பாதியில் நின்றுபோன மொழிபெயர்ப்பு நூலான, ‘தலைமறைவு வாழ்க்கை’ என்ற, மறைந்த மதிப்புக்குரிய றெஜி சிறிவர்த்தன அவர்களது நூல், அண்மையில் வெளியாகியுள்ளது. ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் (MBA) பட்டம்பெற்ற இவர் இப்போது கனடாவில் வசித்து வருகிறார்

மேலே குறிப்பிட்டுள்ள 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டம் - PTA (தற்காலிக ஏற்பாடுகள்) குறித்தும், நாட்டில் மனித உரிமைகள், நல்லாட்சி நெறிமுறைகள் மீறப்படுதல் போன்றவை தொடர்பாக இச்சட்டம் வகிக்கும் நேரடியான பாத்திரம் குறித்தும், அவை தொடர்பாக அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் காட்டிவரும் அலட்சியம் குறித்தும், மனித உரிமை ஆர்வலர்கள், வழக்கறிஞர்கள், கலைஞர்கள், தொழிற்சங்கவாதிகள், அரசியல் கட்சித் தலைவர்கள், கல்வியாளர்கள், துறைசார் நிபுணர்கள், அக்கறையுள்ள குடிமக்கள் என்று அனைவருமே கவலைக்குள்ளாகி வருகின்றனர்.

‘பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வைக் காண்பது’ என்ற முடிவின் காரணமாக, அமைதி நிலவுகின்ற ஒரு சூழல் உருவாகியிருக்கின்ற இந்தத் தருணத்தில், இந்தச் சட்டத்தின் காரணமாக மனித உரிமைகள், நல் ஆட்சிக்கு ஏற்படக்கூடிய எதிர்மறையான விளைவுகள் போன்ற விடயங்கள் பற்றிய கவனக்குவிப்புகள் அனைத்தும் அரசாங்கத்தின் முன்னுரிமைகள் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

- பயங்கரவாதத் தடைச் சட்டம் குறித்து நாங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்துவது என்னவென்றால், அது அரசின் மேற்பார்வையிலுள்ள தடுப்பு முகாம்கள், சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை, எந்தவித விசாரணையோ அல்லது விடுதலையோ இன்றி, நீண்ட காலம் தடுத்து வைத்திருக்க அனுமதிக்கிறது என்பதுதான்.

‘பயங்கரவாதம்’ என்றால் என்ன என்பதை (சட்டம் தெளிவாக) வரையறுக்கத் தவறியுள்ளதால், பலதரப்பட்ட குற்றங்களையும் - அவற்றில் சில அற்பமானவையாக இருப்பினும் கூட - இச்சட்டம் தண்டனைக்கு உரியவையாக்குகிறது; பிற நாடுகளில் உள்ள பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டங்களுடன் ஒப்பிடுகையில் அவற்றுக்கு முரணான ஒன்றாகவே இது உள்ளது.

- இது, பெரும்பாலும் காவல்துறை அதிகாரிகளினால், கைதிகள் மீது மேற்கொள்ளப்படும் மிரட்டல்களின் மூலம் பெறப்படுகின்ற வாக்குமூலங்களை, ‘அளிக்கப்பட்ட வாக்குமூலங்கள்’ என்ற பெயரில் நம்பகமான நீதிமன்றச் சாட்சியங்களாக ஏற்றுக்கொள்ள அனுமதிக்கிறது; மேலும், இந்தச் சட்டம் வெறும் சந்தேகத்தின் அடிப்படையில் எவரையும் தடுத்து வைக்கவும், அவரது எந்தவொரு சொத்தையும் பறிமுதல் செய்யவும், எந்தவொரு இடத்தைச் சோதனையிடவும் காவல்துறையினருக்கும் இராணுவத்தினருக்கும் அனுமதி வழங்குகிறது.

- மேலும், ஒரே வாக்குமூலத்தின் அடிப்படையில், வெவ்வேறு குற்றங்களுக்காக குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் மீது பல நீதிமன்றங்களில், பல வழக்குகளைத் தொடரவும் இது வழிவகுக்கிறது. இது அரச தரப்பு வழக்கறிஞர்களது (சட்டமா அதிபரது திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள்) கோரிக்கைகளின் அடிப்படையில், வழக்கு விசாரணையின் திகதிகளை வழங்கி, விசாரணையை நீட்டிக்கவும் அனுமதிக்கிறது.

- தடுப்புக்காவலின் போது காவல்துறை, இராணுவம், சிறைச்சாலை அதிகாரிகள் போன்ற அரச அதிகாரிகளின் பாதுகாப்புக் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்ற கைதிகள், அதிகார துஷ்பிரயோகம், தாக்குதல்கள், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் போன்றவற்றுக்கு உள்ளாகும் நிலையையும் இது ஏற்படுத்துகிறது.

தங்கள் பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றுவதில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை (PTA) சார்ந்திருக்கும் காவல்துறையினரின் புலனாய்வுத் திறனையும் கூட இது பலவீனப்படுத்துகிறது.

அந்த வகையில், நாம் முன்வைக்கும் பின்வரும் கோரிக்கைகளை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தி இலங்கை அரசாங்கத்திடம் கீழ்வரும் கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கிறோம்:

அ) பயங்கரவாதத் தடைச் சட்டத்தை (தற்காலிக ஏற்பாடுகள்) உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.

ஆ) பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அனைத்து அரசியல் கைதிகளுக்கும் உடனடியாகப் பொது மன்னிப்பு அளித்து, அவர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும்.

1. வணக்கத்திற்குரிய பத்தேகம சமித்த, நாடாளுமன்ற உறுப்பினர், காலி மாவட்டம்.
2. திரு. என். ரவிராஜ், நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்ப்பாண மாவட்டம்.
3. திரு. ஏ. விநாயகமூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்ப்பாண மாவட்டம்.
4. திரு. டி. சித்தார்த்தன், நாடாளுமன்ற உறுப்பினர், வன்னி மாவட்டம்.
5. திரு. மனோ கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர், கொழும்பு மாவட்டம் (பொதுச் செயலாளர், DWC).
6. திரு. டி.டபிள்யூ. அபயகோன் PC (தலைவர், CHRD).
7. திரு. என். கந்தசாமி (செயலாளர், CHRD).
8. திரு. கே.எஸ். ரத்னவேல், சட்டத்தரணி (பொருளாளர், CHRD).
9. திரு. ஏ. ராஜகேசரி, சட்டத்தரணி (CHRD).
10. திரு. எம். ரெமாடியஸ், சட்டத்தரணி (CHRD).
11. திரு. சாம் சமரசிங்க (CHRD).
12. திரு. கே. பிரேமச்சந்திரன் (பொதுச் செயலாளர், EPRLF).
13. திரு. நல்லையா குமரகுருபரன் (பொதுச் செயலாளர், ACTC).
14. திரு. என். அருள்பிரகாசம்.
15. திரு. ராஜீ சங்கர் (EROS).
16. திரு. ஏ. ஸ்ரீஸ்கந்தராஜா (பீட்டர்) (PLOTE).
17. திரு. பி. சூரியமூர்த்தி (முன்னாள் தலைவர், திருகோணமலை நகர சபை).
18. திரு. எஸ். பி. நாதன் (மக்கள் அமைதி முன்னணி/ People's Peace Front).
19. திரு. டி.ஏ.டி.என்.இ. விமலரத்ன (மக்கள் அமைதி முன்னணி/ People's Peace Front).
20. திரு. எஸ். சிவகுருநாதன் (நிறைவேற்றுச் செயலாளர் - DDR).
21. திரு. வி.எஸ். வீரசிங்கம் (R.C.D.C).
22. திரு. சி.டி. ஜானஸ் (F.R.C).
23. திரு. எஸ்.ஆர். யோகசுந்தரம் (F.R.C).
24. திருமதி. ஜே. இயேசுதாசன் (சட்ட அதிகாரி, F.R.C).
25. திரு. சி. வத்தவெல (SEDEC).
26. திரு. வி.எஸ். கணேசலிங்கம், சட்டத்தரணி.
27. திரு. என். சிறீகாந்தா (TELO), சட்டத்தரணி.
28. திரு. கே. சண்முகலிங்கம், சட்டத்தரணி.
29. திருமதி. பிரியதர்ஷினி டயஸ், சட்டத்தரணி.
30. திரு. எஸ். கதிரவேலு.
31. திரு. ஆர். மஹ்ரூஃப்.
32. திரு. மனோகரன் ராஜசிங்கம்.
33. திருமதி. சாந்தி சச்சிதானந்தன்.
34. கலாநிதி எஸ்.பி. விக்னராஜா.

பயங்கரவாதத் தடைச் சட்டம் (PTA): ஒரு விமர்சனப் பகுப்பாய்வு

இந்த மகஜர்,

என். கந்தசாமி (செயலாளர் - CHRD),

அவர்களால் 12 ஜூன் 2002 சமர்ப்பிக்கப்படுகிறது.

கப்டன் ஹென்றி பேர்ட் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட கோப்பிச் செய்கையோடு மலையக மக்களின் வாய்மொழிப் பாடல் வரலாறு ஆரம்பிக்கின்றது. சுமார் 150 ஆண்டுகளுக்கும் மேலாக ஆங்கிலேயரின் பூரண கட்டுப்பாட்டில், அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டு, கடுமையான உழைப்புச் சுரண்டலுக்கு உட்பட்டு இம்மக்கள் வாழ்ந்தமையால், உலகில் உள்ள நாட்டுப்புறப் பாடல்களில் இருந்து இவர்களின் பாடல்கள் தனித்துவம் பெறுகின்றன. இத்தகைய இருள் சூழ்ந்த வாழ்வியலுக்குள் சிக்கிய மக்களின் வரலாறு, துன்பம், துயரம் ஆகியவற்றை இவர்களின் வாய்மொழிப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. இன்று, மலையக மக்களின் 200 வருடகாலப் பண்பாட்டைத் தீர்மானிக்கும் முக்கிய கூறுகளாகவும் இவை திகழ்கின்றன. அந்தவகையில், மலையக மக்களின் வரலாற்றையும் வாழ்வியலையும் அவர்களது வாய்மொழிப்பாடல்கள் வழியாகப் புரிந்துகொள்ளும் நோக்குடன் எழுதப்படுவதாக, ‘மலையக மக்களின் வாய்மொழிப் பாடல்கள் பேசும் வாழ்வியல்’ எனும் இத்தொடர் அமைகின்றது

மலையக வாய்மொழிப் பாடல்கள் வெளிப்படுத்தும் பெருந்தோட்டத் தொழிலாளருக்கு எதிரான ஒடுக்குமுறை வடிவங்கள்

வேலாயுதம் இராமர்

வேலாயுதம் இராமர், கொ.புனித அந்தோனியார் ஆண்கள் கல்லூரில் ஆசிரியராக பணியாற்றி வருகின்றார். கவிஞர், நாடகம், திரைப்பட நடிகர், மலையக நாட்டார் இலக்கிய செயற்பாட்டாளர் என பல்துறைசார்ந்து செயற்படுவதோடு மலையக கூத்து தொடர்பாகவும் செயற்பட்டு வருகின்றார்.

இருபதாம் நூற்றாண்டில் ஆராய்ச்சியாளர்களும் மானிடவியலாளர்களும் மக்களின் வாழ்வியல் மரபுகளைத் தீவிரமாக ஆராயத் தொடங்கினர். இந்த ஆய்வுகள், அதுவரை மேல்தட்டு மக்களின் வாழ்க்கையையும் ஒருபக்கச் சார்புடைய இலக்கியப் பதிவுகளையும் மட்டுமே மையமாகக் கொண்டு இயங்கிய மரபுசார்ந்த ஆய்வு முறையை உடைத்தெறிந்தன. இக்காலக்கட்டத்தில் வெளிவந்த வாய்மொழிப் பாடல்கள், மரபுகள், நிகழ்த்து கலைகள் ஆகியவை ஒடுக்கப்பட்ட அடிமட்ட மக்களின் உள்ளக் கிடக்கையை வெளிக்கொணர்ந்தன. மேலும், இம்மக்களின் மொழி, கலாசாரம், பழக்கவழக்கங்கள், வழிபாடு, சடங்குகள் மற்றும் கூத்துக் கலைகள் வழியாக வெளிப்பட்ட உண்மைகள், மேலோட்டமான ஆய்வுக் கருத்துகளைத் தவிடுபொடியாக்கின. இதன் காரணமாகவே, இன்று 'மக்கள் இலக்கியங்கள்' என்று போற்றப்படும் படைப்புகள் பேசும் வாழ்வியல் உண்மைகள், எந்தக் கோணத்தில் நோக்கினாலும் முற்றிலும் மறுக்க முடியாதவையாகத் திகழ்கின்றன.

மலையக இலக்கியம் என்பது, பெருந்தோட்டப் பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்கிய பிரித்தானியக் காலனித்துவ ஆட்சியாளர்களின் ஆட்சிக் காலத்தில் தோற்றம் பெற்றதாகும். அக்காலகட்டத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வியல் சூழல் மிகுந்த கொடூரமும் கடினமும் நிறைந்ததாகக் காணப்பட்டது. ஆரம்பத்தில் சமயத்தைப் பரப்புவதற்காக வந்ததாகக் கூறிய ஐரோப்பியர்கள், காலப்போக்கில் நாட்டின் அரசியலில் ஆதிக்கம் செலுத்தி, ஒட்டுமொத்தப் பொருளாதார மற்றும் சமூக அமைப்பையும் மாற்றியமைத்தனர். அவர்களின் பொருளாதார நலனுக்காக மனிதாபிமானமற்ற எந்தச் செயலையும் செய்யத் தயங்காதவர்களாகவே அவர்கள் திகழ்ந்தனர். பிரித்தானியர்களால் பயிற்சி அளித்து அனுப்பப்பட்ட அமைப்புகள் இருமுனைச் செயல்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுத்தன. ஒருபுறம் கடுமையான அடக்குமுறைகளையும் கொடூரங்களையும் கட்டவிழ்த்துவிட்ட அதேவேளை, மறுபுறம் மத நிறுவனங்களின் வழியாக 'இறை அருள்' வழங்குவதாகக் கூறி மக்களை மனரீதியாகத் தம் வசப்படுத்தும் மதபோதகர்களையும் அவர்கள் நியமித்தனர். இதுவே முழுச் சமூகத்தையும் அவர்களின் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர உதவியது. அதேவேளை, கிழக்கத்திய நாடுகளில் மிகக் கொடூரமாக அடக்கப்பட்ட மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களை மனிதர்களாக மதிக்கும் சூழலை உருவாக்கியதிலும் காலனித்துவ ஆட்சியாளர்களுக்கு ஒரு முக்கியப் பங்கு உண்டு. குறிப்பாக, இந்தியா போன்ற நாடுகளில் நிலவிய சனாதன அடக்குமுறைகளால் ஒதுக்கப்பட்ட மக்களுக்கு ஒரு புதிய வாழ்வியல் பாதையைக் அமைத்துக் கொடுத்ததில் அவர்களின் பங்களிப்பை முழுமையாக மறுத்துவிட முடியாது.

இந்தியாவில் நிலவிய வர்ணாசிரம தர்மக் கோட்பாடும், சாதிய அடக்குமுறைகளுடன் கூடிய மதக் கட்டுப்பாடுகளும் மிகத் தீவிரமான வடிவம் எடுத்திருந்தன. இதன் காரணமாக, சாதாரண மக்கள் கடுமையான சமூக அடுக்குமுறைகளுக்குள் முடக்கப்பட்டு, அதிலிருந்து தப்பியோட வழியின்றித் தவித்துக் கொண்டிருந்தனர். இது அப்பண்பாட்டின் பெரும் அவலமாக இருந்தபோதிலும், கற்றறிந்த மேதைகள்கூட இந்தச் சனாதனக் கட்டமைப்பை மீற முடியாமல் முடங்கிக் கிடந்தனர். இந்தச் சூழலைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்ட பிரித்தானிய அரசு, அடிமைப்படுத்தப்பட்டு ஒடுக்கப்பட்ட மக்களைத் தம் வசப்படுத்திக் கொண்டது; அவர்களைத் தெய்வத்தின் குழந்தைகளாகவே ஏற்றுக்கொள்வது போல் காட்டிக் கொண்டதுடன், நிலவி வந்த சனாதனச் சட்டங்களையும் செயலற்றதாக்கியது. இது பிரித்தானியர்கள் அரசியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் நீண்ட காலம் நிலைத்திருக்க உதவியது. இத்தகைய சூழலில், தமது பொருளாதாரக் கட்டமைப்பைப் பெருக்கிக் கொள்வதற்காகத் தம் கட்டுப்பாட்டில் இருந்த பெருந்திரளான மக்களை, காலனித்துவ நாடுகளுக்கு உழைக்கும் கூலிப் படைகளாக பிரித்தானியர்கள் அழைத்துச் சென்றனர். அவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டவர்களில் தமிழ்நாட்டு மக்களும் முதன்மையானவர்கள். குறிப்பாக, தமிழ்நாட்டிலிருந்து 40க்கும் மேற்பட்ட நாடுகளுக்குத் தமிழர்கள் புலம்பெயர்ந்து சென்றதாகப் பேராசிரியர் கா. அருணாச்சலம் குறிப்பிடுவது இங்குச் சுட்டிக்காட்டத்தக்கது.

இவ்வாறு புலம்பெயர்ந்து இலங்கை வந்தடைந்த இந்திய வம்சாவளித் தமிழர்களின் வாழ்வியல் சூழல் மிகவும் விசித்திரமானதாகவும் கடினமானதாகவும் அமைந்தது. கடல் மட்டத்திலிருந்து 4,000 அடிக்கும் அதிகமான உயரத்தில் இருந்த அடர்ந்த காடுகளை அழித்து, புதிய தோட்டங்களை உருவாக்க வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு ஏற்பட்டது. காடுகளை அழித்து வாழ்விடங்களை உருவாக்கி, பாதைகளை அமைத்து, பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு, இலாபம் ஈட்டக்கூடிய ஒரு புதிய பொருளாதாரக்

கட்டமைப்பை உருவாக்க அவர்கள் நீண்டகாலம் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. இத்தகைய சூழலில் கோப்பி, தேயிலை, இறப்பர், சிங்கோனா முதலான பொருளாதாரப் பயிர்ச்செய்கை வழி பிறந்த ஒரு புதிய தொழிற்களமும் வாழ்வியலும் உருவெடுத்தன. இதிலிருந்து தோன்றிய மலையக வாய்மொழிப் பாடல்களை உற்றுநோக்கும்போது, அவை உலக மக்களின் ஏனைய வாய்மொழிப் பாடல் மரபுகளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட தனித்துவத்தையும் செழுமையையும் கொண்டிருந்ததை அறிந்து கொள்ள முடிகிறது.

தென்னிந்திய விவசாயப் பெருநிலத்தில் நிலமற்ற கூலிகளாகவும் அன்றாடத் தொழிலாளர்களாகவும் வாழ்ந்த மக்களைக் கங்காணிகளும் இடைத்தரகர்களும் மிக இலகுவாகத் திரட்டி இலங்கை போன்ற நாடுகளுக்கு அனுப்பினர். மேலடுக்கு மக்களும் இவர்களுடன் இணைந்து செயல்பட்டுப் பெருமளவில் லாபம் ஈட்டினர். மேலும், மக்களை அழைத்துச் சென்ற தரகர்களே அவர்களுக்கு முதலாளிகளாகவும் உருவெடுத்தனர். இவர்களில் பெரிய கங்காணிமார்கள், வட்டிக்கடைக்காரர்கள் மற்றும் துணிக்கடை உரிமையாளர்கள் முதன்மையான இடம் வகித்தனர். இவர்களின் வருகையால் உருவான சிறு வர்த்தக நகரங்கள், இன்றைக்குப் பெருவளர்ச்சி பெற்ற நகரங்களாக மாறியுள்ளன.

எனினும், இம்மாற்றங்களின் ஊடே மக்களின் வாழ்வில் கல்வியிலும் பொருளாதாரத்திலும் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டபோதிலும், இலங்கை வரலாற்றின் இந்த 200 ஆண்டுகளில் அவர்கள் அரசியல் ரீதியாக வளருவதையோ, ஆட்சி அதிகாரத்தில் உரிமைகளைப் பெறுவதையோ, அரசியலைத் தீர்மானிக்கும் சக்தியாக உருவெடுப்பதையோ பெரும்பான்மையினம் வெற்றிகரமாகத் தடுத்துவிட்டது. இதற்கு மலையகத்திற்குள்ளேயே நிலவிய சில அககாரணிகளும் மிக முக்கிய பங்கு வகித்தன:

•தொழிற்சங்க அடிப்படையிலான போராட்டம்: அரசியல் உரிமைகளுக்கான போராட்டங்கள் அனைத்தும் வெறும் தொழிற்சங்கக் கட்டமைப்பிற்குள்ளேயே முடக்கப்பட்டதும், முதலாளித்துவச் சிந்தனை கொண்டவர்களே இவற்றுக்குத் தலைமை தாங்கியதும் முதன்மைப் பின்னடைவாக அமைந்தது.

•தாயக நினைவும் தற்காலிக மனநிலையும்: இம்மக்களிடம் காணப்பட்ட இந்தியச்

Image Source - Lankapura

சிந்தனைப்போக்கும், என்றாவது ஒருநாள் தாயகம் திரும்பிவிடலாம் என்ற மனநிலையும், அவர்களின் உரிமைப் போராட்டங்களை பலவீனப்படுத்தியதோடு எளிதில் அடக்கப்படவும் வழிகோலியது.

•சுயநல தலைமைத்துவம்: போராட்டத்தில் ஈடுபட்ட சாதாரண மக்கள் கல்வியறிவோ பொருளாதார பலமோ இல்லாதவர்களாக இருந்தனர். இதனால் போராட்டங்களின் முடிவில், மேல்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு சுயநலமிக்க சிறுபான்மைக் குழுவே அதிகாரத்தைக் கைப்பற்றி, எப்போதும் தங்கள் சொந்த நலன்களிலேயே அக்கறை காட்டியது.

•தலைமைத்துவப் போட்டி: போராட்டங்கள் அனைத்தும் மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியை நோக்காகக் கொள்ளாமல், தலைமைத்துவத்தைத் தக்கவைத்துக் கொள்வதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தியதால், மக்களின் அனைத்துத் துறை சார்ந்த முன்னேற்றமும் தடைப்பட்டது.

இத்தகைய சூழலில், கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்குப் பின்னரே அரசியல் அதிகாரமும் தொழிற்சங்க உரிமைகளும் உருவெடுத்தன. இதன் பின்னணியிலேயே மக்கள் நலன் சார்ந்த போராட்டங்கள் ஓரளவுக்கு வலிமை பெறத் தொடங்கின. இதில் கோ. நடேசய்யர் ஆற்றிய மகத்தான பங்கு குறிப்பிடத்தக்கது.

இத்தகைய அரசியல் விழிப்புணர்வுக்கு முன்னர், தொழிற்களங்களில் மக்கள் எவ்வாறு கொடூரமாக அடக்கி ஒடுக்கப்பட்டனர் என்பதை மலையக வாய்மொழிப் பாடல்கள் மிகச் சிறப்பாகப் பதிவு செய்துள்ளன. குறிப்பாக, வேலைத்தலங்களில் நடைபெற்ற அடக்குமுறைகளே இப்பாடல்களில் முதன்மைப் பொருளாக அமைந்தன. கூட்டு உழைப்பின் இயல்பான வெளிப்பாடாக உருவான

இப்பாடல்கள், தொழிலாளர்களின் உழைப்புக் களங்களிலேயே மிகவும் தீவிரமாகப் பாடப்பட்டு விழிப்புணர்வையும் ஆசுவாசத்தையும் அளித்தன.

"அடியும் பட்டோம் மிதியும் பட்டோம்
அவமான சொல்லும் பட்டோம்..
முழிபிரட்டி கங்காணியாலே
மூங்கிலாலே அடியும் பட்டோம்"

இப்பாடலின் மூலம், மலையகத் தொழிலாளர்கள் எவ்விதமான எதிர்ப்புணர்வுகளையும் வெளிப்படுத்த முடியாமல் ஒடுக்கப்பட்ட அவல நிலை புலனாகிறது. கங்காணிகள் மற்றும் தோட்ட நிர்வாகத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர்கள், கொடூரமான முறையில் அடித்து மிதிக்கப்பட்டனர். இத்தகைய அநீதிகளைத் தட்டிக்கேட்பதற்கோ, நியாயத்தைப் பெறுவதற்கோ எவ்வித வழியுமின்றித் தொழிலாளர்கள் முற்றிலுமாக முடக்கப்பட்டதை இப்பாடல் மிகத் தெளிவாக வெளிப்படுத்துகிறது.

ஏகாதிபத்தியத்தின் வளர்ச்சி என்பது, முதலாளித்துவவாதிகள் தமது சொந்த நாட்டு உழைக்கும் வர்க்கத்தைச் சுரண்டுவதோடு நின்றுவிடாமல், பிற நாடுகளின் அதிகாரத்தைக் கைப்பற்றி, அந்நாட்டு மக்களையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து சுரண்டுவதையே முதன்மை இலக்காகக் கொண்டிருந்தது. இதன் காரணமாகவே, காலனித்துவ நாடுகளில் வாழ்ந்த ஒடுக்கப்பட்ட வர்க்கத்தினர் மீது ஏவப்பட்ட அடக்குமுறைகள் பல்வேறு தன்மைகளைக் கொண்டவையாக அமைந்தன.

"கல்லாறு தோட்டத்தில
கண்டக்கையா பொல்லாதவன்
மொட்ட புடுங்குனேனு
மூணால வெரட்டி புட்டானே"

இப்பாடல், தொழிற்களத்தில் தொழிலாளர்கள் சிறிய தவறு செய்தாலோ அல்லது பணிக்குத் தாமதமாக வந்தாலோ, அன்றைய நாளுக்கான வேலையை மறுக்கும் முழு அதிகாரமும் கங்காணிமார்களிடம் இருந்ததை உணர்த்துகிறது. இவர்களுக்குத் துணையாகச் செயல்பட்ட 'கண்டக்கையா' எனும் பதவிநிலை அதிகாரியும் தொழிலாளர்களை வேலையிலிருந்து நிறுத்தும் அதிகாரத்தைப் பெற்றிருந்தார். இத்தகைய நடவடிக்கைகள் எந்தவொரு சட்டபூர்வமான விதிமுறைகளுக்கும் உட்பட்டவை அல்ல; மாறாக, அதிகாரிகளின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்பவே நிகழ்ந்தன. இதன் காரணமாக, தொழிலாளர்கள் கங்காணி மற்றும் கண்டக்கையாவின் அநியாயமான போக்கிற்குப் பணிந்து போக வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டனர். இத்தகைய கொடூரமான அடக்குமுறைகளுக்கு நடுவிலும், மலையகத் தொழிலாளி வர்க்கம் போராடித் தன்னை நிலைநிறுத்திக் கொண்டு, சமூக வளர்ச்சிக்கான பாதையை அமைத்துக் கொண்டது.

மனித சமூக வளர்ச்சியின் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஓர் ஒடுக்கப்பட்ட வர்க்கம் இருந்தே வந்துள்ளது. அவ்வர்க்கத்தின் உடல் உழைப்பே செல்வத்தை உற்பத்தி செய்தது; ஆனால் ஆளும் வர்க்கமோ அச்செல்வத்தின் மீது முழு அதிகாரத்தையும் செலுத்தியது. காலப்போக்கில் சமுதாயம் வளர வளர, ஒடுக்குவோரும் ஒடுக்கப்படுவோரும் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகினர். அந்த வரலாற்றுப் பின்னணியில், மலையக மக்களும் எவ்வித ஒடுக்குமுறைகளுக்கும் அஞ்சாமல் எதிர்த்து நின்று, படிப்படியாகத் தமது சமூக வளர்ச்சியை நோக்கி நகர்ந்து சென்றுள்ளதை நாம் தெளிவுற அறிந்துகொள்ள முடிகிறது.

"ஓடி ஓடி நெரப்புடிச்சு
ஒரு கூடைக் கொழுந்து எடுத்து
பாவி கணக்கப்புள்ளை
பத்து ராத்தை சொல்லுறானே"

இப்பாடல், மலையகத் தொழிலாளர்கள் வெயிலிலும் மழையிலும் மாடாய் உழைத்துப் பறித்து வரும் கொழுந்தின் அளவைக் கங்காணியும் கணக்கப்பிள்ளையும் சேர்ந்து முறைகேடாகக் குறைத்துக் கூறுவதைச் சுட்டிக்காட்டுகிறது. அவ்வாறு நிறையைக் குறைத்துக் கூறினாலும், தொழிலாளர்களுக்குச் சரியான எடையைக் கேட்கும் உரிமையோ அல்லது நிறுவை தராசின் அளவைப் பார்த்துச் சரிபார்க்கும் அதிகாரமோ வழங்கப்படவில்லை. ஒருவேளை, இந்த அநீதியை எதிர்த்து ஏதேனும் கருத்துத் தெரிவித்தால், அவர்கள் தோட்ட அதிகார வர்க்கத்தின் கடுமையான அடக்குமுறைக்கு ஆளாக வேண்டியிருந்தது. இத்தகைய வேதனையையும் உச்சகட்டத் துயரத்தையும் தொழிலாளர்கள் தொடர்ச்சியாக அனுபவித்து வந்தனர். குறிப்பாக, கங்காணிமார்கள் முகம் சுளிக்கும்படி எந்தவொரு தொழிலாளியும் எந்தச் சூழலிலும் நடந்துவிடக் கூடாது என்பதில்

தொழிலாளர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியிருந்தது. கங்காணிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர்கள் மிக மோசமான வன்முறைகளுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் உள்ளாக்கப்பட்டனர் என்பதை வரலாறு தெளிவாகப் பதிவு செய்துள்ளது.

“கண்டி கண்டி எங்காதிங்க

கண்டிப் பேச்சு பேசாதீங்க

கண்டியில பட்டப்பாட்ட

கண்டவங்க சொல்லுவாங்க”

இப்பாடல், தாயகத்தை விட்டு இடம்பெயர்ந்து கடுமையான உழைப்பைச் சிந்திய பின்னரும், இரக்கமின்றி ஒடுக்கப்பட்ட மலையக மக்களின் அவல வரலாற்றைப் பதிவு செய்கிறது. தொழிலாளர்களுக்கு வேலை இல்லையென்றால் பட்டினி மட்டுமே தீர்வாக இருந்தது; கங்காணிகளுக்கும் துரைமார்களுக்கும் முற்றிலுமாக விசுவாசமாக நடந்து கொண்டால் மட்டுமே கிடைக்கும் அற்பக் கூலியைக் கொண்டு உயிர்வாழ முடியும் என்ற கட்டாயச் சூழல் மரபாகவே மாறியது.

மேலும், நாள் முழுவதும் உழைத்தாலும் வெயில், கடும் மழை, புயல்காற்று போன்ற இயற்கைச் சீற்றங்களால் தேயிலைக் கொழுந்தின் வளர்ச்சி குறையும் காலங்களில், நிர்வாகம் எதிர்பார்க்கும் எடையைத் தொழிலாளர்களால் பறிக்க முடிவதில்லை. இத்தகைய சூழலில், உற்பத்தி குறைவுக்குத் தொழிலாளர்களையே பொறுப்பாக்கி, நாள் முழுதும் உழைத்தவருக்கு அரை நாள் சம்பளமே வழங்கி நிர்வாகம் துன்புறுத்திய அநீதியை இப்பாடல் வெளிப்படுத்துகிறது.

“கூடை எடுத்ததில்லை - நாங்க

கொல்லிமலை பார்த்ததில்லை

கூட எடுக்கலாச்சு - நாங்க

கொழுந்து மலை பார்க்கலாச்சி

கொழுந்து குறைந்ததின்னு

கொர பேரு போட்டாங்க”

இதில் நிலவிய மற்றொரு கொடூரம் என்னவென்றால், தமக்கு ‘அரைப்பேரு’ (அரை நாள் வேலை) மட்டுமே போடப்பட்டிருப்பதை தொழிலாளர்களால் அன்றாடக்களத்தில் அறிந்துகொள்ள முடியாது; சம்பள நாளில்தான் அந்த உண்மையே தெரியவரும். சம்பள நாளன்று கிளார்க்கர் (எழுத்தர்) பெயரை வாசித்து வேலை நாட்களைக் குறிப்பிட, துரை சம்பளத்தைக் கொடுப்பார். அப்போதுதான் தமக்கு அரைகுறை வேலைப் பதிவே செய்யப்பட்டுள்ளது என்பதைத் தொழிலாளர்கள் அறிய முடியும். இது குறித்து அவ்விடத்திலேயே கேள்வி கேட்கவோ விசாரணை செய்யவோ முடியாது. மீறித் தட்டிக்கேட்டால், புதன்கிழமை நடைபெறும் ‘அலுவலக நாளில்’ வந்து பேசுமாறு கூறிவிட்டுத் துரை சென்றுவிடுவார். அதன்பின்னர், அன்றைய நாளில் தான் வேலை செய்ததற்கான பதிவைப் பெறத் தொழிலாளி கணக்கப்பிள்ளையிடம் செல்ல வேண்டும். இதற்காகப் பல நாட்கள் கணக்கப்பிள்ளையின் வீட்டிலோ அல்லது அவரின் காரியாலயத்திலோ தொழிலாளர்கள் காத்திருக்க வேண்டிவரும். அவ்வாறு காத்திருக்கும்போது கணக்கப்பிள்ளை கூறும் காரணங்களைத் தொழிலாளி வேறுவழியின்றி ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படி ஏற்றுக்கொண்டால் மட்டுமே, தமக்கு அரை நாள் சம்பளம் மட்டுமே வழங்கப்பட்டதன் நியாயத்தைக் கணக்கப்பிள்ளை தொழிலாளிக்கு விளக்குவார். இவ்வாறுதான் இம்மக்களின் வாழ்நாள் நூறு ஆண்டுகளுக்கும் மேலாகக் கழிந்திருக்கிறது என்பது வேதனையும் வியப்பும் அளிக்கக்கூடிய செய்தியாகும். இத்தகைய அவலத்தை வெளிப்படுத்தும் வகையில் மற்றொரு பாடல் இவ்வாறு அமைகிறது.

“அருவா எடுத்ததில்ல

அட மழையை பார்த்ததில்ல

அரும்பு குறைந்ததுன்னு

அரைப் பேரு போட்டாங்க”

இப்பாடலும், மழைக்காலத்தில் தேயிலை அரும்புகள் சீராக வளராததால் தோட்ட நிர்வாகம் எதிர்பார்க்கும் கொழுந்தின் எடையைப் பறித்துக் கொடுக்க முடியாமல் போன அவலத்தைச் சுட்டிக்காட்டுகிறது. இதன் காரணமாக, நாள் முழுவதும் உழைத்த போதிலும் தொழிலாளர்களுக்கு முழுச் சம்பளம் வழங்கப்படாமல் மறுக்கப்பட்டு, அவர்கள் மீள முடியாத வறுமை நிலையிலேயே தொடர்ச்சியாக முடக்கப்பட்டனர். ஆண்கள் வேலை செய்யும் தலங்களிலும் வேறொரு வடிவில் கடுமையான அடக்குமுறைகள் ஏவப்பட்டன. அதைப் பின்வரும் பாடல் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

“எண்ணி எண்ணிக்

குழி வெட்டி

இடுப்பு ஒடுஞ்சி

நிற்கையிலே

வெட்டு வெட்டு என்கிறானே

வேலையத்த கங்காணி”

ஆண்கள் ஈடுபடும் வேலைக்களங்களும் எப்போதும் அதிமுனைப்பான கடினத்தன்மை கொண்டவையாகவே இருக்கும். கல் உடைத்தல், கட்டிடம் கட்டுதல், தேயிலை மரம் பிடுங்குதல், கவ்வாது வெட்டுதல், முள் வெட்டுதல், உரம் போடுதல், வாய்க்கால் (காண்) வெட்டுதல், பாதை அமைத்தல் மற்றும் புல் வெட்டுதல் போன்றவை அவர்கள் செய்த மிகக் கடுமையான பணிகளாகும்.

இதில், தேயிலைக் கன்றுகளை நடுப்பதற்காக வெட்டப்படும் குழிகளை அதிகாரிகள் அளவுகோல் வைத்துத் துல்லியமாக அளப்பார்கள். அதில் ஏதேனும் ஒரு குழியின் அளவில் வித்தியாசம் தெரிந்தாலும், அத்தொழிலாளி வெட்டிய அனைத்துக் குழிகளையும் மீண்டும் அளந்து, அவற்றைத் திரும்பவும் வெட்ட வைப்பார்கள்.

இத்தகைய கடினமான உழைப்பை வழங்கி உற்பத்தி செய்த தேயிலையின் மூலமே, இலங்கை உலக அளவில் ஒரு தனித்துவமான அங்கீகாரத்தைப் பெற்றது. ஆனால், அந்த அங்கீகாரத்தைப் பெற்றுத்தந்த மக்களைத் தன் நாட்டின் சொந்தக் குடிமக்களாக முழுமையாக ஏற்றுக்கொள்வதற்குக் கூட இன்றும் இந்த நாடு தயங்குகிறது. அவர்களுக்குச் சொந்தக் காணி உரிமையையோ அல்லது வீட்டு உரிமையையோ வழங்குவதற்கு இந்நாடு இன்னும் தயங்குவது ஏன் என்பதுதான் புரியாத புதிராக இருக்கிறது.

ஆண்களை வேலைக்களங்களுக்குப் பிரித்தனுப்புவதற்காகக் காலை 5:00 மணி முதல் 6:00 மணி வரை ‘பிரட்டுக்களம்’ எனப்படும் இடத்தில் வேலைப் பிரிப்பு நடைபெறும். தொழிலாளர்கள் அதற்குள் விரைந்து சென்று பங்கேற்க வேண்டும்; தாமதமாகச் சென்றால் பெண்களோடு சேர்ந்து கொழுந்து பறிக்கச் செல்ல வேண்டியிருக்கும். இதனால் காலையிலேயே பிரட்டுக்களத்திற்குச் செல்வது அனைத்து ஆண்களுக்கும் கட்டாயமாக்கப்பட்டது. அங்கு யார் யாருக்கு எந்தெந்த வேலை ஒதுக்கப்பட வேண்டும் என்பதை கங்காணி மற்றும் கணக்கப்பிள்ளையின் மனநிலையே தீர்மானிக்கும். அங்கு நடைபெற்ற அநீதிகளையும் நிகழ்வுகளையும் பின்வரும் பாடல் தெளிவாகப் பதிவு செய்திருக்கிறது.

“கொண்டை புரம் எடுத்து

கூலியாளை பிரட்டெடுத்து

துண்டுகளைக் கொடுத்து

Image Source - digitalcollections.lib.washington.edu

துரத்தினாரே கங்காணி”

இந்த நிகழ்வைப் பற்றிப் பேசுவது மிகவும் எளிதாக இருக்கலாம்; ஆனால், கடுமையான குளிரோ, கரடுமுரடான மலைப்பாங்கான பாதைகளோ எதுவாக இருந்தாலும், தொழிலாளர்கள் அந்த அதிகாலை வேளையில் கட்டாயம் பிரட்டுக்களத்திற்குச் சென்றாக வேண்டும். ஒருவேளை உடல்நலக்குறைவாலோ அல்லது பிற காரணங்களாலோ சரியான நேரத்திற்குச் செல்ல முடியாவிட்டால், அன்றைய தினம் வேலையே கிடைக்காமல் வீடு திரும்ப நேரிட்ட அவலங்களும் உண்டு. அந்த அளவிற்குத் தோட்ட நிர்வாகத்தின் அடக்குமுறைக் கட்டமைப்பு தொழிலாளர்களைத் தன் முழுப் பிடிக்குள் வைத்து ஒடுக்கியே, இந்தப் பொருளாதாரச் சாதனையைச் சாத்தியமாக்கிக் கொண்டது.

இக்கால அடக்குமுறை பற்றி, ‘இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம்’ என்ற நூலில் பி.ஏ. காதர் பின்வருமாறு பதிவு செய்கிறார்:

“தோட்டத் தொழிலாளர்களின் சர்வ வல்லமை பொருந்திய எஜமானர்களாகத் துரைமார் திகழ்ந்தனர். தோட்டத் துரைமார்களின் முரட்டுத்தனத்தையும் மூர்க்கமான நடத்தையையும் பற்றி ஒரு வரலாற்று நூல் இவ்வாறு கூறுகிறது: ‘உண்மையில் தோட்டத் துரைமார் முரடர்கள். எதற்கும் தயங்காதவர்கள். வெகு சிலரே விவசாயப் பயிற்சி பெற்றவர்களாக இருந்தனர். பொதுவாக, இவர்கள் கல்வியறிவற்றவர்களாக இருந்தனர். இவர்களின் அடாவடித்தனம், கொடுமை என்பவற்றைச் சகித்துக்கொள்ள வேண்டிய நிலைக்கு தொழிலாளர்கள் வற்புறுத்தப்பட்டனர். அதற்குக்

கங்காணிமார்கள் துணையாக நின்றனர். தோட்டத் துறையில் அநேகமாகக் கங்காணிமார்களும் எழுதுவினைஞர்களும் உயர் சாதியினராகத் திகழ்ந்த அதேவேளை, தொழிலாளர்கள் தாழ்த்தப்பட்ட சாதியினராகக் காணப்பட்டனர். இந்தியாவில் நிலவிய நிலப்பிரபுத்துவச் சாதி அமைப்பு முறையைப் பெருந்தோட்டத் துறையின் முதலாளித்துவம் தனக்குச் சாதகமான முறையில் பயன்படுத்திக் கொண்டது.'"

இவை அனைத்தும் தொழிலாளர்கள் உழைப்புக் களத்தில் சந்தித்த அடக்குமுறைகளாகும். இதையும் தாண்டி, மலையகப் பெண்கள் பாலியல் ரீதியாகவும் பல்வேறு கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். கங்காணிமார்கள், பெண்கள் மீது ஏவிவிட்ட அட்டூழியங்கள் கொஞ்ச நஞ்சமல்ல; அவர்கள் மிகவும் வக்கிரமாகவும் மோசமாகவும் நடந்து கொண்டனர் என்பதைப் பேராசிரியர் குமாரி ஜெயவர்த்தனவின் வரலாற்று ஆய்வுகள் தெளிவாக வெளிக்கொணர்ந்துள்ளன. இருப்பினும், இயல்பிலேயே நாகரிகமும் பண்பாடும் கொண்ட பாமர மக்கள், இத்தகைய கசப்பான சம்பவங்களை முழுமையாக வெளிப்படுத்தத் தயங்கினாலும், ஒருசில பாடல்களில் கங்காணிமார்களின் அந்த வக்கிரச் செயல்களைப் பதிவு செய்யத் தவறவில்லை.

"செம்பு சிலை போல பெண்ணே அவர்
சிம்மாசனத்தில் வச்சுப்புட்டு
வேலைக்கிறங்கிய நம்மையா
கங்காணிக்கு ஏழு எட்டு பேராம்
வப்பாட்டி"
"முருங்கை இலை போல கோலம்
இட்டு அவர்
முன்னஞ்சு பின் அஞ்சி
கூத்தியாராம்
சரிகத்துப்பட்டி
மேல போட்டு அவர்
தங்க பல்லாக்கு மேல் வாறாராம்"

இப்பாடல்கள், மலையகப் பெண்கள் எவ்வாறெல்லாம் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டுச் சுரண்டப்பட்டார்கள் என்பதற்குத் தெளிவான சான்றுகளாக விளங்குகின்றன. இவை வாய்மொழிப் பாடல்களில் வெளிப்படும் சில அடையாளங்கள் மட்டுமே; ஆனால், இதைவிடவும் மிக மோசமான கொடூரங்களை நாவல்கள், சிறுகதைகள் மற்றும் வரலாற்று ஆய்வுகள் மிகத் துல்லியமாக வெளிப்படுத்தியுள்ளன என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

இவற்றையெல்லாம் விட, இம்மக்கள் மீது ஏவப்பட்ட உளவியல் ரீதியான அடக்குமுறைகள் மிகவும் கொடூரமானவை. சாதி ரீதியாகவும், குடும்ப ரீதியாகவும், பாதுகாப்பு ரீதியாகவும் எண்ணற்ற துன்பங்களுக்கு உள்ளானபோதிலும், எந்தச் சூழலிலும் தம் சொந்த உழைப்பை மட்டுமே நம்பி, அத்தனை துயரங்களையும் தாங்கிக்கொண்டு இம்மண்ணில் தமக்கானதொரு தனித்துவ அடையாளத்தை அவர்கள் உருவாக்கிக் கொண்டனர். உலகெங்கிலும் உள்ள உழைக்கும் மக்களின் வரலாற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, மலையக மக்களின் வரலாறு மிகுந்த கொடூரமும் ஈவிரக்கமற்ற தன்மையும் கொண்டது என்பதை அறிய முடிகிறது. தென்னிந்தியாவிலிருந்து அடுக்கடுக்கான சுமைகளோடு வருகை தந்து, எண்ணற்ற துன்பங்களை அனுபவித்து, பல்வேறு அடக்குமுறைகளை எதிர்த்து நின்று, இன்றும் தம் உரிமைகளுக்காகப் போராடிக்கொண்டிருக்கும் இம்மக்களின் வரலாற்றையும் வாழ்வியல் அனுபவங்களையும் தலைமுறைதோறும் சுமந்து செல்லும் உயிருள்ள பதிவுகளாக இந்த நாட்டுப்புறப் பாடல்கள் திகழ்கின்றன.

சான்றாதாரங்கள்

1. வேலுப்பிள்ளை, சி.வி. மலைநாட்டு மக்கள் பாடல்கள். மகாவலி பிரசுரம், கொழும்பு.

2. சிவலிங்கம், மு. 2007. மலையகத் தமிழ் நாட்டுப்புறப் பாடல்கள். ரெக்னோ பிரிண்டர்ஸ்.

3. சாரல் நாடன். 1993. மலையக வாய்மொழி இலக்கியம். சவுத் ஆசியன் புக்ஸ், சென்னை.

4. கந்தையா, மு.சி. 2002. சிதைக்கப்பட்ட மலையகத் தமிழர்கள். பொன்னுலகம் புத்தக நிலையம், திருப்பூர்.

5. காதர், பி.ஏ. இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம். சமூக இயல் பதிப்பகம், லண்டன்.

6. சிவலிங்க ராசா, எஸ். 2023. யாழ்ப்பாணத்து வாழ்வியல் கோலங்கள். குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

7. லூர்து, தே. 2008. நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள். மூன்றாம் பதிப்பு. பாளையங்கோட்டை: நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் பெரும்பாலும் வறண்ட மற்றும் அரை வறண்ட காலநிலைச் சூழலுக்குட்பட்ட பகுதிகளாகும். இப்பகுதிகளில் உள்ள ஆற்றுப்படுகைகள் (River Basins) நீர் வளங்களின் முக்கிய ஆதாரங்களாக விளங்குகின்றன. இவை குடிநீர், வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, தொழில் மற்றும் சூழலியல் சமநிலைக்கான ஆதாரங்களாகவும் உள்ளன. முரண்பாடுகள், நிலவளப் பயன்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள், காடழிப்பு, கட்டுப்பாடற்ற மணல் அகழ்வு, நிலத்தடி நீரின் அதிகப்படியான பயன்பாடு மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவை இவ்வாற்றுப் படுகைகளின் நீரியல் சமநிலையைப் பாதித்துள்ளன. எனவே, இவற்றின் தற்போதைய நிலையை அறிவியல் மற்றும் தரவுசார்ந்த முறையில் ஆய்வு செய்து, சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் கூடிய திறம்பட்ட பயன்பாட்டிற்கான வழிமுறைகளை முன்வைப்பது கட்டாயமானதாகும். 'வடக்கு – கிழக்குப் பிராந்தியங்களின் ஆற்றுப்படுகைகளின் நீர்வள இருப்பும் பயன்பாட்டிற்கான ஒருங்கிணைந்த மூலோபாயங்களும்' எனும் இக்கட்டுரைத் தொடர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அனைத்து ஆற்றுப்படுகைகளையும் ஒருங்கிணைந்த முறையில் ஆய்வு செய்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் நீர் வளத்தின் திறம்பட்ட பயன்பாட்டையும் சமநிலைப்படுத்தும் வழிமுறைகளை முன்வைக்கும். இது நிலைத்த வளர்ச்சிக்கான அறிவியல் மற்றும் கொள்கை அடிப்படையிலான வழிகாட்டி ஆவணமாகவும் அமையும்.

வடக்குக் கிழக்குப் பிராந்தியங்களின் ஆற்றுப்படுகைகளின் அடையாளமும் புவியியல் சுயவிவரமும்

பகுதி -5

சுப்ரமணியம் சிவகுமார்

கலாநிதி. சுப்ரமணியம் சிவகுமார் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் இளங்கலைப் (BSc Eng.) பட்டமும், இந்தியத் தொழில்நுட்பக்கழகம் ரூர்க்கியில் (IIT Roorkee) நீர்வள மேம்பாட்டுத்துறையில் முதுகலைப் (MSc) பட்டமும், மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் (PhD) பட்டமும் பெற்றவர். பின்னர் நோர்வேயின் உயிரியல் அறிவியல் பல்கலைக்கழகத்திலும் (NMBU, s), வடகிழக்கு நோர்வே பல்கலைக்கழகத்திலும் (Bod) பிந்தைய முனைவர் ஆராய்ச்சியாளராகப் பணியாற்றினார். நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராகவும், நீர்ப்பாசனப் பொறியாளராகவும் 28 ஆண்டுகள் சேவையாற்றியுள்ளார். யாழ்ப்பாணம், வவுனியா போன்ற பல்கலைக்கழகங்களில் மூத்த விரிவுரையாளராகச் செயற்பட்டார். விவசாய அமைச்சகத்தில் திட்டமிடல் பணிப்பாளராகவும், வடமாகாண அவசர மீளமைப்புத் திட்டத்தின் திட்டப்பணிப்பாளராகவும் பணியாற்றினார்.
பல்வேறு சர்வதேசப் பல்கலைக்கழகங்களில் விருந்தினர் விரிவுரைகளையும், முக்கிய உரைகளையும் (Keynote Speeches) நிகழ்த்தியுள்ள இவர், குறியீட்டு அறிவியல் இதழ்களில் 45க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டுள்ளதோடு, இதுவரை 7 நூல்களையும் எழுதியுள்ளார். மேலும், 18 சர்வதேச மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை வாசித்துள்ளார்.

2.2.1.3 கனகராயன்குளம்

2.2.1.3.1. கனகராயன் குளத்தின் வரலாற்றுப் பின்னணி மற்றும் நீரியல் முக்கியத்துவம்

வட மாகாணத்தின் தொன்மையான நீர்ப்பாசன மரபுகளில் முக்கிய இடம்பெறும் கனகராயன் குளம், வரலாறு, புவியியல் மற்றும் விவசாயப் பொருளாதாரம் ஆகிய மூன்று பரிமாணங்களிலும் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது. 'கனகராயன்' என்ற பெயர், வன்னிப் பிரதேசத்தில் ஒரு காலத்தில் செல்வாக்குடன் வாழ்ந்ததாகக் கருதப்படும் 'ராயன்' எனும் தலைமைக்குடி மக்களுடன் தொடர்புடையதாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இதேபோன்று 'பல்லவராயன் குளம்', 'அக்கராயன் குளம்' போன்ற பெயர்களும் வன்னிப் பிரதேசத்தின் பாரம்பரியக் குடியேற்ற அமைப்புகளையும், அப்பகுதியின் சமூகஅரசியல் வரலாற்றையும் பிரதிபலிப்பதாகக் காணப்படுகின்றன. இப்பெயர்கள், அப்பகுதியில் வாழ்ந்த சிற்றரசர்கள் அல்லது நிலப்பிரபுக்களின் பெயர்களை அடிப்படையாகக் கொண்டிருக்கலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கனகராயன் குளத்தில் அமைந்துள்ள செப்பனிடப்பட்ட கற்களால் (Dressed Stone Masonry) நிர்மாணிக்கப்பட்ட துருசு, அப்பகுதியின் பாரம்பரிய நீர்ப்பாசனப் பொறியியல் திறனையும், நீர் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் நுணுக்கமான கட்டுமானத் தொழில்நுட்பத்தையும் வெளிப்படுத்தும் முக்கியமான தொல்பொருள் மற்றும் பொறியியல் மரபுச் சின்னமாகக் காணப்படுகிறது.

கனகராயன் குளம் - செப்பனிடப்பட்ட கற்களால் நிர்மாணிக்கப்பட்ட துருசு

தற்போது காணப்படும் கனகராயன் குளம், பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில், 1888 முதல் 1896 வரையிலான காலப்பகுதியில் மறுசீரமைக்கப்பட்டு புனரமைக்கப்பட்டது. இதன் மூலம் கனகராயன் ஆற்றின் மேல்பகுதியில் அமைந்துள்ள ஒரு துணை நதியின் நீரோட்டம் தடுத்துச் சேமிக்கப்பட்டு, அப்பகுதியில் விவசாய அபிவிருத்திக்கான அடித்தளம் அமைக்கப்பட்டது. எனினும், 1996ஆம் ஆண்டு ஏற்பட்ட பெருவெள்ளத்தால் குளத்தின் அணைக்கட்டு உடைந்து பெரும் சேதம் ஏற்பட்டது. பின்னர், 2000ஆம் ஆண்டில் மீண்டும் புனரமைக்கப்பட்டு, அதன் நீர்ப்பாசனச் சேவைகள் மீளமைக்கப்பட்டன.

கனகராயன் குளம், கனகராயன் ஆற்றின் மேற்பகுதியில் உருவாகும் நீரோட்டத்தைத் தேக்கி, சுமார் 314 ஏக்கர் நெல் வயல்களுக்கு பாசன வசதிகளை வழங்கும் திறனைக் கொண்டுள்ளது. இதன் மூலம் சுமார் 120 விவசாயக் குடும்பங்கள் நேரடியாகப் பயனடைந்து வருகின்றன. எனவே, இக்குளம் வெறும் நீர்த்தேக்கமாக மட்டுமன்றி, கிராமப்புற வாழ்வாதாரத்திற்கும் உணவுப் பாதுகாப்பிற்கும் ஆதாரமாக விளங்கும் சமூக பொருளாதார வளமாகவும் கருதப்படுகிறது.

முப்பது ஆண்டுகால உள்நாட்டு மோதல் முடிவடைந்த பின்னர், இக்கட்டமைப்புகளை மீளமைத்து விவசாயத்தை உயிர்ப்பிக்க முன்னுரிமை அளிக்கப்பட்டது. அந்தப் பின்னணியில், உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்ட 'அவசர வடக்கு மீட்புத் திட்டம்' (Emergency Northern Recovery Project - ENReP) (உலக வங்கியின் இச்செயல் திட்டத்தின் திட்டப் பணிப்பாளராக கட்டுரையாளரே பணியாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது) மூலம் கனகராயன் குளப்பாசனத் திட்டமும் புனரமைக்கப்பட்டது. இப்புனரமைப்பு, குளத்தின் உட்கட்டமைப்புகளை மீளமைப்பதுடன் மட்டுமல்லாமல், போருக்குப் பிந்தைய காலத்தில் விவசாய உற்பத்தியை மீளத் தொடங்குவதற்கும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கும் முக்கிய பங்களிப்பை வழங்கியது.

'ENReP' மூலம் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பு, ஒரு கட்டமைப்பு மேம்பாட்டு நடவடிக்கையாக மட்டுமே பார்க்கப்படக் கூடாது. குளத்தின் நீர்த்தேக்கத் திறன், நீர்வரத்துக் கட்டுப்பாடு, விநியோக அமைப்பு,

குளக்கட்டு மற்றும் தொடர்புடைய பாசனக் கட்டமைப்புகள் ஆகியவை மீளச் செயல்படுவதன் மூலம், முழுமையான கிராமப்புற நீர்வள மேலாண்மைச் சங்கிலி மீண்டும் செயல்படுத்தப்பட்டது. எனவே, கனகராயன் குளத்தின் புனரமைப்பு, உட்கட்டமைப்பு மீட்பு மற்றும் விவசாய வாழ்வாதார மீட்பு ஆகிய இரண்டையும் ஒருங்கிணைத்த ஒரு முக்கியமான தலையீடாகக் கருதப்படலாம்.

2.2.1.3.2 கனகராயன் குளத்தின் நீர்ச் சமநிலை ஆய்வும் செயற்பாட்டு முறைமையும்

கனகராயன் குளத்தின் நீர்வளப் பயன்பாட்டுத் திறன் மற்றும் பாசன முகாமைத்துவ செயற்பாடுகளை அறிவியல் அடிப்படையில் மதிப்பிடுவதற்காக, கட்டுரையாளரின் 'Northern River Basins Yield Study for Operational Policy of Irrigation Schemes & Water Resources and Agriculture Development Strategy for North - 2020 - 2035' என்னும் நூலில் பரிந்துரைக்கப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் நீர்வரத்து (Yield) அடிப்படையிலான திட்டமிடல் மூலோபாயங்களுடன் ஒத்திசைவாக விரிவான நீர்ச் சமநிலை (Water Balance) ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்விற்குத் தேவையான நீரியல் தரவுகள் (Hydrological Data) மற்றும் பரப்பு-கொள்ளளவு (AreaCapacity) தொடர்பான தகவல்கள் வட மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டன. இத்தரவுகள் தொகுக்கப்பட்டு, நீர்த்தேக்கத்தின் சேமிப்புத் திறன், நீர்வரத்து, பாசனத் தேவைகள் மற்றும் நீர்ப் பயன்பாட்டு முறை ஆகியவை விரிவாக ஆய்வு செய்யப்பட்டன. அதன் விவரம் கீழே உள்ள உருவில் தரப்பட்டுள்ளது.

இந்த நீர்ச் சமநிலை ஆய்வின் முடிவுகள், கனகராயன் குளம் ஒரு நிலையான மற்றும் நம்பகமான பாசனத் திட்டமாகச் செயற்படுவதற்கான அடிப்படை அளவுகோல்களை உறுதிப்படுத்துகின்றன. அதன்படி, குளத்தின் குறைந்தபட்ச செயற்பாட்டு நீர்மட்டம் ஐந்து அடி (5 ft.) என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த அளவுக்கு கீழ் நீர்மட்டம் குறைந்தால், திட்டத்தின் செயல்திறன் பாதிக்கப்படக்கூடும் என்பதால், இந்த அளவு பாதுகாப்பான செயற்பாட்டு ஆழமாகக் கருதப்படுகிறது.

பெரும்போகப் பருவத்தில், 135 நாட்கள் வளரும் நெற்பயிரை அடிப்படையாகக் கொண்டு மொத்தம் 314 ஏக்கர் பரப்பளவில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதேவேளை, சிறுபோகப் பருவத்தில் 105 நாட்கள் வளரும் குறுகிய கால நெல் வகைகளைப் பயன்படுத்தி 125.6 ஏக்கர் நிலப்பரப்பில் சாகுபடி மேற்கொள்ளப்பட முடியும் என ஆய்வு சுட்டிக்காட்டுகிறது. இதன் அடிப்படையில், இத்திட்டத்தின் மொத்தப் பயிரிடல் தீவிரம் (Cropping Intensity) 1.4 ஆகக் கணிக்கப்பட்டுள்ளது. இதன் பொருள், ஒரு ஆண்டில் நிலப்பரப்பின் மொத்தப் பயன்பாடு பெரும்போகத்திற்கு 100%, சிறுபோகத்திற்கு 40% பயிர் செய்யப்பட வேண்டும் என்பதாகும். இது நீர்வளத்தை திறமையாகப் பயன்படுத்தும் திட்டமாக கனகராயன் குளம் செயல்படுவதைக் காட்டுகிறது.

மேலும், பாசனத் தேவைகளுக்கு அப்பால் கால்நடைப் பயன்பாடு, வீட்டுத் தேவைகள் மற்றும் சுற்றுச்சூழல் தேவைகள் போன்ற பிற பயன்பாடுகளுக்காக ஆண்டிற்கு 6 ஏக்கர் அடி (Acrefeet) அளவிலான நீர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் ஆய்வு குறிப்பிடுகிறது. இதன் மூலம், இத்திட்டம் வெறும் விவசாயப் பயன்பாட்டிற்கானதாக மட்டுமன்றி, பல்துறை நீர்வளத் தேவைகளை கருத்தில் கொண்டு திட்டமிடப்பட்ட ஒருங்கிணைந்த நீர்வள முகாமைத்துவ அணுகுமுறையைப் பிரதிபலிப்பதாகவும் விளங்குகிறது.

மேலும் இந்த நீர்ச் சமநிலை ஆய்வு, அவற்றின் அடிப்படையில் குளத்தின் சேமிப்புத் திறன், வருடாந்த நீர்வரத்து, பாசனத் தேவைகள் மற்றும் உபரி நீர் வெளியேற்ற அளவுகள் ஆகியவை விஞ்ஞான ரீதியாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இந்த ஆய்வின் முடிவுகள், கனகராயன் குளத்தின் தற்போதைய செயற்பாட்டு அமைப்பு அதன் நீர்வரத்துத் திறனுக்கு ஏற்ப நிலையானதாக இருப்பதையும், மஹா மற்றும் யாலா பருவங்களில் திட்டமிட்ட பயிர்ச் செய்கைகளை ஆதரிக்கக்கூடிய நம்பகமான நீர்வள அடித்தளத்தை வழங்குவதையும் உறுதிப்படுத்துகிறது.

மேலும், எதிர்காலத்தில் காலநிலை மாற்றம், மழைப்பொழிவு மாறுபாடு மற்றும் அதிகரித்து வரும் நீர்த் தேவைகள் போன்ற சவால்களை எதிர்கொள்வதற்காக, அறிவியல் அடிப்படையிலான நீர்வள முகாமைத்துவத்திற்கும், பாசன அட்டவணை மேம்பாட்டிற்கும் இவ்வாய்வு ஒரு முக்கிய வழிகாட்டியாக அமைகிறது. இவ்வாறு, கனகராயன் குளம் வரலாற்றுப் பாரம்பரியம், பாரம்பரிய நீர்ப்பாசன அறிவு, நவீன பொறியியல் அணுகுமுறைகள் மற்றும் கிராமிய சமூகங்களின் வாழ்வாதாரப் பாதுகாப்பு ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைக்கும் வட மாகாணத்தின் முக்கியமான நீர்வளச் சொத்துகளில் ஒன்றாகத் திகழ்கிறது.

Hydro Data of Kanagarayan Kulam

Catchment Area	3.50 sq.mls.
Storage capacity	1,195 ac. ft.
F.S.L	113.0 ft. R. L
H.F.L	114.5 ft. R. L
F.S.D	13.0 ft.
Bund	
Bund length	3,500.0 ft. (6' BTW)
Maximum height	17.0 ft.
B.T.L	116.56 ft. R.L.
Spill	
Length (RB)	C.O. Type 125 ft.
Crest level	113.0 ft. R.L
Sluice	
Location Type	LB Masonry
Location	10.00 Ch.
Size of opening	2 ft. dia.
Sill level	100.0 ft. R.L.
Command area (acres)	314

DESIGN DATA FOR OPERATION STUDY

1	Name of the tank		:-	Kanagarajan kulam
2	Co-ordinate of the tank		:-	C/4 (12.71 x 4.54)
3	Irrigation Engineer's division		:-	Vavuniya
4	Net catchment area (sq.mla)		:-	3.50
5	Avalable command area (ac.)		:-	314
6	Specific yields (ac.ft./sq.mls)			
		Maha	:-	450
		Yala	:-	50
7	Rainfall and Evaporation			
	Agro-Ecological region		:-	DI1
	Evaporation station		:-	Iranamadu
8	Irrigation efficiencys			
	Application efficiency		:-	0.75
	Conveyance efficiency		:-	0.80
9	Proposed stagger (ST1, ST2)		:-	ST1
10	Area-Capacity			

AREA - CAPACITY

Contour ft.	Area ac.	Capacity ac.ft.
	0.00	0.00
1.00	2.90	1.45
2.00	12.25	9.03
3.00	29.50	29.90
4.00	48.40	68.85
5.00	63.25	124.68
6.00	75.25	193.93
7.00	91.35	277.23
8.00	109.95	377.88
9.00	129.70	497.70
10.00	151.40	638.25
11.00	170.80	799.35
12.00	191.90	980.70
13.00	235.85	1194.58



				Level (ft.)	Cap(ac.ft.)
11	Full supply level		:-	13.00	1194.58
12	Minimum operation level		:-	5.00	124.68
13	Return flow				
		Maha	ac. :-	0	
		Yala	ac. :-	0	
14	Augmentation (ac.ft.)				

AUGMENTATION

Oct	-6.00	Apr	-6.00
Nov	-6.00	May	-6.00
Dec	-6.00	Jun	-6.00
Jan	-6.00	Jul	-6.00
Feb	-6.00	Aug	-6.00
Mar	-6.00	Sep	-6.00

15	Acreage proposed for Maha	(ac.) :-	314	Recommended 135 days paddy
16	Acreage proposed for Yala	(ac.) :-	125.6	Recommended 105 days paddy
17	Cropping intesity	:-	1.4	
18	Other demand(Ac.ft.)	:-	6	

OPERATION STUDY

	Oct	Nov	Dec	Jan	Feb	Mar	Apr	May	Jun	Jul	Aug	Sep
Storage at beginnig (ac.ft.)	124.68	365.00	625.97	767.73	711.05	624.66	690.36	669.10	534.43	345.25	167.67	143.13
Catchment inflow (ac.ft.)	326.67	392.00	326.67	196.00	65.33	130.67	97.22	38.89	9.72	0.00	9.72	19.44
Return flow (ac.ft.)	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00
Augmentation(ac.ft.)	-6.00	-6.00	-6.00	-6.00	-6.00	-6.00	-6.00	-6.00	-6.00	-6.00	-6.00	-6.00
Total volume (ac.ft.)	445.34	751.00	946.64	957.73	770.38	749.33	781.58	701.99	538.15	339.25	171.39	156.58
Evaporation loss (ac.ft.)	27.22	29.34	35.00	40.85	42.09	55.69	52.58	55.76	49.95	36.00	27.50	26.01
Seepage loss (ac.ft.)	1.22	2.47	3.48	3.69	3.33	3.28	3.38	2.99	2.18	1.26	0.76	0.66
Irrigation demand (ac.ft.)	51.90	93.22	140.43	202.14	100.31	0.00	56.52	108.81	140.78	134.32	0.00	0.00
Spillage (ac.ft.)	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00
Storage at end (ac.ft.)	365.00	625.97	767.73	711.05	624.66	690.36	669.10	534.43	345.25	167.67	143.13	129.90

கனகராயன் குளத்தின் நீர்ச் சமநிலை (Water Balance) ஆய்வு

2.2.1.4 கனகாம்பிகைக் குளம்

2.2.1.4.1 வரலாற்றுப் பின்னணி மற்றும் புனரமைப்பு

கனகாம்பிகைக் குளம் (*Kanagambikai Kulam - A/19*) கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில், கனகாம்பிகை நகர் பகுதியில் அமைந்துள்ள ஒரு முக்கியமான நடுத்தர பாசனத் திட்டமாகும். இக்குளம் 1960ஆம் ஆண்டு நெல் பயிர்ச்செய்கையை முன்னெடுக்கும் நோக்கில் கட்டமைக்கப்பட்டது. இப்பகுதியின் விவசாய நிலங்களின் தன்மை ஒரே மாதிரியாக இல்லாததுடன், முழுப்பரப்பும் நெல் பயிரிடுவதற்கு ஏற்றதாக இருக்கவில்லை. இதனால், குளத்திலிருந்து நீரை ஒழுங்காக வழங்குவதற்கும், நீர் இழப்பைக் குறைப்பதற்கும், நிலப்பரப்பின் தன்மைக்கு ஏற்ற நீர்ப்பாசன முறையை உருவாக்குவதற்கும், சில பாசனக் கால்வாய்கள் கற்காரையால் உள்தளமிடப்பட்ட (Concretelined) கால்வாய்களாக அமைக்கப்பட்டன. இதன் காரணமாக, முழுமையான நெல் சாகுபடிக்குப் பதிலாக, திட்டத்தின் ஒரு பகுதி துணை உணவுப் பயிர்கள் (Subsidiary Food Crops) அல்லது மாற்றுப் பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தப்படலாம் எனப் பரிந்துரைக்கப்பட்டது.

கனகாம்பிகைக் குளத்திற்கு பிரதான நீர்வரத்து டிறை ஆறு (Dri Aru) வழியாகக் கிடைக்கிறது. முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்காவில் பகுதியில் உற்பத்தியாகும் இவ்வாறு, பருவகால மழையை மட்டுமே நம்பிப் பாயும் ஒரு நீரோட்டமாகும். எனவே, கனகாம்பிகைக் குளத்தின் நீரியல் செயல்பாடு, அந்த நீர்ப்பிடிப்புப் பகுதியில் கிடைக்கும் பருவமழை, மேல்நிலை நீர்வரத்து மற்றும் நிலப்பரப்பின் நீர்த் தேக்கத் திறன் ஆகியவற்றுடன் நேரடியாகத் தொடர்புடையது. இத்தகைய பருவகால நீர்வள அமைப்புகளில், மழை அதிகமாகக் கிடைக்கும் காலத்தில் கிடைக்கும் மேலதிக நீரைச் சேமித்து வைத்து, பின்னர் விவசாயத் தேவைக்கேற்ப

கட்டுப்படுத்தப்பட்ட முறையில் பயன்படுத்துவது முக்கியமான மேலாண்மைக் கொள்கையாகும்.

குளம் ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட பின்னர், அதன் முழுச் சேமிப்பு நீர்மட்டம் (*Full Supply Depth - F.S.D.*) 10.5 அடி ஆகும் வகையில் 1970ஆம் ஆண்டில் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு (*Augmented*) மேம்படுத்தப்பட்டது. இந்த விரிவாக்கம், குளத்தின் நீர்த்தேக்க மற்றும் பாசனத் திறனை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது. குளத்தின் கொள்ளளவை அதிகரிப்பதன் மூலம், பருவமழைக் காலத்தில் கிடைக்கும் நீரை அதிகளவில் சேமித்து வைத்து, வறட்சி அல்லது மழையற்ற இடைக்காலங்களில் விவசாயப் பயன்பாட்டிற்கு பயன்படுத்தும் வாய்ப்பு மேம்படுத்தப்பட்டது. குறிப்பாக, மஹா மற்றும் யாலா ஆகிய இரு பருவங்களிலும் திட்டமிட்ட முறையில் நீரைப் பயன்படுத்துவதற்கான அடிப்படையை இவ்விரிவாக்கம் உருவாக்கியது.

காலப்போக்கில், குளக்கட்டு, நீர்விநியோக அமைப்பு மற்றும் தொடர்புடைய கட்டமைப்புகளில் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுத் தேவைகள் உருவாயின. இதனைத் தொடர்ந்து, 2011ஆம் ஆண்டு உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்ட *'Emergency Northern Recovery Project'* (*ENReP*) திட்டம் மூலம் கனகாம்பிகைக் குளத்தில் மேம்பாட்டு மற்றும் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. வடக்கு மாகாணத்தில் நீண்டகால மோதலால் பாதிக்கப்பட்ட பாசனக் கட்டமைப்புகளை மீளமைத்து, விவசாய உற்பத்தியையும் கிராமப்புற வாழ்வாதாரத்தையும் மீட்டெடுப்பது *'ENReP'*இன் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். அந்தப் பரந்த புனரமைப்பு அணுகுமுறையின் ஒரு பகுதியாக கனகாம்பிகைக் குளத்திற்கான தலையீடும் மேற்கொள்ளப்பட்டது.

'Integrated Water Resources Management Project' (IWRMP) திட்டத்தின் கீழ், இக்குளத்தின் மேலதிக மேம்பாட்டிற்கும் நிலையான புனரமைப்பிற்கும் தற்போது சுமார் ரூ. 80 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் குறிப்பாக குளக்கட்டின் பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மை உறுதி செய்யப்படுவதுடன், குளத்திலிருந்து விவசாய நிலங்களுக்கு நீரைச் சீரான முறையில் வழங்கும் பாசனக் கட்டமைப்பு மற்றும் வடிகால் அமைப்பு மேலும் மேம்படுத்தப்பட உள்ளது. வலுவான குளக்கட்டு என்பது வெறும் நீர்த்தேக்கப் பாதுகாப்பிற்கான கட்டமைப்பு மட்டுமல்ல; அது குளத்தின் நீர்ப்பாசன நம்பகத்தன்மை, விவசாயிகளின் வாழ்வாதாரப் பாதுகாப்பு மற்றும் எதிர்பாராத வெள்ள அபாயக் குறைப்பு ஆகியவற்றோடும் நேரடியாக இணைந்துள்ளது.

2.2.1.4.2 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அறிவியல்நகர் (Ariviyal Nagar) நீர்த் தேவைகளும் கனகாம்பிகைக் குளமும்

கனகாம்பிகைக் குளத்தின் எதிர்காலப் பயன்பாட்டில் ஒரு முக்கியமான கூடுதல் வாய்ப்பு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அறிவியல்நகர் (*Ariviyal Nagar*) வளாகத்திற்குத் தேவையான நீரை வழங்குவது ஆகும். முன்மொழியப்பட்ட நீர்ச்சமநிலை மதிப்பீட்டின் அடிப்படையில், மாதத்திற்கு சுமார் 125 ஏக்கர்அடி (*Acrefeet*) நீரை அறிவியல் நகர் பல்கலைக்கழக வளாகத்திற்கு வழங்கக்கூடிய சாத்தியம் காணப்படுகிறது. இது சரியான நீர்வள மேலாண்மை மற்றும் விநியோகக் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டால், பல்கலைக்கழக வளாகத்தில் நிலவும் நீர்ப்பற்றாக்குறையைத் தணிப்பதற்கு முக்கிய பங்களிப்பை வழங்கும்.

அறிவியல் நகர் வளாகத்திற்கான இந்த நீர் வழங்கல் முன்மொழிவு, விவசாயப் பயன்பாட்டை பாதிக்காத வகையில் நீர்வளத்தின் முன்னுரிமை அடிப்படையிலான ஒதுக்கீடு என்ற கொள்கையில் செயல்படுத்தப்பட வேண்டும். அதாவது, குளத்தின் ஆரம்பச் சேமிப்பு, எதிர்பார்க்கப்படும் பருவகால நீர்வரத்து, பெரும்போக மற்றும் சிறுபோகப் பாசனத் தேவைகள், குறைந்தபட்ச செயற்பாட்டு நீர்மட்டம், ஆவியாதல் மற்றும் பிற நீரிழப்புகள் ஆகியவற்றை முதலில் கணக்கில் கொண்டு, அதன் பின்னர் பல்கலைக்கழக வளாகத்திற்கான கூடுதல் நீர் ஒதுக்கீட்டை நிர்ணயிப்பது பொருத்தமானதாகும். இதன் மூலம் விவசாய நீர்விநியோகம் மற்றும் கல்வி நிறுவனத்தின் நீர்த் தேவை ஆகிய இரண்டுக்கும் இடையில் சமநிலையான நீர் மேலாண்மை அமைப்பை உருவாக்க முடியும்.

இத்தகைய நீர்விநியோகத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால், அறிவியல் நகர் வளாகத்தில் நிலத்தடி நீரை அதிகமாக உறிஞ்சும் தற்போதைய அழுத்தத்தை ஓரளவு குறைக்கவும் வாய்ப்புள்ளது. குறிப்பாக, நிலத்தடி நீர்மட்டம் மற்றும் நீர்த் தரம் தொடர்பாக நீண்டகாலப் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய சூழலில், மேற்பரப்பு நீர் ஆதாரத்திலிருந்து கட்டுப்படுத்தப்பட்ட அளவில் நீரை வழங்குவது ஒரு மாற்று நீர்வளமாகச் செயல்படக்கூடும். எனினும், இத்திட்டம் செயல்படுத்தப்படுவதற்கு முன், பல்கலைக்கழகத்தின் உண்மையான மாதாந்த நீர்த்தேவை, உச்ச நேரத் தேவை, குடிநீர் மற்றும்

குடிநீரல்லாத பயன்பாடுகளின் பிரிப்பு, சுத்திகரிப்பு தேவைகள், குழாய் வழித் தூரம் மற்றும் மின்சாரச் செலவு ஆகியன தனியாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

2.2.1.4.3 கனகாம்பிகைக் குளத்தின் நீர்ச்சமநிலைப் பகுப்பாய்வு

கனகாம்பிகைக் குளத்தின் நீர்ப்பாசன மற்றும் பிற நீர்வளப் பயன்பாடுகளை அறிவியல் அடிப்படையில் மதிப்பிடுவதற்காக, இந்நூலில் விளக்கப்பட்டுள்ள நீர்வளக் கொள்கைகள் மற்றும் மேலாண்மை உத்திகளுக்கு இணங்க விரிவான நீர்ச்சமநிலை ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வில் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட நீரியல் தரவுகள் மற்றும் குளத்தின் பரப்பளவு-கொள்ளளவுத் (*Area-Capacity*) தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பயன்படுத்தப்பட்ட அடிப்படை நீரியல் மற்றும் பரப்பளவு-கொள்ளளவுத் தரவுகளும், நீர்ச்சமநிலை ஆய்வின் முடிவுகளும் கீழே வழங்கப்பட்டுள்ளன.

இந்த நீர்ச்சமநிலை ஆய்வின் அடிப்படையில், கனகாம்பிகைக் குளத்தின் குறைந்தபட்ச செயற்பாட்டு நீர்மட்டம் 4 அடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதாவது, குளத்தின் நீர்மட்டம் 4 அடிக்குக் கீழ் சென்ற பின்னர் வழக்கமான பாசனத் தேவைகளுக்காக நீரைத் தொடர்ந்து வெளியிடுவது தவிர்க்கப்பட வேண்டும் என்பதே இதன் பொருள். இவ்வாறு குறைந்தபட்ச நீர்மட்டத்தைப் பேணுவதன் மூலம், பருவத்தின் இறுதியில் எதிர்பாராத நீர்ப்பற்றாக்குறை ஏற்படும் அபாயத்தைக் குறைக்கவும், குளத்தின் மீதமுள்ள நீரை பாதுகாப்பு மற்றும் அவசரத் தேவைகளுக்காக வைத்திருக்கவும் முடியும்.

பெரும்போகப் பருவத்தில் 260 ஏக்கர் நிலப்பரப்பை பயிரிடுவதற்கான சாத்தியம் நீர்ச்சமநிலை ஆய்வின் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தப் பரப்பளவு, பருவமழைக் காலத்தில் கிடைக்கும் நீர்வரத்து மற்றும் சேமிப்பின் அடிப்படையில் திட்டமிடப்பட்ட ஒரு நடைமுறைப் பாசனப் பரப்பாகக் கருதப்படுகிறது. பெரும்போகப் பருவத்தில் அதிகளவு நீர்வரத்துக் கிடைக்கும் காலத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில், நீர்ப்பாசனத் திட்டம் பருவத்தின் ஆரம்ப நீர்த்தேக்க நிலையை கருத்தில் கொண்டு இயக்கப்பட வேண்டும்.

சிறுபோகப் பருவத்திற்கு 104 ஏக்கர் பாசனப் பரப்பளவு முன்மொழியப்பட்டுள்ளது. மஹா பருவத்துடன் ஒப்பிடும்போது யாலா காலத்தில் நீர்வரத்து மற்றும் மழைவீழ்ச்சி பொதுவாக குறைவாகவும் அதிக நிச்சயமின்மையுடனும் இருக்கக்கூடும் என்பதால், கட்டளைப் பரப்பின் ஒரு பகுதியை மட்டுமே பயிரிடுவது நீரியல் ரீதியாக பாதுகாப்பான அணுகுமுறையாகும். இதன் மூலம் சிறுபோகப் பருவத்தின் நடுப்பகுதிக்குப் பின்னர் குளத்தின் சேமிப்பு மிகக் குறைந்து விவசாயம் பாதிக்கப்படும் அபாயம் கட்டுப்படுத்தப்படலாம்.

பெரும்போக மற்றும் சிறுபோகப் பருவங்களில் பரிந்துரைக்கப்பட்ட பயிரிடும் பரப்பளவுகளின் அடிப்படையில், குளத்தின் பயிரிடல் தீவிரம் (*Cropping Intensity*) சுமார் 1.4 என மதிப்பிடப்பட்டுள்ளது. இது குளத்தின் கிடைக்கக்கூடிய நீர்வளத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு நடைமுறை விவசாயப் பயன்பாட்டு அளவுகோலாகும். எதிர்காலத்தில் அதிகப்படியான பரப்பளவை பயிரிடுவதற்கு முன், கூடுதல் நீர்வளம் உண்மையில் கிடைக்கிறதா என்பதும், அதற்காக குளத்தின் சேமிப்பு மற்றும் நீர்ப்பிடிப்பு அமைப்பில் கூடுதல் மேம்பாடு தேவையா என்பதும் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

மேலும், நீர்ச்சமநிலை ஆய்வில் பிற நீர்த் தேவையாக மாதத்திற்கு சுமார் 125 ஏக்கர்அடி அளவு ஒதுக்கீடு கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. இந்தப் பிற நீர்த் தேவையின் முக்கியப் பயன்பாடாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அறிவியல் நகர் வளாகத்திற்கு நீர் வழங்கும் முன்மொழிவு கருதப்படுகின்றது. இதனைச் செயல்படுத்தும் போது, அந்த 125 ஏக்கர்அடி மாதாந்த ஒதுக்கீடு ஆண்டின் ஒவ்வொரு மாதத்திலும் சம அளவில் வழங்கப்பட வேண்டுமா, அல்லது பருவகால நீர்வரத்துக்கு ஏற்ப மாறுபடும் அளவில் வழங்கப்பட வேண்டுமா என்பது தனியாகத் தீர்மானிக்கப்பட வேண்டும். நீர்வளம் குறையும் காலங்களில் விவசாயத் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் ஒரு நெகிழ்வான நீர் ஒதுக்கீட்டு முறையை (*Adaptive Allocation System*) உருவாக்குவது பொருத்தமானதாக இருக்கும்.

இதனால், கனகாம்பிகைக் குளத்தை எதிர்காலத்தில் விவசாயம் + கல்வி நிறுவனம் + பல்துறை நீர்வள மேலாண்மை ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் நீர்த்தேக்கமாக மேம்படுத்துவதற்கான குறிப்பிடத்தக்க வாய்ப்பு உள்ளது. இருப்பினும், விவசாயப் பாசன நம்பகத்தன்மையைப் பாதிக்காமல் கூடுதல் நீர்ப் பயன்பாட்டை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, குளத்தின் குறைந்தபட்ச 4 அடி செயற்பாட்டு நீர்மட்டம் பாதுகாக்கப்படுவதோடு, மஹா பருவத்திற்கான 260 ஏக்கர் மற்றும் யாலா பருவத்திற்கான 104 ஏக்கர் பயிரிடும் திட்டங்கள் முன்னுரிமையாகக் கருதப்பட வேண்டும்.

மொத்தத்தில், கனகாம்பிகைக் குளம் ஒரு சாதாரண நடுத்தரப் பாசனத் திட்டமாக மட்டும் கருதப்படக் கூடாது. *1960ஆம்* ஆண்டு தொடங்கப்பட்டு, *1970ஆம்* ஆண்டில் விரிவுபடுத்தப்பட்டு, *2011ஆம்* ஆண்டு '*ENReP*' மூலம் மேம்படுத்தப்பட்ட இத்திட்டம், தற்போது '*IWRMP*' மூலம் மேலும் வலுப்படுத்தப்படுவதன் மூலம் எதிர்காலத்தில் பல்நோக்கு நீர்வளத் திட்டமாக உருவாக்கப்படக்கூடிய திறனைக் கொண்டுள்ளது. விவசாயத்திற்கு நம்பகமான நீர்வழங்கல், பாதுகாப்பான வடிகால் அமைப்பு, வலுவான குளக்கட்டு மற்றும் அறிவியல் நகர் வளாகத்திற்கு திட்டமிட்ட கூடுதல் நீர் வழங்கல் ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டால், இக்குளம் பிராந்தியத்தின் விவசாய உற்பத்தி, கல்வி நிறுவன வளர்ச்சி மற்றும் நீர்வளப் பாதுகாப்பு ஆகிய மூன்றிற்கும் நீண்டகால ஆதாரமாக அமையக்கூடும்.

இதற்காக, எதிர்காலத்தில் கனகாம்பிகைக் குளத்திற்கு நேரடி நீர்மட்டக் கண்காணிப்பு, பருவகால நீர்ச்சமநிலை புதுப்பித்தல், நீர்வரத்து அளவீடு, குளத்தின் கொள்ளளவு மீள்மதிப்பீடு, நீர்ப்பாசன இழப்புக் கண்காணிப்பு மற்றும் பயனாளிப் பங்கேற்பு அடிப்படையிலான நீர்விநியோக மேலாண்மை ஆகியவை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இத்தகைய தரவு சார்ந்த மேலாண்மை முறைகளை நடைமுறைப்படுத்துவது, குளத்தின் தற்போதைய பயன்பாட்டை உறுதி செய்வதோடு மட்டுமல்லாமல், எதிர்காலக் காலநிலை மாற்றம் மற்றும் நீர்ப்பற்றாக்குறைச் சவால்களையும் தாங்கி நிற்கும் நம்பகத்தன்மையையும் அதற்கு வழங்கும்.

DESIGN DATA FOR OPERATION STUDY

1	Name of the tank		:-	Kanagambikai Kulam
2	Co-ordinate of the tank		:-	A/19(6.50 x 6.50)
3	Irrigation Engineer's division		:-	KoC
4	Net catchment area (sq.mls)		:-	10.30
5	Avalable command area (ac.)		:-	260
6	Specific yields (ac.ft./sq.mls)			
		Maha	:-	450
		Yala	:-	50
7	Rainfall and Evaporation			
	Agro-Ecological region		:-	DL1
	Evaporation station		:-	Iranamadu
8	Irrigation efficiencys			
	Application efficiency		:-	0.75
	Conveyance efficiency		:-	0.80
9	Proposed stagger (ST1, ST2)		:-	ST1
10	Area-Capacity			

AREA - CAPACITY		
Contour	Area	Capacity
ft.	ac.	ac.ft.
	0.00	0.00
1.00	42.00	25.00
2.00	44.00	68.00
3.00	84.00	132.00
4.00	88.00	218.00
5.00	128.00	326.00
6.00	132.00	456.00
7.00	170.00	607.00
8.00	178.00	781.00
9.00	212.00	976.00
10.00	222.00	1193.00
11.00	254.00	1431.00
12.00	268.00	1692.00
13.00	296.00	1974.00
14.00	324.00	2284.00
15.00	352.00	2622.00
16.00	380.00	2988.00



				Level (ft.)	Cap(ac.ft.)
11	Full supply level		:-	10.50	1312.00
12	Minimum operation level		:-	4.00	218.00
13	Return flow				
		Maha	ac. :-	0	
		Yala	ac. :-	0	
14	Augmentation (ac.ft.)				

AUGMENTATION			
Oct	-125.00	Apr	-125.00
Nov	-125.00	May	-125.00
Dec	-125.00	Jun	-125.00
Jan	-125.00	Jul	-125.00
Feb	-125.00	Aug	-125.00
Mar	-125.00	Sep	-125.00

15	Acreage proposed for Maha	(ac.) :-	260
16	Acreage proposed for Yala	(ac.) :-	104
17	Cropping intesity	:-	1.4
18	Other demand(ac.ft.)	:-	125

OPERATION STUDY

	Oct	Nov	Dec	Jan	Feb	Mar	Apr	May	Jun	Jul	Aug	Sep
Storage at beginnig (ac.ft.)	218.00	955.45	1312.00	1312.00	1312.00	1226.69	1312.00	1312.00	1118.90	813.15	501.82	350.08
Catchment inflow (ac.ft.)	961.33	1153.60	961.33	576.80	192.27	384.53	286.11	114.44	28.61	0.00	28.61	57.22
Return flow (ac.ft.)	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00
Augmentation(ac.ft.)	-125.00	-125.00	-125.00	-125.00	-125.00	-125.00	-125.00	-125.00	-125.00	-125.00	-125.00	-125.00
Total volume (ac.ft.)	1054.33	1984.05	2148.33	1763.80	1379.27	1486.22	1473.11	1301.44	1022.51	688.15	405.43	282.31
Evaporation loss (ac.ft.)	52.96	49.80	52.60	59.50	63.18	84.31	80.21	86.38	87.96	71.79	53.18	47.71
Seepage loss (ac.ft.)	2.95	5.68	6.56	6.56	6.35	6.35	6.56	6.07	4.83	3.32	2.17	1.50
Irrigation demand (ac.ft.)	42.97	77.19	116.28	167.38	83.06	0.00	46.80	90.10	116.57	111.22	0.00	0.00
Spillage (ac.ft.)	0.00	539.38	660.90	218.37	0.00	83.56	27.55	0.00	0.00	0.00	0.00	0.00
Storage at end (ac.ft.)	955.45	1312.00	1312.00	1312.00	1226.69	1312.00	1312.00	1118.90	813.15	501.82	350.08	233.10

கனகாம்பிகைக் குளத்தின் நீர்ச் சமநிலை (Water Balance) ஆய்வு

Hydro Data of Kanagambikai Kulam

Catchment Area	**10.30 sq.mls.**
Acreage Gravity Irrigation	260 acres.
Capacity	1,319 ac. Ft
Full supply level	102.31 ft. MSL
High flood level	104.06 ft.MSL
Bund Top Level	106.81 ft. MSL
Spill Location	L.B
Crest level	101.81 ft. MSL
Type, Length	C.O, 350 ft.
Sluice	
Location and Type	L.B H.P Tower
Size of opening	18" Φ
Sill level	91.81 MSL

05-09
SEPTEMBER

யாழ்ப்பாண சர்வதேச புத்தக கண்காட்சி – 2026

சங்கிலியன் பூங்கா, யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண சர்வதேச புத்தக கண்காட்சி 05.09.2026 தொடக்கம் 09.09.2026 வரை சங்கிலியன் பூங்கா, யாழ்ப்பாணத்தில் காலை 10 மணிமுதல் மாலை 8 மணிவரை இடம்பெற்றுது. இதில் அமைக்கப்பட்டிருந்த எழுநா காட்சியறைக்கு ஏராளமான வாசகர்கள் வருகை தந்திருந்தனர்.



நூல் வெளியீட்டு நிகழ்வும் கலந்துரையாடலும் – 'வளரும் வடக்கு'

05
SEPTEMBER

சங்கிலியன் பூங்கா, யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண சர்வதேச புத்தகக் கண்காட்சியை முன்னிட்டு, சிறகுகள் அமையத்தின் ஏற்பாட்டில் எழுநா வெளியீடாகிய 'வளரும் வடக்கு' நூல் வெளியீட்டு நிகழ்வும் கலந்துரையாடலும் 05.09.2026 (சனிக்கிழமை) அன்று மாலை 4.30 மணிக்கு சங்கிலியன் பூங்கா, யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இதன்போது, வடக்கின் சமூக, பொருளாதார மற்றும் அபிவிருத்திசார் பரிமாணங்களை மையப்படுத்திய இந்நூலின் வெளியீட்டுடன், அதன் கருத்துகள், அனுபவங்கள் மற்றும் வடக்கின் எதிர்கால வளர்ச்சி குறித்த சிந்தனைகளைப் பகிரும் சிறப்பு உரையாடலும் இடம்பெற்றது.

மேலும் சிறகுகள் அமைய செயற்பாட்டாளர் ஜேமிகா பொன்னுத்துரையின் நெறியாள்கையின் கீழ், நூல் மதிப்புரைகளை யாழ்ப்பாண வர்த்தக மற்றும் தொழில்துறை சம்மேளனத்தின் தலைவர் திரு. குலசிங்கம் வசீகரன், தொழில்முனைவோர் திரு. சிவராஜா சிவரதன் ஆகியோர் வழங்கியிருந்தனர்.

‘யாழ்ப்பாணக் குடாநாட்டின் நூலகப் பாரம்பரியம்: ஒரு வரலாற்றுத் தேடல்’ ஒரு கண்ணோட்டம்

கருத்துரை:
லக்சனா பாலகுமாரன்

ஈழத்து நூலியல் மற்றும் அவை தொடர்பான பதிவுகளின் முதன்மைத் தரவுப் பெட்டகமாகத் திகழும் திரு. நடராஜா செல்வராஜா அவர்களின் ‘யாழ்ப்பாணக் குடாநாட்டின் நூலகப் பாரம்பரியம்: ஒரு வரலாற்றுத் தேடல்’ எனும் ஆய்வு நூல், இலங்கைத் தமிழ் மக்களின் அறிவுப் பாரம்பரியத்தின் ஆழமான வேர்களைத் தேடிச் செல்லும் ஒரு மிக முக்கியமான வரலாற்றுச் சான்றாகும். இது எழுநா நூல் வரிசையின் 28ஆவது வெளியீடாக 231 பக்கங்களைக் கொண்டு 2025ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. ‘நூல் தேட்டம்’ தொகுதிகளின் வாயிலாக ஈழத்து நூலியல் துறைக்குத் தனியொரு மனிதராக அளப்பரிய பங்களிப்பை வழங்கிய ஆசிரியர் செல்வராஜா, இந்நூலின் வாயிலாக யாழ்ப்பாணத்தின் மறைக்கப்பட்ட, மறுக்கப்பட்ட மற்றும் சிதைக்கப்பட்ட நூலக வரலாற்றை அரிய வரலாற்று ஆதாரங்களுடனும் நூலகவியல் ஆய்வுக்கண்களுடனும் வெளிப்படுத்தியுள்ளார். தமிழ் மக்களின் சிந்தனை மரபையும், ஏட்டுச் சுவடிகள் முதல் நவீன நூலகங்கள் வரையிலான அறிவுச் சேமிப்பு முறைகளையும் வரலாற்று ரீதியாகக் கற்றுக்கொள்வதற்கு இந்நூல் ஒரு சிறந்த திறவுகோலாக அமைவதோடு, ஈழத்துச் சூழலில் சேகரமாக்கத்தின் அவசியத்தையும் உணர்த்துகிறது.

இந்நூல் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பண்டைய, இடைக்கால மற்றும் நவீனகால நூலக வரலாற்றை 20 அத்தியாயங்களில் மிக விரிவாகவும் நுணுக்கமாகவும் விவரிக்கிறது. ஆசிரியர் செல்வராஜா அவர்கள் யாழ்ப்பாணத்தின் நூலக வரலாற்றை நேரடியாகத் தொடங்காமல், உலகளாவிய நூலகப் பாரம்பரியத்தின் பின்னணியில் திபெத்தின் ‘சக்யா’ (Sakya) மடாலய நூலகக் கண்டுபிடிப்பை முதல் அத்தியாயத்தில் ஒப்பீட்டு ரீதியாகச் சுட்டிக்காட்டுவது, இந்நூலின் ஆய்வுப் பரப்பை விரிவுபடுத்துகிறது. கி.பி. 1073ஆம் ஆண்டில் ‘கொங்கொக் கெயல்போ’ என்ற திபெத்திய மன்னரால் ‘Sakya’ மடாலயம் கட்டப்பட்டு, 13ஆம் நூற்றாண்டில் புகழ்பெற்று விளங்கிய வரலாற்றுப் பின்னணியை ஆசிரியர் இங்கு பதிவு செய்கிறார். 2003ஆம் ஆண்டில் சக்யா மடாலயத்தின் பிரதான மண்டபத்தின் தடித்த சுவருக்குப் பின்னிருந்த ரகசிய அறையிலிருந்து 84,000 அரிய ஏட்டுச் சுவடிகள் தற்செயலாகக் கண்டறியப்பட்ட அரிய நிகழ்வை நூலாசிரியர் சுட்டிக்காட்டுகிறார். 60 மீட்டர் நீளமும் 10 மீட்டர் உயரமும் கொண்ட தடிமனான சுவர்களுக்கிடையில், மரப்பெட்டிகளில் பாதுகாக்கப்பட்டு வந்த 10,000 ஆண்டுகள் பழமையான தென்னாசிய வரலாற்றுச் செய்திகள், 18 அங்குல அகலமுடைய மரப்பலகைகளுக்கு நடுவில் வண்ண அலங்காரங்களுடன் கூடிய சுவடிகளாகக் கிடைத்ததை ஆசிரியர் விவரித்துள்ளார். பௌத்த தத்துவம், மருத்துவம், வரலாறு, ஜோதிடம், விவசாயம் போன்ற துறைகளுடன் சமஸ்கிருத மொழியிலான ஏடுகளும் இதில் அடங்கியிருந்த செய்தி, ஒரு சமூகத்தின் அறிவுச் செல்வம் எவ்வாறு சுவர்களுக்குப் பின்னால் பாதுகாக்கப்பட்டது என்பதை விளக்குகின்றது. யாழ்ப்பாணத்தின் சரஸ்வதி மகாலயம் இன்று கண்டெடுக்கப்பட்டால் அதன் சேமிப்புகளும் இத்தகைய நிலைமையிலேயே இருந்திருக்கும் எனும் ஆசிரியரின் கூற்றின் பின்னால், ஈழத்து நூலியல் மற்றும் அதன் சேகரமாக்கம் மீது ஆசிரியர் வைத்திருக்கக்கூடிய ஏக்கம் வெளிப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் மேலைத்தேய மிஷனரிகளின் வருகைக்குப் பின்னரான நூலக அமைப்புகள் பற்றிய விரிவான தகவல்களை நூலின் இரண்டாவது மற்றும் மூன்றாவது அத்தியாயங்கள் வெளிப்படுத்துகின்றன. அமெரிக்கன் பாப்டிஸ்ட் மிஷன், வெஸ்லியன் மிஷன் போன்ற அமைப்புகள் தமது சமயப் பரப்புரையைத் தாண்டி மக்களின் கல்வியறிவுக்காக நூலகங்களையும் அச்சுக்கூடங்களையும் நிறுவிய வரலாற்று உண்மைகளை ஆசிரியர் சான்றுகளுடன் நிறுவுகிறார். ஆறுமுக நாவலர் அவர்கள் தனது ‘சைவ தூஷண பரிகாரம்’ எனும் நூலில், கிறித்துவ மிஷனரிகள் தமது பிள்ளைகளுக்குக் கல்வி மற்றும் சமய உணர்ச்சியை ஊட்டுவதற்காக அச்சுக்கூடங்களையும் நூலகங்களையும் நிறுவியதைச் சுட்டிக்காட்டி, சைவ மக்களும் இத்தகைய விழிப்புணர்வுடன் அமைப்புகளை உருவாக்க வேண்டும் என வலியுறுத்திய வரலாற்றுப் பதிவை இந்நூல் குறிப்பிடுகின்றது. இதன் தொடர்ச்சியாக, 1842ஆம் ஆண்டில் நீதிமன்றக் காரியதரிசி வில்லியம் கட்டரால் தொடங்கப்பட்ட ‘யாழ்ப்பாணப் புத்தகசாலை’ பற்றியும், 1848இல் வில்லியம் குரோஃப்டன் துவைனத்தின் (William Crofton Wynam) முயற்சியால் இது அங்கத்தவர்களுக்கான நூலகமாக உருவெடுத்த வரலாற்றையும் ஆசிரியர் தருகிறார். மேலும், 1845இல் இலங்கை சிவில் சேவையில் சேர்ந்த உதவி அரச அதிகாரியான வில்லியம் துவைனம், 1869 முதல் 1896 வரை, 27 ஆண்டுகள் அரச அதிகாரியாகப் பணியாற்றி, தனது 95ஆவது வயதில் யாழ்ப்பாணத்திலேயே மறைந்ததையும், அவர் தனது வாழ்நாள் சேகரிப்புகள் அனைத்தையும் யாழ்ப்பாணத்திற்கே வழங்கிச் சென்ற கொடைப் பண்பையும் ஆசிரியர் நன்றியோடு பதிவு செய்துள்ளார்.

யாழ்ப்பாணத்தின் சமயப் புண்ணியத் தலங்களிலும் கிராமப்புறங்களிலும் நூலகங்கள் இயங்கிய வரலாற்றை ஆசிரியர் மிகத் துல்லியமாகப் பதிவு செய்துள்ளார். 1915இல் ‘ஹிந்து சாதனம்’ (Hindu Organ) பத்திரிகையின் மூலம் அறியப்படும் கீரிமலை நகுலேஸ்வரப் படிப்பகம், சைவப் பெரியாராகிய கி. முத்துத்தம்பி அவர்களின் பெரு முயற்சியால் உருவாக்கப்பட்டதை ஆசிரியர் வெளிப்படுத்துகிறார். 1915 டிசம்பர் 27 அன்று ஸ்ரீமத் சர்வானந்த அடிகளாரால் திறந்து வைக்கப்பட்ட இப்படிப்பகம்,

வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலின் சூழலில் நீராடுவோரும் யாத்திரிகர்களும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டிருந்த விதம், தமிழர்களின் பண்பாட்டு வாசிப்பை உணர்த்துகிறது. அதேபோன்று, தமிழ்க் கலை மற்றும் இலக்கிய வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்ட ஆய்வு நூலக அமைப்பாகத் திகழ்ந்த ‘கலாநிலையம்’ பற்றிய பதிவுகள் மிக முக்கியமானவை. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஆசிரியரான கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்களால், 1930 டிசம்பர் 5 அன்று வண்ணார்பண்ணை மேற்கில் உள்ள பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில் வீடொன்றில் தொடங்கப்பட்ட கலாநிலையம், சு. நடேசபிள்ளை அவர்களைத் தலைவராகவும், க. நவரத்தினம் அவர்களைச் செயலாளராகவும், கா. வைரமுத்து அவர்களைப் பொறுப்பாளராகவும் கொண்டு இயங்கியது. சுவாமி விபுலானந்தர், சுவாமி ஞானப்பிரகாசர், டாக்டர் அன்ரியான்ஸ் நெல், முதலியார் செ. இராசநாயகம், டாக்டர் ஐசக் ரி. தம்பையா போன்ற மாபெரும் அறிஞர்கள் இதன் சிறப்பு அங்கத்தினர்களாக இருந்த செய்தியையும், பண்டிதமணி அவர்களுக்கும் கலாநிலையத்திற்குமான தொடர்பையும் க.சி. குலரத்தினத்தின் கட்டுரையை மேற்கோள் காட்டி ஆசிரியர் விளக்குகிறார். கிராமியச் சூழலில் காரைநகர் சைவமகாசபை நூலகம் 1926இலேயே 347 தமிழ்ப் புத்தகங்களுடனும் 279 ஆங்கிலப் புத்தகங்களுடனும் இயங்கியதையும், 1915இல் மு. திசைநாயகம் தலைமையில் க. கதிரவேலு முயற்சியால் உருவாக்கப்பட்ட ‘காரை இளைஞர் கல்வித் தேர்ச்சிச் சங்கம்’ நூலக வளர்ச்சிக்கு வித்திட்டதையும் ஆசிரியர் திறம்படக் குறிப்பிட்டுள்ளார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பிரபுக்களுக்கு மட்டுமே சாத்தியமாக இருந்த ‘கிளப்’ கலாசாரத்திற்கு மாற்றாக, கிராமப்புற மக்களின் சுயசிந்தனை மற்றும் பொது அறிவு மேம்பாட்டிற்காக ‘சனசமூக நிலையங்கள்’ உருவெடுத்த வரலாற்றை ஆசிரியர் அத்தியாயம் 13இல் மிக அற்புதமாகப் பதிவு செய்கிறார். மரங்களைச் சுற்றிய குந்துகளிலும், சந்திகளிலும் ‘ஊர்த்துளவாரம்’ பேசி நேரத்தை விரயம் செய்த கிராமத்துப் பொதுமக்களை பயனுள்ள வாசிப்பை நோக்கித் திருப்புவதற்காக, தெருக்கோடி இளைப்பாறு மடங்களிலும் முச்சந்தி மடங்களிலும் ‘பத்திரிகைகள்’ வைக்கும் பழக்கம் அறிமுகமானது. இதுவே பின்னர் அல்வாய் பாரதிதாசன் படிப்பகம் (1964), அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம் (1946), மற்றும் 1906இல் ‘இளைஞர் வாசிகசாலை’யாகத் தொடங்கிப் பின்னர் 1948இல் பெயர்மாற்றம் பெற்ற பருத்தித்துறை தம்பசிட்டி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம் போன்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சனசமூக நிலையங்களாகப் பரிணமித்தன. அதேபோன்று, 1974இல் நிறுவப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகத்தின் (பின்னாளைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) நூலக உருவாக்கத்தையும், சேர். பொன். இராமநாதனின் பரமேஸ்வராக் கல்லூரி நூலகப் பயன்பாட்டையும், கலாநிதி ஜேம்ஸ் தேவதாசன் இரத்தினம் அவர்களால் உருவாக்கப்பட்டுப் பின்னர் கைவிடப்பட்ட ‘ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவன’ நூலகச் சேகரிப்புகளையும் ஆசிரியர் மிகத் துல்லியமாகப் பதிவு செய்துள்ளார்.

ஈழத்துத் தமிழ் நூல் பதிவியலின் ஒரு முன்னோடியாகத் திகழும் திரு. நடராஜா செல்வராஜா அவர்களின் நாற்பதாண்டுகாலச் சேவையின் உச்சக்கட்டப் படைப்பாகவே இந்நூல் மிளிர்கிறது. 1981ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் எரிக்கப்பட்டு, தமிழ்ச் சமூகத்தின் 95,000க்கும் மேற்பட்ட அரிய நூல்களும் ஏட்டுச் சுவடிகளும் சாம்பலாக்கப்பட்ட வரலாற்றுப் பேரழிவுக்குப் பின்னர், ‘சிதைக்கப்பட்ட அறிவு மரபை எவ்வாறு மீட்டெடுப்பது?’ என்ற பெரும் தேடலே செல்வராஜா அவர்களை ‘நூல் தேட்டம்’ எனும் பிரம்மாண்டமான நூலியல் (Bibliogra phy) திட்டத்தை நோக்கி நகர்த்தியது. உலகெங்கிலும் பரந்து வாழும் ஈழத்து எழுத்தாளர்களின் அச்சிடப்பட்ட நூல்கள், சிறுவெளியீடுகள் மற்றும் அரிய சேகரங்களை முறைப்படியாகத் திரட்டி, நூலகவியல் கோட்பாடுகளுக்கு அமைவாகப் பட்டியலிட்டு, நூல் தேட்டத்தை பல தொகுதிகளாக இவர் வெளியிட்டமை ஈழத்து எழுத்துமூலக் காப்பக வரலாற்றில் ஒரு மைல்கல்லாகும். இத்தகைய பரந்த அனுபவமும், ஈழத்து நூல்கள் பற்றிய துல்லியமான தரவுச் சேகரிப்புமே இந்நூலில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் மறைக்கப்பட்ட நூலக வரலாற்றை மிகத் துல்லியமான ஆதாரங்களோடு வெளிப்படுத்த இவருக்குக் கை கொடுத்துள்ளது. வெறும் நூலியல் பட்டியலாக்கத்தோடு நின்றுவிடாமல், அப்பட்டியலாக்கத்தின் பின்னணியில் உள்ள சமூக, வரலாற்று மற்றும் நிறுவன அமைப்புகளின் பங்களிப்பை ஆய்வுக்கண்களோடு அணுகும் ஒரு நூலகவியல் பேராசானின் பார்வையை இந்நூலில் காண முடிகிறது. ‘நூல் தேட்டம்’ எவ்வாறு ஈழத்துத் தமிழ் வெளியீடுகளின் முதன்மைச் சேகரப் பெட்டகமாகத் திகழ்கிறதோ, அதேபோன்று இந்நூல் அந்த வெளியீடுகளைத் தாங்கிப் பிடித்த நூலகங்களின் வரலாற்றுப் பின்னணியை விளக்கும் வரலாற்றுப் பதிவாக அமைகிறது.

யாழ்ப்பாணத்தின் அறிவுத் தாகத்தின் உச்ச அடையாளமாகத் திகழும் யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தின் வளர்ச்சிப் பாதையில் பணியாற்றிய பல ஆளுமைகளை ஆசிரியர் இந்நூலில் பதிவு செய்துள்ளார். பிதா. லோங் அடிகள் நூலகத்தின் ஆரம்பகால நிதிச் சேகரிப்பிலும், 1950களில் நகரசபைக் கட்டடத் தீர்மானத்திற்குப் பின் புதிய கட்டட உருவாக்கத்திலும் ஆற்றிய பங்களிப்பு விரிவாகப் பேசப்படுகிறது. அத்துடன், நூலகப் பணியின் மேற்பார்வையாளராகவும் ஆலோசகராகவும் பணியாற்றிய சி. சிவசுந்தரம் அவர்களின் பங்களிப்பும், 1973இல் யாழ். பொது நூலகத்தில் தரம் 1 நூலகராக நியமனம் பெற்றுப் பணியாற்றிய திருமதி பவானி நடராஜா அவர்களின் கல்வி மற்றும் சேவைப் பின்னணியும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்நூலின் மொழிநடை மிகவும் தெளிவானதாகவும் எளிமையானதாகவும், அதேவேளையில் ஆழமான வரலாற்றுச் செறிவோடும் அமைந்துள்ளது. ஆசிரியர் நடராஜா செல்வராஜா அவர்கள் தகவல்களை வெறும் பட்டியலாகத் தராமல், வரலாற்றுச் சான்றுகள், பத்திரிகைக் குறிப்புகள், பொன்விழா மலர்கள் மற்றும் நினைவுப் பதிவுகள் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு, ஒரு கட்டுரைக்குரிய ஓட்டத்துடன் எழுதியுள்ளார். ஒவ்வொரு வரலாற்று நிகழ்வையும் அத்தியாய வாரியாகத் தொகுத்துள்ள விதம், வாசகர்களுக்கு வாசிப்புச் சலிப்பை ஏற்படுத்தாமல், யாழ்ப்பாணத்து வரலாற்றுக் காலடிகளைத் தொடரச் செய்கிறது.

முடிவுரையாகக் கூறின், நடராஜா செல்வராஜா அவர்களின் ‘யாழ்ப்பாணக் குடாநாட்டின் நூலகப் பாரம்பரியம்: ஒரு வரலாற்றுத் தேடல்’ எனும் நூல் சாதாரண வரலாற்றுப் பதிவு மட்டுமன்றி, ஈழத்துத் தமிழ் அறிவு மரபின் அழியாத சாட்சியமாகவும் திகழ்கிறது. நூலகவியல் ஆய்வாளர்கள், வரலாற்று மாணவர்கள் மற்றும் தமிழ்ப் பண்பாட்டு ஆர்வலர்கள் ஒவ்வொருவரும் கண்டிப்பாகப் படித்துப் பாதுகாக்க வேண்டிய ஒரு முதன்மையான ஆய்வுப் பேழையாக இந்நூல் விளங்குகிறது.

2012 -2013 வெளியீடு









2025 வெளியீடு


மலையகம்
சமூக - பொருளாதார - அரசியல் பரிமாணங்கள்
பேராசிரியர் எம். சின்னத்தம்பி
எழுநா


எழுநா
யாழ்ப்பாண நகரத்தின் வளர்ச்சி வரலாறு
1621 - 1948
இ. மயூரநாதன்


யாழ்ப்பாண மன்னன் செகராஜசேகரன்
இரசவர்க்கம்
முனைவர் பால. சிவகடாட்சம்
எழுநா

இலங்கையின் வேளாண்முறைமையில் நவீன நுட்பங்கள்
கந்தையா பகீரதன்
எழுநா

காட்டிக் கொடுக்கப்பட்ட கடலும் கைவிடப்பட்ட மக்களும்
மரியநாயகம் நியூட்டன்
எழுநா

இலங்கையின் பிராமி மற்றும் சிங்களக் கல்வெட்டுகளில்
தமிழர்
கலாநிதி என்.கே.எஸ். திருச்செல்வம்
எழுநா

எழுநா
சமஷ்டி அரசியல் முறைமைகள் ஓர் அறிமுகம்
கந்தையா சண்முகலிங்கம்

எழுநா
யாழ்ப்பாணத்தில் சாதி அமைப்பும் சமூக உறவுகளும்
கந்தையா சண்முகலிங்கம்


எழுநா
உத்தியாக்கள்
கிழக்கிலங்கை கடலோர வேடர்களின் பண்பாட்டு அசைவுகள்
கமலநாதன் பத்திநாதன்

எழுநா
சூழ்ச்சிகளையும் சதிகளையும் கடந்த வரலாறு
இரா.சடகோபன்

எழுநா
பதார்த்த சூடாமணி
பால. சிவகடாட்சம்


எழுநா
மாறுபாடில்லா உண்டி
தியாகராஜா சுதர்மன்


வடக்கு - கிழக்குப்
பிராந்திய அபிவிருத்தியும்
உயிர்ப்பல்வகைமையும்
சி.ஜேம்சன் அரசகேசரி
வடக்குப் பிராந்தியக்
காலநிலையியல்
நாகமுத்து பிரதீபராஜா
இரு நூற்றாண்டு
மலையகம்
வலியும் வாழ்வும்
யாழ்ப்பாணக் குடாநாட்டின்
நூலகப் பாரம்பரியம்
ஒரு வரலாற்றுத் தேடல்
என். செல்வராஜா
தமிழ்ப் பண்பாடு
ஊற்றுகளும் ஓட்டங்களும்
ந. இரவீந்திரன்
யாழ்ப்பாண
மருத்துவ வரலாறு
பாலசுப்பிரமணியம் துவாரகன்
பாக்கியநாதன் அகிலன்
மரபுரிமைகளைப்
பறைதல்
இலங்கையின் கறவை மாடு
வளர்ப்புப் பொருளாதாரம்
கால்நடை வைத்தியர்
சி. கிருபானந்தகுமாரன்
வாசலிலே கிருசாந்தி
செம்மணி தொடர்பான கவிதைகள்
தொகுப்பு:
எழுநா கலை பண்பாட்டு நடுவம்
இருத்தலின் மீது
கவியும்
இன்மைகள்
இளங்கோ
பசுமை
எனும்
பேரபாயம்
தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ
மன்னார் தீவில்
கனிம மணல் அகழ்வு
சமூக, அரசியல், பொருளாதார, சுற்றுச்சூழல் பாதிப்புகள்
வை. ஜெயமுருகன்
வடக்கு – கிழக்கு
மாகாணங்களின் வளங்களும்
உள்ளூர்ப் பொருளாதார
அபிவிருத்தியும்
அமரசிங்கம் கேதீஸ்வரன்
முன்பதிவுகளுக்கு
+94 777 97 5029

2026 வெளியீடு

ஈழத்துக்
கீழைக்கரை
வரலாறு
பொ.பி 12ஆம் நூற்றாண்டு வரை
வி.துலாஞ்சனன்


பௌத்தமும்
இலங்கையின் அரசியலும்
தொகுப்பும் தமிழாக்கமும்:
கந்தையா சண்முகலிங்கம்


கூட்டுறவு இயக்கத்தின்
மீள் கட்டுமானமும் அபிவிருத்தியும்
போருக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் பின்னர்
வை. ஜெயமுருகன்


மட்டக்களப்பு மாவட்டத்தின்
மயிலத்தமடு – மாதவனை மேய்ச்சல் தரை
நில அடையாளம், இன அரசியல், வாழ்வாதாரம்
வை.ஜெயமுருகன்


வறண்ட மண்டல நீர்வளங்களின்
இருப்பும் பேண்தகு பயன்பாடும்
இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிரதேசங்கள்
சுப்ரமணியம் சிவகுமார்


திக்குகள்
எட்டும்
தமிழல்லாத வெளியில் ஈழப்போர் பற்றிய அபுனைவுகள்
ரூபன் சிவராஜா

அதிகாரப் பகிர்வும்
சுயாட்சியும்
மூன்றாம் உலக அனுபவம்
தொகுப்பும் தமிழாக்கமும்
கந்தையா சண்முகலிங்கம்


கோ. நடேசய்யர்
கணக்குப்பதிவு நூல் முதல் சுதிர்காமம் வரை
எம்.எம். ஜெயசீலன்


நிலமும் வாழ்வும்
ஈழத்தின் சமகாலம் மீதான நுண்ணரசியல் பார்வைகள்
வை. ஜெயமுருகன்


வளரும் வடக்கு
இலங்கையின் வடக்குப் பிரதேசத்தின் அபிவிருத்தி பற்றிய பார்வைகள்
ஜெகன் அருளையா
தமிழில்: த.சிவதாசன்


இலங்கையில் கட்டமைக்கப்பட்ட
இனப்படுகொலையின்
தோற்றமும் நடைமுறையும்
சுதந்திரம் வரையான காலகட்டம்
மு. திருநாவுக்கரசு


மலையகத்தில்
தெய்வ நம்பிக்கைகளும்
ஆற்றுகைக் கலைகளும்
தொகுப்பு எழுநா

மகாவம்சம்
வரலாறு, பண்பாடு, அரசியல்
என்.சரவணன்

XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

OUR GROUP OF COMPANIES

codelantic

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

ExentAI

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

itaffix

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

ontomatrix

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

EmbryoZ

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

BurgeonFirst

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

FINACCDIRECT

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

LegalLiaise

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

callOcare

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

LeadHRM

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

CSR INITIATIVE

NurtureLeap

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

London
#32 Spring Street,
Paddington W21JA.
Phone : +44 203 5001380
Email : contact@xebiro.com

Colombo
#7 - 3/1, Galle Road,
Colombo 06.
Phone : +94 112 559854
Email : contact@xebiro.com

Jaffna
#63, Sir Pon Ramanathan Road,
Kallady, Thirunelvelly, Jaffna
Phone : +94 212 212797
Email : contact@xebiro.com

Nimal Vinayagamoothy, CPA, CGA

Chartered Professional Accountant

nimal@nlraccounting.com
T: 416 - 494 - 4777
C: 416 - 888 - 1128
F: 416 - 613 - 2739
300-5200 Finch Avenue East
Toronto, ON M1S 4Z4

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANT

மானுடம் நிறுவனம்
maanudam foundation

நூல்சார் செயற்பாடுகள்





தமிழ் அச்சுப் பண்பாட்டிலும் பதிப்பு வரலாற்றிலும் ஈழத்து அறிஞர் பணிகள் முன்னோடியானவை. வரலாற்றுக் கனதி மிக்கவை. ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை முதலியோரின் சீர்பதித்த நற்பதிப்புகளும் நுண்மாண் நுழைபுல ஆராய்ச்சிப் பதிப்புகளும் தமிழை அச்சு யுகத்திற்குத் தயார்படுத்தியும் தகுதிப்படுத்தியும் வைத்தவை. தமிழ்ச் சமூகத்தின் ஆய்வு அறிவுச் சூழலையும் படைப்பாக்கச் சூழலையும் மேன்மையுறச் செய்தவை. பாடாய்க் கிடந்த ஏடுகளை, எழுதா எழுத்தான அச்சு வாகனம் ஏற்றிப் பவனிவரச் செய்து, தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்தை நல்கியவை. ஈழத்தில் தமிழ், தமிழர் குறித்த எந்தவொரு ஆய்வும் ஈழத்துப் பதிப்புலகின் அறிகையின்றிப் பூர்த்தியாகாது. ஆய்வுப் பரப்பில் ஈழத்துப் பதிப்புலகானது. வரலாறு மற்றும் சமூக பண்பாட்டுப் பின்புலத்தில், இதுவரை அதிகம் கவனிப்புறவில்லை. இதனால், ஈழத்துத் தமிழ்ப் பதிப்புலகின் திசைவழிகளை அடையாளம் காணவும் அதன்வழி வரலாற்றைக் கட்டமைக்கவும் 'ஈழத்தில் அச்சுப் பண்பாடும் பதிப்பும்' எனும் பொருண்மையில் 'ஆறாவது சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாட்டை எமது துறை ஒழுங்குசெய்தது. மாநாட்டில் நிகழ்த்தப்பெற்ற ஆதார கருதி உரையையும் சமர்ப்பிக்கப்பெற்ற 27 ஆய்வுக் கட்டுரைகளையும் கொண்டு உருவானதே இந்நூல். தமிழியலுக்கு எம் தமிழ்த்துறையின் நன்கொடையாக அமையும் இந்நூல் அச்சுப் பண்பாடு, பதிப்பு வரலாறு ஆகியவற்றில் ஈழத்தின் சென்ற காலத்துப் பழுதிலாத் திறம் மீது ஒளி பாய்ச்சுகின்றது.

அனுசரணை:
மானுடம் நிறுவனம்
www.maanudam.org

யாழ் மண்ணில்

வீடு, காணி,
வியாபார ஸ்தாபனங்கள்
வாங்குவதற்கு,
விற்பதற்கு அல்லது
வாடகைக்கு
நம்பிக்கையுடன் நாடுங்கள்

RE/MAX ELITE

021 224 2855 | 0777 44 1113

இடம்: இல. 115 கே.கே.எஸ் வீதி சுன்னாகம்
(பீப்பிள்ஸ் லீசிங் கட்டிட தொகுதி, 1ம் மாடி)

BUY-SELL-RENT HOME AND LANDS

WWW.REMAXELITE.LK

WE PROVIDE THE CHEAPEST MINIVAN & CAR SERVICE
ALL OF THE GTA & ONTARIO

ரொறொன்ரோ பெரும்பாகம் உட்பட ஒன்ராறியோ மாகாணம் எங்கணும் மலிவான மினிவான் மற்றும் கார் சேவையை நாங்கள் வழங்குகிறோம்.

கிழமை ஏழு நாட்களும் 24 மணி நேர சேவை வசதியுள்ளது.
அழைக்க வேண்டிய இலக்கம் 647-9723619

SS CAKES

Say "I Do"
to Sweet Perfection!

Planning your dream wedding? Look no further! At SS Cakes, we specialize in crafting exquisite wedding cakes that are as stunning as they are delicious. From classic elegance to modern masterpieces, we'll design the perfect cake to sweeten your special day.

+94 76 347 0055

We do delivery around the world

Protection For You & Your Family

Our services

- Life Insurance «
- Critical Illness Protection «
- Mortgage Protection «
- Travel/Super Visa Insurance «
- Dental & Medical Benefits «
- Disability Benefits «
- Long Term Care «
- Employee Benefits «
- RESP, RRSP & TFSA «

Are You Getting Million Dollar Advice?

Sritharan Thurairajah CLU, CHS

Life100
INSURANCE & INVESTMENTS INC.

416-918-9771 | 416-321-2500

info@life100.ca www.life100.ca

10 Milner Business Court, Suite 208,
Scarborough, ON M1B 3C6

Simple Solution in a Critical Situation